உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணைசலக்கவிராயர் அருளிய

சீகாழித் தலபுராணம்.

இஃது

இத்தலத்துக்குரிய தேவாரத்திருமுறைகளுடனும்

புராண வசனத்துடனும்

சீகாழி வித்வத் ஸ்ரீமான்,

S. சதாசிவமுதலியாரவர்களால்

வித்துவ சிகாமணி, மகா-ஈ-ஈ-ஸ்ரீ

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்

பார்வையில்

சீகாழி குமரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

ஈசுவராஜ சித்திரைமீ உலஉ.

திப்புரிமை பெற்றது.] 1937 [பிரதி ரூ.

சிவமயம்.

நூற்பயன்.

திருவளர் சங்கமும் மருவளர் பதுமமும்
ஊழியின் விளங்கும் காழிமான் மியத்தைக்
கற்பவர் தக்கநல் விற்பனர் ஆகி
இம்மையின் அம்மையின் அம்மை யப்பர்ஙங்
குருவளம் என்றும் மருவிவாழ் குரே.

சீகாழி,
16—4—37.

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

இப்புத்தகத்தில்:—

முகவுரை ... 1 முதல் 40 பக்கங்கள்,
தலபுராணம் ... 1 முதல் 196 பக்கங்கள்

சீகாழி குமரன் அச்சுக்கூடத்திலும்,

தேவாரத் திருமுறைகள் 1 முதல் 172 பக்கங்கள்,
புராண வசனம் ... 1 முதல் 80 பக்கங்கள்

சீகாழி சுந்தரா அச்சுக்கூடத்திலும்

அச்சிடப்பெற்றன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னுரை.

முற்காலத்தில் ராஜாதிராஜவளநாட்டுத் திருக்கழும்ல வளநாட்டின் வளநகராகவும், திருவாலி நாட்டுத் திருக்கழுமல வளநாட்டின் தலை நகராகவும் சிறப்புற்று விளங்கிய சீகாழித்தலம் தஞ்சை ஜில்லாவில் சீகாழித் தாலூகாவின் முக்கிய நகரம். இது சோழநாட்டில் காவிரி நதியின் வடகரையில் தேவாரம் பெற்ற தலங்களில் ஒன்று. இத் தலத்தில் சிவாலயம் ஒன்றும் விஷ்ணு ஆலயம் ஒன்றும் பன்னிரண்டு திருப்பெயர்களுக்குப் பன்னிரண்டு ஆலயங்களும் மற்றும் சில ஆலயங் களுமாக இருபத்தெட்டு தளிகள் உள்ளன. சிவாலயத்திற்கு வடமொழி யில் நான்கு புராணங்களும் தென்மொழியில் ஓர் புராணமும், விஷ்ணு ஆலயத்திற்கு வடமொழியில் ஓர் புராணமும் தென்மொழியில் ஓர் புரா ணமும், அத்யாத்மிக ராமாயணத்தில் ஒரு சருக்கமும் இருக்கின்றன.

இக் காழித் தலத்திற்குப் பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை வயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருநாமங்களே யன்றி, சங்க நிதிபுரம், பதுமநிதிபுரம், சிவாசாரியபுரம், பராசரக்ஷேத்திரம், புனர் ஜன்மபுரம், கிரிபுரம், உமாபதிபுரம், ஜீவன் முத்திபுரம், நீலகண்ட வெற்பு, மாலை மாற்றுப்பதி, எழுகூற்றிருக்கைப்பதி எனப் பல பெயர் களும் வழங்கிவருகின்றன.

ஸ்ரீ காளிபுரம் என்பது சுத்த சக்தி பீடங்களுள் ஒன்று. இதன் மான்மியம் தேவி பாகவதம், காளிகாகாண்டம், தேவி காலோத்தரம் முதலிய நூல்களுள் விரிவாகக் கூறப்படும்.

ஸ்ரீகாழியம்பதியில் பரம முதற்காரணராகிய திருத்தோணியப்பர் பக்குவ ஆன்மாக்களுக்கு உபதேசம் புரிந்து சிவஞானச் செல்வத்தை அளிப்பதற்குக் குருவாய் அமர்ந்திருப்பதுமன்றி, பிரமபுரீசுவரர் சிரு ஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் செய்வதற்கு மூலகாரணராகவும், திருத்தோணியின் தென்பாகத்தில் ஸ்ரீ சட்டைநாதர் சர்வ விக்கினங்

லையும் போக்கிப் பேரின்பசித்திகளை ஈதற்பொருட்டுச் சங்கம வடிவின ராகவும் இலங்குகின்றமையால் இங்ஙகருக்குக் குருலிங்கசங்கம கூத்திரம் எனப் பெயர்வழங்கும். அம்மையப்பர் எழுந்தருளியிருக்கும் திருத்தோணிமலையும் அப்பெருமான் உமாதேவியாரோடு இடபவாகனரூடராய் எழுந்தருளித் திருஞானசம்பந்தருக்குக் காட்சிதந்தருளிய அருள்வெளியும் ஞாயிறுகாணி எனப் பெயர் பெறும். இதற்குப்பிரமாணம் சம்பந்தர் பிள்ளைத்தமிழ், பக்கம் சு செய்புள் நு.

*** *** *** மேல்வரும்

அலையான் மகராலய மகல்வான் முகடேறிட
அசையாதொரு தோணியி லடையாரெயில் காதிய
சிலையான் மலையான்மக ளுடனேயழ கோடமர்
திருவாரொளி நீடிய திருஞாயிறு காணியே.—என்பது.

இதன்கண் அமைந்துள்ள திருத்தோணிக்கு மீகாமன் சட்டைநாத ராதலின், இதனைப் பெரும்பாலும் இக்காலத்தவர் சட்டைநாதர் மலை எனவும் தானியாகுபெயரால் சட்டைநாதர் எனவும் வழங்குகின்றனர்.

இன்னும், இத் தொல்காழியின் சிறப்பு சங்க நூல்களில் கண்ட களவழிபாடிய பொய்கையார், கோச்செங்கணர், இரும்பிடர்த்தலையார், கரிகாற்பெருவளத்தார், மங்கையர்க்கரசியார், விஜயநந்திசோழர், உத்தம சோழர், ராஜராஜசோழர், அநபாயசோழர், கண்டன் வராராஜராஜன், காளிங்கராயர், ஆதிமுத்துத்தாண்டவர், குணதலைப்பாடியுடையார் முதலான பேரரசர்கள் சரித்திரவாயிலாகவும், திருநாவுக்கரையர், திருஞான சம்பந்தர், திருஞானசம்பந்தரது நல்லம்மானும் அவர் பாடிய திருப்பதிகங்களை எழுதுவித்தவருமாகிய சம்பந்தசரணாலயர், கணநாதர், திருமங்கையார், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், நம்பியாண்டார், சேக்கிழார், ஓட்டக்கூத்தர், நேமிநாதர், பேராசிரியர், மச்சுச்செட்டி அருணமச்சிவாயர் (தருமபுரம், துறைசை முதலிய மெய்கண்ட பரம்பரை மடாலயங்களைத் தாபித்த மூலபுருஷர்களுக்கு ஆதியாயுள்ளவர்), கங்கை மெய்கண்டார், காழிச் சிற்றம்பலநாடிகள், பெரும் பழுதைகட்டி சிற்றம்பலவர், சிறுபழுதைகட்டி சிற்றம்பலவர், தத்துவப்பிரகாசம் இயற்றிய தத்துவப்பிரகாசர், உண்மைநெறிவிளக்கம் இயற்றிய தத்துவனார், கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதர், காழியந்தாதி இயற்றிய வடிகநாத தேசிகர், ஆனந்தபரவசர், சிதம்பரநாதமுனிவர், அருணாசலக்

கவிராயர், அம்பலவாணகவிராயர், திருஞானசம்பந்தரை உபாசனமூர்த்தியாகக்கொண்டு ஞானசாஸ்திரம் ஈஉ இயற்றிய கண்ணுடைய வள்ளலார், ஞானசாஸ்திரம் கசு இயற்றிய சிவஞானவள்ளலார், ஞானதேசிகர், சதாசிவரூபம் இயற்றிய சட்டைநாதவள்ளல், கீர்த்தனை பாடிய முத்துத்தாண்டவர், மஹாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை முதலான பல ஆன்ரோர்களின் திருவாக்குகளானும், பல அரசர்களது சிலா சாசனங்களானும் நன்கு விளங்குகின்றது.

இக் காழித் தலத்தின் சிவாலயத்திலிருந்து 1918-ம் வருடத்தில் அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாகாகாரர் 360 முதல் 401 வரையில் எண்ணுள்ள 42 கல்வெட்டுக்கள் ஒற்றடம் எடுத்திருக்கின்றனர். இவைகளால் கி. பி. 855 முதல் 1509 வரையில் ஆண்டுவந்த விஜயாலயன் முதலான பிற்காலச் சோழவம்சத் தரசர்முதல் விஜயநகரத் தரசர்களில் பெரும் புகழ்பெற்ற கிருஷ்ணதேவராயர் வரையில் உள்ளவர் காலத்தில் இவ்வாலயத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தங்கள் தெரியவருகின்றன. இன்னும், இக் கல்வெட்டுக்களால் திருத்தோணிபுரமுடையாருக்கும், பெரிய நாச்சியாருக்கும் அடைக்காய் அமுதுக்காகவும், திருநந்தா விளக்குக்காகவும் ஆளுடையபிள்ளையாருக்குத் திருப்பாற்போனகத்துக்காகவும், அர்ச்சனை, திருப்பள்ளித்தாமத்திற்காகவும், இங்குப் பிரதிஷ்டையாயுள்ள மங்கையர்க்கரசியார் நிவேதனத்திற்காகவும், திருக்கைக்கோட்டியில் எழுந்தருளியிருக்கிற திருமுறைகளை எழுந்தருளுவித்துப் பூசிப்பதற்காகவும், திருமுறைகளைத் திருக்காப்பு நீக்கிப் புதுப்பித்தற்காகவும் இறையிலியாக விடப்பட்ட நிலங்களின் நான்கெல்லை விஸ்தரணங்களும் தெரியவருகின்றன. இவைகளில் 381 இலக்கங் கொண்ட இரண்டாம் குலோத்துங்கனது நான்காம் ஆண்டு சாசனத்திலிருந்து ஆளுடையபிள்ளையார்கோயிலில் தேவாரத் திருமுறைகளை நீண்டகாலமாக எழுந்தருளுவித்து அவைகளைப் பூசித்தலும், பாதுகாத்தலும், புதுப்பித்தலும் ஆகிய சிறந்த வழக்கங்கள் இருந்தனவென்பது இவ்விடத்தில் குறிப்பாக நோக்கத்தக்கது.

மூவர் முதலிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களில் எஞ்சி நிற்கும் பதிகங்கள் 797-ல் இக் காழியம்பதிக்குமட்டில் 71 பதிகங்கள் உள்ளன. இவையன்றி மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், நம்பியாண்டார்நம்பி முதலிய பெரியோர்களாலும் பாசுரங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்கூறிய தேவாரப் பதிகங்களில் திருஞானசம்பந்தர் பதிகங்கள் 67,

திருநாவுக்கரையர் பதிகங்கள் 3, சுந்தார் பதிகம் 1 ஆகத் திருப்பதி கங்கள் 71-க்குத் திருப்பாடல்கள் 726.

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த காழித் தேவாரப்பதிகங்களின் உட்கிடக்கையை அறிவதற்கு இத்தலத்துப் புராணமே பெரிதும் உபகரி க்குமென்பதைத் தெள்ளிதினுணர்ந்த தருமை ஆதீனத்துத் தம்பிரான் சுவாமிகளும், காழிக் கட்டளை விசாரணைக் கர்த்தருமான ஸ்ரீ சிதம்பர நாதமுனிவர் அவர்கள் வடமொழியிலுள்ள காழி க்ஷேத்திர மான்மி யங்களை அருணுசலக்கவிராயரைக்கொண்டு தமிழில் பாடுவித்தார்.

இந் நூலை என் தந்தையார் சீகாழி மகா-ள-ள-ஸ்ரீ சபாநாயக முதலியார் அவர்கள் கி. பி. 1887ல் அச்சிடுவித்தார்கள். இப்போது சுமார் 50-வருடங்கள் ஆனபடியால் பிரதிகள் கிடைப்பது அரிதாகி விட்டது. சைவ மாபிற் பிறந்தார் சிவதீக்ஷை செய்யப் பெற்றுத் தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதுதல் அவசியமென்பது சைவாக மங்கட்கும் சைவப் பெரியார்களுக்கும் ஒப்பமுடிந்த முடிபாகலான், இக் காழி வாசிகள் இப்பதிக்குரிய தேவாரத் திருமுறைகளையேனும் முறைப்படி நியமமாக நாள்தோறும் ஓதவேண்டுவது அத்தியாவசிய மாகும். இரண்டாம்முறை இந்நூலை அச்சிட வேண்டிய அவசியம் ஏற்படவே, இத்தலத்திற்குரிய தேவாரத் திருமுறைகளையும், புராண வசனத்தையும் சேர்த்து அச்சிடுவித்தால் யாவருக்கும் பெரும் பயன் அளிக்கு மென்றெண்ணி இப்பணியில் ஈடுபட்டுள்ளேன். இம் முயற்சி முற்றிலும் செவ்வனே நிறைவேறுமாறு அநுக்கிரகித்த எல்லாம்வல்ல இறைவனை என் மன மொழி மெய்களால் வழுத்துகிறேன். இந் நூல் அச்சிடுவதற்கு முன்னும் அச்சிடுங் காலத்திலும் என்னை அடிக்கடி ஊக்கியும், அச்சிடுங்கால் ஏற்பட்டுள்ள ஆசங்கைகளை நிவர்த்திசெய்தும் பலவாறு உபகரித்த என்னுடைய ஆசிரியர் வித்துவ சிகாமணி மகா-ள-ள-ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பாடுடையேனுவேன். இத் தலபுராண வசனத்தை எழுதியும், நூல் அச்சிடுங்கால் உடனிருந்து அதற்குரிய பலஉதவிகளைச் செய்தும் வந்த சீகாழி சபாநாயகமுதலியார் இந்து முதனிலை ஆரம்பப் பாடசாலை உதவி ஆசிரியர் ஸ்ரீ க. சுப்பையாபிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம் உரியதாகும்.

சீகாழி,
26—3—37.

S. சதாசிவமுதலியார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீகாழி அருணைசலக்கவிராயர் சரித்திரம்.

கரகநீர் கவிழ்த்துக் காவிரி கொணர்ந்த
கைம்மலைக் கன்றின் செம்மைசேர் பதத்தைத்
திருத்தக வுளத்தி லிருத்துவ மென்றும்
காழி அருணை சலக்கவி ராயர்
வாழிய சரிதை வளம்பெறற் பொருட்டே.

சோழநாட்டில் தஞ்சைஜில்லாவில் டேன்சுக்காரர் ஆட்சிக்குட் பட்டிருந்த தரங்கம்பாடியைச்சேர்ந்த தில்லையாடியில் சைவவேளாளர் மரபில் நல்லதம்பியாப்பிள்ளை என்பவர் ஒருவரிருந்தார். அவர், தாமும் தமது கற்பிற் சிறந்த மனைவி வள்ளியம்மாளும் புரிந்த நற்றவப் பயனால் அநேக புத்திரர்களைப் பெற்றார். அப் புத்திரர்களுள் அருணை சலக்கவிராயர் ஒருவர். தரங்கம்பாடி நாலாவது பிரடரிக் என்னும் டேன்சு மன்னர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலமாகிய கி. பி. 1712-க்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1634, இதன்மேல் செல்லாநின்ற விஜய வருஷம் ஆனிமாதக் கார்த்திகைநாளில் இவர் அவதரித்தார்.

இவரது பெற்றோர்கள் உரியபருவத்தில் இவரைப் பள்ளிக்கனுப்பி வித்தியாரம்பஞ் செய்வித்துக் கல்வி கற்பித்து வந்தனர். இவர் பின்னர் தம் பன்னிரண்டாம் வயதில் தாயாரையும் தந்தையாரையும் ஒருங்கே யிழந்தமையாலும், தம் தமையனுர்கள் மூவரும் இளமையா யிருந்தமை யாலும், கல்வி கற்பதற்கு இயலாதிருந்தது. எனினும், ஆகூழின் பயனால் தருமபுரவாதீனத்தை யடைந்து அவ்வாதீனத்தலைவர் 10-வது பட்டத்திலிகிய சிவஞானதேசிகரவர்களால் ஆதரிக்கப்பெற்று, அவ்விடத் திருந்த வித்வான்களிடமும், தம்பிரான்களிடமும் கிரந்தம், தமிழ், வடுகு முதலிய மொழிகளில் ஒருவாறு பயின்றுவந்தார். பல மொழிகளையும் பல வித்வான்களிடம் பயின்றுவந்தாரேனும், ஆதீன பிரபல வித்வா னாகிய சீகாழி அம்பலவாண கவிராயரிடம் தமிழில் விசேஷ கல்வியை 25-வது வயதுவரைக் கற்றுவந்தார்.

இவரிடம் கல்வியை விருத்தி செய்வதற்கான அவாவும் புத்தி கூர்மையும் பொருந்தியிருப்பதை யுணர்ந்த ஆதீன கர்த்தர் இவரை அவ்வாதீனத்தில் சேர்த்துக்கொள்ளக் கருதினர். எனவே இவரது மனோபாவத்தை அறியவிரும்பி இவரை உமது ஜீவகாலத்தை எவ்விதம் பயன்படுத்தப் போகிறீரென்று வினவினர். இவர் இராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களைக் கற்றறிந்தவராதலின் இல்லறம்பூண்டு ஒழுக விருப்பமுடையேன் என்று விடை கூறினர். ஆதீனத் தலைவரும் இவர் விரும்பியபடி ஆசீர்வதித்து விடைகொடுத்தருள இவரது ஜன்ம பூமியாகிய தில்லையாடியை அடைந்து, தம் முப்பதாவது வயதில் அபிஷேகக்கட்டளைக் கருப்பூரில் தம் குலத்துக் கேற்ற ஸ்வர்ணம்பாள் என்னும் ஓர் கன்னிகையைத் தெரிந்து விதிப்படி விவாகம் செய்து கொண்டு இல்லறம் நடத்திவந்தார்.

இவர் தமது கல்வியை விருத்தி செய்து கொள்வதற்கும் இல்லறத்திற்கின்றியமையாத பொருளை ஈட்டுவதற்கும் ஏற்ற காசுக்கடை ஒன்று வைத்துத் தொழில் புரிந்தார். இவர் தமது வியாபார நிமித்தம் அப்பொழுது பொன் வெள்ளி நயமாக விற்றதும், பிரஞ்சு கவர்னர் டுப்ளே ஆட்சிக்குட்பட்டிருந்ததுமான புதுவை சென்று தமக்கு வேண்டியவைகளை வாங்கி வருவதற்காகப் பிரயாணமாகி வந்தார். வரும் வழியிலுள்ள சிகாழியில், கோயில் கட்டளை விசாரணைக் கர்த்தரும் முன்னர்த் தம்மொடு பழகினவருமான சிதம்பரநாதமுனிவரைச் சிகாழித் தெற்குவீதி மடத்தில் கண்டார். இருவரும் அன்பின்மிகுதியால் பல இனிய மொழிகளைப் பேசிவருகையில், முனிவர் தாம் காழிப்பள்ளு பாடுவதாகவும், அது தமக்குள்ள பல வேலை நெருக்கத்தால் முற்றுப் பெறுதிருப்பதாகவும் கூறி அவ்வேட்டை இவரிடத்தே ஒப்புவித்தார். இவர் அன்றிரவே முற்றும் சொற்சுவை பொருட்சுவை யமையப் பள்ளைமுடித்து அம்மடத்துத் தொண்டினர்பாற்கொடுத்துத் தாம்தொழிலின் நிமித்தம் அவசியம் புதுவைக்குப் போகவேண்டியிருப்பதைக் கூறி, கோயிலுக்குச் சென்ற முனிவர் திரும்பி வருவதற்குமுன் அவரிடம் விடைபெறுது புதுவை சென்று அங்குச் சிலநாள் தங்கியிருந்தார்.

இவ்வாறு நிற்க, சிதம்பரநாதமுனிவர் இவர், தாம் பாடிய பள்ளை முற்றுவித்த திறத்தைக்கண்டு மகிழ்ந்து, இவரைக்கொண்டு தாம் கருதிய சில நூல்களை முடிக்க விரும்பி இவருக்கென்று ஒரு வீட்டைச்

சீகாழி வடக்குவீதியில் மகா-ரா-ரா-ஸ்ரீ ச. சதாசிவமுதலியார் அவர்கள் ¶வீட்டிற்குக் கீழ்பாகத்தில் சித்தஞ்செய்து கவிராயர் குடும்பத்தைக் கவிராயரின் அனுமதி பெறுமல் தந்திரமாகத் தருவித்துப் புது கிருகத்தில் பிரவேசித்திருக்கச் செய்தனர்.

கவிராயர் புதுவையிலிருந்து திரும்பிச் சீகாழிக்கு வந்தபோது, முனிவரும் கவிராயரும் உலாவப்போவதுபோல் இவர் குடும்பத்தார் இருந்த புது கிருகத்தை யடைந்தனர். கவிராயர் தமது குடும்பம் அங்கிருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்று மற்ற வரலாறுகளையும் அறிந்து முனிவரது வேண்டுகோளுக் கிணங்கினவராய் இங்கேயே வாசம் செய்தார். அக்காலந்தொட்டு இவரைக் காழி அருணாசலக்கவிராயர் என்பர்.

தரங்கம்பாடியில் அரிச்சந்திரநாடகம், தமயந்தி நாடகம் முதலிய வைகளை அதிகப்பணச் செலவு செய்து பலபிரபுக்கள் நடத்தி ஆனந்திப்பதை இவர் அடிக்கடி பார்த்தும் கேட்டுமிருந்ததுடன் தில்லையாடியில் அக்காலத்திருந்த சங்கீத வித்வான்களிடம் பழகிச் சங்கீதத்தை நன்முய்க் கற்றுமிருந்தாராதலின் இவரும் அவ்விதம் நாடகங்களை இயற்ற அவாக்கொண்டார். இவர் மிகவும் விருப்பங்கொண்டுள்ள இதிகாசங்

¶ திருஞானசம்பந்தர் கிருகம் சோளேச்சரமுடையார் சந்நிதி (இரட்டைத்தெரு) தென் சிறகில் 4-வெ. வீடு.

காழிக் கங்கைமெய்கண்டார் வீடு காருடைப்பிள்ளை வீதியில் மகா-ரா-ரா-ஸ்ரீ ச. சுப்பராயமுதலியார் அவர்கள் அம்பிகைவிலாச வித்தியாசாலையாக விளங்குகிறது.

மச்சுச்செட்டி அருணமச்சிவாயர் திருமாளிகை கிழக்கு இரதவீதியில் காழிப்பிள்ளையார்கோயிலுக்குத் தென்சார்பில் இருந்தது. இதில் ஒருகாலத்தில் பழுதைகட்டி சிற்றம்பலவர்கள் இருவரும் உறி கட்டிக்கொண்டு யோக நித்திரையில் அமர்ந்திருந்தார்கள்.

காழிச் சிற்றம்பலகாடிகள் இல்லம் வடக்கு இரதவீதியில் மகா-ரா-ரா-ஸ்ரீ கி. சிதம்பரநாதமுதலியார் அவர்கள் பங்களாவிற்கு மேல்புறமாக மகா-ரா-ரா-ஸ்ரீ வித்துவான் சோ. அருணாசலதேசிகர் அவர்கள் வீடாக இருக்கிறது.

காழி ஒட்டக்கூத்தர் இல்லம் சின்ன கைக்கோளர்தெருவில் வடசிறகில் மகா-ரா-ரா-ஸ்ரீ சிதம்பரநாதமுதலியார் அவர்களுக்குச் சொந்தமான தோட்டமும் பெரியகைக்கோளர்தெருவில் மகா-ரா-ரா-ஸ்ரீ அ. ஆறுமுகமுதலியாரவர்கள் வீடும் அதன் கீழ்புறமுள்ள வீடுகளுமாக இருக்கிறது.

அம்பலவாண கவிராயர்வீடு பிடாரி மேலவீதியில் மகா-ரா-ரா-ஸ்ரீ ராமுப்பிள்ளை அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிறது.

திருச்சைக்கோட்டிகள் இருந்த காழிக் கல்விக் கழகம் (திராவிட கலாநியமம்) வடக்கு இரதவீதியில் மகா-ரா-ரா-ஸ்ரீ சிவ. கண்ணுசாமிப்பிள்ளை அவர்கள் வீடாக இருக்கிறது.

களில் ஒன்றுகிய ஸ்ரீ இராம கதை, முற்றும் கற்றவர்க்கன்றி மற்றவர்கள் அறிந்து இன்புற இயலாத உயரிய நடையில் அமைந்திருத்தலையும், அக் கதை நாடகவடிவில் அன்றுவரை இயற்றப்படாதிருத்தலையும் கண்டார். எனவே அக்கதையை யாவரும் அறிந்து இன்புறும் வண்ணம் எளிய நடையில் இனிய மொழியில் சொற்சுவை பொருட்சுவை அமைதர நாடகமாகச் செய்தார். இவர் சீகாழிக்கு வந்த பிறகு சீகாழிக்குத் தெற்கே ஒரு கடிகை தூரத்தில் உள்ள சட்டைநாதபுரத்திலிருந்து இவரிடம் கம்ப ராமாயணம் பாடங் கேட்டுவந்த வேங்கடராமய்யர் கோதண்டராமய்யர் என்னும் பிராமணர் இருவர் சங்கீதத்தில் அதிக வல்லவர்களாக விருந்தமையால் அவர்களைத் தாம் பாடிய கீர்த்தனங் களை நன்றுய்ப் பாடும்படி பழக்கஞ்செய்து வைத்தார். அம் மாணவர் களிருவரும் சென்னை முதலிய பலவிடங்களுக்குச் சென்று தாம் இவரி டம் கற்ற கீர்த்தனைகளை இராக தாளத்துடன் பாடி, பரிசு பெற்றுத் திரும்பிவந்து கவிராயரிடம் தாம் பெற்ற பரிசு முதலியவைகளுக்கு இவர் பாடிய கீர்த்தனைகளின் சொற்சுவையும் பொருட்சுவையும் அமைப் பும் முக்கிய காரணங்களாமென எடுத்துக் கூறிக் குறைவாகவுள்ள செய் யுட்களை இயற்றி இராமாயண கதை முற்றும் முடித்துத் தந்தருள வேண்டு மென்று கேட்டனர். இவர் அவ்வாறே இன்னும் சில கீர்த்தனை களைப்பாடி நாடகத்தைமுடித்தார். முன்னர் கம்பர் தாம்இயற்றிய இராமா யணத்தை ஸ்ரீரங்கநாதர் சந்நிதியில் கடவுளின் அருளால் பல அற் புதங்களைக் காட்டி அரங்கேற்றியது போலவே, இவரும் ஸ்ரீரங்கத்துக் கோயிற்றுறையார்கள் விரும்பியபடி பெருமாளின் அருளால் அவர்களை மகிழச்செய்து இராமாயணக் கீர்த்தனையை முதல்முதல் கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்ட விடத்திலேயே பங்குனிமீ அஸ்தநட்சத்திரத்தில் திருவரங்கத்துக் கோஷ்டியில் அரங்கேற்றினர்.

அக்காலத்தில் அங்கிருந்த சபையோர், கவிராயருக்கு அநேக பரிசு களும் மரியாதைகளுஞ் செய்தனர். அதன் பிறகு கவிராயர் அப்போது தஞ்சைக்கு அரசனுகிய துளசி மகாராஜாவிடம் தமது நாடகத்தை அரங் கேற்றச் சென்றார். அது காலையில், சென்னை நவாப்பாகிய மாதர்மல்கின் படைகளால் அத்தஞ்சைக்கோட்டை முற்றுகை இடப்பட்டிருந்த தினுல் அரசனைக் காணமுடியவில்லை. எனவே புதுவையிலிருந்த பிரபல பிரபு ஆனந்தரங்கப்பிள்ளை முன்னிலையில் தமது நூலை அரங்கேற்றச் சென்றார். ஆனந்தரங்கப்பிள்ளை தமது அத்தியந்த நண்பர் துளசிமகா ராஜா இந்நாடகத்தைக் கேட்குமுன் தாம்கேட்டல் தகாதென்று சொல்லி, கவிராயருக்குப் பல மரியாதைகளைச் செய்து தம் நண்பர் சென்னை மணலி முத்துக்கிருஷ்ணமுதலியாருக்கு ஓர் தகவுரைக் கடிதம் எழுதிக்கொடுத்து அனுப்பினர். அவ்வாறே கவிராயர் சென்னைக்குச் சென்று மணலி முத் துக்கிருஷ்ணமுதலியாரிடம் அக்கடிதத்தைக் கொடுக்க முதலியார் அங்கீ கரித்து இராமநாடகத்தைப்பிரசங்கிக்கச் செய்து கவிராயருக்கு அநேகம்

பரிசுகள் கொடுத்து உபசரித்தார். பின்னர் நவாப்புக்கும் துளசிமகா ராஜாவுக்கும் சமாதானம் ஏற்பட்டபோது, மகாராஜா, ஆனந்தரங்கப் பிள்ளை இவர்கள் முன்னிலையில் தஞ்சையில் நாடகத்தைப் பிரசங்கித்து அவர்களால் பலமேன்மையான பரிசுகளைப்பெற்றார்.

இவ்வாறு தாம் ஈட்டிய பொருளைக்கொண்டு கவிராயர் சீகாழியில் வசித்துவந்தார். கவிராயர் தலையில் தாழ்வடமும் இடையில் வெள்ளிய வடையும் மேனியில் திருநீறும் பூண்டு சிவசின்னங்களோடு விளங்கி வந்தார். இவர்தமது விவாகத்தின்பின், பன்னிரண்டு வருஷம் தில்லையாடியிலும், அதன் பிறகு சீகாழியிலும் வசித்திருந்து கி. பி. 1779-க்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 1701-க்குமேல் செல்லாநின்ற விகாரிவரு ஆனிமீ சுவாதியில் தமது 67-வது வயதில் சீகாழியில் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இற்றைக்கு 158-வருஷங்கள் ஆகின்றன.

இவர் பெருமாள் பேரிலும் அதிகப் பற்றுள்ளவராய்த் தில்லையாடிக் கருகிருக்கும் அனந்தமங்கலப் பெருமாளைச் சேவித்து வந்தார். அவ்விடம் அமர்ந்துள்ள அநுமாரின் மூர்த்திகரம், ஐந்து திருமுகங்களும் ஒவ்வொரு திருமுகத்திலும் மூன்று கண்களுமுடையதாய் ஸ்ரீருத்திராம் ஸத்தை விளக்குவதா யிருப்பதால் அவ்வநுமாரின் பேரில் சொற்சுவை பொருட்சுவை செறிந்த பிள்ளைத் தமிழ் ஒன்றைப் பாடினார்.

வடமொழிக் கிணையாய் ஆகஸ்தியம் ஆகி, அவப்பிரஞ்சம், பைசாசம் அல்லதாய் உலகமொழிகளுட் சிறந்து விளங்கும் செந்தமிழில் நால்வகைப் புலமையினும் வல்லவராய் நான்கு கவிகளையும் சொற்சுவை பொருட்சுவை அமைதரப் பாடக்கூடிய இவ்வித்துவான் நாகை, காரை, தரங்கை முதலிய பட்டினங்களின் சிவாலய விஷ்ணுவாலயங்களில் நடைபெற்றுவந்த மாசிமகக் கடலாட்டு விழாச் சிறப்பைச் சிந்து, திரிபதை முதலிய இசைப்பாட்டுகளில் வருணித்துப் பாடி அக்கவிகளில் இயல் இசை, நாடகம் என்னும் முத்தமிழின் அருமையையும் இயற்கை நலத்தையும் நீதியின் செம்மையையும் சமயக் கோட்பாட்டையும் ஆங்குக் குழீஇய ஹிந்து மஹாஜனங்களுக்கும் முகம்மதிய கனவான்களுக்கும் டச்சு பிரஞ்சு டேனிஷ் வியாபாரப் பிரமுகர்களுக்கும் விளக்கிப் பிரசங்கிப்பர். அன்றியும் உடையார்பாளையம் முதலிய நாடுகளை ஆண்டுவந்த குறுநில மன்னருக்குச் சீட்டுக்கவிகளை விடுத்து அன்னார்மேல் பஞ்சரத்தினம் முதலிய சிறுபிரபந்தங்களை இயற்றித் தக்க சன்மானங்களைப் பெற்றுவந்தனர்.

திருக்கடலூர்த் திருமயானத்தில் ஒரு சமயம் உரோமன் பாதிரிமார்களுக்கும் புரோட்டஸ்டண்டு சபைக் குருமார்களுக்கும் சச்சரவு நேரிட அதனை இவர்போக்கினர். அப்பொழுது அக்குருமார் கவிராயரை

கோக்கி இவரது நூல்களில் வேளாண் மாந்தருக்கு வருணதருமமும் ஜாதிதருமமும் சமயநிலையும் கூறியிருப்பதற்கு முன்னோர் நூல்களில் பிரமாணம் உளதோ என உசாவியதற்கு இவர் பின்வருமாறு விடை யிறுத்தார். 'ஆரியர்' 'திராவிடர்' என்னும்மொழிகளுக்கு முற்காலத் தவர் கொண்ட பொருள் ஒன்று; இக்காலத்தவர் கொள்ளும் பொருள் வேறு. எல்லா வுயிர்க்கும் பிறப்பு ஒக்குமானாலும் செய்தொழில் வேற் றுமையால் சிறப்பு ஒவ்வா; ஜன்மம் கன்மம் குணம் சமயம் ஆசாரம் காரணமாக தொன்றுதொட்டு மக்களுக்குள் சிறிது தாரதமம் இருந் திருத்தல் வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியனார் வாகைத்திணையில் வருணதருமங்களையும், அகத்திணை மரபியல்களில் ஜாதிதருமங்களையும் எடுத்துரைக்கின்றார். வருணதருமம் அந்தணர் முதலிய நால்வருக்கும் முறையே ஆறு, ஐந்து, ஆறு, ஆறு தொழில்களாக வகுக்கின்றார். ஜாதி பேதமோ கௌடம் (நி), திராவிடம் (நி) எனப் பலதரப்படும். கௌட தேசத்துப் பிராமணர் ஒருவர் திராவிட தேசத்துப் பிராமணர் ஒருவ ரோடு ஆரிய வருணம் என்னும் நிலையில் ஒத்துள்ளாராயினும், அவருக் கும் இவருக்கும் உள்ள ஜாதி ஆசார நிலை சற்று மாறுபட்டிருத்தலின் இவர்களுக்குள் விவாகாதி சம்பந்தங்கள் ஏற்படுவதில்லை. இஃது ஏனைய மூன்று வருணத்தாருக்கும் ஒக்கும். திராவிடப் பிராமணர் ஒருவர் தமது ஜாதியில் தமது அல்லாத கோத்திரத்தில் விவாக சம்பந்தம் செய்துகொள்வர். இஃது ஏனைய மூன்று ஆரிய வருணத்தாருக்கும் ஒக்கும். இவ்விவாக சம்பந்தமும் வைதிகச் சடங்குகளோடு எட்டுப் பிரகாரமாய் ஜாதியசுத்தத்தைக் காக்கும். தம்பதிகள் விராத்தியர் அல்லாமல் பெரும்பாலும் வைதிக சமயத்தாராயிருப்பர். ஆசிரியர் திராவிட தேசத்து வேளாளருக்கு ஆரிய வருண தருமமாகிய ஓதல் முதலிய இரு மூன்று நிறமும் உள்ளனவாகக் கூறினர். இங்ஙனங் கூறவே இவர்க்கு இவ் ஆறு தொழில்களோடு ஜாதி தருமமும் சமயாசாரமும் தொன்றுதொட்டு உள்ளனவாம். ஜாதித் தொழிலா வது மன்னர் பின்னோராய் மன்னர்க்குரிய சிறப்புரிமையை அவரால் பெற்று, உழுவித்தலும் உழுதலும் பிரசாபத்திய விதிப்படி மணஞ் செய்துகொள்ளலும் சமய சாஸ்திரப்படி தேவதாபூஜை பஞ்ச மஹா யக்ஞம் முதலியன புரிதலும் ஆகும். வடமொழி வேதத் தில் இவரை ராஜந்யர் என்றும் மனுஸ்மிருதியில் திராவிடம் முத லிய பதின்மூன்று தேசங்களில் இரண்டாம் வருணத்தார் க்ருஷலர் ஆயினர் என்றும் இதிகாச புராணங்களில் மன்னவர் காலபேதத்தால் சிறிது மாறுபட்டு வேளிர் ஆயினரென்றும் இவர் தன்மை கூறப்படும். தமிழ் நூல்களில் உரையாசிரியரும் பிற்பட்ட புராண நூலாசிரியரும் இவ்வேறுபாட்டைக் கருதி இவரைச் சற்சூத்திரர் என்றும் இவர்களுள் சைவசமயிகளை அநுசைவரினின்றும் பிரித்து அவாந்தர சைவரென் றும் கூறினரேனும் தருமநெறியில் ஏனைய மூன்று வருணத்தாரோடும் ஒத்த நிலையினராகவே இவர்கள் இருந்துவருகின்றனர். மானுடநூல்

வல்ல ஐரோப்பியர் இவரை ஆரியதிராவிட வகுப்பிற்சேர்த்து, இவருட் பெரும்பான்மையோர் ஆரியர் என்றும் சிறுபான்மையோர் அவர் அல்லாதாரினின்றும் உயர்த்தப்பட்டவ ரென்றும் கூறுகின்றனர். இக் காலத்து ஆராய்ச்சியாளர் தமிழ்நாட்டில் முதல்முதல் நாகரிகம் உற்றவர் வேளாளர் என்றும், இவருள் ஓர் குடிக்குக் கிழார் ஆயினர் வேளிர் என்றும் நெடுங்காலத்துக்கு முன்னரே அவ்வேளிருட் சிலர் ஆரிய முறைப்படி இராச்சியாபிஷேகம் செய்யப்பட்டு மூடிமன்னர் ஆயினர் என்றும் கூறுகின்றனர். ஆகவே கவிராயர் தமது நூலில் காட்டிய சமயநிலை முதலியவை அநுபவம் லிகிதம் சாக்ஷியங்களால் உறுதியாகின்றன.

இவர் திருவாரூரில் சென்றிருந்தபோது தியாகேசர் வண்ணம் இயற்றினர். சீகாழியிலிருந்த காலத்து இப்பதியின் ஐதிகங்களிற் சிறந்த அசமுகி சரித்திரத்தை இனிய நாடகமாக முதல் முதல் இயற்றியருளினர். இங்கிருந்த காலத்தில் அநேக சைவநூல்களையும் பிரசங்கங்களையும் கேட்டு மகிழ்ந்து பல சைவோபந்நியாசங்களைச் செய்து குரு லிங்க சங்கம பக்திகளில் சிறந்தவரானர். திருஞானசம்பந்த சுவாமிகளிடம் இவர்கொண்ட பக்தியின் மிகுதியால் சுவாமிகள் பேரில் பிள்ளைத் தமிழ் ஒன்றை இயற்றினர். பிறகு பிரமேசர் மேல் உலா ஒன்றும் கோவை ஒன்றும் பாடியருளினர். இத்தகைய அரிய நூல்களை இயற்றிய பெரியார் அனுபவமும் அறிவும் முதிர்ந்த முதுவயதில் எழுதிய நூலே இக் காழிப் புராணம்.

காழிப்புராண நடையும் சொற்சுவையும் ஆழ்ந்தகருத்தும் தொடையழகும், இவர் எழுதிய நூல்கள் எல்லாவற்றினும் இந்நூலே பிற்காலத்ததும் சிறந்ததும் என்பதை விளங்கச் செய்யும். தம்மையும் தமது குடும்பத்தையும் சீகாழியில் தருவித்து ஆதரித்தவரும் தமது அத்தியந்த கண்பருமான சிதம்பரமுனிவர் விரும்பியபடியும், மற்றும் பல பிரபுக்கள் கேட்டுக்கொண்டபடியும், குருலிங்கசங்கம க்ஷேத்திரமாகிய காழியின் புராணத்தை இயற்றுவது தமது பவத்தை நீக்குவதற்குத் தக்க உபாயமாக விருப்பதை யுணர்ந்து தாம் இந்நூலை இயற்றியதாக இப் புராணம் கடவுள் வாழ்த்து 22-வது செய்யுளில் கூறியுள்ளார். இப்புராணத்தின் முடிவில்

பொங்குபவ டிகபுரா ணத்தி ரொன்பான்
புகல்பிரமாண் டத்தொன்று காந்தத் தன்னில்
சங்கரசங் கிதையிலொன்பான் சனற்கு மார
சங்கிதையி லொன்றுமும்மைப் பரிச்சே தத்தில்

அங்கொருபன் னெண்றத்தி யாய மாக
வறைதருநாற் பதுந்தமிழான் மூப்பத் தொன்ரு
இங்கவையா யிரத்தைஞ்ஞூற் றைம்பான் செய்யு
ளெனக்காழி மான்மியந்தா னியன்ற வாறே.

என்றிருக்கும் கவியால், பவடிக புராணத்திருந்து பதினெட்டு அத்தி யாயமும், பிரமாண்ட புராணத்தில் ஒரு அத்தியாயமும், கந்தபுராணம் சங்கர சங்கிதையில் ஒன்பதும், சனற்குமார சங்கிதையில் ஒன்றும் மூன்ருவது பரிச்சேதத்தில் பதினென்றும் ஆக நாற்பது அத்தியாயங் களையும், தமிழில் மூப்பத்தொரு அத்தியாயத்திற்குள் அடக்கி எழுதி யருளினரென்று விளங்கும்.

இவர் எழுதிய சம்பிரதாய நூல்கள் இருபா இருபஃது, நான்மணி மாலை என்பன. இவற்றுள் இருபா இருபஃது தில்லையாடிக்குச் சமீபத் திலுள்ள திருவியலூர் உய்யவந்த தேவநாயனரையும் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனரையும் பற்றிப் பாடியது. நான்மணிமாலை தரும புர ஆதீனத்துப் பத்தாவதுபட்டத்திலிகிய சிவஞான தேசிகசுவாமிகள் மேல் பாடியது. இவர் பாடிய தனிப் பாடல்கள் பலப்பல. இவற்றுள் சிறப்பாயவை திருவிடைக்கழி முருகரையும், தில்லையாளி சரணகத ரகூஷகரையும், தரங்கம்பாடி மாசிலாமணி ஈசுவரரையும் குறித்துப் பாடியவை. சென்னையில் முத்துக்கிருஷ்ண முதலியாரிடம் கடுக்கன் ஜதையையும், கம்பராமாயணக் கருப்பொருள் அடங்கிய ஏட்டுச் சுவடி யையும் பெற்றபோது இவர் பாடிய தனிக்கவி யாவரும் புகழத்தக்கது.

உலக மீனுத்து மொருங்கின்ற உமையாள் பாகத் தொருகடவுள்
உறையுங் காழிச் சிரதமதை ஓதுந் தமிழுக் கணியாக
இலக உரைத்த பேராளா எழிலார் அருணை சலக்கவிஞ
எளியேன் நினது புகழைவிரித் தேத்த அறிதேன் பொறுத்திடுவாய்
அலகில் கீர்த்தி வான்மீகி அருள்சேர் கம்ப னிவர்களெலாம்
அமைத்த ராம கதையதனை அறிஞர் சிலரே தேர்ந்திடுவர்
திலக மீனயாய் நீயமைத்த சிறந்த ராம கதையதனைச்
சகத்தோ ரெவரும் தேர்ந்திடுவர் திகழ்ந்து வாழ்க நின்புகழே.

கும்பகோணம்,
26—3—37.

S. இராமச்சந்திரன், B.A.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீகாழித் தலத்தின் பல்பெயர் விளக்கம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பிரமபுரம் முதலிய பன்னிரண்டு பெயர்களுக்கும் தனித்தனியாகவும் பொதுவாகவும் பல பதிகங்களை அருளிச்செய்து, அவற்றில் அப் பெயர்களின் காரணத்தை விளக்கியுள்ளார். சீகாழித் தலபுராணத்தில் அத் தலங்களின் விசேடமும் அவை அமைந்துள்ள இடங்களும் கூறப்பட்டுள்ளன. சிற்சில பெயர்க் காரணங்களுக்குக் கூறிய விஷயங்கள் கற்பபேதத்தால் சிறிது மாறுபட்டிருக்கும். அவற்றை இங்குத் திரட்டிக்கூறி அத் தலங்கள் இப்போதுள்ள இடங்களும் அவற்றிலுள்ள மூர்த்திகளும் தீர்த்தங்களும் இங்கு எடுத்துக் கூறப்படும். தலங்களின் எல்லையைக் குறிப்பதற்குப் பிரமேசர் அமர்ந்திருக்கும் மூலத்தானத்தை ஆதாரமாக வைத்து அதற்கு இன்ன திசையில் இவ்வளவு *தூரத்தில் இன்ன ஸ்தலம் அமைந்துள்ளது என்று ஸ்தலபுராணம் கூறும்.

இத் தலத்தின் மூல லிங்கம் பிரமேசலிங்கம்; இது சுயம்பு லிங்கம். மேலும் இங்குப் பல தைவலிங்கமும் ஆரிடலிங்கமும் உள்ளன. சில தைவலிங்கத்தை அசுரர் பூசித்துப் பேறு பெற்றதால் அவ்விலிங்கங்கள் ஆசுரலிங்கங்களாகக் கருதவும் படும். சோளேச்சரமுடையார் மானுடப் பிரதிஷ்டை செய்யப் பெற்றவர். மூல லிங்கமாகிய பிரமேசரிடத்து ஏனைய லிங்கங்களின் தத்துவம் மூர்த்தி பிரபாவங்களாகிய பஞ்ச சாந்தாக்கியமும் சாந்நித்தியமாக விளங்கும். உரோமச முனிவர் தமது மலங்களைக் கழுவுதற்பொருட்டுப் பூசித்த திருக்கழுமல லிங்கத்தின் பிரபாவமானது ஏனைய மாந்தரது மலங்களைக் கழுவுதற் பொருட்டுப் பிரமேசரிடத்து அமைந்து விளங்கும். பட்டினத்தடிகள்

---

*குரோசம்—இரண்டேகால் மைல்; கணைவிடுதூரம்—கால் மைல்; தண்டம் அல்லது கோல்—ஒரு மனித சரீரத்தின் அளவு அதாவது நான்கு முழம்.

விசாரித்து மூன்றுசந்தியும் அனுட்டான ஓமங்களையும் முடித்து, நான்கு வேதங்களையும் ஓதி, ஐந்து வேள்வியும் செய்வித்து, ஆறங்கங்களையும் ஓதி, இவைகளுக்கு முதலாயிருந்துள்ள பிரணவத்தை உச்சரித்துத் தேவர்களுக்கு அவிகொடுத்து மழையைப் பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்டதால் இது பிரமபுரம் ஆயிற்று என்று எழுதியுள்ளார். இதுவும் அமையுமென்பதற்குத் தேவாரப் பதிகங்களும் நம்பியாண்டார் நம்பிகளின் வாக்குகளும் பெரியபுராணச் செய்யுள்களும் ஆதாரமாக உள்ளன.

ஈ. காளிபுரம்:— தில்லைச்சிற்றம்பலத்தின்கண் சிவபெருமானோடு வாதாடிய ஸ்ரீகாளிகாதேவி தான் செய்த குற்றம் நீங்க இத்தலத்தைச்சார்ந்து இலிங்கமொன்றை ஸ்தாபித்துப் பூஜை முதலிய இயற்றி நற்கதியடைந்தமையால் காளிபுரமென்றும் (புரா. அத். 6, செ. 40), ஸ்ரீகிருஷ்ணன் காளிதன் என்னும் பாம்பின் வலியை யழிக்க அப்பாம்பு கிருஷ்ணனிவணங்கித் தான் செய்த குற்றத்தைப் பொறுத்து நற்கதியடையும் வழியை அதுக்கிரகிக்க வேண்டுமெனப் பணிவுடன் கேட்க, அவர் அருளியபடியே காளிதன் இத்தலத்தை யடைந்து பிரமபுரீசரைத் துதித்து அருள்பெற்றுப் போந்தமையால் காளிபுரம் என்றும் இது பெயர் பெற்றது (புரா. அத். 6, செ. 61). கண்ணுடைய வள்ளல் திருவெழுகூற்றிருக்கையின் உட்கிடையில் ஊழிக்காலத்தும் அறியப்படாமல் மிகவும் காளிதமானவிஷத்தையுடைய காளிதன் என்கிற நாகம் பூசிக்கையாலே இது ஸ்ரீகாளிபுரம் ஆயிற்றுஎன்பர். ஸ்ரீகாளி என்னும்பெயர் சீகாழி என மருவியது.

உ. வெங்குரு:— அசுரகுருவாகிய சுக்கிரன் பிரமதேவர் முன் செருக்குடன் செல்ல, பிரமதேவர் வெறுத்தமை யுணர்ந்து நாரதரிடம் சென்று நடந்ததைக் கூறினர். சுக்கிரன் தன் சீஷர்களாகிய அசுரர்கள் செய்த தீவினையால் தனக்கு வலி குன்றியதை நாரதர் கூறக்கேட்டு அவர் மொழிப்படியே இப்பதியில் பிரமபுரீசரைத் துதித்துத் தீவினை நீங்கி மேன்மையும் வலிமையும் அடைந்தமையால் இது வெங்குரு ஆயிற்று என்றும், எமதருமனை நரகவாசிகள் நிந்தித்தகாலத்து அந்நரகவாசிகள் தருமனைக் கண்டவுடன் பூர்வ வினையை யுணர்ந்து மௌனமாம் வண்ணம் அருள்பெற இப்பதியில் அவன் பூசித்துக் குருத்துவம் கொண்டதனால் வெங்குரு ஆயிற்று என்றும் கூறும் (புரா. அத். 7, செ.38). திருஞானசம்பந்த சுவாமிகள் தமதுதேவாரத்தில் 'அங்கண்மதி' எனத் தொடங்கும் பாடலில் ஐம்புலன்களை வென்று பரிபக்குவமுற்ற அன்பர்களுக்கு இத்தலத்தின்கண் சிவபெருமான் குருவாகத் தோன்றி அருள் புரிவதால் இது வெங்குரு ஆயிற்று என்பர். கண்ணுடைய வள்ளல் திருவெழுகூற்றிருக்கை உட்கிடையில் தேவகுருவாகிய பிரகஸ்பதி தம்மை மொழிந்து கர்த்தா வேறுண்டோ வென்று மனோகர்வஞ்செய்ய,

பரமேசுவரன் இவர் கர்வத்தை யடக்கக் கருதித் தேவருக்குக் குருவாம் அதிகாரத்தை மாற்றியருள அதை யுணர்ந்த வியாழன் இப்பதியை யடைந்து பரமேசுவரனைப் பணிந்து தான் செய்த அபராதங்களைப் பொறுத்தருளி இரகூழிக்க வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்ய, எம்பெருமானும் தேவர்களுக்குக் குருவாம் அதிகாரத்தை முன் போலவே கொடுத்த காரணத்தால் வெங்குரு ஆயிற்று என்றும் கூறி யுள்ளார். (இவ்விஷயம் இத் தலபுராணத்தில் கூறப்படவில்லை).

ரு. புகலி:—சூரனுக்குப் பயந்து தேவர்களெல்லாம் தங்கள் நாரியர்களோடு பிரமபுரீசரைவிட வேறு புகலிடமில்லை என்று இப்பதி யில் சூழ்ந்து எம்பெருமானைப் போற்றித் துதித்தமையால் இது புகலி எனலாயிற்று (புரா. அத். 9, செ. 19).

சு. சிரபுரம்:—திருப்பாற் கடலைக் கடைந்தெடுத்த அமிர்தத்தை விஷ்ணு மோகினியாக வந்து தேவர்களுக்கு அளிக்க அத்தேவர்களுடன் அசுரனும் சயிங்கிகேயன் என்பான் கர்ந்து அமர்ந்திருப்பதைச் சூரிய சந்திரர்களால் அறிந்த மாயன் கையிலிருந்த சட்டுவத்தால் அவ்வசு ரனை இருகூறுக்கத் தலைக் கூறுகிய இராகு இப்பதியில் பூசித்துப் பகை வனுகிய சூரியனை மறைக்க அருள்பெற்றமையால் இது சிரபுரம் எனல் ஆயிற்று (புரா. அத். 10, செ. 20). திருஞானசம்பந்தசுவாமிகள் வழி மொழிப் பதிகத்திலும் வள்ளலார் உட்கிடையிலும் தேவர்களுக்கு விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்து வருகையில் இராகு கேதுக்களா கிய இரண்டு பாம்புகள் மாற்றுருக்கொண்டு அமிர்தமுண்ணவிருப் பதைக் கண்டு கையிலிருந்த சட்டுவத்தால் அவைகளின் தலையறும்படி வெட்ட, உடலையிழந்த நாகங்களின் சிரங்கள் இரண்டும் தங்கள் உடலைப் பெறுவதற்காக இப்பதியில் பரமேசுவரனைப் பூசித்தலால் சிரபுரம் என்று பெயர் உண்டாயதெனக்கூறப்பட்டுள்ளது.

எ. சண்பை:—கிருஷ்ணபகவானுடைய உறவினர்களாகிய யாத வர்கள் ஒருநாள் தங்களில் ஒருவனைக் கர்ப்ப ஸ்திரீபோல் வேடங்கட்டி நீராடப்போம். கபிலமுனிவர்முன் கொண்டுபோய் இவளுக்குப் பிறப்பது ஆணை பெண்ணை என்று கேட்க, அவர் யாதவ குலம் முழுமையும் நாசமாகும்படி ஓர் இருப்புலக்கை உதிக்குமென்று சொல்லி ஏகினர். அவ்வாறே பிறந்த உலக்கையை அராவிப் பொடியாகச் செய்து கடலிற் கரைக்க, அத் தூள்களெல்லாம் சண்பைப் புற்களாக முளைத்தன. பின்பு ஒருநாள் யாதவர் யாவரும் கடற்கரையிற் கூடியபோது ஒருவர்க் கொருவர் சண்டையிட்டு சண்பைப் புல்லைப் பிடுங்கி ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு முனிவர் சாபப்படி இறந்தனர். அச் சண்பைப் புல்லால் வந்த பழி யாதவகுலத்துதித்த தன்னைத் தொடராதிருக் கும்படி கிருஷ்ணன் இப்பதியை யடைந்து பரமேசுவரனைப் பூசித்து

அருள் பெற்றதால் இது சண்பை எனல் ஆயிற்று (புரா. அத். 12, செ. 20). திருஞானசம்பந்த சுவாமிகள் 'விண்பயில்' எனத் தொடங்கும் செய்யுளில் சண்பைப்புல்லால் வந்த பழி தம்மைத் தொடராதிருக்க ஸ்ரீ கிருஷ்ணன் திருப்பாற் கடலில் ஆலிலைமேல் யோக நித்திரை கொண்டு ஒரு பாதத்தை மடித்து மற்றொரு பாதத்தை மேலே தூக்கி மிதந்தனர். அவ்வாறு மிதப்பது கரையில் புள்ளினங்களைத் தேடி வேட்டையாடிவந்த வேடனுக்கு ஓர் செம்பருந் திருப்பது போல் தோன்ற அம்பினால் எய்தான். அவ்வம்பு கிருஷ்ணன் மேல்பட்டுப் பரமபதமடைந்தனர். இவ்வாறு கிருஷ்ணனுக் குண்டாகிய தோஷம் கபிலமகரிஷியைச் சென்று வருத்தினதால், அவர் அத்தோஷம் நீங்கப் பரமேசுவரனை இப்பதியில் துதிக்கச் சண்பைப் புல்லால் நேர்ந்த தோஷம் நீங்கிச் சண்பை முனியென நாமமருளப் பெற்றமையின் இது சண்பை ஆயிற்றெனக் கூறியுள்ளார். கண்ணுடையவள்ளலாரும் இவ்விதமே கூறுகின்றார்.

அ. கோச்சைவயம்:—மச்சகந்தியென்கிற மடவாளோடு ஆற்றின் மத்தியில் தோணியிற் புணர்ந்த பராசரரை முனிவர்கள் கன்னியர்காமி யெனத் தூற்றினமையால் பராசரர் அக் கொச்சையாம் பழிச்சொல் தம்மைப் பற்றாதிருக்க இப்பதியை யடைந்து பூசித்து அருள் பெற்ற மையால் இது கொச்சைவயமெனலாயிற்று (புரா. அத். 13, செ. 32). முதுமையடைந்த பராசரமுனிவர் மற்ற ரிஷிகளை நோக்கி அவர்களை "நீங்கள் சமுசாரிகளேயொழிய விரத மனுஷ்டிப்பவ ரல்லீரெனத் தூஷிக்க அவர்கள் பராசரரைப்பார்த்து நீர் மச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமும் நீங்காது அனுபவிப்பீரென்று சாபமளித்தனர்." பராசரர் அச் சாபப்படி மச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமும் நீங்காது தூறு யோசனை தூரம் வீசியபடியால் இதைப் போக்க வல்லவர் பரமேசு வரனே என்று அறிந்து இக்காழியம்பதியில் வந்து பூசித்து அருள் பெற்றுத் தமது கொச்சை நீங்கப்பெற்றமையால் இது கொச்சைவயம் ஆயிற்றென சம்பந்தர் பதிகத்தாலும், வள்ளலார் உட்கிடையாலும் விளங்கும்.

கூ. வேணுபுரம்:—தேவேந்திரனால் தோல்வியுற்ற சூரனும் பதும னும் ஒருருவாகிச் சிவனை வழிபடுதலால் மிகுந்த வலியும் மேன்மையும் அடையலாமென அறிந்து இத்தலத்தில் பூசை செய்ய, சிவபெருமான் மூங்கில் வடிவாக முளைத்துத் தோன்றி அவன் விரும்பியவாறு வரங் களைத் தந்தருளினமையால் வேணுபுர மெனவும் (அத். 15, செ. 29), இந்திரன் தன் குருவை அவமதித்ததனால் தனது செல்வம் குறைவுற்ற தைப் பிரமாவினால் அறிந்து குருவைத் தேடிக் காணுமையால் பிரமா வின் சொற்படி விசுவரூபனைக் குருவாக அடைந்து யாகஞ்செய்ய, அவ்விசுவரூபன் அகத்தில் தன்னினத்தவராம் அசுரர்களுக்கு ஆக்கங்

கூறி யாகாக்கினியை வளர்த்தனன். இதை இந்திரன் ஞானதிருஷ்டி யால் உணர்ந்து வச்சிராயுதத்தால் விசுவரூபன் தலையை வெட்டினான். விசுவரூபன் தந்தை பழிக்குப்பழிசெயக்கருதித் தந்திரயாகம் வளர்த்து அதனில் தோன்றிய விருத்திராசுரனை யேவ, இந்திரன் தன் குரவரிரு வருக்கு மிழைத்த பழியினால் விருத்திரனோடு போர்புரிய மாட்டாது, அகத்தியர் முன்பு சிறப்பித்துச் சொல்லத் தான் கேட்டிருந்த இத் தலத் திற்கு வேணுவின் வழியாக வந்து, தீர்த்தமாடிச் சிவனை வழிபட்டு அரு ளையும் முன்போல் மேன்மையையும் அடைந்ததால் வேணுபுரம் எனவும் இது பெயர் பெறும் (புரா. அத். 15, செ. 40, 41). இன்னும் வேணு என்ற இந்திரனோடு கஜமுகனெனும் அசுரன் போர்புரிந்து தேவ லோகத்தைக் கைப்பற்றிக்கொண்டான். தோல்வியுற்ற இந்திரன் இப்பிரமபுரமடைந்து சிவபெருமானிடம் தனக்கு நேர்ந்ததைக் கூறித் துதிக்கக் கருணையங்கடவுள் கணேசரை யழைத்து "கஜமுகாசுரன் வரப்பிரசாத முடையவன்; அவனை ஒருவராலும் செயிக்க முடியாது; அவன் வடிவம்போல் நீ வடிவெடுத்துச் சென்று உனது வலக்கொம்பை யொடித்து அதனால் அவனைக் கொன்று வேணு வென்னும் இந்திரனைத் தேவருலகிற்கு முன்போல் அரசனாக்செய் என்று திருவருள் புரிய," அவ்வாறே கணேசர் கஜமுகாசுரனைக் கொன்று வேணு வென்பவனுக்குத் திரும்பவும் தேவருலகாட்சியைத் தந்தனர். இஃது திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகத்திலும் கண்ணுடையவள்ளலார் உட்கிடையிலும் கண்டது.

60. கழுமலம்:—உரோமசர் எத்தலங்களிலும் தொலையாத தமது மலத்தைதொலைத்து இக் காழியம்பதியிலுள்ள சிவனைக்கண்டு பூசிக்க நீங்கப் பெற்று ஞானமடைந்து சிவகதி யடைந்ததால் இது கழுமலம் என லாயிற்று (புரா. அத். 16, செ. 17). சர்வான்மாக்களும் சிவதீக்கையி னாலே மலத்தைக் கழுவுதற்கு அமைந்த ஸ்தலமாதலின் கழுமலமென வும், மறுவற்ற பிரமகுலத்தில் தோன்றித் தீக்கைகளாலே மலத்தைக் கழுவப்பெற்ற கவுணிய கோத்திரத்திலே சம்பந்தசுவாமிகள் வந்தமை யால் கழுமலமெனவும் ஆயிற்று. "ஒழுகலரிதழி" எனத்தொடங்கும் செய்யுளும் வள்ளலாரது திருவுட்கிடையும் இதனை உறுதிப்படுத்தும். இவ் உரோமசர் என்னும் பிராமண உத்தமர் கவுண்டினியகோத்திரத் தவரென்பதும், அக் கோத்திரத்தில் அவர் வழியிலே திருஞானசம் பந்தர் திருவவதாரம் செய்தருளினரென்பதும் மேற்கூறிய பதிகத்தை யும், திருவெழுகூற்றிருக்கை "மறுவிலா மறையோர்க் கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை கழுமல முதுபதிக் கவுணியனறியும்" என்பதற் கும் திருவேகபாதம் திருக்கடைக் காப்புக்கும் வள்ளலார் இயற்றிய உரையையும் நோக்குவார்க்கு விளங்கும். அன்றியும், சிலர் சம்பந்தர் அபரசுப்பிரமணிய ரென்றும், மாகேஸ்வர தத்துவத்தில் பக்குவப்பட்ட ஓர் ஆன்மா என்றும் கூறுவர்.

தம்செய்து பிரமபுரேசரின் அருளால் காகவடிவத்தை நீக்கினர். அவனும் முன்போலவே அரசனனான். இதனால் இத் தலம் புனர்சன்ம புரமெனலாயிற்று.

கூ. கிரிபுரம்:—இறைவன் உமாதேவியோடும் கைலையங்கிரியிலிருப்பதுபோலவே இத்தலத்திலும் மலைமேலமர்ந்து காட்சி யருள்வதால் இது கிரிபுரமென்றுயிற்று.

எ. உமாபதிபுரம்:—இங்கு இறைவன் உமாபரையோடும் தோணியில் அமர்ந்து உமாதேவிக்கு அருளுபதேசம் செய்ததால் உமாபதிபுரம் ஆயிற்று.

அ. சீவன்முத்திபுரம்:—இப் பதியில் உமாமகேஸ்வரர் தம்மை விரும்பினவர்களுக்குப் பஞ்சாட்சர உபதேசம் செய்து சீவன்முத்தர்களாகச்செய்வதால் சீவன்முத்திபூர் ஆயிற்று.

கூ. நீலகண்டவேற்பு:— சிகாழியிலுள்ள மலையை நீலகண்டவேற்பு என்று கூறுவர்.

கo, கக. மாலைமாற்றுப்பதி, எழுகூற்றிருக்கைப்பதி:—இத்தலத்தில் திருஞானசம்பந்தசுவாமிகள் மாலைமாற்றும் திருஎழுகூற்றிருக்கையும் பாடியிருப்பதால் இப்பெயர் வந்தன (சீகாழிக் கோவை).

திருத்தளிகளின் விபரம்.

———(o)———

க. பிரமபுரம்:—சீகாழி பெரியகோயிலுக்குள் பிரமேசர் இருக்கும் திருத்தளி.

உ. வேணுபுரம்:—இது பெரியகோயில் இராயர் வெளிமண்டபத்தின் பக்கல் வேணு உருவமாகச் சிவபெருமான் அமர்ந்த திருத்தளியும், திருக்கோலக்காவுக்குச் செல்லும் வழியில் திருக்கழுமல நதிக்கு மேற்பால் மூங்கில்வனம் எனப் பெயர் அமைந்து இப்போது நாகநாதசுவாமிக்குச் சொந்தமாயுள்ள திருநந்தனவனத்தில் இந்திரன் முதலியோரால் அமைக்கப்பெற்றிருந்த திருத்தளியுமாம். இதனுள் முன்னர்க் கூறிய இலிங்கம் இப்போது திருக்கோயில் உள்பிராகாரத்தின் கோபுரவாயிலுக்கு வடபாகத்தில் சூரியதீர்த்த பாலருக்கெதிரில் உள்ளது.

ங. புகலி:—இது பலசமயங்களில் தேவேந்திரனும் தேவர்களும் பூஜித்த பலஸ்தலங்களையுடையது. கோயிலுக்குக் கீழ்பாகம் தொடங்கிச் சிங்காரத்தோட்டம்வரையும் சென்று அங்கிருந்து மேற்கே நாகநாத

சுவாமியினது புஷ்பவனம்வரைக்கும் சென்று அதன்மேல் வடக்கே அண்டர்நாயகத்துக்கு மேல்பால் வரையிலும் அளாவியிருப்பது. இதற் கிலிங்கம் இப்போது அண்டர்நாயகத்திலிருக்கிறது.

ச. வெங்குரு:—சீகாழி கோயிலுக்குள் தெற்கே தென்பிராகாரத் தில் சுக்கிரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கமுள்ள திருத்தலி (புரா. அத். 7, செ. 12, 13). இவ்விலிங்கம் இப்போது வலம்புரி மண்ட பத்திலிருக்கிறது.

ஞ. தோணிபுரம்:—பெரியகோயிலில் திருத் தோணிமயமாக விளங்குகிறது.

கூ. பூந்தராய்:—சீகாழி பெரியகோயிலுக்குக் கிழக்கே வில்வவனம் எனப் பெயர்பெற்ற திருவாலியில் பூவராகமூர்த்தியும் குறையலூ ருக்கு அருகில் நரசிங்கமூர்த்தியும் இருந்து பிரமேசரைத் துதித்த திருத்தலி. (இதுவே கடற்காழியும் தண்காழியுமாம்). ஆலியார் என்னும் சங்கப்புலவரும் திருவிசைப்பா பாடிய திருவாலி அமுதனாரும் இவ்வாலிநகரில் வசித்தார்கள்.

எ. புறவம்:—இது புறவநகியின் தீர்த்தக்கரையில் சிபிச்சோழ னால் பிரதிஷ்டை செய்யப்பட்ட யாகசாலையிலுள்ள திருத்தலி. இதற்கறி குறியாக சிவலிங்கம் சோளேச்சரத்திலும் அக்கினீச்சரத்திலுமுள்ளன. அக்கினீச்சரத்தில் சிபிச்சக்கரவர்த்தி துலாபுக்க திருவுருவமும் மூவர் முதலிகள் திருவுருவமும் களவழிபாடிய பொய்கையார் கோச்செங்கண்ண னார் இரும்பொறையார் ஆகிய மூவரது திருவுருவமும் உள்ளன. அன்றி யும் இத்தலத்தின்கண் குறிக்கப்பட்டுள்ள பூர்வசோழர்களது சாசனத் தில் இவ்விலிங்கம் திருக்கழுமலமுடையார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

அ. சிரபுரம்:—இது நாகநாதசுவாமிகோயில்.

கூ. சண்பை:—இது விஷ்ணுமூர்த்தி கிருஷ்ணவதாரத்தில் பெரிய கோயிலுக்குள் ஒரு கலையை ஸ்தாபித்த சிவலிங்கம் உள்ள திருத்தலி. இவ்வாலயத்தில் திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியார் தேவாரத் திரு முறையோடு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். இது தற்காலம் சம்பந்தர் கோயிலென வழங்குகிறது. கிருஷ்ணமூர்த்தியானவர் தமது ஒரு கலையைச் சண்பைச் சிவலிங்கத்தில் நிறுத்திவைத்துப் பின்னர்ச் சீகாழிக்கு வடக்கே இரண்டுகுரோசத்து அளவில் வைஷ்ணவ தீர்த் தத்தை ஸ்தாபித்த இடம் காப்பியக்குடி மணலாகரம் என்பவை (புரா. அத். 12, செ. 21). இவ்விரண்டு நகரங்களும் இச் சோழமண்டலத்தில் மிகப்பழமையானவை என்பதை இக்கோயில்களின் நிலைமையாலும் தல

புராணத்தாலும் கர்ணபரம்பரைச் செய்தியாலும் இங்கு அமைக்கப்பட்டிருந்த பிரதிமங்களாலும் அவற்றிற்குச் சமீபகாலம்வரை நடத்திவந்த உற்சவங்களாலும் விளங்கும். இப்பதியில் தொன்றுதொட்டு ஆரிய வருணத்து திராவிட ஜாதியைச்சேர்ந்த நாற்பாற் குலத்தவரும் பிரசித்தியோடு பல அரசர்களின் மானியங்களையும் பட்டவுரிமைகளையும் பெற்று வாழ்ந்துவந்தனர். காப்பியக்குடி என்பது காச்யபக்குடி காவ்யகுடி என்னும் வடமொழியின் பாகதத்திரிபு. இப்புராணத்தில் கண்டபடி பல கோத்திர சூத்திர பிரவரங்களைச் சேர்ந்த அந்தணர்களும் காசிபமுனியும் அதிதியும் காசிபமுனிவரது கோத்திரத்தைச் சேர்ந்த வேதியர்களும் இங்கு வசித்து மகாலிங்கத்தைப்பூசித்து இதன் பக்கத்திலுள்ள பஞ்சக்குரோசமூர்த்திகளில் ஒருவராகிய வேதபுரீசரை வணங்கி வரம்பெற்று மணலாகாத்தில் வாமனமூர்த்தியை அவதரிப்பித்தனர். இதனால் இத்தலத்திற்கு இப்பெயரும் சுவாமிக்குக் காசிபேசர் என்ற பெயரும் அம்மனுக்கு அதிதீஸ்வரி என்ற பெயரும் வந்தன. வாமனமூர்த்தியானவர் தாடாளர் திருவிக்கிரமர் சர்வாதிகர் என்னும் பெயருடன் சீராம விண்ணகரத்தில் விளங்கி வடுகேசரால் மறக்கருணைபெற்றுப்பிரமேசர் திருவருளை அடைந்தார். இதன் பின்னர் திதியின் மக்களாகிய தைத்தியருடைய குருவாகிய சுக்கிரபகவான் (கவி) தமது கோத்திரத்தைச் சேர்ந்த மறையாளரோடும் இத் தலத்திற்குவந்து சிவபெருமானைப் பூசித்து என்றும் அழியாத நிலைமையையும் அசுரகுரு ஆகுந்தன்மையையும் மிருத்யுஞ்சமந்திரத்தையும் பெற்றார். இதனால் இங்கரகாத்திற்குக் காவ்யகுடி என்னும் பெயரும் சுவாமிக்கு மிருத்யுஞ்சேசர் என்னும் பெயரும் அம்மனுக்கு அமிர்தவல்லி என்னும் பெயரும் வந்தன. சமயாசாரியர் நால்வர்களுக்குமுன் இம்மண்டலத்தில் சைவசமயத்தாபனம் செய்தவர்கள் ததீசி உபமன்யு தூர்வாசர் அகஸ்தியர் என்பார். இவருள் அகஸ்திய முனிவர் தமது சீடர்களாகிய திரணதூமாக்கினி முதலியவர்களோடு காவ்யகுடிக்கு எழுந்தருளிக் காசியபேசுரரை வணங்கி மணலாகாத்தில் தைப்பூசத்தில் ஸ்ரீகைலாசபதியின் திருமணக்கோலத்தையும் மார்கழித் திருவாதிரையில் திருச்சிற்றம்பலத்தில் ஸ்ரீ கூத்துகந்த பெருமானுடைய சூக்குமபஞ்சாக்கர நடனத்தையும் தரிசித்துப் பேறுபெற்றார். கும்பகோணத்தைச் சார்ந்த தாராசுரம் என்னும் ராஜராஜபுரத்தில் இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்குமுன் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் சைவமடாதிபதிகள் நூற்றெண்மருள் பலரும், திருத்தொண்டர்களில் இருவரும் இத்தலுக்காவில் அவதரித்தவர்களாய் இருப்பது மிக்க சிறப்பைத்தரும். சீகாழியில் அகத்தியமுனிவர் விநாயகப்பெருமான் மார்காளர் மாசாத்தர் இந்திராணி அஜோமுகி இவர்களின் விக்கிரகங்களையும் காப்பியக்குடியில் கோயிலுக்குள்ளேயே இருக்கும் மாசாத்தர் திரணபிந்து தேவந்தி இவர்களின் விக்கிரகங்களையும் உற்று நோக்கினும் இத்தலங்களில் நடந்துவந்த தைப்பூசத் திருமண உற்சவமும் ஆடிமாதம் கூம் வெள்ளிக்கிழமையில் திருச்சிற்றம்பல வாசிகளால்

நடத்தப்பட்டுவந்த தேவஸ்தியின் உற்சவமும் பூர்வ ஐதிகங்களை நன்கு விளக்கும். பனங்காட்டங்குடியில் சுமார் ச0-வருடங்களுக்கு முன்வரையிலும் எழுந்தருளியிருந்த நி00-பிள்ளையார்களில் இப்போது ச00-பிள்ளையாருக்குமேல் காணப்படாததுபோலக் காப்பியக்குடியிலும் மணலாகரத்திலும் இருந்துவந்த தாமிர சொரூபங்களும் சில விக்கிரகங்களும் காணுமற் போயின. இத்தலங்கள் இரண்டும் வெகு நிலமாகி விட்டபடியால் இவற்றில் காப்பியக்குடியை இதன் சொந்தக்காரராகிய மகா-ள-ள-ஸ்ரீ கி. சிதம்பரநாதமுதலியார் அவர்களும், மணலாகரத்தை இதன் சொந்தக்காரராகிய மகா-ள-ள-ஸ்ரீ ச. சுப்பராயமுதலியார் அவர்களும் திருப்பணிசெய்யத் தொடங்கியுள்ளார்கள். இது யாவருக்கும் பெருமகிழ்ச்சியைத் தரும்.

க0. காழி:—இது காளி தீர்த்தத்தின் மேற்பால் ஸ்ரீ காளிகா தேவியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மகாலிங்கமுள்ள ஸ்தலம். இவ்விலிங்கம் பெரியகோயில் மேலக்கோபுரத்தில் உட்பாகத்தில் இப்போது அமைந்துள்ளது.

கக. கோச்சைவயம்:—பெரியகோயிலுக்குள் பராசரலிங்கமுள்ள இடம்.

கஉ. கழுமலம்:—உரோமசமுனிவர் ஆச்சிரமமானது தாடாளப் பெருமாள் கோயிலின் வடபாகத்தில் பலாவிருட்சங்களோடு பொருந்தியிருந்தது. இந்தமுனிவர் திருமங்கையாழ்வார் கூறுகிறபடி தாடாளப் பெருமானைப் பூசித்துப் பேறுபெற்றார். அதன் பின்னர்ச் சம்பந்தர் கூறுகிறபடி இம்முனிவர் தமது பஞ்சமலங்களையும் கழுவிச் சிவஞானச் செல்வம் பெறுதற்பொருட்டு அரியபிள்ளை குளத்தின் வடபால் சுயம்புவாயிருந்த ஓர் மகாலிங்கத்தைக் கண்டு பூசித்துப் பிரமேசரால் பேறு பெற்றார். இத்தலத்தின் ஆக்கினேய பாரிசத்தில் அக்னீச்சரமும் கீழ்பாகத்தில் குணதீலப்பாடியும் உள்ளன. திருக்கழுமலவனகரில் பூர்வகாலத்தில் நானூற்றுவர் பிராமணர் வசித்து வந்தனர்.

புண்ணிய தீர்த்தங்களின் விபரம்.

———:o:———

க. பிரமதீர்த்தம்:—இத்தீர்த்தம் அநாதிகாலம் தொட்டுள்ளது. ஒவ்வொரு பிரமாவும் தோன்றுங்காலங்களில் தமக்கு வேண்டிய முக்கியவரங்களை இத்தீர்த்தத்தில் படிந்து பரமேசுவரனை வணங்கிப் பெறுதலால் இதற்குப் பிரமதீர்த்தம் எனப் பெயர் வழங்குகிறது. வடக்குக்

கோபுரவாயிலுக்குத் தென்கிழக்கில் திருநிலையம்மை சந்நிதானத்தில் நான்கு பக்கங்களிலும் படித்துறைகளுடன் இத்தீர்த்தம் அமைக்கப் பெற்றுள்ளது. வேதத்தை யுணர்ந்த பிரமன் சுசு கோடிதீர்த்தங்களும் ஒருங்கேயமைந்த இத்தீர்த்தத்தில் மூழ்கிப் பயன் பெற்றது போல் மற்ற வர்களும் நல்வகைப் பிறவிகளில் உழலாது மேன்மையடைவதற்காக இத்தடாகத்தைச் சதுரமாகச் செய்து நான்கு பக்கங்களிலும் கரை ஏற் படுத்தினர் என்றும், ஐப்பசி விஷு, அமாவாசை, இரண்டு அயனம், வருஷப்பிறப்பு முதலிய விசேஷகாலங்களில் இத் தீர்த்தத்தில் மூழ்கு வோர் இம்மையில் சகல பாக்கியமும் புத்திரப்பேறும் மறுமையில் மோக்ஷமும் பெறுவர் என்றும் இப்புராணம் உசம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

உ. சூலதீர்த்தம்:—சிவபெருமான் விஷ்ணுவின் சாபத்தை நிவர்த்தி செய்வதற்காகத் தமது மூவிலைச் சூலத்தினால் உண்டாக்கியது. இஃது சிதம்பரம் போகும் சாலையைத் தனக்குக் கீழ்கரையாகப் பெற்றுத் தாடா ளன் வடகிழ்கோடிக்குப் பத்துக்கோல் தூரம் வடக்கேயுள்ளது. இதை இப்போது அம்மைகுளமென்றும் அரியபிள்ளைக்குளமென்றும் வழங்கு கிறார்கள். இத்தீர்த்தத்தில் ஐப்பசி பௌர்ணமி தினம் மூழ்கி விஷ்ணு தமது சாபத்தினின்றும் நீங்கினர். மாசி பூர்வபக்ஷத்து ஏகாதசியில் இத்தீர்த்தத்தில் மூழ்கி விகடாங்கன் காகவடிவம் நீங்கி அரசனுமை யால் அவ்வேகாதசியில் மூழ்குவோர் தங்கள் சுற்றத்தாரோடும் நற்கதி யடைவர்.

ஊ. ஆனந்ததீர்த்தம்:—நடராஜர் ஆனந்தத்தாண்டவம் செய்த போது திருக்கண்களினின்று ஆனந்த நீர்பெருகி அகத்தியர் இருந்த விடத்துக்கு எதிரில் தேங்கி நின்றது. அகத்தியர் இதற்கு ஆனந்த தீர்த்தமெனப் பெயர் தந்தனர். இது வயிரவன் கோடிக்கு கoo-கெஜ தூரத்தில் மேற்கேயுள்ளது. இதனை முதலியார் குளமென வழங்குகிறார் கள். இத்தீர்த்தத்தில் மூழ்குவோரும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்து சிவ னடிநீழலிற் சேர்வார்கள்.

எ. காளிதீர்த்தம்:— ஸ்ரீகாளிகாதேவி தன் பழி நிங்கத் தோற்று வித்த தீர்த்தம். இது மேற்குக் கோபுரவாயிலுக்குச் சமீபத்திலுள்ளது. இதனைக்ஷரிக்குளம் என்று வழங்குகிறார்கள். இங்கே சுவாமி கார்த் திகைமீ ஞாயிற்றுக்கிழமைகளில் எழுந்தருளித் தீர்த்தங் கொடுப்ப துண்டு. ஒவ்வொரு பௌர்ணமியன்றும் இதில் ஸ்நானஞ்செய்பவர் தாங்கள் விரும்பியவாறு எல்லாம் பெற்றுச் சிவ நிந்தையால் வந்ததோ ஷங்கள் நீங்கி மன்மதனைப்போன்ற அழகுடையவராய் வாழ்ந்து சிவ பதத்தை மறுமையிலடைவர்.

ரு. வைணவதீர்த்தம்:— காப்பியக்குடியிலும் மணலாகரத்திலும் ஸ்ரீ விஷ்ணுபகவானால் முறையே கிருஷ்ணவதாரத்திலும் வாமனவதாரத்திலும் அமைக்கப்பட்ட தீர்த்தங்கள் இரண்டும் இப்பெயரால் வழங்கும். காப்பியக்குடி தீர்த்தத்தில் தை, ஆடி மாதங்களில்—அயன புண்ணிய காலங்களில்—ஸ்நானம் செய்பும் ஆடவர்கள் சகல தோஷ நிவர்த்தியையும் அடைவார்கள். ஸ்திரீகள் தங்கள் பர்த்தாக்களுக்கும் பாலர்களுக்கும் நேரிடக்கூடிய அரிஷ்டங்களின் நிவர்த்தியையும்பெறுவார் கள். அன்றியும், மிருத்தியுஞ்சேசர் சந்நிதியில் இத்தீர்த்தத்தில் மூழ்கி அவரைப்பூசித்து மிருத்தியுஞ்சஹோமம் செய்விப்பவர்கள் அவமிருத்து தோஷம் நீங்கப்பெறுவார்கள். மணலாகரத்திலுள்ள வைணவதீர்த்தத் தில் ஸ்நானம்செய்து அத்தலத்துக் கலியாணசுந்தரர் சந்நிதியில் சித்திரை ஐப்பசிமாதங்களின் விஷுபுண்ணிய காலங்களில் திரவிண மந்திரத்தை ஜபம்செய்விப்பவர் புத்திரதோஷம் நீங்கி நன் மக்கட்பேறு பெறுவார் கள். செவ்வாய்க்கிழமையோடு கூடிய பரணி பூரம் பூராடம் ஆகிய மூன்று நக்ஷத்திரங்களில் இத் தீர்த்தங்கள் ஒன்றில் ஸ்நானம் செய்து மூர்த்தி சந்நிதியில் நவக்கிரகசாந்தி செய்விக்கும் சதிபதிகள் அங்காரகதோஷ மும், சுக்கிரதோஷமும் நீங்கிப் பாக்கியத்துடன் வாழ்வார்கள். மற்றும் மூர்த்தி தல விசேஷங்களை இதன்மேற்கண்ட தல விபரத்தில் காண்க.

சு. இராகுதீர்த்தம்:—பிடாரிவடக்கு வீதியின் மேல் கோடிக்கு வடபாகத்திலுள்ளது. இராகுவால் தோற்றப்பட்டது. இதைக் கோடி தீர்த்தமெனவழங்குகிறார்கள். இத்தீர்த்தத்தால் நாகேச்சரமுடையாருக்கு அபிஷேகம் செய்து இராகு தனக்கு வேண்டும் வரங்களைப் பெற்றான். முனிவர்களும் தேவர்களும் தங்கள் வினை நீங்க இத்தீர்த்தத்தில் படிந்து செல்வார்கள்.

எ. ஆழிதீர்த்தம்:—இராகுதீர்த்தத்திற்கு வடபால் உரு0-கெஜ தூரத்தில் மாரியம்மன் சந்நிதியிலுள்ளது. விஷ்ணுவால் தம்பழி நீங்கு வதற்காக உண்டாக்கப்பட்டது. இதில் முழ்கிப் பிராமணர்களுக்குத் தானங்கொடுப்பவர்கள் வைகுந்தத்தில் வாழ்வார்கள்.

அ. சங்கதீர்த்தம்:—சிவபெருமான் மூங்கில் வடிவாக வெழுந்தரு ளிய போது உண்டானது. சூரன் இதில் ஸ்நானம் செய்து வலிபெற்று இந்திரனை யெதிர்த்து ஜயமடைந்தான். இதில் மூழ்கியவர் புஜபலம் பெற்றுப் பஞ்சமாபாதகங்களினின்றும் நீங்கிப் புலப்பகை கடந்து புண்ணியராய் வாழ்வார். இது திருக்கோயில் முன்மண்டபப் பிராகா ரம் கீழ்சார்பில் இருக்கது.

கூ. சுக்கிரதீர்த்தம்:—கோயிலுக்குத் தெற்கே கூ00-கெஜதூரத்தில் சிங்காரத்தோப்புக்கும் வைத்தீசுவரன்கோயிலுக்குச் செல்லும் சாலைக் கும் மத்தியில் முன்சீப்கோர்ட்டுக்கு வடபாகத்திலுள்ளது. அசுரகுருவா

கிய சுக்கிரனுல் தோற்றுவிக்கப்பட்டது. இத்தீர்த்தத்தில் மூழ்கிச் சுக்கிரன் தன் வினைகளை ஒழித்து வலிமை பெற்றுத் தேவகுருவாகிய வியாழனுக்குச் சமமாயினன். சுக்கிரவாரங்களில் கோமயம் தெளிக்கப் பெற்ற தெர்ப்பையைத்தாங்கி மூழ்குவோர்க்குச் சமமானவர் பூவுலகில் கிடையாது.

கo. பராசரதீர்த்தம்:—இது பிரமபுரீசர் கோயில் உள்பிராகாரத்தில் வடகீழ் திசையிலுள்ள கூபம். பராசரரால் தோற்றுவிக்கப்பட்டது. புலால் உண்ணல் மதுபானம் செய்தல் முதலிய தோஷங்கள் இத்தீர்த்தத்தால் நீங்கும். கார்த்திகைமாதம் பௌர்ணமியில் இதில் மூழ்கிப் பிராமணர்களுக்கு விதை நெல் தானங்கொடுத்தவர்களுக்குப் பிறவித் துன்பங்கிடையாது. இத்தீர்த்தமே எல்லா மூர்த்தங்களுக்கும் இப்போது அபிஷேகத்திற்கும் உபயோகமாகிறது.

கக. அகத்தியதீர்த்தம்:—பிடாரி கீழைவீதியின் கீழ்பாகத்தில் பிரமபுரீசர் சந்நிதியிலுள்ளது. அகத்தியர் உண்டாக்கியது. இப்போது பிள்ளையார்குளம் எனவழங்குகிறார்கள். இதில் மூழ்கியவர்கள் முத்தமிழும் கற்று வல்லவர்களாவார்கள்.

கஉ. கௌதமதீர்த்தம்:—அகத்திய தீர்த்தத்தின் பக்கத்திலுள்ளது. கௌதமரால் உண்டாக்கப்பட்டது. இப்பொழுது ஐயனார்குள மென வழங்குகிறது.

கங. வன்னிதீர்த்தம் (அக்கினிதீர்த்தம்):—சீகாழியின் வடகீழ்பாலுள்ளது. அக்கினி பகவானுல் உண்டாக்கப்பட்டது. இத் தீர்த்தத்தால் அக்கினி பகவான் தாம் விரும்பியவாறு வரங்களைப் பெற்று மேன்மையுற்றார். இதனை இப்போது சட்டைநாதர் குள மெனவழங்குகிறார்கள்.

கச. குமாரதீர்த்தம்:—இது பிடாரிவடக்குவீதிக்கு வடபக்கத்தில் வடக்கு கோபுரவாயிலின்எதிரேயுள்ள தாமரைக்குளமாம். இது குமரக் கடவுளால் தோற்றப்பட்டது; இத்தீர்த்தவிசேஷத்தால் சூரனை வெல்லத்தக்க ஆயுதங்களைப்பெற்று ஐந்தெழுத்தினுட்பொருளைச் சிவபெருமான் உபதேசிக்க முருகவேள் அறிந்தார். இத்தீர்த்தத்தின் திவலைகள் மேல் படினும் மானுடர்கள் செய்தபாவங்களெல்லாம் நீங்கிவிடும். கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சத்துத் திதிகள் முதல் ஆறிலும், ஐப்பசி மாதம் சுக்கிலபட்சத்துத்திதிகள் முதல் ஆறிலும் இதில் மூழ்குவோர் மோக்ஷத்தைப் பெறுவார்கள். சஷ்டிதோறும் மூழ்குவோர் இலட்சுமி கடாக்ஷம் பெற்று இம்மையில் மேன்மையும் மறுமையில் முக்தியுமடைவர். கார்த்திகை நக்ஷத்திரங்கள் தோறும் மூழ்குவோர் ஜீவன்முத்தராவர்.

கடு. சூரியதீர்த்தம்:—திருக்கோலக்காவில் தாளபுரீசுவரர் சந்நிதியில் உள்ளது. சூரியனுல் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மகிமையால் சூரியபகவான் சிவபெருமானிடம் மூவுலகத்திற்கும் தலைமையாந்தன்மை

யும், அச்சூரியனை வணங்குபவர்கள் தம்மிடம் அருள் பெறும்படியான பாக்கியமும் பெற்றார். ஆனி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் ஞாயிறு வாரங்களிலும் பங்குனிமகத்தன்றும் இத்தீர்த்தத்தில் மூழ்கிச் சிவபெருமானைப் பணிவோர் எல்லாத்தருமங்களையும் செய்த பேற்றையடைவர்.

ககூ. சந்திரதீர்த்தம்:—சீகாழியின் தென்கீழ்பாலிலுள்ள தில்லை விடங்கனிலுள்ளது. சந்திரன் உண்டாக்கியது. இதனில் மூழ்கிச் சிவபெருமானை வழிபட்டுச் சந்திரபகவான் தக்கனால் ஏற்பட்ட சாபத்தை நிவர்த்திசெய்து கொண்டான். இத்தீர்த்தத்தில் மூழ்கியவர்கள் பேரின்பத்தையடைவார்கள்.

கஎ. கேதுதீர்த்தம்:—செம்மங்குடியென்கிற செம்பாம்பன்குடியில் கேதுவால் தோற்றுவிக்கப்பட்டது. இத்தீர்த்த மகிமையால் கேது தன் பகைவனான சந்திரனை மறைக்க வலிபெற்றனன்.

கஅ. அண்டதீர்த்தம்:—தாடாளப்பெருமாள் கோயிலுக்கு மேற்பாலுள்ளது. அண்டர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இதில் மூழ்குவோர் ஜீவன் முத்தராவர்.

ககூ. பதினெண்புராணதீர்த்தம்:—பிடாரி வடக்கு வீதியின் கீழ் கோடியில் திருமுல்லைவாயில் சாலைக்குக் கீழ்புறமுள்ளது. பதினெண் புராணநாயகர்களால் ஏற்படுத்தப்பட்டது. இஃது ஓர் அழகிய கூபம். இத்தீர்த்தத்தில் மூழ்குவோர் கல்வியறிவிற்சிறந்து மேம்பாடுறுவார்கள்.

உ0. புறவநதி:—அக்கினிதேவன் புறுவடிவுடன் சிபியின் தாகத்தை நிவர்த்தி செய்யக் காவிரியினின்றும் கொண்டு வந்தது.

உக. கழுமலநதி:—இந்திரன் இங்குச் சிவபெருமானை வழிபடுகையில் ஓர் நந்தனவனம் ஏற்படுத்தினான். மழையும் நீர் வரத்துமில்லாது நந்தனவனம் காய்ந்துபோக ஆபத்துக்காத்த விநாயகரைப் பிரார்த்திக்க அவர் காகவடிவமாகச்சென்று அகத்தியர் கமண்டலத்திலிருந்த ஜலத்தைக்கவிழ்த்து, அகத்தியர்க்குத் தன் சுயரூபத்தைக் காண்பித்துக் கொண்டுவந்த தீர்த்தம். இந்நதி காழியின் நாலுபக்கமும் சூழ்ந்துள்ளது. இந்நதியில் மூழ்கியவர்கள் சகலபாவங்களும் நீங்கிப் புண்ணியராய் மேன்மையுற்று வானுலகடைந்து வாழ்வர். அன்றியும் தென்புலத்தார்க்கு விருந்திடுநாளும் கிரகணநாளும் சித்திரை விஷு ஐப்பசி விஷு விலும் தெகூழிஞாயன உத்தராயண நாளும் அமாவாசையும் மகநாளும் இதில் மூழ்கியவர்கள் தம் தீவினை நீங்கிப் பிணியின்றி வாழ்வார்.

உஉ. விநாயகநதி:—சீகாழியின் கீழ்பாகத்தில்சுமுமலநதியினின்று பிரிந்து செல்லுகிறது. இதை இப்பொழுது ஓட்டையான் வாய்க்கால் என்று வழங்குகிறார்கள். இன்னும் அநேக தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன.

அஷ்டபைரவர் விபரம்.

———:o:———

சீகாழிச் சினகரத்தில் பரம ரகசியத்தானங்களும் பல அற்புதத் தானங்களும் உண்டு என்று சித்தர்நூல் கூறும். இவற்றுள் சட்டை நாதரது சினகரத்தின் கீழ் சட்டைமுனிவரும், பலிபீடத்தின் சார்பில் யூகிமுனிவரும், பராசர கூபத்தின் வடபால் வித்தகச் சித்தர்கணமும், திருநிலைநாயகியின் திருக்கோயிலுள் நவநாதசித்தர்களும், அங்நாயகியின் கர்ப்பக்கிருகத்தின் ஈசான திக்கில் சிவசத்தி பரிணம வாதிகளாகிய வீரமாகேசுவரர் ஐவரும் தவம்புரிந்து வருகின்றனர். சம்பந்தர் சந்நிதியில் கணநாதநாயனருக்கு ஆலயம் ஒன்று அமைந்திருக்கிறது. அன்றியும் இத்தலத்தின் புண்ணிய விருக்ஷமாகிய பாரிசாதத்தின் கீழ்பால் சூரியபகவான் அருகிலுள்ள சிவலிங்கத்தின் பக்கத்தில் தேவதாரு ஒன்றுண்டு. அத்தரு கொன்றையைப்போல் பூத்து மாதுளையைப்போல் காய்த்து மாவைப்போல் பழுத்து முறையே மந்திரம் மணி மருந்தின் தன்மைவாய்ந்து தன்னை அடைந்தவர்களுக்கு மலப்பிணி உளப்பிணி உடற்பிணியை நீக்கிச் சிவயோக சித்தியையும் சிவஞான நிலையையும் சிவானுபவச் செல்வத்தையும் விளக்கும்.

இனி இக் காழியம்பதியில் முக்கியதெய்வமாக விளங்குகின்றவர் சட்டைநாதசுவாமி. இவரது மூர்த்தம் சிவமூர்த்தங்களுள் ஒன்று. இத்தலத்தின்கண் அமர்ந்துள்ள பைரவர் தண்டபாணி, தாருகாவனத்துக்குச் சென்ற பைரவர் பிக்ஷாடனர். இவர் நரசிங்கம் திருவிக்கிரமன் முதலிய விஷ்ணுமூர்த்தியின் அவதாரங்களுக்கு அநுக்கிரகிக்கத் தோன்றினவர். இச் சட்டைநாதரது வரலாற்றை இத் தலபுராணத்தின் நான்கு அத்தியாயங்களுள் காணலாம். இந்தத் தேசத்தில் ஒரு காலத்தில் பைரவமதம் பிரசித்தி அடைந்திருந்தது. இம்மத சித்தாந்தம் வேதாகமங்களிலும் தந்திரங்களிலும் கூறப்படும். சிவஞானமுனிவர் சிவஞானபாஷியத்தில் இம்மத சித்தாந்தத்தைச் சுருக்கமாய்க் கூறுகின்றார். எல்லாச் சிவாலயங்களிலும் க்ஷேத்திரபாலராக பைரவர் விளங்கினும், காசி காழி நாகை செங்காட்டன்குடி முதலிய க்ஷேத்திரங்களில் விசேஷ வைபவத்தோடு விளங்குகின்றார். சீகாழியில் ஸ்ரீ வடுகநாதருக்கு நித்திய பூசையும் சுக்கிரவாரந்தோறும் நைமித்திக பூசையும் சித்திரைமாதத்துப் பரணியில் விசேஷ பூஜையும் மிருகசீரிடம் தொடங்கித் தசதினமும் விசேஷ உற்சவமும் நடைபெற்று வருகின்றன. ஆபதுத்தாரணரை ஆராதனை செய்வதால் சருவஞ்ஞதை முதலிய ஞானசித்திகள் எட்டும், அணிமாமுதலிய யோக சித்திகள் எட்டும், வஸ்யம் முதலிய கன்மசித்திகள் எட்டும் பெறலாம்.

பைரவமாவது:—

ஆதியாம் பயிர வன்ரு னட்டதத் துவங்க ளாகிச்
சோதியா மவையே வந்தெட் டாகிய கலையாய்த் தோன்றி
நீதியாங் கலைக டாமே நிகிலமாம் பெத்த முத்தி
யாதியாம் பைர வத்தி ஞஞ்ஞையா லுயிர்க ளாமே.

என்பது. ஆதிபைரவர் எட்டுத் தத்துவமாகிற எட்டு பைரவராய் இவ்வெண்மரும் எட்டுக் கலைகளாய்த் தோன்றி ஆதிபைரவஞஞ்ஞை யாலே இக்கலைகள் தாமே யகிலமும் பெத்தமுத்தியும் ஜீவராசிகளுமாம்.

என்றவத் தத்து வங்க ளியைந்தவவ் வடைவிற் கேளாய்
துன்றுநற் சுதந்த ரன்ரூன் சுவேச்சையான் லோகன் கால
னின்றவுக் கிரன்பி ரச்சை நின்மாணன் பீட ணன்ரு
னென்றபை ரவரெட் டாவ ரினிக்கலை விதமுங் கேளாய்.

தத்துவங்களாகிற பைரவர் சுதந்தரபைரவர் சுவேச்சைபைரவர் லோகபைரவர் காலபைரவர் உக்கிரபைரவர் பிரச்சையாபைரவர் நின் மாணபைரவர் பீஷணபைரவர் என்பர். இனிக்கலைகளாகிற விதமும் கேட்பாய்.

வான்வளி யங்கி யப்பு மண்ணென வரைந்த வைந்தின்
ரூனுறு பீச மாகுங் தகுகலை யைந்துஞ் சாற்று
மூனமி லமுத மோடு விடகலை கார ணந்தா
ஞனவெண் கலையா லிந்த வகிலமற் ரூஞ்ஞை யுங்கேள்.

மூன் சொன்ன அட்டபைரவரும் எட்டுக்கலையான விவரம் ஆகா சாதிபூதம் ஐந்து அமிர்தகலை விடகலை காரணம் இப்படி எட்டுக்கலையாய் இந்தக்கலைகளால் அகிலமுமாகி அவரது ஆஞ்ஞையாலே யுயிர்கள் நடக்கும். இப்பால் ஆபத்து விக்னம் பயம் அந்தம் இந்த நாலாஞ்ஞையும் சுதந்தராதிபைரவர் நால்வராலே நடக்கும். இனிக்காலம் கருமம் உண ராமை ஜென்மமாகிற நாலாஞ்ஞையும் மற்ற நாலுபைரவராலே நடக்கும். ஆகையால் போகபோக்கியமுஞ் ஜனனமரணமும் யோகமுஞ் சுத்த நிர்வாணமுத்தியும் யோகபைரவர் நால்வராலேயும் ஜீவராசிகளுக்குண்டா மென்றறிக. முன் போக மார்க்கத்திலே ஜனனமரணப்பட்டு வருகிற வர்களுக்கெல்லாம் பூஜையாலும் பலிகளாலும் முத்திரைகளாலும் விப வங்களுண்டாம். இவைகளையன்றிப் போகமு முத்தியு மிரண்டாகி நிர் வாணமாகிற மோட்சமு முண்டென்றறிக.

அனுதிபை ரவமோன் றெட்டா மவற்றெட்டோ டவையு மாகுந்
தனுதியா நால்வர் நால்வர் தந்தசாத் திரங்க ளெட்டாம்
முனுதியாம் போக யோக முறைமுறை வகுத்து வைத்துப்
பினுதியா முத்தி நல்கு மெனவயி ரவன்ரூன் பேசும்.

என்பது அனுதியில் பைரவரொருவரே எட்டுபைரவராய் அவ்வெட்டு பைரவரும் எட்டுக்கலையாய் இந்தபைரவர் தாமே எட்டாஞ்ஞையாம். இந்த ஆஞ்ஞை எட்டாலே எட்டுபைரவர் எட்டுச் சாத்திரமுண்டாக்கினர். இதனாலே நால்வர் போகமும் நால்வர் யோகமுஞ் சொல்லிப்பின் ஆகியான முத்தி கொடுக்கும் என்றது.

பின்னுமொரு சாத்திரம்:—

ஏகமாய் பைரவமெண் டத்துவமா யெண்கலையா
யாகிய ஞாலந்தன் ஞஞ்ஞையாற்—போகமாம்
உத்தரிக்கு நால்வரால் நால்வரால் யோகத்தால்
வித்தரிக்கு முண்ணறவால் வீடு.

பின்னென்றில் சங்காரகால பைரவர் அசிதாங்கபைரவர் குரோதபைரவர் சண்டபைரவர் இந்த நால்வராலும் சிருஷ்டியாதியால் ஜீவர்களையும் ஜெகத்துக்களையு முண்டாக்கிப் போகபோக்கியங்களையும் கொடுத்துக் காவலாயும் காப்ப ரென்றறிக. உன்மத்தபைரவர் கபாலிபைரவர் பீஷணபைரவர் மார்த்தாண்டபைரவர் இந்த நால்வராலும் யோகபாவனையாலே ஜீவராசிகளுக்கெல்லாம் பைரவர் சொன்ன சாஸ்திரப்படியே பைரவசக்கரத்தைப் பூஜை செய்வதால் சுத்த நிர்வாண முத்தியைக் கொடுப்பார். இனி ஆதிபைரவரொருவராயிருப்பது சொரூபலக்ஷணம். இவர் எட்டுபைரவர் எட்டுக்கலை எட்டாஞ்ஞை ஜீவராசிகளாக விரிகிறது தடத்த லக்ஷணம். இந்த எட்டில் நால்வரால் ஜனன மரணப்படுவது பெத்த நிலை. நால்வரால் யோகமாய் பைரவ மந்திரத்தியான பூஜையாலே துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து பைரவரை யடைகிறது மோக்ஷம் என்றறிக.

நமது க்ஷேத்திரத்தில் திருத்தோணிச்சிகரத்தில் சட்டைநாதரும், வலம்புரிமண்டபத்து யோகஸ்தானத்தில் அஷ்டபைரவர்களும் விளங்குகின்றார்கள். இவர்களுள் அசிதாங்கர், பொன் நிறமும், சூலம் டமருகம் பரசு அசியும், ருரு வெண்மை நிறமும், அக்கமாலை அங்குசம் புத்தகம் வீணையும், சண்டர் நீல நிறமும், சுவாலை சத்தி கதை குந்தமும், கபாலர் தூமநிறமும், கட்கம் கேடகம் பட்டயம் பரசும், பீஷணர் வெண்மை நிறமும், குந்தம் கேடகம் பரசு பிண்டிபாலமும், உன்மத்தர் பீதநிறமும், மேற்கண்ட குந்தம் முதலிய நான்கு ஆயுதங்களும், குரோதனர் சிவப்பு நிறமும், மேற்கண்ட நான்கு ஆயுதங்களும், சம்ஹாரர் மின்னல் நிறமும், மேற்கண்ட நான்கு ஆயுதங்களும் உடையவராய் இருத்தல் வேண்டும் என்று ஒரு சுவடியில் எழுதப்பட்டிருப்பினும் இவற்றிற்கு மாறுக ஆங்கு அமைந்திருத்தலைக் கண்டு தரிசித்துக்கொள்க. இவ்வாறு தரிசனம் செய்துகொண்டபின் வடுகநாதரைத் தியானம் செய்தல் வேண்டும்.

வாருணபத்ததியில் கண்டபடி அஷ்டபைரவர் விபரம்.

எண்.	பெயர்.	திக்கு.	சக்தி.	வாகனம்.	நிறம்.	ஆயுதம்.	பொது.	
க	அசிதாங்கபைரவர்	கிழக்கு	பிராமி	ஹம்சம்	வெண்மை	கத்தி, பாசுபாத்திரம் ருத்திராக்ஷமாலை, கமண்டலம்	ஒன்று முதல் எழுவரும் மூக்கண்ணும் சதுர்த்தகுணமும் சாகையும் மூடையவர், வராகர், குமாரர், திகம்பரர்.	கிருபாமூர்த்தி புன்சிரிப்புடையவர்
உ	குருபைரவர்	தென் கிழக்கு	மாஹேசுவரி	விருஷபம்	படிகநிறம்	டங்கம், கத்தி, பாசுபாத்திரம், சக்தி		
ங	சண்டபைரவர்	தெற்கு	கௌமாரி	மயில்	பொன்நிறம்	வில், பாணம், கத்தி, பாசுபாத்திரம்		
ச	குரோதனபைரவர்	தென் மேற்கு	வைணவி	கருடன்	கறுப்பு	சங்கம், சக்கரம், கதை, பாசுபாத்திரம்		
ஞ	உன்மத்தபைரவர்	மேற்கு	வாராஹி	குதிரை	பொன்நிறம்	கத்தி, உலக்கை, கேடயம், கபாலம்		
சு	கபாலிபைரவர்	வட மேற்கு	இந்திராணி	யானை	பத்மராகக் காந்தி	பரசு, வஜ்ரம், கத்தி, பாசுபாத்திரம்		
எ	பீஷணபைரவர்	வடக்கு	சாமுண்டி	சிங்கம்	சிவப்பு	சூலம், இருப்பு உலக்கை, கபாலம், கத்தி		
அ	ஸம்ஹாரபைரவர்	வட கிழக்கு	சண்டிகை	நாய்	வெண்மை	சூலம், டமருகம், சங்கம், சக்கரம், கதை, கத்தி, கபாலம், கட்வாங்கம், பாசம், அங்குசம்.	மூக்கண், கO-கை, சர்ப்பத்தை பூணூலாகத்தரிப்பவர், குமாரர், திகம்பரர், தெத்துப்பற்களால் பயங்கர முகமுடையவர், அஷ்டைசுவரியத்தைக் கொடுப்பவர்.	

சிவமயம்.

வலம்புரி மண்டபத்திலுள்ள

படங்களின் விபரம்.

———:o:———

முன்னொரு காலத்தில் சோழமண்டலத்தைப் புகலிநகரத்திலிருந்து அரசாண்டு வந்த கிள்ளிவளவன் திருமுல்லைவாயிலிலே சிவபெருமானுடைய அனுக்கிரகத்தைப் பெற்றான். அவனுடைய தம்பி துணையிளங்கிள்ளி என்பான். இவன் மனைவி கேரளராஜபுத்திரி என்பாள். இத்தச் சதிபதிகள் இருவரும் தெய்வ சிந்தனை என்பது சிறிதும் இல்லாமல் உலகநடையினராய் நடந்து வந்தனர். ஒருநாள் இவ்விருவரும் பொழிலாட்டிலும் புனலாட்டிலும் விருப்பம் உடையவராய்த் தங்கள் மூதாதைகளில் இருக்குவேளிர் வசிக்கும் ஜடாபுவனத்திற்குச் சென்று பொழுது போக்கி அவ்வனத்தினின்றும் புறப்பட்டு வெளிவந்த காலையில் பிரமராக்கதம் ஒன்று இவர்களைப் பிடித்துக்கொள்ளவே இவர்கள் மதிமயங்கி அலைந்து திரிந்து நெடுநாள் தங்கள் உருவமாறி வருந்திச் சீகாழிப் பதியின் தென் திசையை அணுகினர்கள். அணுகிய பொழுது கோடி சூரியப் பிரகாசத்துடன் பொலிந்து விளங்கா நின்ற திருத்தோணியின் சிகரம் இவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டது. பூர்வபுண்ணியவசத்தால் சட்டைநாதசுவாமியின் திருவருள் நோக்கமும் இவர்கள் மேல்பட்டது. அதனால் இவர்களைப் பற்றியிருந்த பிரமராக்கதம் நீங்கி இவர்கள் பழைய படி தங்கள் திருமேனியின் பொலிவைப்பெற்றார்கள். அதன் பின்னர் இவர்களுக்குத் தெய்வ சிந்தனை உண்டாகித் திருக்கோயிலின் தெற்குக் கோபுரவாயிலின் அருகே வந்து நின்றனர். அச்சமயம் சட்டைநாதப் பெருமான் ஓர் திவ்யமானுட வடிவங்கொண்டு எழுந்தருளி வந்து தமது திருக்கரத்தில் ஏந்திவந்த பொற்பிரம்பால் இவர்களைத்தட்டவே இவர்களுக்கு நல்ல ஞானமும் சித்தியும் உண்டாயின. சதிபதிகள் இருவரும் அப்பெருமானுடைய காலில் விளங்கும் முள் மிதியடியைத் தொட்டு மும்முறை அவரைச் சுற்றி வலம்வந்து நமஸ்கரித்து நின்றனர். வைரவமூர்த்தி தமது இடக்கரத்தில் வைத்திருந்த ஒரு கதையை (சுக்குமாத் தடியை) இளங்கிள்ளியினிடம் கொடுத்து இவ்விருவரையும் வலம்புரி மண்டபத்திற்கு அழைத்துச்சென்று ஆங்குள்ள தமது யோகத்தானத்தில் தரும சிங்காதனத்தின்மேல் குருபரராய் அமர்ந்தாராக, அவரை இவ்விருவரும் வணங்கித்தொழுது பேறுபெற்றார்கள். உடனே குருமூர்த்தியும் அந்தர்த்தானமாயினர். அதன் பின்னர் அரசனும் அரசியும் தெற்குவீதியின்கண்ணிருந்த கரிகாலன் திருமாளிகையில் (இப்போது அர்ண்மனைத் தோட்டமாக இருக்கிறது) நெடுங்காலம் தங்கியிருந்து நாள்தோறும் நித்தியகருமத்தை முடித்துக்கொண்டு திருக்கோயிலினுட்

சென்று பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விநாயகப்பெருமான் முதலிய கடவுளரையும் திருகிலோகாயகியையும் பிரமேசரையும் சப்த மாதாக்களையும் அவர்கள் பூசித்துவரும் இலிங்கங்களையும் மற்றும் உள்ள சிவமூர்த்தங்களையும் விதிப்படி தரிசனம் செய்து சட்டைநாதசுவாமி யின் திருவுருவத்தைக்கண்டு பேரானந்தமுற்றுப் பின்னர் வலம்புரி மண்டபத்திற் புகுந்து அங்கே அமர்ந்துள்ள அஷ்டபைரவர்களையும் கார்க்கிதேவியின் நாதராகிய ஆதிபைரவரையும் தரிசித்துப் பைரவ சக்க ரத்தை விதிப்படி அஷ்டோத்தர சதநாமங்களைக் கூறி அருச்சித்துப் பைரவமந்திரத்தைப் பலமுறை ஜபித்துவந்தார்கள். இவ்விதம் வணங்கி வந்தவர்கள் சட்டைநாதசுவாமியின் அநுமதிப்படி மீண்டும் காவிரிப்பூம் பட்டினம் சேர்ந்து தங்கள் இளவரசுரிமையைப் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு அடைந்தார்கள்.

இந்த ஐதிகத்தை விளக்குதற் பொருட்டு வலம்புரிமண்டபத்தில் திருவூசலின்மேல் குருபரர் திருவுருவம்ஒன்றும், ஸ்ரீவள்ளிதெய்வயானை சமேத ஸ்ரீசுப்ரமண்யசுவாமி (இவர் சண்டபைரவர் போலும்) திருவுரு வப்படம் ஒன்றும் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளன. குருமூர்த்தியின் மூல் மிதியடியும் கதையும் அவ்வூசலின் சார்பில் வைக்கப்பட்டுள்ளன. இதன்பின்னர் இவ்வுலகமாந்தரில் பிரமராக்கதரால் பீடிக்கப்பட்டவர்கள் சட்டைநாதசுவாமியின் திருமுன்னர் விதிப்படி வந்து வணங்குவார் களாயின் அந்தப் பீடையும் மற்றுமுள்ள கிரக பீடைகளும் தவிர்ந்து சுகசரீரிகளாய் வாழ்ந்து இம்மை மறுமை நலன்களைப் பெற்றுவருகின் றனர். இவ்வாறு சகல தோஷங்களும் நீங்கப்பெற்றவர்கள் சட்டைநாதப் பெருமானுக்கு விசேஷ ஆராதனை நடாத்தி வருவதுமன்றி மூல்மிதியடி யும் கதையும் காணிக்கையாகச் செலுத்திவருவதுமுண்டு. சட்டைநாத சுவாமியின் அநுக்கிரகத்தால் இன்றும் பலமாந்தர்கள் கருதிய பலவரங் களைப் பெற்றுப் பெருமகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகின்றனர். இவ் வலம்புரி மண்டபத்தில் வித்துவான்கள் பலவமயங்களில் குழுமிப் புராணபடனம் முதலியவற்றைச் செய்துவருவார்கள். மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் தாம் இயற்றிய சீகாழிக் கோவையை இம்மண்டபத்தில் அரங்கேற்றினர்.

சிவமயம்.

சீகாழித் தலபுராணத்தை
அச்சிடுவித்தார் சிறப்பு.

கலி விருத்தம்.

உருவ மாகி யுயர்வன நான்கினு
மருவ மாகி யமர்வன நான்கவை
மருவ வொன்றிவை மன்னிய வொன்பது
திருவ மேனி திகழ்தரு மெம்பரன். (க)

கச்சை யார்த்த கனதன மாதுமை
விச்சை மேனி விமலன் பராபரன்
செச்சை யாருமச் சேந்தனைத் தந்தவன்
இச்சை யாதிமுச் சத்தி யியைந்துளான். (உ)

காழி மாநகர்க் கண்ணுதல் மாக்கதை
சூழி யஞ்சடைச் சூதன் வகுத்தவா
ஆழி யுண்டவ ணுமரு ணுசலன்
கேழி மாசலன் கேட்ப வுரைத்தனன். (ங)

அன்ன மாபுரா ணந்தனை யச்சினில்
துன்னு மாறு துலங்க வியற்றினர்
பொன்ன வாம்புகழ்ப் பூந்தராய் மாநகர்
மன்ன ராஞ்சபா நாயக வள்ளலார். (ச)

மூன்றை யாரும் முறையி னறிந்தறிந்
தென்றை யார்கிற மேத்தி மகிழ்தரத்
தந்தை யார்செய் தருமு ணருபு
சிந்தை யாரத் திரும்பவச் சிட்டனர். (ஞ)

பூநி லாவிய பொற்பினர் சால்பினர்
சீநி வாசத் திருவர் சதாசிவர்
நாநி லாவிய நற்கொடைத் தம்பிமார்
பூநி லாவிப் புரிந்து மகிழ்தர, (ரு)

துப்ப ராயுஞ் சுருதிக் கவிஞர்தம்
அப்ப ராமென் றணைதருஞ் சீர்த்தியார்
சுப்ப ராயச் சுகுணர் தசாபதிக்
கொப்ப ராகு மூயர்திரு வாளரே. (ஸ)

வெண்டா.

தந்தை தருமந் தனயர்க்கா மம்முறையே
தந்தை பெறுவன தாம்புரிய—எந்தை
சுருதிச் சிவாகமங்கள் சொல்லும் வகையே
கருதிச் செயுநலத்தைக் கண்டு. (ஹ)

குறள் வெண்பா.

தானே யுவக்குந் தருமத்தைத் தானத்தை
யானே யுயர்த்த வரன். (க்ஷ)

குறள் வெண் செந்துறை.

காழி மான்மியங் கருதியச் சிட்டவர்
வாழி யுலகின் மகிழ்ந்துவா ழியரே. (ற)

—: o :—

வித்துவான்,

சித்தல்தூர்க்கம்,
26—1—37.

ப. மு. சோமசுந்தரன், M. A., L. T.; P. O. L.,
ஜில்லா கல்வி அதிகாரி.

திருச்சிற்றம்பலம்.

இந்நூலைப் பார்வையிட்டார் சிறப்பு.

உலகமெலாம் புகழ்பரவுஞ் சீகாழி மான்மியமா முயர்ந்த நூலைப்
பலகலைதேர் சுப்பரா யக்குரிசில் சோதரர்கள் பண்பி னேர்ந்தே
அலகில்பல திருமுறைக ளுடனச்சி லியற்றுவணம் ஆர்வ மூட்டி
இலகிடவே அந்நூலை யாராய்ந்திங் குபகரித்தோன் யாவ னென்னில்.

நல்லார்பா லுறுபொருளொன் றுயிரமா மெனவான்றோர் நவிலு மாற்றம்
எல்லாரு மூணர்ந்திடவே பன்னூலு மச்சியற்றி இயனூ லாதி
கல்லாருங் கற்றவருங் களிப்பெய்தப் பரப்பியுப காரித்து நாட்டின்
அல்லாரு மிருணீக்க வல்லானை யறியாதார் அறியா தாரே.

இச்சகத்தி லிருநிதிய மெனக்கிடந்த நூல்களின்பல் லேடு தேடி
அச்சியற்றி யந்நூற்குப் பொருள்தெரிய வுரைவகுத்தும் அயல் நாட்டாரும்
மெச்சிடவே பல்வகையா மாராய்ச்சிச் சேர்த்துமவை மிளிரச் செய்தோன்
உச்சியினிற் புலவர்கொளும் நச்சினர்க் கினியனென ஓங்கு சீரோன்.

எழுத்தாதி இலக்கணத்தால் இயலிசைநா டகத்தமிழாய்ந் திசைக்கு மாண்பால்
வழுத்தாதி திருமுறைகள் வகைதேர்ந்து பிறர்க்குரைக்கும் வழக்கால் நாடின்
முழுத்தாம புலவர்களுள் முதற்புலவ னெனவெவரும்மொழியத் தக்கோன்
பழுத்தாருங்கருணைபொழிஅருண்முகிலாய்த் தழைத்தொளிரும்பான்மையாளன்.

ஆங்கிலத்தோ டாரியமும் அமிழ்தமெனுந் தமிழ்க்கடலு மமைய மாந்தித்
தாங்கியநல் லொழுக்கமுடன் சைவநெறி வழுவாத தகைமை மேவி
ஓங்குபுகழ் கருமபுர ஆதீன வித்வசிகா மணியா யுள்ளோன்
பாங்குபெறு திருமுத்துத் தாண்டவரா யப்பெயர்கொள் பாவல் லோனே.

அன்னவன்மு னிவ்வுலகில் அன்புமனே மக்களொடு மனந்த காலம்
பன்னலமு மடைந்துதிட காத்திரனுப் தழைத்தோங்கப் பவள மேனி
முன்னவனும் திருத்தோணி புரகாதன் உமைபாகன் முக்கட் சோதி
இன்னருளைப் புரிந்திடுவான் பொன்னடியை எந்நாளும் இறைஞ்சு வாமே.

சுபம்.

கும்பகோணம்,
26—3—37.

S. இராமச்சந்திரன், B. A.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்.

க. திருப்பிரமபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. க

மூற்றலாமையிள நாகமோடென முஞ்சுகொம்பவைபூண்டு
வற்றலோடுகல னுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. உ

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஒருரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ங

தேவாரப்பதிகங்களின் இத்தல சம்பிரதாய சுத்தப் பாடங்களே இங்கு இசை, சீர், சந்திபிரித்துப் பிரசுரிக்கப்பட்டன. பிரமபுரத்துக்குப் பிரத்தியேகமாய் உள்ள ஐந்து திருப்பதிகங்கள் அத்தலப்பின் பாலும் பொதுவாக உள்ள நான்கு திருப்பதிகங்கள் அப்பெயரால் பல் பெயர்ப்பத்திலுள்ளும் வெளியாகி உள்ளன.

வேணுபுரம் முதலியவற்றிற்கும் இவ்வாறே கண்டுகொள்க.

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவர்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ச

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்இவனென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. ஞ

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரளன் உள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்தீயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. கூ

சடைமுயங்குபுன லன்அனலன்எரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்கும்அர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. எ

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள் தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. அ

தாள்நுதல்செய்திறை காணியமாலொடு தண்தாமரையானும்
தீணுதல்செய்தெழி யங்கிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாள்நுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. கூ

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்தமதோர் மாயம்இதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. கo

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

எம்பிரான் எனக்கமுத மாவானுந் தன்னடைந்தார்
தம்பிரான் ஆவானுந் தழலேந்து கையானுங்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே. க

தாமென்றும் மனந்தளராத் தகுதியரா யுலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினன்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்றன் உடலெரியக் கனல்சேர்ந்த கண்ணனே. உ

நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை யெப்போதும்
பன்னுஞ்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே. ங

சாநாளின் றிப்மனமே சங்கைதனைத் தவிர்ப்பிக்குங்
கோணுளுந் திருவடிக்கே கொழுமலர்தூ வெத்தனையுந்
தேணுளும் பொழிற்பிரம புரத்துறையுந் தீவணனை
நாநாளும் நல்நியமஞ் செய்தவன்சீர் நவின்றேத்தே. ச

கண்ணுதலான் வெண்ணீற்றுரு கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமாம் உருவத்தான் பிஞ்ஞகன்மேர் பலவுடையான்
விண்ணுதலாத் தேனான்றியசீர்ப் பிரமபுரந் தொழவிரும்பி
எண்ணுதலாஞ் செல்வத்தை யியல்பாக அறிந்தேனே. ஞ

ஏங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே. கூ

சிலையதுவெஞ் சிலையாகத் திரிபுரமூன் றெரிசெய்த
இலைநுனைவேல் தடக்கையன் ஏந்திழையா ளொருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத் தருமணியை யடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகிற் பெறலாமே. எ

எரித்தமயிர் வாளரக்கன் வெற்பெடுக்கத் தோளொடுதாள்
நெரித்தருளுஞ் சிவமூர்த்தி நீறணிந்த மேனியினன்
உரித்தவரித் தோலுடையான் உறைபிரம புரந்தன்னைத்
தரித்தமனம் எப்போதும் பெறுவார்தாம் தக்காரே. அ

கரியானும் நான்முகனுங் காணமைக் கன்னுருவாய்
அரியானும் பரமேட்டி அரவஞ்சே ரகலத்தான்
தெரியாதான் இருந்துறையுந் திகழ்பிரம புரஞ்சேர
உரியார்தாம் ஏழுலகும் உடனுள உரியாரே ஙூ

உடையிலார் சீவரத்தார் தன்பெருமை யுணர்வரியான்
முடையிலார் வெண்தலைக்கை மூர்த்தியாந் திருவுருவன்
படையிலார் வண்டாடும் பொழிற்பிரம புரத்துறையுஞ்
சடையிலார் வெண்பிறையான் தாள்பணிவார் தக்காரே. ஙo

தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே. ஙக

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணி வேலிலர் போலும் கபாலந் தரித்திலர் போலும்
மறையும் நவின்றிலர் போலும் மாசுணம் ஆர்த்திலர் போலும்
பறையுங் கரத்திலர் போலும் பாசம் பிடித்திலர் போலும்
பிறையுஞ் சடைக்கிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. க

கூரம் பதுவிலர் போலுங் கொக்கின் இறகிலர் போலும்
ஆரமும் பூண்டிலர் போலும் ஆமை அணிந்திலர் போலுந்
தாருஞ் சடைக்கிலர் போலுஞ் சண்டிக் கருளிலர் போலும்
பேரும் பலவிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. உ

சித்த வடிவிலர் போலுந் தேசந் திரிந்திலர் போலுங்
கத்தி வருங்கடுங் காளி கதங்கள் தவிர்த்திலர் போலும்
மெய்த்த நயனம் இடந்தார்க் காழி யளித்திலர் போலும்
பித்த வடிவிலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ங

நச்சர வாட்டிலர் போலும் நஞ்சம் மிடற்றிலர் போலுங்
கச்சுத் தரித்திலர் போலுங் கங்கை தரித்திலர் போலும்
மொய்ச்சவன் பேயிலர் போலும் மூப்புரம் எய்திலர் போலும்
பிச்சை யிரந்திலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. ச

தேதாடு செவிக்கிலர் போலுஞ் சூலம் பிடித்திலர் போலும்
ஆடு தடக்கை வலிய ஆனை உரித்திலர் போலும்

ஓடு கரத்திலர் போலும் ஒள்ளழல் கையிலர் போலும்
பீடு மிகுத்தெழு செல்வப் பிரம புரம்அமர்ந் தாரே. ரு

விண்ணவர் கண்டிலர் போலும் வேள்வி யழித்திலர் போலும்
அண்ணல் அயன்தலை வீழ அன்று மறுத்திலர் போலும்
வண்ண எலும்பினெ டக்கு வடங்கள் தரித்திலர் போலும்
பெண்ணினம் மொய்த்தெழு செல்வப் பிரம புரம்அமர்ந் தாரே. சு

பன்றியின் கொம்பிலர் போலும் பார்த்தர்க் கருளிலர் போலுங்
கன்றிய காலனை வீழக் கால்கொடு பாய்ந்திலர் போலுந்
துன்று பிணஞ்சுடு காட்டி லாடித் துதைந்திலர் போலும்
பின்றியும் பீடும் பெருகும் பிரம புரம்அமர்ந் தாரே. எ

பரசு தரித்திலர் போலும் படுதலை பூண்டிலர் போலும்
அரசன் இலங்கையர் கோனை அன்றும் அடர்த்திலர் போலும்
புரைசெய் புனத்திள மானும் புலியின் அதளிலர் போலும்
பிரச மலர்ப்பொழில் சூழ்ந்த பிரம புரம்அமர்ந் தாரே. அ

அடிமுடி மாலயன் தேட அன்றும் அளப்பிலர் போலுங்
கடிமலர் ஐங்கணை வேளைக் கனல விழித்திலர் போலும்
படிமலர்ப் பாலனுக் காகப் பாற்கடல் ஈந்திலர் போலும்
பிடிநடை மாதர் பெருகும் பிரம புரம்அமர்ந் தாரே. கூ

வெற்றரைச் சீவரத் தார்க்கு வெளிப்பட நின்றிலர் போலும்
அற்றவர் ஆல்நிழல் நால்வர்க் கறங்கள் உரைத்திலர் போலும்
உற்றவ ரென்றிலர் போலும் ஓடு மூடிக்கிலர் போலும்
பெற்றமும் ஊர்ந்திலர் போலும் பிரம புரம்அமர்ந் தாரே. கO

பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரம புரநகர் மேய
அண்ணல்செய் யாதன வெல்லாம் அறிந்து வகைவகை யாலே
நண்ணிய ஞானசம் பந்தன் நவின்றன பத்தும்வல் லார்கள்
விண்ணவ ரோடினி தாக வீற்றிருப் பாரவர் தாமே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கரமுனம்மல ராற்புனல்மலர் தூவியேகலக் தேத்துமின்
பரமனூர்பல பேரிணற்பொலி பத்தர்சித்தர்கள் தாம்பயில்
வரமுன்னவ்வருள் செய்யவல்லனம் ஐயன்நாள்தொறும் மேயசீர்ப்
பிரமனூர்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்அருள் பேணியே. க

விண்ணிலார்மதி சூடினுன்விரும் பும்மறையவன் தன்தலை
உண்ணநன்பலி பேணினுன்உல கத்துளுனுயி ரான்மலைப்
பெண்ணினுர்திரு மேனியான்பிர மாபுரத்துறை கோயிலுள்
அண்ணலாரரு ளாளனுயமர் கின்றளம்மூடை யாதியே. உ

எல்லையில்புக ழாளனும்இமை யோர்கணத்துடன் கூடியும்
பல்லையார்தலை யிற்பலியது கொண்டுகந்த படிறனுந்
தொல்லைவையகத் தேதறுதொண்டர்கள் தூமலர்சொரிந் தேத்தவே
மல்லையம்பொழில் தேன்பில்கும்பிர மாபுரத்துறை மைந்தனே. ஊ

அடையலார்புரஞ் சீறியந்தணர் ஏத்தமாமட மாதொடும்
பெடையெலாங்கடற் கானல்புல்கும்பிர மாபுரத்துறை கோயிலான்
தொடையலார்தலுங் கொன்றையான்தொழி லேபரவினின் றேத்தினுல்
இடையிலார்சிவ லோகமெய்துதற் கீதுகாரணங் காண்மினே. ச

வாயிடைம்மறை யோதிமங்கையர் வந்திடப்பலி கொண்டுபோய்ப்
போயிடம்னரி கானிடைப்புரி நாடகம்இனி தாடினுன்
பேயொடுங்குடி வாழ்வினுன்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்
தாயிடைப்பொருள் தந்தையாகுமென் றேதுவார்க்கருள் தன்மையே. ரு

ஊடினுலினி யாவதென்னுயர் நெஞ்சமேயுறு வல்வினைக்
கோடிநீயுழல் கின்றதென்னழ லன்றுதன்கையி லேந்தினுன்
பீடுநேர்ந்தது கொள்கையான்பிர மாபுரத்துறை வேதியன்
ஏடுநேர்மதி யோடராவணி யெந்தையென்றுநின் றேத்திடே. சு

செய்யன்வெள்ளியன் ஒள்ளியார்சில ரென்றுமேத்தி நினைந்திட
ஐயன்ஆண்தகை அந்தணன்அரு மாமறைப்பொரு ளாயினுன்
பெய்யுமாமழை யானவன்பிர மாபுரம்இடம் பேணிய
வெய்யவெண்மழு வேந்தியைந்நினைந் தேத்துமின்வினை வீடவே. எ

கன்றெருக்கையில் வந்திரல்வில வின்கனிபட நூறியுஞ்
சென்றெருக்கிய மாமறைப்பொருள் தேர்ந்தசெம்மல ரோனுமாய்
அன்றரக்கனைச் செற்றவன்அடி யும்முடியவை காண்கிலார்
பின்தருக்கிய தண்பொழிற்பிர மாபுரத்தரன் பெற்றியே. அ

உண்டுடுக்கைவிட் டார்களும்உயர் கஞ்சிமண்டைகொள் தேரரும்
பண்டடக்குசொற் பேசுமப்பரி வொன்றிலார்கள்சொற் கொள்ளன்மின்
தண்டொடக்குவன் சூலமுந்தழல் மாமழுப்படை தன்கையிற்
கொண்டொடுக்கிய மைந்தனம்பிர மாபுரத்துறை கூத்தனே. கூ

பித்தனேப்பிர மாபுரத்துறை பிஞ்ஞகன்கழல் பேணியே
மெய்த்தவத்துநின் றேரர்களுக்குரை செய்துநன்பொருள் மேவிட
வைத்தசிந்தையுள் ஞானசம்பந்தன் வாய்நவின்றெழு மாலைகள்
பொய்த்தவம்பொறி நீங்கஇன்னிசை போற்றிசெய்யும்மெய்ம் மாந்தரே.

திருச்சிற்றம்பலம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இறையவன் ஈசன்எந்தை யிமை யோர்தொழு தேத்தநின்ற
கறையணி கண்டன்வெண்தோ டணி காதினன் காலத்தன்று
மறைமொழி வாய்மையினன் மலை யாளொடு மன்னுசென்னிப்
பிறையணி செஞ்சடையான் பிர மாபுரம் பேணுமினே. க

சடையினன் சாமவேதன் சரி கோவண வன்மழுவாட்
படையினன் பாய்புலித்தோ லுடை யான்மறை பல்கலைநூல்
உடையவன் ஊனமில்லி யுட னுயுமை நங்கையென்னும்
பெடையொடும் பேணுமிடம் பிர மாபுரம் பேணுமினே. உ

மாணியை நாடுகாலன் உயிர் மாய்தரச் செற்றுக்காளி
காணிய ஆடல்கொண்டான் கலந் தூர்வழி சென்றுபிச்சை
ஊணியல் பாகக்கொண்டங் குட னேயுமை நங்கையொடும்
பேணிய கோயில்மன்னும் பிர மாபுரம் பேணுமினே. ங

பாரிடம் விண்ணுமெங்கும் பயில் நஞ்சுப ரந்துமிண்டப்
பேரிடர்த் தேவர்கணம் பெரு மானிது காஎன லும்
ஓரிடத் தேதகாந்தங் குமை நங்கையொ டும்முடனே
பேரிட மாகக்கொண்ட பிர மாபுரம் பேணுமினே. ச

நச்சர வச்சடைமேல் நளிர் திங்களு மொன்றவைத்தங்
கச்சமெ ழுவிடைமேல் அழ கார்மழு வேந்திநல்ல
இச்சைப கர்ந்துமிக இடு மின்பலி யென்றுநாளும்
பிச்சைகொள் அண்ணல்நண்ணும் பிர மாபுரம் பேணுமினே. ஞ

பெற்றவன் மூப்புரங்கள் பிழை யாவண்ணம் வாளியினால்
செற்றவன் செஞ்சடையில் திகழ் கங்கை தனைத்தரித்திட்
டொற்றை விடையினனாய் உமை நங்கையொ டும்முடனே
பெற்றிமை யாலிருந்தான் பிர மாபுரம் பேணுமினே. ரு

வேதம்ம லிந்தவொலி விழ வின்னொலி வீணையொலி
கீதம்ம லிந்துடனே கிள ரத்திகழ் பௌவமறை
ஓதம்ம லிந்துயர்வான் முக டேறவொண் மால்வரையான்
பேதையொ டும்மிருந்தான் பிர மாபுரம் பேணுமினே. எ

இமையவர் அஞ்சியோட எதிர் வாரவர் தம்மையின்றி
அமைதரு வல்லரக்கன் அடர்த் தும்மலை யன்றெடுப்பக்
குமையது செய்துபாடக் கொற்ற வாளொடு நாள்கொடுத்திட்
டுமையொ டிருந்தபிரான் பிர மாபுரம் உன்னுமினே. அ

ஞாலம் அளித்தவனும் அரி யும்அடி யோடுமுடி
காலம் பலசெலவுங் கண்டி லாமையி னுற்கதறி

ஓல மிடஅருளி உமை நங்கையொ டும்முடனுய்
ஏல இருந்தபிரான் பிர மாபுரம் ஏத்துமினே. கூ

துவருறும் ஆடையினர் தொக்க பீலியர் நக்கரையர்
அவரவர் தன்மைகள்கண் டணு கேன்மின்ன ருள்பெறுவீர்
கவருறு சிந்தையொன்றிக் கழி காலமெல் லாம்படைத்த
இவரவர் என்றிறைஞ்சிப் பிர மாபுரம் ஏத்துமினே. கo

உரைதரும் ஈான்மறையோர் புகழ்ந் தேத்தவொண் மாதினெடும்
வரையென வீற்றிருந்தான் மலி கின்றபிரம புரத்
தாசிலை யேத்தவல்ல அணி சம்பந்தன் பத்தும்வல்லார்
விரைதரு விண்ணுலகம் எதிர் கொள்ள விரும்புவரே. கக

திருச்சிற்றம்பலம்.

உ. திருவேணுபுரம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வண்டார்குழ லரிவையொடும் பிரியாவகை பாகம்
பெண்தான்மிக ஆனன்பிறைச் சென்னிப்பெரு மானூர்
தண்தாமரை மலராளுறை தவளம்நெடி மாடம்
விண்தாங்குவ போலும்மிகு வேணுபுரம் அதுவே. க

படைப்பும்நிலை யிறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண மூடையான்கிறி பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கழுகின்னெடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றல்மிகு வேணுபுரம் அதுவே. உ

கடம்தாங்கிய கரியையவர் வெருவவுரி போர்த்துப்
படம்தாங்கிய அரவக்குழைப் பரமேட்டிதன் பழவூர்
நடம்தாங்கிய நடையார்நல பவளத்துவர் வாய்மேல்
விடம்தாங்கிய கண்ணுர்பயில் வேணுபுரம் அதுவே. ங

தக்கன்தன சிரமொன்றினை யரிவித்தவன் தனக்கு
மிக்கவ்வரம் அருள்செய்தளம் விண்ணேர்பெரு மானூர்
பக்கம்பல மயிலாடிட மேகம்முழ வதிர
மிக்கம்மது. வண்டார்பொழில் வேணுபுரம் அதுவே. ச

ஈானுவித உருவாய்நமை யாள்வான்நணு காதார்
வானுர்திரி புரமூன்றெரி யுண்ணச்சிலை தொட்டான்
தேனுர்ந்தெழு கதலிக்கனி யுண்பான்திக்ழ் மந்தி
மேனுக்கிநின் றிறங்கும்பொழில் வேணுபுரம் அதுவே. ஞ

மண்ணோர்களும் விண்ணோர்களும் வெருவிம்மிக அஞ்சக்
கண்ணார்சல மூடிக்கட லோங்கவ்வுயர்ந் தானூர்
தண்ணார்நறுங் கமலம்மலர் சாயவ்விள வாளை
விண்ணார்குதி கொள்ளும்வியன் வேணுபுரம் அதுவே. சு, எ

மலையான்மக ளஞ்சவ்வரை யெடுத்தவ்வலி யரக்கன்
தலைதோளவை நெரியச்சரண் உகிர்வைத்தவன் தன்னூர்
கலையாரெடு சுருதித்தொகை கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொற்றேர்தரு வேணுபுரம் அதுவே. அ

வயமுண்டவ மாலும்அடி காணுதல மாக்கும்
பயனுகிய பிரமன்படு தலையேந்திய பரனூர்
கயம்மேவிய சங்கந்தரு கழுவிட்டியர் செந்நெல்
வியன்மேவிவந் துறங்கும்பொழில் வேணுபுரம் அதுவே. கூ

மாசேறிய வுடலாரமண் குழுக்கள்ளொடு தேரர்
தேசேறிய பாதம்வணங் காமைத்தெரி யானூர்
தூசேறிய அல்குல்துடி யிடையார்துணை மூலையார்
வீசேறிய புருவத்தவர் வேணுபுரம் அதுவே. கo

வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு பந்தன்தன பாடல்
ஏதத்தினை யில்லாஇவை பத்தும்இசை வல்லார்
சேதத்தினை யில்லார்சிவ கெதியைப்பெறு வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நிலவும் புனலும் நிறைவா ளரவும்
இலகுஞ் சடையார்க் கிடமாம் எழிலார்
உலவும் வயலுக் கொளியார் முத்தம்
விலகுங் கடலார் வேணு புரமே. க

அரவார் கரவன் அமையார் திரள்தோள்
குரவார் குழலா லொருகூ றணிடங்
கரவா தகொடைக் கலந்தா ரவர்க்கு
விரவா கவல்லார் வேணு புரமே. உ

ஆகம் அழகா யவள்தான் வெருவ
நாகம் உரிபோர்த் தவன்நண் ணுமிடம்
போகந் தருசீர் வயல்சூழ் பொழில்கள்
மேகந் தவழும் வேணு புரமே. ங

காசக் கடலில் விடமுண் டகண்டத்
தீசர்க் கிடமா வதுஇன் றறவ
வாசக் கமலத் தனம்வன் திரைகள்
வீசத் துயிலும் வேணு புரமே. ச

அரையார் கலைசே ரனம்மென் னடையை
உரையா வுகந்தா னுறையும் இடமாம்
நிரையார் கமுகின் நிகழ்பா ளையுடை
விரையார் பொழில்சூழ் வேணு புரமே. ஞ

ஒளிரும் பிறையும் முறுகூ விளவின்
தளிருஞ் சடைமே லுடையா னிடமாம்
நளிரும் புனலின் நலசெங் கயல்கள்
மிளிரும் வயல்சூழ் வேணு புரமே. ங, எ

ஏவும் படைவேந் தன்இரா வணனை
ஆவென் றலற அடர்த்தா னிடமாம்
தாவும் மறிமா னெடுதண் மதியம்
மேவும் பொழில்சூழ் வேணு புரமே. அ

கண்ணன் கடிமா மலரில் திகழும்
அண்ணல் இருவர் அறியா இறையூர்
வண்ணச் சுதைமா ளிகைமேற் கொடிகள்
விண்ணில் திகழும் வேணு புரமே. கூ

போகம் அறியார் துவர்போர்த் துழல்வார்
ஆகம் அறியா அடியார் இறையூர்
மூகம் அறிவார் கலைமூத் தமிழ்நூல்
மீகம் அறிவார் வேணு புரமே. கo

கலமார் கடல்போல் வளமார் தருநற்
புலமார் தருவே ணுபுரத் திறையை
நலமார் தருஞா னசம்பந் தன்சொன்ன
குலமார் தமிழ்கூ றுவர்கூர் மையரே. ககo

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தின் ஒலியோடும் உம்பர்வா னவர்புகுந்து
வேதத்தின் இசைபாடி விரைமலர்கள் சொரிந்தேத்தும்
பாதத்தீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே.

சுடுகாடு மேவினீர் துன்னம்பெய் கோவணந்தோல்
உடையாடை யதுகொண்டீர் உமையாளை யொருபாகம்
அடையாளம் அதுகொண்டீர் அங்கையினிற் பரசுவனும்
படையாள்வீர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. உ

கங்கைசேர் சடைமுடியீர் காலனைமுன் செற்றுகந்தீர்
திங்களோ டிளஅரவந் திகழ்சென்னி வைத்துகந்தீர்
மங்கையோர் கூறுடையீர் மறையோர்கள் நிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. ஊ

நீர்கொண்ட சடைமுடிமேல் நீள்மதியம் பாம்பிவைதும்
ஏர்கொண்ட கொன்றையினே டெழில்மத்தம் இலங்கவே
சீர்கொண்ட மாளிகைமேற் சேயிழையார் வாழ்த்துரைப்பக்
கார்கொண்ட வேணுபுரம் பதியாகக் கலந்தீரே. ச

ஆலைசேர் தண்கழனி யழகாக நறவுண்டு
சோலைசேர் வண்டினங்கள் இசைபாடத் தூமொழியார்
காலையே புகுந்திறைஞ்சிக் கைதொழுமெய் மாதினைதும்
பாலையாழ் வேணுபுரம் பதியாகக் கொண்டீரே. ரி

மணிமல்கு மால்வரைமேல் மாதினைது மகிழ்ந்திருந்தீர்
துணிமல்கு கோவணத்தீர் சுடுகாட்டில் ஆட்டுகந்தீர்
பணிமல்கு மறையோர்கள் பரிந்திறைஞ்ச வேணுபுரத்
தணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. சு

நீலஞ்சேர் மிடற்றினீர் நீண்டசெஞ் சடையினீர்
கோலஞ்சேர் விடையினீர் கொடுங்காலன் தணைச்செற்றீர்
ஆலஞ்சேர் கழனி யழகார்வேணு புரம்அமருங்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாக் கொண்டீரே. எ

இரைமண்டிச் சங்கேறுங் கடல்சூழ்தென் இலங்கையர்கோன்
விரைமண்டு முடிநெரிய விரல்வைத்தீர் வரைதன்னிற்
கரைமண்டிப் பேரோதங் கலந்தெற்றுங் கடற்கவினூர்
விரைமண்டு வேணுபுர மேயமர்ந்து மிக்கீரே. அ

தீயோம்பும் மறைவாணர்க் காதியாம் திசைமுகன்மால்
போயோங்கி யிழிந்தாரும் போற்றரிய திருவடியீர்
பாயோங்கு மரக்கலங்கள் படுதிரையால் மொத்துண்டு
சேயோங்கு வேணுபுரஞ் செம்பதியாத் திகழ்ந்தீரே. கூ

நிலையார்ந்த வுண்டியினர் நெடுங்குண்டர் சாக்கியர்கள்
புலையானூர் அறவுரையைப் போற்றுதுன் பொன்னடியே
நிலையாகப் பேணிநீ சரணென்றூர் தமையென்றும்
விலையாக ஆட்கொண்டு வேணுபுரம் விரும்பினையே. கo, ஈஈ

திருச்சிற்றம்பலம்.

ங. திருப்புகலி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விதியாய்விஞ் வாய்வினை வின்பய ஞகிக்
கொதியாவரு கூற்றை யுதைத்தவர் சேருமம்
பதியாவது பங்கய நின்றல ரத்தேன்
பொதியார்பொழில் சூழ்புக லிங்நகர் தானே. க

ஒன்னுர்புர மூன்றும் எரித்த ஒருவன்
மின்னுரிடை யாளொடுங் கூடிய வேடம்
தன்னுலுறை வாவது தண்கடல் சூழ்ந்த
பொன்னுர்வயற் பூம்புக லிங்நகர் தானே. உ

வலியன்மதி செஞ்சடை வைத்த மணுளன்
புலியின்அதள் கொண்டரை யார்த்த புனிதன்
மலியும்பதி மாமறை யோர்நிறைந் தீண்டிப்
பொலியும்புனற் பூம்புக லிங்நகர் தானே. ங

கயலார்தடங் கண்ணி யொடும்எரு தேறி
அயலார்கடை யிற்பலி கொண்ட அழகன்
இயலாலுறை யும்மிடம் எண்திசை யோர்க்கும்
புயலார்கடற் பூம்புக லிங்நகர் தானே. ச

காதார்கன பொற்குழை தோடதி லங்கத்
தாதார்மலர் தண்சடை யேற முடித்து
நாதான்உறை யும்மிட மாவது நாளும்
போதார்பொழிற் பூம்புக லிங்நகர் தானே. ஞ

வலமார்படை மான்மழு ஏந்திய மைந்தன்
கலமார்கடல் நஞ்சமு துண்ட கருத்தன்
குலமார்பதி கொன்றைகள் பொன்சொரி யத்தேன்
புலமார்வயற் பூம்புக லிங்நகர் தானே ட

கறுத்தான்கன லால்மதில் மூன்றையும் வேவச்
செறுத்தான்திக முங்கடல் நஞ்சமு தாக
அறுத்தானயன் தன்சிரம் ஐந்திலும் ஒன்றைப்
பொறுத்தானிடம் பூம்புக லிங்நகர் தானே. ண

தொழிலால்மிகு தொண்டர்கள் தோத்திரஞ் சொல்ல
எழிலார்வரை யாலன் றரக்கனைச் செற்ற
கழலாலுறை யும்மிடங் கண்டல்கள் மிண்டிப்
பொழிலால்மலி பூம்புக லிங்நகர் தானே. அ

மாண்டார்சுட லைப்பொடி பூசி மயானத்
தீண்டாநட மாடிய வேந்தன்றன் மேனி
நீண்டானிரு வர்க்கெரி யாய்அர வாரம்
பூண்டான்நகர் பூம்புக லிந்நகர் தானே. கூ

உடையார்துகில் போர்த்துழல் வார்சமண் கையர்
அடையாதன சொல்லுவர் ஆதர்கள் ஓத்தைக்
கிடையாதவன் தன்நகர் நன்மலி பூகம்
புடையார்தரு பூம்புக லிந்நகர் தானே. கo

இரைக்கும்புனல் செஞ்சடை வைத்தளம் மான்தன்
புரைக்கும்பொழிற் பூம்புக லிந்நகர் தன்மேல்
உரைக்குந்தமிழ் ஞானசம் பந்தனெண் மாலை
வரைக்குந்தொழில் வல்லவர் நல்லவர் தாமே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஆடல் அரவசைத்தான் அருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையாள் ஒருபாகம் அமர்ந்தடியார் ஏத்த
ஆடிய எம்மிறையூர் புகலிப் பதியாமே. க

ஏலம் மலிகுழலார் இசைபாடி யெழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே. உ

ஆறணி செஞ்சடையான் அழகார்புரம் மூன்றும்அன்று வேவ
நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை யெம்இறைவன்
பாறணி வெண்தலையிற் பகலேபலி யென்றுவந்து நின்ற
வேறணி கோலத்தினன் விரும்பும் புகலியதே. ங

வெள்ள மதுசடைமேற் கரந்தான் விரவார்புரங்கள் மூன்றுங்
கொள்ள எரிமடுத்தான் குறைவின்றி யுறைகோயில்
அள்ளல் விளைகழனி யழகார்விரைத் தாமரைமேல் அன்னம்
புள்ளினம் வைகியெழும் புகலிப் பதிதானே. ச

சூடும் மதிச்சடைமேற் சுரும்பார்மலர்க் கொன்றைதுன்ற நட்டம்
ஆடும் அமரர்பிரான் அழகாருமை யோடும்உடன்
வேடு படநடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட இனிதுறையும் புகலிப் பதியாமே. ஞ

மைந்தணி சோலையின்வாய் மதுப்பாய்வரி வண்டினங்கள் வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பன்இடம்
அந்திசெய் மந்திரத்தால் அடியார்கள் பரவியெழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப் பதிதானே. சு

மங்கையோர் கூறுகந்த மழுவாளன் வார்சடைமேல் திங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன் கருதும்இடம்
செங்கயல் வார்கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னல்தொழுவார் அவலம் அறியாரே. எ

வல்லிய நுண்இடையாள் உமையாள் விருப்பனவன் நண்ணும்
நல்லிட மென்றறியான் நலியும் விறலரக்கன்
பல்லொடு தோள்நெரிய விரலூன்றிப் பாடலுமே கைவாள்
ஒல்லை அருள்புரிந்தான் உறையும் புகலியதே. அ

தாதலர் தாமரைமேல் அயனுந் திருமாலுந் தேடி
ஓதியுங் காண்பரிய வுமைகோன் உறையுமிடம்
மாதவி வான்வகுளம் மலர்க்தெங்கும் விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள்சூழ் புகலிப் பதிதானே. கூ

வெந்துவர் மேனியினர் விரிகோவணம் நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லாம் அவையோர் பொருளென்னேல்
வந்தெதி ரும்புரமூன் றெரித்தான் உறைகோயில் வாய்ந்த
புந்தியி னர்பயிலும் புகலிப் பதிதானே. கo

வேதமோர் கீதம்உணர் வாணர்தொழு தேத்த மிகுவாசப்
போதனைப் போன்மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானம்மிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்
ஓதவல் லார்உலகில் உறுநோய் களைவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

உகலி யாழ்கட லோங்கு பாருளீர்
அகலி யாவிண் ணல்லல் போயறும்
இகலி யார்புர மெய்த வன்உறை
புகலி யாம்நகர் போற்றி வாழ்மினே. க

பண்ணி யாள்வதோ ரேற்றர் பால்மதிக்
கண்ணி யார்கமழ் கொன்றை சேர்முடிப்
புண்ணி யன்உறை யும்பு கலியை
நண்ணு மின்நல மான வேண்டிலே. உ

வீசு மின்புரை காதன் மேதகு
பாச வல்வினை தீர்த்த பண்பினன்
பூசு நீற்றினன் பூம்பு கலியைப்
பேசு மின்பெரி தின்ப மாகவே. நூ

கடிகொள் கூவிளம் மத்தம் வைத்தவன்
படிகொள் பாரிடம் பேசும் பான்மையன்
பொடிகொள் மேனியன் பூம்பு கலியுள்
அடிகளை யடைந் தன்பு செய்யுமே. ச

பாதத் தாலொலி பல்சி லம்பினன்
ஓதத் தார்விட முண்ட வன்படைப்
பூதத் தான்புக லிந்த கர்தொழ
ஏதத் தார்க்கிட மில்லை யென்பரே. ஞ

மறையி னொலி மல்கு வீணையன்
நிறையி னர்நிமிர் புன்ச டையனெம்
பொறையி னுமையை யும்பு கலியை
நிறையி னல்தொழ நேச மாகுமே. கூ

கரவி டைமனத் தாரைக் காண்கிலான்
இரவி டைப்பலி கொள்ளும் எம்மிறை
பொருவி டையுயர்த் தான்பு கலியைப்
பரவி டப்பயில் பாவம் பாறுமே. எ

அருப்பி னர்முலை மங்கை பங்கினன்
விருப்பி னன்அரக் கன்னு ரஞ்செகும்
பொருப்பி னன்பொழி லார்பு கலியூர்
இருப்பி னடி யேத்தி வாழ்த்துமே. அ

மாலும் நான்முகன் தானும் வார்கழற்
சில மும்முடி தேட நீண்டொரி
போலும் மேனியன் பூம்பு கலியுள்
பால தாடிய பண்பன் நல்லனே. கூ

நின்று துய்ப்பவர் நீசர் தேரர்சொல்
ஒன்ற தாகவை யாஉ ணர்வினுள்
நின்ற வன்நிக ழும்பு கலியைச்
சென்று கைதொழச் செல்வ மாகுமே. கஎ

புல்லம் ஏறிதன் பூம்பு கலியை
நல்ல ஞானசம் பந்தன் நாவினற்
சொல்லு மாலையீ ரைந்தும் வல்லவர்க்
கில்லை யாம்வினை யிருநி லத்துளே. கக

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்னிய கலிப்பொருளும் மூவுலகில் வாழ்வும்
பன்னிய வொருத்தர்பழ வூர்வினவின் ஞாலந்
துன்னியிமை யோர்கள்துதி செய்துமுன் வணங்குஞ்
சென்னியர் விருப்புறு திருப்புகலி யாமே. க

வண்டிரை மதிச்சடை மிலைத்தபுனல் சூடிப்
பண்டெரிகை யாடுபர மன்பதிய தென்பர்
புண்டரிக வாசமது வீசமலர் சோலைத்
தெண்டிரை கடற்போலி திருப்புகலி யாமே. உ

பாவணவு சிந்தையவர் பத்தரொடு கூடி
நாவணவும் அந்தணன் விருப்பிடம தென்பர்
பூவணவு சோலையிருள் மாலையெதிர் கூரத்
தேவண விழாவளர் திருப்புகலி யாமே. ங

மைதவழும் மாமிடறன் மாநடம தாடி
கைவளையி னொளொடு கலந்தபதி யென்பர்
செய்பணி பெருத்தெழும் உருத்திரர்கள் கூடித்
தெய்வம திணக்குறு திருப்புகலி யாமே. ச

மூன்னமிரு மூன்றுசம யங்களவை யாகிப்
பின்னையருள் செய்தபிறை யாளனுறை கோயில்
புன்னைய மலர்ப்பொழில் களக்கினொளி காட்டச்
செந்நெல்வய லார்தரு திருப்புகலி யாமே. ஞ

வங்கம்மலி யுங்கடல் விடத்தினை நுகர்ந்த
அங்கண னருத்திசெய் திருக்குமிட மென்பர்
கொங்கண வியன்பொழிலின் மாசுபனி மூசத்
தெங்கணவு தேன்மலி திருப்புகலி யாமே. ஃ

நல்குரவும் இன்பமும் நலங்களவை யாகி
வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தனிட மென்பர்
மல்குமடி யார்கள்படி யாரஇசை பாடிச்
செல்வமறை யோருறை திருப்புகலி யாமே. எ

பரப்புறு புகழ்ப்பெருமை யாளன்வரை தன்னில்
அரக்கனை யடர்த்தருளும் அண்ணலிட மென்பர்
நெருக்குறு கடல்திரைகள் முத்தமணி சிந்தச்
செருக்குறு மொழிற்பொலி திருப்புகலி யாமே. அ

கோடலொடு கூன்மதி குலாயசடை தன்மேல்
ஆடரவம் வைத்தருளும் அப்பன்இரு வர்க்கும்

நேடளரி யாகியிரு பாலும்அடி பேணித்
தேடவுறை யுங்நகர் திருப்புகலி யாமே. கூ

கற்றமண ருற்றுலவு தேரருரை செய்த
குற்றமொழி கொள்கையதி லாதபெரு மானூர்
பொற்றெடி மடந்தையரும் மைந்தர்புல னேந்துஞ்
செற்றவர் விருப்புறு திருப்புகலி யாமே. கo

செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
அந்தமுத லாகிநடு வாயபெரு மானைப்
பந்தனுரை செந்தமிழ்கள் பத்துமிசை கூர
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உருவார்ந்த மெல்லியலோர் பாகமுடையீர் அடைவோர்க்குக்
கருவார்ந்த வானுலகங் காட்டிக்கொடுத்தல் கருத்தானீர்
பொருவார்ந்த தெண்கடலொண் சங்கந்திளைக்கும் பூம்புகலித்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. க

நீரார்ந்த செஞ்சடையீர் நிரையார்கழல்சேர் பாதத்தீர்
ஊரார்ந்த சில்பலியீர் உழைமானுரிதோ லாடையீர்
போரார்ந்த தெண்டிரைசென் றணையுங்கானற் பூம்புகலிச்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. உ

அழிமல்கு பூம்புனலும் அரவுஞ்சடைமே லடைவெய்த
மொழிமல்கு மாமறையீர் கறையார்கண்டத் தெண்டோளீர்
பொழில்மல்கு வண்டினங்கள் அறையுங்கானற் பூம்புகலி
எழில்மல்கு கோயிலே கோயிலாக இருந்தீரே. ங

கையிலார்ந்த வெண்மழுவொன் றுடையீர்கடிய கரியின்தோல்
மையிலார்ந்த சாயல்மட மங்கைவெருவ மெய்போர்த்தீர்
பையிலார்ந்த வேதியர்கள் பதியாய்விளங்கும் பைம்புகலி
எயிலார்ந்த கோயிலே கோயிலாக இசைந்தீரே. ச

நாவார்ந்த பாடலீர் ஆடலரவம் அரைக்கார்த்தீர்
பாவார்ந்த பல்பொருளின் பயன்களானீர் அயன்பேணும்
பூவார்ந்த பொய்கைகளும் வயலுஞ்சூழ்ந்த பொழிற்புகலித்
தேவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. ஞ

மண்ணுர்ந்த மண்முழவந் ததும்பமலியான் மகளென்னும்
பெண்ணுர்ந்த மெய்மகிழப் பேணியெரிகொண் டாடினீர்
விண்ணுர்ந்த மதியமிடை மாடத்தாரும் வியன்புகலிக்
கண்ணுர்ந்த கோயிலே கோயிலாகக் கலந்தீரே. சு

களிபுல்கு வல்லவுணர் ஊர்மூன் றெரியக் கணைதொட்டீர்
அளிபுல்கு பூமுடியீர் அமரரேத்த அருள்செய்தீர்
தெளிபுல்கு தேன்இனமும் மலருள்விரைசேர் திண்புகலி
ஒளிபுல்கு கோயிலே கோயிலாக வுகந்தீரே. எ

பரந்தோங்கு பல்புகழ்சேர் அரக்கர்கோனை வரைக்கீழிட்
டிரந்தோன்றும் பாடல்கேட் டிகவையளித்தீர் உகவாதார்
புரந்தோன்று மும்மதிலும் எரியச்செற்றீர் பூம்புகலி
வரந்தோன்று கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. அ

சலந்தாங்கு தாமரைமேல் அயனுந்தரணி யளந்தானுங்
கலந்தோங்கி வந்திழிந்துங் காணுவண்ணங் கனலானீர்
புலந்தாங்கி ஐம்புலனுஞ் செற்றூர்வாழும் பூம்புகலி
நலந்தாங்கு கோயிலே கோயிலாக நயந்தீரே. கூ

நெடிதாய வன்சமணும் நிறைவொன்றில்லாச் சாக்கியருங்
கடிதாய கட்டுரையாற் கழறமேலோர் பொருளானீர்
பொடியாரும் மேனியினீர் புகலிமறையோர் புரிந்தேத்த
வடிவாருங் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. கo

ஒப்பரிய பூம்புகலி ஓங்குகோயில் மேயானை
அப்பரிசிற் பதியான அணிகொள்ஞான சம்பந்தன்
செப்பரிய தண்தமிழால் தெரிந்தபாட லிவைவல்லார்
எப்பரிசில் இடர்நீங்கி யிமையோருலகத் திருப்பாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

விடையதேறி வெறிஅக் கரவார்த்த விமலனூர்
படையதாகப் பரசு தரித்தார்க் கிடமாவது
கொடையிலோவார் குலமும் உயர்ந்தம் மறையோர்கள்தாம்
புடைகொள்வேள்வித் புகையும்பர் உலாவும் புகலியே. க

வேலைதன்னில் மிகுநஞ்சினை யுண்டிருள் கண்டனூர்
ஞாலமெங்கும் பலிகொண் டுழல்வார் நகராவது
சாலநல்லார் பயிலும் மறைகேட்டுப் பதங்களைச்
சோலைமேவுங் கிளித்தான் சொற்பயிலும் புகலியே. உ

வண்டுவாழுங் குழல்மங்கை யோர்கூ றுகந்தார்மதித்
துண்டம்மேவுஞ் சுடர்த்தொல் சடையார்க் கிடமாவது
கெண்டைபாய மடுவில் லுயர்கேதகை மாதவி
புண்டரீக மலர்ப்பொய்கை நிலாவும் புகலியே. ஈ

திரியும்மூன்று புரமும் எரித்துத் திகழ்வானவர்க்
கரியபெம்மான் அரவக் குழையார்க் கிடமாவது
பெரியமாடத் துயருங் கொடியின் மிடைவால்வெயிற்
புரிவிலாத தடம்பூம் பொழில்சூழ் தண்புகலியே. ச

ஏவிலாருஞ் சிலைப்பார்த் தனுக்கின் னருள்செய்தவர்
காவினுள்மூக் கரிவித்த நம்பர்க் கிடமாவது
மாவிலாருங் கனிவார் கிடங்கில் விழவாளோபோய்
பூவிலாரும் புனற்பொய்கை யில்வைகும் புகலியே. ஙி

தக்கன்வேள்வி தகர்த்த தலைவன் தையலாளொடும்
ஒக்கவேபெம் உரவோ னுறையும் இடமாவது
கொக்குவாழை பலவின் கொழுந்தண் கனிகொன்றைகள்
புக்கவாசப் புன்னை பொன்திரள் காட்டும் புகலியே. கூ, எ

தொலைவிலாத அரக்கன் உரத்தைத் தொலைவித்தவன்
தலையுந்தோளுந் நெரித்த சதுரர்க் கிடமாவது
கலையின்மேவும் மனத்தோர் இரப்போர்க் குக்கரப்பிலார்
பொலியும்அந்தண் பொழில் சூழ்ந்தழ காரும் புகலியே. அ

கீண்டுபுக்கார் பறந்தார் அயர்ந்தார் கேழலன்னமாய்க்
காண்டுமென்றூர் கழல்பணிய நின்றூர்க் கிடமாவது
நீண்டகாரை யிரையாரல் வாரகிறை செறுவினிற்
பூண்டுமிக்கவ் வயல்காட்டும் அந்தண் புகலியே. கூ

தடுக்குடித்துத் தலையைப் பறிப்பா ரொடுசாக்கியர்
இடுக்கணுய்ப்பார் இறைஞ்சாத எம்மாற் கிடமாவது
மடுப்படுக்குஞ் சுருதிப் பொருள்வல் லவர்வானுளோர்
அடித்தடித்துப் புகுந்தீண்டும் அந்தண் புகலியே. கo

எய்தவொண்ணு இறைவன் உறைகின்ற புகலியைக்
கைதவமில்லாக் கவுணியன் ஞான சம்பந்தன்சீர்
செய்தபத்தும் இவைசெப்ப வல்லார் சிவலோகத்தில்
எய்திநல்ல இமையோர்க ளேத்த இருப்பார்களே. கக

திருச்சிற்றம்பலம்.

நாலடிமேல்வைப்பு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன அரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ அமர்ந்தவனே
கலனுவது வெண்தலை கடிபொழிற் புகலிதன் னுள்
நிலனுள்தொறும் இன்புற நிறைமதி யருளினனே. க

நிலையுறும் இடர்நிலை யாதவண்ணம்
இலையுறு மலர்கள்கொண் டேத்துதும்யாம்
மலையினில் அரிவையை வெருவவன்தோல்
அலைவரு மதகரி யுரித்தவனே
இமையோர்கள்நின் தாள்தொழ எழில்திகழ் பொழிற்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடியிணையே. உ

பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்திற்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையேயடி யார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி அருளெமக்கே. ங

நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
அழல்திகழ் மேனியில் அணிந்தவனே
கழல்திகழ் சிலம்பொலி யலம்பநல்ல
முழவொடும் அருநட முயற்றினனே
முடிமேல்மதி சூடினை முருகமர் பொழிற்புகலியுள்
அடியாரவ ரேத்துற அழகொடும் இருந்தவனே. ச

கருமையின் ஒளிர்கடல் நஞ்சமுண்ட
உரிமையின் உலகுயிர் அளித்தநின்றன்
பெருமையை நிலத்தவர் பேசினல்லால்
அருமையில் அளப்பரி தாயவனே
அரவோரிடை யாளொடும் அகலிடம் மலிபுகலிப்
பொருள்சேர்தரு நாள்தொறும் புவிமிசைப் பொலிந்தவனே.

அடையரி மாவொடு வேங்கையின்தோல்
புடைபட அரைமிசைப் புனைந்தவனே
படையுடை நெடுமதிற் பரிசழித்த
விடையுடைக் கொடிமல்கு வேதியனே
விகிர்தாபரமா நின்னை விண்ணவர் தொழப்புகலித்
தகுவாய்மட மாதொடுந் தாள்பணிந் தவர்தமக்கே. கூ

அடியவர் தொழுதெழ அமரரேத்தச்
செடியவல் வினைபல தீர்ப்பவனே
துடியிடை அகலல்குல் தூமொழியைப்
பொடியணி மார்புறப் புல்கினனே
புண்ணியா புனிதா புகழேற்றினை புகலிந்நகர்
நண்ணினுய் கழலேத்திட நண்ணகிலா வினையே. எ

இரவொடு பகலதாம் எம்மானுன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்
குரவிரி நறுங்கொன்றை கொண்டணிந்த
அரவிரி சடைமுடி யாண்தகையே
அனமென்னடை யாளொடும் அதிர்கடல் இலங்கைமன்னை
இனமார்தரு தோளடர்த் திருந்தனை புகலியுளே. அ

உருகிட வுவகைதந் துடலினுள்ளால்
பருகிடும் அமுதன பண்பினனே
பொருகடல் வண்ணனும் பூவுளானும்
பெருகிடும் அருளெனப் பிறங்கெரியாய்
உயர்ந்தாயினி நீயென்ன ஒண்மலரடி யிணைக்கீழ்
வயந்தாங் குறநல்கிடு வளர்மதிற் புகலிமனே. கூ

கையினி லுண்பவர் கணிகைநோன்பர்
செய்வன தவமலாச் செதுமதியார்
பொய்யவ ருரைகளைப் பொருளெனுத
மெய்யவ ரடிதொழ விரும்பினனே
வியந்தாய்வெள் ளேற்றினை விண்ணவர் தொழுபுகலி
உயர்ந்தார்பெருங் கோயிலுள் ஒருங்குடன் இருந்தவனே. கo

புண்ணியர் தொழுதெழு புகலிந்நகர்
விண்ணவ ரடிதொழ விளங்கினனை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய அருந்தமிழ்ப் பத்தும்வல்லார்
நடலையவை யின்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித்தாம் எய்துவர் தவநெறியே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணுத லானும்வெண் ணீற்றினு னுங்கழ லார்க்கவே
பண்ணிசை பாடநின் றாடினு னும்பரஞ் சோதியும்
புண்ணிய ஞான்மறை யோர்களேத் தும்புக லிந்நகர்ப்
பெண்ணினன்ல லாளொடும் வீற்றிருந் தபெரு மானன்றே. க

சாம்பலோ டுந்தழ லாடிலு னுஞ்சடை யின்மிசைப்
பாம்பிலே டும்மதி சூடிலு னும்பசு வேறியும்
பூம்படு கல்லிள வாளேபா யும்புக லிந்நகர்க்
காம்பன தோளியொ டும்மிருந் தகட வுளன்றே. உ

கருப்புநல் வார்சிலைக் காமன்வே வக்கடைக் கண்டானும்
மருப்புநல் லாணையின் ஈருரி போர்த்தம ணைளனும்
பொருப்பன மாமணி மாடமோங் கும்புக லிந்நகர்
விருப்பின்நல் லாளொடும் வீற்றிருந் தவிம லனன்றே. ங

அங்கையின் அங்கழல் ஏந்திலு னும்அழ காகவே
கங்கையைச் செஞ்சடை சூடிலு னுங்கட லின்னிடைப்
பொங்கிய நஞ்சமு துண்டவ னும்புக லிந்நகர்
மங்கைநல் லாளொடும் வீற்றிருந் தமண வாளனே. ச

சாமநல் வேதனுந் தக்கன்றன் வேள்வித கர்த்தானும்
காமனூ ருயிரஞ் சொல்லிவா னோர்தொழு நாதனும்
பூமல்கு தண்பொழில் மன்னுமந் தண்புக லிந்நகர்க்
கோமள மாதொடும் வீற்றிருந் தகுழ கனன்றே. ஞ

இரவிடை யொள்ளெரி யாடிலு னும்இமை யோர்தொழச்
செருவிடை மூப்புரந் தீயெரித் தசிவ லோகனும்
பொருவிடை யொன்றுகந் தேறிலு னும்புக லிந்நகர்
அரவிடை மாதொடும் வீற்றிருந் தஅழ கனன்றே. கூ

சேர்ப்பது திண்சிலை மேவிலு னுந்திகழ் பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத் தானும்வேள் விப்புகை
போர்ப்பது செய்தணி மாடமோங் கும்புக லிந்நகர்ப்
பார்ப்பதி யோடுடன் வீற்றிருந் தபர மனன்றே. எ

கன்னெடு மால்வரைக் கீழரக் கன்இடர் கண்டானும்
வின்னெடும் போர்விறல் வேடலு கிவிச யற்கொரு
பொன்னெடுங் கோல்கொடுத் தானுமந் தண்புக லிந்நகர்
அன்னமன் னநடை மங்கையொ டும்அமர்ந் தானன்றே. அ

பொன்னிற நான்முகன் பச்சையான் என்றிவர் புக்குழித்
தன்னையின் னெனைனக் காண்பரி யதழற் சோதியும்
புன்னைபொன் தாதுதிர் மல்குமந் தண்புக லிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந் தவிம லனன்றே. கூ

பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப் பேணுதமீதார்
தொண்டருங் காதல்செய் சோதியா யசுடர்ச் சோதியான்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந் தபுக லிந்நகர்
வண்டமர் கோதையொ டும்மிருந் தமண வாளனே. கo

பூங்கமழ் கோதையோ டும்மிருந் தான்புக லிங்ஙகர்ப்
பாங்கணே ஞானசம் பந்தன்சொன் னதமிழ் பத்திவை
ஆங்கமர் வெய்திய ஆதியா கஇசை வல்லவர்
ஓங்கம ரர்பதி யோர்தொழச் செல்வதும் உண்மையே. கக

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலியும் திருவீழிமிழலையும் - பண் - நட்டபாடை.

வினவுரை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற வாள்நுதல் மான்விழி மங்கை யோடும், பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய புண் ணியனே, எம்மிறை யேயிமை யாதமுக்கண் ஈசனென் நேசஇதென் கொல்சொல்லாய், மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே. க

கழல்மல்கு பந்தாடம் மானேமுற்றில் கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள், பொழில்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும் புகலி நிலாவிய புண்ணியனே, எழில்மல ரோன்சிர மேந்திஉண்டோர் இன் புறு செல்வமி தென்கொல்சொல்லாய், மிழலையுள் வேதிய ரேத்தி வாழ்த்த விண்ணிழி கோயில் விரும்பியதே. உ

கன்னிய ராடல் கலந்துமிக்க கந்துக வாடை கலந்துதுங்கப், பொன் னியல் மாடம் நெருங்குசெல்வப் புகலி நிலாவிய புண்ணியனே, இன் னிசை யாழ்மொழி யாளோர்பாகத் தெம்மிறை யேயிது என்கொல் சொல்லாய், மின்னியல் நுண்ணிடை யார்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே. ங

நாகப ணாத்திக ழல்குல்மல்கு நல்நுதல் மான்விழி மங்கை யோடும், பூகவ னம்பொழில் சூழ்ந்தஅத்தண் புகலி நிலாவிய புண்ணி யனே, ஏகபெ ருந்தகை யாயபெம்மான் எம்மிறை யேயிது என் கொல்சொல்லாய், மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே. ச

சந்தள றேறுத டங்கொள்கொங்கைத் தையலொ டுந்தள ராத வாய்மைப், புந்தியி னல்மறை யோர்களேத்தும் புகலி நிலாவிய புண்ணியனே, எந்தமை யாளுடை யீசனம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், வெந்தவெண் நீறணி வார்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே. ஞ

சங்கொளி யிப்பி சுருமகரந் தாங்கி நிரந்து தரங்கம்மேன்மேற், பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப் புகலி நிலாவிய புண்ணி யனே, எங்கள்பி ராணிமை யோர்கள்பெம்மான் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலே விண் ணிழி கோயில் விரும்பியதே. சு

காமனை ரிப்பிழம் பாகமோக்கிக் காம்பன தோளியொ டுங்கலந்து, பூமரு நான்முகன் போல்வரேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே, ஈமவ னத்தெரி ஆட்டுகந்த எம்பெரு மானிது என்கொல்சொல் லாய், வீமரு தண்பொழில் சூழ்மிழலே விண்ணிழி கோயில் விரும்பி யதே. எ

இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோ ளிற்றல றவ்விர லொற்றியைந்து, புலங்கலக் கட்டவர் போற்றஅந்தண் புகலி நிலாவிய புண்ணியனே, இலங்கெரி யேந்திநின் றெல்லியாடும் எம்மிறை யேயிது என்கொல்சொல்லாய், விலங்கலொண் மாளிகை சூழ்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே. அ

செறிமுள ரித்தவி சேறியாறுஞ் செற்றதில் வீற்றிருந் தானும் மற்றைப், பொறியர வத்தணை யானுங்காணாப் புகலி நிலாவிய புண்ணி யனே, எறிமழு வோடிள மான்கையின்றி யிருந்தபி ராணிது என் கொல்சொல்லாய், வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே.

பத்தர் கணம்பணிந் தேத்தவாய்த்த பான்மைய தன்றியும் பல்சம ணும், புத்தரும் நின்றலர் தூற்ற அந்தண் புகலி நிலாவிய புண்ணியனே, ஏத்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற எம்பெரு மானிது என்கொல் சொல்லாய், வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலே விண்ணிழி கோயில் விரும்பியதே. கo

விண்ணிழி கோயில் விரும்பிமேவும் வித்தக மென்கொலி தென்று சொல்லிப், புண்ணிய னேப்புக லிந்நிலாவு பூங்கொடி யோடிருந் தாணப் போற்றி, நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி ஞான்மறை ஞானசம் பந்தன்சொன்ன, பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப் பாரொடு விண் பரி பாலகரே. கக

திருச்சிற்றம்பலம்.



ச திருவேங்குரு - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காலநன்மாமலர் கொண்டடிபரவிக் கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன், ஓலமதிடமுன் னுயிரொடுமாள வுதைத்தவன் உமையவள் விருப்பன்எம்பெருமான், மாலைவந்தணுக ஓதம்வந்துலவி

மறிதிரைசங்கொடு பவளம்முன்உந்தி, வேலைவந்தணையுஞ் சோலைகள் சூழ்ந்த வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. க

பெண்ணினைப்பாகம் அமர்ந்துசெஞ்சடைமேற் பிறையொடும் அரவினை யணிந்தழகாகப், பண்ணினைப்பாடி யாடிமுன்பலிகொள் பரம ரெம்அடிகளார் பரிசுகள்பேணி, மண்ணினைமூடி வான்முகடேறி மறி திரைகடல்முகந் தெடுப்பமற்றுயர்ந்து, விண்ணளவோங்கி வந்திழி கோயில் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. உ

ஓரியல்பில்லா வுருவமதாகி யொண்திறல்வேடன தருவது கொண்டு, காரிகைகாணத் தனஞ்சயன்தன்னைக் கறுத்தவற்களித்து டன் காதல்செய்பெருமான், கோரிசையாக அறுபதமுரன்று நிரை மலர்த்தாதுகள் மூசவிண்டிதிர்ந்து, வேரிகளெங்கும் விம்மியசோலை வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ங

வண்டணைகொன்றை வன்னியுமத்தம் மருவியசுவிளம் எருக் கொடுமிக்க, கொண்டணிசடையர் விடையினர்பூதங் கொடுகொட்டி குடமுழாக் கூடியுமுழவப், பண்டிகழ்வாகப் பாடியொர்வேதம் பயில் வர்முன்பாய்புனற் கங்கையைச்சடைமேல், வெண்பிறைசூடி யுமை யவளோடும் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ச

சடையினர்மேனி நீறதுபூசித் தக்கைகொள்பொக்கண மிட்டுடனு கக், கடைதொறும்வந்து பலியதுகொண்டு கண்டவர்மனமவை கவர்ந் தழகாகப், படையதுஏந்திப் பைங்கயக்கண்ணி யுமையவள்பாகமும் அமர் ந்தருள்செய்து, விடையொடுபூதஞ் சூழ்தரச்சென்று வெங்குரு மேவி யுள் வீற்றிருந்தாரே. ஞ

கரைபொருகடலில் திரையதுமோதக் கங்குல்வந்தெறிய சங்கமும் இப்பி, உரையுடைமுத்தம் மணலிடைவைகி ஓங்குவான்இருளறத் துரப்பளண்திசையும், புரைமலிவேதம் போற்றுபூசுரர்கள் புரிந்தவர் நலங்கொள்ஆ குதியினில்நிறைந்த, விரைமலிதூபம் விசும்பினைமறைக் கும் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. ட

வல்லிநுண்இடையாள் உமையவள்தன்னை மறுகிடவரும்மத களிற்றினைமயங்க, ஒல்லையிற்பிடித்துங் குரித்தவள்வெருவல் கெடித்தவர் விரிபொழில் மிகுதிருஆலில், நல்லறம்உரைத்து ஞானமோடிருப்ப நலிந்திடலுற்று வந்தஅக்கருப்பு, வில்லியைப்பொடிபட விழித்தவர் விரும்பி வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. எ

பாங்கிலாஅரக்கன் கயிலைஅன்றெடுப்பப் பலதலைமுடியொடு தோளவைநெரிய, ஓங்கியவிரலால் ஊன்றியன்றவற்கே ஒளிதிகழ் வாளது கொடுத்தழகாய, கோங்கொடுசெருந்தி கூவிளமத்தங் கொன் றையுங்குலாவிய செஞ்சடைச்செல்வர், வேங்கைபொன்மலரார் விரை தருகோயில் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. அ

ஆறுடைச்சடையெம் அடிகளுக்காண அரியொடுபிரமனும் அளப் பதற்காகிச், சேறிடைத்திகழ்வா னத்திடைபுக்குஞ் செலவறத்தவிர்ந் தனர் எழிலுடைத்திகழ்வெண், நீறுடைக்கோல மேனியர்நெற்றிக் கண்ணினர்விண்ணவர் கைதொழுதேத்த, வேறெமையாள விரும்பிய விகிர்தர் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. கூ

பாடுடைக்குண்டர் சாக்கியர்சமணர் பயில்தருமறவுரை விட் டழகாக, ஏடுடைமலராள் பொருட்டுவன்தக்கன் எல்லியில்வேள்வி யைத், தகர்த்தருள்செய்து, காடுடைக்கடிநாய் கலந்துடன்சூழக் கண்ட வர்வெருவுற விளித்துவெய்தாய, வேடுடைக்கோலம் விரும்பியவிகிர்தர் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. கO

விண்ணியல்விமானம் விரும்பியபெருமான் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை, நண்ணியதூயன் ஞானசம்பந்தன் நவின்றஇவ்வாய் மொழி நலம்மிகுபத்தும், பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியும் ஆடியும் பயிலவல்லார்கள், விண்ணவர்விமானங் கொடிவரஏறி விய னுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருமுக்கால் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய
சுண்ணவெண் பொடியணி வீரே
சுண்ணவெண் பொடியணி வீருமை தொழுகழல்
எண்ணவல் லாரிட ரிலரே. க

வேதியர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆதிய அருமறை யீரே
ஆதிய அருமறை யீருமை யலர்கொடு
ஓதிய நுணர்வுடை யோரே. உ

விளங்குதண் பொழிலணி வெங்குரு மேவிய
இளம்பிறை யணிசடை யீரே
இளம்பிறை யணிசடை யீரும திணையடி
உளங்கொள உறுபிணி யிலரே. ங

விண்டலர் பொழிலணி வெங்குரு மேவிய
வண்டமர் வளர்சடை யீரே
வண்டமர் வளர்சடை யீருமை வாழ்த்துமத்
தொண்டர்கள் துயர்பிணி யிலரே. ச

மிக்கவர் தொழுதெழு வெங்குரு மேவிய
அக்கினெ டரவசைத் தீரே
அக்கினெ டரவசைத் தீரும தடியிணை
தக்கவர் உறுவது தவமே. ரு

வெந்தவெண் பொடியணி வெங்குரு மேவிய
அந்தமில் பெருமையி னீரே
அந்தமில் பெருமையி னீருமை யலர்கொடு
சிந்தைசெய் வோர்வினை சிதைவே. சு

விழமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அழல்மல்கும் அங்கையி னீரே
அழல்மல்கும் அங்கையி னீருமை யலர்கொடு
தொழஅல்லல் கெடுவது துணிவே. எ

வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்தஞன் மலர்புனை வீரே
மத்தஞன் மலர்புனை வீரும தடிதொழுஞ்
சித்தம துடையவர் திருவே. அ

மேவலர் தொழுதெழு வெங்குரு மேவிய
ஆலம்நன் மணிமிடற் றீரே
ஆலம்நன் மணிமிடற் றீரும தடிதொழுஞ்
சீலம துடையவர் திருவே. கூ

விரைமல்கு பொழிலணி வெங்குரு மேவிய
அரைமல்கு புலியத ளீரே
அரைமல்கு புலியத ளீரும தடியிணை
உரைமல்கு புகழவர் உயர்வே. கo, கக

திருச்சிற்றம்பலம்.

ரு திருத்தோணிபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டரங்கப் புனற்கமலம் மதுமாந்திப் பெடையினெடும்
ஒண்தரங்க இசைபாடும் அளியரசே ஒளிமதியுத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்நிலைமை பரிந்தொருகாற் பகராயே. க

எறிசுறவங் கழிக்கானல் இளங்குருகே என்பயலே
அறிவுரு தொழிவதுவும் அருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதம்ஓதுந் திருத்தோணி புரத்துறையும்
வெறிகிளர் மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே. உ

பண்பழனக் கோட்டகத்து வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே கதிவிணையேன் உறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற் பழியாமோ மொழியாயே. கூ

காண்தகைய செங்காலொண் கழிநாராய் காதலாற்
பூண்தகைய முலைமெலிந்து பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்தகைய மணிமாடத் திருத்தோணி புரத்துறையும்
ஆண்தகையாற் கின்றேசென் றடியறிய உணர்த்தாயே. சு

பாராரே யெனையொருகால் தொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப் பவளக்காற் கமோதகங்காள்
தேராரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
சீராருஞ் சடையாருக் கென்நிலைமை நிகழ்த்தீரே. ரு

சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள் விண்ணேறு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி புரத்தீசன் துளங்காத
கூற்றுதைத்த திருவடியே கூடுமா கூறீரே. சூ

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறும்நோய் அறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே. எ

பால்நாறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கும் இனிதாக மொழியும்எழில் இளங்குயிலே
தேனுரும் பொழில்புடைசூழ் திருத்தோணி புரத்தமரர்
கோனுரை யென்னிடத்தே வரவொருகாற் கூவாயே அ

நற்பதங்கள் மிகஅறிவாய் நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவைகல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெய்ப்பயலை விளம்பாயே. கூ

சிறையாரும் மடக்கிளியே யிங்கேவா தேனுடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடிதரளந்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே. கo

போர்மிகுத்த வயல்தோணி புரத்துறையும் புரிசடையெங்
கார்மிகுத்த கறைக்கண்டத் திறையவனை வண்கமலத்
தார்மிகுத்த வரைமார்பன் சம்பந்தன் உரைசெய்த
சீர்மிகுத்த தமிழ்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சங்கமரு முன்கைமட மாதையொரு பாலுடன் விரும்பி
அங்கமுடல் மேலுறஅ ணிந்துபிணி தீரஅருள் செய்யும்
எங்கள்பெரு மானிடமெ னத்தகுமு னைக்கடலின் மூத்தந்
துங்கமணி இப்பிகள்க ரைக்குவரு தோணிபுர மாமே. க

சல்லரியி யாழ்முழவம் மொந்தைகுழல் தாளமதி யம்பக்
கல்லரிய மாமலையர் பாவையொரு பாகநிலை செய்து
அல்லெரிகை யேந்திநட மாடுசடை யண்ணலிட மென்பர்
சொல்லரிய தொண்டர்துதி செய்யவளர் தோணிபுர மாமே. உ

வண்டரவு கொன்றைவளர் புன்சடையின் மேல்மதியம் வைத்துப்
பண்டரவு தன்னரையி லார்த்தபா மேட்டிபழி தீரக்
கண்டரவ வொண்கடலின் நஞ்சம்அமு துண்டகட வுள்ளூர்
தொண்டரவர் மிண்டிவழி பாடுமல்கு தோணிபுர மாமே. ங

கொல்லிவிடை யேறுடைய கோவணவன் நாவணவுமாலை
ஒல்லியுடை யான்அடைய லார்அரணம் ஒள்ளழல் விளைத்த
வில்லியுடை யான்மிக விரும்புபதி மேவிவளர் தொண்டர்
சொல்லியடை வாகஇடர் தீர்த்தருள்செய் தோணிபுர மாமே. ச

தேயும்மதி யஞ்சடையி லங்கிடவி லங்கன்மலி கானிற்
காயுமடு திண்கரியின் ஈருரிவை போர்த்தவன் நினைப்பார்
தாயெனநி றைந்ததொரு தன்மையினர் நன்மையொடு வாழ்வு
தூயமறை யாளர்முறை யோதிநிறை தோணிபுர மாமே. ஞ

பற்றலர்தம் மூப்புரம்எ ரித்தடிப ணிந்தவர்கள் மேலைக்
குற்றமதொ ழித்தருளு கொள்கையினன் வெள்ளின்முது கானிற்
பற்றவன்இ சைக்கிளவி பாரிடம தேத்தநட மாடுந்
துற்றசடை யத்தனுறை கின்றபதி தோணிபுர மாமே. ட

பண்ணமரு நான்மறையர் தூன்முறைப யின்றதிரு மார்பிற்
பெண்ணமரும் மேனியினர் தம்பெருமை பேசும்அடி யார்மெய்த்
திண்ணமரும் வல்வினைகள் தீரஅருள் செய்தலுடை யானூர்
துண்ணெனவி ரும்புசரி யைத்தொழிலர் தோணிபுர மாமே. எ

தென்திசைபி லங்கையரை யன்திசைகள் வீரம்விளை வித்து
வென்றிசைபு யங்களைய டர்த்தருளும் வித்தகனி டஞ்சீர்
ஒன்றிசையி யற்கிளவி பாடமயி லாடவளர் சோலை
துன்றுசெய வண்டிமிலி தும்பிமுரல் தோணிபுர மாமே. அ

நாற்றம்மிகு மாமலரின் மேலயனும் நாரணனும் நாடி
ஆற்றலத னுல்மிகஅ ளப்பரிய வண்ணம்எரி யாகி

ஊற்றம்மிகு கீழுலகும் மேலுலகும் ஓங்கியெழு தன்மைத்
தோற்றம்மிக நாளுமரி யாணுறைவு தோணிபுர மாமே. கூ

மூடிதுவ ராடையினர் வேடநிலை காட்டும்அமண் ஆதர்
கேடிபல சொல்லிடுவ ரம்மொழிகெ டித்தடைவி னைனக்
காடுபதி யாகநட மாடிமட மாதொடிரு காதில்
தோடுகுழை பெய்தவர்த மச்குறைவு தோணிபுர மாமே கo

துஞ்சிருளின் நின்றுநட மாடிமிகு தோணிபுரம் மேய
மஞ்சணவ ணங்குதிரு ஞானசம் பந்தனொன் மாலை
தஞ்சமென நின்றிசைமொ ழிந்தஅடி யார்கள்தடு மாற்றம்
வஞ்சமிலர் நெஞ்சிருளும் நீங்கியருள் பெற்றுவளர் வாசே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கரும்பமர் வில்லியைக் காய்ந்து காதற் காரிகை மாட்டருளி
அரும்பமர் கொங்கை யோர்பால் மகிழ்ந்த அற்புதஞ் செப்பரிதால்
பெரும்பக லேவந்தென் பெண்மை கொண்டு பேர்த்தவர் சேர்ந்தஇடஞ்
சுரும்பமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத் தோணி புரந்தானே. க

கொங்கியல் பூங்குழற் கொவ்வைச் செவ்வாய்க் கோமள மாதுமையாள்
பங்கிய லுந்திரு மேனி யெங்கும் பால்வெள்ளை நீறணிந்து
சங்கியல் வெள்வளை சோர வந்தென் சாயல்கொண் டார்தமதூர்
துங்கியன் மாளிகை சூழ்ந்த செம்மைத் தோணி புரந்தானே. உ

மத்தக் களிற்றுரி போர்க்கக் கண்டு மாதுமை பேதுறலுஞ்
சித்தந் தெளியநின் றாடி யேறூர் தீவண்ணர் சில்பலிக்கென்
றெத்தப்படி வந்தென் னுள்ளங் கொண்ட ஒருவர்க் கிடம்போலுந்
துத்தகல் லின்னிசை வண்டு பாடுந் தோணி புரந்தானே. ங, ச, ஞ, சு, எ

வள்ள லிருந்த மலையத னேவலுஞ் செய்தல் வாய்மையென
உள்ளங் கொள்ளாது கொதித்தெ ழுந்தன் றெடுத்தோன் உரம்நெரிய
மெள்ள விரல்வைத்தென் உள்ளங் கொண்டார் மேவு மிடம்போலுந்
துள்ளொலி வெள்ளத் தின்மேல் மிதந்த தோணி புரந்தானே. அ

வெல்பற வைக்கொடி மாலும் மற்றை விரைமலர் மேலயனும்
பல்பற வைப்படி யாயுயர்ந்தும் பன்றிய தாய்ப்ப ணிந்துஞ்
செல்வற நீண்டெஞ் சிந்தை கொண்ட செல்வ நிடம்போலுந்
தொல்பர வைசுமந் தோங்கு செம்மைத் தோணி புரந்தானே. கூ

குண்டிகை பீலிதட் டோடு நின்று கோசரங் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள் கஞ்சி யூணரும் வாய்மடிய
இண்டை புனைந்தெரு தேறி வந்தென் எழில்கவர்ந் தாரிடமாக்
தொண்டிசை பாட லுறுத தொன்மைத் தோணி புரந்தானே. க0

தூமரு மாளிகை மாடம் நீடு தோணி புரத்திறையை
மாமறை நான்கினெ டங்க மாறும் வல்லவன் வாய்மையினுல்
காமரு கேள்வி நலந்திகழும் ஞான சம்பந் தன்சொன்ன
பாமரு பாடல்கள் பத்தும் வல்லார் பார்மூழு தாள்பவரே. கக

திருச்சிற்றம்பலம்.

சு திருப்பூந்தராய் - பண் - இந்தளம்.

விஞவுரை.

திருச்சிற்றம்பலம்.

செந்நெ லங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர்முடி தோய்கழ லீர்சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே. க

எற்று தெண்டிரை யேறிய சங்கினெ டிப்பிகள்
பொற்றி கழ்கம லப்பழ னம்புகு பூந்தராய்ச்
சுற்றி நல்லிமை யோர்தொழு பொற்கழ லீர்சொலீர்
பெற்ற மேறுதல் பெற்றிமை யோபெரு மானீரே. உ

சங்கு செம்பவ ளத்திரள் முத்தவை தாங்கொடு
பொங்கு தெண்டிரை வந்தலைக் கும்புனற் பூந்தராய்த்
துங்க மால்களிற் றின்னுரி போர்த்துகந் தீர்சொலீர்
மங்கை பங்கமும் அங்கத்தொ டொன்றிய மாண்பதே. ங

சேம வன்மதில் பொன்னணி மாளிகை சேணுயர்
பூம ணங்கம ழும்பொழில் சூழ்தரு பூந்தராய்ச்
சோம னும்அர வந்தொடர் செஞ் சடை யீர்சொலீர்
காமன் வெண்பொடி யாகக் கடைக்கண் சிவந்ததே. ச

பள்ள மீன்இரை தேர்ந்துழ லும்பகு வாயன
புள்ளும் நாள்தொறுஞ் சேர்பொழில் சூழ்தரு பூந்தராய்த்
துள்ளும் மான்மரி யேந்திய செங்கையி னீர்சொலீர்
வெள்ள நீரொரு செஞ்சடை வைத்த வியப்பதே. ஞ

மாதி லங்கிய மங்கைய ராடம ருங்கெலாம்
போதி லங்கம லம்மது வார்புனற் பூந்தராய்ச்

சோதி யஞ்சுடர் மேனிவெண் ணீறணி வீர்சொலீர்
காதி லங்குழை சங்கவெண் தோடுடன் வைத்தமே. கூ, எ

வருக்க மார்தரு வான்கடி வன்னெடி மந்திகள்
தருக்கொள் சோலை தருங்கனி மாந்திய பூந்தராய்த்
துரக்கும் மால்விடை மேல்வரு வீரடி கேள்சொலீர்
அரக்க னற்றல் அழித்தரு ளாக்கிய ஆக்கமே. அ

வரிகொள் செங்கயல் பாய்புனல் சூழ்ந்த மருங்கெலாம்
புரிசை நீடியர் மாடம்நி லாவிய பூந்தராய்ச்
சுருதி பாடிய பாணியல் தூமொழி யீர்சொலீர்
கரிய மாலயன் நேடியு மைக்கண்டி லாமையே. கூ

வண்ட லங்கழ னிம்மடை வாளைகள் பாய்புனற்
புண்ட ரீகம லர்த்தும துத்தரு பூந்தராய்த்
தொண்டர் வந்தடி போற்றிசெய் தொல்கழ லீர்சொலீர்
குண்டர் சாக்கியர் கூறிய தாங்குறி யின்மையே. கo

மகர வார்கடல் வந்தண வும்மணற் கானல்வாய்ப்
புகலி ஞானசம் பந்தன் எழில்மிகு பூந்தராய்ப்
பகவ னுரைப் பரவுசொல் மாலைபத் தும்வல்லார்
அகல்வர் தீவிண நல்விண யோடிட னுவமே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள் பவளத்துவர்
வாயினுள்பனி மாமதிபோல்முகத்
தந்தமில்புக ழாள்மலைமாதெடும் ஆதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவரெத்திசையுந்
நிறைந்துவலஞ் செய்துமாமலர்
புந்திசெய் திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே. க

காவியங்கருங் கண்ணினுள்கனித்
தொண்டைவாய்க்கதிர் முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடை யன்னநடைச்சுரி மென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர்பாகமாய்
ஒன்றிரண்டொரு மூன்றுருசேர்பதி
பூவிலந்தணன் ஒப்பவர்பூந்தராய் போற்றுதுமே. உ

பையராவரும் அல்குல்மெல்லியல்
பஞ்சின்மேரடி வஞ்சிகொள்துண்ணிடைத்
தையலாளொரு பாலுடையெம்மிறை சாருமிடஞ்
செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த்
தேறலூறலிற் சேறுலராதகற்
பொய்யிலாமறை யோர்பயில்பூந்தராய் போற்றுதுமே. கூ

முள்ளிகாண்முகை மொட்டியல்கோங்கின்
அரும்புதேன்கொள் குரும்பைமூவாமருந்
துள்ளியன்றபைம்பொற் கலசத்திய லொத்தமுலை
வெள்ளிமால்வரை யன்னதோர்மேனியின்
மேவினர்பதி வீமருதண்பொழிற்
புள்ளினத்துயில் மல்கியபூந்தராய் போற்றுதுமே. ச

பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர்
கோதையோர்திகழ் பைந்தளிர்மேனியோர்
பெண்ணியன்றமொய்ம்பிற் பெருமாற்கிடம் பெய்வளையார்
கண்ணியன்றெழு காவிச்செழுங்கரு
நீலம்மல்கிய காமருவாவிநற்
புண்ணியருறையும் பதிபூந்தராய் போற்றுதுமே. ஞ

வாள்நிலாமதி போல்முதலாள்மட
மாழையொண்கணுள் வண்தரளந்நகை
பாண்நிலாவிய இன்னிசையார்மொழிப் பாவையொடுஞ்
சேண்நிலாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல்
சேர்வதுசிகரப் பெருங்கோயில்சூழ்
போணிலாதுழையும் பொழிற்பூந்தராய் போற்றுதுமே. கூ

காருலாவிய வார்குழலாள்கயற்
கண்ணினுள்புயற் காலொளிமின்னிடை
வாருலாவிய மென்முலையாள்மலை மாதுடனாய்
நீருலாவிய சென்னியன்மன்னி
நிகருகாமம் முந்நான்குநிகழ்பதி
போருலாவெயில் சூழ்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. எ

காசைசேர்குழலாள் கயலேர்தடங்
கண்ணிகாம்பன தோட்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலை மாதமருந்திரு மார்பகலத்
தீசன்மேவும் இருங்கயிலையெடுத்தாணை
அன்றடர்த்தான் இணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற்பூந்தராய் போற்றுதுமே. அ

கொங்குசேர்குழ லாள்நிழல்வெண்ணகைக்
கொவ்வைவாய்க்கொடி யேரிடையாளுமை
பங்குசேர்திரு மார்புடையார்படர் தீயுருவாய்
மங்குல்வண்ணனும் மாமலரோனும்
மயங்கநீண்டவர் வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்தநற்பூந்தராய் போற்றுதுமே. கூ

கலவமாமயி லார்இயலாள்கருங்
பன்னமென்மொழி யாள்கதிர்வாள்நுதல்
குலவுபூங்குழ லாளுமைகூறினை வேறுரையால்
அலவைசொல்லுவார் தேரமண்ஆதர்கள்
ஆக்கிலுன்றனை நண்ணுநல்குநற்
புலவர்தாம்புகழ் பொற்பதிபூந்தராய் போற்றுதுமே. கo

தேம்பல்நுண்ணிடை யாள்செழுஞ்சேலன
கண்ணியோடண்ணல் சேர்விடந்தேன்அமர்
பூம்பொழில்திகழ் பொற்பதிபூந்தராய்போற்றுதுமென்
றேம்புதன்மையன் மூத்தமிழ்ஞான்மறை
ஞானசம்பந்தன் ஒண்தமிழ்மாலைகொண்
டாம்படியிவை யேத்தவல்லார்க்கடை யாவினையே. கக

திருச்சிற்றம்பலம்.

ஈரடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்.
திருச்சிற்றம்பலம்.

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே. க

புள்ளி னம்புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளந் தாங்கு விகிர்தன் அடிதொழ
ஞாலத் தில்லுயர் வாருள்கு நன்னெறி
மூல மாய முதலவன் தானே. உ

வேந்த ராயுல காள விருப்புறிற்
பூந்த ராய்நகர் மேயவன் பொற்கழல்
நீதி யால்நினைந் தேத்தி யுள்கிடச்
சாதி யாவினை யான தானே. ங

பூசு ரர்தொழு தேத்திய பூந்தராய்
ஈசன் சேவடி யேத்தி யிறைஞ்சிடச்

சிந்தை நோயவை தீர நல்கிடும்
இந்து வார்சடை யெம் இறையே. ச

பொலிந்த என்பணி மேனியன் பூந்தராய்
மலிந்த புந்திய ராகி வணங்கிட
துந்தம் மேல்வினை யோட வீடுசெய்
எந்தை யாயளம் ஈசன் தானே. டு

பூதஞ் சூழப் பொலிந்தவன் பூந்தராய்
காதன் சேவடி காலும் நவின்றிட
நல்கு நாள்தொறும் இன்ப நளிர்புனல்
பில்கு வார்சடைப் பிஞ்ஞ கனே. கூ

புற்றில் நாகம் அணிந்தவன் பூந்தராய்
பற்றி வாழும் பரமனைப் பாடிடப்
பாவ மாயின தீரப் பணித்திடுஞ்
சேவ தேறிய செல்வன் தானே. எ

போத கத்துரி போர்த்தவன் பூந்தராய்
காத லித்தான் கழல்விரல் ஒன்றினால்
அரக்கன் ஆற்றல் அழித்தவ னுக்கருள்
பெருக்கி நின்றளம் பிஞ்ஞ கனே. அ

மத்த மான இருவர் மருவொணா
அத்த னானவன் மேவிய பூந்தராய்
ஆள தாக அடைந்துய்ம்மின் துய்வினை
மாளு மாறருள் செய்யுந் தானே. கூ

பொருத்த மில்சமண் சாக்கியப் பொய்கடிந்
திருத்தல் செய்தபி ரான்இமை யோர்தொழப்
பூந்த ராய்நகர் கோயில் கொண்டுகை
ஏந்து மான்மறி யெம்மி றையே. கூ

புந்தி யால்மிக நல்லவர் பூந்தராய்
அந்த மில்லெம் அடிகள் ஞானசம்
பந்தன் மாலைகொண் டேத்தி வாழும்நும்
பந்த மார்வினை பாறி டுமே. கூ

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னன எயிறுடை விரவ லோர்கள்தந்
துன்னிய புரம்உகச் சுளிந்த தொன்மையர்
புன்னெயம் பொழிலணி பூந்த ராய்நகர்
அன்னமன் னந்நடை அரிவை பங்கரே. க

மூதணி மூப்புரத் தெண்ணி லோர்களை
வேதணி சரத்தினல் வீட்டி னரவர்
போதணி பொழிலமர் பூந்த ராய்நகர்த்
தாதணி குழலுமை தலைவர் காண்மினே. உ

தருக்கிய திரிபுரத் தவர்கள் தாம்உகப்
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்
பொருக்கடல் புடைதரு பூந்த ராய்நகர்க்
கருக்கிய குழலுமை கணவர் காண்மினே. ங

நாகமும் வரையுமே நாணும் வில்லுமா
மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்
பூகமார் பொழிலணி பூந்த ராய்நகர்ப்
பாகமர் மொழியுமை பங்கர் காண்மினே. ச

வெள்ளெயி றுடையவவ் விரவ லார்களூர்
ஒள்ளெரி யூட்டிய வொருவ னுரொளிர்
புள்ளணி புறவினிற் பூந்த ராய்நகர்க்
கள்ளணி குழலுமை கணவர் காண்மினே. ஞ

தூங்கியல் தானவர் தோற்ற மாநகர்
அங்கியில் வீழ்தர வாய்ந்த வம்பினர்
பொங்கிய கடலணி பூந்த ராய்நகர்
அங்கய லனகண்ணி அரிவை பங்கரே. ட

அண்டர்க ளுய்ந்திட அவுணர் மாய்தரக்
கண்டவர் கடல்விட முண்ட கண்டனர்
புண்டரீ கவ்வயற் பூந்த ராய்நகர்
வண்டமர் குழலிதன் மணாளர் காண்மினே. ண

மாசின அரக்கனை வரையின் வாட்டிய
காய்சின வெயில்களைக் கறுத்த கண்டனர்
பூசுரர் பொலிதரு பூந்த ராய்நகர்க்
காசைசெய் குழலுமை கணவர் காண்மினே. அ

தாமுக மாக்கிய அசுரர் தம்பதி
வேமுக மாக்கிய விகிர்தர் கண்ணனும்

பூமகன் அறிகிலாப் பூந்த ராய்நகர்க்
கோமகன் எழில்பெறும் அரிவை கூறரே. கூ

முத்தர அசுரர்கள் மொய்த்த மூப்புரம்
அத்தகும் அழலிடை வீட்டினர் அமண்
புத்தரும் அறிவொணாப் பூந்த ராய்நகர்க்
கொத்தணி குழலுமை கூறர் காண்மினே. கo

புரமெரி செய்தவர் பூந்த ராய்நகர்ப்
பரமலி குழலுமை நங்கை பங்கரைப்
பரவிய பந்தன்மெய்ப் பாடல் வல்லவர்
சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே. கக

திருச்சிற்றம்பலம்.

எ. திருச்சிரபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லடைந்த வெண்தலையிற் பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாள் மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொல்மறையோ டங்கங் கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ் சிரபுரம் மேயவனே. க

கொல்லைமுல்லை நகையினுளோர் கூறது அன்றியும்போய்
அல்லல்வாழ்க்கைப் பலிகொண்டுண்ணும் ஆதர வென்னைகொலாஞ்
சொல்லநீண்ட பெருமையாளர் தொல்கலை கற்றுவல்லார்
செல்லநீண்ட செல்வம்மல்கு சிரபுரம் மேயவனே. உ

நீரடைந்த சடையின்மேலோர் நிகழ்மதி யன்றியும்போய்
ஊரடைந்த ஏறதேறி யுண்பலி கொள்வதென்னே
காரடைந்த சோலைசூழ்ந்து காமரம் வண்டிசைப்பச்
சீரடைந்த செல்வமோங்கு சிரபுரம் மேயவனே. ங.

கையடைந்த மானினோடு காரர வன்றியும்போய்
மெய்யடைந்த வேட்கையோடு மெல்லியல் வைத்தலென்னே
கையடைந்த கனிகளாகச் செங்கழு நீர்மலர்கள்
செய்யடைந்த வயல்கள்சூழ்ந்த சிரபுரம் மேயவனே. ச

புரம்எரித்த பெற்றியோடும் போர்மத யானைதன்னைக்
கரம்எடுத்துத் தோலுரித்த காரணம் ஆவதென்னே
மரம்உரித்த தோலுடுத்த மாதவர் தேவரோடுஞ்
சிரம்எடுத்த கைகள்கூப்புஞ் சிரபுரம் மேயவனே. ஞ

கண்ணும்மூன்றும் உடையதன்றிக் கையினில் வெம்மழுவும்
பண்ணும்மூன்று வீணையோடு பாம்புடன் வைத்தலென்னே
எண்ணுமூன்று கனலும்ஒம்பி யெழுமையும் விழுமியராய்த்
திண்ணமூன்று வேள்வியாளர் சிரபுரம் மேயவனே. சு

குறைபடாத வேட்கையோடு கோல்வளை யாளொருபாற்
பொறைபடாத இன்பமோடு புணர்தரு மெய்ம்மையென்னே
இறைபடாத மென்முலையார் மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடலோங்கு சிரபுரம் மேயவனே. எ

மலையெடுத்த வாளரக்கன் அஞ்சவொ ருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார் மேதகு வீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினனே சிரபுரம் மேயவனே. அ

மாலினோடு மலரினனும் வந்தவர் காணுறு
சாலும்அஞ்சப் பண்ணினீண்ட தத்துவ மேயதென்னே
நாலுவேதம் ஓதலார்கள் நம்துணை யென்றிறைஞ்சச்
சேலுமேயுங் கழனிசூழ்ந்த சிரபுரம் மேயவனே. கூ

புத்தரோடு சமணர்சொற்கள் புறனுரை யென்றிருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த பான்மைய தென்னைகொலாம்
மத்தயானை யுரியும்போர்த்து மங்கையொ டும்மூடனே
சித்தர்வந்து பணியுஞ்செல்வச் சிரபுரம் மேயவனே. கo

தெங்குநீண்ட சோலைசூழ்ந்த சிரபுரம் மேயவனை
அங்கம்நீண்ட மறைகள்வல்ல அணிகொள்சம் பந்தன்உரை
பங்கம்நீங்கப் பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேற்
சங்கமோடு நீடிவாழ்வர் தன்மையி னுலவரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாருறு வன்முலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடம்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே. க

அங்கமொ டருமறை அருள்புரிந்தான்
திங்களொ டரவணி திகழ்முடியன்
மங்கையொ டினிதுறை வளநகரஞ்
செங்கயல் மிளிர்வயற் சிரபுரமே. உ

பரிந்தவன் பன்முடி யமரர்க்காகித்
திரிந்தவர் புரமவை தீயின்வேவ
வரிந்தவெஞ் சிலைபிடித் தடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே. ஈ

நீறணி மேனியன் நீள்மதியோ
டாறணி சடையினன் அணியிழையோர்
கூறணிக் கிணதுறை குளிர்நகரஞ்
சேறணி வளவயற் சிரபுரமே. ச

அரும்திறல் அவுணர்கள்அரண் அழியச்
சரம்துரந் தெரிசெய்த சங்கரனூர்
குருந்தொடு கொடிவிடும் மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே. ரி

கலியவன் மறையவன் காற்றெடுதீ
மலியவன் விண்ணெடு மண்ணும்அவன்
கொலியவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே. சு

வானமர் மதியொடு மத்தஞ்சூடித்
தானவர் புரமெய்த சைவனிடம்
கானமர் மடமயில் பெடைபயிலுங்
தேனமர் பொழிலணி சிரபுரமே. எ

மறுத்தவர் திரிபுரம் மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்
இறுத்தவன் இருஞ்சினக் காலினமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. அ

வண்ணநன் மலருறை மறையவனுங்
கண்ணனுங் கழல்தொழக் கனலுருவாய்
விண்ணுற வோங்கிய விமலனிடம்
திண்ணநன் மதிலணி சிரபுரமே. ஊ

வெற்றரை யுழல்பவர் விரிதுகிலார்
கற்றிலர் அறவுரை புறனுரைக்கப்
பற்றலர் திரிபுரம் மூன்றும்வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே. கo

அருமறை ஞானசம் பந்தன்அந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னம் மென்னடை அரிவையொ டினிதுறை அமரர்தம்
பெருமானர், மின்னு செஞ்சடை வெள்ளெருக் கம்மலர் வைத்தவர்
வேதந்தாம், பன்னும் நன்பொருள் பயந்தவர் பருமதிற் சிரபுரத் தார்
சீரார், பொன்னின் மாமலர் அடிதொழும் அடியவர் வினையொடும்
பொருந்தாரே. க

கோல மாகரி உரித்தவர் அரவொடும் ஏனக்கொம் பிளஆமை
சாலப் பூண்டுதண் மதியது சூடிய சங்கர னர்தம்மைப்
போலத் தம்மடி யார்க்குமின் பளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத் தார்மிடற் றண்ணலார் சிரபுரந் தொழவினை நில்லாவே. உ

மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத் தவங்கெட மதித்தன்று
கானத் தேதிரி வேடனு யமர்செயக் கண்டருள் புரிந்தார்பூந்
தேனைத் தேர்ந்துசேர் வண்டுகள் கிரிதருஞ் சிரபுரத் துறையெங்கள்
கோனைக் கும்பிடும் அடியரைக் கொடுவினை குற்றங்கள் குறுகாவே. ங

மாணி தன்னுயிர் மதித்துண வந்தஅக் காலனை உதைசெய்தார்
பேணி யுள்கும்மெய் யடியவர் பெருந்துயர்ப் பிணக்கறுத் தருள்செய்வார்
வேணி வெண்பிறை யுடையவர் வியன்புகழ்ச் சிரபுரத் தமர்கின்ற
ஆணிப் பொன்னினை அடிதொழும் அடியவர்க் கருவினை யடையாவே. ச

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஓண்கனல் வேள்வியில் தலைவனு மாய்நின்றூர்
சேருஞ் சந்தனம் அகிலொடு வந்திழி செழும்புனற் கோட்டாறு
வாருந் தண்புனல் சூழ்சிர புரந்தொழும் அடியவர் வருந்தாரே. ஞ

ஊழி யந்தத்தில் ஒலிகடல் ஓட்டந்திவ் வுலகங்க ளவைமூட
ஆழி யெந்தையென் றமரர்கள் சரண்புக அந்தரத் துயர்ந்தார்தாம்
யாழின் நேர்மொழி யேழையோ டினிதுறை யின்பன் எம்பெருமானூர்
வாழி மாநகர்ச் சிரபுரந் தொழுதெழ வல்வினை அடையாவே. ட

பேய்கள் பாடப்பல் பூதங்கள் துதிசெயப் பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம் ஆடும்வித் தகனூர்ஒண்
சாய்கள் தான்மிக வுடையதண் மறையவர் தகுசிர புரத்தார்தாந்
தாய்க ளாயினூர் பல்லுயிர்க் குந்தமைத் தொழுமவர் தளராரே. எ

இலங்கு பூண்வரை மார்புடை யிராவணன் எழில்கொள்வெற்
பெடுத்தன்று, கலங்கச் செய்தலுங் கண்டதங் கழலடி நெரியவைத்
தருள்செய்தார், புலங்கள் செங்கழு நீர்மலர்த் தென்றல்மன் றதனி
டைப் புகுந்தாருங், குலங்கொள் மாமறை யவர்சிர புரந்தொழு தெழ
வினை குறுகாவே. அ

வண்டு சென்றணை மலர்மிசை நான்முகன் மாயனென் றிவரன்று
கண்டு கொள்ளவோர் ஏனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்துந்தாம்
பண்டு கண்டது காணவே நீண்டனம் பசுபதி பரமேட்டி
கொண்ட செல்வத்துச் சிரபுரந் தொழுதெழ வினையவை கூடாவே. கூ

பறித்த புன்தலைக் குண்டிகைச் சமணரும் பார்மிசைத் துவர்தோய்ந்த
செறித்த சீவரத் தேரருந் தேர்கிலாத் தேவர்கள் பெருமானுர்
முறித்து மேதிகள் கரும்புதின் ருவியின் மூழ்கிட இளவாளை
வெறித்துப் பாய்வயற் சிரபுரந் தொழவினை விட்டிடும் மிகத்தானே. கo

பரசு பாணியைப் பத்தர்கள் அத்தனைப் பையர வோடக்கு
நிரைசெய் பூண்திரு மார்புடை நிமலனை நித்திலப் பெருந்தொத்தை
விரைசெய் பூம்பொழிற் சிரபுரத் தண்ணலை விண்ணவர் பெருமானைப்
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர் பரமனைப் பணிவாரே. கக

திருச்சிற்றம்பலம்.



அ. திருப்புறவம் - பண் - தக்கேசி.
திருச்சிற்றம்பலம்.

நறவநிறைவண் டறைதார்க்கொன்றை நயந்துநயனத்தால்
சுறவஞ்செறிவண் கொடியோன்உடலம் பொடியாவிழிசெய்தான்
புறவம்உறைவண் பதியாமதியார் புரமூன்றெரிசெய்த
இறைவன்அறவன் இமையோரேத்த உமையோடிருந்தானே. க

உரவன்புலியின் உரிதோலாடை புடைமேற்படநாகம்
விரவிவிரிபூங் கச்சாஅசைத்த விகிர்தன்உகிர்தன்னுற்
பொருவெங்களிறு பிளிறவுரித்துப் புறவம்பதியாக
இரவும்பகலும் இமையோரேத்த உமையோடிருந்தானே. உ

பந்தமுடைய பூதம்பாடப் பாதஞ்சிலம்பார்க்கக்
கந்தம்மல்கு குழலிகாணக் கரிகாட்டெரியாடி
அந்தண்கடல்சூழ்ந் தழகார்புறவம் பதியாஅமர்வெய்தி
எந்தம்பெருமான் இமையோரேத்த உமையோடிருந்தானே. ங

நினைவார்நினைய இனியான்பனியார் மலர்தூய்நித்தலுங்
கனையார்விடையொன் றுடையான்கங்கை திங்கள்கமழ்கொன்றை
புனைவார்சடையின் முடியான்கடல்சூழ் புறவம்பதியாக
எனையாளுடையான் இமையோரேத்த உமையோடிருந்தானே. ச

செங்கண்அரவும் நகுவெண்தலையும் முகிழ்வெண்திங்களுந்
தங்குசடையன் விடையனுடையன் சரிகோவணஆடை

பொங்குதிரைவண் கடல்சூழ்ந்தழகார் புறவம்பதியாக
எங்கும்பரவி இமையோரேத்த உமையோடிருந்தானே. ரு

பின்னுசடைகள் தாழக்கேழல் எயிறுபிறழப்போய்
அன்னநடையார் மன்னகள்தோறும் அழகாற்பலிதேர்ந்து
புன்னைமடலின் பொழில்சூழ்ந்தழகார் புறவம்பதியாக
என்னையுடையான் இமையோரேத்த உமையோடிருந்தானே. ரூ

உண்ணற்கரிய நஞ்சையுண் டொருதாழ்ந்தவர்
விண்ணிற்பொலிய அமுதமளித்த விடைசேர்கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண் டறைபூஞ்சோலைப் புறவம்பதியாக
எண்ணிற்சிறந்த இமையோரேத்த உமையோடிருந்தானே. ரு

விண்தான் அதிர வியனுர்கயிலை வேரோடெடுத்தான்தன்
திண்தாளுடலும் முடியும்நெரியச் சிறிதேயூன்றிய
புண்தான்ஒழிய அருள்செய்பெருமான் புறவம்பதியாக
எண்தாளுடையான் இமையோரேத்த உமையோடிருந்தானே. ரூ

நெடியான்நீள்தா மரைமேலயனும் நேடிக்காண்கிலாப்
படியாமேனி யுடையான்பவள வரைபோல்திருமார்பிற்
பொடியார்கோலம் உடையான்கடல்சூழ் புறவம்பதியாக
இடியார்முழவார் இமையோரேத்த உமையோடிருந்தானே. ரூ

ஆனும்மயிலின் பீலியமணர் அறிவில்சிறுதேரர்
கோனும்மொழிகள் ஒழியக்குழுவுந் தழனும்எழில்வானும்
போனும்வடிவும் உடையான்கடல்சூழ் புறவம்பதியாக
ஏனம்வகையால் இமையோரேத்த உமையோடிருந்தானே. ரூ

பொன்னுர்மாடம் நீடுஞ்செல்வப் புறவம்பதியாக
மின்னுரிடையாள் உமையாளோடும் இருந்தவிமலனைத்
தன்னுர்வஞ்செய் தமிழின்விரகன் உரைத்ததமிழ்மாலை
பன்னுள்பாடி யாடப்பிரியார் பரலோகத்தானே. ரூ

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எய்யாவென்றித் தானவரூர்மூன் றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந் திருமேனிச்
செய்யான்வெண்ணீ றணிவான்திகழ்பொற் பதிபோலும்
பொய்யாநாவின் அந்தணர்வாழும் புறவம்மே. க

மாதொருபாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற
காதனென்றேத்தும் நம்பான்வைகுந் நகர்போலும்
மாதவிமேய வண்டிசைபாட் மயிலாடப்
போதலர்செம்பொன் புன்னைகொடுக்கும் புறவம்மே. ௨

வற்றாநதியும் மதியும்பொதியுஞ் சடைமேலே
புற்றாடரவின் படமாடவுமிப் புவனிக்கோர்
பற்றாயிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொற்றாமரையின் பொய்கைநிலாவும் புறவம்மே. ௩

துன்னார்புரமும் பிரமன்சிரமுந் துணிசெய்து
மின்னார்சடைமேல் அரவும்மதியும் விளையாடப்
பன்னாளிடுமின் பலியென்றடைவார் பதிபோலும்
பொன்னார்புரிநூல் அந்தணர்வாழும் புறவம்மே. ௪

தேவாஅரனே சரணென்றிமையோர் திசைதோறுங்
காவாயென்று வந்தடையக்கார் விடம்உண்டு
பாவார்மறையும் பயில்வோருறையும் பதிபோலும்
பூவார்சோலைச் சோலைசூலாவும் புறவம்மே. ௫

கற்றறிவெய்திக் காமன்முன்னாகம் முகவெல்லாம்
அற்றரனேநின் அடிசரணென்னும் அடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர் பதியென்பர்
பொற்றிகழ்மாடத் தொளிகள்நிலாவும் புறவம்மே. ௬

எண்திசையோரஞ் சிடுவகைகார்சேர் வரையென்னக்
கொண்டெழுகோல முகில்போற்பெரிய கரிதன்னைப்
பண்டுரிசெய்தான் பாவனைசெய்யும் பதியென்பர்
புண்டரிகத்தேதான் போன்மறையோர்சேர் புறவம்மே. ௭

பரக்குந்தொல்சீர்த் தேவர்கள்சேனைப் பெளவத்தைத்
துரக்குஞ்செந்தீப் போலமர்செய்யுந் தொழில்மேவும்
அரக்கன்திண்தோள் அழிவித்தானைக் காலத்திற்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர் புறவம்மே. ௮

மீத்திகழண்டந் தந்தயனோடு மிகுமாலும்
மூர்த்தியைநாடிக் காணிவொணாது மூயல்விட்டாங்
கேத்தவெளிப்பா டெய்தியவன்றன் இடமென்பர்
பூத்திகழ்சோலைத் தென்றல்உலாவும் புறவம்மே. ௯

வையகம்நீர்தீ வாயுவும்விண்ணும் முதலானுன்
மெய்யலதேசர் உண்டிலையென்றே நின்றேதகம்
கையினிலுண்போர் காணிவொணாதான் நகரென்பர்
பொய்யகமில்லாப் பூசுரர்வாழும் புறவம்மே. ௧0

பொன்னியல்மாடப் புரிசைநிலாவும் புறவத்து
மன்னியஈசன் சேவடிகாளும் பணிகின்ற
தன்னியல்பில்லாச் சண்பையர்கோன்சீர்ச் சம்பந்தன்
இன்னிசையீரைந் தேத்தவல்லோர்சட் கிடர்போமே. கக

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணிய லுருவினர் பெருகிய புனல்விர வியபிறைக்
கண்ணியர் கடிநடை விடையினர் கழல்தொழும் அடியவர்
நண்ணிய பிணிகெட அருள்புரி பவர்நணு குயர்பதி
புண்ணிய மறையவர் நிறைபுக ழொலிமலி புறவமே. க

கொக்குடை யிறகொடு பிறையொடு குளிர்சடை முடியினர்
அக்குடை வடமுமொர் அரவமு மலரரை மிசையினில்
திக்குடை மருவிய வுருவினர் திகழ்மலை மகளொடும்
புக்குட னுறைவது புதுமலர் விரைகமழ் புறவமே. உ

கொங்கியல் சுரிகுழல் வரிவளை யிளமுலை யுமையொரு
பங்கியல் திருவுரு வுடையவர் பரசுவொ டிரலிமெய்
தங்கிய கரதல முடையவர் விடையவ ருறைபதி
பொங்கிய பொருகடல் கொளவதன் மிசையுயர் புறவமே. ங

மாதவம் உடைமறை யவனுயிர் கொளவரும் மறலியை
மேதகு திருவடி யிறையுற வுயிரது விலகினர்
சாதக வுருவியல் கானிடை யுமைவெரு வுறவரு
போதக வுரியதள் மருவினர் உறைபதி புறவமே. ச

காமனை யழல்கொள விழிசெய்து கருதலர் கடிமதில்
தூமம துறவிறல் சுடர்கொளு வியஇறை தொகுபதி
ஓமமொ டுயர்மறை பிறவிய வகைதனெ டொளிகெழு
பூமகன் அலரொடு புனல்கொடு வழிபடு புறவமே. ஞ

சொல்நய முடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
பின்னையர் நடுவுணர் பெருமையர் திருவடி பேணிட
முன்னைய முதல்வினை யறஅரு ளினருறை முதுபதி
புன்னையின் முகைநகி தொகுதியவிழ் பொழிலணி புறவமே. கூ

வரிதரு புலியத ளுடையினர் மழுவெறி படையினர்
பிரிதரு நகுதலை வடமுடி மிசையணி பெருமையர்
எரிதரு முருவினர் இமையவர் தொழுவதொ ரியல்பினர்
புரிதரு குழலுமை யொடுமினி துறைபதி புறவமே. எ

வசிதரு முருவொடு மலர்தலை யுலகினை வலிசெயும்
நிசிசர னுடலொடு நெடுமுடி யொருபதும் நெரிவுற
ஒசிதர வொருவிரல் நிறுவினர் ஒளிவளர் வெளிபொடி
பொசிதரு திருவுரு வுடையவர் உறைபதி புறவமே. அ

தேனகம் மருவிய செறிதரு முளரிசெய் தவிசினில்
ஊனகம் மருவிய புலன்நுகர் வுணர்வுடை யொருவனும்
வானகம் வரையகம் மறிகடல் நிலனெனும் எழுவகைப்
போனகம் மருவினன் அறிவரி யவர்பதி புறவமே. கூ

கோசர நுகர்பவர் கொழுகிய துவரன துகிலினர்
பாசுர வினைதரு பளகர்கள் பழிதரு மொழியினர்
நீசரை விடுமினி நினைவுறு நிமலர்த முறைபதி
பூசுரர் மறைபயில் நிறைபுகழ் ஒலிமலி புறவமே. கo

போதியல் பொழிலணி புறவநன் னகருறை புனிதனை
வேதிய ரதிபதி மிகுதலை தமிழ்கெழு விரகினன்
ஓதிய வொருபது மூரியதொ ரிசைகொள வுரைசெயும்
நீதிய ரவரிரு நிலனிடை நிகழ்தரு பிறவியே. கக

திருச்சிற்றம்பலம்.

கூ. திருச்சண்பைநகர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பங்கமேறு மதிசேர்சடையார் விடையார்பலவேதம்
அங்கமாறும் மறைநான்கவையும் ஆனைர்மீனருரும்
வங்கம்மேவு கடல்வாழ்பரதர் மணிக்கேதுணைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ் சண்பைநகராரே. க

சூதகஞ்சேர் கொங்கையாளோர் பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர் புண்ணியனூர் பூதகணநாதர்
மேதகஞ்சேர் மேகமந்தண் சோலையில்விண்ணூர்ந்த
சாதகஞ்சேர் பாலைநீர்சேர் சண்பைநகராரே. உ

மகரத்தாடு கொடியோனுடலம் பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத் தேவிக்கருள்செய் நீலகண்டனூர்
பகரத்தாரா வன்னம்பகன்றில் பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னை தாழைப்பொழில்சேர் சண்பைநகராரே. ங

மொய்வல்லசுரர் தேவர்கடைந்த முழுநஞ்சதுவுண்ட
தெய்வச்செய்ய வுருவர்கரிய கண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியின் உரியர்காதலாற்
சைவர்பாசு பதர்கள்வணங்குஞ் சண்பைநகராரே. ச

கலமார்கடலுள் விடமுண்டமரர்க் கமுதம்அருள்செய்த
குலமார்கயிலைக் குன்றதுடைய கொல்லையெருதேறி
நலமார்வெள்ளை நாளிகேரம் விரியாகறும்பாலை
சலமார்கரியின் மருப்புக்காட்டுஞ் சண்பைநகராரே. ரு

மாகரஞ்சேர் அத்தியின்தோல் போர்த்துமெய்ம்மாலான்
சூகரஞ்சேர் எயிறுபூண்ட சோதியன்மேதக்க
ஆகரஞ்சேர் இப்பிமுத்தை அந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்துஞ் சண்பைநகராரே சு,எ

இருளைப்புரையும் நிறத்திலரக்கன் றனையீடழிவித்து
அருளைச்செய்யும் அம்மான்ஏரா ரந்தண்கந்தத்தின்
மருளைச்சுரும்பு பாடியளக்கர் வரையார்திரைக்கையால்
தரளத்தோடு பவளம்ஈனுஞ் சண்பைநகராரே. அ

மண்தான்முழுதும் உண்டமாலும் மலர்மிசைமேலயனும்
எண்தானறியா வண்ணம்நின்ற இறைவன்மறையோதி
தண்டார்குவளைக் கள்ளருந்தித் தாமரைத்தாதின்மேற்
பண்தான்கொண்டு வண்டுபாடுஞ் சண்பைநகராரே. கூ

போதியாரும் பிண்டியாரும் புகழலசொன்னூலும்
நீதியாகக் கொண்டங்கருளும் நிமலன்இருதான்கின்
மாதிசித்தார் மாமறையின் மன்னியதொன்னூலர்
சாதிகீத வர்த்தமானர் சண்பைநகராரே. கஎ

வந்தியோடு பூசையல்லாப் போழ்தின்மறைபேசிச்
சந்திபோதிற் சமாதிசெய்புஞ் சண்பைநகர்மேய
அந்திவண்ணன் தன்னையழகார் ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதிசேர்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானனிறைஞ்சியிமையோர்
வந்துதுதி செய்யுவளர் தூபமொடு தீபம்மலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்யஅமர் கின்றஅழகன்
சந்தம்மலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே. க

அங்கம்விரி துத்தியர வாமைவிர வாரம்அமர் மார்பிலழகன்
பங்கயழ கத்தரிவை யோடுபிரி யாதுபயில் கின்றபதிதான்
பொங்குபர வைத்திரைகொ ணர்ந்துபவ ளத்திரள்பொ ருந்தவயலே
சங்குபுரி யிப்பிதர ளத்திரள்பி றங்கொளிகொள் சண்பைநகரே. உ

போழும்மதி தாழும்நதி பொங்கரவு தங்குபுரி புன்சடையினன்
யாழின்மொழி மாழைவிழி யேழையிள மாதினெடி ருந்தபதிதான்
வாழைவளர் ஞாழல்மகிழ் மன்னுபுனை துன்னுபொழில் மாடமடலார்
தாழைமுகிழ் வேழமிகு தந்தமென வுந்துதகு சண்பைநகமேர. கூ

கொட்டமுழ விட்டவடி வட்டணைகள் கட்டநட மாடிகுலவும்
பட்டநுதல் கட்டுமலர் மட்டுமலி பாவையொடு மேவுபதிதான்
வட்டமதி தட்டுபொழி லுள்தமது வாய்மைவழு வாதமொழியார்
சட்டகலை யெட்டுமரு வெட்டும்வளர் தத்தைபயில் சண்பைநகமேர. ச

பணங்கெழுவு பாடலினெ டாடல்பிரி யாதபரமேட்டிபகவன்
அணங்கெழுவு பாகமுடை யாகமுடை யன்பர்பெரு மானதிடமாம்
இணங்கெழுவி யாடுகொடி மாடமதில் நீடுவிரை யார்புறவெலாந்
தணங்கெழுவி யேடலர்கொள் தாமரையில் அன்னம்வளர் சண்பைநகமேர.

பாலனுயிர் மேலணவு காலனுயிர் பாறவுதை செய்தபரமன்
ஆலுமயில் போலியலி ஆயிழைத நேடும்அமர் வெய்துமிடமாம்
ஏலமலி சோலையின வண்டுமலர் கிண்டிநற வுண்டிசைசெயச்
சாலிவயல் கோலமலி சேலுகள நீலம்வளர் சண்பைநகமேர. சு

விண்பொய்அத னுல்மழைவி ழாதொழியி னும்விளைவு தான்மிகவுடை
மண்பொய்அத னுல்வளமி லாதொழியி னுந்தமது வண்மைவழுவார்
உண்பகர வாருலகி னூழிபல தோறும்நில யானபதிதான்
சண்பைநகர் ஈசனடி தாழுமடி யார்தமது தன்மையதுமேவ. எ

வரைக்குலம கட்கொரும றுக்கம்வரு வித்தமதி யில்வலியுடை
அரக்கனது ரக்கரசி ரத்துறவ டர்த்தருள்பு ரிந்தஅழகன்
இருக்கையத ருக்கன்முத லானஇமை யோர்குழுமி யேழ்விழவினில்
தருக்குலநெ ருக்குமலி தண்பொழில்கள் கொண்டல்அன சண்பைநகமேர

நீலவரை போலநிகழ் கேழலுரு நீள்பறவை நேருருவமாம்
மாலுமல ரானும்அறி யாமைவளர் தீயுருவ மானவரதன்
சேலும்இன வேலும்அன கண்ணியொடு நண்ணுபதி சூழ்புறவெலாஞ்
சாலிமலி சோலைகுயில் புள்ளினெடு கிள்ளைபயில் சண்பைநகமேர. கூ

போதியர்கள் பிண்டியர்கள் போதுவழு வாதவகை யுண்டுபலபொய்
ஓதியவர் கொண்டுசெய்வ தொன்றுமில நன்றதுணர் வீருரைமினே
ஆதியெமை யாளுடைய அரிவையொடு பிரிவிலி அமர்ந்தபதிதான்
சாதிமணி தெண்திரைகொ ணர்ந்துவயல் புகளறிகொள் சண்பைநகமேர.

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு சங்கரன்ம கிழ்ந்தமருபூர்
சாரின்முரல் தெண்கடல்வி சும்புறமு முங்கொலிகொள் சண்பைநகர்
பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ் ஞானசம் பந்தனுரைசெய் [மேல்
சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர் சேர்வர்சிவ லோகநெறியே. கக

திருச்சிற்றம்பலம்.

கo. சீகாழி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசர
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே. க

எந்தை யென்றங் கிமையோர் புகுந்தீண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமல ரவர்போலாம்
அந்தி நட்டம் ஆடும் அடிகளே. உ

தேனை வென்ற மொழியா ளொருபாகங்
கான மான்கைக் கொண்ட காழியார்
வான மோங்கு கோயி லவர்போலாம்
ஆன இன்பம் ஆடும் அடிகளே. ங

மாணி வென்றிக் காலன் மடியவே
காணி மாணிக் களித்த காழியார்
நாணர் வாளி தொட்டா ரவர்போலாம்
பேணர் புரங்கள் அட்ட பெருமானே. ச

மாடே ஓதம் எறிய வயற்செங்கெல்
காடே றிச்சங் கீனுங் காழியார்
வாடா மலராள் பங்க ரவர்போலாம்
ஏடார் புரமூன் றெரித்த இறைவரே. ஞ

கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலுஞ்
செங்கண் அரக்கர் புரத்தை யெரித்தாரே. ரு

கொல்லை விடைமூன் பூதங் குனித்தாடுங்
கல்ல வடத்தை யுகப்பார் காழியார்
அல்ல விடத்து நடந்தா ரவர்போலாம்
பல்ல விடத்தும் பயிலும் பரமரே. எ

எடுத்த அரக்கன் கெரிய விரலூன்றிக்
கடுத்த முரிய அடர்த்தார் காழியார்
எடுத்த பாடற் கிரங்கு மவர்போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே. அ

ஆற்ற லுடைய அரியும் பிரமனுந்
தோற்றங் காணு வென்றிக் காழியார்
ஏற்ற மேறங் கேறு மவர்போலாங்
கூற்றம் அறுகக் குமைத்த குழகரே. கூ

பெருக்கப் பிதற்றுஞ் சமணர் சாக்கியர்
கரச்சும் உரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த இறைவ ரவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத் தையரே. கo

காரார் வயல்சூழ் காழிக் கோன்றனைச்
சீரார் ஞான சம்பந் தன்சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏரார் வானத் தினிதா இருப்பரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கராகம்.
திருச்சிற்றம்பலம்.

அடமே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே. க

திரையார் புனல்சூ டியசெல்வன்
வரையார் மகளோ டுமகிழ்ந்தான்
கரையார் புனல்சூழ் தருகாழி
நிரையார் மலர்தூ வுமின்இன்றே. உ

இடியார் குரல்ஏ றுடையெந்தை
தூடியா ரிடையா ளொடுதுன்னுங்
கடியார் பொழில்சூழ் தருகாழி
அடியார் அறியார் அவலம்மே. ஙூ

ஒளியார் விடமுண் டவொருவன்
அளியார் குழல்மங் கையொடன்பாய்க்
களியார் பொழில்சூழ் தருகாழி
எளிதாம் அதுகண் டவரின்பே. ச

பனியார் மலரார் தருபாதன்
முனிதா னுமையோ டுமுயங்கிக்
கனியார் பொழில்சூழ் தருகாழி
இனிதாம் அதுகண் டவரீடே. ஞ

கொலையார் தருகூற் றழுதைதத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதேத்த் தியகாழி
தலையால் தொழுவார் தலையாரே. கூ

திருவார் சிலையால் எயிலெய்து
உருவார் உமையோ டுடனுனன்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே. எ

அரக்கன் வலியொல் கஅடர்த்து
வரைக்கு மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுநிணைந்தே. அ

இருவர்க் கெரியா கிநிமிர்ந்தான்
உருவிற் பெரியா ளொடுசேருங்
கருநற் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் விணைமாய்ந்தே. கூ

சமண்சாக் கியர்தாம் அலர்தூற்ற
அமைந்தான் உமையோ டுடன்அன்பாய்க்
கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல்தொண்டே. க0

நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநிணைந் தவர்பாடல்
வலரா னவர்வான் அடைவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்றுன் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே. க

துளிவெண் தேன்பாயும் இதழி தூமத்தந்
தெளிவெண் திங்கள்மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் தலைமாலை உகந்தா னூர்போலுங்
களிவண் டியாழ்செய்யுங் காழிந் நகர்தானே. உ

ஆலக் கோலத்தின் நஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் தன்மையால்
பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தால்
காலற் காய்ந்தாணூர் காழிந் நகர்தானே. ரு, ச, ரி, சு, எ

இரவில் திரிவோர்கட் கிறைதோ ளிணைபத்தும்
நிரவிக் கரவாநே நேர்ந்தா னிடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பால் நீறணிவோர்க்குங்
கரவில் தடக்கையார் காழிந் நகர்தானே. அ

மாலும் பிரமனும் அறியா மாட்சியான்
தோலும் புரிதூலுந் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலும் இரந்தோர்க் கெந்நாளுங்
காலம் பகராதார் காழிந் நகர்தானே. கூ

தங்கை யிடவுண்பார் தாழ்சீ வரத்தார்கள்
பெங்கை புணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை யொருபாகம் மகிழ்ந்தான் மலர்ச்சென்னிக்
கங்கை தரித்தாணூர் காழிந் நகர்தானே. கO

வாசம் கமழ்காழி மதிசெஞ் சடைவைத்த
ஈசன் நகர்தன்னை யிணையில் சம்பந்தன்
பேசுந் தமிழ்வல்லோர் பெருநீ ருலகத்துப்
பாசந் தனையற்றுப் பழியில் புகழாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உரவார்கலியின் கவிதைப்புலவர்க் கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங் கலிக்காழி
அரவார்அரையா அவுணர்புரமூன் றெரிசெய்த
சரவாளன்பார் தத்துவஞானத் தலையாரே.

மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய் முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீ னுங் கலிக்காழி
மைசேர்கண்டத் தெண்தோள்முக்கண் மறையோனை
ஐயாளன்பார்க் கல்லல்களான அடையாவே. உ

இளகக்கமலத் தீன்களியங்குங் கழிசூழக்
களகப்புரிசைக் கவினுர்சாருங் கலிக்காழி
அளகத்திருநல் துதலிபங்கா அரனேயென்
றுளகப்பாடும் அடியார்க்குறுநோய் அடையாவே. ங

எண்ணுர்முத்தம் ஈன்றுமரகதம் போற்காய்த்துக்
கண்ணுர்கமுகு பவளம்பழுக்குங் கலிக்காழிப்
பெண்ணேர்பாகா பித்தாபிரானே யென்பார்க்கு
நண்ணுவினைகள் நாள்தொறும்இன்பந் நணுகும்மே. ச

மழையார்சாரற் செம்புனல்வந்தங் கடிவருடக்
கழையார்கரும்பு கண்வளர்சோலைக் கலிக்காழி
உழையார்கரவா வுமையாள்கணவா வொளிர்சங்கக்
குழையாளன்று கூறவல்லார்கள் குணவோரே. ரு

குறியார்திரைகள் வரைகள்நின்றுங் கோட்டாறு
கறியார்கழிசம் பிரசங்கொடுக்குங் கலிக்காழி
வெறியார்கொன்றைச் சடையாவிடையா என்பாரை
அறியாவினைகள் அருநோய்பாவம் அடையாவே. கூ, எ

உலங்கொள்சங்கத் தார்கலியோதத் துதையுண்டு
கலங்கள்வந்து கார்வயலேறுங் கலிக்காழி
இலங்கைமன்னன் தன்னையிடர்கண் டருள்செய்த
சலங்கொள்சென்னி மன்னுஎன்னத் தவமாமே. அ

ஆவிக்கமலத் தன்னம்இயங்குங் கழிசூழக்
காவிக்கண்ணுர் மங்கலம்ஓவாக் கலிக்காழிப்
பூவில்மேதான்றும் புத்தேளொடுமா லவன்தானும்
மேவிப்பரவும் அரசேயென்ன வினைபோமே. கூ

மலையார்மாடம் நீடியார்இஞ்சி மஞ்சாருங்
கலையார்மதியஞ் சேர்தரும்அந்தண் கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்கென்றும் அறிவொண்ணு
நிலையாயென்னத் தொல்வினையாய நில்லாவே. கo

வடிகொள்வாவிச் செங்கழுநீரிற் கொங்காடிக்
கடிகொடென்றன் முன்றினில்வைகுங் கலிக்காழி
அடிகள்தம்மை அந்தமில்ஞான சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர்தம்மேற் பழிபோமே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.
திருச்சிற்றம்பலம்.

நல்லாணை நான்மறை யோடிய லாறங்கம்
வல்லாணை வல்லவர் பான்மலிந் தோங்கிய
சொல்லாணைத் தொன்மதிற் காழியே கோயிலாம்
இல்லாணை யேத்தநின் றூர்க்குள தின்பமே. க

நம்மானம் மாற்றி நமக்கரு ளாய்நின்ற
பெம்மானைப் பேயுடன் ஆடல்பு ரிந்தானை
அம்மானை யந்தணர் சேரும ணிகாழி
எம்மானை யேத்தவல் லார்க்கிட ரில்லையே. உ

அருந்தானை யன்புசெய் தேத்தகில் லார்பாற்
பொருந்தானைப் பொய்யடி மைத்தொழில் செய்வாருள்
விருந்தானை வேதிய ரோதிமி டைகாழி
இருந்தானை யேத்துமின் நும்வினை யேகவே. ஙூ

புற்றரவ ணைப்புற்ற ரவம்அரை யின்மிசைச்
சுற்றரவ ணைத்தொண்டுசெய் வாரவர் தம்மொடும்
அற்றரவ அந்தணர் காழி அமர்கோயில்
பற்றரவப் பற்றிநின் றூர்க்கில்லை பாவமே. ச

நெதியான நெஞ்சிடங் கொள்ளநி னைவார்தம்
விதியான விண்ணவர் தாம்வியந் தேத்திய
கதியானைக் காருல வும்பொழிற் காழியாம்
பதியானைப் பாடுமின் நும்வினை பாறவே. ஞ

செப்பான மென்முலை யாளைத் திகழ்மேனி
வைப்பானை வார்கழ லேத்தி நினைவார்தம்
ஒப்பானை ஓதம் உலாவு கடற்காழி
மெய்ப்பானை மேவிய மாந்தர் வியந்தாரே. ரு

துன்பானைத் துன்பம் அழித்தரு ளாக்கிய
இன்பானை யேழிசை யின்னிலை பேணுவார்
அன்பானை அணிபொழிற் காழிந கர்மேய
நம்பானை நண்ணவல் லார்வினை நாசமே. எ

குன்றனைக் குன்றெடுத் தான்புயம் நாலைந்தும்
வென்றனை மென்மல ராளைமு மால்தேட
நின்றனை நேரிழை யாளொடுங் காழியுள்
நன்றனை நம்பெரு மானை நணுகுமே. அ

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டுவெ குளேன்மின்
பூவாய கொன்றையி னானைப் புனற்காழிக்
கோவாய கொள்கையி னடி கூறுமே. கூ, கo

கழியார்சீ ரோதம்மல் குங்கடற் காழியுள்
ஒழியாது கோயில்கொண் டானை யுகந்துள்கித்
தழியார்சொல் ஞானசம் பந்தன் தமிழார
மொழிவார்கள் மூவுல கும்பெறு வார்களே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணின் நேர்மொழி மங்கை மார்பலர்
பாடி யாடிய வோசை நாள்தொறுங்
கண்ணின் நேரயலே பொலியுங் கடற்காழிப்
பெண்ணின் நேரொரு பங்கு டைப்பெரு
மாணை யெம்பெரு மான்என் றென்றுன் னும்
அண்ண லாரடியார் அருளாலுங் குறைவிலமே. க

மொண்ட லம்பிய வார்தி ரைக்கடல்
மோதி மீதெதி ரங்கம் வங்கமுங்
கண்டலம் புடைசூழ் வயல்சேர் கலிக்காழி
வண்ட லம்பிய கொன்றை யானடி
வாழ்த்தி யேத்திய மாந்தர் தம்வினை
விண்டல் அங்கெளி தாம் அதுநல் விதியாமே. உ

நாடெ லாமொளி யெய்த நல்லவர்
நன்று மேத்தி வணங்கு வார்பொழிற்
காடெ லாம்மலர் தேன்துளிக்குங் கடற்காழித்
தோடு லாவிய காது ளாய்சுரி
சங்க வெண்குழை யாயென் றென்றுன் னும்
வேடங் கொண்டவர்கள் வினைநீங்க லுற்றுமே. ங

மையி னுர்பொழில் சூழ நீழலில்
வாச மார்மது மல்க நாள்தொறுங்
கையி னுர்மலர் கொண்டெழுவார் கலிக்காழி
ஐய னேயர னேயென் றுதரித்
தோதி நீதியு ளோநி னைப்பவர்
உய்யு மாறுலகில் உயர்ந்தாரி னுள்ளாரே. ச

மலிக டிந்திரை மேல்நி மிர்ந்தெதிர்
வந்து வந்தொளிர் நித்தி லம்விழக்
கலிக டிந்தகையார் மருவுங் கலிக்காழி
வலிய காலனை வீட்டி மாணிதன்
இன்னு யிரளித் தானை வாழ்த்திட
மெலியுந் தினைனோ யவைமேவுவர் வீடே. ஞ

மற்றும் இவ்வுல கத்து ளோர்களும்
வானு ளோர்களும் வந்து வைகலுங்
கற்ற சிந்தையராய்க் கருதுங் கலிக்காழி
நெற்றி மேலமர் கண்ணி னுனை
நினைந்தி ருந்திசை பாடு வார்வினை
செற்றமாந் தரெனத் தெளிமின்கள் சிந்தையுளே. ட

தான்ந லம்புரை வேதிய னொடு
தக்க மாதவர் தாந்தொ ழப்பயில்
கானலின் விரைசேர விம்மூங் கலிக்காழி
ஊனு ளாருயிர் வாழ்க்கை யாயுற
வாகி நின்றவொ ருவனே யென்றென்
றூனலங் கொடுய்ப்பார் அருள்வேந்த ராவாரே. எ

மைத்த வண்டெழு சோலை யாலைகள்
சாலி சேர்வய லார வைகலுங்
கத்து வார்கடல் சென்றுலவுங் கலிக்காழி
அத்த னேயர னேய ரக்கனை
யன்ற டர்த்துகந் தாயு னகழல்
பத்தராய்ப் பரவும் பயன்ஈங்கு நல்காயே. அ

பரும ராமொடு தெங்கு பைங்கத
லிப்ப ருங்கனி யுண்ணு மந்திகள்
கருவா லுகளும் வயல்சூழ் கலிக்காழித்
திருவின் ஞாயக னுய மாலொடு
செய்ய மாமலர்ச் செல்வ னுகிய
இருவர் காண்பரியா னென வுத்துத லின்பமே. கூ

பிண்ட முண்டுழல் வார்க ளும்பிரி
யாது வண்துகி லாடை போர்த்தவர்
கண்டு சேரகிலா ரழகார் கலிக்காழித்
தொண்டை வாயுமை யோடு கூடிய
வேட னேசுட லூப்பொ டியணி
அண்டவா ணனென்பார்க் கடையா அல்லல்தானே. கo

பெயரெ னும்மிவை பன்னி ரண்டினும்
உண்டெ னப்பெயர் பெற்ற வூர்திகழ்
கயலுலாம் வயல்சூழ்ந் தழகார் கலிக்காழி
நயன டன்கழ லேத்தி வாழ்த்திய
ஞான சம்பந்தன் செந்த மிழ்முறை
உயருமா மொழிவா ருலகத் துயர்ந்தாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலங்கொள் முத்தும் மணியும் அணியுங் திரளோதங்
கலங்கள் தன்னிற் கொண்டு கரைசேர் கலிக்காழி
வலங்கொள் மழுவொன் றுடையாய் விடையா யென்னுத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க் கடையா அருநோய்யே. க

ஊரார் உவரிச் சங்கம் வங்கங் கொடுவந்து
காரார் ஓதங் கரைமேல் உயர்த்துங் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணு என்றென்று
பேராயிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே. உ

வடிகொள் பொழிலின் மழலே வரிவண் டிசைசெய்யக்
கடிகொள் போதில் தென்றல் அணையுங் கலிக்காழி
முடிகொள் சடையாய் முதல்வா என்று முயன்றேத்தி
அடிகை தொழுவார்க் கில்லை அல்லல் அவலமே. ஊ

மணிக்கே யேற வளஞ்செய் பவளம் வளர்முத்தங்
கணைக்குங் கடலுள் ஓதம் ஏறுங் கலிக்காழிப்
பணிக்கைப் பகட்டூர் உரியாய் பெரியா யெனப்பேணி
நினைக்க வல்ல அடியார் நெஞ்சில் நல்லாரே. ச

பரிதி யியங்கும் பாரிற் சீரார் பணியாலே
கருதி விண்ணோர் மண்ணோர் விருப்புங் கலிக்காழிச்
சுருதி மறைநான் கான செம்மை தருவாணக்
கருதி யெழுமின் வழுவா வண்ணந் துயர்போமே. ஞ

மந்தம் மருவும் பொழிலில் எழிலார் மதுவுண்டு
கந்தம் மருவ வரிவண் டிசைசெய் கலிக்காழிப்
பந்தம் நீங்க அருளும் பரனே யெனவுத்திச்
சிந்தை செய்வார் செம்மை நீங்கா திருப்பாரே. சு

புயலார் பூமி நாதம் ஓதிப் புகழ்மல்கக்
கயலார் கண்ணார் பண்ணார் ஒலிசெய் கலிக்காழிப்
பயில்வான் தன்னைப் பத்தி யாரத் தொழுதேத்த
முயல்வார் தம்மேல் வெம்மைக் கூற்றம் முடிகாதே. எ

அரக்கன் முடிதோள் நெரிய அடர்த்தான் அடியார்க்குக்
கரக்க கில்லா தருள்செய் பெருமான் கலிக்காழிப்
பரக்கும் புகழான் தன்னை யேத்திப் பணிவார்மேல்
பெருக்கும் இன்பந் துன்ப மான பிணிபோமே. அ

மாணு யுலகங் கொண்ட மாலும் மலரோனுங்
காணு வண்ணம் எரியாய் நிமிர்ந்தான் கலிக்காழிப்
பூணுர் முலையாள் பங்கத் தானைப் புகழ்ந்தேத்திக்
கோணு நெஞ்சம் உடையார்க் கில்லைக் குற்றமே. கூ

அஞ்சி அல்லல் மொழிந்து திரிவார் அமண்ஆதர்
கஞ்சி காலை யுண்பார்க் கரியான் கலிக்காழித்
தஞ்ச மாய தலைவன் தன்னை நினைவார்கள்
துஞ்ச லில்லா நல்ல வுலகம் பெறுவாரே. கo

ஊழி யாய பாரில் ஓங்கும் உயர்செல்வக்
காழி யீசன் கழலே பேணுஞ் சம்பந்தன்
தாழும் மனத்தால் உரைத்த தமிழ்கள் இவைவல்லார்
வாழி நீங்கா வானே ருலகில் மகிழ்வாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்இயங்கு மதிக்கண்ணி யான்விரி புஞ்சடைப்
பெண்நயங்கொள் திருமேனி யான்பெரு மான்அனற்
கண்நயங்கொள் திருநெற்றி யான்கலிக் காழியுள்
மண்நயங்கொள் மறையாளர் ஏத்துமலர்ப் பாதனே. க

வலிய காலனுயிர் வீட்டினன்மட வாளொடும்
பலிவி ருப்பியதார் கையினன்பர மேட்டியான்
கலியை வென்றமறை யாளர்தங்கலிக் காழியுள்
நலிய வந்தவினை தீர்த்துகந்தவ னம்பனே. உ

சுற்ற லாநற்புலித் தோலசைத்தயன் வெண்தலைத்
துற்ற லாயதொரு கொள்கையான்சுடு நீற்றினன்
கற்றல் கேட்டலுடை யார்கள்வாழ்கலிக் காழியுள்
மற்ற யங்குதிரள் தோளெம்மைந்தனவன் நல்லனே. ஊ

பல்ல யங்குதலை யேந்தினன்படு கானிடை
மல்ல யங்குதிரள் தோள்களாரநட மாடியுங்
கல்ல யங்குதிரை சூழ்நீள்கலிக் காழியுள்
தொல்ல யங்குபுகழ் பேணநின்றசுடர் வண்ணனே. ச

தூர யங்கொள்திரு மேனியிற்பொடிப் பூசிப்போய்
நாக யங்கொள்மறை யோதிமாதொரு பாகமாக்
கான யங்கொள்புனல் வாசமார்கலிக் காழியுள்
தேன யங்கொள்முடி ஆனைந்தாடிய செல்வனே. ஙி

சுழியி லங்கும்புனற் கங்கையாள்சடை யாகவே
மொழியி லங்கும்மட மங்கைபாகம் உகந்தவன்
கழியி லங்குங்கடல் சூழுந்தண்கலிக் காழியுள்
பழியி லங்குந்துய மொன்றிலாப்பர மேட்டியே. சூ

முடியி லங்கும்உயர் சிந்தையான்முனி வர்தொழ
அடியி லங்குங்கழ லார்க்கமேவயன லேந்தியுங்
கடியி லங்கும்பொழில் சூழுந்தண்கலிக் காழியுள்
கொடியி லங்கும்இடை யாளொடுங்குடி கொண்டதே. எ

வல்ல ரக்கன்வரை பேர்க்கவந்தவன் தோள்முடி
கல்ல ரக்கிவ்விறல் வாட்டிஞன்கலிக் காழியுள்
நல்லொ ருக்கியதொர் சிந்தையார்மலர் தூவவே
தொல்லி ருக்கும்மறை யேத்துகந்துடன் வாழுமே. அ

மருவும் நான்மறை யோனும்மாமணி வண்ணனும்
இருவர் கூடியிசைந் தேத்தவேயெரி யான்றனார்
வெருவ நின்றதிரை யோதம்வராவியன் முத்தவை
கருவை யார்வயற் சங்குசேர்கலிக் காழியே. கூ

நன்றி யொன்றுமுணா ராதவன்சமண் சாக்கியர்
அன்றி யங்கவர் சொன்னசொல்லவை கொள்கிலான்
கன்று மேதியினங் கானல்வாழ்கலிக் காழியுள்
வென்றி சேர்வியன் கோயில்கொண்டவிடை யாளனே. கo

கண்ணும் மூன்றுமுடை யாதிவாழ்கலிக் காழியுள்
அண்ண லந்தண்ணருள் பேணிஞானசம் பந்தன்சொல்
வண்ணம் மூன்றுந்தமி ழில்தெரிந்திசை பாடுவார்
விண்ணும் மண்ணும்விரி கின்றதொல்புக ழாளரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்கு வெண்புரி வளரும் பொற்புடை மார்பன்எம் பெருமான்
செங்கண் ஆடர வாட்டுஞ் செல்வனெம் சிவனுறை கோயில்
பங்க மில்பல மறைகள் வல்லவர் பத்தர்கள் பரவுந்
தங்கு வெண்திரைக் கானல் தண்வயற் காழிநன் னகரே. க

தேவர் தானவர் பரந்து திண்வரை மால்கடல் நிறுவி
நாவ தாலமிர் துண்ண நயந்தவர் இரிந்திடக் கண்டு
ஆவ வென்றரு நஞ்சம் உண்டவன் அமர்தரும் மூதூர்
காவ லார்மதில் சூழ்ந்த கடிபொழிற் காழிநன் னகரே. உ

கரியின் மாமுக முடைய கணபதி தாதைபல் பூதந்
திரிய இல்பலிக் கேகுஞ் செழுஞ்சுடர் சேர்தரும் மூதூர்
சரியின் முன்கைநன் மாதர் சதிபட மாநட மாடி
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலிபுனற் காழிநன் னகரே. ங

சங்க வெண்குழைச் செவியன் தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூணென வுடைய அப்பனுக் கழகிய ஊரான்
துங்க மாளிகை யுயர்ந்த தொகுகொடி வானிடை மிடைந்து
வங்க வாண்மதி தடவு மணிபொழிற் காழிநன் னகரே. ச

மங்கை கூறமர் மெய்யான் காண்மறி யேந்திய கையான்
எங்க ளீசனென் றெழுவார் இடர்வினை கெடுப்பவற் கூராஞ்
சங்கை யின்றிநல் நியமந் தாஞ்செய்து தகுதியின் மிக்க
கங்கை நாடியர் கீர்த்தி மறையவர் காழிநன் னகரே. ரு

நாறு கூவிள மத்தம் நாகமுஞ் சூடிய நம்பன்
ஏறும் ஏறிய ஈசன் இருந்தினி தமர்தரும் மூதூர்
நீறு பூசிய வுருவர் நெஞ்சினுள் வஞ்சமொன் றின்றித்
தேறு வார்கள்சென் றேத்துஞ் சீர்திகழ் காழிநன் னகரே. சு

நடம தாடிய நாதன் நந்திதன் முழவிடைக் காட்டில்
விடம மர்ந்தொரு காலம் விரித்தறம் உரைத்தவற் கூராம்
இடம தாமறை பயில்வார் இருந்தவர் திருந்தியம் போதிற்
குடம தார்மணி மாடங் குலாவிய காழிநன் னகரே. எ

கார்கொள் மேனியவ் வரக்கன் றன்கடுந் திறலினைக் கருதி
ஏர்கொள் மங்கையும் அஞ்ச எழில்மலை யெடுத்தவன் நெரியச்
சீர்கொள் பாதத்தோர் விரலாற் செறுத்தவெம் சிவனுறை கோயில்
தார்கொள் வண்டினஞ் சூழ்ந்த தண்வயற் காழிநன் னகரே. அ

மாலும் மாமல ரானும் மருவினின் றிகலிய மனத்தாற்
பாலுங் காண்பரி தாய பரஞ்சுடர் தன்பதி யாகுஞ்
சேலும் வாளையுங் கயலுஞ் செறிந்துதன் கிளையொடு மேய
ஆலுஞ் சாலிநற் கதிர்கள் அணிவயற் காழிநன் னகரே. கூ

புத்தர் பொய்மிகு சமணர் பொலிகழல் அடியினை காணுஞ்
சித்த மற்றவர்க் கிலாமைத் திகழ்ந்தநற் செழுஞ்சுடர்க் கூராஞ்
சித்த சோடுநல் லமரர் செறிந்தநன் மாமலர் கொண்டு
முத்த னேயரு ளென்று முறைமைசெய் காழிநன் னகரே. கo

ஊழி யானவை பலவும் ஒழித்திடுங் காலத்தி லோங்கு
* * * * கக

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பொருள் நம்மக்களென்று நச்சிஇச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே. க

பாவம்மேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்துசாவ தன்முனம்மி சைந்துநீர்

தீபம்மாலை தூபமுஞ் செறிந்தகைய ராகிநம்
தேவதேவன் மன்னுபூர் திருந்துகாழி சேர்மினே. உ

சோறுகூறை யின்றியே துவண்டுதூர மாய்ந்துமக்
கேறுசுற்றம் எள்கவே யிடுக்கணுய்ப்ப தன்முனம்
ஆறுமோர் சடையினன் ஆதியாகி செற்றவன்
நாறுதேன் மலர்ப்பொழில் நலங்கொள்காழி சேர்மினே. ங

நச்சிநீர் பிறன்கடை நடந்துசெல்ல நாளையும்
உச்சிவம் மெனும்உரை யுணர்ந்துகேட்ப தன்முனம்
பிச்சர்நச் சரவரைப் பெரியசோதி பேணுவார்
இச்சைசெய்யும் எம்பிரான் எழில்கொள்காழி சேர்மினே. ச

கண்கள்காண் பொழிந்துமேனி கன்றியொன்ற லாதநோய்
உண்கிலாமை செய்துதும்மை யுய்த்தழிப்ப தன்முனம்
விண்குலாவு தேவருய்ய வேலைநஞ் சமுதுசெய்
கண்கள்மூன் றுடையவெம் கருத்தர்காழி சேர்மினே. ஞ

அல்லல்வாழ்க்கை யுய்ப்பதற் கவத்தமே பிறந்துநீர்
எல்லையில் பிணக்கினிற் கிடந்திடா தெழும்மினே
பல்லில்வெண் தலையினிற் பலிக்கியங்கு பான்மையான்
கொல்லையேற தேறுவான் கோலக்காழி சேர்மினே. சு, எ

பொய்மிகுத்த வாயராய்ப் பொருமையோடு செல்லுநீர்
ஐமிகுத்த கண்டரா யடித்திரைப்ப தன்முனம்
மைமிகுத்த மேனிவாள் அரக்கனெ நித்தவன்
பைமிகுத்த பாம்பரைப் பரமர்காழி சேர்மினே. அ

காலினோடு கைகளுந் தளர்ந்துகாம நோய்தனால்
ஏலவார் குழலினார் இகழ்ந்துரைப்ப தன்முனம்
மாலினோடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலமேவு கண்டனூர் நிகழ்ந்தகாழி சேர்மினே. கூ

நிலைவெறுத்த நெஞ்சமோடு நேசமில் புதல்வர்கள்
முலைவெறுத்த பேர்தொடங்கி யேமுனிவ தன்முனந்
தலைபறித்த கையர்தேரர் தாந்தரிப் பரியவன்
சிலைபிடித் தெயிலெய்தான் திருந்துகாழி சேர்மினே. கo

தக்கனூர் தலையரிந்த சங்கரன் றனதரை
அக்கினோ டரவசைத்த அந்திவண்ணர் காழியை
ஒக்களூ ரனசம்பந்தன் உரைத்தபாடல் வல்லவர்
மிக்கஇன்ப மெய்திவீற் றிருந்துவாழ்தல் மெய்ம்மையே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடியிலங்குந் திருமேனி யாளர் புலியதளினர்
அடியிலங்குங் கழலார்க்க ஆடும் அடிகள்ளிடம்
இடியிலங்குங் குரலோதம் மல்கவ் வெறிவார் திரைக்
கடியிலங்கும் புனல்முத் தலைக்குங்கடற் காழியே. க

மயலிலங்குந் துயர்மா சறுப்பானருந் தொண்டர்கள்
அயலிலங்கப் பணிசெய்ய நின்றவ் அடிகள்ளிடம்
புயலிலங்குங் கொடையாளர் வேதத்தொலி பொலியவே
கயலிலங்கும் வயற்கழனி சூழுங்கடற் காழியே. உ

கூர்விலங்குந் திரிசூல வேலர்குழைக் காதினர்
மார்விலங்கும் புரிநூலு கந்தம்மண வாளனூர்
நேர்விலங்கல் லனதிரை கள்மோதந் தெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல் லெனக்கலந் தொழுகுங்கடற் காழியே. ங

குற்றமில்லார் குறைபாடு செய்வார் பழிதீர்ப்பவர்
பெற்றநல்ல கொடிமுன் னுயர்த்த பெருமானிடம்
மற்றுநல்லார் மனத்தா லினியார் மறைகலியெலாங்
கற்றுநல்லார் பிழைதெரிந் தளிக்குங்கடற் காழியே. ச

விருதிலங்குஞ் சரிதைத் தொழிலார் விரிசடையினர்
எருதிலங்கப் பொலிந்தேறும் எந்தைக் கிடமாவது
பெரிதிலங்கும் மறைகிளைஞர் ஓதப் பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக் குலந்தெரிந்து தீர்க்குங்கடற் காழியே. ஞ

தோடிலங்குங் குழைக்காதர் வேதர்சுரும் பார்மலர்ப்
பீடிலங்குஞ் சடைப்பெருமை யாளர்க் கிடமாவது
கோடிலங்கும் பெரும்பொழில் கள்மல்கப் பெருஞ்செந்நெலின்
காடிலங்கும் வயல்பயிலும் அந்தண்கடற் காழியே. ரு

மலையிலங்குஞ் சிலையாக வேகம்மதில் மூன்றெரித்
தலையிலங்கும் புனற்கங்கை வைத்தவ்வடி கட்கிடம்
இலையிலங்கும் மலர்க்கைதை கண்டல்வெறி விரவலால்
கலையிலங்குங் கணத்தினம் பொலியுங்கடற் காழியே. எ

மூழுதிலங்கும் பெருப்பாருள் வாழும்முரண் இலங்கைக்கோன்
அழுதிரங்கச் சிரமூர மொடுங்கவ் வடர்த்தாங்கவன்
தொழுதிரங்கத் துயர்தீர்த் துகந்தார்க் கிடமாவது
கழுதுபுள்ளும் மதிற்புறம தாருங்கடற் காழியே. அ

பூவினுலும் விரிபோதின் மல்குந்திரு மகள்தனை
மேவினுலும் வியந்தேத்த நீண்டா ரழலாய்நிறைந்

தோவியங்கே யவர்க்கருள் புரிந்தவ் வொருவர்க்கிடங்
காவியங்கண் மடமங்கையர் சேர்கடற் காழியே.

உடைநவின் றுருடைவிட் டுழல்வார் இருந்தவத்தார்
மூடைநவின் றம்மொழி யொழித்துகந்தம் முதல்வன்னிடம்
மடைநவின்ற புனற்கெண்டை பாயும்வயல் மலிதரக்
கடைநவின்றந் நெடுமாடம் ஓங்குங்கடற் காழியே. கஂ

கருகமுந்நீர் திரையோத மாருங்கடற் காழியுள்
உரகமாருஞ் சடையடி கள்தம்பா லுணர்ந்துறுதலாற்
பெருசமல்கும் புகழ்பேணுந் தொண்டர்க்கிசை யார்தமிழ்
விரகன்சொன்ன இவைபாடி யாடக்கெடும் வினைகளே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்.

சந்த மார்முலை யாள்தன கூறனூர்
வெந்த வெண்பொடி யாடிய மெய்யனூர்
கந்த மார்பொழில் சூழ்தரு காழியுள்
எந்தை யாரடி யென்மனத் துள்ளவே. க

மானி டம்மழை யார்வளர் செஞ்சடைத்
தேனி டங்கொளுங் கொன்றையந் தாரினூர்
கானி டங்கொளுந் தண்வயற் காழியார்
ஊனி டங்கொண்டென் உச்சியில் நிற்பரே. உ

மைகொள் கண்டத்தர் வாண்மதிச் சென்னியர்
பைகொள் வாளர வாட்டும் படிறனூர்
கைகொள் மான்மறி யார்கடற் காழியுள்
ஐயன் அந்தணர் போற்ற இருக்குமே. ங

புற்றில் நாகமும் பூளையும் வன்னியுங்
கற்றை வார்சடை வைத்தவர் காழியுட்
பொற்ற டியொ டிருந்தவர் பொற்கழல்
உற்ற போதுடன் ஏத்தி யுணருமே. ச

நலியுங் குற்றமும் நம்முட னேயவினை
மெலியு மாறது வேண்டுதி ரேல்வெய்ய
கலிக டிந்தகை யார்கடற் காழியுள்
அலைகொள் செஞ்சடை யாரடி போற்றுமே. ஞ

பெண்ணெர் கூறினர் பேயுடன் ஆடுவர்
பண்ணும் ஏத்திசை பாடிய வேடத்தர்

கண்ணும் மூன்றுடை யார்கடற் காழியுள்
அண்ண லாய அடிகள் சரிதையே. சு

பற்றும் மானும் மழுவும் அழகுற
மூற்று மூர்திரிந் துபலி மூன்றுவர்
கற்ற மாநன் மறையவர் காழியுட்
பெற்றம் ஏற துகந்தார் பெருமையே. எ

எடுத்த வல்லரக் கன்முடி தோளிற
அடர்த்து கந்தருள் செய்தவர் காழியுட்
கொடித்த யங்குநற் கோயிலுள் இன்புற
இடத்து மாதொடு தாமும் இருப்பரே. அ

காலன் தன்னுயிர் வீட்டு கழலடி
மாலும் நான்முகன் தானும் வனப்புற
ஓல மிட்டுமுன் தேடி யுணர்கிலாச்
சீலங் கொண்டவ னூர்திகழ் காழியே. கூ

உருவ நீத்தவர் தாமும் உறுதுவர்
தருவ லாடையி னருந் தகவிலர்
கருமம் வேண்டுதி ரேற்கடற் காழியுள்
ஒருவன் சேவடி யேயடைந் துய்ம்மினே. கO

கானல் வந்துல வுங்கடற் காழியுள்
ஈன மில்லி இணையடி யேத்திடும்
ஞான சம்பந்தன் சொல்லிய நற்றமிழ்
மான மாக்கும் மகிழ்ந்துரை செய்யவே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருமாலுமாற்று.

திருச்சிற்றம்பலம்.

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணுகா
காணுகாமா காழீயா மாமாயாநீ மாமாயா. க

யாகாயாழீ காயாகா தாயாராரா தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா. உ

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா. ங

நீவாவாயா காயாழீ காவாவாணெ வாராமே
மேராவாணெ வாவாகா ழீயாகாயா வாவாநீ. ச

யாகாலாமே யாக்காழீ யாமேத்தாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா. ரு

மேலேபோகா மேதேதழீ காலாலேகா லாலுயே
யேனுலாகா லேலாகா ழீதேதமேகா போலேமே. சு

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ. எ

நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே. அ

காலேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா. கூ

வேரியுமேணவ காழியொயே யேணநிணேமட ளோகரதே
தேரகளோடம ணேநிணேயே யேயொழிகாவண பேர்யுரிவே. கO

நேரகழாமித யாசழிநா யேனனியேணனி ளாயுழிகா
காழியுளாநின யேனினயே தாழிசயாதமி ழாகரனே. கக

திருச்சிற்றப்பலம்.

கக. திருக்கோச்சைவயம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீலநன் மாமிடற்றன் இறைவன் சினத்த நெடுமா வுரித்த நிக ரில், சேலன கண்ணிவண்ணம் ஒருகூ றுருக்கொள் திகழ்தேவன் மேவு பதிதான், வேலன கண்ணிமார்கள் விளையாடு மோசை விழ வோசை வேத வொலியின், சாலநல் வேலியோசை தருமாட வீதி கொடியாடு கொச்சை வயமே. க

விடையுடை யப்பனெப்பில் நடமாட வல்ல விகிர்தத் துருக் கொள் விமலன், சடையிடை வெள்ளெருக்க மலர்கங்கை திங்கள் தக வைத்த சோதி பதிதான், மடையிடை யன்னமெங்கும் நிறையப் பரந்து கமலத்து வைகும் வயல்சூழ், கொடையுடை வண்கையாளர் மறையோர்க ளென்றும் வளர்கின்ற கொச்சை வயமே. உ

படஅர வாடுமுன்கை யுடையா னிடும்பை களைவிக்கும் எங்கள் பரமன், இடமுடை வெண் தலைக்கை பலிகொள்ளும் இன்பன் இடமாய வோர்கொள் பதிதான், நடமிட மஞ்ஞை வண்டு மதுவுண்டு பாடு நளிர் சோலை கோலு கனகக், குடமிடு கூடமேறி வளர்பூவை நல்ல மறை யோது கொச்சை வயமே. ங

எண்டிசை பாலரெங்கும் இகலிப் புகுந்து மூயல்வித்த சிந்தை மூடுகிப், பண்டொளி தீபமாலை யிடுதூப மோடு பணிவுற்ற பாதர் பதி

தான், மண்டிய வண்டன்மிண்டி வருநீர பொன்னி வயல்பாய வாளை குழுமிக், குண்டகழ் பாயுமோசை படைநீட தென்ன வளர்கின்ற கொச்சை வயமே. ச

பனிவளர் மாமலைக்கு மருகன் குபேர னெடுதோழ மைக்கொள் பகவன், இனியன அல்லவற்றை யினிதாக நல்கும் இறைவன் இடங் கொள் பதிதான், முனிவர்கள் தொக்குமிக்க மறையோர்க ளோமம் வளர் தூம மோடி யணவிக், குனிமதி மூடிநீடும் உயர்வான் மறைத்து நிறை கின்ற கொச்சை வயமே. ரு

புலியதள் கோவணங்கள் உடையாடை யாக வுடையான் நினைக்கு மளவில், நலிதரு முப்புரங்கள் எரிசெய்த நாதன் நலமா இருந்த நகர் தான், கலிகெட அந்தணாளர் கலிமேவு சிந்தை யுடையார் நிறைந்து வளரப், பொலிதரு மண்டபங்கள் உயர்மாட நீடி வரைமேவு கொச்சை வயமே. சு, எ

மழைமுகில் போலுமேனி யடல்வா ளரக்கன் முடியோடு தோள் கள் நெரியப், பிழைகெட மாமலர்ப்பொன் அடிவைத்த பேயோ டெ ஞடி மேய பதிதான், இழைவள ரல்குல்மாதர் இசைபாடி யாட விடுமூச லன்ன கமுகின், குழைதரு கண்ணிவிண்ணில் வருவார்கள் தங்கள் அடிதேடு கொச்சை வயமே. அ

வண்டமர் பங்கயத்து வளர்வா னும் வையம் முழுதுண்ட மாலும் இகலிக், கண்டிட வொண்ணுமென்று இளறிப் பறந்தும் அறியாத சோதி பதிதான், நண்டுண நாரைசெந்நெல் நடுவே யிருந்து விரை தேர மோது மதுவிற், புண்டரி கங்களோடு குமுதம் மலர்ந்து வயல் மேவு கொச்சை வயமே. கூ

கையினி லுண்டுமேனி யுதிர்மாசர் குண்டர் இடுசீ வரத்தி னுடை யார், பெய்யுரை யாதவண்ணம் விரோயாட வல்ல விகிர்தத் துருக்கொள் விமலன், பையுடை நாகவாயில் எயிறுர மிக்க குரவம் பயின்று மல ரச், செய்யினில் நீலமொட்டு விரியக் கமழ்ந்து மணம்நாறு கொச்சை வயமே. கo

இறைவனை ஒப்பிலாத ஒளிமேனி யானை உலகங்க ளேழு முடனே, மறைதரு வெள்ளமேறி வளர்கோயில் மன்னி இனிதா இருந்த மணியைக், குறைவில ஞானமேவு குளிர்பந்தன் வைத்த தமிழ்மாலை பாடு மவர்போய், அறைகழ லீசனுலகும் நகர்மேவி யென்றும் அழகா இருப்ப தறிவே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

அறையும் பூம்புன லோடும் ஆடர வச்சடை தன்மேற்
பிறையுஞ் சூடுவர் மார்பிற் பெண்ணொரு பாகம் அமர்ந்தார்
மறையின் ஒல்லொலி யோவா மந்திர வேள்வி யறுத
குறைவில் அந்தணர் வாழுங் கொச்சை வயம்அமர்ந் தாரே. க

சுண்ணத்தர் தோலொடு நூல்சேர் மார்பினர் துன்னிய பூதக்
கண்ணத்தர் வெங்கன லேந்திக் கங்குல்நின் றாடுவர் கேடில்
எண்ணத்தர் கேள்விநல் வேள்வி யறுதவர் மாலெரி யோம்பும்
வண்ணத்த அந்தணர் வாழுங் கொச்சை வயம்அமர்ந் தாரே. உ

பாலை யன்னவெண் ணீறு பூசுவர் பல்சடை தாழ
மாலை யாடுவர் கீதம் மாமறை பாடுதல் மகிழ்வர்
வேலை மால்கடல் ஓதம் வெண்திரை கரைமிசை விளங்குங்
கோல மாமணி சிந்துங் கொச்சை வயம்அமர்ந் தாரே. ங

கடிகொள் கூவிளம் மத்தங் கமழ்சடை நெடுமுடிக் கணிவர்
பொடிகள் பூசிய மார்பிற் புனைவர்நன் மங்கையோர் பங்கர்
கடிகொள் நீடொலி சங்கின் ஒலியொடு கலையொலி துதைந்து
கொடிகள் ஓங்கிய மாடக் கொச்சை வயம்அமர்ந் தாரே. ச

ஆடன் மாமதி யுடையா ராயின பாரிடஞ் சூழ
வாடல் வெண்தலை யேந்தி வையகம் இடுபலிக் குழல்வார்
ஆடல் மாமட மஞ்ஞை அணிதிகழ் பேடையோ டாடிக்
கூடு தண்பொழில் சூழ்ந்த கொச்சை வயம்அமர்ந் தாரே. ஞ

மண்டு கங்கையும் அரவும் மல்கிய வளர்சடை தன்மேல்
துண்ட வெண்பிறை யணிவர் தொல்வரை வில்லது வாக
விண்ட தானவர் அரணம் வெவ்வழல் எரிகொள விடைமேல்
கொண்ட கோலம துடையார் கொச்சை வயம்அமர்ந் தாரே. ரு, எ

அன்றவ் ஆல்நிழல் அமர்ந்து அறவுரை நால்வர்க் கருளிப்
பொன்றி னார்தலை யோட்டில் உண்பது பொருகடல் இலங்கை
வென்றி வேந்தனை யொல்க வூன்றிய விரலினர் வான்தோய்
குன்ற மன்னபொன் மாடக் கொச்சை வயம்அமர்ந் தாரே. அ

சீர்கொள் மாமல ராணுஞ் செங்கண்மால் என்றிவ ரேத்த
ஏர்கொள் வெவ்வழ லாகி யெங்கும் உறநிமிர்ந் தாரும்
பார்கொள் விண்ணழல் கால்நீர்ப் பண்பினர் பால்மொழி யோடுங்
கூர்கொள் வேல்வலன் ஏந்திக் கொச்சை வயம்அமர்ந் தாரே. கூ

குண்டர் வண்துவ ராடை போர்த்ததொர் கொள்கையி னர்கள்
மிண்டர் பேசிய பேச்சு மெய்யல மையணி கண்டன்

பண்டை நம்வினை தீர்க்கும் பண்பின சொண்கொடி யோடுங்
கொண்டல் சேர்மணி மாடக் கொச்சை வயம்அமர்ந் தாரே. கo

கொந்த ணிபொழில் சூழ்ந்த கொச்சை வயநகர் மேய
அந்த ணன்அடி யேத்தும் அருமறை ஞானசம் பந்தன்
சந்த மார்ந்தழ காய தண்தமிழ் மாலைவல் லோர்போய்
முந்தி வானவ ரோடும் புகவலர் முனைகெட வினையே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

திருந்துமா களிற்றிள மருப்பொடு திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமுங் குடசமும் பீலியுஞ் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட் டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினர் திருந்தடி போற்றிவாழ் நெஞ்சமே புகலதாமே. க

ஏலமார் இலவமோ டினமலர்த் தொகுதியா யெங்கும்துந்திக்
கோலமா மிளகொடு கொழுங்கனி கொன்றையுங் கொண்டுகோட்டா
றுலியா வயல்புகு மணிதரு கொச்சையே நச்சிமேவும்
நீலமார் கண்டனை நினைமட நெஞ்சமே அஞ்சல்நீயே. உ

பொன்னுமா மணிகொழித் தெறிபுனற் கரைகள்வாய் நுரைகளுந்திக்
கன்னிமார் முலைநலங் கவரவந் தேறுகோட் டாறுசூழ
மன்னினர் மாதொடும் மருவிடங் கொச்சையே மருவில்நாளும்
முன்னைநோய் தொடருமா றில்லைகாண் நெஞ்சமே அஞ்சல்நீயே. ங

கந்தமார் கேதகைச் சந்தனக் காடுசூழ் கதலிமாமே
வந்துமா வள்ளையின் பவரளிக் குவளையைச் சாடியோடக்
கொந்துவார் குழலினர் குதிகொள்கோட் டாறுசூழ் கொச்சைமேய
எந்தையார் அடிநினைந் துய்யலாம் நெஞ்சமே அஞ்சல்நீயே. ச

மறைகொளுந் திறலினர் ஆகுதிப் புகைகள்வான் அண்டம்மிண்டிச்
சிறைகொளும் புனலணி செழுப்பதி திகழ்மதிற் சொச்சைதன்பால்
உறைவிட மெனமன மதுகொளும் பிரமனூர் சிரமதுத்த
இறைவன தடியிணை யிறைஞ்சிவாழ் நெஞ்சமே அஞ்சல்நீயே. ஞ

சுற்றமும் மக்களுந் தொக்கஅத் தக்கனைச் சாடியன்றே
உற்றமால் வரையுமை நங்கையைப் பங்கமா உள்கினூனூர்
குற்றமில் அடியவர் குழுமிய வீதிசூழ் கொச்சைமேவி
நற்றவம் அருள்புரி நம்பனை நம்பிடாய் நாளும்நெஞ்சே. சு

கொண்டலார் வந்திடக் கோலவார் பொழில்களிற் கூடிமந்தி
கண்டவார் கழைபிடித் தேறிமா முகில்தீனக் கதுவுகொச்சை
அண்டவா னவர்களும் அமரரும் முனிவரும் பணியஆலம்
உண்டமா கண்டனூர் தம்மையே உள்குநீ அஞ்சல்நெஞ்சே. எ

அடலெயிற் றரக்கனூர் நெருக்கிமா மலையெடுத் தார்த்தவாய்கள்
உடல்கெடத் திருவிரல் ஊன்றினூர் உறைவிடம் ஒளிகொள்வெள்ளி
மடலிடைப் பவளமும் முத்தமுந் தொத்துவண் புன்னைமாடே
பெடையொடுங் குருகினம் பெருகுதண் கொச்சையே பேணுநெஞ்சே. கூ

அரவினில் துயில்தரும் அரியும்நற் பிரமனும் அன்றயர்ந்து
சுரைகழல் திருமுடி யளவிட அரியவர் கொங்குசெம்பொன்
விரிபொழி லிடைமிகு மலைமகள் மகிழ்தர வீற்றிருந்த
கரியநன் மிடறுடைக் கடவுளார் கொச்சையே கருதுநெஞ்சே. கூ

கடுமலி யுடலுடை அமணருங் கஞ்சியுண் சாக்கியரும்
இடுமற வுரைதனீ யிகழ்பவர் சருதுநம ஈசர்வானூர்
நடுவுறை நம்பனீ நான்மறை யவர்பணிந் தேதத்தஞாலம்
உடையவன் கொச்சையே யுள்கிவாழ் நெஞ்சமே அஞ்சல்நீயே. கூ

காய்ந்துதங் காலினுற் காலனைச் செற்றவர் சடிகொள்கொச்சை
ஆய்ந்துகொண் டிடமென இருந்தநல் அடிகளீ ஆதரித்தே
ஏய்ந்ததொல் புகழ்மிகும் எழில்மறை ஞானசம் பந்தன்சொன்ன
வாய்ந்தஇம் மாலைகள் வல்லவர் நல்லவா னுலகின்மேலே. கக

திருச்சிற்றம்பலம்.

கஉ. திருக்கழுமலம் - திருவிராகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையினீ முலையவ ளினீனவ னெழிலுடை யிடவகை
கறையணி பொழில்நிறை வயலணி கழுமலம் அமர்கன லுருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி சுழல்தொழன் மருவுமே. க

பிணிபடு கடல்பிற விகளறல் எளிதுள ததுபெரு கியதிரை
அணிபடு கழுமலம் இனிதம ரனலுரு வினன்அவிர் சடைமிசை
தணிபடு கதிர்வள ரிளமதி புனைவனீ யுமைதலை வனீநிறம்
மணிபடு கறைமிட றனீநலம் மலிசுழ லினீனதொழன் மருவுமே. உ

வரியுறு புலியத ளுடையினன் வளர்பிறை யொளிர்கிளர் கதிர்பொதி
விரியுறு சடைவிரை புரைபொழில் விழவொலி மலிகழு மலம்அமர்
எரியுறு நிறஇறை வனதடி யிரவொடு பகல்பர வுவர்தம
தெரியுறு வினைசெறி கதிர்முனீ இருள்கெட நனிநினீ வெய்துமே. ங

விணைகெட மனநிணை வதுமுடி கெனில்நனி தொழுதெழு குலமதி
புணைகொடி யிடைபொருள் தருபடு களிறின துரிபுதை யுடலினன்
மணைகுட வயிறுடை யனசில வருகுறள் படையுடை யவன்மலி
கணைகட லடைகழு மலம்அமர் கதிர்மதி யினன்அதிற் கழல்களே. ச

தலைமதி புனல்விட அரவிவை தலைமைய தொருசடை யிடையுடன்
நிலைமரு வவொரிட மருளினன் நிழன்மழு விடைடழல் கணையினன்
மலைமரு வியசில தனின்பதி லெரியுண மனமரு வினன்நல
கலைமரு வியபுற வணிதரு கழுமலம் இனிதமர் தலைவனே. ஞ

வரைபொரு திழியரு விகள்பல பருகொரு கடல்வரி மணலிடை
கரைபொரு திரையொலி கெழுமிய கழுமலம் அமர்கன லுருவினன்,
அரைபொரு புலியதள் உடையினன் அடியிணை தொழவரு வினை
யெனும், உரைபொடி படவுறு துயர்கெட வுயருல கெய்தலொரு தலை
மையே. சு

முதிருறு கதிர்வளர் இளமதி சடையணி நறநிறை தலைதனில்
உதிருறு ம்யிர்பிணை தவிர்தசை யுடைபுலி யதளிடை யிருள்கடி
கதிருறு சுடரொளி கெழுமிய கழுமலம் அமர்மழு மலிபடை
அதிருறு கழலடி களதடி தொழுமறி வலதறி வறியமே. எ

கடலென நிறநெடு முடியவ னடுதிறல் தெறஅடி சரணென
அடல்நிறை படையரு ளியபுக ழரவரை யினன்அணி கிளர்பிறை
விடல்நிறை மிடறுடை யவன்விரி சடையவன் விடையுடை யவனுமை
உடனுறை பதிகள்தன் மறுகுடை யுயர்கழு மலவியன் நகரமே. அ

கொழுமல ருறைபதி யுடையவன் நெடியவ னெனவிவர் களுமவன்
விழுமையை யளவறி கிலரிறை விரைபுணர் பொழிலணி விழவமர்
கழுமலம் அமர்கன லுருவினன் அடியிணை தொழுமவ ரருவினை
எழுமையு மிலநில வகைதனி லெளிதிமை யவர்விய னுலகமே. கூ

அமைவன துவரிழு கியதுகி லணியுடை யினர்அமண் உருவர்கள்
சமையமும் ஒருபொரு ளெனுமவை சலநெறி யனஅற வுரைகளும்
இமையவர் தொழுகழு மலமம ரிறைவன தடிபர வுவர்தமை
நமையல விணைநல னடைதலி லுயர்நெறி நனிநணு குவர்களே. கo

பெருகிய தமிழ்விர கினன்மலி பெயரவ னுறைபிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடலடை கழுமலம் உறைவிட மெனநனி
பெருகிய சிவனடி பரவிய பிணைமொழி யனவொரு பதுமுடன்
மருவிய மனமுடை யவர்மதி யுடையவர் விதியுடை யவர்களே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அயிலுறுபடையினர் விடையினர்முடிமேல் அரவமும்மதியமும் விரவியஅழகர், மயிலுறுசாயல் வனமுலையொருபால் மகிழ்பவர்வானிடை முகில்புல்குமிடறர், பயில்வுறுசரிதையர் எருதுகந்தேறிப் பாடியும்ஆடியும் பலிகொள்வர்வலிசேர், கயிலையும்பொதியிலும் இடமென வுடையார் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. க

கொண்டலும்நீலமும் புரைதிருமிடறர் கொடுமுடியுறைபவர் படுதலைக்கையர், பண்டலர்அயன்சிரம் அரிந்தவர்பொருந்தும் படர்சடையடிகளார் பதியதனயலே, வண்டலும்வங்கமுஞ் சங்கமுஞ்சுறவும் மறிகடல்திரைகொணர்ந் தெற்றியகரைமேற், கண்டலுங்கைதையும் நெய்தலுங்குலவுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. உ

எண்ணிடையொன்றினர் இரண்டினர்உருவம் எரியிடைமூன்றினர் நான்மறையாளர், மண்ணிடைஐந்தினர் ஆறினர்அங்கம் வகுத்தனர்ஏழிசை யெட்டிருங்கலிசேர், பண்ணிடையொன்பதும் உணர்ந்தவர்பத்தர் பாடிநின்றடிதொழ மதனனெவெகுண்ட, கண்ணிடைக்கனலினர் கருதியகோயில் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ங

எரியொருகரத்தினர் இமையவர்க்கிறைவர் ஏறுகந்தேறுவர் நீறுமெய்பூசித், திரிதருமியல்பினர் அயலவர்புரங்கள் தீயெழவிழித்தனர் வேய்புரைதோளி, வரிதருகண்ணிணை மடவரலஞ்ச மஞ்சுறநிமிர்ந்த தோர் வடிவொடும்வந்த, கரியுரிமருவிய அடிகளுக்கிடமாங் கழுமலம் நினையநம் வினைகரிசறுமே. ச

ஊரெதிர்ந்திடுபலி தலைகலனுக உண்பவர்விண்பொலிந் திலங்கிய வுருவர், பாரெதிர்ந்தடிதொழ விரைதருமார்பிற் படஅரவ்மைஅக்கணிந்தவர்க்கிடமாம், நீரெதிர்ந்திழிமணி நித்திலம்முத்தம் நிரைசுரி சங்கமொ டொண்மணிவரன்றிக், காரெதிர்ந்தோதம்வன் திரைகரைக் கெற்றுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ஞ

மூன்றுயிர்தோற்றமும் இறுதியுமாகி முடியுடையமரர்கள் அடிபணிந்தேத்தப், பின்னியசடைமிசைப் பிறைநிறைவித்த பேரருளாளனுர் பேணியகோயில், பொன்னியல் நறுமலர் புனலொடுதூபஞ் சாந்தமும்வந்திய கையினராகிக், கன்னியர்நாள்தொறும் வேடமேபரவுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. ட

கொலைக்கணித்தாவரு கூற்றுதைசெய்தார் குரைகழல்பணிக்தவர்க் கருளியபொருளின், நிலைக்கணித்தாவர நினையவல்லார்தம் நெடுந்துயர் தவிர்த்தவெம் நிமலருக்கிடமாம், மலைக்கணித்தாவர வன்திரைமுரல மதுவிரிபுன்னைகள் முத்தென அரும்பக், கலைக்கணம்கானலின் நீழலில் வாழுங் கழுமலம்நினையநம் வினைகரிசறுமே. எ

புயம்பலவுடையதென் இலங்கையர்வேந்தன் பொருவரையெடுத் தவன் பொன்முடிதிண்தோள், பயம்பலபடஅடர்த் தருளியபெரு மான் பரிவொடுமினிதுறை கோயிலதாகும், வியன்பலவிண்ணினும் மண்ணினுமெங்கும் வேறுவேறுகங்களிற் பெயருளதென்னக், கயம் பலபடக்கடல் திரைகரைக்கெற்றுங் கழுமலமிந்நியநகம் விணகரி சறுமே. அ

விலங்கலொன்றெந்திவன் மழைதடுத்தானும் வெறிகமழ்தா மரை யோனுமென்றிவர்தம், பலங்களால்நேடியுப் அறிவரிதாய பரி சினன்மருவினின் றினிதுறைகோயில், மலங்கிவன்திரைவரை யெனப் பரந்தெங்கும் மறிகடலோங்கிவெள் இப்பியுஞ்சுமந்து, கலங்கடன்சரக் கொடு நிரக்கவந்தேதறுங் கழுமலமிந்நியநகம் விணகரிசறுமே. கூ

ஆம்பலதவழுயன் றறவுரைசொல்லும் அறிவிலாச்சமணருந் தேரருங்கணிசேர், நோம்பலதவமறி யாதவர்நொடிந்த மூதுரைகொள் கிலா முதல்வர்தம்மேனிச், சாம்பலும்பூசிவெண் தலைகலனுகத் தையலாரிடுபலி வையகத்தேற்றுக், காம்பனதோளியொ டினிதுறைகோயில் கழுமலமிந்நியநகம் விணகரிசறுமே. கo

கலிகெழுபாரிடை யூரெனவுளதாங் கழுமலம்விரும்பிய கோயில் கொண்டவர்மேல், வலிகெழுமனம்மிக வைத்தவன்மறைசேர் வருங் கலைஞானசம் பந்தனதமிழின், ஒலிகெழுமாலையென் றுரைசெய்த பத்தும் உண்மையினுல்நிந்நந் தேத்தவல்லார்மேல், மெலிகெழுதுய ரடை யாவிந்நிசிந்தும் விண்ணவராற்றலின் மிகப்பெறுவாரே. கக

திருச்சிற்றம்பலம்.

திருத்தாளச்சதி - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனேர்கான் பயில்கண முநிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னெடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்களுல்
தாமேகாணு வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகமே.

பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்த வெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுதல் அரிவையொடும்
உச்சத்தால் நச்சிப்போல் தொடர்ந்தடர்ந்த வெங்கணை
ராராவூரா நீள்வீதிப் பயில்வொடும் ஒலிசெயிசை

வச்சத்தான் நச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசிவல வவன திடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே. உ

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
சேரேசேரே நீராகச் செறிதரு சுரநதியோ
டங்கைச்சேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்தலைப்
பாலேமேலே மாலேயப் படர்வுறு மவனிறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையனிடங்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. ங

அண்டத்தால் எண்திக்கும் அமைந்தடங்கும் மண்டலத்
தாறேவேறே வானுள்வா ரவரவ ரிடமதெலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்தலைந்த வும்பரும்
மாறேலாதார் தாமேவும் வலிமிகு புரமெரிய
மூண்டத்தே வெந்திட்டே மூடிந்திடிந்த இஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதூரா முனிவுசெய் தவன திடங்
கண்டிட்டே செஞ்சொற்சேர் கவின்சிறந்த மந்திரக்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. ச

திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீரூர்வீரூர் போரார்தா ருகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரும் உயிர்கள்திறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தேதாடேயாமே மாலோகத் துயர்கூர பவன திடங்
கைக்கப்போ யுக்கத்தே கனன்றுமிண்டு தண்தலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே. ஞ

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்தரும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரார் நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகஇறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தா மேயாமைப் பிரிவுசெய் தவன திடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலித்துறைக் கரைச்செலக்
காணுதாரே சேராமெய்க் கழுமல வளநகரே. ஃ

பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையதும் வகைகிணையா
முத்திக்கே விக்கத்தே முடிச்குமுக்கு ணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமும் ஒருகெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தாணுகச் செயுமவன் உறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேமேயாவா தார்மேவுங் கழுமல வளநகரே. எ

செம்பைச்சேர் இஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழிற்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகர்இறைவன்
இம்பர்க்கே தஞ்செய்திட் டிருந்தரன் பயின்றவெற்
பேரார்பூநே ரோர்பாதத் தெழில்விரல் அவண்நிறுவிட்
டம்பொற்பூண் வென்றித்தோள் அழிந்துவந்த னஞ்செய்தாற்
காராரர்கூர்வாள் வாணுளன் றருள்புரி பவனதிடங்
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காராரர்சேரூர் மாவீதிக் கழுமல வளநகரே. அ

பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பாணுமால் தாணுமேயப் பறவையி னுருவுகொள
ஒன்றிட்டே யம்புச்சே ருயர்ந்தபங் கயத்தவ
னேதானேதான் அஃதுணரா துருவின தடிமுடியுஞ்
சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
றேசால்வேமேரூர் ஆகாசந் தெரிவுசெய் தவனதிடங்
கன்றுக்கே முன்றிற்கே கலந்திலந் நிறைக்கவுங்
காலேவாரா மேமேலேபாய் கழுமல வளநகரே. கூ

தட்டிட்டே மூட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணைத்
தாமேபேணு தேநாளுஞ் சமணெடும் உழல்பவரும்
இட்டத்தால் அத்தந்தான் இதன்றதென்று நின்றவர்க்
கேயாமேவா யேதுச்சொல் இலைமலி மருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புகைக்குமெய்க்கொள் புத்தரும்
போல்வார்தாமோ ராமேமேபாய்ப் புணர்வுசெய் தவனதிடங்
கட்டிக்கால் வெட்டித்தீங் கருப்புதந்த பைம்புனற்
காலேவாரா மேமேலேபாய் கழுமல வளநகரே. கo

கஞ்சத்தேதன் உண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
காணேமேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்

எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
டேழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிதுதல் மடவரலே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சேவுயருந் திண்கொடியான் திருவடியே சரணென்று சிறந்த அன்பால்
நாவியலும் மங்கையொடு நான்முகன்முன் வழிபட்ட நலங்கொள் கோயில்
வாவிதொறும் வண்கமலம் முகங்காட்டச் செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டுங் கழும லீமே. க

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய மலைச்செல்வி பிரியா
மேனி, அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான் அமரர்தொழ
அமருங் கோயில், தருந்தடக்கை முத்தழலோர் மணிகள்தொறும்
இறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணீர்கழல்பந் தம்மாணைப்
பாட்டயருங் கழும லீமே. உ

அலங்கல்மலி வானவருந் தானவரும் அலைகடலைக் கடையப் பூதங்
கலங்கஎழு கடிவிடமுண் டிருண்டமணி கண்டத்தோன் கருதுங் கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனியுக் கூன்சலிக்குங் காலந் தானுங்
கலங்கலிலர மனப்பெருவண் கையுடைய மெய்யர்வாழ் கழும லீமே. ங

பாரிதணை நலிந்தமரர் பயமெய்தச் சயமெய்தும் பரிசு வெம்மைப்,
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு சிலைவளைத்தோன் பொருந்துங் கோயில்,
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின் சூளிகைமேல் மகப்பா ராட்டக்,
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு மகிழ்வெய்துங் கழும லீமே. ச

ஊர்கின்ற அரவம்ஒளி விடுதிங்க ளொடுவன்னி மத்தம் மன்னும்
நீர்கின்ற கங்கைநகு வெண்தலைசேர் செஞ்சடையான் நிகழுங் கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி மலையென்ன நிலவி நின்ற
கார்வண்டின் கணங்களாற் சவின்பெருகு சுதைமாடக் கழும லீமே. ஞ

தருஞ்சரதந் தந்தருளென் றடிநிணைந்து கழலணைந்து தவங்கள் செய்த, பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ ழமையளித்த பெரு
மான் கோயில், அரிந்தவயல் அரவிந்தம் மதுவுகுப்ப அதுகுடித்துக்
களித்து வாளை, கருஞ்சகடம் இளகவளர் கரும்பிரிய அகம்பாயுங் கழும
லீமே. ஃ

புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய் நிலன்ஐந்தாய்க் காரணம் நான்காய், அவையவைசேர் பயனுருவா யல்லவுரு வாய்நின்றான் அமருங் கோயில், தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்பக் கொக்கின்காய்கள், கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப் புள்ளிரியுங் கழுமலமே. எ

அடல்வந்த வானவரை யழித்துலகு தெழித்துழலும் அரக்கர் கோமான், மிடல்வந்த இருபதுதோள் நெரியவிரற் பணிகொண்டோன் மேவுங் கோயில், நடவந்த வழுவரிது நடவொணா வகைபரலாய்த் தென்று தோன்று, கடல்வந்த சங்கின்ற முத்துவயற் கரைகுவிக்குங் கழுமலமே. அ

பூமகள்தன் கோன்அயனுங் புள்ளினெடு கேழல்உரு வாகிப் புக்கிட் டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணு வகைநின்றான் அமருங் கோயில் பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டணிந்து பரிசி னாலே காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து நின்றேத்துங் கழுமலமே. கூ

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை மெய்த்தவமாய் நின்று கையில், உணல்மருவுஞ் சமணர்களும் உணராத வகைநின்றான் உறையுங் கோயில், மணமருவும் வதுவையொலி விழவின்ஒலி யிவையிசைய மண்மேல் தேவர், கணமருவும் மறையினொலி கீழ்ப்படுக்க மேற்படுக்குங் கழுமலமே. கo

கற்றவர்கள் பணிக்தேத்துங் கழுமலத்துள் ஈசன்றன் கழல்மேல் நல்லோர், நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம் பந்தன்றான் நயந்து சொன்ன, சொற்றுணையோ ரைந்தினைடைந் திவைவல்லார் தூமலராள் துணைவ ராகி, முற்றுலகம் அதுஆண்டு முக்கணான் அடிசேர முயல்கின் றாரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - கோல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணிநல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்தமே. க

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் மூனிவுறத் தானெனோ யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்தமே. உ

தொண்டணை செய்தொழில் துயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகவோர் பெருந்தகை யிருந்தவே. ங

அயர்வுளோம் என்றுநீ அசைவொழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கயல்வயல் குதிகொளுங் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை யிருந்தவே. ச

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடையமர் கொடியினன் விண்ணவர் தொழுதெழுங்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை யிருந்தவே. ஞ

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெணை யாளுடைப் பெருந்தகை யிருந்தவே. ட

குறைவிலை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடுங்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை யிருந்தவே. ண

அரக்கனர் அருவரை யெடுத்தவன் அலறிட
நெருக்கினர் விரலினல் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை யிருந்தவே. அ

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்
அடியொடு முடியறி யாவழல் உருவினன்
கடிகமழ் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை யிருந்தவே. கூ

தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியிணை யடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை யிருந்தவே. கo

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தளம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே. கக

திருச்சிற்றம்பலம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மடல்மலி கொன்றை துன்றுவா ளெருக்கும் வன்னியும் மத்த
முஞ் சடைமேற், படலொலி திரைகள் மோதிய கங்கைத் தலைவனூர்
தம்மிடம் பகரில், விடலொலி பரந்த வெண்டிரை முத்தம் இப்பிகள்
கொணர்ந்துவெள் ளருவிக், கடலொலி யோதம் மோதவந் தலைக்குங்
கழுமல நகரென லாமே. க

மின்னிய அரவும் வெறிமலர் பலவும் விரும்பிய திங்களுந் தங்கு,
சென்னிய துடையான் தேவர்தம் பெருமான் சேயிழை யொடும்உறை
விடமாம், பொன்னியல் மணியு முரிகரி மருப்புஞ் சந்தமும் உந்துவன்
றிரைகள், கன்னிய ராடக் கடலொலி மலியுங் கழுமல நகரென
லாமே. உ

சீருறு தொண்டர் கொண்டடி போற்றச் செழுமலர் புனலொடு
தூபந், தாருறு கொன்றை தம்முடி வைத்த சைவனூர் தங்கிட மெங்
கும், ஊருறு பதிகள் உலகுடன் பொங்கி யொலிபுனல் கொளவுடன்
மிதந்த, காருறு செம்மை நன்மையால் மிக்க கழுமல நகரென
லாமே. ங

மண்ணினு ரேத்த வானுளார் பரச அந்தரத் தமரர்கள் போற்றப்,
பண்ணினு ரெல்லாம் பலபல வேட முடையவர் பயில்விட மெங்கும்,
எண்ணினுல் மிக்கார் இயல்பினுல் நிறைந்தார் ஏந்திழை யவரொடு
மைந்தர், கண்ணினுல் இன்பங் கண்டொளி பரக்குங் கழுமல நகரென
லாமே. ச

சுருதியான் தலையும் நாமகள் மூக்குஞ் சுடரவன் கரமுமூன்
னியங்கு, பரிதியான் பல்லும் இறுத்துவர்க் கருளும் பரமனூர் பயின்
றினி திருக்கை, விருதினுன் மறையும் அங்கமோ ராறும் வேள்வியும்
வேட்டவர் ஞானங், கருதினு ருலகிற் கருத்துடை யார்சேர் கழுமல
நகரென லாமே. ஞ

புற்றில்வாள் அரவும் ஆமையும் பூண்ட புனிதனூர் பனிமலர்க்
கொன்றை, பற்றிவான் மதியஞ் சடையிடை வைத்த படிறனூர்
பயின்றினி திருக்கை, செற்றுவன் திரைகள் ஒன்றோடொன் றோ
டிச் செயிர்த்துவண் சங்கொடு வங்கங், கற்றுறை வரைகள் கரைக்குவந்
துரைக்குங் கழுமல நகரென லாமே. ட

அலைபுனற் கங்கை தங்கிய சடையார் அடல்நெடு மதிலொரு
மூன்றுங், கொலையிடைச் செந்தீ வெந்தறக் கண்ட குழகனூர் கோயில
தென்பர், மலையின்மிக் குயர்ந்த மரக்கலஞ் சரக்கு மற்றுமற் றிடை
யிடை யெங்குங், கலைகளித் தேறிக் கானலில் வாழுங் கழுமல நகரென
லாமே. எ

ஒருக்கமுன் நினையாத் தக்கன்றன் வேள்வி யுடைதர வுழறிய படையார், அரக்கனை வரையால் ஆற்றலன் றழித்த அழகனூர் அமர்ந் துறை கோயில், பரச்சும்வண் புகழார் பழியவை பார்த்துப் பலபல அறங்களே பயிற்றிக் கரக்குமா றறியா வண்மையால் வாழுங் கழுமல நகரென லாமே. அ

அருவரை பொறுத்த ஆற்றலி னனும் அணிகிளர் தாமரை யானும், இருவரும் ஏத்த எரியுரு வான இறைவனூர் உறைவிடம் வினவில், ஒருவரிவ் வுலகில் வாழ்கிலா வண்ணம் ஒலிபுனல் வெள்ள முன் பரப்பக், கருவரை சூழ்ந்த சுடலிடை மிதக்குங் கழுமல நகரென லாமே. கூ

உரிந்துயர் உருவில் உடைதவிர்ந் தாரும் அத்துகில் போர்த்துழல் வாரும், தெரிந்துபுன் மொழிகள் செப்பின கேளாச் செம்மையார் நன் மையால் உறைவாங், குருந்துயர் கோங்கு கொடிவிடு முல்லை மல்லிகை சண்பகம் வேங்கை, கருந்தடங் கண்ணின் மங்கைமார் கொய்யுங் கழு மல நகரென லாமே. கo

கானலங் கழனி யோதமம்வந் துலவுங் கழுமல நகருறை வார்மேல் ஞானசம் பந்தன் நற்றமிழ் மாலை நன்மையால் உரைசெய்து நவில்வார் ஊனசம் பந்தத் துறுபிணி நீங்கி உள்ளமும் ஒருவழிக் கொண்டு வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து. பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

எரியார்மழுவொன் றேந்தி அங்கை யிடதலையேகலனா
வரியார்வளையா ளையம்வவ்வாய் மாநலம்வவ்வுதியே
சரியாகாவின் வேதகீதன் தாமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே. க

பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப் பெய்பலிக்கென்றயலே
கயலார்தடங்கண் அஞ்சொல்நல்லார் கண்டுயில்வவ்வுதியே
இயலாள்நடாவி யின்பமெய்தி யிந்திரனுள்மண்மேல்
வியலார்முரச மோங்குசெம்மை வேணுபுரத்தானே. உ

நகலார்தலையும் வெண்பிறையும் நளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந் தையம்வவ்வாய் பாய்கலைவவ்வுதியே
அகலாதுறையும் மாநிலத்தில் அயலின்மையாலமரர்
புகலால்மலிந்த பூம்புகலி மேவியபுண்ணியனே. ங

சங்கோடிலங்கத் தோடுபெய்து காதிலொர்தாழ்குழையன்
அங்கோல்வளையார் ஐயம்வவ்வா யால்நலம்வவ்வுதியே

செங்கோல்நடாவிப் பல்லுயிர்க்குஞ் செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட வெங்குருமேயவனே.

தணிநீர்மதியஞ் சூடிநீடு தாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவார் ஐயம்வவ்வாய் பெய்கலிவவ்வுதியே
அணிநீருலக மாகியெங்கும் ஆழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத் தான்மிதந்த தோணிபுரத்தானே. நி

கவர்பூம்புனலுந் தண்மதியுங் கமழ்சடைமாட்டயலே
அவர்பூம்பலியோ டையம்வவ்வா யால்நலம்வவ்வுதியே
அவர்பூணரையர்க் காதியாய் அவள்தன் மன்னன்ஆள்மண்மேல்
தவர்பூம்பதிக ளெங்குமெங்குந் தங்குதராயவனே. சு

மூலையாழ்கெழும மொந்தைகொட்ட மூன்கடைமாட்டயலே
நிலையாய்ப்பலிதேர்ந் தையம்வவ்வாய் நீநலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ் வையமெல்லாந் தன்னதாராணைநடாய்ச்
சிலையால்மலிந்த சீர்ச்சிலம்பன் சிரபுரமேயவனே. எ

எருதேதகொணர்கென் றேறியங்கை யிடுதலையேகலனுக்
கருதேதர்மடவார் ஐயம்வவ்வாய் கண்டியில்வவ்வுதியே
ஒருதேதர்கடாவி ஆரமரு ளொருபதுதோள்தொலையப்
பொருதேதர்வலவன் மேவியாண்ட புறவமர் புண்ணியனே. அ

துவர்சேர்கலிங்கப் போர்வையாருந் தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக் கண்டவண்ணம் காரிகைவார்குழலார்
அவர்பூம்பலியோ டையம்வவ்வவா யால்நலம்வவ்வுதியே
தவர்செய்நெடுவேற் சண்டனளச் சண்பையமர்ந்தவனே. கூ

நிழலால்மலிந்த கொன்றைசூடி நீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவா ரையம்வவ்வாய் கோல்வளைவவ்வுதியே
அழலாயுலகம் கவ்வைதீர ஐந்தலைநீண்முடிய
கழல்நாகரையன் காவலாகக் காழியமர்ந்தவனே. கo

கட்டார் துழாயன் தாமரையா னென்றிவர் காண்பரிய
சிட்டார்பலிதேர்ந் தையம்வவ்வாய் செய்கலி வவ்வுதியே
நட்டார்நடுவே நந்தனுள நல்வினையா லுயர்ந்த
கொட்டாறுடுத்த தண்வயல்சூழ் கொச்சையமர்ந்தவனே. கக

கடையார்கொடிநன் மாடவீ திக் கழுமலவூர்க்கவுணி
நடையார்பனுவல் மாலையாக ஞானசம்பந்தன்நல்ல
படையார்முழுவன் மேல்மொழிந்த பல்பெயர்ப்பத்தும்வல்லார்க்
கடையாவினைகள் உலகில்நாளும் அமருலகாள்பவரே. கஉ

திருச்சிற்றம்பலம்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அரணே உள்குவீர், பிரம னூருளெம்
பரணே யேமனம், பரவி உய்ம்மினே. க

காண உள்குவீர், வேணு நற்புரத்
தாணு வின்கழல், பேணி உய்ம்மினே. உ

நாதன் என்பிர்காள், காதல் ஒண்புகல்
ஆதி பாதமே, ஓதி உய்ம்மினே. ங

அங்கம் மாதுசேர், பங்கம் ஆயவன்
வெங்குரு மன்னும், எங்க ளீசனே. ச

வாணி லாச்சடைத், தோணி வண்புரத்
தாணி நற்பொனைக், காணு மின்களே. ஞ

பாந்த ளார்சடைப், பூந்த ராய்மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்த னென்பரே. ஸு

கரிய கண்டனைச், சிரபு ரத்துளெம்
அரசை நாள்தொறும், பரவி உய்ம்மினே. எ

நறவம் ஆர்பொழிற், புறவம் நற்பதி
இறைவன் நாமமே, மறவல் நெஞ்சமே. அ

தென்றி லரக்கனைக், குன்றிற் சண்பைமன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே. கூ

அயனும் மாலுமாய், முயலுங் காழியான்
பெயல்வை யெய்திநின், றியலும் உள்ளமே. கO

தேசர் அமணரைச், சேர்வில் கொச்சைமன்
நேரில் கழல்நினைந், தோரும் உள்ளமே. ஙங

தொழும னத்தவர், கழும லத்துறை
பழுதில் சம்பந்தன், மொழிகள் பத்துமே. ஙஉ

திருச்சிற்றம்பலம்.

மொழிமாற்று. பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காட தணிகலங் காரர வம்பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம் வில்லுங் கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே. க

கற்றைச் சடையது கங்கண முன்கையில் திங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்தலை சுட்டதுபண்
டெற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை யெழில்விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள் வேதியரே. உ

கூவிளங் கையது பேரி சடைமுடிக் கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத் துத்திநாகம்
ஏவிளங் குந்துத லாளையும் பாகமும் உரித்தனர்இன்
பூவிளஞ் சோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே. ஊ

உரித்தது பாம்பை யுடல்மிசை யிட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததொ ராமையை யின்புறப் பூண்டது மூப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கீன வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே. ச

கொட்டுவர் அக்கரை யார்ப்பது தக்கை குறுந்தாளன
விட்டுவர் பூதங் கலப்பில ரின்புக ழென்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமும் ஏந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை சுந்தரரே. ஙு

சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர் கோவணந்தங்
கூத்தவர் கச்சக் குலவிநின் றாடுவர் கொக்கிறகும்
போர்த்தவர் பல்படை பேயவை சூடுவர் பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே. ஞ

காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற் கழல்சிலம்பு
மாலது ஏந்தல் மழுவது பாகம் வளர்கொழுங்கோட்
டாலது ஊர்வர் அடலேற் றிருப்பர் அணிமணிநீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர் சிரபுரம் மேயவரே. ட

கெருப்புரு வெள்விடை மேனியர் ஏறுவர் நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புச்சு மெய்த்தந்தை யார்விறல் மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி புண்ணியரே. அ

இலங்கைத் தலைவனை யேந்திற் றிறுத்த திரலியின்னுள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி குமைபெற்றது
கலங்களர் மொந்தையி னாடுவர் கொட்டுவர் காட்டகத்துச்
சலங்களர் வாழ்வயற் சண்பையுள் மேவிய தத்துவரே. கூ

அடியினை கண்டிலன் தாமரை யோன்மால் முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந் தேறுவர் தோலுடுப்பர்
பிடியணி யுந்நடை யாள்வெற் பிருப்பதோர் கூறுடையர்
கடியணி யும்பொழிற் காழியுள் மேய கறைக்கண்டரே. கo

கையது வெண்குழை காதது சூலம் அமணர்புத்தர்
எய்துவர் தம்மை யடியவர் எய்தாரொர் ஏனக்கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுள் மேவிய கொற்றவரே. ககஉ

கல்லுயர் கழுமல இஞ்சியுள் மேவிய கடவுள்தன்னை
நல்லுரை ஞானசம் பந்தன் ஞாநத் தமிழ்நன்குணரச்
சொல்லிடல் கேட்டல் வல்லோர்தொல்லை வானவர் தங்களொடும்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ லோகமதே. கஉ

திருச்சிற்றம்பலம்.

ஏகபாதம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். க

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன். உ

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே. ங

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன். ச

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன். ஞ

பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி

பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி. கூ

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில். எ

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன். அ

தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். கூ

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே. கo

கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே. கக

கழுமல மூதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல மூதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல மூதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல மூதுபதிக் கவுணியன் கட்டுரை. கஉ

திருச்சிற்றம்பலம்.

திருவேழகூற்றிருக்கை.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஓருரு வாயினை மானுங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை நி

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
மூப்பொழு தேத்திய கால்வர்க் கொளிநெறி
காட்டினை காட்ட மூன்றுகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த கால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
மூப்புரத் தோடு நால்நிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
மூக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து மூப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க மூதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றினை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருநிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
மூன்றீர்த் துயின்மேலுன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
ஐயும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனை ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றநீ
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல மூதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல மூதுபதிக் கவுணியன் அறியும் சரு
அணைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீள்நிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரமாற்று.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரம்மன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி சொச்சைவய மூள்ளிட்டங் காதி யாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம்நாம் பரவ மூரே. க

வேணுபுரம் பிரமனூர் புகலிபெரு வெங்குரு வெள்ளத் தோங்குந்
தோணிபுரம் பூந்தராய் தூநீர்ச் சிரபுரம் புறவங் காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சை வயஞ்சண்பை கூருஞ் செல்வங்
காணிய வையகத்தோ ரேத்துங் கழுமலம்நாங் கருது மூரே. உ

புகலி சிரபுரம் வேணுபுரஞ் சண்பை புறவங் காழி
நிகரில் பிரமபுரங் கொச்சை வயம்நீர்மேல் நின்ற மூதூர்
அகலிய வெங்குருவோ டந்தண் டராய்அமரர் பெருமாற் கின்பம்
பகரு நகர்நல்ல கழுமலம்நாங் கைதொழுது பாடி மூரே. ங

வெங்குருத் தண்புகலி வேணுபுரஞ் சண்பை வெள்ளங் கொள்ளத்
தொங்கிய தோணிபுரம் பூந்தராய் தொகுபிரம புரந்தொல் காழி
தங்கு பொழிற்புறவங் கொச்சை வயந்தலைபண் டாண்ட மூதூர்
கங்கை சடைமூடிமே லேற்றான் கழுமலம்நாங் கருது மூரே. ச

தொன்னீரில் தோணிபுரம் புகலி வெங்குருத் துயர்தீர் காழி
இன்னீர வேணுபுரம் பூந்தராய் பிரமனூர் எழிலார் சண்பை
நன்னீர பூம்புறவங் கொச்சை வயஞ்சிலம்ப னகராம் நல்ல
பொன்னீர புன்சடையான் பூந்தண் கழுமலம்நாம் புகழு மூரே. ஞ

தண்ணந் தராய்ப்புகலி தாமரையான் ஊர்சண்பை தலைபூன் ஆண்ட
அண்ணல்நகர் கொச்சை வயந்தண் புறவஞ்சீர் அணியார் காழி

விண்ணியல்சீர் வெங்குருநல் வேணுபுரந் தோணிபுரம் மேலா ரேத்து
கண்ணுதலான் மேவியநற் கழுமலம்நாங் கைதொழுது கருது மூரே. சு

சீரார் சிரபுரமுங் கொச்சைவயஞ் சண்பையொடு புறவம் நல்ல
ஆராத் தராய்பிரம னூர்புகலி வெங்குருவோ டந்தண் காழி
ஏரார் கழுமலமும் வேணுபுரந் தோணிபுர மென்றென் றுள்கிப்
பேரால் நெடியவனும் நான்முகனுங் காண்பரிய பெருமா னூரே. எ

புறவஞ் சிரபுரமுந் தோணிபுரஞ் சண்பைமிகு புகலி காழி
நறவம் மிகுசோலைக் கொச்சை வயந்தராய் நான்முகன் றனூர்
விறலாய வெங்குருவும் வேணுபுரம் விசயன் மேலம் பெய்து
திறலால் அரக்கனைச் செற்றுன்றன் கழுமலம்நாஞ் சேரு மூரே. அ

சண்பை பிரமபுரந் தண்புகலி வெங்குரு நற்காழி சாயாப்
பண்பார் சிரபுரமுங் கொச்சை வயந்தராய் புறவம் பார்மேல்
நண்பார் கழுமலஞ்சீர் வேணுபுரந் தோணிபுரம் நாணி லாத
வெண்பற் சமணொடு சாக்கியரை வியப்பழித்த விமல னூரே. கூ

செழுமலிய பூங்காழி புறவஞ் சிரபுரஞ்சீர்ப் புகலி செய்ய
கொழுமலரான் நன்னகரந் தோணிபுரங் கொச்சைவயஞ் சண்பை யாய
விழுமியசீர் வெங்குருவோ டோங்குதராய் வேணுபுரம் மிகுநன் மாடக்
கழுமலமென் றின்னபெயர் பன்னிரண்டுங் கண்ணுதலான் கருது மூரே.

கொச்சை வயம்பிரம னூர்புகலி வெங்குருப் புறவங் காழி
நிச்சல் விழவோவா நீடார் சிரபுரம்நீள் சண்பை மூதூர்
நச்சினிய பூந்தராய் வேணுபுரந் தோணிபுர மாகி நம்மேல்
அச்சங்கள் தீர்த்தருளும் அம்மான் கழுமலம்நாம் அமரு மூரே. கக

காவி மலர்புரையுங் கண்ணூர் கழுமலத்தின் பெயரை நாளும்
பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாப் பத்திமையாற் பணுவல் மாலை
நாவின் நலம்புகழ்சீர் நான்மறையான் ஞானசம் பந்தன் சொன்ன
மேவியிசை மொழிவார் விண்ணவரில் எண்ணுதலை விருப்பு ளாரே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரமாற்று.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங் குருமேற் சோலை, வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவம்மண் மேல், களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங் கொச்சைகழு மலமென் றின்ன, இளம்குமரன் றன்னீப்பெற் றிமையவர்தம் பகையெறி வித் திறைவனூரே. க

திருவளருங் கழுமலமே கொச்சை தேவேந்திரனூர் அயனூர்
தெய்வத், தருவளரும் பொழிற்புறவஞ் சிலம்பனூர் காழிதகு சண்பை
யொண்பா, வுருவளர்வெங் குருப்புகலி யோங்குதராய் தோணிபுரம்
உயர்ந்ததேவர், வெருவ்வளர் கடல்விடம துண்டணிகொள் கண்டத்
தோன் விரும்புமூரே. உ

வாய்ந்தபுகழ் மறைவளருந் தோணிபுரம் பூந்தராய் சிலம்பன்வாழூர்
ஏய்ந்தபுற வந்திகழுஞ் சண்பையெழிற் காழியிறை கொச்சையம்பொன்
வேய்ந்தமதிற் கழுமலம்விண் ணோர்பணிய மிக்கயனூர் அமரர்கோனூர்
ஆய்ந்தகலை யார்புகலி வெங்குருவ தரன்நாளும் அமருமூரே. ஊ

மாமலையாள் கணவன்மகிழ் வெங்குருமாப் புகலிதராய் தோணி
புரம்வான், சேமமதில் புடைதிகழுங் கழுமலமே கொச்சைதேவேந்
திரனூர்சீர்ப், பூமகனூர் பொலிவுடைய புறவம்விறற் சிலம்பனூர் காழி
சண்பை, பாமருவு கலியெட்டெட் டுணர்ந்தவற்றின் பயன்நுகர்வோர்
பரவுமூரே. ச

தரைத்தேவர் பணிசண்பை தமிழ்க்காழி வயங்கொச்சை தயங்கு
பூமேல், விரைச்சேருங் கழுமலம்மெய் யுணர்ந்தயனூர் விண்ணவர்தங்
கோனூர்வென்றித், திரைச்சேரும் புனற்புகலி வெங்குருச் செல்வம்
பெருகு தோணிபுரஞ்சீர், உரைச்சேர்பூந் தராய்சிலம்ப னூர்புறவம்
உலகத்தில் உயர்ந்தவூரே. ரு

புண்டரிகத் தார்வயல்சூழ் புறவம்மிகு சிரபுரம்பூங் காழிசண்பை,
எண்டிசையோர் இறைஞ்சியவெங் குருப்புகலி பூந்தராய் தோணிபுரஞ்
சீர், வண்டமரும் பொழில்மல்கு கழுமலம்நற் கொச்சைவா னவர்தங்
கோனூர், அண்டயனூ ரிவையென்பர் அருங்கூற்றை யுதைத்துகந்த
அப்பனூரே. கூ

வண்மைவளர் வரத்தயனூர் வானவர்தங் கோனூர்வண் புகலி
யிஞ்சி, வெண்மதிசேர் வெங்குருமிக் கோரிறைஞ்சு சண்பைவியன்
காழிகொச்சை, கண்மகிழுங் கழுமலங்கற் றேர்புகழுந் தோணிபுரம்
பூந்தராய்சீர்ப், பண்மலியுஞ் சிரபுரம்பார் புகழ்புறவம் பால்வண்ணன்
பயிலுமூரே. எ

மோடிபுறங் காக்குமூர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் காழிமூதூர்
நீடியலுஞ் சண்பைகழு மலங்கொச்சை வேணுபுரங் கமலநீடு
கூடியய னூர்வளர்வெங் குருப்புகலி தராய்தோணி புரங்கூடப்போர்
தேடியுழல் அவுணர்பயில் திரிபுரங்கள் செற்றமலைச் சிலையனூரே. அ

இரக்கமுடை யிறையவனூர் தோணிபுரம் பூந்தராய் சிலம்பன்தன்னூர்
நிரக்கவரு புனற்புறவம் நின்றதவத் தயனூர்சீர்த் தேவர்கோனூர்
வரக்கரவாப் புகலிவெங் குருமாசி லாச்சண்பை காழிகொச்சை
அரக்கன்விறல் அழித்தருளி கழுமலமந் தணர்வேத மருதவூரே. கூ

மேலோதுங் கழுமலம்மெய்த் தவம்வளருங் கொச்சையிற் திரனூர் மெய்ம்மை, நூலோதும் அயன்றனூர் நுண்ணறிவார் குருப்புகலி தராய்நூர்மேல், சேலோடு தோணிபுரந் திகழ்புறவஞ் சிலம்பனூர் செருச்செய்தன்று, மாலோடும் அயனறியான் வண்காழி சண்பை மண்ணேர் வாழ்த்துமூரே. க0

ஆக்கமர்சீ ரூர்சண்பை காழியமர் கொச்சைகழு மலமன்பானூர்
ஓக்கமுடைத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமொண் புறவநண்பார்
பூக்கமலத் தோன்மகிழூர் புரந்தரனூர் புகலிவெங் குருவுமென்பர்
சாக்கியமோ டமண்கையர் தாமறியா வகைநின்றூன் தங்குமூரே. கக

அக்கரஞ்சேர் தருமனூர் புகலிதராய் தோணிபுரம் அணிநீர்ப் பொய்கை, புக்கரஞ்சேர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் புகழ்க்காழி சண்பை தொல்லூர், மிக்கரஞ்சீர்க் கழுமலமே கொச்சைவயம் வேணுபுரம் அய னூர்மேலிச், சக்கரஞ்சீர்த் தமிழ்விரகன் தான்சொன்ன தமிழ்தரிப் போர் தவஞ்செய்தோரே. கஉ

திருச்சிற்றம்பலம்.

திருக்கோழத்தீர்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர் குறைவிலாப் புகலிபூமேல் மாமகளூர் வெங்குருநல் தோணிபுரம் பூந்தராய் வாய்ந்தஇஞ்சிச் சேமமிகு சிரபுரஞ்சீர்ப் புறவம்நிறை புகழ்ச்சண்பை காழிகொச்சை காமனூமூன் காய்ந்தநுதற் கண்ணவனூர் கழுமலநாங் கருதுமூரே. க

சருத்துடைய மறையவர்சேர் கழுமலம்மெய்த் தோணிபுரங் கனக மாட, உருத்திகழ்வெங் குருப்புகலி யோங்குதரா யுலகாருங் கொச்சை காழி, திருத்திகழுஞ் சிரபுரந்தே வேந்திரனூர் செங்கமலத் தயனூர் தெய்வத், தருத்திகழும் பொழிற்புறவஞ் சண்பைசடை முடியண்ணல் தங்குமூரே. உ

ஊர்மதியைக் கதுவவுயர் மதிற்சண்பை யொளிமருவு காழி கொச்சை, கார்மலியும் பொழில்புடைசூழ் கழுமலமெய்த் தோணிபுரங் கற்றேரேத்துஞ், சீர்மருவு பூந்தராய் சிரபுரம்மெய்ப் புறவம்அய னூர் பூங்கற்பத், தார்மருவும் இந்திரனூர் புகலிவெங் குருக்கங்கை தரித்தோ னூரே. ஊ

தரித்தமறை யாளர்மிகு வெங்குருச்சீர்த் தோணிபுரந் தரியாரிஞ்சி எரித்தவன்சேர் கழுமலமே கொச்சைபூந் தராய்புகலி யிமையோர்கோ

ணூர், தெரித்தபுகழ்ச் சிரபுரஞ்சீர் திகழ்காழி சண்பைசெழு மறைக ளெல்லாம், விரித்தபுகழ்ப் புறவம்விரைக் கமலத்தோ ணூருலகில் விளங்குமூரே. ச

விளங்கயணூர் பூந்தராய் மிகுசண்பை வேணுபுரம் மேகமேய்க் கும், இளங்கமுகம் பொழில்தோணி புரங்காழி யெழிற்புகலி புறவம் ஏரார், வளங்கவரும் வயற்கொச்சை வெங்குருமாச் சிரபுரம்வன் நஞ்ச மூண்டு, களங்கம்மலி களத்தவன்சீர்க் கழுமலங்கா மன்னுடலங் காய்ந் தோணூரே. ஞ

காய்ந்துவரு காலனையன் றுதைத்தவணூர் கழுமலமாத் தோணி புரஞ்சீர், ஏய்ந்தவெங் குருப்புகலி யிந்திரணூர் இருங்கமலத் தயணூர் இன்பம், வாய்ந்தபுற வந்திகழுஞ் சிரபுரப்பூந் தராய்கொச்சை காழி சண்பை, சேந்தணூமுன் பயந்துலகில் தேவர்கள்தம் பகைகெடுத் தோன் திகழுமூரே. ட

திகழ்மாடம் மலிசண்பை பூந்தராய் பிரமணூர் காழிதேசார், மிகு தோணி புரந்திகழும் வேணுபுரம் வயங்கொச்சை புறவம்விண்ணோர், புகழ்புகலி கழுமலஞ்சீர்ச் சிரபுரம்வெங் குருவெம்போர் மிகிடற்செற்று நிகழ்நீலி நின்மலன்றன் அடியிணைகள் பணிந்துலகில் நின்றவூரே. ண

நின்றமதில் சூழ்தருவெங் குருத்தோணி புரநிசமும் வேணுமன் றில், ஒன்றுகழு மலங்கொச்சை உயர்காழி சண்பைவளர் புறவம்ஓடி, சென்றுபுறங் காச்குமூர் சிரபுரப்பூந் தராய்புகலி தேவர்கோணூர், வென்றிமலி பிரமபுரம் பூதங்கள் தாங்காக்க மிக்கவூரே. அ

மிக்ககம லத்தயணூர் விளங்குபுற வஞ்சண்பை காழிகொச்சை, தொக்கபொழிற் கழுமலந்தூத் தோணிபுரம் பூந்தராய் சிலம்பன்சேரூர், மைக்கொள்பொழில் வேணுபுரம் மதிற்புகலி வெங்குருவல் அரக்கன் திண்தோள், ஒக்கஇரு பதுமுடிகள் ஒருபதுமீ டழித்துகந்த எம்மா ணூரே. கூ

எம்மான்சேர் வெங்குருச்சீர்ச் சிலம்பணூர் கழுமலநற் புகலியென் றும், பொய்ம்மாண்பி லோர்புறவங் கொச்சைபுரந் தரணூர்நல் தோணி புரம்போர்க், கைம்மாவை யுரிசெய்தோன் காழியய ணூர்தராய் சண் பைகாரின், மெய்ம்மால்பூ மகணுணரா வகைதழலாய் விளங்கியஎம் இறைவணூரே. கo

இறைவனமர் சண்பையெழிற் புறவம்அய ணூர்இமையோர்க் கதி பன்சேரூர், குறைவில்புகழ்ப் புகலிவெங் குருத்தோணி புரங்குணமார் பூந்தராய்நீர்ச், சிறைமலிநற் சிரபுரஞ்சீர்க் காழிவளர் கொச்சைசழு மலம்தேசின்றிப், பறிதலையோ டமண்கையர் சாக்கியர்கள் பரிசறியா அம்மாணூரே. கக

அம்மான்சேர் கழுமலமாச் சிரபுரம்வெங் குருக்கொச்சை புறவ மஞ்சீர், மெய்ம்மானத் தொண்புகலி மிகுகாழி தோணிபுரந் தேவர் கோனூர், அம்மான்மன் னுயர்சண்பை தராய்அயனூர் வழிமூடக்கு மாவின்பாச்சல். தம்மானென் றியஞான சம்பந்தன் தமிழ்கற்போர் தக்கோர்தாமே. கூ

திருச்சிற்றம்பலம்.

வழிமொழித்திருவிராகம்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சுரருலகு நரர்கள்பயில் தரணிதலம் முழுணழிய அரணமதில்முப் புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம் வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி சிரவுரையினுற் பிரமனுயர் அரனெழில்கொள் சரணவிண பரவவளர் பிரமபுரமே. க

தாணுமிகு வாணிசைகொள் தாணுவியர் பேணுமது காணுமளவிற் கோணுநுதல் நீள்நயனி கோணில்பிடி மாணிமது நாணும்வகையே ணுணுகரி பூணழிய வாணியல்கொள் மாணிபதி சேணமர்கோன் வேணுவிண யேணிநகர் காணிறிவி காணநடி வேணுபுரமே. உ

பகலொளிசெய் நகமணியை முகைமலரை நிகழ்சரண வகவுழுனிவர்க் ககலமலி சகலகலை மிகவுரைசெய் முகமுடைய பகவனிடமாம் பகைகளையும் வகையில்அறு முகஇறையை மிகஅருள நிகரிலிமையோர் புகவுலகு புகழளழில் திகழநக ழுலர்பெருகு புகலிநகரே. ங

அங்கண்மதி சங்கைகதி வெங்கண்அர வங்களெழில் தங்குமிதழித் துங்கமலர் தங்குசடை யங்கினிகர் எங்களிறை தங்குமிடமாம் வெங்கதிர்வி ளங்குலகம் எங்குமெதிர் பொங்கெரிபு லன்கள்களைவோர் வெங்குருவி ளங்கியுமை பங்கர்சர ணங்கள்பணி வெங்குருவமே. ச

ஆணியல்பு காணவன வாணவியல் பேணியெதிர் பாணமழைசேர் தூணியற நாணியற வேணுகில பேணியற நாணிவிசயன் பாணியமர் பூணவருள் மாணுபிர மாணியிட மேணிமுறையிற் பாணியுல காளமிக வாணின்மலி தோணிநகர் தோணிபுரமே. ஞ

நிராமய பராபர புராதன பராவுசிவ ராகவருளென் றிராவுமெ திராயது பராநின புராணனம ராதிபதியாம் அராமிசை யிராதெழில் தராயர பராயண வராகவுருவா தராயின விராயெரி பராய்மிகு தராய்மொழி விராயபதியே. ட

அரணியுறு முரணர்பலர் மரணம்வர விரணமதி லரமலிபடைக் கரம்விசிறு விரகனமர் கரணனுயர் பரனெறிகொள் கரனதிடமாம்

பரவமுது விரவவிடல் புரளமுறு மரவையரி சிரமரியவச்
சிரமரன சரணமவை பரவவிரு கிரகமமர் சிரபுரமதே. எ

அறமழிவு பெறவுலகு தெறுபுயவன் விறலழிய நிறுவிவிரன்மா,
மறையினெலி முறைமுரல்செய் பிறையெயிற னுறஅருளும் இறை
வனிடமாங், குறைவின்மிக நிறைதைதபுழி மறையமரர் நிறையருள
முறையொடுவரும், புறவனெதிர் நிறைநிலவு பொறையனுடல் பெற
வருளு புறவமதுவே. அ

விண்பயில மண்பகிரி வண்பிரமன் எண்பெரிய பண்படை
கொண்மால், கண்பரியு மொண்பொழிய நுண்பொருள்கள் தண்புகழ்
கொள் கண்டனிடமாம், மண்பரியு மொண்பொழிய நுண்புசகர் புண்
பயில விண்படரவச், சண்பைமொழி பண்பமுனி கண்பழிசெய் பண்பு
கூள சண்பைநகரே. கூ

பாழியுறை வேழம்நிகர் பாழமணர் சூழுமுட லாளருணரா
ஏழினிசை யாழின்மொழி யேழையவள் வாழுமிறை தாழுமிடமாங்
கீழிசைகொள் மேலுலகில் வாழரசு சூழரசு வாழவரனுக்
காழியகில் காழிசெய வேழுலகில் ஊழிவளர் காழிநகரே. கo

நச்சரவு கச்செனவ சைச்சுமதி யுச்சியின்மி லேச்சொருகையான்
மெய்ச்சிர மணைச்சுலகி னிச்சமிடு பிச்சையமர் பிச்சனிடமாம்
மச்சமத நச்சிமத மச்சிறுமி யைச்செய்தவ வச்சவிரதக்
கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்கள் நச்சிமிடை கொச்சைநகரே. கக

ஒழுகலரி தழிகலியில் உழியுலகு பழிபெருகு வழியைநினையா,
முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி குழுவினெடு கெழுவுசிவனைத்,
தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்,
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழி
தகையவே. கஉ

திருச்சிற்றம்பலம்.

ஈரடி. பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

வரமதெகொளா உரமதெசெயும் புரமெரித்தவன் பிரமநற்புரத்
தரன்நல்நாமமே பரவுவார்கள்சீர் விரவுநீள் புவியே. க

சேணுலாமதில் வேணுமண்ணுளோர் காணமன்றலார் வேணுநற்புரத்
தாணுவின்கழல் பேணுகின்றவ ராணியொத் தவரே. உ

அகலமார்தரைப் புகலும்நான்மறைக் கிகலியோர்கள்வாழ் புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச் சகலசேகரன் அகிலநா யகனே. ங

துங்கமாகரி பங்கமாவடுஞ் செங்கையாணிகழ் வெங்குருத்திகழ்
அங்கணன்அடி தங்கையால் தொழத் தங்குமோ வினையே. ச

காணியொண்பொருட்கற்றவர்க்கேகைபுடைமையோரவர்காதல்செய்யுநற்
றேணிவண்புரத் தாணியென்பவர் தூமதி யினரே. டு

ஏந்தராவெதிர் வாய்ந்ததுண்ணிடைப் பூந்தேணுதியாள் சேர்ந்தபங்கி
பூந்தராய்தொழும் மாந்தர்மேனிமேற் சேர்ந்திரா வினையே. [னன்

சுரபுரத்தினைத் துயர்செய்தாரசன் துஞ்சவெஞ்சினக் காளியைத்தருஞ்
சிரபுரத்துளா னென்னவல்லவர் சித்திபெற் றவரே. எ

உறவுமாகியற் றவர்களுக்குமா நிதிகொடுத்துநீள் புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்ச் சிறைவனேயெனத் தெறகிலா வினையே. அ

பண்புசேரிலங் கைக்குநாதனன் மூடிகள்பத்தையுங் கெடநெரித்தவன்
சண்பையாதியைத் தொழுமவர்களைச் சாதியா வினையே. கூ

ஆழியங்கையிற் கொண்டமாலயன் அறிவொணாததோர் வடிவுகொண்ட
காழிமாநகர்க் கடவுள்நாமமே கற்றல்நற் றவமே. [வன்

விச்சையொன்றிலாச் சமணர்சாக்கியப்பிச்சர்தங்களைக் கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க் கன்புசெய்பவர் குணங்கள் கூறுமினே. கக

கழுமலத்தினுட் கடவுள்பாதமே கருதுஞானசம் பந்தனின்தமிழ்
மூழுதும்வல்லவர்க் கின்பமே தரும்மு முச்கண்ணெம் மிறையே. கஉ

திருச்சிற்றம்பலம்.

திருவியமகம்

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றம் உகந்தது கந்தனையே பிரம புரத்தை உகந்தனையே. க

சதிமிக வந்த சலந்தரனே தடிசிர நேர்கொள் சலந்தரனே
அதிரொளி சேர்திகி ரிப்படையால் அமர்ந்தனர்உம்பர்து திப்படையால்
மதிதவழ் வெற்பது கைச்சிலையே மருவிட மேற்பது கைச்சிலையே
விதியினி லிட்டவி ரும்பரனே வெணு புரத்தைவி ரும்பரனே. உ

காதம பத்திகழ் தோடினனே கானவ ளுய்க்கடி தோடினனே
பாதம தாற்கூற் றுதைத்தனனே பார்த்தன் உடலம் புதைத்தனனே
தாதவிழ் கொன்றை தரித்தனனே சார்ந்தவி னையத ரித்தனனே
போதம் அமரும் உரைப்பொருளே புகலிய மர்ந்த பரம்பொருளே. ஊ

மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே
மெய்த்துடல் பூசுவர் மேன்மதியே வேதம தோதுவர் மேன்மதியே

பொய்த்தலை யோடிறு மத்தமதே புரிசடை வைத்தது மத்தமதே
வித்தக ராகிய வெங்குருவே விருப்பிய மர்ந்தனர் வெங்குருவே. ச

உடன்பயில் கின்றனன் மாதவனே யுறுபொறி காய்ந்திசைமாதவனே
திடம்பட மாமறை கண்டனனே திரிகுண மேவிய கண்டனனே
படங்கொள் அரவரை செய்தனனே பகடிரி கொண்டரை செய்தனனே
தொடர்ந்த துயர்க்கொரு நஞ்சிவனே தோணிபு ரத்துறை நஞ்சிவனே.

திகழ்கைய தும்புகை தங்கழலே தேவர் தொழுவதுந் தங்கழலே
இகழ்பவர் தாமொரு மானிடமே யிருந்தனு வோடெழில் மானிடமே
மிகவரு நீர்கொளு மஞ்சடையே மின்னிகர் கின்றது மஞ்சடையே
தகவிர தங்கொள்வர் சுந்தரரே தக்கத ராயுறை சுந்தரரே. கூ

ஓர்வரு கண்கள் இணைக்கயலே உமையவள் கண்கள் இணைக்கயலே
ஏர்மரு வுங்கழ னகமதே யெழில்கொளு தாசன னகமதே
நீர்வருகொந்தள கங்கையதே நெடுஞ்சடை மேவிய கங்கையதே
சேர்வரு யோகதி யம்பகனே சிரபுர மேயதி யம்பகனே. எ

ஈண்டு துயிலம ரப்பினனே யிருங்கணி டந்தடி யப்பினனே
தீண்டல ரும்பரி சக்கரமே திகழ்ந்தொளி சேர்வது சக்கரமே
வேண்டிவ ருந்தந கைத்தலையே மிகைத்தவ ரோடுந கைத்தலையே
பூண்டனர் சேரலு மாபதியே புறவம் அமர்ந்தவு மாபதியே. அ

நின்மணி வாயது நீழலையே நேசம தானவர் நீழலையே
உன்னிம னத்தெழு சங்கமதே யொளியத னோடிறு சங்கமதே
கன்னிய ரைக்கவ ருங்களனே கடல்விட முண்டக ருங்களனே
மன்னிவ ரைப்பதி சண்பையதே வாரிவ யன்மலி சண்பையதே. கூ

இலங்கை யரசக்ர் தமக்கிறையே யிடந்துகயிலை யெடுக்கிறையே
புலன்கள் கெடவுடன் பாடினனே பொறிகள் கெடவுடன் பாடினனே
இலங்கியமேனி யிராவணனே யெய்து பெயரும் இராவணனே
கலந்தருள் பெற்றது மாவசியே காழி யரனடி மாவசியே. கO

கண்ணிகழ் புண்டரி கத்தினனே கலந்திரி புண்டரி கத்தினனே
மண்ணிக ழும்பரி சேனமதே வானக மேய்வகை சேனமதே
நண்ணி யடிமுடி யெய்தலரே நளிர்மலி சோலையில் எய்தலரே
பண்ணியல் கொச்சை பசுபதியே பசுமிக வூர்வர் பசுபதியே. கக

பருமதில் மதுரைமன் அவையெதிரே பதிகமதெழுதிலை யவையெதிரே
வருநதி யிடைமிசை வருகனே வசையொடு மலர்கெட வருகனே
கருதலில் இசைமுரல் தருமருளே கழுமலம் அமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கனமொழியே வல்லவர் தம்மிடர் திடமொழியே.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகங்கள்.



திருத்தோணிபுரம். பண் - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாதி யன்று மணைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவன்நா னென்னுமென் தையலே. க

நக்கம் வந்து பலியிடென் றூர்க்கிட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணி புரவர்க்குத்
தக்க தன்று தமது பெருமைக்கே. உ

கெண்டை போல்நய னத்திம வான்மகள்
வண்டு வார்குழ லாளுட னுகவே
துண்ட வான்பிறைத் தோணி புரவரைக்
கண்டு காமுறு கின்றனள் கன்னியே. ங

பாலை யாழ்மொழி யாளவள் தாழ்சடை
மேல ளாவது கண்டனள் விண்ணுறச்
சோலை யார்தரு தோணி புரவர்க்குச்
சால நல்லளா கின்றனள் தையலே. ச

பண்ணின் நேர்மொழி யாள்பலி யிட்டவிப்
பெண்ணை மால்கொடு பெய்வளை கொள்வது
சுண்ண மாடிய தோணிபு ரத்துறை
அண்ண லாருக்குச் சால அழகிதே. ஞ

மூல்லை வெண்நகை மொய்குழ லாயுனக்
கல்ல னுவ தறிந்திலை நீகணித்
தொல்லை யார்பொழில் தோணி புரவர்க்கே
நல்லை யாயிடு கின்றனை நங்கையே. ட

ஒன்று தானறி யாருல கத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்

துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடிங் குறிப்பது வாகுமே. எ

உறவு பேய்க்கண முண்பது வெண்தலை
உறைவ தீமம் உடலிலோர் பெண்கொடி
துறைக ளார்கடல் தோணி புரத்துறை
இறைவ னூர்க்கிவ ளென்கண்டன் பாவமே. அ

மாக யானை மருப்பேர் மூலையினர்
போக யானு மவள்புக்க தேபுகத்
தோகை சேர்தரு தோணி புரவர்க்கே
ஆக யானு மவர்க்கினி யாளதே. கூ

இட்ட மாயின செய்வாளென் பெண்கொடி
கட்டம் பேசிய காரரக் கன்றனைத்
துட்ட டக்கிய தோணி புரத்துறை
அட்ட மூர்த்திக்கு அன்பது வாகியே. கo

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

தி ரு க் க ழு ம ல ம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளின மேந்தின வென்பர் நளிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித் தாடுங் கழுமலவர்க்
காளன்றி மற்றுமுண் டோஅந்த ணாழி யகலிடமே. க

கடையார் கொடிநெடு மாடங்க ளெங்குங் கலந்திலங்க
உடையா னுடைதலை மாலையுஞ் சூடி யுகந்தருளி
விடைதா னுடையஅவ் வேதியன் வாழுங் கழுமலத்துள்
அடைவார் வினைக ளவையெள்க் நாள்தொறு மாடிவமே. உ

திரைவாய்ப் பெருங்கடல் முத்தங் குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய் நுரைச்சிய சோடிக் கழுமலத் துள்ளமுந்தும்
விரைவாய் நறுமலர் சூடிய விண்ணவன் தன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு நந்தமை யாள்வனவே. ங

விரிக்கும் அருமறை வேதங்க ளோதும் விழுமியநூல்
உரைக்கி லரும்பொரு ளுள்ளுவர் கேட்கி லுலகமுற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள் பாடக் கழுமலவன்
நிருத்தம் பழம்படி யாடுங் கழல்நம்மை யாள்வனவே. ச

சிந்தித் தெழுமன மேநினை யாமுன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்கவல் லாளைப் பசுபதியைச்
சந்தித்த கால மறுத்துமென் றெண்ணி யிருந்தவர்க்கு
மூந்திக் தொழுகழல் நாடொறும் நந்தமை யாள்வனவே. ரு

நிலையும் பெருமையு நீதியுஞ் சால அழகுடைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்று மிதந்தவித் தோணிபுரம்
சிலையில் திரிபுர மூன்றெரித் தார்தங் கழுமலவர்
அலருங் கழலடி நாள்தொறு நந்தமை யாள்வனவே. சு

முற்றிக் கிடந்து முந்நீரின் மிதந்துடன் மொய்த்தமரர்
சுற்றிக் கிடந்து தொழப்படு கின்றது சூழரவம்
தெற்றிக் கிடந்துவெங் கொன்றளந் துன்றிவெண் திங்கள்சூடும்
கற்றைச் சடைமுடி யார்க்கிட மாய கழுமலமே. எ

உடலு முயிரு மொருவழிச் செல்லு முலகத்துள்ளே
அடையு மூனவந் தடைந்தா ரமர ரடியிணைக்கீழ்
நடையும் விழவொடு நாடொறு மல்குங் கழுமலத்துள்
விடையன் தனிப்பத நாடொறு நந்தமை யாள்வனவே. அ

பரவைக் கடல்நஞ்சை யுண்டது மில்லையிப் பார்முழுதும்
நிரவிக்கிடந்து தொழப்படு கின்றது நீண்டிருவர்
சிரமப் படவந்து சார்ந்தார் கழலடி காண்பதற்கே
அரவக் கழலடி நாடொறு நந்தமை யாள்வனவே. கூ

கரையார் கடல்சூ ழிலங்கையர் கோன்தன் முடிசிதற்
தொலையா மலரடி யூன்றலு மூள்ளம் விதிர்விதிர்த்துத்
தலையாய்க் கிடந்துயர்ந் தான்றன் கழுமலங் காண்பதற்கே
அலையாப் பரிசிவை நாடொறு நந்தமை யாள்வனவே. கo

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருக்கழுமலம்.

திருச்சிற்றம்பலம்.

படையார் மழுவொன்று பற்றிய கையன் பதிவினவில்
கடையார் கொடிகெடு மாடங்க ளோங்குங் கழுமலமாம்
மடைவாய்க் குருகினம் பாஅல் விரிதொறும் வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு பேரா திருக்கும் பெரும்பதியே. க

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப் பதிகம்.

திருக்கழுமலம். பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தவெந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தவெம் மானை
ஏதிலென் மனத்துக் கொரிரும் புண்டநீரை
எண்வகை யொருவனை யெங்கள் பிரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. க

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டவொண் சுடரை
மூத்தியும் ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. உ

திருத்தினை நகருறை சேந்தனப் பனென்
செய்வினை யறுத்திடுஞ் செம்பொனை யம்பொன்
ஒருத்தனை யல்லதிங் காரையு முண்ரேன்
உணர்வுபெற் றேனுய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட் டாதுவிட் டிருந்தேன்
கருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. ங

மழைக்கரும் பும்மலர்க் கொன்றையி னானை
வஞைக்கலுற் றேன்மற வாமனம் பெற்றேன்

பிழைத்தொரு காலினிப் போய்ப்பிற வாமைப்
பெருமைபெற் றேன்பெற்ற தார்பெறு கிற்பார்
குழைக்கருங் கண்டனைக் கண்டுகொள் வானே
பாடுகின்றேன் சென்று கூடவும் வல்லேன்
கழைக்கரும் புங்கத லிப்பல சோலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. ச

குண்டலங் குழைதிகழ் காதனே யென்றுங்
கொடுமழு வாட்படைக் குழகனே யென்றும்
வண்டலம் பும்மலர்க் கொன்றைய னென்றும்
வாய்வெரு வித்தொழு தேன்விதி யாலே
பண்டைநம் பலமன முங்களுந் தொன்முய்ப்
பசுபதி பதிவின விப்பல நாளுங்
கண்டலங் கழிக்கரை யோதம்வந் தலவுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. ஞ

வரும்பெரும் வல்வினை யென்றிருந் தெண்ணி
வருந்தலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
விரும்பியென் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி
வேண்டினின் றேதொழு தேன்விதி யாலே
அரும்பினை யலரினை யழுதினைத் தேனை
யையனை யறவனென் பிறவிவே ரறுக்குங்
கரும்பினைப் பெருஞ்செந்நெல் கெருங்கிய கழனிக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. சு

அயலவர் பரவவும் அடியவர் தொழவும்
அன்பர்கள் சற்யலு ளடையலுற் றிருந்தேன்
முயல்பவர் பின்சென்று முயல்வலை யானை
படுமென மொழிந்தவர் வழிமுழு தெண்ணிப்
புயலினைத் திருவினைப் பொன்னின தொளியை
மின்னின துருவை யென்னிடைப் பொருளைக்
கயலினஞ் சேலொடு வயல்வினை யாடுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. எ

நினைதரு பாவங்கள் நாசங்க ளாக
நினைந்துமுன் தொழுதெழப் பட்டவொண் சுடரை
மலைதரு மலைமகள் கணவனை வானோர்
மாமணி மாணிக்கத் தைமறைப் பொருளை
புனைதரு புகழினை யெங்கள தொளியை
யிருவரு மொருவனென் றுணர்வரி யவனைக்
கனைதரு கருங்கட லோதம்வந் தலவுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. அ

மறையிடைத் துணிந்தவர் மீனயிடை யிருப்ப
வஞ்சனை செய்தவர் பொய்கையு மாயத்
துறையுறக் குளித்துள தாகவைத் துய்த்த
வுண்மையெ னுந்தக வின்மையை யோரேன்
பிறையுடைச் சடையனை யெங்கள் பிரானைப்
பேரரு ளாளனைக் காரிருள் போன்ற
கறையணி மிடறுடை யடிகளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. கூ

செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட்
டழுமலர்க் கண்ணினை யடியவர்க் கல்லால்
அறிவரி தவன்றிரு வடியினை யிரண்டுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேன்
சடையன்றன் காதலன் பாடிய பத்துந்
தொழுமல ரெடுத்தகை யடியவர் தம்மைத்
தன்பமும் இடும்பையுஞ் சூழகி லாவே. கo

திருச்சிற்றம்பலம்.




சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகம்.



திருக்கோலக்கா. பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. க

பெண்தான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே. உ

பூணற் பொறிகொள் அரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானேயே
பேணப் பறையும் பிணிக ளானவே. ங

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே. ச

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. ஞ

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே. ட

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே. ண

எறியார் கடல்சூழ் இலங்கைக் கோன்தனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே. த

நாற்ற மலர்மேல் அயனும் நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றுன் பாதம் ஏத்தி வாழ்மினே. ந

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. க0

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானேயே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரப்பதிகம்.



திருக்கோலக்கா. பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

புற்றில் வாளர வார்த்த பிராணப் பூத நாதனைப் பாதமே தொழுவார், பற்று வான்றுணை யெனக்கெளி வந்த பாவ நாசனை மேவரி யாணை, முற்ற லார்திரி புரமொரு மூன்றும் பொன்ற வென்றிமால் வரையெரி யம்பாக், கொற்ற வில்லங்கை யேந்திய கோணைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.

அங்க மாறுமா மறையொரு நான்கும் ஆய நம்பனை வேய்புரை தோளி, தங்கு மாதிரு வுருவுடை யானைத் தழன்ம திசடை மேற்புனைந் தானை, வெங்க ணானையி னீருரி யாணை விண்ணு ளாரொடு மண்ணு ளார் பரசுங், கொங்கு லாம்பொழிற் குரவெறி கமழுங் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. உ

பாட்ட கத்திசை யாகிநின் றுணைப் பத்தர் சித்தம் பரிவினி யாணை,* நாட்ட கத்தேவர் செய்கையு ளாணை நட்ட மாடியை நம் பெரு மானைக், காட்ட கத்துறு புலியுரி யாணைக் கண்ணெர் மூன்றுடை யண்ணலை யடியேன், கோட்ட கப்புன லார்செழுங் கழனிக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ங

ஆத்த மென்றெனை யாளுகந் தானை யமரர் நாதனைக் குமரனைப் பயந்த, வார்த்த யங்கிய மூலமட மானை வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த, தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத் தில்லை யம்பலத் துள்நிறைந் தாடுங், கூத்த னைக்குரு மாமணி தன்னைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ச

அன்று வந்தெனை யகலிடத் தவர்முன் ஆள தாகவென் றுவணங் காட்டி, நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த நித்தி லத்திரள்

---

* நாட்டகத் தேவ ரென்பதனை "நாட்டுத் தேவர்கள் நாடரும் பொருளே" யென்னுந் திருவாசகத்தானு முணர்க.

தொத்தினே முத்திக், கொன்றி ஞன்றனே யும்பர் பிராணே உயரும் வல்லர ணங்கெடச் சீறுங், குன்ற வில்லியை மெல்லிய லுடனே கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ருு

காற்றுத் தீப்புன லாகினின் ருனைக் கடவு ஹாக்கொடு மால்விடை யாணை, நீற்றுத் தீயுரு வாய்நிமிர்ந் தாணை நிரம்பு பல்கலை யின்பொரு ளாலே, போற்றித் தன்கழற் றெழுமவ னுயிரைப் போக்கு வானுயிர் நீக்கிடத் தாளால், கூற்றைத் தீங்குசெய் குரைகழ லாணைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. சூ

அன்ற யன்சிர மரிந்ததிற் பலிகொண் டமர ருக்கருள் வெளிப் படுத் தாணைத், துன்று பைங்கழ லிற்சிலம் பார்த்த சோதி யைச்சுடர் போலொளி யாணை, மின்ற யங்கிய இடைமட மங்கை மேவு மீசனை வாசமா முடிமேல், கொன்றை யஞ்சடைக் குழகனை யழகார் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. எ

நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞான சம்பந்த னுக்குல கவர்முன், தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந் தன்மை யாளனை யென் மனக் கருத்தை, ஆளும் பூதங்கள் பாடநின் றாடும் அங்க ணன்றனை யெண்கண மிறைஞ்சுங், கோளி லிப்பெருங் கோயி லுள்ளானைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. அ

அரக்க னுற்ற லழித்தவன் பாட்டுக் கன்றி ரங்கிய வென்றியி னானைப், பரக்கும் பாரளித் துண்டுகந் தவர்கள் பரவி யும்பணி தற்கரி யாணைச், சிரக்கண் வாய்செவி மூக்குயர் காய மாகித் தீவினை தீர்த்த வெம் மானைக், குரக்கி னங்குதி கொண்டுகள் வயல்சூழ் கோலக் காவி னிற் கண்டுகொண் டேனே. கூ

கோட ரம்பயில் சடையுடைக் கரும்பைக் கோலக் காவுளெம் மானெமெய்ம் மானப், பாட ரங்குடி யடியவர் விரும்பப் பயிலு நாவலா ரூரன்வன் றெண்டன், நாடி ரங்கிமுன் னறியுமந் நெறியால் நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர், காட ரங்கென நடநவின் றுன் பாற் கதியு மெய்துவர் பதியவர்க் கதுவே. கo

திருச்சிற்றம்பலம்.



இதுவரை முதல் ஏழு திருமுறைகளில் கண்டவை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந் திருமுறை.

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

திருவாசகம்.

திருத்தோணிபுரத்தில் அருளிய

பிடித்தபத்து.

முத்திக் கலப்புரைத்தல்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சிருடைக்கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. க

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
விஞ்ஞையனே னுடைய்மெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணுய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. உ

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ரூ

அருளுடைச் சுடரே யளிந்தசீர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலியே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. உ

ஒப்புனக் கில்லா வொருவனே யடியேன்
உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்தசீ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. ரு

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவியே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே யடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. சூ

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே

ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. எ

அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாது மீறில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. அ

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. கூ

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தருட் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. கo

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினொராந் திருமுறை.

பட்டணத்துப் பிள்ளையார் அருளிச்செய்த

திருக்கழுமல மும்மணிக்கோவை*



திருச்சிற்றம்பலம்.

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல வொருகூ
றிமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை யிருதெனக்
கதிர்விடு நின்முகங் காண்டொறுங் காண்டொறும்
முதிரா இளமுலை முற்றுக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதல் தெய்வச் சிறுபிறை
இளநிலாக் காண்டொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதஞ் செவ்வி செய்யநின்
செங்கைக் கமல மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த
மலைமகள் தனது நயனக் குவளைநின்
பொலிவினெடு மலர மறையோர்
கழுமல நெறிநின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை யுலகங் கீழ்முதல் தாழ்ந்திங்
கொன்று வந்த குன்று வெள்ளத்
துலகமூன் றுக்குங் கலக ணுகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையொ டுவந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னை யோவென் றழைப்பமூன் றின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனைத் திரளை யவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென

---

* மும்மணிக்கோவை : ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை முறையே விரவிவரும் கோவை.

அவனைக் காட்டுவன் அப்ப வானூர்
தோலுடையு செவியன் என்றும்
பீலிடையு பெம்மான் என்றுங்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே. க

அருளின் கடல்அடியேன் அன்பென்னு மாறு
பொருளின் திரள்புகலி நாதன்—இருள்புகுதுங்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்க்
கண்டத்தார் தாமார் அதற்கு. உ

ஆரண நான்கிற்கும் அப்பா லவன் அறியத்துணிந்த
நாரணன் நான்முக னுக்கரி யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப் பிரான்பொழில் அத்தனைக்குங்
காரணன் அந்தக் கரணங் கடந்த கருப்பொருளே. ங

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாங்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனுந்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித்
துன்ப இருணீத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி(சு)
எந்தை நீயிருக்க விட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து
நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்
கெழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே. ச

மானும் மழுவுந் திருமிடற்றில் வாழும்இருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. ரு

ஒளிவந்த வாபொய் மனத்திருள் நீங்கஎன் னுள்ளவெள்ளந்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல வாணர்தம் இன்னருளே. சு

அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத் தாடகக் குடுமி
மழைவயிறு கிழிக்குங் கழுமல வாணநின்
வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவை யுடன்இருந்த பரம யோகி
யாஞென் றுணர்த்துவன் எந்தை மேஞள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமுந் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எணப்பல யோனியும் நினைப்பரும் பேதத்(து)
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியுந் தந்தைய ராகியும்
வந்தி லாதவர் இல்லை யான்அவர்
தந்தைய ராகிபுந் தாய ராகியும்
வந்தி ராததும் இல்லை மூந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்ஞ உயிர்களும் இல்லை யான்அவை
தம்மைத் தின்ஞ தொழிந்ததும் இல்லைஅனைத்தே
காலமுஞ் சென்றது யான்இதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலுந்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே யாயினும்
இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல்நின் கடனே. எ

கடலான காமத்தே கால்தாழ்வர் துன்பம்
அடலாம் உபாயம் அறியார்—உடலாம்

மூழுமலத்தை ஓர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். அ

தொழுவாள் இவள்வளை தோற்பாள் இவளிடர்க் கேயலர்கொண்
டெழுவாள் எழுகின்ற தென்செய வோளன் மனத்திருந்துங்
கழுவா மணியைக் கழுமல வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளணைக்கண்டு வந்ததென் றுலொர் வசையில்லையே. கூ

வசையில் காட்சி இசைநனி விளங்க
மூன்னுள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறு வேறுபெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பில் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக
அமைநாண் மென்தோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியிற் சிறந்த வொற்றை நாட்டத்துக்
காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானை
கல்லா உளத்திற் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுந்தண்நாட் டத்துக்
காண்டொறுங் காண்டொறும் எல்லா மியாண்டை
யாயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வது மாகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனப்பல வாகி
இல்லன வுளவா யுள்ள காணுப்
பன்னுள் இருள்வயிற் பட்டேன் அன்னதும்
அன்ன தாதலின் அதிக்கும தென்னெனிற்
கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி
ஒழிவின் றொன்றின் ஒன்று தடுமாற
வந்தாற் போல வந்த தெந்தைநின்
திருவருள் நாட்டங் கருணையிற் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே. கo

எனவே எழுந்திருந்தாள் என்செய்வாள் இன்னஞ்
சினவேறு காட்டுதிரேல் தீரும்—இனவேகப்
பாம்புகலி யாளிமிரும் பன்னுச் சடைமுடிநம் .
பூம்புகலி யான் இதழிப் போது. ககo

போதும் பெருவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெருவிடில் நெஞ்சுண்டன் றேயிணை யாகச்செப்புஞ்
சூதும் பெருமூலப் பங்கர்தென் தோணிபு ரேசர்வண்டின்
தாதும் பெருத அடித்தா மரைசென்று சார்வதற்கே. கஉ

சார்ந்தவர்ப் புரக்கும் ஈர்ஞ்சடைப் பெரும
கருணைமுது வெள்ளம் பெருகு திருநயன
கைவல நெல்லியங் கனியது போலச்
சைவசித் தாந்தத் தெய்வ ஆகமத்தை
வரன்முறை பகர்ந்த திருமலர் வாய
பவளவரை மீதில் தவளமின் என்னச்
செப்பரு மார்பணி மூப்புரி நூல
பேரிகல் ஆணவக் காரிரு ளினுக்கும்
மின்தொடர் வல்வினை வன்தொட ரினுக்கும்
மாயைமா மாயை ஆயபே யினுக்கும்
அஞ்சலென் றமைத்த சுஞ்சமென் கரதல
அருமறைச் சிரத்தும் பெருமை மெய்யன்பர்
துங்க இதயத்துந் தங்குபொற் பாதம்
துன்னிய பயோதர மின்னின மிடைதலின்
அளப்பருந் பெருமை வளத்தினை விளைத்தலின்
சந்திர திலகஞ் சிந்துற மருவலின்
உறுகண் தீரவந் துறுமுழை யுறுதலின்
சாதமுறை சுழீஇச் சோதிமீ தமர்தலின்
பணியெழும் அரவம் பிணையொடு மேவலின்
காமரஞ் செவ்வழி காமரின் எய்தலின்
அளகையெதி ரென்னும் ஆசையுற் றுறைதலின்
ஆடக மருவி நீடறை பெறுதலின்
நாட்டியத் தோகை ஈட்டமங் கணைதலின்
அகத்தியன் மன்னு மகத்துவஞ் சிவணலின்
மலையா சலமென நிலைசேர் மாட
மாளிகை சூழ்ந்த சூளிகைப் புரிசை
நேமிமால் வரையெனப் பூமிமீ திலங்குங்
காழிமா நகரத் தூழிதோ றமர்ந்த
அமையா அன்பின் உமையாள் கொழுந
தெரியகான் முகன்பணி பெரிய நாயகனின்
பொன்மலர்ப் பாதஞ் சென்னிவைத் திறைஞ்சுதும்

மேற்படு மிதயப் பாற்கடல் நடுவுள்
பரம்பரை தவறு வரம்பெறு குரவன்
மருளற இரங்கி அருளிய குறியெனும்
நிந்தையில் கனக மந்தரம் நிறுவி
மாணறி வென்னுந் தூணிடைப் பிணித்த
நேசம் என்னும் வாசுகி கொளுவி
மதித்தல் என்னும் மதித்தலை யுளற்றிய
பேரா இன்பச் சீரா னந்தப்
பெறலறும் அமுதந் திறனெடும் பெற்று
ஞானவாய் கொண்டு மோனமாய் உண்டு
பிறப்பிறப் பென்னு மறப்பெரும் பயத்தாற்
பன்னுட் பட்ட வின்னுங் ககற்றி
என்னையுந் தன்னையும் மறந்திட்
டின்ப மேலீ டெய்துதற் பொருட்டே. ஙக

பொருளாசை பெண்ணாசை பூவாசை என்னும்
மருளாசை யாமாசை மாற்றித்—தெருள்ஞான
வேந்தராய் வாழலாம் மெய்யன்பால் நன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று. சஞ

போற்றும் பழமறை வாசிப் புனிதர் புகலிவெற்பன்
ஆற்றுந் தவத்தினைக் கண்டே நகைத்த தனிக்கொண்முல்லை
தூற்றும் புயல்வட காற்றோ டடிக்கத் தொடங்குமதிக்
கீற்றிங் கெனது மனங்குழம் பாகக் கிடைத்ததின்றே. ஞஞ

இன்றென உளதென அன்றென ஆமென
உரைதரு நூலையும் பொருளையுந் தனித்தனி
பல்விதமாகச் சொல்வகைச் சமய
மாகிய பயம்பிற் போகுதல் குறித்த
நிலையில் துறைபல நிலையுள துறைசில
பொருந்திடும் உலகப் பெருங்கட லிடத்தின்
மயிர்நூல் கிடத்திப் பயில்வுறு தோலெனும்
வன்புறு பல்கையின் என்பெனு மாணியின்
நரம்பெனப் பெயரிய உரம்பெறு கயிற்றின்
வெரிநுறும் என்பெனும் பரிய கூம்பின்
ஐம்பொறி யாகிய மொய்ம்புறு வாய்தலிற்
காயமென அமைத்த மாய நாவாயில்
இருவினை என்ன வருசரக் கேற்றிக்
காமமு லோப மேமமா மோகம்
மிதமறு குரோத மதமாற் சரியமென்
றுரைபெறு பவனர் நிறையுற விருத்தி

நெடுநீ ரென்னப் படுநெடு நாணில்
தங்கிய மடியெனும் நங்குரஞ் சேர்த்தி
அற்றமின் மனமெனப் பெற்றபாய் விரித்துத்
தடைபடா ஆசைக் கடுவளி தூரப்பத்
தான மாதி யானதீ வுகளிற்
செல்வுழிச் சென்று புல்வழிப் புல்லி
இவ்வா றியங்கு மவ்வா றதனுள்
மூன்பார் கால வன்பார் தாக்கத்
தொக்குறு மரக்கலம் பக்குவிட் டம்ம
அக்கடல் நீருட் புக்கறி வழியுழி
மறலி என்னுஞ் சுரவு பிடித் தீர்ப்பக்
கடுநர கென்னும் படுகுழி யழுந்தி
உளதுய ரினுக்கோர் அளவிலை யதனுல்
இம்முறை இயங்குதல் செம்மையன் றென்று
மூற்றுணர் பெரியோய் அற்றமில் வலியோய்
ஒதா துணர்ந்த நாதா தீத
அருவுரு வென்னும் பொருள்முழு துடையோய்
யாவரும் நின்வயம் மேவரப் புரிவோய்
கரையறும் இன்பப் புரைதவிர் நிமல
சாந்தணி வனமுலை ஏந்திழை பாக
ஞானமாம் மணநிறை மோனமா மலரே
வித்தகம் பழுத்த முத்திவான் கனியே
பரைமுத லும்பணி நிரைபெறக் கிளைத்த
திருத்தகு நீழல் அருட்பெருந் தருவே
பத்திகொள் நித்திலம் ஒத்துற நிரைத்த
பசும்பொனிற் செய்த தசும்புபல தொக்க
தோற்றம் போல வீற்றுவீற் றமைந்த
தீங்கனி பணிதொறுந் தாங்குமா தளியும்
வித்துரு மத்திணை யொத்தசெந் தளிரும்
ஒளிர்வயி டூரியக் குளிர்மது மலரும்
மேலிடு வண்டெனும் நீலமா மணியும்
மரகத மென்ன விரவுகாய்த் திரளும்
மறுவின்மா மணியெனும் நறியசெங் கனியுங்
கிடைத்தசீர் வணிகரிற் படைத்தமாந் தருவும்
எண்டிசை சூழ்ந்து விண்தொடும் புகலி
மேவிய பெருமை வாலிகா யகனே
கணபணக் கச்சைப் பணஅர வசைத்த
மட்டலர் புழுகணி சட்டை நாயகன்
என்னுமீ காமன் மன்னினன் புரப்பநீ
வீற்றினி திருக்க ஏற்றமெய்ப் பிரணவத்

தோணியே பற்றெனத் துணிந்து
காணுறும் அறிவொடு கண்டுகொண் டேனே. கசு

கண்டேன் புகலிக் கருத்தனைத் தன் மெய்ஞ்ஞான
வண்டேன துண் டேமகிழும் வண்டானேன்—பண்டே
அளியனுமா னேன்மனமெய் யார்பதம்வே றின்றிக்
குளிர்சிவா னந்தமிலங் கும். களி

கும்பிட்ட பத்தர்க் கழியாத இன்பங் கொடுக்குமுத்தர்
வம்பிட்ட கொங்கை யுமைபாகர் சண்பையர் வந்திலரேல்
கொம்பிட்ட கோழிக் கொடிவேந்தன் கொச்சையைக் கொல்வதனால்
அம்பிட்ட கட்கிற் றிடைச்சிக்கென் னேபய னுகுவதே. கஅ

ஆகுவா கனனைத் தோகைவா கனனை
உற்றசீர் மகாரெனப் பெற்றசுந் தரனே
ஞானவா ரிதியில் ஆனஆ ரமுதே
கற்றவர் கருதும் நற்றவக் கரும்பே
இருட்குறும் பெறிந்த அருட்கலா மதியே
கதிர்த்தொகை குன்ற துதித்தசெங் கதிரே
நிறைந்தஅன் பலரின் உறைந்தசெந் தேனே
துன்பமொன் றறியா இன்ப வாரிதியே
மறைமுடி விளக்குஞ் சுடர்விடு மணியே
விறலரி பிரமன் பெறலரும் பொருளே
சிற்பநூல் முழுதும் அற்பமின் றுணர்ந்த
ஓவியர் அற்புத மேவுகைத் தொழிலர்
சுத்தவெண் படிகப் பித்திகைத் தலத்தின்
நவமணி தெளித்துக் குவவின கூர்நுதித்
தூரியங் கொண்டு சீரிதிற் குயிற்றும்
இமைப்பிலா நாட்டத் தமைப்பருங் கலாப
நீலமே காரமுங் கோலமார் குயிலுங்
குப்பமர் வளைவாய் ஒப்பறு பச்சைத்
தகைசிறைக் கிளியும் புகைநிறப் புறவும்
மேல்நிமிர் தூவிப் பால்நில வனமும்
நன்மது நிகர்த்த இன்மொழிப் பூவையும்
இனமெனக் கருதி மனமுவந் தணைத்த
உயிர்நிலை பெற்ற மயில்முதற் பறவையுங்
கூறுபட நோக்கினர் வேறுபா டறியா
வளஞெடு செறிந்த அளவிலா மாடத்
துறைதரு கற்பு நிறைகுல மடவார்
அளிமுரல் குழலும் களிகிளர் முகமுங்
குலாவிய புருவமும் நிலாவிரி குழையும்

நறியமென் சொல்லுஞ் சிறியதுண் ணிடையுந்
தத்துநீர் உவரி முத்தமா லிகையும்
பிரளய வெள்ளத் திரளினும் அழியாத்
திருநகர் இதுவெனக் கருதிவான் முகிலுஞ்
சந்திர விம்பமும் இந்திர தனுவும்
இலங்குசெங் கதிருந் துலங்குவான் அமுதும்
வாரா மின்னுந் தாரா கணமும்
ஒருங்குவந் திருந்த பெருந்திறன் ஏய்ப்பக்
காட்சியிற் பொலிந்த மாட்சிமை சிறந்த
காழி நாயகனே வாழி பூரணனே
ஏர்தரும் பொற்கிரி சேர்கருங் கொடியும்
பொன்னிற மாமெனச் சொன்னதொன் மொழியும்
ஏதமில் நிறைமதிச் சீதள நிலவால்
ஆருமெய் யுருப்பந் தீரும்என் பதுவு
மொழிதரு மிரத குளிகைதற் சேர்ந்த
காளிமச் சிருண நீளியற் கனக
மாமெனக் கூறுந் தோமறு மொழியுங்
கருட தியான மருட பவந்தோர்
நோக்கினில் தவிருந் தீக்கடு வென்றலும்
ஆயிரங் கிரணத் தலர்கதிர் மூன்னம்
பாயிருள் கெடுமெனப் பகர்பழ மொழியும்
அங்கண்மா ஞாலத் தெங்கணும் ஒப்ப
இயலும் பட்டாங் கயலல என்னல்
சரதமெய்ஞ் ஞான வரதநிற் சேர்ந்த
பேதையேன் பாசத் தீவினை யகற்றித்
திருவருட் செல்வம் பெருகுமா றுதவி
அளித்தருள் பேரின் பாகும்
களித்திடு முத்திக் காழிவான் கனியே. கக

காழிக்கு வேந்தர் கருணை யரர்முனம்நீ
காழிக் குமாரன் கவிகையினை —ஆழிக்கட்
கண்டமட்டிற் சூடகமுங் கார்விழியிற் கங்கணமுங்
கொண்டனளென் றன்னமே கூறு. உ0

கூறுஞ் செனனக் குடினெடு நாணுழை கூன்முழுதும்
மாறும் படிக்கு மருந்துளதோ சண்பை வாணர்கொண்ட
நீறுந் திருவெழுத் தோரைந்துங் கண்டியும் நித்தநித்தந்
தேறும் பொருளென் றுணராத மாயச் செருக்கினர்க்கே. உக

செருக்குடன் இகலித் தருக்கமே தேற்றி
எம்ம னோரின் இறந்துபிறந் தழலும்
மம்மரிற் பெரிய வானவர் குழுவை

மெய்ப்பொருள் என்று கைப்பொருள் உதவியும்
வழுத்தியும் நெஞ்சத் தழுத்தியும் வறிதே
புறவார் பசும்புற் கறவாக் கற்பசு
வாயிடைச் செருகித் தூயநீர் உதவி
அருஞ்சுவைப் பால்கொளப் பெருஞ்சுரை வருடும்
பேதையர் போலவும் ஓதுநூ சமரும்
எட்டியை விரும்பி மட்டுநீர்த் தேக்கி
ஈறுழை கல்லா மேல்நிமிர் வேலி
உறும்படி யமைத்து நறுங்கனி கொள்ளக்
கருதி முயலுந் திருவிலி போலவும்
இலகு வாலரிசி உலைபெய எண்ணி
வெற்றுமி குற்றும் பற்றிலர் போலவும்
அருநிலம் உழுததில் எருமிகப் பெய்து
வித்திட் டாங்கே விளைபயன் கொள்ளச்
சித்தத் துன்னும் மத்தர் போலவும்
வாழ்நாள் அணைத்தும் வீண்நாள் ஆக்கி
இம்மையும் மறுமையுஞ் செம்மையிற் பொருந்தா
திடருறு மாந்தர் புடவியிற் பலரால்
அன்னவா றெளியனும் உன்னிமதி மயங்கா
தெய்ப்பினில் உதவும் மெய்ப்பொரு ளாகி
என்றுமோ ரியல்பொடு நின்ற காரணநின்
சேவடித் தாமரைப் பூவிணைப் புணைந்து
நாத்தழும் பேற ஏத்தியுள் ளுருகிப்
பெருகிய அன்பென வருநீர் நிறைந்த
இதய வாவிப் பதுமமா மலரின்
குணனெனப் பொருந்து மணமாம் நின்னைக்
கண்டிறு மாந்து பண்டைவா தனைதீர்ந்
தறைகடல் அழுந்தும் நிறைகுட மதுபோன்
றசைவற் றிருக்க இசையத் தருதி
நிலைமிகப் பொருந்திப் பலமுறை சாரலால்
உந்திய வன்ன வுருமரு வுதலான்
மந்திரத் துறுசுடர் மகத்துயர் தலைஞல்
இதம்பயில் இசைகொள் பதங்கலந் துறுதலால்
வேதமே ஓப்பென வோதுகோ புரமும்
ஒழுங்குநெறி சிறிதும் வழுக்கில அதனுல்
நாற்பதப் பிரிவில்நின் மேற்பதம் அதனுல்
பலகலை ஒளிர்மதி நிலவிய அதனுல்
மூத்தரை வியக்கும் பத்திமை அதனுல்
சிவாகம மெனவொளிர் தவாமணி மேடையும்
வெள்ளவா ரணமேற் கொள்ளுமாங் கதனுல்

கட்டா மறைபல மட்டார் தலிஞல்
அஞ்சு மந்தாரம் விஞ்சியோங் குதலால்
இந்திர னெனப்பொலி யந்திர வாவியும்
எங்கணும் நிறைந்த வெங்குரு நாதா
கருவலி தொலைக்கும் பெருமலை மருந்தே
கருணைசூற் கொண்ட பெரியவான் முகிலே
சிற்றிடைக் கருங்கட் பொற்றொடிக் கரத்தாள்
ஆகமார் வனமூலை யணையும்
போகமார் இதழிப் பூங்கண் ணியனே. உ உ

கண்ணின் றெளிருங் கருமணியின் உள்ஒளிபோல்
உண்ணின் றெளிரும் ஒளிவிளக்கென்—றெண்ணிப்
புகலிப் பெருமானைப் புண்ணியனைப் போற்றில்
அகலுமே பாசஇருள் அன்று. உ ங

இருளந் தகன்வரின் ஈரெயி றேபிறை ஏய்ந்தசெவ்வான்
சுருள்குஞ்சி பாச மெனஅந்தி வந்தது தோகைசொற்றேன்
பருகும் புகலிப் பிரானெனும் பாதப் பலகிரணம்
பெருகும் படிவந் துதித்தான் மின்னுவி பெறுகுவளே. உ ச

பெறுவது பெற்ற உறுதி உத்தமர்கட்
காயினுஞ் சிறந்த நேயநெஞ் சினனே
யாகக் கழனியின் யோகத் தபோதனர்
ஆன பேருழவர் மானமோ டாக்கிய
முயலகன் என்னும் இயல்பெருங் கரும்பை
உதிர மென்னும் முதிர்சா றெழுக
நகையெனும் முத்தந் தொகையுறத் தோன்றச்
சுந்தரப் பதமெனும் எந்திர ஆலையிட்
டரைத்தக வைரங் கரைத்தவித் தகனே
குங்குமக் கொங்கை அங்கயற் செங்கட்
பெண்ணரசி பிரியா வண்ணமெய்ப் பாக
பாடலம் புன்னை ஏடவிழ் இலஞ்சி
வெளிய கற்பூரங் களிகொள் கத்தூரி
நறுமணம் எவையும் உறுமுறை பொருந்தி
உண்ணீர் பெற்ற தண்ணீர்ப் பந்தரும்
நெய்கமழ் கருணையுங் குய்கமழ் கறியும்
மதிதரு நிலவெனப் புதியவெண் தயிரும்
வருக்கையின் கனியுஞ் சருக்கரைக் கட்டியும்
முதலுப கரணம் பதனெமி மரீஇத்
தளவரும் பென்ன வனமலி போனக
மாதவர் எவர்க்கும் ஆதுலர் எவர்க்கும்
நன்னயத் துடன்அருள் அன்னசத் திரமும்

பாடகச் சீறடிப் பால்மொழி மடவார்
நாடகத் தொழில்பயில் நீடரங் கெவையுங்
கலைபயில் கழகமும் பலர்பயில் மன்றமும்
உள்ளன கரவா துவந்தெதிர்ந் தளிக்கும்
வள்ளியோர் வாழும் மணிநெடு வீதியும்
பூமகள் உறையு ளாமென விளங்கும்
பெரும்புகழ்க் காழி விரும்புசங் கரனே
ஏந்தெழிற் புவன வேந்தநீ யாதலின்
வளமலி நான்முகக் களமரு னேவலின்
உரம்பெறு குலவரைக் குறும்பகப் பட்ட
மண்டலம் என்னுங் கண்டநீள் வயலுட்
சராசரத் தொகுதி விராயவித் திட்டுப்
பாதவ மிருகம் பறவை மானிடர்
ஆதிப் பைங்கூழ் அமைத்தனர் நிற்ப
மாவுறை மருமக் காவ லாளர்
வளமையின் ஓம்ப வினைவு முற்றியபின்
புரிபயன் பெறுவா னரிதர வியற்றி
மெய்வலிக் கூற்றுவக் கைவினை மாக்களிற்
புலாலுடை யாக்கைப் பலாலம தகற்றி
அற்றமில் உயிரெனப் பெற்றநெல் திரளைப்
பூதசா ரத்ததுப் பூதமா காதது
பூதபரி ணாமம் புகலுறு யாக்கை
மூவகைப் பண்டியின் மேவர ஏற்றிப்
பொன்னிலம் நிரயம் இந்நிலம் என்னும்
இடந்தொறும் ஆங்கவை அடங்கவைத் தவற்றுள்
ஒருசில வற்றைநின் திருவடி வீட்டிற்
சேர்த்தனை யன்னது கூர்த்து நோக்கில்
அரசுகொள் கடமை ஆறிலொன் றென்னும்
புரைதீர் முறைமை புதுக்கினை போலும் அதனுல்
மாசுக நீயுறும் வண்மை
பேசுக கருணைப் பெரிய நாயகனே. உடு

பெருமானே கூடிப் பிரிந்தாலும் அங்கைக்
கொருவா தருள்வரமென் றுண்டே—திருமால்
விடையாய் புகலி விமலா மவுன
விடையாய் பிரியா விடை. உசு

விடையம் பொருளென் றுணராத மார்க்கம் விரும்புமழுப்
படையம் புயக்கரத் தெந்தாதை ஞான பரமன்றெண்
சடையம் புனலணி வேணுபு ரேசனத் தாள்மலர்ஞா
விடையம் பொருளென் றிருநீயென் றுண்மை விளம்பினனே.

விளம்புவன் யாஞென் றுளம்புகு நெறியால்
எழுத்தின் உறழாது வழுத்துபொருள் இன்றிக்
குறிப்பொடு படாது வெறித்தபுன் சொல்லே
யாயினும் பயந்ததம் சேயவர் சொலுமொழி
குழலினும் யாழினும் அழகிதாம் அதுபோல்
நற்ரு யாகியெற் பெற்ரும் என்சொல்
திருச்செவிக் கேறும் பொருத்தமுண் டதனுற்
கேட்டி கேட்டி வாட்டமில் பெரியோய்
மதுமழை பிலிற்றிப் புதுமணம் விரித்துப்
பற்பல வுதவுங் கற்பகத் தருவும்
நந்தா வளனருட் சிந்தா மணியும்
வாமமா மேனிய காம தேனுவும்
அருளிய ஏவல் வரன்முறை கேட்பக்
கடவுளர் அணிமணித் தடமகு டங்கள்
காற்றுணை வருடப் போற்றினர் இறைஞ்சி
முனிவ ராசி நனிபல மொழியக்
கரம்பயில் கவரி அரம்பையர் இரட்டக்
கின்னரர் விபஞ்சி நன்னரம் புளரா
விசைய முதிருஞ் செவிமிசை யெடுத்தூற்ற
முடங்குளைச் செங்கண் மடங்கலணை நாப்பண்
அமுதுகு மென்சொற் குமுதமென் செவ்வாய்
இந்தி ராணிவந் தருகி ருப்பக்
கருமுகி லாயிரந் திருமலர் பூத்துச்
செங்கதிர்ச் சேகரந் தங்கவீற் றிருந்த
பெருந்திறன் கடிப்ப இருந்து விண்புரக்கும்
அண்ணல் புரந்தரப் பண்ணவன் அரசும்
பழமறை கனிந்து மழவுபெற் றிருந்த
செந்நாத் தவிசின் முன்னுள் தங்கிப்
பனுவ லாட்டி இனிதுவந் திருப்ப
வண்டுபாண் முரன்று கிண்டுபு தைதைந்து
பொற்ரு துண்ணு முற்ரு இன்பப்
பிரசமுற் றிருந்த வரசரோ ருகத்தன்
நெருக்கியப் புவனப் பெருக்கினைத் தனது
திண்ணிய மனத்திடை எண்ணியாங் கியற்றி
எம்மால் எவையும் இயன்றன என்னச்
செம்மாந் திருக்குஞ் சிறிய வாழ்க்கையும்
தித்தலூழ் தலர்ந்து மதகளி றிகலி
வருமூலை சுமந்த திருமகள் பச்சைப்
பசுந்துழாய் அலங்கல் அசும்புதேன் துளித்துக்
கடிகமழ் மார்பிற் குடிபுகுந் திருப்பத்

தண்நில வெனவிரி வெண்ணிறப் பாற்கடல்
ஒல்லொலித் தரங்கம் மெல்லடி வருடக்
காமர்தென் கால்எ னுஞ் சாமரை அசையத்
துத்திநெய்ப் பரந்து பைத்தபை அகலில்
அணிகிளர் பலகதிர் மணிவிளக் கொளிரச்
சுடிகைவா ளரவம் நெடியபூ வணைமேல்
மறுஇலா நீல வரைகிடந் தென்ன
அறிதுயில் அமர்ந்த அச்சுதன் வாழ்க்கையும்
அழியர் இன்பமென் றுழியா துரைப்பினுங்
கற்றவர் கருத்தின் உற்று நோக்குழி
இந்திர சாலம் முந்துநீள் கனவு
வெண்தேர் போல உண்டெனத் தோன்றி
இலவாம் ஆதலின் நலமல ஆங்கவை
நிலைபே றுடையது நின்னருட் செல்வம்
அன்னதே பெறுதற்(கு) உன்னினன் தமியேன்
அதனால்
எளிதினில் இரங்கி அளிசுரந் தருளுதி
மகதத் திடையிடை தரளமிட் டிழைத்த
அரமியம் அதனே விரிகுழை பொதுளி
அரும்பிய புன்னைப் பெரும்பொழில் எனவும்
ஆடக அலங்கல் அணியணி நிரைத்த
சேடியர் நீல்நிறச் செய்குன் றதனைத்
துணர்த்தபூங் கொன்றை மணத்த காளனவும்
மொய்க்கும் வண்சிறை அளிமைக்கரு நிறங்கள்
பளிங்கரிந் தியற்றிய துளங்கொளி மாடப்
பித்திகைத் தலத்திடைப் பத்திபாய் தலினால்
வந்தது திங் கிரவெனச் சந்ததம் மடவார்
வார்முலை ஆடவர் மார்பிடைக் குளிப்பப்
புல்லிய கலவிப் புதிய தேன்நுகரும்
மல்லலங் காழி வளநகர் வாண
குறிகுணங் கடந்த மறுவில்மா மணியே
உறைபொருள் எங்கணும் நிறைபரி பூரண
அந்தம் ஆதி முன்தையே தவிர்த்த
அனாதி முத்த என்ஆதி நித்த
அருவுரு இல்லா ஒருபெரும் பொருளே
அளவையின் அடங்கா தொளிர்சுக நேய
உருகுமெய் யன்பர் பருகுமா ரமுதே
நலங்கனி பெரிய நாயகி
கலந்தபே ரின்பிற் கலித்தபண் ணவனே. உஅ

பணம்அஞ் சரையிருக்கப் பாவையரைச் சும்மா
புணர்கின்றீர் என்று புகலப்—புணர்வார்க்
கரைக்காசு தந்தனமென் றூர்புகலி யார்மா
அரைக்காசென் றூளதற்கு மான். உக

மானைக் கலந்த மணவாளன் காழி வரதன்செங்க
ணானைப் புரந்தவன் பத்தர்க்கு முத்தி யளித்தருளும்
ஏனைப் பெரும்பொருள் கல்விமெய்ச் செல்வம் இருந்தளிப்பார்
தேனைத் தருஞ்செழுந் தாமரை நாமகள் சேர்திருவே. ஈ0

குறிப்பு :—இந்நூல் 13—30 செய்யுட்கள் பழைய பதிப்புகளிற் காணப்படவில்லை. புதியபதிப்புகளிற் கண்டபடி இங்கே அச்சிடப் பட்டன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்.

பார்மண் டலத்தினிற் பன்னிரு பேரொடு மன்னிநின்ற
நீர்மண்ட லப்படப் பைப்பிர மாபுரம் நீறணிந்த
கார்மண் டலக்கண்டத் தெண்தடந் தோளன் கருணைபெற்ற
தார்மண் டலமணி சம்பந்தன் மேவிய தண்பதியே. க

பதிகப் பெருவழி காட்டப் பருப்பதக் கோன்பயந்த
மதியத் திருநுதல் பங்கன் அருள்பெற வைத்தளங்கள்
நிதியைப் பிரமா புரநகர் மன்னனை என்னுடைய
கதியைக் கருதவல் லோர்அம ராவதி காப்பவரே. உ

காப்பயில் காழிக் கவுணியர் தீபற்கென் காரணமா
மாப்பழி வாரா வகையிருப் பேன்என்ன மாரன்என்னை
பூப்பயில் வாளிகள் அஞ்சும்என் னெஞ்சரங் கப்புகுந்த
வேப்பயில் வார்சிலை கால்வளை யாநிற்கு மீண்டிரவே. ங

இரவும் பகலும்நின் பாதத் தலர்என் வழிமுழுதும்
பரவும் பரிசே அருளுகண் டாய்இந்தப் *பாரகத்தே
விரவும் பரமத கோளரி யேகுட வெள்வளைகள்
தரளஞ் சொரியுங் கடல்புடை சூழ்ந்த தராய்மன்னனே. ச

மன்னிய மோகச் சுவையொளி யூறோசை நாற்றம்என்றிப்
பன்னிய ஐந்தின் பதங்கடந் தோர்க்குந் தொடர்வரிய
பொன்னியல் பாடகக் கிங்கிணிப் பாத நிழல்புகுவோர்
துன்னிய காவமர் சண்பையர் நாதற்குத் தொண்டர்களே. ஞ

தொண்டினஞ் சூழச் சுரிகுழ லார்தம் மனந்தொடர
வண்டினஞ் சூழ வருமிவன் போலும் மயில்உகுத்த
கண்டினஞ் சூழ்ந்த வளைபிரம் போர்கழு வாவுடலம்
விண்டினஞ் சூழக் கழுவின வாக்கிய வித்தகனே. ட

வித்தகம் பேசிநம் வேணுத் தலைவனை வாள்நிகர்த்து
முத்தகங் காட்டும் முறுவல்நல் லார்தம் மனம்அணைய
உய்த்தகம் போந்திருந் தாள்ளவும் இல்லா தனவுமுறு
பொத்தகம் போலும் முதுபுலைப் பாணன் புணர்க்கின்றதே. எ

---

* "பழனத்தர்தம் - புரையுங் குமுதத் தமுதத்தவர் வெண்குமுதம்வளை" என்றும் பாடம்.

புணர்ந்தநன் மேகச் சிறுநுண் துளியிற் சிறகொதுக்கி
உணர்ந்தனர் போல இருந்தணை யால்உல கம்பரசுங்
குணந்திகழ் ஞானசம் பந்தன் கொடிமதிற் கொச்சையின்வாய்
மணந்தவர் போயின சோசொல்லு வாழி மடக்குருகே. அ

குருந்தலர் முல்லையங் கோவலர் ஏற்றின் கொலைமருப்பால்
அருந்திற லாகத் துழுதசெஞ் சேற்றரு காசனிதன்
பெருந்திற மாமதிற் சண்பை நகர்அன்ன பேரமைத்தோட்
டிருந்திழை யார்வம்.....மூரசே. கூ

முரசங் கறையமுன் தோரண நீடமுழங் கியின்
பரிசங் கொணர்வான் அமைகின் றனர்பலர் பார்த்தினீ
அரிசங் கணைதலென் னுமன் கருதரு காசனிதன்
சுரிசங் கணைவயற் றந்த நகரன்ன தூமொழிக்கே. கO

மொழிவது சைவ சிகாமணி மூரித் தடவரைத்தோள்
தொழுவது மற்றவன் தூமலர்ப் பாதங்கள் தாமங்கமழ்ந்
தெழுவது கூந்தல்அம் பூந்தா மரையினி யாதுகொலோ
மொழிவது சேரி மூரிப்புதை மாதர் முறுவலித்தே. கக

வலிகெழு குண்டர்க்கு வைகைக் கரையன்று வான்கொடுத்த
கலிகெழு திண்தோள் கவுணியர் தீபன் கடலுடுத்த
ஒலிதரு நீர்வை யகத்தை யுறையிட்ட தொத்துதிரு
மலிதரு வார்பனி யாமட மாதினை வாட்டுவதே. கஉ

வாட்டுவர் தத்தந் துயரைவன் சேழலின் பின்புசென்ற
வேட்டுவர் கோலத்து வேதத் தலைவனை மெல்விரலால்
"தோட்டியல் காதன் இவன்" என்று தாதைக்குச் சூழ்விசும்பிற்
காட்டிய கன்றின் கழற்றிற மானவை கற்றவரே. கங

அவர்சென் றணுகுவர் மீள்வதிங் கன்னை அருகர்தம்மைத்
தவர்கின்ற தண்தமிழ்ச் சைவ சிகாமணி சண்பைஎன்னப்
பவர்கின்ற நீள்கொடிக் கோபுரம் பல்கதி ரோன்பரியைக்
கவர்கின்ற சூலத் தொடுநின்று தோன்றுங் கடிநகரே. கச

நகரங் கெடப்பண்டு திண்தேர் மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவ னைப்பதி னொரு பிரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையத் துயர்கெட வாய்மொழிந்த
நிகரங் கிலிகலிக் காழிப் பிரான்என்பர் நீள்நிலத்தே. கடு

நிலமே றியமருப் பிற்றிரு மாலும் நிலம்படைத்த
குலமே றியமலர்க் கோகன தத்தய னுங்கொழிக்குஞ்
சலமே றியமுடி தாள்கண் டிலர்தந்தை காணஅன்று
நலமே றியபுகழ்ச் சம்பந்தன் காட்டிய நாதனையே. கசு

நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கிஅஃதே
போதின் மலிவயல் ஆக்கிய கோன்அமர் பொற்புகலி
மேதை நெடுங்கடல் வாருங் கயலோ விலைக்குனது
காதின் அளவு மிளிர்கய லோசொல்லு காரிகையே. கள

கைம்மையி னுன்நின் கழல்பர வாதுகண் டார்க்கிவனோர்
வன்மைய னேஎன்னும் வண்ணம் நடித்து விழுப்பொருளோ(டு)
இம்மையில் யான்எய்தும் இன்பங் கருதித் திரிதருமத்
தன்மையி னேற்கும் அருளுதி யோசொல்லு சம்பந்தனே, கஅ

பந்தார் அணிவிரற் பங்கையக் கொங்கைப் பவளச்செவ்வாய்க்
கொந்தார் நறுங்குழல் கோமள வல்லியைக் கூறருஞ்சீர்
நந்தா விளக்கினைக் கண்டது நான்எப் பொழுதுமுன்னுஞ்
சந்தார் அகலத் தருகா சனிதன் தடவரையே. கக

வரைகொண்ட மாமதிற் சண்பைத் தலைவனை வாழ்த்தலர்போல்
நிரைகொண்டு வானோர் கடைந்ததில் நஞ்ச நிகழக்கொலா
நுரைகொண்டு மெய்ப்பரத் துள்ளஞ் சுழலநொந் தோர்இரவுந்
திரைகொண் டலமரும் இவ்அகல் ஞாலஞ் செறிகடலே. உ0

கடலன்ன பொய்மைகள் செய்யினும் வெய்ய கடுநரகத்
திடகமன் ஏவுதற் கெவ்விடத் தான்இருஞ் செந்தமிழால்
திடமன்னு மாமதிற் சண்பைத் தலைவன்செந் தாமரையின்
வடமன்னு நீள்முடி யானடிப் போதவை வாழ்த்தினமே. உக

வாழ்த்துவ தெம்பர மேயாகும் அந்தத்து வையமுந்நீர்
ஆழ்த்திய காலத்தும் ஆழா ததுஅரன் சேவடியே
ஏத்திய ஞானசம் பந்தற் கிடம்இசைத் தும்பிகொற்பர்க்
காத்திகழ் கேதகம் போதகம் ஈனுங் கழுமலமே. உஉ

மலர்பயில் வாட்கண்ணி கேள்கண்ணி நீள்முடி வண்கமலப்
பலர்பயில் கீர்த்திக் கவுணியர் தீபன் பகைவரென்னத்
தலைபயில் பூம்புனங் கொய்திடு மேகணி யார்புலம்ப
வலர்பயி லாமுன் பறித்தன மாகில் அரும்பினையே. உங

அரும்பின அன்பில்லை அர்ச்சனை இல்லை அரன்நெறியே
விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி செய்கிலம் பொய்க்கமைந்த
விரும்பின உள்ளத்தி னேற்கெங்ங னேவந்து சேர்பட்டதால்
கரும்பன நீள்வயல் சூழ்காழி நாதன் கழலடியே. உச

அடியால் அலர்மிதித் தாலரத் தம்பில்க மிர்தமின்றிக்
கொடியா னெடும்பின் னடந்தெவ் வாறலர் கோகனதக்
கடியார் நறுங்கண்ணி ஞானசம் பந்தன் கருதலர்சேர்
வெடியா விடுவெம் பரற்சுடு காறு வியன்சுரத்தே. உடு

சுரபுரத் தார்தந் துயருக் கிரங்கிச் சுரர்கள் தங்கள்
பரபுரத் தார்தந் துயர்கண் டருளும் பரமன்மன் னு
மரபுரத் தான்அடி எய்துவன் என்ப தவனடிசேர்
சிரபுரத் தான்அடி யாரடி யேன்என் னுந் திண்ணனவே. உசு

திண்ணன வாசென்ற நாட்டிடை இல்லைகொல் தீந்தமிழோர்
கண்ணென வோங்குங் கவுணியர் தீபன்கை போற்பொழிந்து
விண்ணின வாய்முல்லை மெல்லரும் பீனமற் றியாம்மெலிய
எண்ணின நாள்வழு வாதிரைத் தோடி எழுமுகிலே. உள

எழுவாள் மதியால் வெதுப்புண் டலமந் தெழுந்துவிம்மித்
தொழுவாள் தனக்கின் றருளுங்கொ லாந்தொழு நீரவைகைக்
குழுவா யெதிர்ந்த உறிகைப் பறித்தலைக் குண்டர்தங்கள்
கழுவா உடலங் கழுவின வாக்கிய கற்பகமே. உஅ

கற்பா நறவ மணிகொழித் துந்து மலைச்சிலம்பா
நற்பா மொழியெழில் ஞானசம் பந்தன் புறவமன்ன
விற்பா நுதலிதன் மென்முலை யின்னிளஞ் செவ்விகண்டிட்
டிற்பா விடும்வண்ணம் எண் ணுகின் ரூள் அம்ம எம்மனே யே. உக

எம்அனை யாய்எந்தை யாய்என்னை ஆண்டென் துயர்தவிர்த்த
செம்மலர் நீள்முடி ஞானசம் பந்தன் புறவமன்னீர்
வெம்முனை வேல்என்ன என்ன மிளிர்ந்து வெளுத்தரிபோன்
றும்மன வோஅல்ல வோவந்தென் உள்ளத் தொளிர்வனவே. ஈ0

ஒளிறு மணிப்பணி நாட்டும் உலகத்தும் உம்பருள்ளும்
வெளிறு படச்சில நிற்பதுண் டேமிண்டி மீனுகளும்
அளறு வயற்சண்பை நாதன் அழுதப் பதிகமென் னுங்
களிறு விடப்புகு மேற்றெண்டர் பாடுங் கவிதைகளே. ஈக

கவிக்குத் தகுவன கண்ணுக் கினியன கேட்கில்இன்பஞ்
செவிக்குத் தகுவன சிந்தைக் குரியன பைந்தரள
நவிக்கட் சிறுமியர் முற்றின் முகந்துதஞ் சிற்றில்தொறுங்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை நாதன் குரைகழலே. ஈஉ

கழல்கின்ற ஐங்கணை அந்தியும் அன்றிலுங் கால்பரப்பிட்
டிழல்கின்ற தென்றலும் வந்திங் கடர்ப்பவன் ரூயிழைக்காச்
சுழல்கின்ற நஞ்சந் தணித்தவன் தன்னைத் தொடர்ந்துபின்போய்
உழல்கின்ற நெஞ்சமிங் கென்னை இனிஇன்று உறுகின்றதே. ஈஈ

உறுகின்ற அன்பிலை டொத்திய தாளமும் உள்ளுருகிப்
பெறுகின்ற இன்பும் பிறைநுதல் மூண்டமுங் கண்டவரைத்
தெறுகின்ற வாறென்ன செய்தவ மோவந்தென் சிந்தையுள்ளே
துறுகின்ற பாதன் கழுமலம் போலுந் துடியிடைக்கே. ஈச

இடையும் எழுதா தொழியலு மாம்இன வண்டுகளின்
புடையும் எழுதிலும் பூங்குழல் ஒக்கும்அப் பொன்னனையாள்
நடையும் நகையுந் தமிழா கரன்றன் புகலிநற்றேன்
அடையும் மொழியும் எழுதிடிற் சால அதிசயமே. கூடு

மேனுட் டமரர் தொழவிருப் பாரும் விணைப்பயன்கள்
தாநாட் டருநர கிற்றளர் வாருந் தமிழர்தங்கள்
கோனுட் டருகர் குழாம்வென்ற கொச்சையர் கோன்கமலப்
பூநாட் டடிபணிந் தாரும்அல் லாத புலையருமே. கூசு

புலையடித் தொண்டனைப் பூசுர னுக்கிப் பொருகயற்கண்
மலைமடப் பாவைக்கு மாநட மாடும் மணியைஎன்றன்
தலையிடைப் பாதனைக் கற்றுங் குரைத்தசம் பந்தன்என்னு
முலையிடைப் பொன்கொண்டு சங்கிழந் தாள்என்றன் மொய்குழலே.

குழலியல் இன்கவி ஞானசம் பந்தன் குரைகழல்போல்
கழலியல் பாதம் பணிந்தேதன் உனையுங் கதிரவனை
தழலியல் வெம்மை தணித்தருள் நீதணி யாதவெம்மை
அழலியல் கான்நடங் தாள்வினை யேன்பெற்ற ஆரணங்கே. கூஅ

அணங்கமர் யாழ்மூரித் தாண்பனை பெண்பனை யாக்கிஅமண்
கணங்கழு வேற்றிக் கடிவிடங் தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீர்எதிர் ஓடஞ் செலுத்தின வெண்பிறையோ
டிணங்கிய மாடச் சிரபுரத் தான்றன் இருந்தமிழே. கூக

இருந்தண் புகலிகோ லக்கா எழில்ஆ வடுதுறைசீர்
பொருந்தும் அரத்துறை போனகந் தாளம்நன் பொன்சிவிகை
அருந்திட வொத்தமுத் தீசெய வேற அரனளித்த
பெருந்தகை சீரினை எம்பர மோநின்று பேசுவமே. சO

பேசுந் தகையதன் றேஇன் றும்அன் றுந் தமிழ்விரகன்
தேச முழுதும் மழைமறந் தூண்கெடச் செந்தழற்கை
ஈசன் திருவரு ளால்எழில் வீழி மிழலையின்வாய்க்
காசின் மழைபொழிந் தான்என்றிஞ் ஞாலங் கவின்பெறவே. சக

பெறுவது நிச்சயம் அஞ்சல்நெஞ் சேபிர மாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம் பந்தனை வாழ்த்துதலால்
வெறியுறு கொன்றை மறியுறு செங்கை விடைஎடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெரு மான்அமர் பொன்னுலகே. சஉ

பொன்னுர் மதில்சூழ் புகலிக் கரசை அருகர்தங்கள்
தென்னுட் டரண்அட்ட சிங்கத் தினைஎஞ் சிவன்இவனென்
றந்நாள் குழலைத் திருவாய் மொழிகள் அருளிச்செய்த
என்னுனை யைப்பணி வார்க்கில்லை காண்கய மாலயமே. சங

மாலையொப் பாகும் பிறைமுன்பு நின்று மணிகுறுக்கி
வேலையைப் பாடணைந் தாங்கெழில் மன்மதன் விற்குனித்த
கோலைஎப் போதும் பிடிப்பன் வடுப்படு கொக்கினஞ்சூழ்
சோலையைக் காழித் தலிவன் மலர்இன்று சூடிடினே. சச

சூடுநற் ரூர்த்தமி ழாகரன் தன்பொற் சுடர்வரைத்தோள்
கூடுதற் கேசற்ற கொம்பிணை நீயுங் கொடும்பகைநின்(று)
ஆடுதற் கேயத் தணைக்குணை யேநின்ணை ஆடரவம்
வாடிடக் காரும் மறுவும் படுகின்ற வாண்மதியே. சரி

மதிக்கத் தகுநுதல் மாதொடும் எங்கள் மலையில்வைகித்
துதிக்கத் தகுசண்பை நாதன் சுருதி கடந்துழவோர்
மிதிக்கக் கமல முகிழ்த்ததண் தேனுண்டு மிண்டிவரால்
குதிக்கக் குருகிரி யுங்கொச்சை நாடு குறுகுமினே. சசு

குறுமன முள்கல வாத்தமி ழாகரன் கொச்சையன்ன
நறுமலர் மென்குழ லாய்அஞ்சல் எம்மூர் நகுமதிசென்(று)
உறுமணை யொண்சுவர் ஓவியக் கிள்ளைக்கு நும்பதியிற்
சிறுமிகள் சென்றிருந் தங்கையை நீட்டுவர் சேயிழையே. சள

இழைவளர் ஆகத்து ஞானசம் பந்தன் இருஞ்சுருதிக்
கழைவளர் குன்று கடத்தலுங் காண்பீர் கடைகியர்நீள்
முழைவளர் நண்டு படத்தடஞ் சாலிமுத் துக்கிளச்சும்
மழைவளர் நீள்குடு மிப்பொழில் சூழ்ந்த வளவயலே. சஅ

வயலார் மருகற் பதிதன்னில் வாளர வாற்கடியுண்
டயலா விழுந்த அவனுக் கிரங்கி அறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்துயர் தீர்த்த கருணைவெள்ளப்
புயலார் தருகையி ஞன்என்னைத் தோன்றிடும் புண்ணியமே. சகூ

புண்ணிய நாடு புகுவற் காகப் புலன்அடக்கி
எண்ணிய செய்தொழில் நிற்பதெல் லாருமின்றி யான்எனக்கு
நண்ணிய செய்தொழில் ஞானசம் பந்தணை நந்தமர்நீர்க்
கண்ணியன் மாடக் கழுமலத் தாணைக் கருதுவதே. ரு0

கருதத் தவஅருள் ஈந்தருள் ஞானசம் பந்தன்சண்பை
இரதக் கிளிமொழி மாதேத கலங்கல் இவருடலம்
பொருதக் கழுநிரை யாக்குவன் நுந்தமர் போர்ப்படையேன்
மருதச் சிணையிற் பொதும்பருள் ஏறி மறைகுவனே. ருக

மறைமுழங் குங்குழ லார்கலி காட்ட வயற்கடைஞர்
பறைமுழங் கும்புக லித்தமி ழாகரன் பற்றலர்போல்
துறைமுழங் குங்கரி சீறி மடங்கல் சுடர்ப்பளிங்கின்
அறைமுழங் கும்வழி நீவிற் சால வரும்பழியே. ருஉ

பழிக்கே தகுகின்ற தின்றிப் பிறைபல் கதிர்விழுந்த
வழிக்கே திகழ்தரு செக்கரைக் கொச்சை வயவரென் னும்
மொழிக்கே விரும்பி மூளரிக் கலமரும் ஓவியர்தங்
கிழிக்கே தரும்உரு வத்திவள் வாட்டிடக் கீள்கின்றமே தை. நிஈ

கீளரிக் குன்றத் தரவம் உமிழ்ந்த கிளர்மணியின்
வாளரிக் கும்வைகை மாண்டனர் என்பர் வயற்புகலித்
தாளரிக் கும்மரி யான்அருள் பெற்ற பரசமய
கோளரிக் குங்கி ராத்தமிழ் நாட்டுள்ள குண்டர்களே. நிச

குண்டகழ் சூழ்தரு கொச்சைத் தலைவன்றன் குன்றகஞ்சேர்
வண்டக மென்மலர் வில்லியன் னீர்வரி விற்புருவக்
கண்டக வாளி படப்புடை வீழ்செங் கலங்கலொடும்
புண்டகக் கேழல் புகுந்தஅண் மோதுங்கள் பூம்புனத்தே தை. நிடி

புனத்தெழு கைம்மதக் குன்றம தாய்அங்கோர் புண்கலையாய்
வனத்தெழு சந்தனப் பைந்தழை யாய்வந்து வந்தடியேன்
மனத்தெழு பொற்கழல் ஞானசம் பந்தன்வண் கொச்சைஅன்னுள்
கனத்தெழு கொங்கைக ளாய்அல்கு லாய்த்திவர் கட்டுரையே. நிசு

கட்டது வேகொண்டு கள்ளுண்டு நுங்கைக ளாற்சுணங்கை
இட்டது வேயன்றி எட்டணைத் தான்இவள் உள்ளுறுநோய்
விட்டது வேயன்றி வெங்குரு நாதன்றன் பங்கயத்தின்
மட்டவிழ் தார்கொண்டு சூட்டுமின் பேதை மகிழ்வுறவே. நிள

உறவும் பொருளும்ஒண் போகமும் கல்வியுங் கல்வியுற்ற
துறவுந் துறவிப் பயனும் எனக்குச் சுழிந்தபுனற்
புறவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்புந் ததும்புமண்டின்
நறவும் பொழில்எழிற் காழியர் கோன்திரு நாமங்களே. நிஅ

நாம்உகந் தீதத்திய ஞானசம் பந்தனை நண்ணலர்போல்
ஏமுக வெஞ்சரஞ் சிந்திவல் இஞ்சி இடிபடுக்கத்
தீமுகந் தோன்றிகள் தோன்றத் தளவ முகையரும்பக்
காமுகம் பூமுகங் காட்டிநின் றூர்த்தன காரினமே. நிசு

காரங் கணைபொழிற் காழிக் கவுணியர் தீபன்நல்லூர்ச்
சீரங் கணைநற் பெருமணந் தன்னிற் சிவபுரத்து
வாரங் கணைகொங்கை மாதொடும் புக்குறும் போதுவந்தார்
ஆரங் கொழிந்தனர் பெற்றதல் லால்அவ் அரும்பதமே. சுO

அரும்பத மாக்கும் அடியரொ டஞ்சலித் தார்க்கரிய
பெரும்பதம் எய்தலுற் றீர்வந் திறைஞ்சுமின் பேர்அரவம்
வரும்பத நான்மறைக் காழித் தலைவன் மலர்க்கமலத்
தரும்பத ஞானசம் பந்தன்என் ஞானதன் தாளிணையே. சுக

தாளின் சரணந் தருஞ்சண்பை நாதன் தரியலர்போற்
கீளின் மலங்க விலங்கே புகுந்திடுங் கெண்டைகளும்
வாளுந் தொலைய மதர்த்திரு காதின் அளவும்வந்து
மீளுங் கருங்கண்ணி மின்புரி யாவைத்த மென்னகையே. கூஉ

நகுகின்ற மூல்லைநண் ணுர்எரி கண்டத் தவர்கவர்ந்த
மிகுகின்ற நன்னிதி காட்டின கொன்றை விரவலூர்
புகுகின்ற தீயெனப் பூத்தன தோன்றி புறவமன்னைத்
தகுகின்ற கோடல்கள் அன்பரின் றெய்துவர் கார்மயிலே. கூங

மயிலேந் தியவள்ளல் தன்னே யளிப்ப மதிபுணர்ந்த
வெயிலேந் தியசண்பை நாதன்உலகத் தெதிர்ப்பவர்யார்
குயிலேந் தியபொழிற் கொங்கேந் தியகொம்பின் அம்புதழீ இ
அயிலேந் தியமலர் கண்டுள ஞய்வந்த அண்ணலுக்கே. கூச

அண்ணன் மணிவளைத் தோளரு காசனி சண்பையன்ன
பெண்ணின் அமிர்தகல் லாள்குழல் நாற்றம் பெடையொடும்பூஞ்
சுண்ணந் துதைந்தவண் டேகண்ட துண்டுகொல் தூங்கொலிநீர்த்
தண்ணம் பொழில்எழிற் காசினி பூத்தமென் தாதுகளே. கூரு

தாதுகற் றேய்த்தகுஞ் சன்னெரி யார்சட லம்படுத்துத்
தூதையிற் சிக்கங் கரஞ்சேர்த்து வாளா துலுக்குகின்றீர்
போதியிற் புத்தர்கள் வம்மின் புகலியர் கோன்அன்னநாட்
காதியிட் டேற்றுங் கழுத்திறம் பாடிக் களித்திடவே. கூக

களியுறு தேன்தார்க் கவுணியர் தீபன் கருதலர்போல்
வெளியுறு ஞாலம் பகல்இழந் தால்விரை யார்கமலத்
தளியுறு மென்மலர்த் தாதளைந் தாழி அமைப்பவருந்
துளியுறு வாடையி தாம்மட மானைத் துவள்விப்பதே. கூள

தேறும் புனற்றில்லைச் சிற்றம் பலத்துச் சிறந்துவந்துள்
ஊறும் அமிர்தைப் பருகிட் டெழுவதொர் உட்களிப்புக்
கூறும் வழிமொழி தந்தெனை வாழ்வித் தவன்கொழுந்தேன்
நாறும் அலங்கல் தமிழா கரன்என்னும் நன்னிதியே. கூஅ

நிதியுறு வார்அறன் இன்பம்வீ டெய்துவர் என்னவேதந்
துதியுறு நீள்வயற் காழியர் கோனைத் தொழார்இனைய
நதியுறு நீர்தெளித் தஞ்சல் எனஅண்ணல் அன்றுளஞ
மதியுறு வாள்நுதல் பாதம் பணிந்தனள் மன்னனையே. கூக

மன்னங் கனைசெந் தமிழா கரன்வெற்பில் வந்தொருவர்
அன்னங்கள் அஞ்சன்மின் என்றடர் வேழத் திடைவிலங்கிப்
பொன்னங் கலைசா வகையெடுத் தாற்கிவள் பூண்அழுந்தி
இன்னந் தழும்புள வாம்பெரும் பாலும்அவ் ஏந்தலுக்கே. எ0

ஏந்தும் உலகுறு வீர்எழில் நீலநக் கற்கும் இன்பப்
பூந்தண் புகலூர் முருகற்குந் தோழனைப் போகமார்ப்பைக்
காந்துங் கனலிற் குளிர்படுத் துக்கடற் கூடலின்வாய்
வேந்தின் துயர்தவிர்த் தாளைஎப் போதும் விரும்புமினே. எக

விரும்பும் புதல்வனை மெய்யிரிந் தாக்கிய இன்னமிர்தம்
" அரும்பும் புனற்சடை யாய்உண் டருள் " என் றடிபணிந்த
விரும்பின் சுடர்க்களிற் றுன்சிறுத் தொண்டனை ஏத்துதிரேல்
சுரும்பின் மலர்த்தமி ழாகரன் பாதத் தொடர்வெளிதே. எஉ

எளிவந்த வாளழிற் பூவரை ஞாண்மணித் தார்சழுங்கத்
துளிவந்த கண்பிசைந் தேங்கலும் எங்கள் அரன்துணையாங்
கிளிவந்த சொல்லிபொற் கிண்ணத்தின் ஞான அமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ்சி இன்சொற் சிறுக்கன்ற னர்அருளே. எங

அருளுந் தமிழா கரன்நின் அலங்கல்தந் தென்பெயரச்
சுருளுங் குழலியற் கீந்தலை யேமுன்பு தூங்குகரத்
துருளுங் களிற்றினை டோட்டரு வானை அருளியன்றே
மருளின் மொழிமட வாள்பெய ரென்கண் வருவிப்பதே. எச

வருவார் உருவின் வழிவழி வைத்த வனமருந்துங்
திருவார் இருந்த செழுநகர்ச் செவ்வித் திருவடிக்காள்
தருவான் தமிழா கரன்கரம் போற்சலம் வீசக்கண்டு
வெருவா வணங்கொண்டல் கள்மிண்டி வானத்து மின்னியமே. எடு

மின்னுர் குடுமி நெடுவெற் பகங்கொங்கில் வீழ்பனிநோய்
தன்னுர் வழிகெட் டழிந்தமை சொல்லுவர் காணிறையே
மன்னுர் பரிசனத் தோர்மேற் புகலும் எவர்க்கும்மிக்க
நன்னு வலர்பெரு மான்அரு காசனி நல்கிடவே. எசு

நல்கென் றடியின் இணைபணி யார்சண்பை நம்பெருமான்
பல்கும் பெருமுகழ் பாடகில் லார்சிலர் பாழ்க்கிறைத்திட்
டொல்கும் உடம்பின ராய்வழி தேடிட் டிடறிமுட்டிப்
பில்கும் இடமறி யார்கெடு வார்உறு பேய்த்தனமே. எஎ

தனமே தருபுகழ்ச் சைவ சிகாமணி தன்னருள்போல்
மனமே புகுந்த மடக்கொடி யேமலர் மேலிருந்த
வனமே அமிர்தக் குழுதச்செவ் வாயுங்க ளாயம்என் னும்
இனமே பொலியவண் டாடெழிற் சோலையுள் எய்துகமே. எஅ

உகட்டித்து மோட்டு வரால்இனம் மேதி முலையுரிஞ்ச
அகட்டிற் சொரிபால் தடநிறை கொச்சை வயத்தரசைத்
தகட்டில் திகழ்மணிப் பூண்தமி ழாகரன் தன்னையல்லால்
பகட்டிற் பொலியினும் வேண்டேன் ஒருவரைப் பாடுதலே. எகூ

பாடிய செந்தமி ழாற்பழங் காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம் பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக்
கூடிய கூட்டத்தி னல்உள தாய்த்திக் குவலயமே. அ0

வலையத் திணிதோள் மிசைமழ வேற்றி மணைப்புறத்து
நிலைஎத் தணைபொழு தோகண்ட தூரணை நீதிகெட்டார்
குலையக் கழுவின் குழுக்கண்ட வன்திகழ் கொச்சையன்ன
சிலையொத்த வாணுதல் மூன்போல் மலர்க திருக்கண்களே. அக

கண்ணுர் திருநுத லோன்கோலக் காவிற் கரகொடியாற்
பண்ணுர் தரப்பாடு சண்பையர் கோன்பாணி கொந்திடுமென்
றெண்ணுர் எழுத்தஞ்சும் இட்டபொற் ருளங்கள் ஈயக்கண்டு
மண்ணுர் சிலர்சண்பை நாதனை ஏத்தார் வருந்துவதே. அஉ

வருந்துங் கொலாங்கழல் மண்மிசை ஏகிடில் என்றுள்ளன்ருர்த்
திருந்தும் புகழ்ச்சண்பை ஞானசம் பந்தற்குச் சீர்மணிகள்
பொருந்துஞ் சிவிகை கொடுத்தனன் காண்புண ரித்திகழ்நஞ்
சருந்தும் பிரான்நம் அரத்துறை மேய அரும்பொருளே. அங

பொருளென என்னைத்தன் பொற்கழல் காட்டிப் புகுந்தெனக்கிங்
கருளிய சீர்த்திரு ஞானசம் பந்தன் அருளிலர்போல்
வெருளின மானின்மென் நோக்கியை விட்டு விழுநிதியின்
திரளினை யாதரித் தானன்று சாலஎன் சிந்தனைக்கே. அச

சிந்தையைத் தேனைத் திருவா வடுதுறை யுள்திகழும்
எந்தையைப் பாடல் இசைத்துத் தொலையா நிதியம்எய்தித்
தந்தையைத் தீத்தொழில் மூட்டிய கோன்சரண் சார்விலரேல்
நிந்தையைப் பெற்றெழி யாதிரந் தேகரம் நீட்டுவரே. அரு

நீட்டுவ ரோதத்தொ டேறிய சங்க நெகுமுளரித்
தோட்டுவெண் முத்தஞ் சொரிசண்பை நாதற் றொழாதவரில்
வேட்டுவர் வேட்டதண் ணீரினுக் குண்ணீர் உணக்குழித்த
காட்டுவர் ஊறல் பருகுங் கொலாம்எங் கனங்குழையே. அசு

குழைக்கின்ற கொன்றைபொன் போல மலரநுங் கூட்டமெல்லாம்
அழைக்கின்ற கொண்டல் இயம்பொன் னிலையகன் ருர்வரவு
பிழைக்கின் றதுகொலென் றஞ்சியொண் சண்பைப் பிரான்புறவத்
திழைக்கின்ற கூடல் முடியஎண் ணுத இளங்கொடிக்கே. அள

கொடித்தேர் அவுணர் குழாம்அனல் ஊட்டிய குன்றவில்லி
அடித்தேர் கருத்தின் அருகா சனியை அணிஇழையார்
முடித்தேர் கமலங் கவர்வான் மூரிபுரு வச்சிலையால்
வடித்தேர் நயனக் கணையிணை கோத்து வளைத்தனரே. அஅ

வளைபடு தண்கடற் கொச்சை வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன லூரன்ற னீரிலங்கு
வளைபடு கண்ணியர் தம்பொதுத் தம்பல நாறும்இந்த
வளைபடு கிங்கிணிக் கால்மைந்தன் வாயின் மணிமுத்தமே. அகூ

முத்தன வெண்ணகை யார்மயல் மாற்றி முறைவழுவா
தெத்தனை காலம்நின் றேத்தும் அவரினும் என்பணிந்த
பித்தனை எங்கள் பிரானை அணைவ தெளிதுகண்டீர்
அத்தனை ஞானசம் பந்தனைப் பாதம் அடைந்தவர்க்கே. கூ0

அடைத்தது மாமறைக் காடர்தங் கோயிற் கதவினையன்(று)
உடைத்தது பாணன்றன் யாழின் ஒலியை உரகவிடங்
துடைத்தது தோணி புரத்துக் கிறைவன் சுடரொளிவாய்ப்
படைத்தது தண்மையை நள்ளாற் றரசு பணித்திடவே. கூக

பணிபடு நுண்ணிடை பாதம் பொருபல காதமென்று
தணிபடு மின்சொற்க ளாற்றவிர்த் தேற்குத் தழலுமிழ்கான்
மணிபடு பொற்கழல் ஞானசம் பந்தன் மருவலர்போல்
துணிபடு வேலன்ன கண்ணியென் னேவந்து தோன்றியதே. கூஉ

தோன்றல்தன் னேடுடன் ஏகிய சுந்தரப் பூண்முலையை
ஈன்றவ ரேஇந்த ஏந்திழை யாரவர் இவ்வளவில்
வான்றவர் சூழுந் தமிழா கரன்றன் வடவரையே
போன்றபொன் மாடக் கழுமல நாடு பொருந்துவரே. கூங

பொருந்திடு ஞானத் தமிழா கரன்பதி பொற்புரிசை
திருந்திய தோணி புரத்துக் கிறைவன் திருவருளாற்
கருந்தட நீரெழு காலையிற் காகூ கழுமலமென்
றிருந்திட வாம்என்று வானவ ராகி இயங்கியதே. கூச

இயலா தனபல சிந்தைய ராய்இய லுங்கொல்என்று
முயலா தனவே முயன்றுவன் மோகச் சுழியழுந்திச்
செயலார் வரைமதிற் காழியர் கோன்திரு நாமங்களுக்
கயலார் எனப்பல காலங்கள் போக்குவர் ஆதர்களே. கூடு

ஆதர வும்பயப் பும்இவள் எய்தினள் என்றயலார்
மாதர வஞ்சொல்லி என்னை நகுவது மாமறையின்
ஓதர வம்பொலி காழித் தமிழா கரனெடன்றே
தீதர வம்பட அன்னைஎன் னேபல செப்புவதே. கூசு

செப்பிய என்ன தவமுயன் றேன்நல்ல செந்தமிழால்
ஒப்புடை மாலைத் தமிழா கரனை உணர்வுடையோர்
கற்புடை வாய்மொழி ஏத்தும் படிகத நிட்டிவர
மற்படு தொல்லைக் கடல்புடை சூழ்தரு மண்ணிடையே. கூள

மண்ணில் திகழ்சண்பை நாதனை வாதினில் வல்அமணைப்
பண்ணைக் கழுவின் நுதிவைத்தெம் பந்த வினையறுக்குங்
கண்ணைக் கதியைத் தமிழா கரனைஎங் கற்பகத்தைத்
திண்ணற் றெடையல் கவுணியர் தீபனைச் சேர்ந்தனமே. கூஅ

சேரும் புகழ்த்திரு ஞானசம் பந்தனை யாளுரைத்த
பேருந் தமிழ்ப்பா இவைவல்லவர் பெற்ற இன்புலகம்
காருந் திருமிடற் றுய்அரு ளாய்என்று கைதொழுவர்
நீரும் மலருங்கொ ளாநெடு மாலும் பிரமனுமே. கூகூ

பிரமா புரம்வெங் குருசண்பை தோணி புகலிகொச்சை
சிரமார் புரநற் புறவந்த ராய்காழி வேணுபுரம்
வரமார் பொழில்திரு ஞானசம் பந்தன் பதிக்குமிக்க
பரமார் கழுமலம் பன்னிரு நாமம்இப் பாரகத்தே. கஂஂ

பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியும்
ஏரகலம் பெற்றுலும் இன்னுதாற்—காரகிலின்
தூமங் கமழ்மாடத் தோணிபுரத் தலிவன்
நாமஞ் செவிக்கிசையா நாள். கஂக

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பிஆண்டார்நம்பி அருளிய

ஆ ரூ டை ய பி ள் ளை யா ர்

திருச்சண்பை விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாலித் தெழில்தங்கு பார்முகம் உய்யப் பதிதலையோர்
மாலுற் றழுந்த அவதரித் தோன்மணி நீர்க்கமலத்
தாலித் தலர்மிசை அன்னம் நடப்ப அணங்கிதென்னுச்
சாலித் தலைபணி சண்பையர் காவலன் சம்பந்தனே. க

கொங்குதங் குங்குஞ்சி கூடாப் பருவத்துக் குன்றவில்லி
பங்குதங் கும்மங்கை தன்னருள் பெற்றவன் பைம்புணரிப்
பொங்குவங் கப்புனல் சேர்த்த புதுமணப் புன்னையின்கீழ்ச்
சங்குதங் கும்வயற் சண்பையர் காவலன் சம்பந்தனே. உ

குவளைக் கருங்கட் கொடியிடை துன்பந் தவிர அன்று
அவளத் தொடுவிடந் தீர்த்த தமிழின் தொகைசெய்தவன்
திவளக் கொடிக்குன்ற மாளிகைச் சூளிகைச் சென்னியின்வாய்த்
தவளப் பிறைதங்கு சண்பையர் காவலன் சம்பந்தனே. ங

கள்ளம் பொழில்நனி பள்ளித் தடங்கட மாக்கிஅஃதே
வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன் வெண்குருகுப்
புள்ளொண் தவளப் புரிசங்கொ டாலக் கயல்உகளத்
தள்ளந் தடம்புனற் சண்பையர் காவலன் சம்பந்தனே. ச

ஆறதே றுஞ்சடை யான்அருள் மேவ அவனியர்க்கு
வீறதே றுந்தமி ழால்வழி கண்டவன் மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூறு சண்பகந் தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர் காவலன் சம்பந்தனே. ஞ

அந்தமுந் தும்பிற வித்துயர் தீர அரனடிக்கே
பந்தமுந் துந்தமிழ் செய்த பராபரன் பைந்தடத்தேன்
வந்துமுந் திநந்த முத்தங் கொடுப்ப வயற்கயலே
சந்தமுந் தும்பொழிற் சண்பையர் காவலன் சம்பந்தனே. ட

புண்டலைக் குஞ்சரப் போர்வையர் கோயிற் புகஅடைக்கும்
ஒண்டலைத் தண்டமிழ்க் குண்டா சனியும்பர்ப் பம்பிமின்னுங்

கொண்டலைக் கண்டுவண் டாடப் பெடையொடுங் கொக்குறங்குந்
தண்டலைக் குண்டகழ்ச் சண்பையர் காவலன் சம்பந்தனே. எ

எண்டலைக் குந்தலை வன்கழல் சூடிஎன் உள்ளம்வெள்ளங்
கண்டலைப் பத்தன் கழல்தந்த வன்கதிர் மூத்தம்நத்தம்
விண்டலைப் பத்தியி லோடும் விரவி மிளிர்பவளந்
தண்டலைக் குங்கடற் சண்பையர் காவலன் சம்பந்தனே. அ

ஆறுமண் டப்பண்டு செஞ்சொல் நடாத்திய மண்முழுதும்
பாறுமண் டக்கண்ட சைவ சிகாமணி பைந்தடத்த
சேறுமண் டச்சங்கு செங்கயல் தேமாங் கனிசிதறிச்
சாறுமண் டும்வயற் சண்பையர் காவலன் சம்பந்தனே. கூ

விடந்திகழ்க் கும்அர வல்குல்மென் கூந்தல் பெருமணத்தின்
வடந்திகழ்க் குங்கொங்கை புல்கிய மன்மதன் வண்கதலிக்
கடந்திகழ்த் துக்கழு நீர்புல்கி ஒல்கிக் கரும்புரிஞ்சித்
தடந்திகழ்க் கும்புனற் சண்பையர் காவலன் சம்பந்தனே. கo

பாலித்த கொங்கு குவளைகள் ளம்பொழில் கீழ்ப்பரந்து
வாலிப்ப வாறதே றுங்கழ னிச்சண்பை அந்தமுந்து
மேலிட்ட புண்டலைக் குஞ்சரத் தெண்டலைக் குந்தலைவன்
கோலிட்ட வாறு விடந்திகழ்க் கும்அர வல்குலேயே. கக

திருச்சிற்றம்பலம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருமும்மணிக்கோவை.

திருச்சிற்றம்பலம்.

திங்கட் கொழுந்தொடு பொங்கரவு திளைக்குங்
கங்கைப் பேரியாற்றுக் கடிவரக் கலுழியின்
இதழியின் செம்பொன் இருகரை சிதறிப்
புதலெருக்கு மலர்த்தும் புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்
மூத்தீ வேள்வி நான்மறை வளர
ஐவேள்வு யர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை அரசை எண்திசை அறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்
காழி நாடன் கவுணியர் தலைவன்
மாமழை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க் கல்லது
கடிந்துய ருட்புகக் கைவிளிக் கும்இர்
நெடும்பிற விக்கடல் நீந்துவ தரிதே. க

அரியோடு நான்முகத்தோன் ஆதி சுரர்க்கெல்லாந்
தெரியாமை செந்தழலாய் நின்ற—ஒருவன்சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாள்இணைகள்
என்தலையின் மேலிருக்க என்று. உ

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே. ங

அரிசினக் கடகரி யதுபட உரித்த
படர்சடைக் கடவுள்தன் திருவருள் அதனைப் பிறந்தது

கழுமலம் என்னுங் கடிநக ரதுவே வளர்ந்தது
தேங்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதிடு போனக முண்டே பெற்றது
குழகனைப் பாடிக் கோலக் காப்புக்
கழகுடைச் செம்பொற் முளம்அவையே தீர்த்தது
தாதமர் மருகற் சடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே அடைத்த
தரைசோ டிசையா அணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவேயேறிற்(று)
அத்தியும் மாவுந் தவிர அரத்துறை
முத்தின் சிவிகைமுன் னுட்பெற் றேபாடிற்
றருமறை ஒத்தூர் ஆண்பனை அதனைப்
பெருநிறம் எய்தும் பெண்பனை யாவே கொண்டது
பூவிடு மதுவிற் பொறிவண் டுழலும்
ஆவடு துறையிற் பொன்னு யிரமேகண்ட
துறியொடு பீலி யொருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையேநீத்த
தவிழ்ச்சுவை யேஅறிந் தரனடி பரவுந்
தமிழ்ச்சுவை அறியாத் தம்பங்களேயே நினைந்த
தள்ளற் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே மிக்கவர்
ஊனசம் பந்தம் அறுத்துயக் கொளவல
ஞான சம்பந்தன் இஞ் ஞாலத் திடையே. ச

நிலத்துக்கு மேலாறு நீடிலகத் துச்சித்
தலத்துக்கு மேலே தான்என்பர்—சொலத்தக்க
சுத்தர்கள் சேர்காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பத்தர்கள் போய்வாழும் பதி. ஞ

பதிகம் பலபாடி நீடிய பிள்ளை பரசுதரற்
கதிகம் அணுக்கன் அமணர்க்குக் காலன் அவதரித்த
மதியந் தவழ்மாட மாளிகைக் காழிஎன் முல்வணங்கார்
ஓதியம் பணைபோல் விழுவர்அந் தோசில ஊமர்களே. சு

கவள மாளிகைத் திவளும் யானையின்
கவுட்டலைக் கும்பத்
தும்பர்ப் பதணத் தம்புதற் திளைக்கும்
பெருவளந் தழீஇத் திருவளர் புகலி
விளங்கப் பிறந்த வளங்கொள் சம்பந்தன்
கருதியஞ் செவ்விச் சுருதியஞ் சிலம்பில்
தேமரு தினைவளர் காமரு புனத்து

மும்மதஞ் சொரியும் வெம்முகக் கைம்மா
மூரி மருப்பிற் சீரிய மூத்துக்
கொடுஞ்சிலை வளைத்தே கொடுஞ்சரந் துரந்து
முற்பட வந்த மூயன்றங் குதவிசெய்
வெற்பனுக் கலது
சுணங்கணி மென்முலைச் சுரிகுழல் மாதினை
மணஞ்செய மதிப்பது நமக்குவன் பழியே. எ

பழியொன்றும் ஓராதே பாயிடுக்கி வாளா
கழியுஞ் சமண்கையர் தம்மை—அழியத்
துரந்தரங்கச் செற்றுன் சுரும்பரற்றும் பாதம்
நிரந்தரம்போய் நெஞ்சே நினை. அ

நினைஆ தரவெய்தி மேகலை நெக்கு வளைசரிவாள்
தனைஆவ வென்றின் றருளுதி யேதடஞ் சாலிவயற்
கனையா வரும்மேதி கன்றுக் கிரங்கித்தன் கால்வழிபால்
நனையா வருங்காழி மேவிய சீர்ஞான சம்பந்தனே. கூ

தனமலி கமலத் திருவெனுஞ் செல்வி
விருப்பொடுந் தினைக்கும் வீயா இன்பத்
தாடக மாட நீடுதென் புகலிக்
காமரு கவிஞர் கவுணியர் தலைவ
பொற்பமர் தோளா நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ கலைபயில் நாவ நினது
பொங்கொளி மார்பில் தங்கிய திருநீ
ருதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தவிற்
பிள்ளை யாவது தெரிந்தது பிறர்க்கே. கo

பிறவினனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மலை ஞானத் தமிழ். கக

ஞானந் திரளையி லேயுண் டனைஎன்று நாடறியச்
சோனந் தருகுழ லார்சொல் லிடாமுன் சுரும்புகட்குப்
பானந் தருபங் கயத்தார் கொடுபடைச் சால்வழியே
கூனந் துருள்வயல் சூழ்காழி மேவிய கொற்றவனே. கஉ

அவனி தலநெரிய எதிர்எதிர் மலைஇச்
சொரிமதக் களிற்று மத்தகம் போழ்ந்து

செஞ்சே ருடிச் செல்வன வரியே எஞ்சாப்
படவர வுச்சிப் பருமணி பிதுங்கப்
பிடரிடைப் பாய்வன பேழ்வாய்ப் புலியே இடையிடைச்
செறியிருள் உருவச் சேண்விசும் பதனிற்
பொறிஎன விழுவன பொங்கொளி மின்னே
உறுசின வரையால் உந்திய கலுழிக்
கரையால் உழல்வன கரடியின் கணனே நிரையார்
பொருகடல் உதைந்த சுரிமுகச் சங்கு
செங்கயல் கிழித்த பங்கய மலரின்
செம்மடல் நிறைய வெண்முத் துதிர்க்கும்
பழனக் கழனிக் கழுமல நாடன்
வைகையில் அமணரை வாதுசெய் தறுத்த
சைவ சிகாமணி சம்பந்தன் வெற்பிற்
சிறுகிடை யவள்தன் பெருமுலை புணர்வான்
நெறியினில் வரலொழி நீமலை யோனே. கஙூ

மலைத்தலங்கள் மீதேறி மாதவங்கள் செய்து
முலைத்தலங்கள் நீத்தாலும் மூப்பர்—கலைத்தலைவன்
சம்பந்தற் காளாய்த் தடங்காழி கைகூப்பித்
தம்பந்தம் தீராத தாம். கசு

தாமரை மாதவி சேறிய நான்முகன் தண்பதிபோல்
காமரு சீர்வளர் காழிநன் னுடன் கவித்திறத்து
நாமரு மாதவர் போல்அழ கீந்துநல் வில்லிபின்னே
நீர்மரு வாத சுரத்தெங்ஙன் ஏகும்மென் நேரிழையே. கஙு

இழைகெழு மென்முலை இதழிமென் மலர்கொயத்
தழைவர வொசித்த தடம்பொழில் இதுவே காமர்
சுணங்குடைந் தேறித் துகிலது பூணயனின்
றெனையுங் கண்டிவள் கிடமிதுவே தினைதொறும்
பாய்கிளி இரியப் பையவந் தேறி
ஆயவென் றிருக்கும் மணிப்பரண் இதுவே ஈதே
இன்புறு சிறுசொல் லவைபல இயற்றி
அன்புசெய் தென்னை ஆட்கொரு மிடமே பொன்புரை
தடமலர்க் கமலக் குடுமியி லிருந்து
நற்றிழில் புரியும் நான்முக னுட்டைப்
புற்கடை கழீஇப் பொங்கு சராவத்து
நெய்த்துடுப் பெடுத்த முத்தீப் புகையால்
நாள்தொறும் மறைக்குஞ் சேடுறு காழி
எண்டிசை நிறைந்த தண்டமிழ் விரகன்
நலங்கலந் தோங்கும் விலங்கலின் மாட்டுப்

பூம்புனம் அதனிற் காம்பன தோளி
பஞ்சில் திருந்தடி நோவப் போய்எனை
வஞ்சித் திருந்த மணியறை இதுவே. கசு

வேழங்கள் எய்பவர்க்கு வில்லா வதிக்கால
மாழங் கடல்முத்தம் வந்தலைக்கும்—நீள்வயல்சூழ்
வாய்ந்தகிவண் மாடமதிற் காழிக்கோன் சிலம்பிற்
சாய்ந்தது வண்டழையோ தான். கள

தழைக்கின்ற சீர்மிகு ஞானசம் பந்தன் தடமலைவாய்
அழைக்கின்ற மஞ்ஞைக் கலந்தன கோடலம் பெய்திடுவான்
இழைக்கின்ற தந்தரத் திந்திர சாபநின் எண்ணமொன்றும்
பிழைக்கின்ற தில்லைநற் றேர்வந்து தோன்றிற்றுப் பெய்வளையே. கஅ

வளைகான் மந்தி மாமரப் பொந்தில்
விளைதேன் உண்டு வேணுவின் துணியாற்
பாறை யில்துயில் பனைக்கை வேழத்தை
உந்தி எழுப்பும் அந்தண் சிலம்ப அஃதிங்
கென்னையர் இங்கு வருவர் பலரே
அன்னை காணில் அலர்தூற் றும்மே பொன்னேர்
சிறுபரற் கரந்த விளிகுரற் கிங்கிணி
சேவடி புல்லிச் சில்குரல் இயற்றி
அழுதுண் செவ்வாய் அருவி தூங்கத்
தாளம் பிரியாத் தடக்கை யசைத்துச்
சிறுகூத் தியற்றிச் சிவனருள் பெற்ற
நற்றமிழ் விரகன் பற்றலர் போல
இடுங்கிய மனத்தொடும் ஓடுங்கிய சென்று
பரிதியுங் குடக்கடற் பாய்ந்தனன்
கருதிநிற் பதுபிழை கங்குல்இப் புனத்தே. கஙூ

தேம்புனமே யுன்னைத் திரிந்து தொழுகின்றேன்
வாம்புகழ்சேர் சம்பந்தன் மாற்றலர்போல்—தேம்பி
அழுதகன்றுள் என்னு(து) அணிமலையர் வந்தால்
தொழுதகன்றுள் என்றுநீ சொல்லு. உ0

சொற்செறி நீள்கவி செய்தன்று வைகையில் தொல்லமணர்
பற்செறி யாவண்ணங் காத்தசம் பந்தன் படர்சிலம்பிற்
கற்செறி வார்சுனை நீர்குடைந் தாடுங் கனங்குழையை
இற்செறி யாவணங் காத்திலை வாழி இரும்புனமே. உக

புனலற வறந்த புன்முளி சுரத்துச்
சினமலி வேடர் செஞ்சரம் உரீஇப்

படுகலைக் குளம்பின் முடுகு நாற்றத்
தாடும் அரவின் அகடு தீயப்
பாடுதகையின் பஞ்சுரங் கேட்டுக்
கள்ளியங் கவட்டிடைப் பள்ளி கொள்ளும்
பொறிவரிப் புறமே யுறவலே காணீ நரைகமழ்
தேம்புனல் வாவித் திருக்கழு மலத்துப்
பையர வசைத்த தெய்வ நாயகன்
தன்னருள் பெற்ற பொன்னணிக் குன்ற
மானசம் பந்த மண்மிசைத் துறந்த
ஞானசம் பந்தனே நயவார் இலாபோல்
வினையேன் இருக்கும் மனைபிரி யாத
வஞ்சி மருங்குல் அஞ்சொற் கிள்ளை
ஏதிலன் பின்செல விலக்கா தொழிந்தனை
ஆதலிற் புறமே யுறவலை நீயே. உஉ

அலைகடலின் மீதோடி அந்நாளையர் வீசும்
வலைகடலில் வந்தேறு சங்க—மலர்கடலை
வெண்முத் தவிழ்வயல்சூழ் வீங்குபுனற் காழியே
ஒண்முத் தமிழ்பயந்தான் ஊர். உங

ஊரும் பசும்புர வித்தே ரொளித்த தொளிவிசும்பிற்
கூரும் இருளொடு கோழிகண் துஞ்சா கொடுவினையேற்
காரும் உணர்ந்திலர் ஞானசம் பந்தன்அந் தாமரையின்
தாருந் தருகிலன் எங்ஙனம் யான்சங்கு தாங்குவதே. உச

தேமலி கமலப் பூமலி படப்பைத்
தலைமுக டேறி இளவெயிற் காயுங்
கவடிச் சிறுகாற் கர்க்கட கத்தைச்
சுவடிச் சியங்குஞ் சூனரி முதுகைத்
துன்னி எழுந்து செந்நெல் மோதுங்
காழி நாட்டுக் கவுணியர் குலத்தை
வாழத் தோன்றிய வண்டமிழ் வீரகன்
தெண்டிரைக் கடல்வாய்க்
காண்தகு செவ்விக் களிறுகள் உகுத்த
மூட்டைமுன் கவரும் பெட்டையங் குருகே
வாடை யடிப்ப வைகறைப் போதில்
தனிநீ போந்து பனிநீர் ஒழுகக்
கூசிக் குளிர்ந்து பேசா திருந்து
மேனி வெளுத்த காரணம் உரையாய்
இங்குத் தணந்தெய்தி துமரும்
இன்னம்வந் திலரோ சொல்இளங் குருகே. உரு

குருகும் பணிலமுங் கூன்நந்துஞ் சேலும்
பெருகும் வயற்காழிப் பிள்ளை—அருகந்தர்
மூன்கலங்க நட்ட முடைகெழுமி யால்இன்னம்
புன்கலங்கல் வைகைப் புனல். உசு

புனமா மயில்சாயல் கண்டுமுன் போகா கிளிபிரியா
இனமான் விழியொக்கும் என்றுவிட் டேகா இருநிலத்துக்
கனமா மதிற்காழி ஞானசம் பந்தன் கடன்மலைவாய்த்
தினைமா திவள்காக்க எங்கே விளையுஞ் செழுங்கதிரே. உள

கதிர்மதி தூழையும் படர்சடை மகுடத்
தொருத்தியைக் கரந்த விருத்தனைப் பாடி
முத்தின் சிவிகை முன்னுட் பெற்ற
அத்தன் காழி நாட்டுறை அணங்கோ மொய்த்தெழு
தாமரை யல்லித் தவிசிடை வளர்ந்த
காமரு செல்வக் கனங்குழை யவளோ மீமருத்
தருவளர் விசும்பில் தவநெறி கலக்கும்
உருவளர் கொங்கை உருப்பசி தானே
வாருணக் கொம்போ மதனன் கொடியோர்
ஆரணி யத்துள் அருந்தெய்வ மதுவோ
வண்டமர் குழலுங் கெண்டையங் கண்ணும்
வஞ்சி மருங்குங் கிஞ்சுக வாயும்
ஏந்திள முலையுங் காந்தள்அங் கையும்
ஓவியர் தங்கள் ஓண்மதி காட்டும்
வட்டிகைப் பலகை வான்துகி லிகையால்
இயக்குதற் கரியதோர் உருவுகண் டென்னை
மயக்கவந் தூதித்ததோர் வடிவிது தானே. உஅ

வடிக்கண்ணி யாளிவ் வான்சுரத்தி னூடே
கடிக்கண்ணி யாஞ்டுங் கண்டோம்—வடிக்கண்ணி
மாம்பொழில்சேர் வைகை அமண்மலைந்தான் வண்காழிப்
பூம்பொழிலே சேர்ந்திருப்பார் புக்கு. உசு

குருந்துந் தாளமும் போல்வண்ண வெண்ணகைக் கொய்மலராள்
பொருந்துந் திரள்புயத் தண்ணல்சம் பந்தன்பொற் ரூமரைக்கா
வருந்துந் திரள்கொங்கை மங்கையை வாட்டினை வானகத்தே
திருந்துந் திரள்முகில் மூந்திவந் தேறுதிங் கட்கொழுந்தே. நo

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பிஆண்டார் நம்பி அருளிய

ஆளுடையபிள்ளையார்

திருவுலாமாலை.

திருச்சிற்றம்பலம்.

திருந்தியசீர்ச் செந்தா மரைத்தடத்துச் சென்றோர்
இருந்தண் இளமேதி பாயப்—பொருந்திய
புள்ளிரியப் பொங்கு கயல்வெருவப் பூங்குவளைக்
கள்ளிரியச் செங்கழுநீர் கால்சிதையத்—துள்ளிக்
குருகிரியக் கூனிறவம் பாயக் களிறு
முருகுவிரி பொய்கையின்கண் மூழ்க—வெருவுற்ற
கோட்டகத்துப் பாய்வாளை கண்டலவன் கூசிப்போய்த்
தோட்டகத்த செந்நெல் துறையடையச்—சேட்டகத்த
காவி முகமலரக் கார்நீலங் கண்படுப்ப
வாவிக்கண் நெய்தல் அலமர—மேவிய
அன்னந் துயில்இழப்ப அஞ்சிறைசேர் வண்டினங்கள்
துன்னுந் துணையிழப்பச் சூழ்கிடங்கின்—மன்னிய
வள்ளை நகைகாட்ட வண்குமுதம் வாய்காட்டத்
தெள்ளுபுனற் பங்கயங்கள் தேன்காட்ட.—மெள்ள
நிலவு மலரணையின் நின்றிழிந்த சங்கம்
இலகுகதிர் நித்திலங்கள் ஈன—உலவிய
மல்லைப் பழனத்து வார்பிரச மீதழிய
ஒல்லை வரம்பிடறி ஓடிப்போய்ப்—புல்லிய
பாசடையைச் செங்கெற் படரொளியாற் பல்கதிரோன்
தேசடைய ஓங்கு செறுவுகளும்—மாசில்நீர்
நித்திலத்தின் சாயும் நிகழ்மரகத் தத்தோலுந்
தொத்தொளி செம்பொற் றொழிற்பரிய—மொய்த்த
பவளத்தின் செவ்வியும் பாங்கணைய ஓங்கித்
திவளக் கொடிமருங்கிற் சேர்த்தித்—துவளாமைப்
பட்டாடை கொண்டுடுத்துப் பைந்தோ டிலங்குகுழை
இட்டமைந்த கண்ணூர் இளங்கமுகும்—விட்டொளிசேர்
கண்கள் அழல்சிதறிக் காய்ச்சினத்த வாய்மதத்துத்
தண்டலையின் நீழல் தறியணைந்து—கொண்ட
கொலைபுரியா நீர்மையவாய்க் கொம்புவளைத் தேந்தி

மலையு மரவடிவங் கொண்டாங்—கிலெருங்கு
சூதத் திரளுந் தொகுகனிக ளான்நிவந்த
மேதகுசீர்த் தெங்கின் வியன்பொழிலும்—போதுற்
றினமொருங்கு செவ்வியவா யின்தேன் ததும்பு
கனிநெருங்கு திண்கதலிக் காடும்—நனிவிளங்கு
நாற்றத்தால் எண்டிசையும் வந்து நலஞ்சிறப்ப
ஊற்று மடுத்த வுயர்பலவும்—மாற்றமரும்
மஞ்ச ளெழில்வனமும் மாதலையின் வார்பொழிலு
மிஞ்சி இளங்காவின் ஈட்டமும்—எஞ்சாத
கூந்தற் கமுகுங் குளிர்பாட லத்தெழிலும்
வாய்ந்தசீர்ச் சண்பகத்தின் வண்காடும்—ஏந்தெழிலார்
மாதவியும் புன்னையும் மன்னும் மலர்க்குரவங்
கேதையும் எங்குங் கெழீஇப்—போதின்
இளந்தென்றல் வந்தசைப்ப எண்டிசையும் வாசம்
வளந்துன்று வார்பொழிலின் மாடே—களர்ந்தெங்கு
மாலை யொலியும் மரிவார் குரலொலியுஞ்
சோலைக் கிளிமிழற்றுஞ் சொல்லொலியும்—ஆலும்
அறுபதங்கள் ஆர்ப்பொலியும் ஆன்ற பொலிவெய்தி
உறுதிரைநீர் வேலை ஒலிப்ப—வெறிகமழும்
நந்தா வனத்தியல்பும் நற்றவத்தோர் சார்விடமும்
அந்தமில் சீரார் அழகினுன்—மூந்திப்
புகழ்வாருந் தன்மையவாய்ப் பூதலத்துள் ஓங்கி
நிகழ்கிடங்குஞ் சூழ்கிடப்ப நேரே—திகழ
மூலைநிரைத்து மூரிச் சிறைவகுத்து மொய்த்த
புலகத்தின் பாம்புரிசூழ் போகி—வளர
விருப்பதணஞ் சேர விருத்தியெழில் நாஞ்சின்
மருங்கணைய வட்டாலை யிட்டுப்—பொருந்தியசீர்த்
தோமரமுந் தொல்லைப் பொறிவீசி யந்திரமுங்
காமரமும் எப்புழையுங் கைகலந்து—மீமருவும்
வெங்கதிரோன் தேர்விலங்கு மிக்குயர்ந்த மேருப்போன்(று)
அங்கனகத் திஞ்சி அணிபெற்றுப்—பொங்கொளிசேர்
மாளிகையும் மன்னியசீர் மண்டபமும் ஓண்தலத்த
சூளிகையுந் துற்றெழுந்த தெற்றிகளும்—வாளொளிய
நாடக சாலையும் நன்பொற் கபோதகஞ்சேர்
பீடமைத்த மாடத்தின் பெற்றியுங்—கேடில்
உருவு பெறவகுத்த அம்பலமும் ஓங்கு
தெருவு வகுத்த செய்குன்றும்—மருவினிய
சித்திரக் காவுஞ் செழும்பொழிலும் வாவிகளும்
நித்திலஞ்சேர் நீடும் நிலக்களமும்—எத்திசையுந்
தூண்னி எழில்சிறப்பச் சோதி மலர்மடந்தை

மன்னி மகிழ்ந்துறையும் வாய்மைத்தாய்ப்—பொன்னும்
மரகதமும் நித்திலமும் மாமணியும் பேணி
இரவலர்கட் கெப்போதும் ஈந்துங்—கரவாது
கற்பகமுங் காருமெனக் கற்றவர்க்கும் நற்றவர்க்குந்
தப்பாக் கொடைவளர்க்குஞ் சாயாத—செப்பத்தாற்
பொய்ம்மை கடிந்து புகழ்புரிந்து பூதலத்து
மெய்ம்மை தலைசிறந்து மேதக்கும்—உண்மை
மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்—மூறைமையினுல்
ஆகமங்கள் கேட்பார் அருங்கலைநூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள்துய்ப்பார்—சோகமின்றி
நீதி நிலையுணர்வார் நீள்நிலத்துள் ஐம்புலனுங்
காதல் விடுதவங்கள் காமுறுவார்—ஆதி
அருங்கலைநூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலியை நீங்கக் கனல்வகுப்பார்—ஒருங்கிருந்து
காமநூல் கேட்பார் கலைஞானங் காதலிப்பார்
ஓமநூல் ஓதுவார் உத்தரிப்பார்—பூமன்னும்
நான்முகனே யன்னசீர் நானூற் றுவர்மறையோர்
தாமன்னி வாழுந் தகைமைத்தாய்—காமன்னும்
ஆரணங்கும் மற்றை அருந்ததியும் போல்மடவார்
ஏரணங்கு மாடத் தினிதிருந்து—சீரணங்கு
வீணை பயிற்றுவார் யாழ்பயில்வார் மேவியசீர்ப்
பாணம் பயில்வார் பயன்உறுவார்—பேணியசீர்ப்
பூவைக்குப் பாட்டிசைப்பார் பொற்கிளிக்குச் சொற்பயில்வார்
பாவைக்குப் பொன்பூணந்து பண்புறுவா—ராய்எங்கும்
மங்கையர்கள் கூட்டமும் மன்னு சிறார்குழுவும்
பொங்குலகம் எல்லாம் பொலிவடையத்—தங்கிய
வேத ஒலியும் விழாஒலியும் மெல்லியலார்
கீத ஒலியுங் கிளர்ந்தோங்கும்—மாதரார்
பாவை ஒலியும் பறைஒலியும் பல்சனங்கள்
மேவும் ஒலியும் வியன்நகரங்—காவலர்கள்
பம்பைத் துடிஒலியும் பவ்வப் படைஒலியுங்
கம்பக் களிற்றொலியுங் கைகலந்து—நம்பிய
கார்முழக்கும் மற்றைக் கடல்முழக்கும் போற்கலந்த
சீர்முழக்கம் எங்குஞ் செவிடுபடப்—பார்விளங்கு
செல்வம் நிறைந்தவூர் சீரில் திகழ்ந்தவூர்
மல்கு மலர்மடந்தை மன்னுமூர்—சொல்லினிய
ஞாலத்து மிக்கவூர் நானூற் றுவர்களூர்
வேலொத்த கண்ணூர் விளங்குமூர்—ஆலித்து
மன்னிருகால் வேலை வளர்வெள்ளத் தும்பொடும்

பன்னிருகால் நீரின் மிதந்தவூர்—மன்னும்
பிரமனூர் வேணுபுரம் பேரொலிநீர்ச் சண்பை
அரன்மன்னு தண்காழி அம்பொற்—சிரபுரம்
பூந்தராய் கொச்சைவயம் வெங்குரூப் பொங்குபுனல்
வாய்ந்தநல் தோணி புரம்மறையோர்—ஏய்ந்த
புகலி கழுமலம் பூம்புறவம் என்றிப்
பகர்கின்ற பண்பிற்ற தாகித்—திகழ்கின்ற
மல்லைச் செழுநகர மன்னவும் வல்லமணர்
ஒல்லைக் கழுவில் உலக்கவும்—எல்லையிலா
மாதவத்தோர் வாழவும் வையகத்தோர் உய்யவும்
மேதக்க வானோர் வியப்பவும்—ஆதியாம்
வென்றிக் கலிகெடவும் வேதத் தொலிமிகவும்
ஒன்றிச் சிவனடியார் ஓங்கவுந்—துன்றிய
பன்னு தமிழ்ப்பதிஞ் ருயிர நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்—முன்னிய
சிந்தனையாற் சீரார் கவுணியர்க்கோர் சேய்என்ன
வந்தங் கவதரித்த வள்ளலை—அந்தமில்சீர்
ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை
மான மறையவற்றின் வான்பொருளை—ஆனசீர்த்
தத்துவனை நித்தனைச் சைவத் தவர்அரசை
வித்தகத்தால் ஓங்கு விடலையை—முத்தமிழின்
செஞ்சொற் பொருள்பயந்த சிங்கத்தைத் தெவ்வருயிர்
அஞ்சத் திகழ்ந்த அடலுருமை—எஞ்சாமை
ஆதிச் சிவனருளால் அம்பொன்செய் வட்டிலிற்
கோதில் அமிர்தநுகர் குஞ்சரத்தைத்—தீதறுசீர்க்
காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த—சீலத்
திருஞான சம்பந்தன் என்றுலகஞ் சேர்ந்த
ஒருநாமத் தாலுயர்ந்த கோவை—வருபெருநீர்ப்
பொன்னிவள நாடனைப் பூம்புகலி நாயகனை
மன்னர் தொழுதிறைஞ்சு மாமணியை—முன்னை
நிலவு முருகர்க்கும் நீலநக் கர்க்குந்
தொலைவில் புகழ்ச்சிறுத் தொண்டர்க்குங்—குலவிய
தோழமையாய்த் தொல்லைப் பிறப்பறுத்த சுந்தரனை
மாழைஒண்கண் மாதர் மதனனைச்—சூழொளிய
கோதைவேல் தென்னன்றன் கூடற் குலநகரில்
வாதில் அமணர் வலிதொலையக்—காதலால்
புண்கெழுவு செம்புனலா றோடப் பொருதவரை
வண்கழுவில் தைத்த மறையோனை—ஒண்கெழுவு

ஞாலத் தினர்அறிய மன்னுநனி பள்ளியது
பாலை தணெய்த லாக்கியுங்—காலத்து
நீரெதிர்ந்து சென்று நெருப்பிற் குளிர்படைத்தும்
பாரெதிர்ந்த பல்விடங்கள் தீர்த்துமுன்—நேரெழுந்த
யாழை மூரித்தும் இருங்கதவந் தானடைத்துஞ்
சூழ்புனலில் ஓடத் தொழில்புரிந்தும்—தாழ்பொழில்சூழ்
கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்துங்
துங்கப் புரிசை தொகுமிழலை—அங்கதனில்
நித்தன் செழுங்காசு கொண்டுநிலா நெல்வாயின்
முத்தின் சிவிகை முதல்கொண்டும்—அத்தகுசீர்
மாயிரு ஞாலத்து மன்னு வடதுறைபுக்
காயிரஞ் செம்பொன் அதுகொண்டு – மாய்வரிய
மாண்புதிகழ் எம்பெருமான் மன்னுதிரு வோத்தூரில்
ஆண்பணைகள் பெண்பணைக ளாக்கியும்—பாண்பரிசிற்
கைப்பாணி ஒத்திக்கா ழிக்கோலக் காவிற்பொற்
சப்பாணி கொண்டு தராதலத்துள்—எப்பொழுதும்
நீக்கரிய இன்பத் திராகமிருக் குக்குறள்
கோக்கரிய பாசுரம்பல் பத்தேதாடு—மாக்கரிய
யாழ்மூரி சக்கரமாற் றீரடி மூக்காலும்
பாழிமையாற் பாரகத்தோர் தாம்உய்ய—ஊழி
உரைப்பமரும் பல்புகழால் ஓங்க உமைகோனைத்
திருப்பதிகம் பாடவல்ல சேயை—விருப்போடு
நண்ணு புகழ்மறையோர் நாற்பத்தெண் ணுயிரவர்
எண்ணில் முனிவரர் ஈட்டத்துப்—பண்ணமரும்
ஓலக்கத் துள்ளிருப்ப ஒண்கோயில் வாயிலின்கண்
கோலக் கடைகுறுகிக் கும்பிட்டாங்—காலும்
புகலி வளநகருட் பூசுரர் புக்காங்
கிகலில் புகழ்பரவி ஏத்திப்—புகலிசேர்
வீதி எழுந்தருள வேண்டுமென விண்ணப்பம்
ஆதரத்தாற் செய்ய அவர்க்கருளி—நீதியாற்
கேதகையுஞ் சண்பகமும் நேர்கிடத்திக் கீழ்த்தாழ்ந்த
மாதவியின் போதை மருங்கணைத்துக்—கோதில்
இருவேலி தன்னை இடைஇருத்தி ஈண்டு
மருவோடு மல்லிகையை வைத்தாங்—கருமேக
கருமுகையைக் கைகலக்க வைத்துக் கழுநீர்ப்
பெருகு பிளவிடையே பெய்து—முருகியலும்
புன்னைகந் தன்னைப் புணர இருவாச்சி
தன்னையலை முல்லை தலையெடுப்ப—மன்னிய
வண்செருந்தி வாய்நெகிழ்ப்ப மௌவல் அலர்படைப்பத்
தண்குருந்த மாடை தலையிறக்—ஒண்கமலத்

தாதடுத்த கண்ணியால் தண்ணறுங் குஞ்சிமேற்
போதடுத்த கோலம் புனைவித்துக்—காதிற்
கனவயிர குண்டலங்கள் சேர்த்திக் கழுத்தின்
இனமணியி னரம் இலகப்—புனைகனகத்
தொத்தடுத்த பூஞ்சுரிகைச் சோதிசேர் தாளிம்பம்
வைத்துமணிக் கண்டிகை பூண்டு—மூத்தடுத்த
கேயூரந் தோள்மேற் கிடத்திக் கிளர்பொன்னின்
வாய்மை பெருநூல் வலந்திகழ—வேயுந்
தமனியத்தின் தாழ்வடமுந் தண்டரளக் கோப்புஞ்
சிமையவரை மார்பிற் சேர்த்தி—அமைவுற்ற
வெண்ணீற்றின் ஒண்களபம் அட்டித்து மேவுதொழில்
ஒண்ணூற் கலிங்கம் உடல்புனைந்து—திண்ணெக்கிற்
காற்றுருமோ குன்றே கடலோ வடவுருமோ
கூற்றுருவோ என்னக் கொதித்தெழுந்து—சீற்றத்
தழல்விழித்து நின்றெதிர்ந்து தாலவட்டம் வீசிப்
புழைதடக்கை கொண்டெறிந்து பொங்கி—மழைமதத்தாற்
பூத்த கடதடத்துப் போக மிகப்பொலிந்த
காத்திரத்த தாகிக் கலித்தெங்குங்—கோத்த
கொடிநிகளம் போக்கிநிமிர் கொண்டெழுந்து கோபித்
திடிவண்டை யிட்டுக் கலித்து---முடுகி
நெடுநிலத்தைத் தானுழக்கி நின்று நிகர்நீத்
திடிபெயரத் தாளந் திலுப்பி—அடிசினத்தாற்
கன்ற முகம்பருகிக் கையெடுத் தாராய்ந்து
வென்றி மருப்புருவ வெய்துயிர்த்—தொன்றிய
கூடம் அரணழித்துக் கோபுரங் களைக்குத்தி
நீடு பொழிலை நிகரழித்—தோடிப்
பணப்பா கரைப்பரிந்து குத்திப் பறித்த
நிணப்பாகை நீள்விசும்பின் வீசி—அணைப்பரிய
வோடைக் கருங்களிற்றை ஒண்பரிக் காரர்கள்தாம்
மாடணையக் கொண்டு வருதலுமே—கூடி
நயந்து குரற்கொடுத்து நட்பளித்துச் சென்று
வியந்தணுகி வேட்டந் தணித்தாங்—குயர்ந்த
உடற்றாய வாசிதனைப் பற்றிமேல் கொண்டாங்
கடற்கூடற் சந்தி யணுகி—அடித்த
பயில்பலவும் பேசிப் படுபுரசை நீக்கி
அயர்வு கெடஅணைத்துத் தட்டி—உயர்தரு
தண்டுமே ரோசையின்கண் தாள்கோத்துச் சீர்ச்சிறுத்
தொண்டர் பிறகணைய தோன்றுதலும் எண்டிசையும்
பல்சனமும் மாவும் படையும் புடைகிளர
ஒல்லொலியால் ஓங்கு கடல்கிளர—மல்லற்

பரித்தூரங் கொட்டப் படுபணிலம் ஆர்ப்பக்
கருத்தோ டிசைகவிஞர் பாட—விரித்த
குடைபலவுஞ் சாமரையுந் தொங்கல்களுங் கூடிப்
புடைபரந்து பொக்கம் படைப்பக்—கடைபடு
வீதி யணுகுதலும் வெள்வேளையார் உள்மகிழ்ந்து
காதல் பெருகிக் கலந்தெதிருஞ்—சோதிசேர்
ஆடரங்கின் மேலும் அணிமா ளிகைகளிலுஞ்
சேடரங்கு நீள்மறுகுந் தெற்றியிலும்—பீடுடைய
பேரிளம்பெண் ஈறுகப் பேதை முதலாக
வாரிளங் கொங்கை மடநல்லார்—சீர்விளங்கப்
பேணுஞ் சிலம்பும் பிறங்கொளிசேர் ஆரமும்
பூணும் புலம்பப் புறப்பட்டுச்—சேண்மறுகிற்
காண்டகைய வென்றிக் கருவரைமேல் வெண்மதிபோல்
ஈண்டு குடையின் எழில்நிழற்கீழ்க்—காண்டலுமே
கைதொழுவார் நின்று கலைசரிவார் மால்கொண்டு
மெய்தளர்வார் வெள்வளைகள் போய்வீழ்வார்—வெய்துயிர்த்துப்
பூம்பயலை கொள்வார் புணர்முலைகள் பொன்பயப்பார்
காம்பனைய மென்றோட் கவின்கழிவார்—தாம்பயந்து
வென்றிவேற் சேயென்ன வேனில்வேள் கோவென்ன
அன்றென்ன ஆமென்ன ஐயுற்றுச்—சென்றணுகிக்
காழிக் குலமதலை என்றுதங் கைசோர்ந்து
வாழி வளைசரிய நின்றயர்வார்—பாழிமையால்
உள்ள நிலைதளர்ந்த ஒண்ணுதலார் வெல்களிற்றை
மெள்ள நடவென்று வேண்டுவார்—கள்ளலங்கல்
தாராமை யன்றியுந் தையல்நல் லார்முகத்தைப்
பாராமை சாலப் பயன்என்பார்—நேராக
என்னையே நோக்கினன் ஏந்திழையீர் இப்பொழுது
நன்மை நமக்குண் டெனநயப்பார்—கைம்மையால்
ஒண்கலையும் நாணும் உடைதுகிலுந் தோற்றவர்கள்
வண்கமலத் தார்வலித்து கோடும்எனப்—பண்பின்
வடிக்கண் மலர்வாளி வார்புருவம் வில்மேல்
தொடுத்(து) அதரந்தொண்டை துடிப்பப்—பொடித்தமுலைக்
காசைக் கருங்குழலார் காதற் கவுணியன்பாற்
பூசற் கமைந்து புறப்படுவார்—வாசச்
செழுமலர்த்தார் இன்றெனக்கு நல்காதே சீரார்
கழுமலத்தார்க் கோவே கழல்கள்—தொழுவார்கள்
அங்கோல் வளையிழக்கப் போவது நின்னுடைய
செங்கோன்மை யோவென்று செப்புவார்—நங்கைமீர்
இன்றிவன் நல்குமேல் எண்பெருங் குன்றத்தில்
அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப்—பொன்ற

உரைகெழுவு செந்தமிழ்ப்பா ஒன்றினுல் வென்றி
நிரைகழுமேமல் உய்த்தானே நேர்ந்து—விரைமலர்த்தார்
பெற்றிடலாம் என்றிருந்த நம்மிலும் பேதையர்கள்
மற்றுளரோ என்று வகுத்துரைப்பார்—மற்றிவனே
பெண்ணிரக்கம் அன்றே பிறைநுதலீர் மாசுணத்தின்
நண்ணு கடிவிடத்தால் நாட்சென்று—விண்ணுற்ற
ஆருயிரை மீட்டன்(று) அவ்வா யணிமருகல்
ஊரறிய வைத்த தெனவுரைப்பார்—பேரிடரால்
ஏசுவார் தாழுற்ற ஏசறவைத் தோழியர்முன்
பேசுவார் நின்றுதம் பீடழிவார்—ஆசையால்
கைவார் நலனழிவார் நாணுடு பூணிழப்பார்
மெய்வாடு வார்வெகுள்வார் வெய்துயிர்ப்பார்—தையலார்
பூந்துகிலைப் பூமாலை என்றணிவார் பூவினைமுன்
சாந்த மெனமெய்யில் தைவருவார்—வாய்ந்த
கிளியென்று பாவைக்குச் சொற்பயில்வார் பந்தை
ஒளிமே கலையென் றுடுப்பார்—அளிமேவு
பூங்குழலார் மையலாய்க் கைதொழுமூன் போதந்தான்
ஓங்கொலிசேர் வீதி யுலா.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருக்கலம்பகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒருபோது கோச்சகக் கலிப்பா.

அலையார்ந்த கடல்உலகத் தருந்திசைதோ றங்கங்கே
நிலையார்ந்த பலபதிகம் நெறிமனிதர்க் கினிதியற்றி
ஈங்கருளி எம்போல்வார்க் கிடர்கெடுத்தல் காரணமாய்
ஓங்குபுகழ்ச் சண்பையெனும் ஒண்பதியுள் உதித்தனையே.

செஞ்சடைவெண் மதியணிந்த சிவன்எந்தை திருவருளால்
வஞ்சியன துண்ணிடையாள் மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகமுன் நுகர்ந்தனையே.

தோடணிகா தினன்என்றுந் தொல்அமணர்க் கெஞ்ஞான்றுந்
தேடரிய பராபரனைச் செழுமறையின் அகன்பொருளை
அந்திச்செம் மேனியனை அடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணஅரன் உவனுமென் றுரைத்தனையே.

[இவை மூன்றும் நான்கடித் தாழிசை]

வளமலி தமிழிசை வடகலை மறைவல
முளரிநன் மலரணி தருதிரு முடியினை

கடல்படு விடமடை கறைமணி மிடறுடை
அடல்கரி யுரியனை அறிவுடை யளவினை

[இவை யிரண்டும் அராகம்]

கரும்பினுமிக் கினியபுகழ்க் கண்ணுதல்விண் ணவனடிமேற்
பரம்பவிரும் புவியவர்க்குப் பத்திமையை விளைத்தனையே

பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே

[இவை யிரண்டும் இரண்டடித் தாழிசை]

அணிதவத் தவர்களுக் கதிகவித் தகனும்நீ
தணிமனத் தருளுடைத் தவநெறிக் கமிர்தம்நீ
அமணரைக் கழுதுதிக் கணைவுறுத் தவனும்நீ
தமிழ்நலத் தொகையினிற் றகுசுவைப் பவனும்நீ

[இவை நான்கும் நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்]

மறையவர்க் கொருவன்நீ
மருவலர்க்(கு) உருமுநீ
நிறைகுணத் தொருவன்நீ
நிகரில்உத் தமனும்நீ

[இவை நான்கும் முச்சீர் ஓரடி அம்போதரங்கம்]

அரியைநீ
எளியைநீ
அறவன்நீ
துறவன்நீ
பெரியைநீ
உரியைநீ
பிள்ளைநீ
வள்ளல்நீ

இவை எட்டும் இருசீர் ஓரடி அம்போதரங்கம்]

எனவாங்கு [இது தனிச்சொல்]

அருந்தமிழ் விரகநிற் பரசுதும் திருந்திய
நிரைச்செழு மாளிகை நிலைதொறும் நிலைதொறும்
உரைச்சதுர் மறையின் ஒங்கிய வொலிசேர்
சீர்கெழு துழனித் திருமுகம் பொலிவுடைத்
தார்கெழு தண்டலைத் தண்பணை தழீஇக்
கற்றெருகு புரிசைக் காழியர் நாத
நற்றெருகு கீர்த்தி ஞானசம் பந்த
நின்பெருங் கருணையை நீதிநின்
அன்புடை யடியவர்க் கருளுவாய் எனவே. க

[இது சுரிதகம்]

வெண்பா.

எனவே இடரகலும் இன்பமே எய்தும்
நனவே அரனருளை நாடும்—புனல்மேய
செங்கமலத் தண்டார்த் திருஞான சம்பந்தன்
கொங்கமலத் தண்காழிக் கோ.

கட்டளைக்கலித்துறை.

கோலப் புலமணி சுந்தர மாளிகைக் குந்தளவார்
ஏலப் பொழில்அணி சண்பையர் கோவே யிருங்கடல்சூழ்
ஞாலத் தணிபுகழ் ஞானசம் பந்தனே நற்றமிழே
போலப் பலபுன் கவிகொண்டு சேவடி போற்றுவனே. ங

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

போற்று வார்இடர் பாற்றிய புனிதன்
பொழில்சு லாவிய புகலியர் பெருமான்
ஏற்ற வார்புகழ் ஞானசம் பந்தன்
எம்பி ரான்இருஞ் சுருதியங் கிரிவாய்ச்
சேற்று வார்புனங் காவல் புரிந்தென்
சிந்தை கொள்வதுஞ் செய்தொழி லானன்
மாற்றம் நீரெமக் கின்றுரை செய்தால்
வாசி யோகுற மாது நலீரே. ச

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நலமலி தரும்புவனி நிறைசெய்புக ழின்பநனி
பனிமதி யணிந்த பொழில்சூழ்
பொலமதி லிரும்புகலி யதிபதி விதம்பெருகு
புனிதகுணன் எந்தம் இறைவன்
பலமலி தருந்தமிழின் வடகலை விடங்கன்மிகு
பரசமய வென்றி யரிதன்
சலமலி தருங்கமல சரண்நினைவன் என்றனது
தகுவினைகள் பொன்றும் வகையே. ஞ

பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வகைதகு முத்தமி ழாகரன் மறைபயில் திப்பிய வாசகன்
வலகலை வித்தகன் வானவில் மதியணை பொற்குவை மாளிகை
திகைதிகை மட்டலர் வார்பொழில் திகழ்புக லிக்கர சாகிய
திருவளர் விப்பிர சிகாமணி செழுமல யத்தமிழ் கேசரி
மிகமத வெற்றிகொள் வாரண மிடைவரு டைக்குலம் யாளிகள்
விரவிரு ளிற்றனி நீள்நெறி வினதுயர் மெய்த்துள வேமணி
நகைஎழி லிற்குற மாதுன தருமை நினைக்கிலள் நீஇவண்
நசையின் முழுப்பழியாதன்முன் நணுக வினிக்கிரி வாணனே. ட

பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வாணில வும்புன லும்பயில் செஞ்சடை வண்கரு ணைகரனே
மலைமா துமையொடு மிவளு வானென முன்னு ளுரைசெய்தோன்
சேணில வும்புகழ் மாளிகை நீடிய தென்புக லிக்கரசைத்
திருவா ளணையெழி லருகா சனிதனை மருவா தவர்கிளைபோல்

நாணில வும்பழி யோகரு தாதய லாலெரு காலையுடன்
நசைதீர் நிலைகொலை புரிவே டுவர்பயில் தருகா னதர்வெயிலிற்
கேணில வுங்கிளி பாவையொ டாயமி யாயெனை யும்மொழியக்
கிறியா லெனதொரு மகள்போ யுறுதுயர் கெடுவேன் அறிகிலனே.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அறிவாகி யின்பஞ்செய் தமிழ்வா தில் வென்றந்த
அமணுனை வன்குண்டர் கழுவேற மூன்கண்ட
செறிமாட வண்சண்பை நகராளி என்தந்தை
திருஞான சம்பந்தன் அணிநீடு திண்குன்றின்
நெறியால மண்டின்றி மூனைநாள் சினங்கொண்டு
நிறைவார் புனந்தின்று மகள்மேல் வருந்துங்க
வெறியார் மதந்தங்கு கதவா ணங்கொன்ற
வெகுளாத நஞ்சிந்தை விறலா னுளன்பண்டே. அ

பதின்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பண்டமுது செய்ததுமை நங்கையருள் மேவுசிவ ஞானம்
பைந்தரள நன்சிவிகை செம்பொனணி நீடுகிற தாளங்
கொண்டதரன் உம்பர்பரன் எங்கள்பெரு மானருள் படைத்துக்
கொடுத்ததமி ழைத்தவ குலத்தவர்க ளுக்குலகில் இன்பங்
கண்டதரு கந்தர்குல மொன்றிமுழு துங்கழுவி லேறக்
கறுத்தது வினைப்பயன் மனத்திலிறை சாதலது வன்றி
விண்டதுவும் வஞ்சகரை மஞ்சணவு கின்றமணி மாட
வேணுபுர நாதன்மிகு வேதியர் சிகாமணி பிரானே. கூ

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பிரானெ யெய்த்திரு ஞானசம் பந்தனை மறையவர் பெருமானைக்
குராம லர்ப்பொழிற் கொச்சையர் நாதனைக் குரைகழ லினைவாழ்த்தித்
தராத லத்தினி லவனருள் நினைவொடு தளர்வுறு தமியேனுக்
கிராவி னைக்கொடு வந்தகிவ் வந்திமற் றினிவிடி வறியேனே. கo

பதினொருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஏன முகத்தவ புத்தரை இந்திர சித்து மணம்புணர் வுற்றுன்
ஈழவ னுர்சொரி தொட்டி யினங்களை வெட்டியி சித்தனர் பட்டார்
தான மிரக்கிற சீதை மடுப்பது சாதி குடத்தொடு கண்டீர்
சக்கிர வர்த்திகள் சிக்கர மட்டுவர் தத்துவ மிப்பரி சுண்டே
ஆன புகழ்ப்பயில் விப்ர சிகாமணி யத்தகு மைப்புரை யுங்கார்
ஆர்பொழில் நீடிய சண்பையர் காவலன் வண்களியேன்எளி யேனை
சோனக னுச்சும் எனச்சும் எனத்தரை அம்மனை சூலதுகொண்டாள்
தும்புரு வாலியை வென்று நிலத்திடை நின்று துலுக்குகி ருரே. கக

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஆர்மலி புகலி நாதன் அருளென இரவில் வந்தென்
வார்முலை பயலை தீர மணந்தவர் தணந்து போன
தேரத ழழிய லும்மைச் செய்பிழை எம்ம தில்லை
கார்திரை கழுலி மோதிக் கரைபொருங் கடலி னீரே. கஉ

கலிவிருத்தம்.

கடன்மேவு புவியேறு கவிகீசர் பெருமான்
தடமாடு மிகுகாழி தகுபேதை யருளாமை
திடமாகில் அணிதேறு செழுமேனி முழுதாடி
மடலேறி எழில்வீதி வருகாதல் ஒழியேனே. கங

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஒழியா தின்புறு பொழில்சூழ் சண்பைமன்
உயர்பார் துன்றிய தகுஞான னன்புகழ்
எழிலா ருங்கவு ணியர்தீ பன்திகழ்
இணையார் செங்கரன் நிகழ்வான் விண்குயின்
பொழியா நின்றன துளிதார் கொன்றைகள்
புலமே துன்றின கலைமான் ஒன்றின
பழிமேல் கொண்டது துமர்தேர் அன்பொடு
மருகே வந்தது அதுகாண் மங்கையே. கச

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மங்கை யிடத்தர வணிக்கவி கீதெதி ரோட மதித்தருள்செய்
தங்கு புகழ்ச்சதுர் மாமறை காவளர் சைவ சிகாமணிதன்
துங்க மதிற்பிர மாபுர மேவிய சூழ்பொழில் நின்றெளிர்மென்
கொங்கை யுடைக்கொடி யேரிடை யாள்குடி கொண்டனள் எம்மனமே.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மனங்கொண்டு நிறைகொண்டு கலையுங் கொண்டு
மணிநிறமும் இவள்செங்கை வளையுங் கொண்ட
தனங்கொண்ட பெருஞ்செல்வந் திகழுங் கீர்த்திச்
சண்பையர்கோன் திருஞான சம்பந் தற்கு
நனங்கொண்டு மெய்கொண்டு பயலை கொண்டே
நன்னுதலாள் அயர்கின்றுள் நடுவே நின்று
மினங்கொண்டு நகைகொண்டு மடவீர் வாளா
என்செயநீர் அலர்தூற்றி எழுகின் றீரே கசு

இதுவுமது. வேறு.

எழுகுல வெற்பிவை மிடறில் அடக்குவன
எறிகட லிற்புனல் குளறி வயிற்றினின்
முழுது மொளித்திர வியையி நிலத்திடை
முடுகுவ னிப்பொழு திவையல விச்சைகள்
கழுமல நற்பதி யதிப தமிழ்க்கடல்
கவுணிய நற்குல திலகன் இணைக்கழல்
தொழுது வழுத்திய பிறரொரு வர்க்குறு
துயர்வரு விப்பனி தரியதொர் விச்சையே. கள

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சயமி குத்தரு கரைமு ருக்கிய தமிழ்ப யிற்றிய நாவன்
வியலி யற்றிரு மருக விற்கொடு விடம ழித்தருள் நீதன்
கயலு டைப்புனல் வயல்வ ளத்தகு கழும லப்பதி நாதன்
இயலு டைக்கழல் தொழநி னைப்பவர் இருவி னைத்துயர் போமே. கஅ

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மேதகுந் திகழ்பூக நாகசண் பகசூத
வேரிவண் டறைசோலை யாலைதுன் றியகாழி
நாதனந் தணர்கோனை ஞானவண் புகழாளி
ஞானசுந் தரன்மேவு தார்நினைந் தயர்வேனை
நீதியன் றனபேசும் யாயுமிந் துவும்வாச
நீடுதென் றலுஞ்வீசு யோசையுங் கரைசேர
மோதுதெண் டிரைசேவல் சேருமன் றிலுஞ்வேயு
மூடுதண் பனிவாடை கூடிவன் பகையாமே. ககூ

இதுவுமது. வேறு.

வன்பகை யாமக் குண்டரை வென்றேய்
மாமலர் வாளிப் பொருமத வேளைத்
தன்பகை யாகச் சிந்தையுள் நையுந்
தையலை உய்யக் கொண்டருள் செய்யாய்
நின்புகழ் பாடிக் கண்பனி சோரா
நின்றெழில் ஞானு என்றகம் நெக்கிட்
டன்பக லாமெய்ச் சிந்தையர் இன்பர்
அம்பொழின் மாடச் சண்பையர் கோவே. உ0

இதுவுமது. வேறு.

கோவின்றிரு முகமீதொடு வருதூதுவன் ஈர
குளிர்பைம்பொழில் வளநாடெழில் நிதியம்பரி சம்மீ
மாவீரிய ரிவர்தங்கையென் மகுடன்திறம் அமண
மறவெங்குல மறிகின்றிலன் பழியச்சத வரசன்

பாவேறிய மதுரத்தமிழ் விரகன்புக லியர்மன்
பயில்வண்புக ழருகாசனி பணியன்றெனி னமர்காள்
தூவேரியை மடிமின்றுடி யடிமின்படை யெழுமின்
தொகுசேனையும் அவனும்படை மலையும்பரி சினியே. உக

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இனியின் றெழிமினிவ் வெறியும் மறியடு
தொழிலும் மிடுகுர வையுமெல்லாம்
நனிசிந் தையினிவள் மிகவன் புறுவதொர்
நசையுண் டதுநரை மூதுபெண்டீர்
புனிதன் புகலியர் அதிபன் புனைதமிழ்
விரகன் புயமுறும் அரவிந்தம்
பனிமென் குழலியை அணிமின் துயரொடு
மயலுங் கெடுவது சரதம்மே. உஉ

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சரத மணமலி பரிசம் வருவன
தளர்வில் புகலியர் அதிபன் அதிதரு
வரதன் அணிதமிழ் விரகன் மிகுபுகழ்
மருவு சுருதிநன் மலையின் அமர்தரு
விரத மூடையநின் இடையின் அவள்மனம்
விரைசெய் குழலியை அணைவ தரிதென
விரத மழிதர வருதன் மூனம்இனி
எளிய தொருவகை கருது மலையனே. உங

இதுவுமது. வேறு.

அயன்நெடிய மாலும்அவ ரறிவரிய தாணுவரன்
அருளிலெமி நீடவனி யிடர்முழுது போயகல
வயலணிதென் வீழிமிழ லையின்நிலவு காசின்மலி
மழைபொழியு மானகுண மதுரன்மதி தோய்கனக
செயநிலவு மாடமதில் புடைதழுவு வாசமலி
செறிபொழில் சுலாவிவளர் சிரபுரசு நாதன்முதிர்
பயன்நிலவு ஞானதமிழ் விரகன்மறை ஞானமுணர்
பரமகுரு நாதன்மிகு பரசமய கோளரியே. உச

இதுவுமது. வேறு.

அரியாருங் கிரிநெறியெங் ஙனநீர் வந்தீர்
அழகிதினிப் பயமில்லை அந்திக்கப்பால்
தெரியாபுன் சிறுநெறிகள் எந்தம் வாழ்விச்
சிறுகுடியின் நிரவிங்கே சிரமந் தீர்ந்திச்

சுரியார்மென் குழலியொடும் விடியச் சென்று
தொகுபுகழ்சேர் திருஞான சம்பந் தன்றன்
வரியாரும் பொழிலுமெழில் மதிலுந் தோற்றும்
வயற்புகலிப் பதியினிது மருவ லாமே.

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

ஆமாண்பொன் கூட்டகத்த அஞ்சொல்இளம் பைங்கிளியே
பாமாலை யாழ்முரியப் பாணழியப் பண்டருள்செய்
மாமான சுந்தரன்வண் சம்பந்த மாமுனிஎங்
கோமான்றன் புகழொருகால் இன்புறநீ கூறுயே
கொச்சையர்கோன் றன்புகழ்யான் இன்புறநீ கூறுயே. உசு

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கூற தாகமெய் யடிமை தான்எனீ யுடைய கொச்சைய ரதிபதி
வீற தார்தமிழ் விரகன் மேதகு புகழி ஞன்இவன் மிகுவனச்
சேற தார்தரு திரள்க ளாக்கன செழுமுலைச்குரி யவர்சினத்
தேறு தானிது தழுவி ஞரென இடிகொள் மாமுர சதிருமே. உள

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சதுரன் புகலியர் அதிபன்கூர்
தவசுந் தரகவு ணியர்தஞ்சீர்
முதல்வன் புகலியர் அதிபன்தாள்
முறைவந் தடையலர் நகரம்போல்
எதிர்வந் தனர்விறல் கெடவெம்போர்
எரிவெங் கணைசொரி புரிமின்கார்
அதிர்கின் றனவிது பருவஞ்சேர்
அலர்தம் பதிமதில் இடிமின்னே. உஅ

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மின்னு மாகத் தெழிலி யுஞ்சேர்
மிகுபொன் மாடப் புகலி நாதன்
துன்னு ஞானத் தெம்பி ரான்மெய்த்
தொகைசெய் பாடற் பதிகம் அன்னுள்
பொன்னும் மாநல் தரள முந்தன்
பொருக யற்கண் டனநி றைத்தாள்
இன்னும் ஏகிப் பொருள் படைப்பான்
எங்ஙு னேநான் எண்ணு மாறே. உக

பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மாறி லாத போடிநீ றேறு கோல வடிவும்
வம்பு பம்பு குழலுந் துங்க கொங்கை யிணையு
மூறி ஏறு பதிகத் தோசை நேச நுகர்வு
மொத்து கித்து நடையுஞ் சித்த பத்தி மிகையும்
வீற தேறும் வயல்சூழ் காழி ஞான பெருமான்
வென்றி துன்று கழலின் ஒன்றி நின்ற பணியுந்
தேறல் போலும் மொழியுஞ் சேல்கள் போலும் விழியுஞ்
சிந்தை கொண்ட பரிசும் நன்றிம் மங்கை தவமே. ஈ ஏ

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கைதவத்தால் என்னிடைக்கு நீவந்த
தறியேனே கலதிப் பாணி
மெய்தவத்தார் உயிரனைய மிகுசைவ
சிகாமணியை வேணுக் கோனைச்
செய்தவத்தால் விதிவாய்த்த செழுமலையா
ரவனுடைய செம்பொற் றிண்டோள்
எய்தவத்தால் விளிவெனக்கென் யாதுக்கு
நீபலபொய் இசைக்கின் றாயே. ஈ க

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இசையை முகந்தெழு மிடறு மிதிங்கிவண்
இடுகர ணங்களின் இயல்பும் வளம்பொலி
திசைதிசை துன்றிய பொழில்சூ லவந்திகழ்
சிரபுர மன்றகு தமிழ்விர கன்பல
நசைமிகு வண்புகழ் பயிலு மதங்கிதன்
னளிர்முலை செங்கயல் விழிநகை கண்டபின்
வசைதகு மென்குல மவைமுழு துங்கொள
மதிவளர் சிந்தனை மயல்வரு கின்றதே. ஈ உ

இதுவுமது. வேறு.

வருகின் றனன்என் றனதுள் ளழுங்கின்
வசமே நிறுவிக் குறைகொண் டுதணித்
தருகும் புனல்வெஞ் சுரம்யான் அமரும்
மதுநீ இறையுன் னினையா தெனின்முன்
கருகும் புயல்சேர் மதில்வண் புகலிக்
கவிஞன் பயில்செந் தமிழா கரன்மெய்ப்
பெருகுந் திருவா ரருள்பே ணலர்போற்
பிழைசெய் தனைவந் ததர்பெண் கொடியே. ஈ ஊ

இதுவுமது. வேறு.

கொடிநீடு விடையுடைய பெருமானே அடிபரவு
குணமேதை கவுணியர்கள் குலதீப சுபசரிதன்
அடியேன திடர்முழுதும் அறவீசு தமிழ்விரகன்
அணியான புகலிநகர் அணையான கணிகடலின்
முடிநீடு பெருவலிகொ டலையூடு புகுவனுமர்
முறையேவு பணிபுரிவன் அணிதோணி புனைவனவை
படியாரும் நிகரரிய வரியாரும் மதர்நயனி
பணைவார்மென் முலைதுளையர் மடமாதுன் அருள்பெறினே. நச

இதுவுமது. வேறு.

பெறுபயன் மிகப்புவியுள் அருளுவன பிற்றைமுறை
பெருநெறி யளிப்பனபல் பிறவியை யொழிச்சுவன
உறுதுய ரழிப்பனமுன் உமைதிரு வருட்பெருக
உடையன நதிப்புனலின் எதிர்பஃறி உய்த்தனபுன்
நறுமுறு குரைச்சமணை நிரைகழு நிறுத்தியன
நனிகத வடைத்தனது னருவிட மகற்றியன
துறுபொழில் மதிற்புறவ முதுபதிமன் ஒப்பரிய
தொழில்பல மிகுத்ததமிழ் விரகன கவித்தொகையே. நடு

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தொகு வார்பொழில் சுற்றிய வான்மதி தோயும் மதிற்கனமார்
தொலை யாததிருப் பொழில் மாளிகை மாட நெருங்கியசீர்
மிகு காழிமன் முத்தமி ழாகரன் மேதகு பொற்புனைதார்
விரை யார்கம லக்கழ லேதுணை யாக நினைப்பவர்தாம்
மக ராதர நித்தில நீர்நிலை யார்புவி யுத்தமராய்
வர லாறு பிழைப்பினி னூழி யிலக்கிதமா
தகு வாழ்வு நிலைத்தெழில் சேரற மான பயிற்றுவர்மா
சது ராலவினை செற்றதன் மேலணு கார்பிற விக்கடலே. நசு

நேரிசையாசிரியப்பா.

கருமங் கேண்மதி கருமங் கேண்மதி
துருமதிப் பாண கருமங் கேண்மதி
நிரம்பிய பாடல் நின்கண் ணேடும்
அரும்பசி நலிய அலக்கணுற் றிளைத்துக்
காந்திய உதரக் கனல்தழைத் தெழுதலில்
தேய்ந்துடல் வற்றிச் சின்னரம் பெழுந்த
இறுகுபு சுள்ளி இயற்றிய குரம்பை
உறுசெறுத் தணைய உருவுகொண் டுள்வலை இ
இன்னிசை நல்லி யாழ்சுமந் தன்ன

மன்னிய வளநகர் மணக்கடை தோறுஞ்
சென்றுழிச் சென்றுழிச் சில்பலி பெறுது
நின்றுழி நிலாவு வன்துயர் போயொழிந்
தின்புற் றிருநிதி எய்தும் அதுநுன
துள்ளத் துள்ள தாயின் மதுமலர்
வண்டறை சோலை வளவயல் அகவ
ஒண்திறற் கோண்மீன் உலாவு குண்டகம்
உயர்தரு வரையின் இயல்தரு பதணத்துக்
கடிநுதிக் கழுக்கடை மிடைதரு வேலிக்
கனகப் பருமுரட் கணையக் கபாட
விலையக் கோபுர விளங்கெழில் வாயில்
நெகிழ்ச்சியில் வகுத்துத் திகழ்ச்சியில் ஓங்கும்
மஞ்சணை யிஞ்சி வண்கொடி மிடைந்த
செஞ்சுடர்க் கனகத் திகழ்சிலம் பணைய
மாளிகை யோளிச் சூளிகை வளாகத்
தணிவுடைப் பலபட மணிதுடைத் தழுத்திய
நல்லொளி பரந்து நயந்திகழ் இந்திர
வில்லொளி பலபல விசும்பிடைக் காட்ட
மன்னிய செல்வத்துத் துன்னிய பெருமைச்
செம்மலர் மாது சேர்ந்திறை பிரியாக்
கழுமல நாதன் கவுணியர் குலபதி
தண்டமிழ் விரகன் சைவ சிகாமணி
பண்டிதர் இன்பன் பரசமய கோளரி
என்புணை தமிழ்கொண் டிரங்கிஎன் னுள்ளத்
தன்பிணை அருளிய ஆண்டகை தன்புகழ்
குறைவறுத் துள்கி நிறைகடை குறுகி
நாப்பொலி நல்லிசை பாட
மாப்பெருஞ் செல்வம் மன்னுதி நீயே. நஎ

வஞ்சித்துறை.

நீதியின் நிறைபுகழ்
மேதகு புகலிமன்
மாதமிழ் விரகணை
ஓதுவ(து) உறுதியே. நஅ

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உறுதி மூலதாழ எணையிகழும் நீதி
உனது மனமார முழுவ துமதாக
அறுதிபெறு மாதர் பெயல்தரு தல்தானும்
அழகிதினி யானுன் அருள்புணைவ தாக

பெறுதி இவைநீஎன் அடிபணிதல் மேவு
பெருமைகெட நீடு படிறுழிபொன் மாட
நறைகமழு வாச வளர்பொழில் சூலாவும்
நனிபுகலி நாத தமிழ்விரக நீயே. ங்கூ

ஆசிரியத்துறை.

நீமதித் துன்னிநீ யேன்மட நெஞ்சமே
காமதிக் கார்பொழிற் காழி
நாமதிக் குப்புகழ் ஞானசம் பந்தன்ஒண்
பூமதிக் குங்குழல் போற்றே. சo

கட்டளைக் கலிப்பா.

போற்றி செய்தரன் பொற்கழல் பூண்டதே
புந்தி யானுந்தம் பொற்கழல் பூண்டதே
மாற்றி யிட்டது வல்விட வாதையே
மன்னு குண்டரை வென்றது வாதையே
ஆற்றெ திர்ப்புனல் உற்றதந் தோணியே
ஆன தன்பதி யாவ(து)அந் தோணியே
நாற்றி சைக்கவி ஞானசம் பந்தனே
நல்ல நாமமும் ஞானசம் பந்தனே. சக

கைக்கிளைமருட்பா.

அம்புந்து கண்ணிமைக்கு மான நுதல்வியர்க்கும்
வம்புந்து கோதை மலர்வாடுஞ்—சம்பந்தன்
காமருகழுமல மீனியாள்
ஆமிவள் அணங்கலள் அடிநிலத் தனமே. சஉ

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தனமுந் துகிலுஞ் சாலிக் குவையுங் கோலக் கனமாடச்
சண்பைத் திகழ்மா மறையோர் அதிபன் தவமெய்க் குலதீபன்
கனவண் கொடைநீ டருகா சனிதன் கமலக் கழல்பாடிக்
கண்டார் நிறையக் கொள்ளப் பசியைக் கருதா தெம்பாண
புனைதண் டமிழின் இசையார் புகலிக் கரசைப் புகழ்பாடிப்
புலியச் சேரிக் காளை புகுந்தால் என்சொற் புதிதாக்கிச்
சினவெங் கதமாக் களிறொன் றிந்தச் சேரிக் கொடுவந்தார்
சேரிக் குடிலும் இழந்தார் இதனைச் செய்வ தறியாரே. சங

இன்னிசை வெண்பா.

யாரேஎம் போல அருளுடையார் இன்கமலத்
தாரேயுஞ் சென்னித் தமிழ்விரகன்—சீரேயுங்
கொச்சை வயன்றன் குரைகழற்கே மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து. சச

பதின்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அறிதரு தூண்பொருள் சேர்பதி கம்மரன் கழல்மேல்
அணிதரு சுந்தர மலிதமிழ் விரகன் பிறைதேய்
செறிதரு பைம்பொழில் மாளிகை சுலவுந் திகழ்சீர்த்
திருவளர் சண்பையின் மாடலை கடலொன் கழிசேர்
எறிதிரை வந்தெழு மீனிரை நுகர்கின் றிலைபோய்
இனமும் அடைந்திலை கூரிட சோடிருந் தனையால்
உறுதுயர் சிந்தையி னூடுத வினரெந் தமர்போல்
உமரு மகன்றன ரோஇது உரைவண் குருகே. சஅ

கலி விருத்தம்.

குருகணி மணிமுன் கைக்கொடி யும்நல் விறலவனும்
மருகணை குவரப் பாலரி னிவழி மீண்மின்
றருகெழு முகில்வண் கைத்தகு தமிழ்விர கன்றன்
கருகெழு பொழில்மா டக்கழு மலவள நாடே. சசு

இதுவுமது. வேறு.

நாடே றும்புகழ் ஞானசம் பந்தன்வண்
சேடே றுங்கொச்சை நேர்வளஞ் செய்துணை
மாடே றுந்தையல் வாட மலர்ந்தனை
கோடே றுங்கொடி யாய்கொல்லை முல்லையே. சள

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முல்லைநகை யுமைதன் மன்னுதிரு வருளை
மூந்தியுறு பெரிய செந்தண்முனி வன்மிகு
நல்லபொழில் சுலவு தொல்லையணி புகலி
நாதன்மறை முதல்வன் வேதமலி யதனில்
வில்லையிலர் கணையும் இல்லைபக ழியுறு
வேழமிர லகலை கேழல்வின வுறுவர்
சொல்லையிலர் விரக ரல்லர்தழை கொணர்வர்
தோழியிவ ரொருவர் ஆவவழி தர்வரே. சஅ

வஞ்சித்துறை.

வழிதரு பிறவியின்உறு
தொழில்அமர் துயர்கெடுமிகு
பொழிலணி தருபுகலிமன்
எழிலிணை யடியிறைமினே. சக

திருச்சிற்றம்பலம்.

க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

ஆளுடையபிள்ளையார்

திருத்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூவார் திருநுதல்மேல் பொற்சுட்டி இட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்பரற்ற—ஓவா
தழுவான் பசித்தான்என் றுங்கிறைவன் கர்ட்டத்
தொழுவான் துயர்தீர்க்குந் தோகை—வழுவாமே
மூப்பத் திரண்டறமுஞ் செய்தாள் முதிராத
செப்பொத்த கொங்கைத் திருநுதலி—அப்பன்
அருளாலே ஊட்டுதலும் அப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல்—இருள்தீர்ந்த
காழி முதல்வன் கவுணியர்தம் போரேறு
ஊழி முதல்வன் உவனென்று—காட்டவ(ல்)லான்
வீழி மிழலைப் படிக்காசு கொண்டபிரான்
பாழி அமணைக் கழுவேற்றி ஞன்பாணர்
யாழை முரித்தான் எரிவாய் இடும்பதிகம்
ஆழி உலகத் தழியாமற் காட்டினன்
ஏழிசை வித்தகன்வந் தேதேனுரும் வாழுருந்
தாழுஞ் சரணச் சதங்கைப் பருவத்தே
பாலியும் நெய்தலும் பாடவலான்—சோலைத்
திருவா வடுதுறையிற் செம்பொற் கிழியொன்
றருளாலே பெற்றருளும் ஐயன்—தெருளாத
தென்னவனு டெல்லாந் திருநீறு பாலித்த
மன்னன் மருகல்விடந் தீர்த்தபிரான்—பின்னைத்தென்
கோலக்கா வில்தாளம் பெற்றிக் குவலயத்தின்
மாலக்கா லத்தே மாற்றினன்—ஞாலத்து
மூத்தின் சிவிகை அரன்கொடுப்ப முன்னின்று
தித்தித்த பாடல் செவிக்களித்தான்—நித்திலங்கள்
மாடத் தொளிரும் மறைக்காட் டிறைகதவைப்
பாடி யடைப்பித்த பண்புடையான்—நீடுந்
திருமேவுத்தூர் ஆண்பனையைப் பெண்பனையா கென்னும்
பெருமார்த்தை தானுடைய பிள்ளை—மருவினிய

கொள்ளம்பூதூர்க்குழகன் நாவாய் அதுகொடுப்ப
உள்ளமே கோலாக ஊன்றினன்—வள்ளல்
மழவன் சிறுமதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோமான் நிலவிய
வைகையாற்(று) ஏடிட்டு வானீர் எதிர்ஓட்டுஞ்
செய்கையான் மிக்க செயலுடையான்—வெய்யவிடம்
*மேவி இறந்த அயில்வேற்கண் மடமகளை
வாவென் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான்—சேர்வந்த
புத்தன் தலையைப் புவிமேற் புரள்வித்த
வித்தகப் பாடல் விளம்பினன்—மொய்த்தொளிசேர்
கொச்சைச் சதுரன்றன் கோமானைத் தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதிஞ் ஞாயிரம்பா
வித்துப் பொருளை விளைக்க வலபெருமான்
மூத்திப் பகவ முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தர்எதிர் ஆணைநம தென்னவலான்
கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்
பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடுங்
கொற்றக் கதிர்வேற் குலச்சிறையுங் கொண்டாடும்
அற்றைப் பொழுதத் தமணரிடு வெந்தீயைப்
பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை என்னவல்லான்
வர்த்தமா னீசர் கழல்வணங்கி வாழ்முருகன்
பத்தியை ஈசன் பதிகத்தே காட்டினன்
அத்தன் திருநீல நக்கற்கும் அன்புடையான்
துத்த மொழிக்குதலைத் தூயவாய் நன்னுதலி
நித்திலப் பூண்முலைக்கும் நீண்டதடங் கண்ணினுக்குங்
கொத்தார் கருங்குழற்குங் கோலச்செங் கைமலர்க்கும்
அத்தா மறையடிக்கும் அம்மென் குறங்கினுக்குஞ்
சித்திரப்பொற் காஞ்சி செறிந்தபே ரல்குலுக்கும்
மூத்தமிழ்நூல் எல்லாம் முழுதுணர்ந்த பிள்ளையார்க்(கு)
ஒத்த மணம்இதுவென் றோதித் தமர்களெல்லாஞ்
சித்தங் களிப்பத் திருமணஞ்செய் காவணத்தே
அற்றைப் பொழுதத்துக் கண்டிடனே நிற்கப்
பெற்றவர்க ளோடும் பெருமணம்போய்ப் புக்குத்தன்
அத்தன் அடியே அடைந்தான் அழகிதே.

திருச்சிற்றம்பலம்.

* "கூனிமிர்த்தா வற்போடு கூட்டமடக் கொடியே" என்றும் பாடம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூவர் முதலிகள் தேவாரம்.

பாடபேத அட்டவணை.

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிரதி.	பேதம்.
1	1	2	என்னுள்ளம்	எனதுள்ளம்
1	1	1	சூடிக்	சூடி
3	7	1	சிலையதுவெஞ்	சிலையதுவே
,,	,,	2	இலைதுனை	இலைதுனி
4	2	2	சண்டிக்கு	தண்டிக்கு
5	10	3	உற்றவரென்றிலர்	உற்றலரொன்றிலர்
,,	1	3	மேயசீர்ப்	மெய்யசீர்
6	4	2	கானல் புல்கும்	கான்புகும்
,,	5	3	குடி	கூடி
,,	,,	4	கருள்தன்மையே	குளதன்மையே
,,	6	1	தென்னுயர்	தென்னுயிர்
,,	,,	3	கொள்கையான்	கொள்கையார்
7	3	1	மாய்தர	மாய்ந்தற
,,	4	1	மிண்ட	மண்ட
,,	5	2	மெழவிடை	மழவிடை
8	5	1	உருவாய்நமை	உருவானமை
,,	,,	4	நின்றிறங்கும்	நின்றிரங்கும்
9	6	1	மண்ணேர்களும் விண்ணேர்களும்	விண்ணேர்களும் மண்ணேர்களும்
,,	9	3	கயமேவிய	சயமேவிய
,,	,,	4	வியன்மேவி	வயன்மேவி
,,	11	1	யானும்மிகு	யானம்மிகு
,,	,,	2	பந்தன்தன	சம்பந்தன
,,	1	3	முத்தம்	தரளம்
10	8	3	மதியம்	மதியும்
11	2	2	உடையாடையது	உடையாயவது
,,	8	1	இரைமண்டி	திரை

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிரதி.	பேதம்.
11	8	3	பேரோதங்கலங்தெற்றும்	பெருகோதங் கலங்தேறும்
,,	,,	4	மேயமர்ந்து	மெய்யமர்ந்து
,,	11	1	வுண்டியினர்	வுண்டியன
12	5	2	தண்சடையேற	தன்சடையேற
,,	6	1	மான்மழு	மாமழு
13	9	1	பொடிபூசி	பொடிப்பூசி
,,	2	3	மலிபுகை	மலிப்புகை
14	6	1	மதுப்பாய்வரி	மதுப்பாய்விரை
,,	8	1	வல்லிய	விலலிய
15	3	4	மாகமே	மாகுமே
,,	4	4	செய்யுமே	செய்ம்மினே
,,	10	2	வையாஉணர்வினுள்	வையாருணர்வினுள்
16	2	3	வீசமலர்	வீசுமலர்
,,	3	3	தேவணவிழா	தேவணர் விழா
,,	5	3	புன்னேயமலர்ப்பொழில்	புன்னேமலர்ப்பொழில்
,,	6	3	பணிமூச	பணிமூச
,,	7	3	மல்கு	பல்கு
17	10	4	விருப்புறு	வன-ப்புறு
,,	11	1	செந்தமிழ்	செந்தமிழ்கள்
18	11	2	பதியான	பதியாேன
19	9	1	பறந்தார் அயர்ந்தார்	பரந்தேதயர்ந்தார்
20	1	1	பொருளின்	பொருணின்
,,	2	3	தோல்அலைவரு	தொலைவரு
21	7	5	புகலிந்நகர்	புகலிநன்னகர்
,,	8	1	எம்மானுன்னே	எம்மானின்னே
,,	9	5	உயர்ந்தாயினிநீயெனே	உயர்ந்தாய்நீயெனே
,,	10	1	நோன்பர்	நோன்பவர்
22	7	1	சேர்ப்பது திண்சிலைமேவி	சேர்ப்பொழுதின்மலைவேலி சேர்ப்பொழுதுமலைவேலி
,,	10	1	பேச்சினப்பேணுததோர்	பேணைப்பேணுததோர்
23	11	4	கமரர்பதியோர்	கமராவதியோர்
,,	5	2	புந்தியினுல்	புந்தியினர்
24	6	1	கொளியிப்பி	கொலியிப்பி
,,	9	1	செற்றதில்	சேற்றதில்
25	3	2	கறுத்தவர்க்களித்து	கறுத்ததற்களித்து

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிரதி.	பேதம்.
25	4	3	கூடியுழுழவப்	கூடியமுழவம்
,,	5	3	பைங்கயக்கண்ணி	பைங்கயற்கண்ணி பங்கயக்கண்ணி
,,	8	5	மலரார்	மலரா
27	2	2	வினேயேன்	வினையின்
,,	,,	4	வெறிநிரூர்	வெறிநீரார்
28	3	4	கென்பரிசுரைத்தார்	கென்மொழியுரைத்தால்
,,	5	2	கபோதகங்கள்	கபோதங்கள்
,,	6	1	செஞ்சாலிக்கதிர்	செஞ்சாலிகதிர்
,,	8	4	யென்னிடத்தே	யென்னிடைக்கே
29	8	2	வென்றிசைபுயங்களை	வென்றிசெய் புயங்களை
30	மே 9	4	(மேல்) மரியாணுறைவு	மறியாணுறைவு
,,	கீ 9	4	(கீழ்) பரவை	பறவை
31	1	3	மூடிதேய்கழலீர்	தொழுபொற்கழலீர்
,,	1	4	பின்னுசெஞ்சடை	மின்னுசெஞ்சடை
32	11	1	வாய்ப்புகலி	வாய்புகலி
,,	1	3	ஆதிப்பிரான்	ஆதிபிரான்
33	4	3	தியலொத்தமுலை	தியல்பொத்தமுலை
,,	6	2	வண்தாளந்	வெண்தாளந்
35	8	4	பெருக்கிநின்ற	பெருக்கநின்ற
,,	10	1	சாக்கியப்	சாக்கியர்
36	5	1	வெள்ளையிறுடையவவ்	வெள்ளையேறுடையவர்
38	7	2	மெய்ம்மையென்னே	மேன்மையென்னே
39	10	2	அறவுரை	அறனுரை
40	6	1	திவ்வுலகங்க	தியுலகங்க
,,	8	3	புலங்கள்	புலங்கொள்
43	3	2	புற்றுடரவின்	புற்றராவின்
,,	9	1	மீத்திக	வீத்திக
,,	10	2	தேரர்உண்டிலே	தேரரவுண்டிலே
44	6	4	மூகைநிதி	மூகெநி, மூகைநெதி
45	10	1	கொழுகிய	கொழுவிய
46	5	2	குன்றதுடைய	குன்றெத்துடைய
,,	1	2	தூபமொடுதீபமலி	தீபமொடுதூபமலி
47	4	4	மருவெட்டும்	மருமெட்டும்
,,	6	3	கிண்டி	கெண்டி

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிரதி.	பேதம்.
47	11	1	தெண்கடல்	தென்கடல்
48	8	4	பொடிக்கொள்நீறு	பொடிக்கணீறு
49	4	3	களியார்பொழில்	களியார்புனல்
52	1	1	யோடியலாறங்கம்	யோடிகலாறங்கம்
53	6	4	மேவியமாந்தர்	மேவியமர்ந்தார்
,,	11	3	தமிழாச	தமிழான
,,	1	6	அண்ணலாரடியார்	அண்ணலானடியார்
,,	5	1	மேல்நிமிர்ந்	மேனிரந்
55	11	1	பெயரெனும்	பெயர்வெனும்
57	1	2	பெண்நயங்கொள் திரு மேனியான்	பெண்ணியங்கொடிருமே னியாம்
,,	,,	3	கண்நயங்கொள்	கண்ணியங்கொண்
,,	3	1	சுற்றலா	சுற்றரை
58	8	4	மறையேத்து	மறையோத்து
,,	9	3	திரையோதம் வராவியன்	திரையோதமார்வியன் திரையோதம்வார்வியன்
59	5	4	கங்கைநாடியர்	கங்கைநாடுவர்
,,	7	3	திருந்தியம்போதிற்	திருந்தியபோதிற்
,,	9	1	திகலியமனத்தார்	றியலியமனத்தார்.
60	4	1	நட்ந்துசெல்ல	நடந்துசொல்ல
,,	,,	2	வம்மெனும்உரை	வம்மினெனுமுரை
,,	5	2	உண்கிலாமை	உண்கிலாது
61	3	2	மார்விலங்கும்	மார்பிலங்கும்
,,	,,	3	மோதந்	மோதுந்
62	11	1	கருக	கருகு
63	7	4	ஏறதுகந்தார்	ஏற்றதுகந்தார்
64	8	1	கதளேரியளா	கதளேருயளா
,,	,,	2	யரிளே	யருளே
,,	4	1	இகலிப்புகுந்து	இயலிப்புகுந்து
,,	,,	,,	முயல்வித்த	முயல்வுற்ற
65	9	4	மோதுமதுவில்	போதுமதுவில், போது மடுவில்
67	5	2	செழும்பதி	செழுமதி
68	10	3	நடுவுறை	நடுவுரை
,,	1	4	தொழன்மருவுமே	தொழமருவுமே

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிரதி.	பேதம்.
69	5	3	மதிலெரியுண	மதிளெரியுண
,,	10	1	அமைவன துவரிழு	அமையன துவரிழு
70	1	3	எருதுகந்தேதறி	ஏறுகந்தேதறி
,,	5	3	சுரிசங்கம்	சொரிசங்கம்
71	1	2	யேனேர்கான்	யேனேர்காண்
72	2	7	கச்சத்தான்	கச்சித்தான்
,,	3	6	புரிதருசடையனிடங்	புரிவுசெய்தவனிடம்
,,	5	1	திகழ்ந்திலங்கு	திகழ்ந்தடங்கு
,,	,,	7	போயுக்கத்தே	பேர்யுக்கத்தே
,,	,,	,,	கனன்று	கன்று
73	10	3	அத்தந்தான்	அத்தத்தான்
,,	,,	6	போய்ப்புணர்வு	போய்ப்புரிவு
74	4	3	மாளிகையின்	மாளிகைமென்
75	7	1	புவிபுதல்	புவமுதல்
,,	,,	2	யல்லவுருவாய்	யல்லவருவாய்
,,	1	1	மண்ணில்நல்லவண்ணம்	மண்ணில்நல்லவணம்
77	3	3	புனல்கொள	கடல்கொள
78	8	3	பலபல	பல பட
,,	2	1	பெயலார்	பியலார்
,,	3	3	அயலின்மையாலமரர்	அயலின்மயலாலமரர்
79	7	1	கெழுமம	கெழுவ
82	12	3	சொல்லிடல்	சொல்லுதல்
84	,,	6	ஓரால் நீழல் ஒண்	ஓரால் நீழல்உன்
86	6	3	மேலாரேத்து	மேலாலேத்து
87	8	3	கூடியயனூர்	கூடியவனூர்
90	1	3	னிரைநிறைகொள்	னிரநிறைகொள்
,,	2	1	வாணிசைகொள்	வாணிசைக
,,	,,	2	மாணிமது	மாணுமது
,,	,,	,,	நாணும் வகையே	நாணுவகையே
,,	,,	3	பூணழிய	யூணழிய
,,	3	3	மிகஅருள	மிக அருளி, மிக அருள் செய்
,,	4	2	யங்கிநிகர்	யங்கிநகர்
,,	5	1	ஆணியல்பு	ஆணியல்வு
,,	,,	3	பாணியமர்	பாணியருள்

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிரதி.	பேதம்.
,,	5	3	வருள்மாணு பிரமாணி	வருணமாணி பிரமாணி
,,	6	3	தெழில்தராயர	தெழில்தராதயர்
,,	,,	4	தராயணை	தராயணை, தராயண
,,	7	1	அரணை	அரனை
91	9	2	கண்பரியு	கண்பொரியு
,,	9	3	புசகர் புண்பயில	புசகருண்பயில
,,	,,	4	கண்பழிசெய்	கண்பழியில்
,,	11	1	வசைச்சு	வசைத்து
,,	,,	2	மணைச்சுலகி	மனைத்துலகி
,,	2	1	மன்றலார்	மன்றிலார்
,,	,,	2	பேணுகின்ற	பேணிநின்ற
,,	3	2	அகலமார்தரை	அகலமாதரை
93	6	4	கொள்வர்	கொள்வா
96	6	3	சிலையில் திரிபுற	சிலையின் திரிபுற
,,	10	4	அலையா	மலையா
98	6	4	வேண்டிநின்றே	வேண்டிநின்றேன்
,,	7	3	மூயல்பவர்பின்	மூயல்பவாப்பின்
,,	,,	4	மொழிந்தவர்	மொழிந்தவா
99	9	2	பொய்கையு	போகையு
100	5	2	எயிலார் சாயளரித்த	எயிலார் புரமூன்றெரித்த

இதன் மேற்கண்டவை பாடபேதங்கள். இவற்றின்படியும் பதிகங்களுக்குப் பொருள்கொள்ளலாம்.

இவற்றிற் சில எழுத்துமாறுதல்கள் இருப்பவைகளைப் பொருளுக்கு ஏற்றபடி அமைத்துக்கொள்ளுக.

அஷ்டபைரவர் நாமங்களைக் கூறுமிடத்தில் தமிழ்ச்சுவடிகளில் பூடணன் என்றிருப்பினும், வடமொழியிற் கண்டபடி பீடணன் எனக் கொள்ளுக.

தலபுராணத்தில் சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் 1-8, 11 திருமுறைகளில் காழியைப்பற்றியுள்ள பதிகங்களும் பிரபந்தங்களும் அச்சிடப்பட்டுள்ளன. இனி 9-ந் திருமுறையில் "ஒளிவளர்விளக்கே"

"மன்னுகதில்லை" எனத்தொடங்கும் இரு விருத்தங்களும், 10-ந் திரு முறையில் "ஒன்றவன்றனே" என்றுதொடங்கும் திருவிருத்தமும், 12-ந் திருமுறையில் "பிரமபுரம்" எனத்தொடங்கும் திருவிருத்தமும், இத்தலபுராணத்தில் அவ்வக்கடவுளர்முன் அவ்வவர்க்குச்சொல்லியரு ளும் தோத்திரங்களும் இத்தலத்துக்கு உரியனவாக ஓதப்படல் வேண் டும். கந்தபுராணம் முதலிய புராணங்களிலும் அருணகிரிநாதர் திருப்பு கழிலும் உள்ள செய்யுள்களும் காழிக்கோவை, காழியுலா, காழியந்தாதி முதலிய பிரபந்தங்களும் விரிந்து உள்ளனவாதலால் அவை இந்நூலில் அச்சிடப்படவில்லை. அன்பர்கள் ஏற்றசமயங்களில் அவற்றையும் ஓதி யுணர்தல்வேண்டும்.

திருச்சிற்றம்பலம்.

திருவிசைப்பா.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்தமே தா ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருப்பல்லாண்டு.

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

திருமந்திரம்.

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னரு
ணின்றனன் மூன்றினு ணான்குணர்ந் தானைந்து
வென்றன ஞறு விரிந்தன னேழும்பார்ச்
*சென்றவன் றானிருந் தானுணர்ந் தெட்டே.

பெரிய புராணம்.

பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

திருச்சிற்றம்பலம்.

---

*சென்றனன் என்பதும் பாடம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்தகுரவேநம:

சீகாழித் தல புராணம்.

விநாயகர் காப்பு.

பொன்னு நிகழி மதுமாலைப் புனிதன் மரும மிசைமேவி
மின்னு நுமையா ணுதற்பிறையின் வேணிப் பிறையைச் சேர்த்திலகும்
பன்னு ணிறைந்த மதியமெனப் பார்த்து மகிழ்ந்து முகமலரும்
கென்னுர் காழி யாண்டபிள்ளை செந்தா மரைத்தா ளிணைபணிவாம்.

வேறு.

நீண்டவட வரைமீது நிறைகுணத்தோன் சொல்பனுவல்
பூண்டதனி மருப்பாரப் புனைந்தெழுதி நினைந்தவெலாம்
ஈண்டவரும் பழவடியார்க் கின்பமுட னருள்காழி
ஆண்டகணை பதிதுணைத்தா ளம்புயங்கள் வணங்குவாம்.

கடவுள் வாழ்த்து.

பிரமேசர்.

நீர்பூத்த பேரொளியா யுயிர்க்குயிரா யகண்டிதமாய் நிறைவாய் நீங்காப்
பேர்பூத்த குணங்குறிக ளிகந்தபழ மறைக்கொழுந்தாய்ப் பெருமை
பார்பூத்த பரையினெடு கலந்துகுரு வாதிமும்மைப் படிவ மாகிச்
சீர்பூத்த காழிநக ரமர்ந்தபிர மேசனையாஞ் சிந்தை செய்வாம். (க)

திருநிலைநாயகி.

ஒருநிலையே யுலகனைத்தும் பொருணிலைசேர் வெண்டிருநீ றுயர்ந்து வேதம், கருநிலையால் வளர்ந்தோங்க விரங்குமரு மறைக்குழவி தன்பா லன்பால், பெருநிலைசேர் முலைக்கண்ணுஞ் சிலைக்கண்ணு மிரங்கியவெம் பிராட்டி யன்பர், கருநிலைதீர்த் தருள்காழித் திருநிலைநா யகிதுணைத் தாள் கருத்துள் வைப்பாம். (உ)

பெரியநாயகர்.

அரிய நாயக ஞரண ஞயக ணணங்கரா முடிவாய்ந்த
கரிய நாயகன் காணரு நாயகன் கவுணிய முனிகாட்டத்
தெரியு நாயகன் ரோணிமே லோங்குயர் தெய்வநா யகன்காழிப்
பெரிய நாயக னகைமணி நூபுரம் பிறங்குசே வடிபோற்றி.(ஊ)

பெரியநாயகி.

அகலி ஞயகி மணியெனச் சுடரையுய்த் ததற்கரு மறைக்காட்டி
இகலி ஞயகி லாண்டநல் கியமுத லிடத்திருக் தொருகோடி
பகலி ஞயகி யாதியைப் படைத்துநீள் பழமறைக் கொழுந்தாய
புகலி ஞயகி பெரியநா யகிமலர்ப் பொன்னடித்துணை போற்றி.(எ)

சட்டைநாதர்.

துங்கமாமணித் தூணில்வந் திரணியன் ரோள்வலி தனைவாங்கும்
சிங்கவேற்றுரி யரைக்கசைத் துலகெலாந் தேர்ந்தளந் தவன்மேனி
அங்கம்யாவுமோர் கதையதாய்க் கொண்டத லங்கியாப் புனைகாழிச்
சங்கவார்குழைச் சட்டைநாயகன் றுணைத்தாமரைச் சரண்போற்றி.(ஏ)

ஆபத்துக்காத்தபிள்ளையார்.

பூத்த பிள்ளைய னத்தன் புகழ்நிலாக்
கோத்த பிள்ளை மதியணி கோமகன்
மூத்த பிள்ளையை முன்னின ராபத்துக்
காத்த பிள்ளையைக் கைதொழு தேத்துவாம். (ஐ)

குமாரக்கடவுள்.

அலமடையுங் கொடுஞ்சூரன் குலமடியப் புள்ளினங்க ளமரை வேட்ட, பலமடையப் பெரும்பூமி பலமடையக் கரும்பகட்டிற் படருங் கூற்றன், வலமடையுங் கரம்வருந்தா நலமடையப் பிரமாதி வானோர் தங்கள், தலமடையத் தனதுகர தலமடையும் வேலெறிந் தோன் சரணம்போற்றி. (ஒ)

திருநந்திதேவர்.

ஆதியிடை யீறில்லா னருளேகண் ணுகநின்ரு னமலன் பாத, மீதிலிறைஞ் சிடநணுகும் வாசவனுன் முகனெடியோன் மிடைந்த போது, போதிர்விலு குதிரெனலாற் றருமலரம் புயந்துளபம் பொ திந்த தெய்வக், தீதின்மணம் படைத்தமணிப் பிரம்புடைய திருநந்தி திருத்தாள் போற்றி. (ஓ)

கலிமகள்.

கருமழைத்தண் டுளிபொழியுங் காலமதி யொளியுமொளி காலு முத்தின், பருமணிமா லெயுமபய வரதமும்புத் தகமும்வடப் பளிங் குந் தாங்கி, முருகுயிர்க்கு நறுந்தவள முளரியா லயத்திருந்த முதுபி ராட்டி, இருபதமுங் கடைப்பிடித்தே னெப்பதம்வா ராதபத மெனக்கு மன்னே. (கூ)

திருஞானசம்பந்தசுவாமிகள்.

குழுவேறச் சமண்மூக ரழலேற விடுத்ததனைக் கூடற் கோமான், வழுவேறு மூடலேற வுடன்முரணு மனமுரணு மாற்றி யன்னர், கழு வேற வெண்ணீறு மைந்தெழுத்தும் விரித்துலகைக் கதியி லேற்றி, மழுவேறுங் கரத்தான்ற னருளேறுங் கவுணியர்கோன் மலர்த்தாள் போற்றி. (கo)

திருநாவுக்கரசுசுவாமிகள்.

விடற்கரிய கொடும்பாசத் தொடரறுத்தைம் புலனுய வேழஞ் சீறி அடற்கரியன் மும்மதமு மமணருடைத் துன்மதமு மழிய நூறித் தடக்கடலிக் கன்மிதவை யாலுழக்கிச் சிவஞான தானம் வீசும் கடக்களிறென் றுலகேத்த வருநாவுக் கரசர்பதங் கருதி வாழ்வாம்.(கக)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

இருக்காதி மறைகாணு வீணைத்தாளை மறலிமுடி யிடறுந் தாளைத், திருக்கேள்வன் விழிபுனைந்த செழுந்தாளை யரக்கன்முடி திரித்த தாளை, ஒருக்காலுக் கிருக்காலாய்ப் பரவைமனை யகந்தேடி யுறுமா செய்தோன், மருத்தாழா தலர்ந்ததுணை மலர்த்தாளை யகத்தாழ வணக் கஞ் செய்வாம். (கஉ)

மாணிக்கவாசகசுவாமிகள்.

விலங்குமனத் தினர்கடுக்கை யுடுக்கையர்கார் மயிற்பீலி விளங்கு கையர், புலம்புமொழிக் கட்டறுத்து நிறைதிருவா சகமுதப் புணரி தேக்கி, இலங்குமதித் திருக்குலத்தான் பிறப்பறுத்து மணிமன்றத் திறைதாள் சேர்ந்தோர், அலங்குசினப் பொழில்புடைசூழ் வாதவூ ரடிகளடி யகத்துள் வைப்பாம். (கங)

சண்டேசுரநாயனர்.

எந்தைதாள் காமுறுவா ரிருவினைத்தா ளறுக்கவெனு முந்தையா ணம்புகன்ற முதுக்குறைவா னதுபோதிந்த சிந்தைதா னரனடிக்கே செறிவித்துச் சினந்துவரும் தன்னைத்தா ளாரிரண்டுந் தடிந்தவன்ரு டலைக்கொள்வாம். (கச)

அறுபத்துமூவர்.

அத்திமான் கலிமா னெந்தரு நிழன்மா னயில்விழிக் கஞ்சன மமைத்த, புத்திமா னென்றே கடுவடை யாளம் பொறித்தகந் தரமுள பெம்மான், சத்திமான் காழித் தடவரை யெம்மான் றன்னடி நீழலிற் சேரும், முத்திமான் றனிச்சே ரோரறு பத்து மூவர்தாண் முடிமிசை வைப்பாம். (கடு)

பட்டினத்துப்பிள்ளை.

குறவாத மும்மைவினைத் தொடர்பரிந்து மையல்விழிக்
குறவாய பொருணீக்கி யுழுவலன்பிற் கழுமலத்தார்க்
கிறவாமும் மணிமாலை யியற்றியருள் வழிநின்று
பிறழாத பட்டினத்துப் பிள்ளையிணை யடிபோற்றி. (கசு)

அட்டவைரவர்.

துண்டமதி புனைந்தகல்விண் டோய்சிகரத் தினிதமர்ந்த
அண்டர்பிரான் கணத்தலைமை யசிதாங்கன் காபாலி
சண்டனுரு ருக்குரோதன் சங்காரன் பூடணன்சீர்
கண்டருளன் மத்தனிவர் கழற்கமலம் பரவுதுமே. (கஎ)

காலவித்தரசர்.

சுருதிவழி யுலகினைத்துந் தனிக்கவிகை நிழற்றிமுது தோணி யார்க்கு, மிருதிபுகழ் கயிலைவரைச் சிகாமுங்கோ புரமுமெயில் விதமு மன்பால், கருதியெனைப் பலபணியும் புரிந்துபிற வாநெறியைக் காணி கொண்ட, பருதிகுலத் தவதரித்த காலவித்து மகிபதிதாள் பணிந்து வாழ்வாம். (கஅ)

குணதலைப்பாடியுடையார்.

கலைப்பாடி யூர்ந்தாற்போற் கண்டுணர்ந்து காழிநகர்
மலைப்பாடி வளவென்னு மாணிதியா லமைத்துவினை
அலைப்பாடி யுழலாமே யமலனடி யடைந்தகுண
தலைப்பாடி யுடையாரென் றனையாள வுடையாரே. (கக)

பரிசாரத்தொண்டர்கள்.

தாயினுமன் னுயிர்க்கினிய சண்பைநகர்க் காவலன்வாழ்
கோயின்மணி முன்றிறுறுங் குபின்றதுரா லகற்றுமுது
வாயினரை யீருக வழுவில்பரி சாரகணம்
ஆயினசீர்த் தொண்டர்துணை யடியெமது முடிவைப்பாம். (உ0)

வாழ்த்து.

தெண்ணீர் குதட்டும் புயறிங்களின் மூன்றுபெய்க
எண்ணீ ரரசன் றிருக்கோன்முறை யேந்தியாள்க
பண்ணீ ரறநீ டுகதன்னெறி பல்கவெங்கோன்
வெண்ணீ ரிறுடொரைந் தெழுத்தோங்குக மேதினிக்கே. (உக)

நூல்செய்ததற்குக் காரணம்.

பண்டே பழிச்சாமையி னற்பவம் பற்றினேமி
னுண்டே யெனவாழ்த்தினு மேற்பவ முற்றிடேமால்
வண்டேய் பொழில்வேணுபுரத் தானையிம் மாண்பில்யாக்கை
கொண்டே துதிப்பாமிஃ தெம்முடைக் கோளதன்றே. (உஉ)

வேறு.

காத னலரு ணந்திபாற் றெளிசனற் குமரன்
வாத ராயணற் குரைப்பமற் றவன்புகல் வழியே
சூத னோர்ந்ததை நைமிசா ரணியம்வாழ் துகடீர்
மாத வர்க்கெலாம் வழங்கிய புராணமூ வாறில். (உங)

மூறைத ரும்பவு டிகத்துமூன் கேத்திர காண்டத்
தறைத ருந்தனி யாதிபா கத்தினுங் காந்தத்
திறைத ரும்பரிச் சேதமூன் றுவத னிடத்தும்
பொறைத ருந்திருப் புகலிமான் மியமிது புகலின். (உச)

இனைய காதையீண் டியம்பவும் வல்லனே தருமை
முனைவ னன்புசால் சிதம்பர நாதமா முனிவன்
வினையு மாரிய மொழிவழி யருந்தமிழ் வகையால்
எனைவி ளம்புகென் றோதலு மிதுதுணிந் தனென்யான். (உரு)

அவையடக்கம்.

விண்ண லங்கொள்கா ரெழிலிநீர் விரிதிரை யுடுத்த
மண்ண லங்கொள மஞ்சன மாயின வல்லோர்
எண்ண லங்கொள்பே ரவைபுகுந் தினியவாய்க் காழி
அண்ண லஞ்செவிக் காவன வளியனேன் புன்சொல். (உசு)

வேறு.

பொருமா லேற்றுக் கொடியுயர்த்த புகலிப் பெருமான் புகழை யளந், தொருநான் மறையும் வரம்பறியா தூழல வேயு முரைப்பெ னெனத், தருமா தரவால் வினையேனுஞ் சமைத்த வாறு வான் கிளைத்து, வருநாண் மதியை வருகென்று மகவொன் றழைத்த வா றேறயால். (உஎ)

குறுமை யிலேயே னெடுமையதன் குணமா றறிவா ரெனது மொழிச், சிறுமை யிலேயேன் முதுமைமொழித் திறமெவ் வாறுபுலப் படுங்கார், உறுமை யிழைத்த விருட்பிழம்பா ருறையிங் கிலையே லுர கன்முடிப், பொறுமை நிலத்துக் கதிர்த்திங்கட் புத்தேட் பொலிவும் பொலிவின்றே. (உஅ)

பொற்கா லகத்தைதம் பேரமளிப் பொறிவாய் விளக்கிட் டாயிழை யார், நற்கால் வருட மகிழ்வார்மு னடுநா ளிருளின் மின்மினியிட், டொற்கா வரிபுற் குடம்பையுட்பேட் டுடனே மகிழுங் குரீஇக்கணம் போல், சொற்கா வலர்செந் தமிழியன்முன் சிறியேன் புகலத் துணிந் தேனே. (உகூ)

சிறப்புப்பாயிரம்.

சிதம்பரநாதமுனிவரியற்றியது.

மாத்தவருஞ் சிலையாக மணிகாணும் பணியாக வான்காத் தின்பம் பூத்தவருந் தகைவாழுஞ் சீகாழி மான்மியத்தைப் புலமை சான்ற நாத்தவரும் வியந்ததமிழ் புனைந்தருணை சலக்கவிஞ ளுளு மன்பர் ஏத்தவருங் குருலிங்க சங்கமசந் நிதியிலரங் கேற்றி னனே. (ஈ0)

செவியுணருந் தமிழ்க்கடல்வாய் ஈரமணிமந் தரநிறுவித் தெளிசா லன்பின், அவிரொளிய மணிவடந்தொட் டான்றமைந்த தொல் கேள்வி யறிவா லீர்த்துப், புவிபுகழு மாலருணை சலமதித்துச் சீகாழிப் புராண மென்னும், கவியமுதந் தனையளித்தான் புலவரெலா முண்டு மனங் களிக்க மாதோ. (ஈக)

[கடவுள்வாழ்த்து முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் ஈக.]

——:0:——

திருநாட்டுச் சிறப்பு.

பொன்னீ ரிமையப் பொலன்குவட்டிற் புலியை யிழைத்துக் கலியிருளூர்த், தின்னீர் முளரிப் பண்ணவனீன் றிருள்வாய்ப் பாந்தண் முடிவளர்த்தி, முன்னீ ருடுத்த நிலமகளை முறையான் மணந்த செம் பியர்வாழ், சொன்னீர் வளமை பழுத்ததமிழ்ச் சோணாட் டணியீண் டுரைசெய்வாம். (க)

வேறு.

முடங்கல் வாயல மேந்திணை ணுருவென மூதுவான்
இடங்க லந்துசென் றிமிழ்திரை முகட்டுநீ ராழி
அடங்க மேய்ந்துபாட் டளிமுர லல்லியங் கமலத்
றடங்க ணனுருக் கொண்டுமீண் டனசல தரங்கள். (உ)

விழைபு மார்கலி யிறைமக னீண்டுமெய் யன்பு
தழைபு மீபுயர் சையமால் வரைத்தடங் குவட்டில்
குழையி னீண்டகட் குலமணைக் கிழத்தியைக் கூவும்
உழையர் போன்மென வுற்றன மழைக்குல மொருங்கே. (ஈ)

வகுத்த கார்மகண் மறிதிரை யாடினண் மலர்த்தா
துகுத்த வார்குழல் விதிர்த்தென வுதறிவள் ளுகிரான்
மிகுத்து லாமயிர்க் காடுறு மூளர்ந்தென விரிந்து
பகுத்த வால்வகிர் காட்டின மின்னலின் பரப்பே. (ச)

அண்ணன் மால்வரை யலர்முலைக் கட்டிரை யாடை
வண்ண மாகவெள் ளருவிவேய்ங் குளநில மகளைக்
கண்ண ழன்றிருட் களிறுகைத் தைங்கணைக் காளை
தண்ண லங்கணை பெய்வதொத் தனமழைத் தாரை. (ரு)

மண்டி லம்படு மணிதழீ இ நித்திலம் வரன்றித்
திண்டி றற்கரி மருப்பெறிந் தகிற்றுணி சிதறிக்
கண்டி ரண்டவே யடர்வரை வளனெலாங் கவர்ந்து
கொண் டிழிந்தன கறங்குநீர்க் கோதைவெள் ளருவி. (கூ)

அறனெ லாமிழைத் துலகரு ளன்னையை யடல்சேர்
விறல்கெ ழுங்குவட் டிமயவேந் தளித்தென விண்கீண்
டுறநி வந்தமால் வரைதரு செவிலிபோன் முழுகிப்
புறவு மேயது ளிர்புனற் புண்ணியப் பொன்னி. (எ)

குயின்ற மூரலுண் டகட்டிரு புடைபுறங் கோப்ப
அயின்ற மாக்களிற் காந்தள்கைம் மற்றிப்பவாண் டொருவி
எயின்கு ழாங்களா றலைத்ததா றலைத்ததென் றிரையப்
பயின்ற பல்பொருண் மடுத்தகன் பாலிவிட் டதுவே. (அ)

அள்ளற் பூம்புனல் வெளியபா லொளியினு ளரனுய்
உள்ளத் தாழியுள் வெண்ணெய்வாய் மடுத்துமா னுருவாய்
வள்ளத் தாமரை யொடுவிராய் மலரய னுருவாய்
வெள்ளத் தாழ்புனல் வியன்பணை மருதமே வியதே. (கூ)

பாட்ட கன்றிரைத் தலைமகன் குலமனைப் பன்னி
வேட்ட கம்பெற மருதமான் விரியிதழ்க் கமல
வீட்ட மெல்லிலைத் துளியினீ ராஞ்சன மேந்திக்
காட்ட வெண்மணற் புன்னையங் கானலெய் தியதே. (கo)

முரண்ட டஞ்சினைப் புன்னைமுத் திறைத்துமொய்த் தலர்ந்த
திரண்ட காலென நெய்தலின் விழிகளாற் றெரித்துப்
புரண்ட வெண்டிரைக் கைகொடு புல்லியப் புணரி
அரண்ட னிற்புகுந் தகலிடம் பொலிந்ததை யன்றே. (கக)

வேறு.

அள்ளற் றண்புனல் பாய்மத காத்தெலி
கொள்ளப் பண்முழ வொத்திரை கொள்கைதான்
மள்ள மாக்க ளிரட்டு மருதநீள்
வெள்ள நீர்ப்பறை வீங்கொலி மாய்க்குமே. (கஉ)

நான மும்புழு குந்நறுஞ் சந்தமும்
தான வாரணக் கோடுந் தலைசிறந்
தூன மின்மணி யும்பொரு முய்த்தலால்
மான வாணிக மாக்களு மாணுமே. (கஙூ)

அணையு லாந்திரை யாற்றிலெ லாமடுத்
துணையெ லாமலர்ச் சோலையெ லாமகன்
றிணையெ லாநறுஞ் சேயிதழ்க் காவியம்
பணையெ லாஞ்சென்று பாய்ந்தது வெள்ளமே. (கச)

ஏறு பைபுயம் லேழுங் கலங்கிய
ஆறு தானுங் கலங்கி யருட்புனல்
ஊறு கங்கை யுறுங்குடி மன்னர்சொல்
தேறு நீரிற் றெளிந்தது தண்புனல். (கஞ)

அயர்வி லாவெவலி யொன்றெழுக் காயமீ
துயிரு றுப்புயிர் மெய்யென வோதல்போல்
இயல்கு லங்கிடங் சேரிதண் காலெனப்
பயிலு நாமம் படைத்தன வாரியே. (கட)

உழுத சோதையு மொள்விசி வார்கிணை
தெழிந சோதையு மிந்திர தெய்வதம்
தொழுத சோதையுந் தூநறை வாய்மடுத்
தெழுந சோதையு மேழ்கட லோதையே. (கஎ)

கயத்து வாய்ப்பக டோச்சிய காளையர்
நயத்த வேர்செல நல்கு மிசைத்தமிழ்
பயக்கு மேகக் குழாத்திடைப் பண்ணைமைத்
தியக்கர் பாடு மிசையமு தொக்குமே. (கஅ)

இலங்கு மள்ளர் பிறையிரும் பின்னிழல்
மலங்கு கொல்லென மாத ரலமரக்
கலங்கி நோக்கினர் கண்ணிழல் சேலென
விலங்கு காளையர் வீழ்ந்து நகுபவே. (கக)

ஏய்க்கு பன்மொழி யீட்டத்தைப் பேர்முக
லாய்ப்ப குத்தவை யக்குநர் போல்வயல்
வாய்க்கு ழீஇயபன் னூறுகள் வாங்கினர்
போய்க்க ரும்புலத் தூன்றுவர் பொற்பவே. (உ0)

பெரும ணைக்கண் வளர்ந்தோர் பெருந்தகை
உறும ணைக்கணின் றேருங்கிய மாதரின்
மறுபு லத்திடை மன்னிய நாறெலாம்
சிறுப சுங்கிளி போனிறஞ் செய்தவே. (உக)

கோலி நாட்டமுங் கொம்மை வதனமும்
ஏலு மாதரை யிண்டையு நீலமும்
போலி காட்டின வென்னப் புலம்புநீர்
வேலி வாய்க்களை வீசி யெறிபவே. (உஉ)

உள்ளு காம மெனக்க ருவ்றுலா
எள்ளு மூட லெனநெறித் தன்னலார்
கள்ள நீத்த கலவியிற் பைங்கதிர்
கொள்ள மல்கியந் நாணிற் குனிந்தவே. (உங)

பொருமு மூப்படைப் பிஞ்ஞகன் பூங்கழற்
குருகு சிந்தையி னேங்கி வளைந்தவை
பெருகு தொண்டர் திறத்தவன் பேரருட்
டிருவி ளைந்தெனச் செந்நெல் விளைந்தவே. (உச)

எழினல் லாரிய லாய்ந்தின கல்வியின்
ஒழுகு மின்சுவை யிற்பய னேங்குபு
கெழுத டம்பணை வாய்க்களர் செந்நெலின்
குழுவ னைத்துங் குயங்கொடு கொய்வரால். (உஙி)

அரியு நெல்லரி சும்மையிட் டாரழல்
எரிவி ழிப்பகட் டேற்றின் மிதித்துவை
பரிய நீத்தநெற் பற்பல குன்றென
உரிய பூமி யுவப்பக் குவிப்பரால். (உசு)

வழுவ கன்று மதுரித்து மென்பொருள்
தழுவி நின்றசொற் சால்கவி யீட்டம்போல்
அழிவி லாநெற் குவையை யலங்கொளி
பொழியு மாடத்திற் போந்து தொகுப்பரால். (உஎ)

தவர்க்கும் வானப் பிரத்தர்க்குந் தன்னிலை
யவர்க்கும் வண்ணியர்க் கும்மமு தூட்டலால்
எவர்க்கு மின்பந் தனித்தனி யேதரும்
சுவர்க்க மென்பது தொன்மணை மாலையே. (உஅ)

வேறு.

களர்வரு மன்னஞ் செந்நீர் கணைத்தரத் தந்த வூன்கொண்
டிளகிய பொறியா லாவி யிசையவெவ் வுலகு முண்டாய்
அளவறு மின்பந் துய்க்கு மளப்பருங் கடவு ளாட்சி
வளவகா டிதற்கு நேராய் வந்தகா டெந்த நாடே. (உகூ)

மூட்டுவ வறுமை நோயே முருக்குவ கழையே யாண்டும்
கட்டுவ வயலோர் தூலே காழ்வன நறையையம் பாலே
வெட்டுவ வினைக்கண் வாளே மெலிவசிற் றிடையே மாதர்
கட்டுவ கணவீர் திண்டோள் கடியன நெடிய பைங்கா. (ஈ0)

வேர்த்தவெங் களிறு மாய வேலிசெய் சாலி யெல்லாம்
வார்த்தகா செழிலி பெய்து வளர்ப்பதென் வெறுக்கை யோடும்
ஆர்த்தநான் மறைவல் லாள ரங்கையில் வீழ்ந்து துன்பம்
தீர்த்தநீ ரோடும் பொன்னித் தீர்த்தநீர் வளர்க்கு மாதோ. (நக)

மடையெலா முத்தஞ் செம்பொன் வரம்பெலா முத்தம் பூகத்
திடையெலா முத்தஞ் செங்கெ விடமெலா முத்தம் வில்வேள்
படையெலா முத்தஞ் சூல்வெண் பணிலங்க ளுயிர்த்த கால்வாய்
அடையெலா முத்த மோடை யகமெலாம் வனச முத்தம். (நஉ)

பரம்பெலா நாறு சேறு பாலெலா நாரை தேரை
கரம்பெலா மோங்கு கோங்கு கயமெலாங் கஞ்ச மஞ்சம்
வரம்பெலாம் வாழை தாழை வயலெலாங் கன்னல் செந்நெல்
குரம்பெலா நாகம் பூகங் குறையெலாஞ் சாலி சோலி. (நங)

உள்ளவாங் குழக்கன் றுண்ணி யொழுகுபா லுவட்ட வாயால்
பள்ளவான் செந்நென் மேய்ந்து பசுங்கதிர்ப் பாலும் பில்க
வெள்ளநீர் திரிந்து தீம்பால் வெள்ளலி யாழி யென்னப்
புள்ளவாங் கவைக்கான் மேதி புயலெனத் திரியும் பண்ணை. (நச)

பாசிலைக் கமலப் பள்ளி பண்ணளி குமுறச் செந்நெல்
வீசிளங் கவரி தூங்க மென்பசுந் தவளை பாணி
பேசிட வெடிகொள் வாளை பெருநடங் கவினக் கண்டு
காசினி வேந்த ரென்னக் களியனங் களிக்கு மோடை. (நஞ)

நிரையிதழ்க் கதவஞ் சாய நிறைமதுப் பிலிற்றும் வெண்டா
மரைமலர் மலர்ந்து வாவி வயின்வயி னிருந்த தோற்றம்
குரைபுனற் பொன்னி வைப்பிற் குளிர்புன லாடிக் கொண்ட
புரைமதுக் கழுவுந் திங்கட் பூரணக் கடவுள் போலும். (நஎ)

பிரிவுநோ யகலக் கேள்வர் பெருமணித் தடந்தேர் மீட்சி
உரியதங் கற்பி னல்லார்க் குணர்த்துறு பாணி போல்
விரிகதிர் மணித்தேர் தோன்ற மெல்லிதழ் பொதுளுஞ் செய்ய
வரிமலர்க் கமலந் தோறும் மண்டுபாண் மிழற்றும் பொய்கை. (நஏ)

தோடலர் சிறைமுட் டாழைத் துறுமலர்த் துறைவாய் நீர்க்கண்
ஆடல்செய் நிழலி யாவிப் பெடையென வயிர்த்து நோக்க
நீடல்செய் கயல்க ளோடி நிழலிலங் காமை புன்னி
ஊடலி னெளித்த தென்னு மருகுமால் கருங்கால் வெண்புள். (நஅ)

வரியிலைப் பலவின் வீழ்ந்த மாஞ்சுளை வவ்விக் காலால்
அரிமலர்ப் புனங்கொய் தாறிட் டளைபுகு மலவன் காட்டும்
பெருவலித் தெவ்வ ராண்ட பேரெயி லுடுத்த கொற்றத்
திருவினைத் தடிந்து செல்லு மிறைமகன் படைஞர் செய்ணை. (நக)

நெடியதன் னிலையி னல்கு நெறிபிறழ்ந் திடினும் வான்செய்
குடிமையார் தமதுசெய்கை குறைபவோ குடக்காய்த் தெங்கின்
ஒடிகனி முட்ப லாவைக் கதலியை யுலைய மோதித்
தடிதொறு மெருக்கள் செய்யுந் தன்னிலை திரிந்த போதும். (சஅ)

வெள்ளெயிற் றுழாவே மேதி யொருத்தலை விலக்கு மாலை
உள்ளுகு கதிர்கான் முத்தங் கருவெனக் கொடுபோ யுற்ற
தெள்ளொளிப் பசிய சூட்டுத் தோலடிச் சிறக ரன்னம்
மூள்ளரைக் கமலச் சேக்கை முகட்டடை கிடக்கு மன்றே. (சக)

உடைதிரைக் குடிஞை தோறு முறுகிறை விரித்து மீக்கண்
அடைகயல் வேட்டுப் பல்கா லாழ்ந்தெழு சிரல்கள் காட்டும்
இடையிடை தருவ வேண்டி யிழிந்தெழுந் தும்ப ரேறிக்
கொடைகுறித் துழலும் வேழக் கூத்திய ராடற் றன்மை. (சஉ)

குருச்சுட ரிதழ்வண் டாடக் கொல்லழ னிகர்த்த விண்டை
நெருக்கிடை முகிழ்த்து நீல நிற்பன பருவக் கொல்லன்
இருப்பென வநங்க ளுரு மெய்கர வாளி பண்டை
உருத்துரு சகற்றி நீட்டி யொண்கணே யமைத்தல் போலும். (சங)

மொய்ம்மலர்க் குடிஞை தோறு மூளரியங் கொடியை யன்னர்
கொம்மைவெம் முலையிற் ரேய்ந்த குங்கும நறுநீர் பாய்ந்து
வெம்மைசால் சுறவு பண்டை விரிபுலான் மாற லாலே
தம்மின்வே றென்ன வையுற் றிரிவன சலதிப் பன்மீன். (சச)

தழைதரு நெல்லின் சும்மை சாரலென் றெண்ணி யாண்டே
பிழைவழி யிழிய வேர்க்கட் பெருவிறன் மள்ளர் பூட்டி
உழைதொறு முழுங்கா லஞ்சி யொல்கிமீண் டொருசார் தூங்கும்
மழையென மருத நீழல் வைகுவ மேதி யேறு. (சடு)

கரப்பது செய்யார் நல்குங் கடமையார் கரத்தக் காலும்
இரப்பது பூண்டோர் யாண்டு மெய்துப வன்றே மோட்டுப்
பரப்பணை யன்றி வேரிற் பழுபழம் வெடித்த வாய்புக்
கரற்றுவ ஞிமிறுந் தேனு மள்ளிலைப் பலவு தோறும். (சசு)

பைந்தழாய் மௌலி மள்ளன் சுராசுரப் பகடு பூட்டி
மந்தர வலத்துப் பாந்தள் வடங்கொளி யாழிப் பண்ணை
முந்துற முயன்று தாவா மொய்யுயி ரெவையு மூண்ணச்
சந்தத மழுது நல்லூண் டருவன மருத வைப்பு. (சள)

காசற நிவந்த தெங்கின் காவிலாங் ககனந் தோயப்
பாசொளிப் பசுங்கா யெண்ணில் பரித்தன கண்ண னீந்த
தேசமு தொருநா ளென்று தினந்தொறு மும்ப ருண்ண
வாசநீ ரமுதம் பெய்து வைத்ததண் குடங்கள் போலும். (சஅ)

அள்ளிலைப் பலவும் யாத்த புதுக்கல மனைய செங்காய்
வெள்ளகன் சினைசெய் யாலு மாவொடு மிடைந்து நீழல்
கொள்ளவா றியங்குஞ் சோலை குறைவிலா நிறைமைத் தேனும்
ஒள்ளொளிப் பரிதிப் புத்தே ளுறுசுடர்க் குறையொன் றுண்டே. (சகூ)

புனிதனும் புனித நல்கும் பொன்னியு மன்னும் வீட்டை
நனிதரு பதியு மூள்ள நாடரோ விதனை நண்ணூர்
கனிதரப் பெற்றுங் கீய காய்க்கவா வுறுதல் போலாம்
மனிதரோ ரறத்தை வேண்டி மற்றொரு நாட்டைச் சேறல். (ரூ0)

கிணறெலாம் புனித மந்தா கினிமலர்த் தடங்க ளெல்லாம்
துணர்செய்மா னதப்பே ரோடை தூருமைமைந் தருவா னெல்லாம்
குணமலி சுரபி வைத்த குரமெலாந் தீர்த்தந் தூய
மணலெலா மிலிங்க மென்றூல் வழுத்தலாந் தகைமைத் தன்றூல். (ரூக)

ஆன்றநீர் ஞால மீன்ற தகன்புனற் பொன்னி பொன்னி
ஈன்றது திருவை யன்ன தியலிசை நாட சங்கள்
மூன்றையு மீன்ற தன்ன மூதுக்குறை வீன்ற வாய
தீன்றது வீட்டை யெல்லா மீன்றது வளவன் செங்கோல். (ரூஉ)

ஆயிரங் கூலியி லொன்றே யகலிடத் தளிக டோறும்
மேயின பூசை வேட்டு மீண்டுயர் கனக மன்றக்
கோயிலா ளுடையான் மேனி குலவலா லுலகில் யாண்டுப்
போயினு மூத்தி நல்கும் புண்ணிய நாடிந் நாடே. (ரூங)

மாவலா னுதி விண்ணோர் வந்தடி பரவி வாயிற்
காவலான் கடைக்க ணேக்கங் கண்ணிய கயிலை யெம்மான்
பாவலான் விடுப்பக் கங்குல் பழுத்தபா ளுளி லந்தே
எவலா ளுகப் பெற்ற தெத்திரு நாடு மன்னே. (ரூச)

ஒருமறைக் கிழவன் றன்னை யுலகுண்டா னிலகு நாபித்
திருமல ரின்ற தன்றே தெய்வநூ றிவளு மார்பின்
அருமறைக் கிழவ ரெண்ணி லவரையிப் பொன்னி நாடாம்
ஒருமல ரின்ற தென்ரு லொக்குமோ வனைய னுந்தி. (ரூஞ)

பையழற் பருவாய்ப் பாந்தட் படலையா னுலக மென்கோ
நெய்யொளிர் பவளக் கொண்ட னீடுல கென்கோ வோவெண்
கய்யர சுலக மென்கோ காவிரி நாட்டை யீதென்
றையமற் றுரைத்த றேற்றே னறிஞர்த மதியின் மேற்றே. (ரூசு)

கூற்றவ ளோடு மிந்நாட் டணிவளங் குறித்தோ பொன்னி
ஆற்றுநீர் விருப்போ வேனை யடியர்பத் திமையி னுலோ
நாற்றிய லென்ன நாதன் றளிதொறு நண்ண லாலே
சேற்றியல் கம்ப மான தென்னுளஞ் சென்னி நாட்டில். (ரூஎ)

தமிழ்முனி தென்னுட் டென்னத் தக்கதென் னவனீ யீன்ற
கமழ்மலர் முனிவன் பூசைக் கடவுண்மா முனிவன் காதில்
அமிழ்துறு குடிலை யோதி யருண்முனி மகவாய்த் தோன்றித்
தமிழ்வளம் படைத்தா லீதே தண்டமிழ் நாடு மாதோ. (நிஅ)

தீர்த்தகோ டிகள்போ யாடுஞ் செழுந்திரைக் கங்கை தன்மேல்
கூர்த்தவல் வினைக ளுரக் குரைதிரைப் பொன்னி வைப்பில்
வேர்த்தவெள் ளரிமேல் வேந்தன் மேவிய வாண்டிற் கும்பம்
பார்த்துவந் தாடு நாட்டைப் பகர்வதென் பார்க்கப் பல்கால். (நிக)

ஏமமா தவத்தோர் மூத்திக் கேணியாய் வேணி வேய்ந்த
சோமனுக் கிருக்கை யாகுஞ் சோழநா டெனுமாண் பூண்ட
வாமநல் லார மாகி வயங்கிசை தருமீ ராறு
நாமநீர் வளஞ் சூழ்காழி நகர்வளம் பகர லுற்றும். (கூ0)

[திருநாட்டுச் சிறப்பு முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் கூக.]

———:o:———

திருநகரச் சிறப்பு.

அகலி டக்கொடி. யணிகெழு மேனியம் புவியே
புகரில் பல்வள மல்கிய பொன்னிநா டனையாள்
முகம லர்ச்செழுங் கமலமே யம்மலர் முகத்தின்
நகையு லாமணித் திலகமே காழிமா நகரம். (க)

தான மெண்ணில வுழன்றருட் சூவனைச் சாரின்
ஆன முத்திவீ டெய்துமீ தருமறை வழக்கே
மோன வீடுமவ் வீடெளி தேயுற மொழியும்
ஞான தேசிக னிருக்கையுங் காழிமா நகரம். (உ)

சுற்று மோரிரு கோளும்வக் கணைசெயத் தொலையா
முற்றும் வல்வினை யிருள்கெட முதுக்குறை யடியார்
பெற்ற நீற்றொளி வெண்ணிலா வயங்கிடப் பிறந்த
நற்ற மிழ்க்கதி ரிமைப்பது காழிமா நகரம். (ங)

கரைப்பு றத்தினை மறைப்பன கொழுநிரைத் தண்ணீர்
திரைப்பு றத்தினை மறைப்பவெள் வளைக்குலஞ் செந்நெல்
நிரைப்பு றத்தினிற் கடுங்களை கட்டலா னீண்ட
கரைப்பு றத்தினை மறைப்பன வள்ளிதழ்க் கமலம். (ச)

காயும் வெங்கதக் களிறுகால் யாத்திடக் கரத்தால்
மாயி ருந்தொடர் கொடுத்தென மள்ளர்கை யெறிந்த
சேயி ருங்குவ ளையுங்கம லமுங்கொடு சிலைவேள்
பாய நோந்தன ருழத்தியர் விழிவலைப் படுவார். (ஞ)

மடைபுஞ் செம்புனல் வளாகமு மண்முது குடைக்கும்
படைபு மென்கிளி நிறத்துகெட் டிலவளை பசுநெற்
கிடைபு முட்டுநீர் வாலிக் கற்றைகள் கிளைத்த
தொடைபு மன்றிவெள் ளிடைபெரு வகல்வயற் சூழல். (கூ)

உள்ள டங்கிகல் லுருக்கொளீ இ யுரத்திறு மாந்தாங்
கள்ளி டங்குழைந் தவாப்பெருந் தன்னிலை பிறழ்ந்து
கள்ள நோக்கிய ரெழுபரு வந்தொறுங் காட்டும்
எள்ள ரீர்முலை நிகர்த்தன கதிர்த்தகெல் லீட்டம். (எ)

கருவி போழ்தரு தூழைபோங் கள்வனைக் காணு
ஒருவ னீர்த்திட வொலித்தலின் மகளிரார்த் தென்னத்
திருக ளைப்புகுந் தேரையை நீரராப் பற்ற
வெருவி யார்த்தலி னுர்த்தன விரிசிறை யன்னம். (அ)

வாலி தாமுளை யொருபுறம் வளர்செறு வொருசார்
பாலி நெல்லொரு சாரொரு சாரரிப் பறம்பு
சாலி வேலியோர் சாரிவை தலைமயக் குறலால்
வேலி யாயிரம் விளையுளென் பதுமிதன் மேற்றே. (கூ)

குண்ட லாதிப னிடுபணி தலைக்கொடு குழுறி
மண்ட லத்துநீ ருமிழ்கரும் புயலென வயவர்
திண்ட டக்கையா லிடுகழை யுண்டுவாய் சிலைப்ப
எண்ட ருஞ்சுவை மழைபெய்வ தாலியெந் திரங்கள். (கo)

குறுத்த தாழ்கிளை வருக்கையுங் கோழரை யரம்பை
பொறுத்த பைங்கனி யீட்டமும் பொரியரைத் தேமா
இறுத்த மென்கனிப் பெருக்குகல் லெருக்களா யீண்டிக்
கறுத்த சேதகத் தெழுவன நாற்றிளங் கானம். (கக)

எழுந்து லாங்கதிர்ப் புரவிபுக் கயர்வுயிர்த் தேகச்
செழுந்த ணீழலைச் செய்வதோ வியப்பமஞ் சிறைத்தேன்
விழுந்த நாண்மலர்ப் பொதும்பரின் கோடுகள் விசைத்துக்
கொழுந்து தேய்த்தலிற் களங்கமுற் றிடுமுயற் கூடு. (கஉ)

வளர்ந்த நாண்மலர்ப் பொதும்பரிற் சேயொளி வாய்ந்த
இளந்த ளிர்க்குழா மெரிக்குழாங் கொல்லென விரங்கிக்
கிளர்ந்து கூவிய யாழிசை மிடற்றகோ கிலத்தைத்
தளர்ந்த நோய்கெடத் தைவருந் தவழ்நடைத் தென்றல். (கங)

வீங்கு தெண்டிரை முகடுகீண் டெழுகதிர் வேங்கை
ஈங்கி ருட்பகை துடைத்தனை வருதியென் றெதிரே
பூங்கு டத்தினீ சேந்தின போன்றுமுப் புடைக்காய்
தாங்கி நிற்பன நெட்டிலை விரிதலைத் தாழை. (கச)

கூடல் வைகையோர் கவுணிய முனிவரன் குணத்தைப்
பாடல் கொண்டறி வுறுத்திய தென்னுதண் பனிநீர்
ஆடல் செய்துளோர்க் கவனருட் குணத்தையக் கணத்தே
கூடல் செய்நதிக் கழுமல மங்நகர்க் குடிஞரு. (கரு)

கல்லெ னுர்ப்பினுற் கலினமான் றிரையினுற் கனகச்
சில்லி யந்தடந் தேர்ப்பெருங் கலத்தினுற் சிறுகண்
வல்வி லங்கெனுஞ் சுறவினன் மணியினுற் பசித்தோர்
செல்ல நீர்த்தலா லழுதவா றிதியன தெருக்கள். (கசு)

பாழி சாலிருங் கொடிநிரை பரிதிவா னவன்பொன்
ஆழி தட்பன மேலிடத் தன்னலார் புலப்பால்
வீழி ருங்கலன் மிடைந்துதேர் வேத்திளங் குமரர்
ஆழி தட்பன கீழிடத் தகன்மணி வீதி. (கஎ)

வேனில் வேளனர் முடிமணி யுறைத்தயன் மிதித்த
காணி லாமொழி யாரடி யலத்தகங் கரையப்
பாணி லாமதிக் கெதிருமிழ் நறும்புனல் பரப்பும்
வானி லாவுமிழ்ச் சந்திர காந்தநீண் மாடம். (கஅ)

செறித்த மாமணி யிழைத்ததெற் றிகடொறுஞ் செங்கேழ்
எறித்த மென்சுடர்க் கற்றையந் தளிர்களே யெட்டிக்
கறித்த பைங்குள ககற்றிவன் றெடரறக் கழுத்தால்
நெறித்து நாநிமிர்த் தயில்வன நெட்டையொட் டகங்கள். (ககூ)

நேர்ச்சி நுண்மருங் கலம்வர நிரைவளை கறங்கக்
கார்ச்சி கண்டிபோன் மாதரா டரங்கமுங் கலிதூல்
தேர்ச்சி வல்லவ ரறிவினுற் செம்பொரு டுணிந்த
சோர்ச்சி வல்லவர் கழகமும் பதமலி தொடைகள். (உ0)

நலத்த மேலவர் நன்னரன் பொடுதமை நட்டார்
கலக்க மில்குண மாவசென் பதுமிவண் கண்டோம்
இலக்கு வெண்பளிக் குபரிகை யயனின்ற வெவையும்
புலப்ப டுத்திநின் றுங்கின புயலுரம் பொறுத்தே. (உக)

நீட்டு கையொடு மடுபுகர் முகத்தொடு நெறிவெண்
கோட்டு வாரணப் போர்புரி யமலையிற் குரைத்தே
நீட்டு காலவாய் நிணம்பொதி யலகவாய்ச் சிலைக்கும்
சூட்டு வாரணப் போர்புரி யிலையவர் துழனி. (உஉ)

கற்றை வெண்டிரை கலந்திடத் தோணியிற் கலந்த
வெற்றி வானவன் பொற்றெடிக் கின்னருள் விளக்கும்
கொற்ற வுன்றனு திருக்கையைப் பொன்னெடுங் குன்ற
முற்றல் போன்றன முழுமணிக் கொடிதுடங் கெயில்கள். (உங)

ஈறி லாமையால் விதிமுகங் காட்டலா லெவர்க்கும்
கூறு ணைமையாற் பலவணங் குலவலாற் புலவோர்
ஆறு மஞ்சுநன் மதியொடு முடித்தலா லளவால்
தேறு நான்மறை நிகர்த்தன செயிரில்பொன் னெயில்கள். (உச)

கலவி யாலுகுத்த முத்தமுங் கணவர்பா லடித்த
புலவி யாலெறி யிழைகளும் பொன்னணி மறுகில்
குலவு வேற்கணார் வண்டலில் விண்டிடக் குயின்ற
கலனு மல்லது குப்பையென் றுறுபொருள் காணு. (உடு)

ஆளி யன்னவ ரகலமே லாலவில் லகங்கன்
வாளி பாய்ந்தபுண் ணழல்கெட மணிவடம் புனைந்த
கேளி யாலுற வழுத்தியுங் கிஞ்சுகச் செவ்வாய்க்
கோடி லாமருந் தூட்டியுந் தணிப்பர்கொம் பனையார். (உகூ)

வசன மென்கிளி வாயிதழ் கொவ்வைவெண் மடங்கல்
அசைம ருங்குல்கண் ணனைவை மான்முக மதியம்
இசையு மெல்லடி நளினமாய்ப் பகைத்தமெல் லியலார்
பசையு மன்பர்தா ளியொடும் பகைப்பர்தம் பதத்தால். (உஎ)

வேறு.

நெட்டிலை யயிற்க ணல்லார் நிலாமணி முன்றி லேறி
மட்டின்மே னிலைக்கண் ணுட வாங்கிய பொன்னம் பந்து
மூட்டியைத் தருவி ணெண்கேழ் மொய்ம்மல ருகுப்ப மாரன்
புட்டில்வாய் மலர்க ளோடும் பூமழை பொழியும் வீதி. (உஅ)

சேலிவென் றடர்த்து நீண்ட சில்லரித் தடங்கண் மாதர்
வேலிவெள் ளாரம் வேய்ந்த வெம்முலை மதுகை மாந்தர்
ஆலிவில் லகங்கன் வாளி யஞ்சின ரணைந்து நிற்ப
மாலிவெள் ளருவி தூங்கு மலையரண் கடுக்கு மன்றே. (உகூ)

அன்னமென் னடையார் செம்மாந் தணிந்தவெம் முலையிற் சாந்தம்
பொன்னிலத் திறைத்து மைந்தர் புரவிமான் குரத்தா லெற்றுண்
டெங்கில வரைப்புஞ் சூழ்போ யெண்டிசை பரிக்கும் யாணை
மன்னெடுங் கரடத் தாழ்ந்த வண்டின முயிர்க்கு மாதோ. (ஙo)

அதிரொலி கலின மான்றே ரார்ப்பொலி யடுங்கை யாணை
முதிரொலி கறங்கு வள்வார் முரசொலி யரசர் கோயிற்
சதிரொலி யீண்டு மீண்டிக் தரைசெலி டெறிவ தொன்றே
பொதிறெறிந் திடுமா லந்தண் புயல்படு கதன கூடம். (ஙக)

நடையறி கின்ற தேர்ச்சித் துணைவரை நயவா துள்ளக்
கடையரை நயந்த வேங்கைக் கடுத்தன காகப் பந்தர்
அடைவுறக் கவிப்பப் பாக னங்குச நிமிர வம்பொற்
புடைமணிக் கவ்வை போர்ப்பப் புனைமறு கியங்கும் யாண. (ஙஉ)

நாகிளஞ் சுரும்பர் பாடக் குவளையுங் குமிழு நான்ற
பாகவள் ளையுஞ்சே தாம்ப லலரியும் பனிவெண் முல்லைச்
சேகரு முகையுங் காட்டிச் சிறைப்புனற் பழனத் தன்றிப்
பூகமென் மூளரி வைகும் புயறெடு குடுமி மாடம். (கூக)

மறங்கிளர் வேற்க ணூரு மைந்தரு மாடத் தும்பர்
உறங்குழி யுறங்கா விற்கை யுருவிலி யாணை மீக்கொண்
டிறங்கிவெண் கோல்கொண் டெற்றி யின்பருக் காமப் பைங்கூழ்
திறம்பெற வளர்ப்பிப் பான்போற் றிங்களங் கதிர்பாய்ந் தன்றே. (கூச)

தண்ணளி நால்க ளாகத் தாழ்மொழி யலர்கள் சேர்த்திக்
கண்ணளி யாசை மாலை கைபுனைந் திளைஞர் சூட்டப்
பெண்ணலங் கனிய நின்றூர் பெருவளைக் கையாற் கட்டி
விண்ணமு துவர்ப்பச் செவ்வாய் விருந்தமு தூட்டு வார்கள். (கூடு)

கன்னலின் புகையு மட்டிற் காரகிற் புகையு நல்லார்
பின்னலின் புகையு மல்கிப் பகலிருள் பிறக்க வில்வேள்
அன்னிலை வாளி யெய்த லருமையே யவிவேட் டன்றே
இன்னவென் றுணரார் விண்ணோர் நோக்கின்று நிமைப்பி லாராய். (கூசு)

பருதிவாய் பற்ற லாணி பண்வழி திருத்திச் செவ்வாய்ச்
சுருதியாழ் நரம்போ டொன்றத் தூக்கிமெல் விரன டாத்திக்
குருதிவே லனைய கண்ணூர் பாடலிற் குமர ரன்னூர்
கருதியுள் ளுடைவ தொன்றே கவின்றதூண் டளிர்க்கு மென்றுல். (கூஎ)

குணங்கிளர் சுதையின் மாணக் கோட்டிய கிளியு மாதர்
மணங்கிளர் சுரத்துத் தீஞ்சொன் மழலைவாய்க் கிளியுஞ் சோதிக்
கணங்கிளர் பளிக்குத் தூணிற் காண்பன கல்வி சான்ற
நுணங்கிய கேள்வி யார்முன் னுண்ணறி வில்லார் போலும். (கூஅ)

புட்பிணி யளகக் காட்டிற் புணர்முலைக் களிற்றின் மென்சொல்
பட்பிணி வலையி னம்பொற் பகட்டெழி லல்குற் றேரின்
நட்பினிற் படுத்திப் போர்செய் தாடவர் நனவைப் போழ்ந்த
கட்படைக் கணிகை மாதர் கற்பகப் பொலன்கொம் பன்னர். (கூக)

வான்படு மயிலஞ் சாயன் மணிநகை முறுவல் கோட்டித்
தேன்படு கிளவி தன்னுந் சிலைத்துமீ தலைத்து நின்று
கூன்படு புருவத் தூண்டிற் கூர்விழி முள்ளி லாசை
ஊன்படுத் திளைஞ ருள்ள மீன்படுத் தூற்றங் கொள்வார். (சஂ)

பொன்னலர் காம வல்லி புறந்தரப் பாணி யொற்றிக்
கன்னன்மென் றிணய சொல்லார் காமகீ தங்கள் பாடித்
தென்னிளங் காளை யன்னூர் சிந்தையைப் பரிசில் வாங்கிப்
பன்னில வழைப்பும் பெட்பப் பட்டிமை விளைப்பர் மாதோ. (சக)

எழுந்தளந் தெடுத்த பாட லெழுவகை நரம்பி னல்யாழ்
ஒழுங்குற மாதர் பாட வுணர்ந்ததோ வியமோன் றேயோ
அழுங்கவா வரிந்த வுள்ளத் தறவர்வேட் டிரங்கப் பைம்புற்
கொழுந்தையுக் கின்னு தன்றே கோவிளம் பசலைக் கன்று. (சஉ)

தருமமுந் தருமந் தாங்குந் தானமுந் தான மோங்கும்
கருமமுங் கருமங் காக்குங் கருணையுங் கருணை தீரா
வருமமும் பலன்க ளாக வைகலும் பழுத்த தெய்வத்
தருமமே யனையா ரின்ன தொன்னகர் மேழிச் செல்வர். (சங)

ஆடியற் பாவை போல வகன்றுழி யகலா தென்று
நீடிய சீர்த்திப் பாவை நிலவிய செஞ்சொன் மாலை
பாடிய பனுவன் மாக்கள் பருவர லுழந்து பன்னுள்
வாடிய வறுமை நோயை வறுமையாய்ச் செய்ய வல்லார். (சச)

பிச்சிநாண் மலர்செய் வேணிப் பிஞ்ஞக னடியார்க் காணின்
உச்சிநீ ரவலிற் பாய்ந்தாங் குழுவலன் போடுந் தாழா
எச்சமி லமுதத் தெண்ணீர்க் கிணற்றிடை யெழுப்பெற் றூர்போல்
இச்சையோர்ந் தளிமிக் கூறிக் குறித்தவா றிழைத்தல் செய்வார். (சடு)

முழுமதி சிதறி யன்ன முளிதயிர் வெருகின் கண்போல்
எழுதருங் குய்ய முத வின்புறு கருணை வாசம்
ஒழுகுமுக் கனிநெய் வாரி யூட்டியா ளுடையா னன்பர்
கெழுமன மகிழ்ச்சி தூங்கக் கிழமைபூண் டேவல் செய்வார். (சக)

மலைதரு வனவு நீண்ட மலையெனச் சுலவு மாழி
அலைதரு வனவுந் தூவெள் ளலைபுரள் கலுழிக் கானத்
தலைதரு வனவுஞ் சூழ்தண் டலைபல கிளைத்த வேலி
நிலைதரு வனவு முண்டு நிவந்தபீ டிகைமா டங்கள். (சஎ)

பதித்தவெண் பளிக்கு வேதிப் பவளக்கா னிறுவிப் பைங்கேழ்
கதிர்த்தகல் விடங்க மூட்டிக் கண்ணகல் விண்ணு டேய்ப்ப
மதித்துணி யனைய வொள்வாள் வயிரமுந் துகிரும் பொன்னும்
கொதித்தெரி கலனு முத்துங் குவிந்தன பயின்ற கூடம். (சஅ)

நனந்தலை யுலகத் துள்ளார் நல்குர விரவு மோவாத்
தினந்தரு மிரவுஞ் சீய்க்குஞ் செம்பொனு வணத்துச் செல்வர்
கனந்தருங் கண்டன் காழிக் கடவுண்மூ வுருவா னுனென்
றினந்தருந் தோழன் வெவ்வே றியைந்தன வியந்தார் மாதோ. (சகூ)

உரைசெயா நியமே முன்னு மொன்பதிற் றிரண்டு கூற்று
வரைபடா வொலியா லார்க்கும் புட்பொழின் மானுங் கூலம்
புரைபடா துறுபல் வேறு பொருள்களா லுலக முண்ட
விரைசெயுந் துளபப் பைந்தார் மேலவ னுதரம் போன்ற. (நிஅ)

வண்டல மருமென் கூந்தன் மாணிழை மகளிர் செம்பொற்
குண்டலந் திருவில் வீசக் கோழிமேல் வீழ்த்த முன்றிற்
கண்டலக் கவைக்கான் மேதி காலுறைத் தழுங்கு மென்னூல்
மண்டலத் திவர்தஞ் செல்வ வளனெடுத் துரைக்கற் பாற்றே. (நிக)

உறைகழித் தொளிறு வாளா லொன்னலார் மடவார் மைக்கண்
கறைகழித் துயர்திண் டோளிற் களிறுவீழ் ஞாட்பிற் பட்ட
நிறைபடச் சுவட்டின் மாதர் மூகிழ்விர லுகிரி னேர்ந்த
பிறைகழிப் பில்லா வேந்தர் பெருவிற லாளி யன்னூர். (நிஉ)

வானிறப் படைகள் போழு மணிநிறத் தணங்க ணூர்கண்
வேனிறத் தாழத் தொங்கல் விளரியஞ் சுரும்பர் பாடக்
கோனிறக் கணையிற் றூண்டிக் கோவிளங் குமரர் வாய்ந்த
தூனிறக் கவரி நெற்றித் துரகத்தே ரூர்தல் செய்வார். (நிங)

இருணக்க பவளக் காலின் முழுமதி யிருத்தி யன்ன
வருணத்தண் குடைக்கீழ் மன்னர் மல்லடு போருங் கூன்கோட்
டருணத்தின் போருங் காண்பா ரமலையான் மலிந்த தம்மா
கருணைக்குன் றனையான் காழிக் கடிமணி மாடவீ தி. (நிச)

சூலம்வாள் கதைக ணிச்சி சுரிகைசக் கரங்கள் பிண்டி
பாலநீள் குலிச மேறு பலகைகப் பணமூ லக்கை
கோலெழு ஞாங்கர் வன்றூல் கொடுமர மலிந்த கூடம்
சேலுலாந் தடங்கட் கன்னித் திருமகள் கூடம் போலும். (நிஙு)

புனன்மடுத் தெழுகொண் மூவைப் பொங்குளை யரிமா னேறு
சினமடுத் துரத்தா லென்னத் தீவிழி காலச் சீறிக்
கனன்மடுத் துழலும் வைவேற் காளையர் கைவா ளோச்ச
இனமடுத் தூறச் சோனை யெனமதம் பொழிவ யானை. (நிசு)

பொன்பொலி வடிவு காணப் பொலிதலான் மதனின் மிக்கார்
இன்பொரு ளறிந்து நாவொன் றியைந்தனந் தனிலு மிக்கார்
ஒன்பது நிதிக்கு மேலா யுயர்ந்துபிங் கலனின் மிக்கார்
அன்பினிற் கவடி லாமை யளித்தலாற் றருவின் மிக்கார். (நிஎ)

இலையயிற் குமர னன்ன ரியங்குதண் டலைக ளெங்கும்
தலைவிரி குழையத் தேமாத் தண்மல ருகுப்ப மாரன்
கொலைமுகப் பகழிக் காற்றூர் குளிர்நிழல் புகல்புக் காங்கும்
தொலைவறு காமத் தீக்குத் துப்புறை பொழிதல் போலும். (நிஅ)

இருமணித் தடக்கை நல்லா ரிழைத்திடு வண்டல் வீட்டில்
உருமணி முத்தம் வெண்சோ றுரைமார் செங்கை தீண்டக்
குருமணி யாதல் கண்டு குறுநகை விளைத்துப் பண்டைப்
பருமணி முத்த மாக விளநிலா விரிக்கும் பாங்கர். (நிகூ)

பெறலருங் கொடிமென் முல்லை பிலகரும் பீன்ற தென்னு
நறைவிரி யலங்க லோதி நங்கையர் வதுவை யாற்றும்
சிறுகணர் முழவ மார்த்த வின்னெலி செவியின் மாந்தி
அறிமுகி லென்ன மஞ்ஞை யாலுவ சோலை தோறும். (சுo)

அறுசுவை கனிந்து விண்ணுட் டமிழ்தினு மியன்று முல்லைக்
குறுமுகை கவற்று மூரற் குழைவுறு முகமன் கூறி
மறுவறு மனுக்க ளார்ந்த வாயினின் மறைதேர் வாழ்க்கை
உறுவரை யருத்தி வெவ்வே றுருக்கலோ டுண்ப ரன்றே. (சுக)

மந்திரத் திறலார் கால மூம்மையும் வரம்பு கண்டார்
எந்திரப் பவத்தை வேர்கீண் டெறிபடை யனைய நாவார்
சுந்தர முளரி மாலைத் தொழுதகு தெய்வ மன்னர்
அந்தரத் தயனை யொப்பா ரணிகந்த ஞளர். (சுஉ)

மறைகளு மங்க மாறு மறுவின்மூ வறுபு ராணத்
துறைகளு மிருதி நூலுந் துளக்கற விளக்கிச் சூழ்ந்த
இறைகொடுத் தெதிர்வி னுக்கொண் டெவற்றினுந் தோய்ந்துந் தோயா
நிறைபரம் பொருண்மே லுள்ள நிறுவிய வறிவின் மிக்கார். (சுங)

கிளந்தறி யாத வேதக் கிடையிடைப் பதங்கள் கோவை
அளந்தபே ரோதைப் பொம்ம லண்டகோ ளகையு முட்ட
வளந்துநான் முகத்துத் தங்கள் பெருந்தகை மகிழ வோதும்
இளந்துணை மறைச்சி ரூர்க ளீட்டமெண் ணிலவு மீண்டே. (சுச)

அருள்விளை புலத்திற் காம மாதிய பூடு பூத்த
இருவினைக் களைகட் டார்வத் தெயிலுடுத் துயிர்க்கு றஞ்சும்
திருமணி யிழைத்த ஞானச் சேயிழை யொடுகு லாய
கருணையங் கோயில் வைகுங் கடவுளர் மடங்க ளெங்கும். (சுரு)

வடநிழல் விரித்த நாலெழ் மருத்துநூ லுரைத்த வாறே
கடவுள்கண் மணியா லுந்தக் கரத்துமந் திரத்தால் வெண்ணீற்
றடல்கெழு மருந்தால் யார்க்கும் பிறவிநோ யறுக்குஞ் சைவத்
தொடர்கொள்வே தியர்தா மாயுள் வேதிய ராய தொல்லோர். (சுசு)

இருவிரல் கூட்டி நால்வர்க் கிசைத்தமெய்ப் பொருளை யீதென்
றொருவிரல் காட்டிப் பாடு மொருவனைப் பயந்தோன் சுற்றத்
தருமறை பயின்ற செந்நா முனிவர ராற்றல் சான்ற
தருமநூன் மருமச் செல்வர் தனிமட மாலை யெங்கும். (சுஎ)

பைந்தமிழ்ப் பாவை யாடும் பன்மணி யரங்கு நீலக்
கந்தர னடியார் காணி காசினித் திலகம் யோக
மந்திரர் முத்தி வைப்பு மறைவிளை தெய்வப் பூமி
அந்தணர்க் குறையுள் சீர்த்தி யணங்கினுக் கிணங்கு பீடம். (சுஅ)

உறக்கமென் பனநல் யோக முணர்வுசால் புருவான் கண்கள்
திறப்பன நிறைமெய்ஞ் ஞானஞ் செப்புவ மனுக்க ளிவ்வூர்ப்
புறத்துளார் செயலு மெம்மான் பூசனை யெனவீ தேபோல்
துறக்கநாட் டகத்து மோரூர் தொல்லைவை யகத்து மின்றே. (சுசு)

வேறு.

விண்கொண்ட காவலவன் வேணுவுரு வெய்திப்
பண்கொண் டடித்துணை பழிச்சவருள் வீசும்
வண்கொண்ட லன்னவன் மணிச்சின கரத்தான்
தண்கொண்ட பேரொளி தருங்கபிலை போலும். (எ0)

நாதித்த வெள்ளருவி நன்மலை முகட்டில்
ஆதித்த மண்டில மமைந்தொளிர்வ தென்ஞ
மீதிற் கிளர்ந்திருள் விழுங்கி யொளிகாலும்
சோதித் தசும்பொடு துளங்குறு விமானம். (எக)

நீரேறு மன்பர்பிழை நேரிணு மவர்க்கே
சீரேறு நன்றிபல செய்கட னெனக்கென்
ரூரேறு வேணிய னசைத்தகொடி போலும்
போரே றிலங்குகொடி பொங்குமணி முன்றில். (எஉ)

சேல்பாய் வயற்கழு மலச்சிவனை வேதன்
சால்பா யருச்சனைசெய் தன்மைய துணர்ந்து
மால்வாய் நெடுந்திசை வழாதுகடை நின்ற
நால்வேத மேயனைய நற்கோ புரங்கள். (எங)

மின்றோய் நெடுஞ்சிகரி விண்ணகடு தோயத்
தன்றே சுலாவுமதி சாளர வழிக்கண்
சென்றே குறைந்தமை தெரிந்துபுடை செல்வேன்
என்றே விரண்டயன மெய்தினனவ் வெய்யோன். (எச)

நன்றுய கோளுழுது நாளுமணி மாலை
என்றுய் விளங்கவதி னேறுகொடி யின்கால்
கன்று மலர்த்தரு வனக்காம வல்லி
குன்று தணைத்தகொழு கொம்பரென நின்ற. (எரு)

மைந்நாடு கொண்டல்கள் வளைந்துருவ மூடிப்
பொன்னுடு கஞ்சுக புராணணை நிகர்ப்பத்
தன்னுத னெத்தகை யனத்தகை யதாணை
என்னு விரும்புவி யிசைப்பதை யிசைக்கும். (எசு)

மய்யார் வினைப்பவம் வராதகலு கைக்கோ
பொய்தீரு ஞானவொளி பொங்கியெழு கைக்கோ
மெய்யான தொண்டர்கள் விரும்பிவரு கைக்கோ
வெய்யா தலங்குவ விலங்குதுவ சங்கள். (எஎ)

வேறு.

ஐம்பொறி மிசைய வூட்டு மமுதுவா றறிவன் சொன்ன
செம்பொரு ளாக மங்க டெளிந்ததெள் ளமுது மூவர்
தம்புலத் தமைத்த ஞானத் தண்டமி ழமுது மிக்கார்
இம்பரிற் புணர்த்த செஞ்சொ லமுதுமே யெவ்விடத்தும். (எஅ)

விடுபொருள் விடுத்து மேற்கொள் விஞுவெதிர் மறுத்துஞ் செவ்வே
தொடுபொரு ளிலக்கியங்க டொகைவகை விரித்துந் தொன்னூற்
படுபொருள் வரம்பு கண்டார் பனுவலந் தமிழைக் காழி
வடுகனே மகிழ்ந்தா லேனை வானுளோ ரென்ப டாரே. (எகூ)

வேதநா வலர்கள் வாயும் வீதியுந் தழைவ வாசி
போதரு நிதியு மன்னர் புயங்களுந் தரும நங்கள்
கோதையர் விழியும் வீடுங் குவவுறு மயில்கண் ஞானப்
போதகர் கையுஞ் செய்யும் பொலிவன பலவண் டானம். (அ0)

தன்மைநீர்க் கிடங்கு மன்ன சாலையும் பால னங்கள்
புன்மைதீ ரியலும் பைம்பூம் பொங்கரு மறுப தங்கள்
நன்மறு கிடமும் யாரு நவின்மத வார ணங்கள்
பன்மையோர் தோழிலுங் காவும் பலவிர தங்கண் மாதோ. (அக)

மாதர்த மருங்கு மம்பொன் மாடமும் விலக்கு மின்னல்
கோதையர் கையு மன்னர் கோன்மையு மளிக்கு மையம்
சீதமென் பொழிலு முத்தீச் செயல்களுஞ் சிறப்ப வாவி
வீதியி னயலுஞ் செந்நெல் வேலியும் பொலிவ வேழம். (அஉ)

விளரிவண் டொலியுஞ் சூழும் வேலியுஞ் சந்தக் கானம்
வளைகரும் பிடத்து மேலோர் மனத்தினுங் கொழிப்ப வாரம்
நளிபொழி லிடத்து மந்த ணதிதொறும் வாச வண்டல்
இளநலார் குழலு மில்லு மிலங்குகா சறையு மாதோ. (அங)

காசிற்ற புலமை சான்ற காப்பியக் கலிக ளெல்லாம்
வாசித்து மிழுக்கொன் றில்லா மாசறு காட்சி யாரை
நேசித்துங் காழி மேய நிருமலக் கொழுந்தின் றூளைப்
பூசித்தும் பொழுது போமாற் பொன்னகர் மாக்கட் கெல்லாம். (அச)

எண்ணருங் காதை யெல்லா மிலக்கண நெறியாற் பாடல்
பண்ணவுந் தரும மாதிப் பயக்குநூ லியற்கை யாய்ந்து
நண்ணவுஞ் சுவையா றெள்ளி நவச்சுவை பிறந்த கேள்வி
உண்ணவும் போவ தல்லா லொல்லையும் போகா வீணில். (அடு)

சசிமூளை கிடந்த வேணிச் சண்பைநா யகற்கு வேண்டிக்
கசிவுடைத் தொண்ட ராற்றும் விழுவையார் கணிக்கற் பாலார்
பசியகட் பேழ்வாய் மோட்டுப் பறந்தலைக் கருந்தாட் பேய்கள்
நிசியிடைத் துயில்யா மத்து நிரைமுழ வுறங்கா மூதூர். (அசு)

பாடுவார் பல்லோ ரென்னிற் பழிபடா நிதியா லின்பம்
கூடுவா ரவரிற் பல்லோர் குழகன தடிக்கி ழன்பு
சூடுவார் பல்லோ ரென்றுற் றுவருறத் துறந்து முத்தி
வீடுகாண் குறுவா ரின்ன வியனகர் வளமை காண்பார். (அஎ)

பொறிவழிப் புலன்கள் செல்லும் புரையொடு பசுபோ தங்கள்
அறவெறிந் தடுமுப் பாழை யகன்றருள் வழியே யுள்ளம்
பிறிவறக் கலந்தார்க் கன்றிப் பெருநக ரிதன்மாண் பெல்லாம்
சிறிதுண ரறிஞர் வாயாற் செப்பவும் பெறுமோ தேர்ந்து. (அஅ)

பழிப்பிலோ செழுத்தான் மெய்ந்நூற் பரப்பெலாம் பரமன் காதில்
ஒழுக்கிய வொருவன் ரேன்றி யுவமைதீர் கவிக ளாக்கி
வழுக்கில்பல் லெழுத்தாற் கூறும் வளநக ரியல்பை யின்ரே
செழுத்தையு முணர மாட்டே னென்னெடுத் தியம்பு மாறே. (அக)

காமரஞ் சுரும்பர் பாடக் கடிமுகை யவிழ்ந்த தண்ணந்
தாமரைக் கிழத்தி வாழுந் தனிநகர் வளனீ தாகப்
பூமகட் கணியா மிவ்வூர்ப் புண்ணியக் காதை வெவ்வே
ருமவை பலவென் ருலு மறைகுவா மறிந்த வாறே. (கo)

[திருநகரச் சிறப்பு முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் கஅக.]

———:o:———

புராண வரலாறு.

மழைவாய்த் தன்ன கருமிடற்று வரதன் காழி மான்மியத்தைக்
குழைவா யன்பர் தமக்குரைப்பான் குறுகுஞ் சூத முனியென்பான்
கழைவாய் வழிதீஞ் சுவைமொழியாற் கரைய முனிவர் கணங்கொண்ட
தழைவாய் குரம்பைத் தவப்பள்ளி தன்னே யறிந்த வாறுரைப்பாம். (க)

வேறு.

தெய்வ வெண்டிரைக் கங்கையங் கரையது சிறந்தோர்
மெய்வ ளந்தரப் பொலிவது வேதநூ லாதி
சய்வ நூல்களா னிகழ்வது மாயையின் றனையர்
அய்வ ருஞ்செருக் கொழிவது நைமிசா ரணியம். (உ)

ஏன்ற வல்வினை யிருளொழிந் தெமக்குளத் தூய்மை
தோன்ற வோருழை தருகென முனிவரர் தொழலும்
ஈன்ற நான்முக னுருட்டுபு விடுத்தவின் றருப்பை
ஆன்ற வாழிசென் றிறுத்தது நைமிசா ரணியம். (ங)

மெய்ய ராரணக் கிழவர்வெண் ணீற்ரெளி மேனி
அய்யர் தன்னளி யுளத்தரா ணவத்தைவே ரரிந்த
செய்யு மாதவத் திறலர்முக் குற்றமுந் தீர்ந்த
துய்ய ரெண்ணிலார் பிறங்குவ தவ்வனச் சூழல். (ச)

குணத்தின் மிக்கவ ரோம்புமுத் தீவளர் குண்டத்
துணக்கு வாய்ந்தபல் சமித்துகண் மனுமுறை யூட்டி
அணக்கும் வெஞ்சுடர்க் கின்றுணை யாய்வளி யாட்ட
மணப்பொ தும்பரிற் சிறைவிரித் தாடுவ மஞ்ஞை. (நி)

புதைய விண்கவித் தோங்குயர் பொழிலிருள் போக்கித்
ததையு மெல்லிணர்த் தீபகத் தருச்சுடர் தாங்க
இதைய நல்லவர்க் கேந்திய சிரகமென் றிலையால்
துதையு மென்சிறை நீட்டுவ புதுக்கனிச் சும்மை. (சு)

மலக்கு றும்பற வெறிந்தநான் மறைபயில் வாழ்க்கை
அலக்க ணில்லவ ரிமிழ்திரைக் கங்கைநீ ராடி
நலத்த தொல்கட னிரப்புப ஞாங்கரி னின்று
புலர்த்தும் வேணியைக் காட்டுவ பூங்கனிக் கொன்றை. (எ)

எல்லொ ளித்தழ லிறையவ னெழுவகை நாவால்
அல்ல நீர்மகப் பொருணுகர்ந் தரும்புகை யீட்டம்
எல்லை நீத்தநாக் கொடுபுகை யீட்டுத லேய்க்கும்
செல்லி னங்கிடந் துறங்குதண் குழைநறுந் தேமா. (அ)

போது கொள்பவர் சமித்தொடு செல்பவர் புரைதீர்
வாது கொள்பவர் நல்லருட் குரவர்தாள் வனசத்
தாது கொள்பவர் மனுலய வின்பசா கரமேல்
காது கொள்பவர் கணிப்பிலர் தாபத கணங்கள். (கூ)

நாம நூன்முது வோர்தவப் பள்ளியின் ஞாங்கர்
காம நூறெரி விடரெனக் கடுவனின் றிரங்க
ஏம வைம்பொறி யவித்துள விரதரி னீண்டைக்
காம தன்றென வகலுவ கருவிரன் மந்தி. (கo)

புந்தி வல்லவர் மகவினைப் பொடிகளைக் கரத்தால்
சிந்தி மெய்வெளி றடைந்தவெஞ் சினக்கட களிற்றை
இந்தி ரன்றனு துயரிய மருப்புடை யிமையாத்
தந்தி யாங்கொலென் றயிர்ப்பன தளர்நடைப் பிடிகள். (கக)

முன்ன மெம்முரு வடைந்துளோன் காணரு முளரி
அன்ன சேவடி யிவையெனப் புல்லுறைத் தழுங்கா
தின்ன மாதவர் மெல்லடி யியங்கலா றெல்லாம்
கொன்ன வின்றவெங் கோட்டினு லகழ்வன கோலம். (கஉ)

கொம்மைச் சூதத்திற் கதலியிற் பலவினிற் குழைந்த
அம்மைத் தீங்கனிச் சாற்றினு லாணவ மாதி
மும்மைப் பங்கமு மகன்றுளா ரேனுமிம் மூன்று
செம்மைப் பங்கமீண் டகலுமா றறிந்திலர் திரிவார். (கங)

ஏக மாமுனி சுகமுக மெண்ணிலா மறையும்
யோக நூல்களும் விரிந்தது கடுப்பநல் லுரவோர்
யாக சாலையின் மருங்கெலா மெழுதொணுக் கிளவி
மோக நீத்தநூல் விரிப்பன பலசுக முகங்கள். (கச)

நன்று செய்தீதோ நுயிரெனி னக்குல நன்மை
என்று மேசெயு மென்பதீண் டறிந்தன மெரிகட்
கன்று வெஞ்சின வுழுவையும் புயங்கமுங் கனக
மன்றுண் முன்னுளோர் பணிதலைக் கொள்ளுமவ் வனத்துள். ()

புரங்க டந்தவற் கடிமைசால் கற்றுகில் புனைவார்
தரங்க நீர்படிந் தெழுந்துழித் தாங்கும்வற் கலையை
மரந்தெ ரிந்துகூர் நகம்பொதுத் துரித்துவல் லியங்கள்
இரங்கி நல்கநின் றீர்ங்கலை யேந்துவ கவிகள். (கசு)

ஆசி லிவ்வனத் தருந்தவர் பெருமையை யளந்து
பேசில் வாளரா விறைவனு மிற்றெனப் பெறுமே
பாசி லைத்துழாய் முகிலுநே டரியபொற் பதத்தை
ஏசி லன்புநூல் பிணித்துளத் திருத்தின ரென்றுல். (கஎ)

புலன டக்குநர் புவிக்கெலாந் தண்ணளி பூப்பார்
நலன் விளைந்தகன் னெறியொழுக் கத்தினர் நாதத்
தலன கன்றசின் மயப்பெரு வெளியினிற் சுலியா
துலவு நோக்கின ருறங்கலா வுறக்கமிக் குடையார். (கஅ)

கூறி வித்தகை யத்திரி கோதமன் குழுதன்
மாறில் கண்ணுவன் வாமதே வன்சுகன் வசிட்டன்
வேறில் காசிபன் சவுனக னுதியர் மேனுள்
ஈறில் சத்திர வேள்வியோன் றிழைக்குமவ் வெல்லை. (ககூ)

இயலி லங்குபன் மறைசலுங் கலுமுத லெவையும்
மயல கன்றுள வாதரா யணமகோ தகியில்
பயனு கர்ந்துயிர்ப் பயிர்க்கெலா மின்னருள் பணிக்கும்
புயலை யேநிகர் சூதமா முனிவரன் போந்தான். (உ0)

அடைந்த வண்ணலை யாயிடை யந்தண ரடியேம்
மிடைந்த வெவ்விடாய்க் காய்ந்துநூற் கடலெலா மீண்டே
கடைந்து தெள்ளமு தளிக்குமெங் கருணையம் பொருப்பே
மிடைந்த செல்வமே யென்றன ரெதிர்கொடு விருப்பால். (உக)

அருக்கி யாதிதன் தாய்மணிப் பீடமிட் டதன்மீ
திருத்தி யெம்பிரா னீண்டெழுந் தருளினை யென்னு
விருத்த வேனில்வாய்க் கருவிமா மழைத்துளி வீசக்
குருத்த செந்நெலிற் களித்தன சோருரை கொடுத்தார். (உஉ)

மறுவின் மூவ்று புராணமும் வளரிதி காசத்
திறனு மோதினை பலதரு மாதியுந் தெரித்தாய்
உறுதி வாய்ந்திலா வெமக்கடி கேண்மனத் துண்மை
பெறவ ழங்கிய பற்பல தலங்களும் பேசின். (உங)

வேறு.

உடனுறை மடவார் யாரு மோம்புக ரின்றி வாடும்
மடவரன் மகப்பே றெய்த வல்விழி மூடி மற்றை
இடவிழி நோக்கிப் போற்றி யெந்தையா யான தேனை
அடல்விடை யறுப்ப தாங்கொல் லதுசிராப் பள்ளிக் குன்றம். (உச)

நொய்யகாற் சிலம்பி மாட்டு நூலிழைப் படலஞ் சாய்க்கும்
வெய்யகால் யானைமாட்டு மொருகிலே வெளிப்பட் டோங்கும்
அய்யகீர்த் திரளா யென்று மமர்ந்தவா னைக்கா வென்று
பொய்யிலாத் திருநீ றிட்ட புரிசைசூழ் கிடந்த தொன்றே. (உஞ)

மெய்யாறு மூகத்தோன் றந்தை மேதகு வடிவும் வாழ்வும்
கய்யாறு பிரம்புங் கோயில் காவலுஞ் சுடிகைப் பேறும்
உய்யாறு பெறுவா னந்தி யொருவன்முன் பணிந்த துண்டால்
அய்யாறு மாறு நீங்கு மருளாறுந் தருமை யாறு. (உசு)

காரகன் மிடற்று முக்கட் கனிசெவி கொடுத்துத் தாழத்
தாரகப் பொருண்மை யோதுஞ் சண்முகத் தொருவன் கோட்டம்
பாரகப் பரிக்கு ஞானப் பண்ணவர் துதைந்து போற்றும்
ஏரக மென்னுந் தெய்வ வின்பவீ டளிப்ப தொன்றே. (உஎ)

குடம்பொலி முனிக்கு மன்றற் கோலமுங் காட்டி யெம்மான்
இடம்படு கோவ ணங்கொண் டியலமர் நீதி யுய்ய
மடந்தையை மணியைப் பொன்னை மகவைமற் றுளவை யெல்லாம்
அடங்கலுஞ் சூறை கொண்டாங் களித்ததான் றுளது நல்லூர். (உஅ)

பன்னரு வினைக ளெல்லாம் பலதலஞ் சாரப் பாறும்
என்னினீள் சுருதி யாவு மிசைத்திடுந் தன்பாற் செய்த
துன்னரு வினையும் யாண்டுந் தொலைவுறு வினையு மெல்லாம்
தன்னகத் தெளிது தீர்க்குந் தலங்குட மூக்கோன் றுண்டே. (உகூ)

பத்தியங் கிலரே னுங்கண் படைகொள்ளி னன்றே யோரெண்
சித்தியும் பெறுவர் மேலுஞ் சிவனருள் பெறுவ ரென்னு
முத்தியங் கனியை வேட்டு முழுமணிச் சுடிகைச் சேடன்
துத்தியஞ் செய்யு நாகேச் சுரமொன்று துலங்கிற் றம்மா. (ஙஐ)

பூசநீர்ப் படிந்த தொண்டர் பூங்சழற் றேய்ந்த சின்னீர்
பாசநீ ருடலிற் றேயப் பரித்தநீர் வேணி யான்றன்
வாசநீ ரிருக்க வென்னு வரன்றரு மறலஞ் சாயற்
கேசநீர்ப் பொன்னி சூழக் கிளரிடை மருதான் றுண்டால. (ஙக)

கோவொடு புலவ ரீண்டிக் கூன்பிறைக் கோட்டு நல்லான்
மாவடி வெய்திப் போற்ற மதிநுத லதிதி யீன்ற
தேவடு செறுநர்ச் செற்ற திரிபிலம் படையான் வைகும்
ஆவடு துறையென் றுண்டா லரும்பதி யொன்று மாதோ. (கூ)

மற்றுலம் புனைந்தோன் வேப்பங் கண்ணியான் வயங்கு சோதி
பற்றுலம் புயத்தை வென்று பன்னிறந் தருதாட் சென்னி
பொற்றுலம் போற்று மந்தண் பொன்னிசூழ் துருத்தி யாய
குற்றுல மென்ன மன்னுங் கோகந ரஃதோன் றுண்டால். (கூ)

மூதுசெல்வச் செழிய னேவ முதல்வன்மண் பரித்த வாற்றல்
அதுவையைக் கரைக்கு வார்த்தை யாயதென் றமல னேற்ற
புதுவெள்ளப் பொறைதான் கொண்டு பூந்திரை சிவிறிப் போற்றும்
மதிபுனற் பொன்னிசூழ மணியெயின் மயிலை யொன்றே. (கூ)

உடம்படு மாயை புக்க வுயிரெலாந் தமிழான் முத்தித்
தடங்கரை யேற்று ஞான சம்பந்தர் துறைகாண் மூதூர்
மூடங்சூளை மடங்க லானனென் முதுபவந் தேறு மும்சீர்க்
கடந்திரு மறையோர் போற்றுங் கடவுண்மா நகர மொன்றே (கூ)

கள்ளியல் பொழில்சூ ழிஞ்சிக் காஞ்சிரா னனியே காட்டுப்
பள்ளிநான் கினுமிக் காய பள்ளிபூம் பள்ளி யானும்
வெள்ளியங் திரைபு ரட்டும் வெண்கடற் பள்ளி யானும்
தெள்ளிய ராகப் போற்றுந் திருச்செம்பொன் பள்ளி மாதோ. (கூ)

தென்னவன் கூனுங் காமன் சிலையுடைக் கூனு மாற்றும்
மன்னவ னடியார்க் கன்ப னனவ னரக்கி யாய
கன்னிமா திரங்கக் கூனிக் கலியற்கு நிமிர்ந்து காட்டும்
மன்னவன் கருணை கூர்ந்த வளநக ரதுப னைந்தாள். (கூ)

கருக்கொடி யொழிக்கும் பொன்னிக் கரைக்கொடி யடைந்து கும்பன்
மருக்கொடி மலர்க டூவி மனமிறு மாப்ப னின்போல்
உருக்கொடி மும்மை யன்ப ருளனென வுருவிற் காட்டிச்
செருக்கொடி யகலக் காத்தான் றிருக்கோடி காவொன் றுண்டே. (கூ)

விருப்பங்கூர்ந் துமையா ளேத்த வெள்ளியங் கிரியி லென்றும்
இருப்பங்கே யென்ன மேவு மிறையவன் விடைவெங் கோடை
உருப்பத்தீர்த் தருளு ஞான வொண்முகி லானனென் வாழும்
திருப்பங்கூ ராய தொன்மைச் சிவலோக நகரொன் றுண்டால். (கூ)

கானமர் கடுக்கை வேணிக் கடவுளே யடல்குன் றூத
மானமந் திரத்தா லேனை மருந்தினு லுலகில் யார்க்கும்
ஊனவல் வினையு மோவா வுற்பவ வினையுந் தீர்க்கும்
மானபுள் மணிறபூ சித்த வகன்பதி வேளூ ருண்டால். (சூ)

போதியன் மூலிதொட் டுண்ணு மகவைத்தம் பொழிபா லூட்டும்
நீதியன் னீயர்போன் முக்க ணருளீ டுயிருண் டுய்ய
மாதியல் பாக னன்பால் வகுத்தமுக் குளத்தி னேங்கும்
ஆதிவெண் காடா மாதி யம்பல மென்ப தொன்றே. (சக)

பண்ணலங் தகக்கூ வேனற் குயின்மொழிப் பேதை பாகத்
தண்ணல்கண் ணனல்சான் முக வாழிநீர்க் கிழவன் பொன்னித்
தண்ணலங் கொடியை வேட்ட சங்கமத் துறைநீ ராடி
விண்ணலங் கனிந்தோன் போற்றும் வியன்சாயா வனமொன் றுண்டால்.

எனவருஞ் சைய வோங்க லிடைநிகழ் பிரம குண்டம்
மூனமதாய்க் கன்னிப் பொன்னி முயங்குசங் கமமீ முக
மனவுடைப் பணியா னூர்மான் மியமெலாம் வகுத்தா யெந்தாய்
உனதுழை யடியேங் கேட்ப வுரைத்ததொன் றுண்டு மேனள். (சஙு)

மற்றதன் முன்னும் பின்னும் வரம்பறு காதை யெல்லாம்
சொற்றனை யெம்ம னோர்க்குத் துளக்கற முன்வி னைய
பெற்றியை யளித்தா யல்லே பெரிதுற விழைந்த வெம்பால்
மூற்றுற வருளல் வேண்டு முழுதுதாருங் குணர்ந்த தொல்லோய். (சச)

வேறு.

திருத்த லத்தினுத் தமமுமெய்த் தீர்த்தத்துத் தமமும்
கருத்தர் தம்மினுத் தமனையுந் தனித்தனி கரைந்தாய்
நிருத்த னேகுரு லிங்கசங் கமமென நிலைபெற்
றருத்தி வீடருள் பதியுமொன் றுண்டென வறைந்தாய். (சஙி)

மூல வல்வினை யிருள்கெட வருணிலா முகிழ்க்கும்
சீல வெண்கதிர்த் திங்களே யங்ஙகர்ச் சிறப்பை
எல வெங்களுக் குணருமா றருளுதி யென்னுக்
கால மும்மையு மொருங்குணர் சவுனகன் கரைந்தான். (சசு)

[புராணவரலாறு முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் உஉஎ.]

———:o:———

முதலாவது தலவிசிட்ட வத்தியாயம்.

மறுவின் மாதவ னுவற்சியைச் செவித்தொளே மடுத்துத்
தெறுசி னத்தழ லவித்தமா முனிவரன் செவ்வே
உறுமு ளத்தில்வைத் தோதியி னுணர்ந்தனன் றனக்கோ
ரிறுதி யில்லவ னெழிலுலாங் காழிமான் மியமே. (க)

வேறு.

குரவுவார் சோலைக் கழுமல வாணன் குரைகழல் வியப்பமு மாங்
கண், உரவுநீர்ப் பொன்னி வியப்பமு நிணைந்துள் ளுருகுமெய் சிலிர்ப்ப
வாய் மலரக், கரமலர் குவிய வறிவறி யாமை கடந்தபூ ரணப்பெருங்
கடலில், பரவச மடைந்த முனிவர்தம் பெருமான் பகருவா னிகரிலா
தனவே. (உ)

முன்னுமேற் கதியைத் தருபல தலனு மொழிந்தன முதல்வனே
மூன்று, வன்னமாய்க் கதியைத் தருதல மொழிந்தா மற்றுநீர் விழை
தலா லதன்சீர், உன்னுமா றரிதா மேனுமெம் மறிவா லுணர்ந்தவா
றுரைத்துமென் றுரைத்தான், மன்னுகான் மறையா லெண்ணிலா
ரணங்கள் வடித்தவ னடித்துணை மனத்தான். (ஊ)

உருண்டபொற் பழுத்த பொரியரைக் கருங்கோட் டுயரிய வெதிரி
காச் சிரமத், திருண்டபொற் களத்தான் கழுமலத் தியலை யெம்மூசத்
தளித்தரா ளெவையும், தெருண்டகங் குரவ னெவர்க்குமிவ் வியலைச்
செப்பலை யென்றனன் பவத்தால், வெருண்டபக் குவத்தீர்க் குறைத்
தனு மெமக்காம் வேட்டனு நமக்கற னுமால். (எ)

புரையறு தவத்து முனிவிர்கா ளந்தண் பொன்னிசூழ் வரக்கிடந்
தமையால், விரைமல ரலங்கன் மிலைந்தது போன்றும் விளைக்குறும்
பேறெனு வியப்பால், கரைபொரு தலைக்கு நீரரண் போன்றுங்
கடவுளப் புலன்கெழு கோட்டு, வரையகத் துறலாற் கயிலையே போன்
றும் வயங்குமான் மணிமதிட் காழி. (ஏ)

வண்டுழத் திறந்த கமலமண் டபத்து வானமன் மலர்தலை யுலகம்,
பண்டுகைம் மலர்தூய்ப் பழிச்சிய வாற்றுற் படைத்திடற் களித்ததும்
பன்னீர், மொண்டுகொண் டணைந்து கொண்டலாட் டயரு முரிதிரைக்
கடலெழுஉங் கடைநாள், மண்டுபொற் றேணி யுருக்கொடு குடிலை
வலியடைந் ததுவுமிந் நகரே. (ஐ)

நீடுநல் லறங்க ளிழைத்துளோர் கயிலை நேர்வரீ தருமறை நெறித்
தே, தேடுமவ் வறத்துக் குறுபத மளிப்பான் சிவனலாற் றேவரில்
யாரே, நாடுமச் சிவனே மூவுரு வாகி நற்றலம் பற்றின னென்றல்,
கூடுமோ விதற்கு வேறொரு தலத்தைக் குவலயத் திணையெனக்
குறித்தல். (ஒ)

உறுவரி லுயர்ந்த பராசரன் மேனு ளொண்மலர்க் கிழவனை மறை
நூல், நெறிபிறழ் கலியின் வலிதவ வலிக்கு நெடுந்தல நிகழ்த்துகென்
றிரப்ப, அறிவகே ளெம்மான் கயிலையி லுமைக்கீ தறைவுழி யறிந்த
யான் றெளியப், பெறுதல மெதையுங் காழியு மிருபாற் பிறங்கிரு தட்
டினும் வைத்தே. (ஓ)

துலையிடை நிறுப்ப விந்நகர்க் கவைதாந் தொகுபதி ஞறிலோர் கூறு, நிலைபெறு தொழிய வெவற்றினு மோங்கி நிலவிய தடிபுக நெறித் தாய்த், தலைமையெய் தியது சந்தத மென்போற் சதுமுக ரளவிலார் பணிந்த, துலைவறு தவத்தோய் நீயவ ணேகி னுன்னிய வெய்துமா லொருங்கே. (கூ)

எனவருட் பனுவ லாட்டிதன் கேள்வ னியம்பலு மனையவன் விடையால், மனவலி கடந்த பராசரன் முறைஞ்ஞள் வந்தரும் பூசனை புரிந்து, சினவிடைப் பாகன் றிருவருள் பெறலாற் றிகழ்ந்தகேத் திர வர மெனும்பேர், பனவரைத் தெடுப்பக் கொடுங்கலி வலியைப் படுத் திமீ துயர்ந்ததிப் பதியே. (கo)

ஆதிதெய் விகமே யாதிமுத் துயர வடவியை வடவைபோற் காய்வ, நீதிடை வதிவோ ரருந்தவந் தானம் யாகநற் பலன்களெய் துவரால், ஆதலி னதனை யணைகலார் மேலா மரும்பத மணைந்திடா ரணைந்தார், போதரு மறிவா லிழைத்தவல் வினைகள் போகுமா லிரவி மூன் பனிபோல். (கக)

விரதமெண் ணிலவு மெண்ணிரு தான விகற்பமும் வேள்விகள் பலவும், சரதமா மறைநூல் பயிற்சியு நாளுந் தவரின்முத் தழலுஞற் றுதலும், பரவுமட் டாங்க யோகமு மளிக்கும் பலனெலா மரியுரி போர்த்த, வரதனென் றுரைகா லுன்னினர் பலத்தை மானுமோ வணு வள வேனும். (கஉ)

சேயமென் கமலத் தயன்முனங் கொணர்ந்த தெய்வதா ருவை முறை வணங்கித், தூயமென் றளிரை முடித்துளோ ரிடருந் தொட ருறு பிளிகளு முடிப்பார், ஆயதன் னடிமண் ணுதன்மிசை யணிவா ரரும்பெறன் முத்திவீ டணிவார், பாயதண் ணிழற்கீ ழோர்மனுக் கணித்தோர் பலமனுச் சித்திநண் ணுவரால். (கங)

வீதியி னங்கப் பிரதக்கணம் புரிந்தோர் விமலனு டளவளா யிருப்பார், நீதியின் வணங்கி வணங்கியே நடந்து நிகழ்வல மொன் றுரு கோடி, போதது வலமென் றுரைபடி நடக்கிற் புகன்மக மாயிர கோடி, மாதியல் பாகற் குவப்புறு பூசை வலஞ்செய லன்றிவே றுளதோ. (கச)

கற்பகாண் முடிவி னரும்புறு மணம்போற் கலந்துமென் போதலர் மணம்போல், உற்பவ நாளி லோங்கியுங் காழி யுயர்சிவன் விளங்குமன் னவன்பால், பொற்புறு மாய ஞதிமன் னுயிர்கள் புக்கொடுங் குறுமுய ரிலிங்கத், தற்பமின் மாயை யொடுங்குமுற் பவத்தி னடங்கிய முறையு ரைத் திடுமால். (கரு)

ஏந்தெழிற் காழி மான்மிய மனைத்து மியம்புறி லாயிர முகத்துப், பாந்தள்வேந் தனுக்கு மெண்ணில்பல் லுகங்கள் பகரினு முலப்புறு

வதனுல், பூந்துண ரிதழிச் சடிலவா னவனே புலனுறத் தெரிகுவ னல்லால், ஆந்தனி மறையுந் தெரிவுரு தந்தோ வன்னது சத்திய மாமால். (ககூ)

பிறந்துளோர்க் கருளு முத்தியை யாரூர் பிணக்குறு நிணப்பொதி யாக்கை, துறந்துளோர்க் கருளு முத்தியைக் காசி துணைவிழி களிப்புறக் கண்டு, சிறந்துளோர்க் கருளு முத்தியைப் புலியூர் சேரவும் பிறந் துளோ ரிறந்தோர், அறந்தகக் கண்டோ ரனைவர்க்கு முத்தி யருளுமிங் ஙகர்வியப் பஃதே. (கஎ)

கல்லியன் னவருங் கண்படை கொள்ளிற் கணமரைக் கணமவண் வதியின், தொல்லிவல் வினைகள் பரிதிமுன் பனிபோற் ரெலைவுபட் டிரியல்போங் காழி, எல்லிகண் டவரு மெல்லிகண் டறியா விறையி ருட் கடல்படிந் திடலால், ஒல்லியப் பதிபுக் கவர்களே கிளையோ டோங் கலங் கயிலைபுக் குறைவார். (கஅ)

தோற்றமு மீறு மிகந்துயிர்க் குயிராய்த் துணையிலி யாம்பரம் பொருளே, சாற்றரு மிலிங்க மனமெனக் குரவன் வாக்கெனச் சங்கம முடலென், ரூற்றுமுக் கரண மிவைகொடு மூல மலமுதன் மூன்றையு மகற்றி, ஏற்றருங் கதியுந் தரும்பொருட் டன்றே வினிதுவீற் றிருந்ததிங் ஙகரில் (ககூ)

ஆதலாற் றலங்கட் கதிகமா கியதிவ் வணிங்க ராய்பரஞ் சுடரெங், கோதிலான் முலையே யிலிங்கநல் லுறுப்பே குரவன்மா வதனமன் பர் கடளென், ரோதலா லிந்தத் தலத்தின்வா ழன்பர்க் கூழ்முறை பணிபுரிந் துள்ளோர், சீதவான் றிங்கட் கொழுந்தணி வேணிச் செம்மலா குவரிது திண்ணம். (உ0)

ஒல்கலில் பசும்புன் முலையகக் திடினு முடன்மிசை யுறுத்தினு நறும்பால், பில்குமோ துளியு மிலிங்கமுங் குருவும் பேணினர் பெரும் பய னனைத்தால், மெல்கிய வறுகை முகத்தருத் துவரேன் மேனியுங் குளிர்ந்துபான் முலைக்கண், மல்குமா லதனு விருபொருட் கூங்கே வதி குவான் சங்கம வடுகன். (உக)

மனமெனு மிலிங்கத் தானைவ மாயும் வாக்கெனுங் குருவின்மா யைகள்போம், துணிவின்மெய் யெனுஞ்சங் கமத்தினுல் வினைபோஞ் சொல்லிலொன் ரொன்றினுற் ரெலையா, நினைவிலோர் கருவி யோர்கரு வியதாய் நிகழ்ந்திடா மும்மலப் பரப்பை, வினைவலி தன்னை யித்தலம் போல மேதினிக் தலங்கள்போக் கறியா. (உஉ)

அல்லியிண் டையின்கா லிறினுநூ லிறுவ தருமைபோல் யாக்கை யிற் ரூலும், புல்லிய பல்லூ ழிருவினை போகா போக்கறச் சமநிலை பெறு நாள், ஒல்லியல் கடலைப் பிணைகொடு கடந்தாங் குறுகரை காண்டல் போற் கண்டால், மல்லியன் ஞானம் வரும்பர கதியும் வருமது மன்னு யிர்க் கரிதால். (உங)

மூவகை மலமு மூவகை வடிவ முருக்குமித் திருக்கிளர் தலத்தை, ஏவரே நயந்தா ரேனுமேல் வீட்டை யெளிமையி னெய்துவர் யாண்டும், மாவளந் தருநீர்க் குய்யகா சியுநீண் மத்திய சிதம்பரந் தானும், ஆவதிங் ஙகரா லாதலி னிதன்சீ ரறிகுநர் யாரருந் தவத்தீர். (உச)

அலம்வரு மிடற்றன் காழியைத் துதித்தா லலமரு மாந்தைநோ யகல்வார், வலம்வரி னெண்பா னீரிரண் டிலக்க வலம்வரு பிறவியு மாயும், பலம்வரப் பணிந்தால் விண்ணில்வா னவர்தம் பலமவர் தமக் குறு முடிக்கீழ்த், தலமுறத் தொழுதா ராணைபூண் டுரேழ் தலம்வரு மவரடித் தலத்தே. (உரு)

சாணளை வாடை யொருவர்பா லிந்தத் தலத்துற வளித்தவர் தகைசால், பாணளி மிழற்றும் பசுந்துழா யலங்கற் பண்ணவன் பதவியைப் பெறுவார், தோணியா ளுடையான் றிருமுன மொருகாற் றெழுதெழிற் சஞ்சித மாதி, ஏணிலா வினப்பே ராழியை நீந்தி யிறையருட் கரையில் வீற் றிருப்பார். (உசு)

தேசுறு திங்கட் டிருநுத லழகி திருநிலை யழகிதன் றிருமூன், மாசறு பிரம தடத்துவெண் டிரைக்கா லீர்ந்துளி மன்பதை புடன் மேல், வீசுற விமல ராகரஞ் செழுத்தை விரிப்பரேற் காசியே முதலா, ஏசறு தலத்தி லிட்டிகள் பலவு மிழைத்தபே றெளிதினெய் திடு வார். (உஎ)

இகலறு குணத்தாற் கெளிவரும் பிரம லிங்கநே ரிலிங்கமு மிருடீர், அகிலதே சிகனெம் பெரியநா யகன்போ லருள்பழுத் தளிந்ததே சிக ணும், பகவனுர் முடைவெண் டலைபுனை தண்ட பாணிநேர் சங்கமப் பொருளும், புகலில்வே றில்லை மட்புலத் தினிலும் புலவர்சேர் விட் புலத் திலுமே. (உஅ)

வேறு.

பணிப்பெ ருந்துயில் வானவ னுதியர் பசுப்புலான் முடைநாறும் கணிச்சி யெம்பிரா னருள்வழி நான்முகன் கண்டவிவ் வண்டத்துள் இணைக்கு மேழ்பெருந் தீவிடை நாவலந் தீவமற் றிதனுள்ளே அணிப்பொ லங்கிரி யெண்பதிற் றிரிரண் டாயிர நிவப்பிற்றாய். (உக)

முடிப்ப ரப்புமுப் பானிரண் டாயிர முற்றியன் னதிற்பாதி அடிப்ப ரப்புநீ இ யன்னவே ளளவதா யவிரிரு சுடர்சூழ வடித்த நீலமுஞ் சிருங்கமும் விடையுமா வரைகளுத் தரங்காணப் படிக்குண் மந்தரங் கிழக்குற விபுலமாம் பருப்பத மேற்காக. (ஈ ஏ)

இமைய மால்வரை நிடதமால் வரையொடு மேமகூ டப்பேரான் அமைபு மால்வரை தென்றிசை தோன்றவிவ் வகவிதழ் பலபூத்துச் சமைபு மேருவாம் பொகுட்டொடு நீடிரை தவழுநீ னிறவேலை அமைத ருந்தடத் தலர்ந்தசெந் தாமரை யாகிய தணிவாய்ந்த. (ஈக)

பொன்ப ராவுமிந் நாவலந் தீவிடைப் புகன்றயோ சனையெல்லை
ஒன்ப தாயிரம் பரதகண் டத்துமே லும்பர்மா லயனுதி
அன்ப ராலமைத் தவுமுனைத் தெழுந்தது மளவிலாத் தானங்கொண்
டென்ப ராபர னிமயமுன் மலயமட் டிருந்தன னிவைதம்மில். (ஈஉ)

கறைய கன்றவிக் கருமபூ மியினிடைக் காசியே கயையேசீர்
உறைபிர யாகையே தில்லையே குடந்தையே யோங்குதென் னரூரே
மறைப ழிச்சிய கானமே திருவிடை மருதமே யெனவெட்டா
இறைத ருந்தல மிவைகளே யதிகமென் றியம்புவ பலநூல்கள். (ஈஈ)

ஒண்டு நாலிரு தலத்தினு முயர்ந்ததா லித்தல மெவற்றென்றுல்
சேண்ட யங்குநீர் புதைத்தபே ரூழியிற் றிரிபிலா ததனனும்
பூண்ட வைதிக சைவநாட் டியதமிழ்ப் புதல்வரைப் பெறலானும்
ஆண்ட நாயகன் குருமுதன் முப்பொரு ளாய்வதி தரலானும். (ஈச)

ஐங்கு ரோசமட் டெல்லையின் வைகிய வறிவுள்ளோ ரறிவில்லோர்
தங்கு கிற்பன பறப்பன திரிவன தவழ்வன கிடந்தூர்வ
டங்கு புற்கொடி யாவையு மயற்புலம் வந்திவ ணிறந்தோரும்
பொங்கு கூற்றடுந் திருவடி நீழலிற் புகுதல்சத் தியமாமால். (ஈடு)

வருப தங்கனை மலைமகன் றந்தையால் வானவர்க் கிறைமாட்சி
ஒருப தம்பெற வுன்பதம் புகலெனு மொலியறு பதம்பாடிப்
பொருப தந்திகழ் கடம்பணி தடம்புயன் புகலிநா யகன்காட்சி
தருப தம்பணிந் தைம்பதம் பெற்றனன் றற்பதம் பெறவிண்ணோர். ()

துகிரு லாஞ்சடை யலமரப் பணித்தொடை துயல்வரக் குழையாட
வகிரு லாம்பிறை வயங்கவின் னருணகை வதனமண் டலம்பூப்ப
நகிலி லங்கொடி காண்வர வாரண னரைமுது தலைகொய்த
உகிரு லாங்கரத் தொருவனிப் பதியிலன் பொடுங்குனித் தனன்மேனுள்.()

குன்றி ருஞ்சிறை யொருங்குற வரிந்தவாட் குலிசவே லிறைமுன்னுள்
வென்றி யெண்டிசைத் தலைவரு மந்நகர் விடைவலா னடிபோற்றி
மன்ற வோரொரு கடவுளுந் தடமுமவ் வயினிறீஇ வழிபாட்டால்
என்று மேதக விருந்தனர் வரன்முறை யெண்ணில்விண் ணவரோடும்.()

வாணி லாமணி யிழைத்தபொற் குவட்டினில் வதிந்தரு ளியதண்ட
பாணி முன்னமர் பீடமேன் மலர்கடூஉப் பார்க்கவன் றினத்தேத்தி
ஏணி லாவிய புழுகணிந் தள்ளிரு ளிடத்தவன் றிருத்தாளைப்
பேணி னுர்க்கொரு வறுமைவல் வினையெழு பிறப்பினுந் தொடராதால்.

இயக்கர் கின்னரர் சித்தர்வித் தியாதர ரிமையவ ருரகேசர்
பயக்கு மைங்குரோ சத்தள வெல்லையும் பலவகை யிலிங்கங்கள்
நயக்கு மானிறீஇ வழிபட விருத்தலி னகரமிங் கிதைமேலோர்
மயக்க மில்லிலிங் காடவி யென்றலான் மணலுமவ் வடிவாமால். (சஂ)

துஞ்சல் போயதெள் ளமுதமுண் டேழிசைத் துழனிசூழ் தருநீழற்
பஞ்சி மெல்லடிச் சசிமுலை முயங்கலாற் பணைப்புயத் தணைதூளை
நெஞ்சி னல்லவ ருருவருத் துறுப்பிலு னிகழ்வலம் புரிந்தந்தோ
கஞ்ச மாதுறை யிந்நகர் வீதியிற் கலந்ததூ ளணிகிற்பார். (சக)

கண்ணை கன்றசேட் புலத்தினிற் சிகரிகள் கண்ணுறக் காங்கூப்பித்
தெண்ணி றும்புனல் படிந்துநீ றணிந்துருத் திரமணித் தொடைவேய்ந்து
புண்ணி யப்பொலன் சினகரம் புக்குமுப் பொருளையுந் தொழப்பெற்றூர்
அண்ணல் லஞ்சர ணிழலிடை யொன்றியொன் றுகிலை யடைவாரே. (சஉ)

விழுது விட்டமென் புரிசடை யந்தணன் வியன்மணித் தடங்கோயில்
பழுது போக்குவோர் புதுக்குவோ ரிட்டிகை பரப்புவோர் புல்லாதி
உழுது மாற்றுவோர் மேனிமா சகலுமா துலகுபூத் தருளன்னை
தொழுத குந்திரு வுத்தர் யங்கொடு துலக்கநன் மகவாவார். (சங)

அரவ வேணியன் றிருமுடித் தலத்திலா னைந்தமு தொருங்காட்டிற்
பரன ருட்கடல் படிந்தினி தாடுவார் பதியிதிற் சிவகாமத்
திரவில் யாமகான் கெல்லியும் வரன்முறை யெந்தைதாள் பணிந்தேத்தி
விரவு வார்க்கலா தயலவர்க் கிடங்கொலோ மேலரும் பெறல்வீடு. (சச)

எண்ணி லாததொல் லிலிங்கமும் பெயருநல் லெழிற்றடங் களும்வாய்ந்து
நண்ணி யோங்குவ விந்நக ரிவற்றின்முன் னுன்குபுண் ணியமூர்த்தி
தண்ணி லாவிய தடங்கண்முன் னுன்கபி தானமுங் நான்காக
உண்ணி லாவுமா லிவற்றிலும் பூதெலா முரைசெயக் கரையின்றே.(சடு)

தோணி யம்புரத் தொடுபிர மாபுரந் தொல்லியற் செழுங்காழி
தாணி வெங்குரு புகலிவண் சிரபுரஞ் சண்பைமா நகர்கொச்சை
வேணு நற்புரங் கழுமலம் புறவமோர் மிக்கபூ தராயென்றே
காணு மிப்பெய ராதிரண் டையுமுளங் கருதுவர் கதிசேர்வார். (சஉ)

நனியு ரைப்பதென் னிழிகுலத் தழிபுலா ணுறுமென் கொடிமென்றோள்
முனிமு யக்குற வாங்கவன் சிறுமையை முழுவது மகன்றோடத்
துனிவ கற்றிமூ வறுபுரா ணங்களுந் தொகைவகை விரியாகத்
தனியெ னக்கருள் குருவருட் குருவெனத் தந்ததித் தலமென்றுல்.(சள)

இன்னு மான்மிய மெண்ணில கண்ணிய திசைத்தன மிருடீரப்
பொன்னெ முக்கிய புரிசடை மாதவப் பொருப்புறழ் முனிவீர்காள்
கன்னி மூதெயி லிந்நகர்ப் பெயரியற் காரண மீராறில்
முன்ன தாகிய தோணியம் புரிவரன் முறையினை யறைகிற்பாம். (சஅ)

[க-ஆவது. தலவிசிட்டவத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் உஎடு.)

——:o:——

உ-ஆவது. தோணிபுரமான வத்தியாயம்.

என்ன வேணிமௌ லிச்சவுன காதிமுனிவர்க்
கன்ன வூர்திங்க ராயமுது சூதமுனிவன்
கன்ன லஞ்சுவை யெனக்கடவு ளாரமுதெனச்
சொன்ன காதையத னிற்சிறி து சொல்லுவனமோ. (க)

வெம்பு மாயைதிரி வெவ்வினை மணிக்கயிறுசூழ்
பம்ப ரம்பொர வுழன்றலை படாதுபரிவால்
வம்ப ராமுலை மதிச்சடில மாமுனிவனே
சைம்பெ ருந்தொழி லியற்றுவ னுயிர்க்கருளினுல். (உ)

மறைவ லாளனில் வகுத்துநெடு மாயனிலலித்
திறையு ருத்திரனி லீறுபுரி வித்துவினையின்
பொறைம கேசனின் மறைத்துநிறை போதமுதல்வன்
சிறைய யிர்க்கருளு மைவகைய செய்கையிவையே. (ங)

மாசி லிவ்விறைவ னுணைவழி வைகுவனவாம்
ஆசி லண்டநிரை யெண்ணிலவை கட்கிடனதாய்
எசி லாவலியி லேழ்கடலை யுந்திவலிபோல்
வீசு மூலநெடு வேலியஃ தொன்றுளதரோ. (ச)

வேலை யன்னதில் விராட்புருடன் மெய்ம்மயிர்தொறும்
பாலெ லாமுது பழம்பொதி யுதும்பரமெனச்
சால வண்டநிரை தங்கநடு நின்றனனிவற்
றேறு மண்டமித னெல்லையை விளம்புவனியான். (ஞ)

தோமி லாவுலக மீரெழுமை தொக்கவிதனுள்
ஏம மால்வரை யிலங்குமித ணைத்தழுவுமால்
சேம நாவலுறு தீவுமது சேருவரியும்
தாமி யோசனை தனித்தனி யிலக்கவிரிவாய். (ட)

அறைபு மவ்விய விரண்டெனு மிலக்கமகலத்
திறலி யென்றமுது தீவுமய லிக்குவடிசா
றுறை தடங்கடலு மோங்குமித னுக்கயலிலே
சிறைகு லாமிலகு சேருமொரு தீவுளதால். (ண)

நாலெ னுந்துணை யிலக்கமதை நண்ணுமதுவார்
வேலை யும்புகலி னத்துணை விளங்குமயலே
சால்பு நீள்குசை தயங்குமொரு தீவமருகே
ஏலு நெய்க்கடலு மெட்டள விலக்கமுறையே. (அ)

அதனி ரட்டிகிர வுஞ்சமடு தீவுமதுசூழ்
கதியு டைக்கடலு மத்துணை தயங்குமதன்மேல்
முதிய சாகமுள தீவுமலி மோதுநிறைபால்
உததி யுந்துணை தனித்தனி யிரட்டியுறுமே. (கூ)

மண்ட லம்புதை யிருட்படலம் வாரிதுகரும்
சண்ட பானுவுத யந்தருவ துந்தனிவலங்
கொண்டு மேல்கடல் குளிப்பது மதற்குளெனவே
பண்டை நான்மறை பயின்றவர் பகர்ந்தனரோ. (கo)

மற்ற தற்கயல் வயங்குவது புட்கரமெனச்
சொற்ற தீவுமது சூழ்வரு புனற்புணரியும்
முற்றும் யோசனைகண் முன்னதி னிரட்டியனவாம்
பெற்ற யோசனை யிலக்கவகை பேசியிடினே. (கக)

வேறு.

அயலிலீ ரைந்து கோடி யகன்றபொற் பூமி யப்பால்
உயர்பதி னுயிரத்தி யோசனை யாழி வெற்பாம்
பெயர்வரு மயலி னீண்ட பெரும்புறக் கடலி னெல்லை
இயலுமோர் கோடி மேலு மிருபத்தே ழிலக்க மப்பால். (கஉ)

மய்யாரு மிருளு லோகம் வகுத்தயோ சனைகள் கோடி
அய்யேழி னெடுபத் தொன்பா னிலக்கநான் சயுத மாமால்
எய்யாத வண்டப் பித்திக் கணங்கோடி யெல்லை யென்ப
மெய்யார்யோ சனைக ளின்ன விரியினித் தொகையுஞ் சொல்வாம். (கங)

வளமலி யம்பொன் மேரு மத்திதொட் டண்டப் பித்தி
அளவும்யோ சனைக டேரி னைம்பது கோடி யாக
விளைதரு கிழக்கி னெல்லை விரித்தன மேனி மூன்று
தளர்வரு திசையு மிவ்வா றகன்றன சாற்றுங் காலே. (கச)

தெரிவுறு வகல நூறு கோடியோ சனைசெ றிந்த
விரிபுவிக் குக்கீழ் தொட்டு மேன்மட்டு நூறுகோடி
துரிசறு முயர்வா மண்ட மீங்கிதைத் தொலையா வெள்ளப்
புரிபுறக் கடல்பாய்ந் தெற்றிப் புகுந்ததோ ரூழி நாளில். (கரு)

அலையின மலையிற் பொங்கி யண்டகோ ளகையை முட்டி
நிலைகுலைத் தடுக்கை யெல்லா நெரிகெரித் தார்ப்பி னேங்கித்
தலைபடுங் சுழியா லெட்டுத் தடந்திசை யொடுங்க வோரெண்
கொலைமதக் களிறுஞ் சாயக் குமைத்தது முதுநீர்க் கொள்ளை. (கசு)

ஆழிமால் வரையு மோரெட் டாகிய வரையுஞ் செம்பொன்
ஊழிமால் வரையு மேல்கீ ழுயரிய வரையு மாநீர்ப்
பாழிவெண் டிரைகள் பாயப் பொடிந்தன படிந்த பல்வே
றேழிரண் டுலகில் வாழுவ் வரையுமவ் வரையின் மாதோ. (களி)

நாளரு வலிசான் மோட்டு நாலிரு திசையி னின்ற
கோளரா வினமு நாளுங் கோளும்விண் ணேருஞ் விண்ணில்
வாளருக் குலிச ஞதி மாதிரத் தவருஞ் செம்பொற்
றூளருத் தருவும் வேறு சுடர்களு மிரிந்த மாதோ. (கஅ)

பேர்வன பறப்ப நிற்ப பிறங்கிரு ணிரயந் தம்மில்
ஆர்வன நீரில் வாழ்வ தத்துவ வரவ மாதி
ஊர்வன தவழ்வ வெவ்வே றுலவிலா மனித ராகிச்
சார்தரு முயிர்க ளெல்லாஞ் சாய்ந்தன தேய்ந்த வன்றே. (ககூ)

.கமலநா ரணனெ டுங்குங் கடையினு முதல்வ னுவான்
நிமலனே யன்றி வேறு நிலையுநர் யாரே யார்க்கும்
தமரசா கரநீர் மோதத் தம்முயிர் தேம்பி னுரை
அமரரென் றுரைப்பா ரன்னேர் பெற்றியை யறியா ரன்றே. (உ0)

சொல்விரி பொருள்க டாமெத் துணையவத் துணைய வெல்லாம்
வல்விரைந் தழிய வாங்கண் மன்னுயி ரீட்டம் யாவும்
மெல்லிய மான மாயை யிடத்தவா யொடுங்க லோடும்
அல்விர வியதா லெங்கு மாழிநீர் பரக்க மாதோ. (உக)

மின்கிளர்ந் ததனை யாங்கே விழுங்குறு மேக மென்ன
முன்குறித் தண்டந் தொக்க பொருளெலா முரிந்து மாயை
தன்கணே யொடுங்கிப் பன்னுட் டகைந்தன தகைத லோடும்
வன்கறை மிடற்றுத் திங்கள் வகிரணி வரத னன்பால். (உஉ)

நூக்கிய வொருவ னுட்ட நுடங்குபா வையினைச் சின்னுட்
போக்கிமற் றெடுப்பான் போன்று புவனகோ டிகளை முற்றும்
தாக்கிய தலிவன் றனே தன்னருள் வலியான் முன்போல்
ஆக்கிய துணிந்தா னெல்லா மளித்தழித் தாக்க வல்லான். (உங)

நஞ்சுமி ழரகப் பூணு நகைநிலாக் கொழுந்தும் வாசப்
பைஞ்சுட ரிதழித் தாரும் பாய்புலி யதளு மின்றி
மஞ்சுறழ் கருமென் கூந்தன் மாதொடு மருவி யெண்ணெண்
துஞ்சருங் கலிக ளென்னுந் துலங்குபொற் கலிக டாங்கி. (உச)

ப்ருமையாய்ச் சிறுமை யாகிப் பதங்களாய் வண்ண மைந்தாய்
நிருமல மாய்மூத் தேவாய் நிகிலமாய்க் குணமோர் மூன்றாய்
இருமையா யெழுத்தாய் நாத வெல்லையாய் வேத மாதி
பெருமைசா லொலியாய் நின்ற பிரணவத் தோணி யாக்கி. (உரு)

கரியகா ரணனு லந்தண் கமலவா கனனு லேனை
உரியநான் மறையான் மிக்கா ருளத்தினு லளவை யாலும்
தெரிவிலா வொளியாய் நின்ற சின்மயன் றனே தெய்வப்
பெரியகா யகனென் றேதும் பேர்தனைந் துருவ மெய்த. (உசு)

ஏறினு னென்ப வெம்மா னெழில்கனிந் தொழுகு மேனி
தேறின விமல மாய திவளொளிக் கற்றை சுற்ற
மாறின விருள்கண் மேனுள் மலிமக ளழுத மார்ந்தி
ஊறிய ஞானச் சேயா லொதுங்கம ணிருட்டுப் போன்றே. (உஎ)

பெய்யுநீர்த் திரைசு ருட்டும் பிரளய வத்தி நீத்தத்
தையனுண் மலர்த்தா ளுன்றி யருள்கனிந் தொழுக வூர்ந்தான்
பொய்யிலா மறையி னீறும் பொருப்பிறை மடந்தை கண்ணும்
மையிலா வுரிமைத் தொண்டர் மனமுமே யனைய தோணி. (உஅ)

தோட்டமுண் டகத்துப் புத்தே டொழில்புரி யண்ட கூடம்
பாட்டகன் றிரைநீர்ப் பவ்வப் பாயலி யலைப்ப வெற்றுண்
டீட்டமாம் பொருள்கள் யாவு மிறுதிகண் டிரங்கு முந்நீர்
கோட்டமே லுர்ந்தா னன்பர் குணத்துமே லுருங் கோமான். (உக)

அருமைசா லறத்துக் கென்று மழிவிலை யென்ற மேலோர்
பொருண்மையை விளக்கி யண்டம் புறக்கடன் மடுத்த ஞான்றும்
இருமைசா லுயிர்கள் பண்ணு ளிழைத்திக லெறிந்த தெய்வத்
தருமமே வடிவாய் நின்ற தலத்தர சிதனைக் கண்டான். (ஙo)

காண்டலு முவகை தூங்கிக் கரமல ரசைத்து நோக்கா
நீண்டபே ரண்ட முட்டி நிமிர்பிர ளயத்துஞ் செவ்வே
பூண்டதோ ரிறும்பூ துன்னிப் புவனகோ டிகளி லீதே
எண்டகு மூலா தார கேத்திர மென்றுன் வள்ளல். (ஙக)

காலமீ தாகக் கோடி கதிர்புரை யுருவத் தாதி
மூலகா ரணனே மாநீர் முகட்டிடைக் கண்டான் மேலைக்
கோலமா திரமுங் கோட்டுக் கோட்சுரு வேறுஞ் சோதிப்
பாலதாக் கரளத் தாரும் படைத்துள வருணப் புத்தேள். (ஙஉ)

ஓண்மல ரடிச்செஞ் சோதி யுண்மல ரென்ன வாய்ந்த
கண்மலர் பதித்து நீண்ட கரமலர் குவித்து வாயால்
பண்மலர் புகழ்ச்சி யோதிப் பனிம்லர்த் தாண்முன் வீழ்ந்தான்
விண்மல ருடுமீ னன்ன வெண்மணி முத்த மாரி. (ஙங)

சுருக்கமின் மூளரி யன்ன துணையடி பணிந்து போற்றத்
திருக்கிளர் கடைக்க ணேக்காற் றெண்டிரைக் கடல்வாழ் வானை
அருட்கட லாழவைத்தா னகந்தைவே ரரிந்து ளாரைக்
கருக்கடல் வீழா தேற்றுங் கருணையங் கடலான் றனே. (ஙச)

கணத்திடை யெயின்மூன் றட்ட கண்ணுதற் சாமி பின்னர்க்
குணிப்பிலா வண்டஞ் சிந்துங் கொள்ளநீர் வெள்ளஞ் சூழ
மணத்தபூங் குழலா ளோடும் வன்பிறத் தம்பி யூடே
தணிப்பிலா தமர்ந்தா னின்ன தலத்திடை யளப்பில் காலம். (ஙஞ)

விரிதிசை புரப்பா னெட்டு வியன்கணத் தலிவர்க் கேவிக்
கிரிபுரை தண்ட மேந்திக் கேத்திர பால ரூதி
புரிசடை முதல்வர் சூழ்ந்து புறந்தரும் தோணி மேற்கொண்
டரில்படா துலகங் காக்கு மன்னையோ டிருந்தா னென்தை. (ஈக)

முழுமலர் முளரிப் புத்தேண் முடிவுநாள் காறு மாநீர்
அழுவமும் றிருந்தா னுன்ன வாசற வறந்த தன்னன்
விழியன லுண்ட தோகாள் வேற்றுமை குடித்த தேயோ
மழுவலான் விளையாட் டென்னே வரம்புரு வாரி நீத்தம். (ஈஎ)

எணிலாத் தெய்வ தங்க ளிறினுமோ நிறுதி யின்றிப்
பேணிவீற் றிருச்சுந் தெய்வப் பெரியநா யகனு மெந்தை
தோணிமேல் வைகு மாற்றுற் றுணியம் புரமீ தென்றே
காணிய விருந்த தின்னுங் காரணப் பேர்வே றுண்டால். (ஈஅ)

காமரு வருடை நள்ளி கலுதுலை யிரவி தோற்றம்
தேமலி சிலையிற் செங்கை சிவநிசி தெறுதே ளாரல்
ஆமெழு தினமு மேந்தைக் கணிநறும் புழுகு மன்னைக்
கேமுறு சாந்துஞ் சாற்றி னெவையவர்க் கரிய மாதோ. (ஈக)

பதனரு மணிவித் தென்றும் பயன்படு விளைவு குன்ரு
முதனிலம் புக்கா லென்ன முதுக்குறை வறிஞர் பேணும்
விதமலி விரதந் தானம் வேள்விகண் மனுக்கண் மற்றும்
இதமலிந் தொன்று கோடி யெனத்தரும் தலமீ தொன்றே. (சஅ)

மங்கலம் பொலியு மிந்தத் தலத்திலும் பதத்தை வாழ்த்தும்
அங்கவ ரன்ரு செந்தாட் டம்புய னிழலு மாழிப்
புங்கவ னிழலு மந்தண் பூந்தரு நிழலு மேவார்
திங்களங் கண்ணி யெம்மான் சேவடி நிழலொன் றல்லால். (சக)

[உ-ஆவது. தோணிபுரமான வத்தியாயம் முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் ஈகசூ.]

——:o:——

ங-ஆவது. பிரமபுரமான வத்தியாயம்.

பொங்காழி சுற்ற வொருதோணி பெற்ற புரமான்மி யத்தி னியல்போல்
எங்காதன் மிக்க பிரமா புரத்தி னியலுந் தெரித்த ருளென
அங்கா தரத்தி னுரவோர் வியப்ப வறவோ னுரைத்த முரையே
பங்கே ருகத்து முனிவன் பணிந்து பலனுண்ட காதை பகர்வாம் (க)

மங்கும் பிறப்பி னழியா தணுக்கள் வழிகண்டு முத்தி புகுவான்,
பொங்கும் படைப்பு முதலோர் தொழிற்செய் புரவென்ப தொன்று

டைமையால், எங்கும் புதைத்த புனல்வற்ற வண்ட மிசைவிக்க வெண்ணு மிறைவன், தங்கைந்து சத்தி களினன்பு வைத்து நெடு மாயை தந்து தகைவால். (உ)

நாதாதி தந்து நழுவாத மந்திர பதம்வன்ன நல்கி யதனின்
மீதே கலாதி நிலநீர சுத்த விரிதத்து வங்க ளுதவிப்
போதா விரட்டை விணசேத னங்கள் புருமாறு செய்து முறையே
கோதாடு மும்மை பெறுதேவர் மும்மை விணசெய்ய வென்று குறியா.()

குலநான் மறைக்கு முதலோண மிக்க குணராச தத்தின் வருவித்
தலமேறு சாத்து விதமா குணத்தி னடலாழி வெற்பை யருளி
வலமேறு கொற்ற மருவாண வெற்றி வளர்தா மதத்தி னுதவி
உலவா தமைத்தி நெறியா லளித்தி யொழியா தொழுத்தி யெனலும். (ச)

அணியம் புயத்து மலரோ னவர்க்கு ளடியே னமைக்க வடிகேள், துணியென் றதற்கோர் வலியில்லை யெந்தை துணையுண் டெனிற்சி றுமைசால், அணுவொன்று வெற்பி னுருவாகும் வெற்பு மணுவா மதற்க ருமையே, டணியென் கணிட்ட படிசெய் வலாதி பகவா வருட்க ணுளதேல். (ரு)

மற்றின்ன கூறு மறையோண யண்ணன் மகிழ்வெய்தி மாயை வழியில், பற்றின்றி யெங்கு நிறைவாய் நிறைந்த பரமொன்று நித்த மிடையே, உற்றுள்ள யாவு நிலையா வெனுநல் லுணர்வா லுணர்ந்த வொருநீ, முற்றும் படைக்க லுறுசத்தி யின்றி முடியா தனக்கு மதுவே. (சு)

அச்சத்தி தாணு மெனதேவ லின்றி யணையா தியாணு மடைவே
இச்சிக்கி லின்றி யணையே ணுளத்தி லெணையெய்து மாறு விணையைக்
குச்சித்து மூல மறையாக மஞ்சொல் குறியே மனுக்கள் வழியால்
நச்சிப் பராவு மவர்பா லிருப்ப ணுனென்ப தொன்று மறினே. (எ)

அம்மந் திரங்க ளெழுகோடி யாகு மவையிற் சிறந்து ளனவாம்
மெய்ம்மந் திரங்க ளொருநூறும் வேத விதியிற் சிறந்த வவையாம்
செம்மந் திரங்கள் பலவற் றிலாதி திருவைந் தெழுத் ததிகமால்
இம்மந் திரத்தின் வலிபெற்றி சத்தி யெவையும் படைத்தி யெளிதே. ()

நந்தா மலிந்த மனுவைம் பதத்தி னடைபெற் றியங்கு மவைதாம்
ஐந்தா வினங்கு பதிசத்தி யாவி யபிதான மாமல மெனு
ஐந்தா மெழுத்தின் முதலீ ரெழுத்து மதன்மே லெழுத்து மதன்மேல்
மூந்தா மெழுத்து மதன்மே லெழுத்து முறையே குறிக்கொண் மறையோய்.

மூதண்ட கோடி வகையிற் பிறத்தன் மூதண்ட கோடி வளர்தல்
பேதுண்டு சாய்தல் வழிகண் டணுக்கள் பிணியுண்ட மும்மை மலமும்
கோதுண்டு போக வறியா தறிந்த குணவாரி மூழ்கன் முதலா
ஓதிங்க ணைத்து மாமென் றிருத்தி யோரைந் தெழுத்தி னினைவே. (கo)

அம்போ ருகத்து முனிவன் பராவி யவைகூறு மண்ண லடியில், பைம்போது தூவி யடிநீழ னின்று பரநாத போற்றி யடல்சேர், வெம் போ தகத்தி னுரிதோ லசைத்த விடையூர்தி போற்றி யெனையாள், செம்போத போற்றி யருளாள போற்றி சிவபோற்றி யென்று தொழுதே த. (கசு)

அல்லைப் பொறுத்து மயலிற் குளிக்கு மளியேன் மனத்தை யுருகாக் கல்லைக் கரைத்த மொழியைப் பணித்த கனிவாய போற்றி யிமையத் தொல்லைப் பொருப்பு வில்விட் டரண்க டுகளாய் விளைத்து மடியான் வில்லிட் டதற்கு வடுவிட்ட சென்னி விறல்வாளி போற்றி யெனவே. ()

பலகா லெழுந்து பலகால் விழுந்து பதமே லிறைஞ்சி யருளால் உலகாதி யுய்ய வெனையுய்ய ஞான வொளியாய் நிறைந்த ருளுநின் மலர்வாய் திறந்த மனுவான தொன்றை வருமா றிசங்கி யருளென் றலசோன் விளம்ப விளமூரல் கொண்ட வமுதான னன்க ருணையால். ()

கொய்யா தலர்ந்த வனசங் குவிந்து குமுதம் புதைத்த வியல்போல் கய்யான் மணத்த கனிவாய் புதைத்த கமலால யன்செ வியினில் செய்யா மறைக்கு முதலாக நின்ற திருவைந் தெழுத்து மனுவைப் பொய்யார் பிறப்பி னலையைக் கடத்து புணையைப் புகன்ற ருளியே. (கச)

உன்போ லநேகர் தலமீ திறைஞ்சி யொளிபெற்ற மூல வருவில் முன்பூசை செய்து தடமொன்று கண்டு முழுமுத்தி பெற்ற முறையே நின்பூசை செய்து வலியும் படைத்து நிகிலம் படைத்தி டுதிமீ நின்போத மென்று நினையேன் மறந்து மென்போத மென்று நினைவாய். ()

குணராச தத்தி னிலைநிற்றி வேறு குணமற் றிருத்தி யருளும் துணையேறு சத்தி யிதனூ டெழுந்த சுடரா லடைந்தி டுதிமேல் மணிநூல் கிடக்கு மருமா வனக்கு வகையா யுளுக்கு வரைநாள் அணியேறு கற்ப முறுநா ளதற்கு மளவான தைத்தெ ரிதியால். (கசு)

வேறு.

இயற்கை மாந்தர் குறிப்பின்றி யிமைக்கு மிமையீ ரொன்பதுறின் அயிர்ப்பில் சாட்டை யதுமுப்பா னமையிற் கலியாங் கலிமுப்பான் பெயர்ச்சி கணமூந் நான்குகணம் பேரின் முகுர்த்த மதுமுப்பான் மயக்கி லொருநா ளோம்மூன்றுய் வருநாள் பக்க மறைவல்லோய். (கஎ)

பக்க மிரண்டு மொருமதியாம் பகரு மிரண்டு மதியிருது தக்க விருது மூன்றயனஞ் சாருந் தெற்கு வடக்குமெனப் புக்க வயன மிரவுபகல் புலவோர்க் கொருநாண் முந்நூற்றே டொக்க வறுப துறினண்டி தொருநூற் றின்விண் ணைவாபுள். (கஅ)

உம்ப ருகமீ தெழுபத்தொன் றுற்றுன் மனுவ தாமீரேழ் பம்பு மனுநாள் பகலாகப் பகுத்த நாளி லாண்டாக நம்பும் வருட மொருநூறு நண்ணி னுனது கற்பமெனச் செம்பொன் முளரித் திருமனையிற் செறிவா யென்றுன் பிறைசூடி. (ககூ)

அம்போ ருகத்து முனிவன் பராவி யவைகூறு மண்ண லடியில்,
பைம்போது தூவி யடிநீழ னின்று பரநாத போற்றி யடல்சேர், வெம்
போ தகத்தி னுரிதோ லசைத்த விடையூர்தி போற்றி யெனையாள்,
செம்போத போற்றி யருளாள போற்றி சிவபோற்றி யென்று
தொழுதே. (கசு)

அல்லைப் பொறுத்து மயலிற் குளிக்கு மளியேன் மனத்தை யுருகாக்
கல்லைக் கரைத்த மொழியைப் பணித்த கனிவாய போற்றி யிமையத்
தொல்லைப் பொருப்பு வில்லிட் டரண்க டுகளாய் வீளைத்து மடியான்
வில்லிட் டதற்கு வடுவிட்ட சென்னி விறல்வாளி போற்றி யெனவே. ()

பலகா லெழுந்து பலகால் விழுந்து பதமே லிறைஞ்சி யருளால்
உலகாதி யுய்ய வெனையுய்ய ஞான வொளியாய் நிறைந்த ருளுநின்
மலர்வாய் திறந்த மனுவான தொன்றை வருமா றியங்கி யருளென்
றலசோன் விளம்ப விளமூரல் கொண்ட வமுதான னன்க ருணையால். ()

கொய்யா தலர்ந்த வனசங் குவிந்து குமுதம் புதைத்த வியல்போல்
கய்யான் மணத்த கனிவாய் புதைத்த கமலால யன்செ வியினில்
செய்யா மறைக்கு முதலாக நின்ற திருவைந் தெழுத்து மனுவைப்
பொய்யார் பிறப்பி னலையைக் கடத்து புணையைப் புகன்ற ருளியே. (கச)

உன்போ லரிகர் தலமீ திறைஞ்சி யொளிபெற்ற மூல வுருவில்
முன்பூசை செய்து தடமொன்று கண்டு முழுமுத்தி பெற்ற முறையே
நின்பூசை செய்து வலியும் படைத்து நிகிலம் படைத்தி டுதிநீ
நின்போத மென்று நினையேன் மறந்து மென்போத மென்று நினைவாய். ()

குணராச தத்தி னிலைநிற்றி வேறு குணமற் றிருத்தி யருளும்
துணையேறு சத்தி யிதனூ டெழுந்த சுடரா லடைந்தி டுதிமேல்
மணிநூல் கிடக்கு மருமா வுனக்கு வகையா யுளுக்கு வரைகாள்
அணியேறு கற்ப முறுநா ளதற்கு மளவான தைத்தெ ரிதியால். (கசு)

வேறு.

இயற்கை மாந்தர் குறிப்பின்றி யிமைக்கு மிமையீ ரொன்பதுறின்
அயிர்ப்பில் சாட்டை யதுமுப்பா னமையிற் கலியாங் கலிமுப்பான்
பெயர்ச்சி கணமுந் நான்குகணம் பேரின் முகுர்த்த மதுமுப்பான்
மயக்கி லொருநா ளாம்மூன்றுய் வருநாள் பக்க மறைவல்லீரோ. (கஎ)

பக்க மிரண்டு மொருமதியாம் பகரு மிரண்டு மதியிருது
தக்க விருது மூன்றயனஞ் சாருந் தெற்கு வடக்குமெனப்
புக்க வயன மிரவுபகல் புலவோர்க் கொருநாண் முந்நூற்றே
டொக்க வறுப துறினுண்டீ தொருநூற் றின்விண் ணவராயுள். (கஅ)

உம்ப ருகமீ தெழுபத்தொன் றுற்றுன் மனுவ தாமீரேழ்
பம்பு மனுநாள் பகலாகப் பகுத்த நாளி லாண்டாக
நம்பும் வருட மொருநூறு நண்ணி னுனது கற்பமெனச்
செம்பொன் முனிக் கிருமனியிற் செறிவா யென்றுன் பிறைசூடி. (ககூ)

இனைய பலவும் வாழ்த்தெடுக்கு மீர்ந்தண் கமலத் திறையோன்முன்
முனைவ னிமையப் பாவையொடு முக்கட் பெருமா னெதிர்தோன்றி
இனைய லுவந்த தளித்துமென வேதூர் தோன்ரு லுன்கழற்கால்
வனையு மலர்த்தா மரையடியேன் மனவா வியினிற் பெறல்வேண்டும். ()

ஏணி யாய விவ்வண்ட மினிது படைக்க லுறுசத்தி
பேணி யளித்தாட் கொளல்வேண்டும் பெருமா னினது திருத்தொண்டில்
கோணி லாத குற்றடிமைக் குழுவோ டெனையுங் குறிக்கொள்ள
மாணி லெளியேன் பெறல்வேண்டும் வரமீ கென்ரூன் பரமேட்டி. (கo)

அள்ளற் கமலத் திறையிவ்வா றறையக் குறையா வரமனைத்தும்
கொள்ளக் கொடுத்துப் பேரருளுங் கொடுத்துக் ககனத் திடைமறைந்தான்
தெள்ளித் தெளிந்த வமுதகிலாத் திசைசூழ் வளைப்பச் சுடர்கொழிக்கும்
வெள்ளிப் பொருப்பி லிவர்ந்ததென வெள்ளே றிவர்ந்த விரிசடையோன்.

கதிர்கா லொற்றைக் குழைக்கிழவன் ககனத் திடைபோக் கயர்த
லொடும், கொதிவே லலைத்துக் கயன்மருட்டிக் குழையோ டெதிர்
போ மழைமதர்க்கண், மதிவா ணுதலார் நிலையழகி மலர்த்தாள் பரவி
யிருவருக்கும், துதிசால் கனகப் பெருங்குடமிச் சுடர்ப்பூங் கோயி
லினிதமைத்து. (கூ)

வெண்ணங் துயிர்த்த மணிமுத்தம் வெடிவா யாம்பன் முகையவிழ்க்கும்
தண்ணந் துறைநீர்ப் படித்துறையுந் தடமா மதிலும் புடைதிருத்தி
எண்ணும் பெறுசீர் பிரமதடத் தென்னக் கடவுட் டீர்த்தமெல்லாம்
நண்ணும் படியுய்த் தளிதுளும்ப நான்கு மருங்குந் தளமமைத்து. (கூக)

விதிப்பே ரண்டப் பரப்பகத்த மேல்கீ ழுலகு நெடுந்திசையும்
நிதிச்சா கரமு நடப்பனவு நிற்கின் றனவு மோரிரண்டு
கதிர்க்கா வலரும் பிறபொருளுங் கண்டான் றண்டா மரைக்கரத்தால்
பதித்தான் கடவுட் கணித்தாகப் பாரி சாதத் தருவொன்றை. (கூச)

ஆள்வேட் டுழன்று செவ்வரிதோய்ந் தயிலைத் துரந்து கயலலைத்து
வேள்வார் கணையைப் புறங்கொண்டு விழையப் படர்ந்து குழைகடந்து
வாள்போற் பிறழும் விழிகளுங்கைம் மலரும் பரத வழிச்செல்ல
நாள்வா யெழுந்த மின்போன்று நம்பன் றிருமுன் னடிப்பாரை. (கூடு)

ஒலிக்குங் கருவி யைந்துமிசைத் தொழுகு வாரைச் சிறையறுகால்
கலிக்கு மலர்ப்பூந் தெரியல்விணைக் கைவல்லாரைச் சிவகருமம்
பலிக்குங் கிழமைச் சைவதவப் பான்மை யோரை யிருள்பருகிச்
சொலிக்குஞ் சுடர்ச்செந் தீபநிரைத் துகடீர் செய்கைத் தொழிலோரை.

பாய திருமஞ் சனமெடுக்கும் பரிசா ரகரைத் திருமேனிக்
காய பசும்பொற் கலநிறைத்த வரைக்கா வலரைச் சுரபிகளை
ஏய பணியிற் பழுதுதுடைக் திடுகிற் பாரை யிறையடிக்கே
தூய கருத்தர் னகம்படிமைத் தொழிலா லுயர்ந்த தொல்லோரை. (கூஎ)

வல்லே யியங்குஞ் சாரணரை மடைவல் லோரை மாகதரைக்
கொல்ல வினைஞர் மட்பகைஞர் குவளைக் களத்தெந் தோணிபுரிச்
செல்வன் முடிக்காட் டுநாதி செறியுந் துகண்மாற் றுநீரு
ஏல்லே யிகந்த பணிவிடையி லிகவா தொழுகு மியல்பினரை. (கஅ)

முளரி மாலைக் கவுணியர்கோ தமர்முற் கலர்பா ரத்துவசர்
வளரா ரீத ரெனக்கிளந்த மறைக்கோத் திரத்து முனிவரரைப்
புளக மறையா கமமலர்ந்த புணரி மடுத்த முதுகேள்வித்
தளரா வாதி சைவகுலத் தகுமைம் பான்மைக் கடவுளரை. (கக)

சோ ரிணைச்செஞ் செவிபுதைக்குஞ் சீர்த்தி புனைந்த பார்த்திபரைப்
பாரா வறுமை யிருடுரக்கும் பானு வனைய வணிகர்தமைச்
சாரா துலரைக் கடவுளரைத் தமையொக் கலைத்தென் புலத்தாரை
ஏரா லுழந்து புறந்தந்தாங் கிறையே வலின்வாழ் பின்னவரை. (சஅ)

மங்கு லுறங்குங் குறுங்கோட்டு வருக்கை யழிசா றுவட்டெடுத்துச்
சங்கு தவழு மடையுடைக்குந் தடஞ்சூழ் தோணி புரம்புரக்கும்
செங்கண் விடைப்பா கனுக்குரிய செய்கைக் குடிமைத் திறலிவரை
ஐக்கு ரோசத் தெல்லையினு மமைத்தா னிழலுஞ் சமைத்தானே. (சக)

வைக றோறு மைந்துமக மாருக் குடிகள் பற்பலவும்
செய்க லாற்று வளனுங்கிச் செம்பொ னுலகி னெழில்காட்டக்
கைகொ ளுரகக் கங்கணத்தான் கடிவி ழாவு மினிதாற்றி
மெய்கொண் மறையோ னுயிர்க்குயிராய் விரிந்தான் பூசை புரிந்தானே.

பலநா ளினைய பணிபிழைத்துப் பரவுங் கமல முனிகாணக்
குலமா மறைதேர் சிவலிங்கக் குறியு டெழுந்தின் னருள்பூத்து
நலனு னுனது பணிமகிழ்ந்தே நாளு மெமது திருத்தொண்டிற்
புலனு னுயர்ந்த வுனையாரே பொருவா சென்றன் பொருவில்லான். (சக)

முன்னு ளுன்னோர் மறைமுதல்வர் மூழ்கிக் கண்ட தடமிதனிற்
பொன்னு ரமுத நிறைமதியம் புணர்சித் திரையிற் சித்திரைசேர்
அந்நாள் படிந்தா ரிடும்பைவினை யதனிற் படியா ரருண்ஞானம்
பன்னுள் படைத்து நின்னுலும் படையா நிலைமை படைப்பாரே. (சச)

கிழமை பூண்டு மதியாதிக் கெழுநீ ராடின் வந்தியரும்
மழலை மிழற்று மிளந்தளிர்வாய் மசப்பே றடைவார் துறக்கமிசை
முழுமா மதிவாண் முகத்தியர்தோண் முயங்கு வாருஞ் சலசரமாய்
ஒழுக விழைவா ரென்னினெடுத் துரைப்ப தெவனே பரப்பாக. (சஎ)

உறுதி பயப்ப நின்னுழையா முரைத்த வோரைந் தெழுத்தையுளத்
தறனில் லவர்பா லுரையற்க வான்ற கற்ப முடிவுழிபோம்
திறனில் வருக வெனமூலக் குறியு டொளித்தான் செருக்ககன்று
மறனில் லவர்க்கோர் கலைகண்ணு மாருக் கருணை வானவனே. (சக)

துன்றும் பழைய மூதண்டக் தொலைந்த ஞான்றுந் தொலையாமல்
என்றும் பிரமன் றனைத்தந்து மேனைப் பொருளுந் தரலாலீ
தொன்றும் பிரம புரமிதில்வா ழொளியே பிரம லிங்கமிந்நீர்
என்றும் பிரமத் தடமெனவே யெறிநீர் ஞாலத் திலங்கினவே. (சஎ)

கன்னிக் கமுகி னெருத்தலைத்த கமஞ்சூற் பாளை முகங்கிழித்துச்
செங்கெற் படைப்ப விளிம்புடையச் செந்தே னுடிச் சினவாளை
பொன்னித் துறையாட் டயர்தோணி புரத்தான் றிருமூ னிக்காதை
முன்னிப் புகன்றே ரெவரேனு முத்தி நிலத்து வித்தாவார். (சஅ)

இன்ன கடவுண் மான்மியத்தை யினிது கேட்போ ரெழிற்புலன்சூட்
டன்ன வூர்தி யுலகிலவ னுயுள் வரைபு மாங்கிருந்து
பின்ன ரிழுக்கா விழுக்குடியிற் பிறந்து ஞானப் பெரும்படையால்
முன்னை வினையின் கட்டறுத்து மோன வீடு மெய்துவரால். (சக)

கோட்டு மதியந் தவழ்மாடக் குடுமி தொடுத்த கொடிநிரைகள்
நாட்டுங் ககனத் தலம்புதைப்ப நகைவெண் சுதையா லமுதகிலா
வீட்டும் பிரம புரத்தியலீ தென்று னகந்தை யிகலெறிந்து
வாட்டுந் தவத்துச் சவனகனே மூதலோ ருவப்ப மாமுனிவன். (ரo)

[கூ-ஆவது. பிரமபுரமான வத்தியாயம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் கூசுசு.]

——:o:——

சு-ஆவது. திருவிழா வத்தியாயம்.

ஏற்றியலு மேந்தைபிர மாபுரி யியற்கை
சாற்றியசொல் லாரமுது தஞ்செவி மடுத்துப்
போற்றிய தவர்க்கருள் புராணமுனி வேதன்
ஆற்றிய விழாவணி யறிந்ததுரை செய்வாம். (க)

மாற்றுமக நின்றக மதத்தின்வழி யெய்திக்
தேற்றுமறை வாய்மைக டெளிந்துசிவ னன்பர்
காற்றுணை படிந்துபல காலும்விர தாதி
நோற்றவர்க ளேபரம நூலெவிழை கிற்பார். (உ)

ஆதிசிவ லோகமே யார்வமொடு பாரித்
தோதினரு மன்னதை யுகந்தவரும் வைத்துப்
போதமொ டருச்சனை புரிந்தவரு மன்றே
சீதரன் மதர்க்கணணி சேவடியில் வாழ்வார். (ங)

எய்தரிய மானுட மெடுத்துமிறை காதை
அய்துமுண ராதுபுல் லடர்ந்து நிலம்விட்டு
மெய்தளர் பசிக்களரின் மேவிய பசுப்போல்
வெய்துறுவர் காலனிடை மேலுறுவ தென்னு. (ச)

வாரமுறு மெய்த்தவ வரத்துமுனி வீர்காள்
பாரமுது வானரகு பாரிவியல் பூத
சாரமொடு பூதமது சார்ந்தபரி ணாம
மாருமுட லெய்தலுறு மாருயி ரவற்றுள். (நி)

புத்தியொடு நல்வினை புரிந்தவர்க ளின்பச்
சுத்தவெளி மேவிய துறக்கமிசை யெய்திப்
பத்தியொளி காலெழில் படைத்தடி நிலத்தே
வைத்திட லொழிந்துபுல ராமலர் மலிந்தே. (கூ)

ஓர்பொறி யறிந்தபுல னேர்பொறியி னூடே
சார்தலில தாமது தனக்குகி ராக
வேர்படரு மின்பநிலை யேயுணர்வ தல்லால்
சூர்படு மிடும்பைநிலை சூழ்ந்துமறி யாரே. (எ)

மய்ம்மலி நெடுங்கணர மங்கையர்கள் கொங்கைக்
கொம்மையெழி லாடுமிரு கோடுக ளுழக்கச்
செம்மைமுகை விண்டுவிழி தேனுமுகு தண்டார்
மொய்ம்மலி புயத்தர்கண் முகிழ்த்தறிக லாதார். (அ)

அம்பவள வாயரணி மூரல ரலர்ந்த
செம்பதும வாண்முகவர் தெள்ளமுதின் வந்த
கொம்பரனை யார்கலவி கொள்ளமுது மேனுள்
உம்பர்கடை வேலையமு தும்பருக லோவார். (கூ)

வெம்புதுளி வேர்வையறு மேனியிசை வானு
வம்பவிழு மைந்தருவின் மாகிழல் வதிந்து
பம்புமிசை யெங்கருவி பல்குமிசை யுண்டும்
தம்புல நயப்பொடு தணைப்பர்பல காலம். (கo)

நாகமொழி நாள்கள்பதி னைந்தென விமைப்பார்
சோகமுறு வாருயிர் துறக்கமு மிழப்பார்
மோகமுறு தீவினை முயன்றுபெறு பூத
தேகருறு மாநிரய முஞ்சில தெரிப்பாம். (கக)

வாஞ்சையுறு தீவினைஞர் வம்மென மறித்துப்
பூஞ்சிகைய வொள்ளெரி புதைந்தநிர யத்தே
நாஞ்சிலொ டொறுத்துமெரி நாந்தக நிறைத்தும்
தாஞ்சமன நும்படர் சவட்டலொழி யாராய். (கஉ)

வறுத்தமணல் கீழுமன்ன் மாரிதலை மேலும்
பொறுக்கவழி யிட்டடியி னாசிகள் புதைத்தும்
செறுத்துலரு பங்கியொடு தீயெழ விழித்தும்
தறிப்பருட லின்றசை தகர்ந்துதிர வன்றே. (கஙூ)

துடிப்பவொளி யாடெரி துளும்புசுடு பாளம்
கொடிற்றிடை யிருத்தியெறி குந்தமிசை யுய்ப்பார்
கடிப்புன லிடைத்திரி கயற்குலம் வளைத்துப்
பிடித்துயி ரகற்றிய பிரட்டர்களை யம்மா. (கச)

கைப்படு குடம்பையுறு புட்கவரு வாரைத்
துப்பெரி விலங்கொடு துவைப்பரயல் வாழும்
மைப்புருவ மங்கையை மணந்தவரை வெந்தீச்
செப்புருவ மங்கையொடு சேரவணை விப்பார். (கரி)

கோதக விலங்குகளை நூல்வலையி லார்க்கும்
காதகரை ஞாளிகள் கனன்றெயிறு கவ்வப்
பாதமடி யொட்டிதுதி பாயவிழி செந்நீர்
போதர வுறுத்துவர் பொருப்பணைய தோளார். (ககூ)

சார்நிலை பெருதுயிர் தளர்ந்தழு விலங்கைக்
கூர்கருவி யாலுடல் குறைத்தமட வோரை
வேர்மறலி வீரர்தன மெய்ம்மயிரி ஞெண்டுக்
கோர்தசை படப்பட வரித்தரிதல் செய்வார். (கஎ)

மின்படு சடைப்புனிதன் மெல்லடியை விள்ளா
அன்பர்க ளெதிர்ப்படி னடித்துணை தொழாரை
வன்புறு விழிக்கெரி மணிச்சுரிகை யிட்டுத்
துன்புறு தடக்கைக டுணித்திடுவர் வாளால். (கஅ)

நாதன்மூது காதையை நயப்பொடு விரும்பாக்
காதகர் மனத்தர்தலை காதொடு தெறிப்பக்
கோதுற மலிந்துசத கோடியுரு மென்னத்
தூதுவர் புடைப்பவரர் சொல்லியலு மற்றே. (ககூ)

வள்ள லடியார்தமை வருத்துந ரணுக்கத்
தெள்ளளவு மேவரிசை வார்மறை யிசைக்கும்
பிள்ளைமுனி யால்வலி பிழைத்தமை வழுக்கா
துள்ளவ னுருப்பதை யுரைப்ப தெவனோ. (உ0)

மழுக்களெறி பட்டுதிர வாரிமிசை பாயப்
புழுக்கள் குடையப்பதை பதைத்துடல் பொறாராய்
எழுக்க லடியாலழ லெரிச்சிகையி னுல்வெங்
கழுக்கடை யினுலளவில் காலம்வதை புண்பார். (உக)

செக்கினுழல் வார்திரிகை யிற்சுழலு வார்தீப்
புக்கயரு வாருறு புலாலழிகு வாரால்
மூக்கணம லன்பழைய மூவறு புராண
மெய்க்கதை யினைப்பெற வினவுமறி வில்லார். (உஉ)

வன்முரடரி னிற்கழுவின் மாமுளில வத்திற்
கொன்றுமெழு வித்துகடு வன்றமர் சூமைப்பக்
கன்றிய பசுங்கணனல் காறெயிறு காட்டி
நின்றலறு வார்கொடிய நீணிரய வாணர். (உக)

நீர்நசை பெருதுதசை நீர்பெருகி யங்கட்
சோர்பவ ருயிர்க்குதவி தூதருழை யுண்டோ
காரெலியை வாயொடு கவர்ந்துதறு பூசை
யாரழினு மெள்ளள வதற்குதவி யின்றே. (உச)

காந்துதுய ரன்றியொருக் காலுநல மின்றித்
தேய்ந்துநர கத்துறுநர் செய்தியிவை யின்னும்
ஏய்ந்துயிரி னேடுறு மிரட்டைவீன தம்மால்
போந்துபய னுண்ணுமுடல் பூதபரி ணமம். (உஙி)

வேறு.

இப்பூத பரிணம யாக்கையினீ யிருவினீயின்
வைப்பூறு கதிவயத்தால் வரப்பெறினும் பொருப்பகமும்
கைப்பூறு வறுங்கூவற் கடறுடைய நாடுமொரீ இ
அப்பூற வளனூறு மணிகெழுநாட் டுறலரிதே. (உசு)

வெண்ணிணத்த வெயிற்றெயின ரிழிகுலமு மீன்படுக்கும்
கண்ணிரைத்த வலிவினைஞர் கழிகுலமு மகன்றுருவிப்
புண்ணியத்தொல் குலத்தினிடைப் புகவரிதா மதிற்புகினும்
பெண்ணெழித்துப் பழுதொழியப் பெறுதலுமிக் கரிதன்றே. (உஎ)

இன்னணமே செங்நிறத்த வெழிற்பவளத் தடம்புலத்தில்
பொன்னணிமுத் துருக்கீனய பொறிபரந்த வமயத்து
மின்னலுமொக் குளும்போன்று வீயினும்வீங் திடுமிலையேல்
பின்னருமெவ் ணெயிற்றிரண்டு பிறந்திடவும் பெறுமதுவே. (உஅ)

கூன்புறத்த யாமையுருக் கொண்டறினு மறுமின்றேல்
ஊன்புறத்தி லுறுமமயக் தொழியினுமாங் கொடிநாபி
ஈன்புழைக்கு ளிரதமடித் தெழினுமெழு முழுமதிபோல்
தான்புறத்தி லுதித்தளவே சாயுமது தணந்திடினும். (உகூ)

விரிநிதிய மிரவலர்பால் வீசிப்பேர் புனையுழியும்
இரியுமகன் குளத்துமல ரெனவளர்ந்து மையாடி
முரியவுமா முருகெறிப மூதுணர்கேள் விகடுறைபோய்
வரிநெடுங்கண் ணியருருக மாயுமதின் மாயாதேல். (கo)

பஞ்சிபுனை செம்பதுமப் பாட்டிசையக் கிண்கிணிக்கால்
வஞ்சியர்தோ ணலம்பருகி மல்கியநாட் பலசனமும்
நெஞ்சுருகி யழன்றுசெங்கை நெரித்தலற வுருத்தெழுந்த
செஞ்சிகைவெங் கூற்றணுகச் சிதையுமிது திறம்பிடினும். (கக)

மழலைமொழிச் சிறுவரொடு மாழாந்து மூப்பலைப்பக்
கழலுறுப்பி லுரையாடிக் காய்பிணிவெம் புலிபாயக்
கிழவனகன் றிருருபிணமாய்க் கிளைக்கவைநா வளைத்தயிலும்
அழல்கதுவும் புறங்காட்டி லணையுமது வொருதலையே. (கூ)

வெள்ளிடையின் விளக்கமென விளியுமித னிலையாமை
உள்ளியுணர்ந் தவர்வாளா வொழிப்பரோ வொருகணமும்
கிள்ளைமொழிப் பாகனிசை கிளக்கவுங்கேட் கவுமர்கள்
உள்ளதவப் பேறிதனி னுண்டுகொலோ வுயிர்க்குறுதி. (கூக)

அளக்கரிய தவப்பேற்று லழுக்கறநல் லான்வயிற்றில்
கிளக்கரிய பலநூறு கிடைக்கின்மறை யவனுவான்
இளக்கமுற வதிற்பரம னியல்கேளா ரிழுக்குடம்பு
துளக்குமரப் பாவையன்ற தோன்றிடினுந் தொழுகுலத்தே. (கூச)

தொழுகுலத்தா ரேனுமொரு தோடுடையான் றிருக்காதை
முழுமதியி னெடுங்கேளார் முகஞ்சுக்கக் கிடைத்தவினை
எழுகொளிவெம் பரிதியழ லுதகமறை யவர்பசுக்கள்
மழவிடையா தியகண்டு மாற்றுவரான் மதிவல்லோர். (கூடு)

வாலாமைப் பிறவியதின் மழுவலான் புகழ்கேட்டல்
மேலாரா தனையிழைத்தன் மெய்யடியா ரடிபோற்றல்
ஏலாதே லென்னுறுதி யிதுகேட்க விரும்புமுமைப்
போலாரே யுளராவார் பூதலத்து மீதலத்தும். (கூசு)

பின்னுமுனி வரர்கேட்பப் பெருந்தவத்துக் கயமுனியால்
துன்னுமறை யெழுதுமுனி துணையடிக டொழுதமுனி
மன்னுமலர்க் கமலமுனி மதிமிலைந்த முடிமுனிக்குப்
பன்னுபிர மாபுரத்திற் பணித்தவிழா வளனுரைப்பாம். (கூஎ)

திரியுமிருட் குறும்புடைத்த திங்கண்முளை கிடந்திமைக்கும்
முருகலர்வே ணியன்மகிழ முதன்மதியின் வளர்மதியின்
விரிநிலமுங் கீழ்மேலா விரிநிலமு முணரமதக்
கரிமுதுகி னெந்தைவிழாக் கடிமுரச மிரட்டுதலும். (கூஅ)

உரைதருவே தியர்முன்னு வள்ளவர்க ளெள்ளருஞ்சீர்
வரையறுதொல் லுருத்திரர்வா முலகமென மகிழ்தூங்கி
விரைமலரா ளரசிருக்கை வீதிமணி மாலைதொறும்
கரையறுபல் வளனூட்டிக் கடிநகர மெழில்பூவார். (கூக)

கற்பாரு மடந்தையருங் காளையருங் கைதூவார்
பொற்பாரு மலர்த்தொடையற் பொலிநறுங்குப் பைகள்கூவார்
எற்பாரு மணியிலகா லெம்மருங்குந் துகள்விளக்கி
நற்பூழி யுள்ளடங்க நறியபனி நீர்தெளிப்பார். (சஂ)

வருங்கொடியேற் றென்றென்பார் மான்றலோகா லெனவுரைப்பார்க்
கொருங்குவகை தலையுய்ப்பா ரோர்தினமோ ருகமென்பார்
அருங்கடிகா ணியவென்றே வலர்விழியு மகலமுமே
மருங்குதுடித் தனவென்பார் மனவெழுச்சி யொடுநிகழ்வார். (சக)

சுதைதிகாடுபித் திகைபுனைவார் தோரணங்கள் பலநிரைப்பார்
இதமலிகுங் குமமெழுகி யெரிமணித்தெற் றிகள்புனைவார்
நிதிமணியோ வியம்பொறிப்பார் நிறைகுடமும் பாலிகையும்
விதமலியும் பளிக்குமணி வேதிகைக டொறுமமைப்பார். (சஉ)

பூவணத்தண் புனறெளிப்பார் பொற்றிரள்கால் பத்திபுனை
காவணத்திற் பழக்குலைய கதலிகமு கொருங்கமைப்பார்
தூவணத்த சுடர்நிரைபொற் றுளங்கொளியா டிகள்பதிப்பார்
மாவணத்த பாவைபெறு மணிவிளக்கி னிரைநிறுப்பார். (சங)

தண்ணளிக்கோர் வரம்பாய தலைமைமறைப் பொருள்விரிக்கும்
அண்ணலடி யவரிருக்கை யயிர்மணிப்பீ டிகைசமைப்பார்
சுண்ணமிறைத் தெம்மருங்குந் துயல்வருபூந் தொடையசைப்பார்
வண்ணமணி நித்திலமு மரகதமா லியுஞ்செறிப்பார். (சச)

கோட்டுமத வரைமுகத்திற் குங்குமமோ டைகளணிவார்
ஆட்டுபரி யணிகளமைத் தைங்கதியு மியறெரிவார்
பூட்டுமணித் தேருகயப் பொருப்புறழத் திருப்புனைவார்
நாட்டுருப்பொற் கலமேந்தி நவமணித்தீ வகமிடுவார். (சஙி)

காசறையுங் கற்புரமுங் கமழமணிக் கலனேந்திக்
கோசிகமென் கொம்பரெனக் குயிலின்மொழிந் தயிலின்விழித்
தேசறுமெவ் வகையுயிரு மிரங்கமணி யாழ்வருடி
வாசமனை தொறுமடவார் மங்கலங்கள் பலபுகழ்வார். (சகூ)

அருட்கடமை மறைக்கிழவர்க் கறுசுவைநால் வகையமுதம்
ஒருப்படவங் கினிதளிப்பா ரும்பர்பிரான் பழவடியார்
திருக்குறிப்பி னெறிநின்ற தெள்ளமுத மடுத்திடுவார்
ஒருத்தரின்மு னொருத்தரின்ன வோரகையினி லமுந்துவரால். (சஎ)

வேறு.

இவ்வா றெங்குங் களிசிறப்ப வீர்ந்தண் கமலா சனத்திறைவன்
சைவா கமச்சுப் பிரபேதஞ் சாற்று மியறே ராற்றலினால்
செவ்வா ரழற்கா சினத்தா லுஞ் செம்பொ னுலுஞ் திசைபொதிந்த
மைவா னிருள்சீத் தொளியுமிழு மணிமண் டபமொன் றலங்கரித்தான்.

பவளம் பழுத்து மரகதத்த பசும்பா சிலையிட் டொளிமுத்தம்
திவளும் பாளி வெண்பொன்னுந் செழித்த கணைக்காற் கமுகநீ இத்
துவளுங் கனகத் தாற்றரம்பை சூழ விருத்தி நீடியவிட்
புவன மலர்மீ னனையமுத்தின் புல்லார் மாலைப் படங்கசைத்து. (சகூ)

செம்பொற் சிணைய தருக்குலங்க டிசைதோ மூன்றி யிருளுடைக்கும்
பைம்பொற் படிமக் கலந்தூக்கிப் பைம்பூந் தென்றல் புறந்தவழும்
அம்பொற் சிறுசா ளரந்திருத்தி யரிவாய் வயிரச் சுடர்பரப்பி
விம்பப் பொகுட்டுக் குறுத்தமுளை விரைப்பா லிகைபற் பலநிறைத்து.()

வானின் றிழிந்த விருநிதியு மணியும் பொருத்தி யலையுயிர்த்த
தேனின் றிழிபூங் குழன்மடவார் செங்கைக் கோலம் பெறவளைத்துக்
கானின் முருளிர்சா மரைதோட்டிக் கயல்கண் ணடிமென் கொடிமுரசு
தானின் றலர்பூஞ் சுடர்நிறைநீர்த் தசும்போ டெண்மங் கலந்துலக்கி. ()

வெளிறு பனிநீர் குங்குமநீர் விரைமான் மதஞ்சாந் தொருநான்காம்
அளறு மெழுகி யகம்புறமென் றறியாப் படிகச் சுவர்தோறும்
களிறும் பிடியு மறிப்பிணவுங் கலையுங் கோட்டிக் கனகநிறத்
தொளிறும் பாவை துணைக்கரத்தி லொளிமா மணிச்செஞ் சுடரேத்தி.()

தாம மாலை கற்பகப்பூந் தருவின் மாலை தவராற்றும்
ஓம மாலை மந்திரநூல் யோக மாலை நறியவிரைத்
தூம மாலை யேனையவுந் தொடுத்த மாலை யயனியற்றும்
ஏம மாலை விழாவிறைஞ்ச வெழுந்தார் மேல்கீ ழிருந்தார்கள். (நிஈ)

மென்று நிணநீர் முடைமாரு விறலார் கணிச்சிப் பெருந்தடக்கைக்
குன்று புரைதோ யுருத்திரர்கள் கோடி யமைந்த பதினொருவர்
சென்று திசைநே ரெறிமுகட்டிற் சிலைமத் தெறிந்த மலர்க்கரத்தால்
கன்று குணிலாக் கனியுகுத்த காயா மேனிப் பசுந்துளவோன். (நிச)

ஓரா யிரங்கண் மலர்பூத்த வுருவத் தொருவன் முதலெட்டுப்
பேரா கியமா திரத்தலைவர் பெருகத் திறலேழ் மருத்துக்கள்
சூரா தபர்தா மாறிருவர் துளிக்கு மமுத கலைத்திங்கள்
ஆரார் விழியன் னையரெழுவ ராயுள் வேத மருத்துவர்கள். (நிஙி)

சித்த ரியக்கர் வசுக்கண்மணிச் சிரத்து நாக ரரமாதர்
நித்தர் வடுகர் வேதாளர் நிருதர் யோகர் கந்திருவர்
வித்தியா தரர்நா ரதன்சனகன் வியாதன் புலியன் பதஞ்சலியோன்
வைத்த வசுந்தன் குறுமுனிவன் வருட மயனம் பருவங்கள். (நிசு)

மதிசூழ் பக்கம் பகலிரவு வாரி நதிக ளருவரைகள்
விதியைம் பூதந் திக்கயங்கள் வேதா கமங்க டிருவாணி
முதிர்மா தவத்துள் ளவர்பிறரு முறையே தத்த மூர்த்திமிசைக்
கதியா லணைந்தா ரயனுற்றுங் கடியார் வீதி முருகாரூர். (நிஎ)

எழுந்த சீலர் பிரமபுரத் தியன்மேற் கருத்த ருருகுபுனல்
பொழிந்த விழியர் பணிவேட்கும் புலவ சொடும்போந் தலர்மேலோன்
பழங்க ணீக்குஞ் சிவபெருமான் பாத்தம் பழிச்சி யெம்மடிகேள்
குழந்தை மதியே னிழைக்கும்விழாக் கொள்வா யென்றின் னருள்பூண்டு.

குவளைக் குறுங்கட் பிறைக்கோட்டுக் கொழிக்குங் காடத் தழைசெவிய
கவளக் களிற்றைங் கரன்பூசைக் கடன்க ளாற்றி மறுகுதொறும்
அவிர்தத் தகுசாந் தியுமாற்றி யடரங் குரத்து விணைமுடித்துப்
புவனப் பெருமான் றலைசிறப்பப் போற்றும் பெருமான் றலைநாளில். ()

எடுக்குஞ் சமயத் துறைதோறு மேற்றம் பாசு பதமென்றும்
அடுக்குந் திருத்தொண் டுடையார்மாட் டடையா தனமும் மலமென்றும்
நடுக்கும் பவத்துக் கொருமருந்து நன்னீ ரென்று மோனமுத்தி
கொடுக்கும் பெருமான் பிடித்ததனிக் குணவெள் ளேற்றுக் கொடியேற்றி.

இருமங் கலதூ ரியமியம்ப விசைமங் கலஞ்செய் தணியசிவ
தருமங் கலந்த மறைமுதல்வன் றகைசா லன்பி னருள்பூத்த
மருமங் கலந்த விதழியினுன் மனத்தா றறிந்த வளகேசன்
திருமங் கலத்தி னெழில்பூணச் செம்பொன் மழைக்கீட் செலவயத்தான்.

வாதத் துறையும் பரசமய வழுக்குத் துறையு நீத்தொருதன்
பாதத் துறையன் பினர்க்கருளப் பாகத் துறையும் பூவையொடு
நாதத் துறையு நாதாந்த நவிற்றுந் துறையு மளப்பரியான்
வேதத் துறையின் முறைபிறழா வேள்வித் துறையின் றலைவந்தான். ()

வேறு.

சந்தைப் பெருமறை மூன்றைத் திருமொழி தருமூன் றாலவ
னொருபொன்னூல், பந்தத் தொழின்மூத லாரா தணசிவ பாரா யணர்
செய வருவான்முன், கந்தப் புரிகுழல் விந்தைக் கிளிபணி கயலார்
விழியுமை மயில்காணத், தந்தித் திருமுக னந்தக் குகனிவர் தகைசெய்
யொளியொடு மெழில்செய்ய. (கூ)

ஓரா யிரவரை பேரோ தையின்முதி தோதக் கடலென நாதிப்பச்
சீரார் கரமிசை நேரே நிரைகொடு சென்றே பலகண நின்றூதப்
பேரா தயலயல் பூதத் தலைவர்கள் பெருமங் கலவொலி யெழுவிக்க
வாரா ருருமின மொருகோ டிகளென வாணன் குடமுழ வொலிபம்ப.()

வானத் தவரிசை பலதுந் துபியொலி மடவார் நடவொலி கடமாவின்
தானப் புனலொலி தாரைத் திரளொளி தாளச் சதியொலி மணிவீணை
கானத் திரளொலி பலபல்லியமவொலி கல்லென் றுறுதிசை செல்லச்சூழ்
ஞானக் கடலொடு சூரப் படைகொடு நந்திக் திருமுனி வந்திக்க. (கூரு)

மகவா னுயர்தரு மலர்சிந் திடவெதிர் வருணன் பனிமழை நனி
பெய்யப், பகலோன் கலிமதி பளிதச் சுடர்நிரை பணிமா றினரிரு
புடைபோதத், தொகுமா ரழலிறை தூபந் தரவொரு தோழன் றம
னிய மலர்தூவ, நகைகாண் வருமுனி வரர்வா ழிகள்சொல நதிநா ரியர்
கவ ரிகள்வீச. (கூசு)

நீடஞ் சலிபுரி மாரன் பரிவொடு நிறைமா லிகைதர நிறைமன்றின்,
ஆடங் கணன்முன மாடக் கணநிரை யணிவீ சணிகொள வணிலேசன்,

சேடன் பணமணி யடருஞ் சுடர்கொடு திசைகா லிலும்வள ரொளி செய்யக், கோடம் பெறுகடன் மதிபோ லலர்குடை குண்டோ தரன் முறை கொண்டேக. (ஈள)

ஞானக் கொடிபுணர் நளிஞ லயமுனி நலியா திறையருள் வழி நிற்பச், சேனக் கொடியட லெகினக் கொடியிடி செறியுங் கொடியடு சிலைமாரன், மீனக் கொடிபல சேவித் துடன்வர விடையின் கொடி யவை நடுவாக, வானத் தெழுதர மகுதித் திருமுனி மணியா ழிசை செவி யழுதூற. (ஈஅ)

படகஞ் செறிகிணை யொளியா குளிவயிர் பதலைக் குலமடல் கெழு மொந்தை, துடிதுங் துபிமுழ வடுசல் லரியிசை தொகுதண் ணுமை வகை பலபொங்கி, அடருங் கடலென வெவையுங் குளிறிட வரன்வந் தனனெரு களிறீன்ற, பிடிவந் தனளென வொலிதந் திசையொடு பீலிக் குலமவை யாலிக்க. (ஈக)

கண்ணன் கரமலர் நண்ணும் பொழுதொரு கரபங் கேருக மலர் வைத்துத், தண்ணஞ் சுடர்மணி மானத் தினிலுயர் தானத் தவர்தொழ வினிதேறிக், கண்ணம் புயமலர் மலரக் கரமலர் குவியப் பலமுனி வரு நாளும், வண்ணந் துதிசெய மணிமா நகர்வலம் வந்தா னெளிமையின் வாராதான். (ஏ0)

மாமா ரிகளென வடியா ருருகுகண் மணிநீர் பொழிதர வட நூலின், பாமா ரிகள்விரி திக்கெட் டினுமறை பயின்மா முனிவர ரியலோதத், தேமா ரிகண்முழு மணிமா ரிகளெறி திரையார் கலிதர நிறைவிண்ணோர், பூமா ரிகள்பொழி தருமா லயமது புக்கா னெவரினு மிக்கானே. (ஏக)

வடிவம் பொலிவழ கொழுகுந் திருமுக வனசம் பலமலர் பல செம்பொன், கொடியொண் சுடர்நிதை பணிமா றிடவருள் கூறுந் திரு முன கேர்நின்றோர், முடிமண் டிலமிசை யிருசெங் கரமலர் முகிழும் படியர கரவென்ற, அடிகண் டவரவர் தொழமண் டியவொலி யதிருண் டதுமுது பகிரண்டம். (ஏஉ)

மாலைப் புரிகுழ லுமையோ டெழிகொளி வளருஞ் சினகர மதி லெய்திக், காலைப் பவனியு மனம்வைத் தினையன கரைதீர் வளமலி மறு நாள்வாய், ஏலக் குழலொடு பூதப் பரிமிசை யிலகிப் பவனியு முலவிச் சீர், மூலப் பழமறை யோலிட் டவனெரு முன்ன னெனவரு மந் நாளில். (ஏங)

கோணைப் பெருவரை திரியப் பொருதிரை குமுறக் கடல்வரு மொருபுத்தேள், யாணர்த் திருமலர் பொலிகற் பகமிசை யிமையோர் மணிமுடி யடிதோயக், காணப் பவனிசெய் தோணிப் பரனெளி காலா ரழல்கொடு நாலாநாள், மாணத் திருமணி மானத் தெழில்பெற வந்தா னுறுவலி சிந்தாதான். (ஏச)

இறைவே லணையகண் மடவார் நடமிட விகலா ரிரவொரு பக லாகத், துறைதோ ரெளிவிடு முடிசே ரமரர்க டுதிபே ரொலிவிரி திசைமூடப், பிறைவா ணுதறிரு நிலைநா யகியருள் பின்ரு னுடன்வர வைந்தாகாள், மறைநா வலர்தொழ வலம்வந் தனனெரு வடமா லெனு முயர் விடைமீதில். (எடு)

அரவார் மணிமுடி யுரவோ னுறுதின மாறிற் பொருதிறல் வேழத்தும், இரவா துயரிய கரையா னதுதரு மேழிற் புணைகயி லா யத்தும், துரகா திபனிலு மிருநா லெனவரு தொகைநா ளிடைநகர் வலமாகப், பிரமா தியர்பணி செயவந் தனனெரு பெண்பா லவளொடு மொன்பானுள். (எசு)

அரவப் பெருமணி சுடரக் கொடிநிரை யடர்துங் துபியோலி கடல் பொங்கத், தரணிக் குலவரை பரவத் திசைதிசை தடவித் தளநிலை புடையோற்றக், குருமைக் குடைபல மிடையத் தலைபுண சும்பந் தின கர விம்பம்போல், உருவத் தரைநெளி நெளியப் படர்வதொ ரூழிக் கிரிநிக ராழித்தேர். (எஎ)

மதியே றியவழி யறியார் கலையுநல் வழியே றிடதுவன் மறை வாசிக், கதியே றிடவுமை பதியே றினன்முது கலைசற் றவர்புகழ் நிலையத்தேர், பதிநா யகமதில் வலம்வந் துறுநிலை பயிலுற் றுயர்கின கரமுற்றே, விதிபோ புணைகட நீர்நல் கினன்மறை வித்தா னவனெரு பத்தாகாள். (எஅ)

ஞானத் தவர்களும் வானத் தவர்களு நவிலு லயமுனி தடமாடி, ஏனப் பகிரதி குலபா லகர்பணி யிசைமண் டபமிசை பதினென்ரும், மானத் தினமதில் வளர்சங் கணனடி மலருந் தொழுதுபி னெரு தோணித், தானத் தினுமலர் தூவித் தொழுதனர் தண்டா வருளமு தண்டார்கள். (எக)

உரகங் களினியல் கரகங் கணமும்வில் லுமிழுங் குழைகளு மணி நூலும், சரதண் டமுமழ கொழுகும் புழகணி கனகா சலநிக ரிய தோளும், வரகஞ் சுகமொடு வளரும் பயிரவ வடிவம் புணைமலை வடு கேசன், சரணந் தொழுதனர் விடைகொண் டவரவர் தந்தம் பதியி லணைந்தாரால். (அ0)

பிறவும் பலபல பணியும் புரிதரு பிரமன் றனையருள் பெறவைத் தே, உறுநின் பதமென விடைகொண் டகிலமு முதவுஞ் செயலினின் முயல்கின்ரு ன், இறையின் றிருமுரு கிதுவென் றனனுய ரிசையே புணை தரு வசைதீர்நூல், முறையின் படிபுக லீரோன் பதிஞெடு முன்னு லியமுனர் முனிரூதன். (அக)

[சு-ஆவது. திருவிழா வத்தியாயம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் சசஎ.]

———:o:———

நி-ஆவது. பூதவிமோசனமான வத்தியாயம்.

கொழுதி வண்டின மலமருஞ் செழுமலர்க் கோயிலா ளுடைப்புத்தேள்
முழுதி னுற்றிய பெருவிழா வொருவழி மொழிந்தன மினியோர்வெங்
குழிவ யிற்றழ லெரிமயிர்ப் பசியகட் குறியதாட் டொறும்பூதப்
பழுது டைத்தொரு மன்னவ னன்னெறி படர்ந்ததும் பகர்கின்றும்.(க)

கடிவ ருங்கழைத் தலைதொறுங் கவிழ்தலைக் கருவிரற் சூன்மந்தி
படித மாற்றுநீ டருவியத் தடவரை பரந்தமா ளுவதேயத்
துடல்சி னம்பொரு வாளரி யன்னவ ணெண்மதி மரபுக்கோர்
கொடுமை யுப்பிறந் ததுவெனப் பிறந்தனன் கொலைவிடு ரதனென்பான்.

நிலைவ ழங்குதன் குலப்பெரும் புகழெலா நீடொளி தருந்திங்கட்
கலைவி ழுங்குவா ளரவென விழுங்கிய கருமனத் துறுதீயோன்
பலங்க ணால்வகை வன்னவல் லாடுவான் பகலிடை யிரவெல்லாம்
குலவி நால்வகை வன்னவல் லாடுவான் கோதைய ரகலத்தே. (ங)

அறங்க டிந்துவெவ் வினைகளே வித்திநல் லார்வமென் கனைபோக்கித்
தெறுஞ்சி னப்புன லூட்டுபு வேலியாய்ச் சிற்றினம் படக்கோலி
உறும்ப வப்பய னடைந்தவ னுயிர்க்கெலா மூழிவெங் கூற்றன்னான்
இறங்கு புள்விலங் கிடுபுறங் காடென விழுக்குடை யுதரத்தான். (ச)

கோலி ழுக்குற வைம்பெருந் தீவினை குயிற்றிவெம் பொருள்யாவும்
வேலி ருந்தட மெழுதித்தவாட் கண்ணியர் விடயமேற் செலவுய்ப்பான்
நூலி ழுக்குரூர் மகத்தழ லவிந்துக துவலருந் துயர்காட்டி
மேல ழற்றுவ திவனடு சினத்தழன் மிக்கவர் வயிற்றெல்லாம். (ஙி)

வெள்ளி வெண்டிரை முகட்டெழும் விடமென வெண்மதிக் குல
வேந்த, ருள்ளி வன்பிறந் தாசிய விழுக்கினை யொன்னலர் புறங்
கூறக், கள்ளுங் காமமுங் கொலைகளும் புலைகளுங் கனிந்தொரு தாய்
பெற்ற, பிள்ளை போலிவன் வளர்ப்பதே பெற்றனன் பெற்றிலன்
பிறிதொன்றை. (சு)

மானி ரப்புரு சிறுபுலப் பயன்களும் வயக்கரி நிலைநாடித்
தான ளித்திடி லடுபசி கெடுமது சார்ந்துபுக் குணில்வேலி
ஆன தென்னினும் வாலினுங் காலினு மழிந்துவாய் புகலின்றிப்
போன தாமது போன்றதவ் விறைமகன் புயியெலாம் பொலிவற்றே.(ஏ)

வனைபு மெல்லணி வாரொடு துறந்துமேல் வரவரத் தலைசாய்த்த
புனைக லன்கழி மங்கையர் கொங்கையிற் பொலிவுபோய்ப் புல்லென்று
கனைக ரும்புயல் வறப்பமா நிலமெலாங் கலிபரக் கதுதேர்ச்சி
வினைஞ ரின்மையாற் கோடழி சூளனென வீறழிந் தனன்வேந்தன். ()

விடையத் தீப்பிணி வெதுப்புநல் லாருயிர் மெலியவா யுளுங் குன்றி, அடையச் செல்வமு மரும்பெற லரசும்வேற் றரசுகொண் டேமாப்பக், கடையிற் போந்தெழு கார்புரை பகட்டின்மேற் கனன்றுகட் கடைதோறும், வடவைத் தீயுக வந்தகூற் றுவன்படர் வலியிடைத் துவக்குண்டான். (கூ)

துதிய யிற்குல மழைபொழி யாறுபோய் நுவலரு நிரயத்தே, கொதிய முற்சுட வெண்ணில்பல் காலம்வெங் கொடுமையாற் கொட்புற்றுப், பதிய தங்ககன் றரின்மிடை விந்தமென் பருவரைத் தடஞ் சாரல், கதிய டைந்தன னவுணனுய் விடுக்குமோ கழிவினைத் தொட ரம்மா. (கo).

பேது செய்துபல் விலங்கலா மாழிய பிலத்துவாய் புகப்பெய்தும்
ஓது மந்தண ராருயிர் வவ்வியு மொண்டொடி யார்க்கொன் றும்
தீது பூத்தலர் நெஞ்சினன் வைகலுஞ் செய்கொலைத் திறத்தாலே
காது முத்தலைக் காலனு முயிர்கொளுங் கைவினை கைதுவான். (கக)

வைக லுங்கொலை யயின்றவா யவுணன்முன் வையகக் கொடுங் கோன்மை, செய்கை யிற்சிறி தறனிழைத் தனன்கொலோ தேமறைப் புள்ளார்க்கும், பொய்கை யானவாங் கீன்வாழ் பாசிலைப் புரையுள்புக் கறவோர்க்கு, கைக வர்ந்துவாய் மடுப்பலென் றெளித்தனன் கண்ட னன் றவக்கோமான். (கூ)

கரந்தி வண்புகுங் கள்வனீ யாரைகின் கயமையா லெமைவாட்டி
அரந்தை வெம்பசி தணிப்பவந் தீனைகொடுலெம் மடிகளார் தும்முன்னோர்
பரந்த தொல்லுயிர் பருகுமா லுதிரநீர் பருகும்வித் தகரன்றே
தரந்தெ ரிந்திலா யகலுதி யென்றனன் சதுமுகன் வழித்தோன்றல். ()

அகல்வ துன்னுயி ரருந்துவ தெனதுவா யன்றிநீ பலவாளா [றே
புகல்வ தென்னையென் பொலிவெலா மறையவர் புதுநிணப் பொலிவன்
பகர லென்றுகண் பொறியுகச் செறிமயிர்ப் பங்கியங் கியிற்காண
இகனெ டுங்கர மெடுத்தொரு கூளிபோ லெப்தலு முனிகண்டான். (கச)

கண்டு பொள்ளெனக் காலமூன் றையுமுணர் கடவுண்மா முனிதெய்வக்
குண்டி கைப்புனல் விதிர்த்தவன் றெருண்மையுங் குடிப்பிறப் பையுங்கூறி
மண்டு மிவ்வுரு வேகொடு திரிகென மற்றவன் முரட்சாபம்
கொண்டு பாழிவா யவுணன்வல் லுருவுபோய்க் கூளியா கினனன்றே. ()

சிரக நீரது தெறித்தலுஞ் சாபமுந் தெளிவுவந் தனபோலும்
உரவ னேயுணைப் பிழைத்தநா னிப்பழி யொழிப்பதெங் ஙனமென்தாய்
விரவு நீர்க்கடல் வெதுப்புறி லாங்கதை விளாவுநீர் பிறிதுண்டோ
குரவ னேயிது பொறுக்கெனக் கருநெடுங் குன்றின்வீழ்ந் ததுகூளி. ()

திருகு வெஞ்சினத் தடலயி ராவதத் தேவனும் பழிபூண்டான், கருகி றப்பசுங் கொண்டலும் பலம்பல கண்டனன் றெருகைகாணுர்,

மூருகு யிர்த்தபூங் கொன்றையான் றிருண்டர்வாய் முனிவுபெற் றன
னென்றல், ஒருவ னெய்துதல் வியப்பமன் றெனமுனி யுன்னினு
னஃதுய்ய. (கள)

எமது தாபதப் பள்ளிப்புக் கணையுனக் கிப்பெரும் பழிநீத்து
விமல மாகுமா றுணர்த்துவென் கேண்மதி மிக்கதக் கணதேயத்
தமல னுதரம் பெருகிய திருவரீ ளணிகெழு சோணட்டில்
இமிழ்த டந்திரைப் பொன்னிநீ ருண்டதை யெய்துதி யதன்மாடே. ()

வடக்கி னிற்பெருங் குடக்கனிக் குறும்பலா வழிந்தசா றிழிந்
தாருய்த், தடக்கு ரம்பினிற் பரம்பினில் வேலியிற் சாலியிற் புறஞ்
சூழ்போய்க், கிடக்க வாடகப் புலத்தினின் மரகதக் கிளரொளிக்
கொழுந்தேய்ப்பப், படப்பை நாறுகள் வீறுசெய் தோணியம் பழம்
பதி யதுகாண்டி. (கக)

அற்பு தன்றிரு வுளத்தது முத்திவீட் டகத்தது பரஞானச்
சிற்ப ரப்பொருண் மூன்றது தோன்றுறு சேகொழிப் பதுமாயை
உற்ப வந்தரும் பொருளெலா மயனெடு மொருங்குலப் புறுமூழிக்
கற்பம் வென்றது கருதியார் கருதுவ காட்டுவ தம்மூதூர். (உ0)

தாள தாமரைத் தாக்கணங் குறையுமத் தனிநக ரதுபுக்கால்
தோள ருவரி யரவணி யந்தணன் றுணையடிப் புணைபற்றிக்
கோள ருவிழிப் பிறந்தையார் கலிதனைக் குப்புறுங் குணமிக்கான்
வாள ருமணி வேணியான் காலவ மாமுனி தனைக்காண்பாய். (உக)

தயங்கு மம்முனி மறைநெறி புரிதரு சத்திரப் பெருவேள்வி,
முயங்கு மெல்லியி னிரந்தனை நிற்றியேன் முனிவனு குதியொன்றல்,
பயங்கொள் பாரிடப் படிவமும் பழவினைப் பளகுநீக் குவன்றேல்
போய், வயங்க ராவெனப் பொலிகுவை யென்றனன் மறைமுடிப்
பொருள்வல்லான். (உஉ)

கோத கன்றவன் றிருமொழி கரிந்தபைங் கூழ்முகத் தினிற்பெய்த
சீத மாமழை சுடுத்தலாற் செவியினுஞ் சிந்தையிற் களிகொண்டு
பூத ரங்களுங் கடறுடைக் கடங்களும் பொருதலைக் கான்யாறும்
பாத வங்களுங் கடந்தவா சியின்றிசை படர்ந்தது கரும்பூதம். (உங)

பார கத்திரு மடந்தைமே லணிந்தபொற் பணிபுரை சோணட்டில்
பேர கன்றிரைப் பொன்னியாற் றடைகரைப் பிறங்குதீ சியின்மாடே
கார கிற்கொழும் புகைதவழ் மணிதொறுங் கடிமுர சுறங்காத
சீரு லாம்பிர மாபுரஞ் சேர்ந்தது சிவபதந் தனிற்சேர்வான், (உச)

கேழி னன்முகன் பிரளய நீத்தமேற் கிளர்ந்ததோ ணியின்மீதே
கோழி ளம்பிறைக் கண்ணியா னுறைதிருக் கோயிலின் குடக்காக
வேழ்வி வேட்டுயிர் வேதவா ணிபர்நடு விளங்குகா லவனென்னும்
தாழ்வி லாமுதி மாதவக் குன்றனுன் றன்னைநோக் கியதாங்கண். (உஙி)

புகரின் மும்மையா யிரத்துநான் மறைமொழிப் புலமையோர் புடைசூழப், பகரு நீலிலப் பதிதொறு நதிதொறும் பணிந்தனன் வலம்போந்து, புகரில் பொன்னிநீ ராடியெந் தோணிவாழ் புண்ணிய னடிபோற்றி, அகனு ரும்பொருள் யாவையுஞ் சுரபியா லமைத்தெரி வளர்ப்பானே. (உசு)

கிருது கோசிக னங்கசத் துருவிறல் கெழுஞ்சவு பரிவேதத் தெரிசி யாதிமா முனிவரோ டளவளாய்த் திண்டிறற் றண்டீசன் வருப தஞ்சலி புலிமுனி திருநந்தி வானவ னருள்பூண்டு குருமு சுத்தழன் முழங்குமுக் குண்டமுங் கோட்டிய செயலானே. (உஎ)

உதிர்ந்த பூவெனப் பலபொரி கெய்விராய் யூபவா யழற்பேணி, அதிர்ந்த மாமணி யிரட்டுற மனுவழி யாகுதி வகையாற்றி, முதிர்ந்த தெய்வத வெண்ணிரண் டிருத்துவை முறைமுறை பணிவானே, எதிர்ந்து நின்றதாற் புரையெயிற் றுரகம்வா ழிருஞ்செவிப் பெரும் பூதம். (உஅ)

கரிந்த கையெடுத் தலம்வர வுயிர்ப்பினிற் கருவரைக் குலஞ்சாய எரிந்த குஞ்சியி னழல்விழி சுழற்றியாண் டெதிரிய பூதத்தைத் திருந்து மாறிரு தினமுமா குதிவிணை செய்துபன் மூன்றுநாள் வரும்பி ராசத மனமெனு மாகுதி வழங்குமா முனிகண்டான். (உகூ)

புடைக லந்ததொல் லுறுவரு மெறுழ்வலிப் புணரியி னிடைப்பட்ட, உடைக லம்படு மாந்தரி னிரியலிட் டோடின ரிதுகாணு, விடையம் வென்றவ னிங்கொரு பாரிட மெய்திய தெனவக்தோ, இடையி லிம்மகம் பிழைக்குமே யெனக்குழைந் திணையலுற் றனன் பல்கால். (உ0)

இணையுங் காலவன் படரடச் சிறுமுனிக் கேற்றகூற் றுவன்சாய முணையுங் காலவன் கஞ்சுகன் செஞ்சரண் முளரியை யுளப்போதில் புணையுங் காலவ னெனக்கிடர் வருவது பொறுப்பதே னெனப் போற்றி நிணையுங் காலவன் முன்னர்முப் புவனமு நீண்டகா லவன்போற்ற. (உக)

வேறு.

ஆடுமணி குஞ்சியு மகோரமுக மூன்துடியு மங்கையு முகந்ததடியும், கோடுமணி கஞ்சுகமு நஞ்சுரக முங்குழைது லுங்குமிரு காதுமறை நால், தோடுபுணை செங்கரமு மங்கியொளி யுந்திரிவி லோசனமு மொண் புழுகுமா, சேடுபடு மோருருவி னெய்தின னெடுஞ்சயில தெய்வவடு கேசனருளால். (உஉ)

ஐந்துபடு தந்துபிக ளுங்குணில் பெருந்துழனி யண்டமுக டெங்குமதிரக், கந்தமலர் வந்தமலர் சிந்திவெதிர் முந்திய கணங்கள் புடை கொண்டுமிடைய, நந்துகண் முழங்கவிசை கந்திருவர் பம்ப வொலி நண்ணுபல சின்னநிரைகள், வந்தன னரன்பசிய கஞ்சுக தரன்கடவுள் வந்தன னெனுந்துதிசெய. (உங)

சூலமுதன் மூவறு படைக்கல மெடுத்துநிறை தூரிய மியம்ப மறையோர், நாலுமறை யோலமிட நாலிருவர் காரியர்கண் ஞாளிமிசை யேறினர்வரப், பாலலை மகோததியி னீறுபூசு மேனியர் பணிந்தன ரணைந்துபரவக், காலவ னிருந்தமுது வேள்விமலி சாலையது கண்டருள வந்தருளினன். (நச)

நேசசர ணஞ்சரண முத்தியடி யார்க்குதவு நித்தியநிர் வாண சரணம், வாசசர ணஞ்சரண மாதியிடை யீறுதவிர் மானசிவ ஞான சரணம், தேசசர ணஞ்சரணம் யோகசன காதியர் தெளிந்தகுரு நாத சரணம், ஈசசர ணஞ்சரண மென்றுமுனி காலவனு மேவரு மெழுந்து தொழுதார். (நரு)

செம்மலு மவன்பணியு மம்முனிவ ருக்கருள் செயுங்கடமை யான் முனிவிர்காள், உம்மக முடிப்பளவும் யாமிவ ணிருத்துமென யோக தல மீதமர்தலும், எம்மடிக ளுக்கரிய தென்னையிது வேள்விபுரி யேழை யடி யேமருளி னீவார், பொம்மலுரு பூதமிவண் வந்ததென நின்றதொரு பூதமது மாதவனெடே. (நசு)

என்னையுயி ரஞ்சுமவினை கண்ணியுள பூதமென வெண்ணலை யிரங்கியடிகேள், முன்னையொரு தாண்முளரி யந்தணன் மகன்றரு மூரட்பழி படைத்துளனியான், அன்னவர வென்னையெனின் மாலுவ நெடும்புவியி லாய்மதி குலத்திலொருவன், உன்னரிய தீவினைசெய் மன்னவன் விடுதனென் னூழ்வினை யுருப்பவுயிர்போய். (நஎ)

காலபடர் கொண்டுநிர யத்தினி லழுத்தினர் கழிப்பவரு சேட மதனுல், மாலிரு நெடுங்குடுமி விந்தவரை வாயடர் வனத்தினி லரக்க ணுருவாய்க், கோலுறு மெறும்புகடை யாணமுத லானவை குறைத்து நுகர் நாளிலொருநாள், ஆலுமனல் பொங்குமெ னகட்டினிரை கொள்வ லென வங்குமுனி வன்புரையுளில். (நஅ)

பாரிட வருக்கொடு படர்ந்தவினை நுங்கவரு பான்மையினை யன்ன முனியாம், கீரனினை யிவ்வுருவொ டேதிரி கெனப்பழி கிடைத்தனை னிரங்கியவனே, ஓருகதி யுண்டுபிர மாபுரியில் வேள்விக ளுஞற்றுமுனி காலவனுழைச், சாருதி யொராகுதி பலன்றருவ னிப்பழி தணக்திடுதி யென்றருளினன். (நகூ)

மற்றவன் விடுப்பவிவ ணுற்றனை னுனைப்பரவ வந்தவழி யிந்து மௌலிக், கொற்றவ னீயும்பரம முத்தரையு மென்விழி குளிர்ந்திட வெதிர்ந்தனெனியான், உற்றபழி விட்டகல நற்கருணை வைத்திடுதி யூனவடி வானசிறியோர், குற்றமவை யெத்துணை யிழைத்திடினு நற்ற வர் குணத்தொடு குறிக்கொளுவரால். (சஂ)

மூந்தையிய லுந்துருவி வந்தவிய லும்பட மொழிந்துபணி கூளி பெறுமா, றந்தமுனி மேதகு பிராதச மனந்தனி லொராகுதி பலன்றரு

தலும், நிந்தையுறு பூதவுட லந்தொலைய வானமிசை நீளொளியின் மாளு
வபிரான், வெந்துறு களிம்பகல வேறுபடு செம்பொனென வீறுபட
நின்றனனரோ. (சக)

ஆயிடை யுதித்தகதிர் ஞாயிறென விட்புலவ ராதரவி னுய்த்த
வொருதேர், மேயினன் முளைத்திகிரி மாயனிடு சட்டையணி மேனி
யண முற்பரவியும், தாபினு முயிர்க்கினிய காலவ னடித்துணை தனக்கு
மலர் கொண்டுதொழுதும், தீவினை யகற்றிய விடேதன் வழுக்கறு சிவா
னுபவ முற்றனனரோ. (சஉ)

மாளுவ பதிக்கருளு மாமுனியு மத்தகைய மாமக முடித்துவிம
லன், தாளிணை பழிச்சிவழி பாடுபுரி யக்கருணை தானுருவ மானபரமன்;
கோளற விழைத்தவுன தியாகநிறை வற்றது குறித்தமை யுரைத்தி
யெனலும், நாளுமு னடிக்கமல நீழலின் மிகக்குலவி நானினி திருக்க
வருள்வாய். (சங)

மாதவர்க ளோதுபிர மாபுரி யிதற்கயலில் வாழுநர் தமக்குமடல்
சேர், பூதமிடி நோய்வறுமை கோள்பகை பசாசமிவை போம்வழி
புனர்த்தருளுவாய், ஆதிமுதல் வித்தக வெனுமுனி யுரைத்துள வினைத்
தையு மளித்துமுனிவோர், ஏதமறு கத்தகிலை யேறவருள் செய்திறைவ
னேறின னிருந்தசிகரம். (சச)

அட்டவடு கத்தலைவ ரப்பதி புறந்தர வமைந்தபரி சோமுனிவர்
கோன், முட்டலின் மகத்தொழின் முடித்தபரி சோகுறண் முரட்பழி
தொலைத்தபரிசோ, சட்டையணி வித்தக னிருந்தபரி சோவுறு தலத்
தியல் விளங்குபரிசோ, சுட்டவள வில்லையென மாதவ கணங்களொடு
சூதமுனி யோதினனரோ. (சடு)

[டு-ஆவது. பூதவிமோசனமான வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் சகூஉ.)

——: o :——

கூ-ஆவது. ஸ்ரீகாளிபுரமான வத்தியாயம்.

மைம்மலி பசுங்கட் கூளி வன்பழி தொலைந்து முத்திச்
செம்மரு ளடைந்த காதை தெரித்தவன் றில்லை மோடி
இம்மணி நகர்வாய் நோற்ற வியலையுந் தெரித்த வாறே
அம்மவீண் டரிய தேனு மறைகுவா மறிந்த வாற்றால். (க)

கொடிமுகி றுழாவு மாடக் கொழுமணிக் குப்பை வீதி
முடிவிலா முனிவ ராற்று முழுமறைச் சடங்கும் பன்னூல்
ஒடிவில்பே ரறமு மோவா வுற்சவப் பொலிவு மூன்று
அடியர்மாட் டுவகை தோன்ற வளவில்பே ரருளான் மேனாள். (உ)

அருவமா யுருவ மாகி யருவுரு வந்தா னென்றுய்
நிருமல மாகி யெங்கு நிறைந்துசொற் பதங்க டந்த [ற்றக்
பொருவிலா வொருவன் பொன்னம் பொதுவினின் முதுவர் போ
கருணைமா நடன மொன்று காட்டுவா னுட்டம் வைத்தான். (சு)

வய்த்தலு மிமயச் செல்வி வடிவினில் வாய்ந்து நீண்ட
நெய்த்தலே வேற்கண் மோடி நின்மலன் றிருமு னெய்தி
இத்தலே குனித்த லெந்தைக் கிதுநகைப் பால தென்னு
அத்தனே யிழித்தாள் பேதைக் குறியினை யறிவிப் பாள்போல். (சு)

நிரைவளே மடவார்க் கென்ற னிலையுமா டவருக் கென்றுல்
புரைபடு மன்றே யாடிற் புகலுப சற்ச னத்தோ
டுரையங்கம் பிரத்தி யங்க முபாங்கமென் றுரைத்த வாடல்
வரையறு விசற்ப மெல்லாம் வல்லியேல் வருதி யென்றுள். (நி)

என்றலு மியைந்த வாறே யியைந்திரு விழியி லாதான்
றன்றடி பிடித்து ளானுந் தளர்நடை யியற்று வான்போல்
அன்றியல் வென்றி தோல்வி யவையுளார் தெரிப்ப வென்னுக்
கன்றிய வையை யாடக் கண்ணுத லாடல் செய்தான். (சு)

எழுதாணுக் கிளவித் தொன்னூ லெத்தொலி தழங்க வெண்ணீற்
றெழுகொளி வாணன் றெய்வ வொண்குட முழவ மார்ப்ப
முழுதுண ருரக வேந்து முனைவரி நகங்க டோறும்
விழிமலர் பூத்த வேங்கை வேந்துநின் றேத்தெ டுப்ப. (எ)

ஈரிரு குடுமிப் புத்தே ளேத்துபொற் முளம் பேணக்
கார்புரை யுருவத் தண்ணல் கணைதுடி யிரட்ட ஞானப்
பாரதி மகர வீணை பரித்தன ளிசைப்ப வானத்
தோரிரு சுடரு மாங்கண் வேய்ங்குழ லொலிப்ப மாதோ. (அ)

இறைதரு நந்தி செங்கை யின்னெலி முழவ மேங்க
முறைதருஞ் சுருதித் தீந்தேன் முனிவரோ ரிருவர் பெய்ய
அறைகழ லமரர் வெவ்வே றமர்ந்துபல் லியங்கு வைப்பப்
பொறைமலி யன்பர் செங்கட் புளகநீ ரருவி கால. (கூ)

வேறு.

பிறவருத்த மாவருத்த மசுவ பாதம் பிறத்துருத முபத்துருதம் விளம்ப மேரு, விறலுபகா ளனம்பிரசா தனம னுத விப்பிரமம் வல மிடச்சுற் றிலகு தீர்க்கம், நிறைகவுடம் பின்னபிர பின்ன மேமி நிவ் வருத்த மகமேரு நேத்தி ரப்பூ, உறைகுறுக்குப் பார்வையா காசப் பார் வை யுபபின்னம் புட்கலா வருத்தத் தோடும். (கo)

குணிப்பரிய பலபரதத் துறைகள் யாவுங் குழகனுவந் தாடும் வண்ணங் குன்று வென்றித், தணிப்பரிய தெறுஞ்சினத்துக் கடலந் தா

னைத் தாருகனைப் பொருதழித்தா டானுமாட, மணிச்சடிலப் பெருமுனி வர்வாளை சேனைர் மதிமருளக் கதிரொளிகால் வடிவமொன்று, கணிப் பரிய காலமவை செல்லக் கொண்ட கண்ணுதலோன் றிருவுளத்தோர் கவவு கொண்டான். (கக)

வேறு.

சிட்டர் கோடி நின்றி றைஞ்சு செம்பொன் மன்ற நடுவணேர்
நட்ட மாட வென்று கொண்ட நம்ப னம்பொன் வடிவுதான்
விட்ட பேரொ ளிக்க ரங்கள் வீசி யூழி முடிவினில்
பட்ட வாழி யிற்கி ளந்த பானு கோடி யொத்ததே. (கஉ)

உச்சி யங்கி யுரறு பங்கி யுடன மூன்ற முயலகன்
பச்சை மேனி வெரிஞெ ளிந்து படிய நந்தன் முடியுகப்
பொச்சை யங்கு லஞ்ச மூன்று புவிகு லுங்க வவிரொளிக்
கைச்ச ரோரு கங்கள் சென்று கனக கூட முலவவே. (கங)

இட்ட மார்பி னுத்த ரீய மேம வெற்பி னருவிபோல்
தொட்டு மீது துயல்வ ரச்சு டர்க்கு ழைக்கண் வெயில்வரப்
பட்ட வாணு தற்ப கிர திப்பெ ணுடல் பயிலுநீள்
வட்ட வார்ச டைக்கு லங்கண் மாதி ரம்பு தைப்பவே. (கச)

அரவ மந்த ரம்பி ணித்த தாமெ னத்தி ரண்டதோள்
உரக துங்க வலய மாட வுபய பாத மவையிலோர்
சரண பங்க யந்த ராத லம்பொ ருத்தி வலமலர்க்
கிரண புண்ட ரீகம் விண்கி ழித்து மீத லம்பவே. (கரு)

தொடித்த லங்க டித்த பைந்தொ டைக்கு லம்பு டைக்கவும்
படித்த லந்து டிப்பு றும்ப டிக்கெ ழுந்து டிக்குலம்
கடுத்தி யம்ப டைக்க வந்த குப்ப ருந்தி டத்துகின்
றடிச்சி லம்பொ லிப்ப மன்றி லேய ணுடல் செய்வனல். (கசு)

உய்யு மாறு செய்யு மின்ன வூர்த்த தாண்ட வத்திலெழ்
வய்ய மாட மேரு வாதி வரைக ளாட நாடகம்
செய்ய லாமெ னப்ப டர்ந்து தீது லாய வாதுகூ
றய்யை கண்டு நாண மாட வைய ணுடல் செய்வனல். (கஎ)

மய்ய ளாய கண்டன் மற்று மண்ணும் விண்ணு மீணையடித்
துய்ய போத லர்த்தி நின்று தூண்டு மின்ன தாண்டவம்
தய்ய லாயுன் ணுட லோடு சமதை கோடி யோவெனப்
பய்ய நாணை திர்ந்த வல்லி பக்கன் மிக்கெ ழுந்தவே. (கஅ)

நீணி லத்தி லன்றி மேனி வந்து தாளை டுக்குமக்
கோணி யண்ண லாடு கின்ற கொள்கை கண்டு வெள்கியே
நாணி யங்கம் வேர்வ ரும்பி நகையொ டுங்கி முகிழ்விரற்
ருணி லங்கி ளேத்து வஞ்சி தலைக விழ்ப்ப வவைபுளார். (கக)

குழக னடி பாத மின்று கூட வாடு கிற்பெனன்
றழல ரங்கு மீது வெண்ணெ யாய பாவை யாடல்போல்
உழலு மாட லாடி யின்று டைந்த துன்ற னடமெனுக்
கழக மாமு னிக்க ணங்கள் கழறி யொன்று நுவல்வரால். (உ0)

கூனு டைப்பி றைத்து கிர்க்கொ டிப்பி ராணி டத்துவாழ்
நீனி றக்கொ டிக்குள் வந்த நின்னை யாது முன்னலான்
ஆன வன்ற னைப்பி ழைத்தி யாத லால முக்கிலா
மேனி யுங்க றுக்க வுன்றன் வென்றி யுங்க றுத்ததே. (உக)

நஞ்சு யிர்க்கு முரக வாய்ந டுக்க ரங்கொ டுப்பதூஉம்
வெஞ்சி னந்த ணித்த லின்றி மேன்மை ஞானம் வருவதூஉம்
துஞ்சு கற்பி ணித்தி ருந்து றைக்க டற்க டப்பதூஉம்
தஞ்ச நெஞ்சொ ருப்ப டாது தக்க முத்தி யடைவதூஉம். (உஉ)

அதிதி யர்க்க ருத்த லான கத்தி ருந்து வாழ்வதூஉம்
முதிர்ம றைப்ப ழக்க மின்றி முடிவி னைத்தெ ரிப்பதூஉம்
மதிமி லந்த வரத னோடு வருக வாட வருகவென்
றெதிரி னடை னீகு றித்தெ ழுந்த தூஉமி ழுக்கரோ. (உங)

நுண்ணி யற்கை யாய நூல்க ணூறு கோடி பழகினும்
பெண்ணி யற்கை போவ தன்று பேதை நீய கந்தையால்
அண்ண லெப்பி ழைத்த பாவ மகலு மாறு மற்றவன்
கண்ண ருள்கி டைக்கி னுன்க ளங்கம் விட்டி டக்குமால். (உச)

நீரகத் தெழுந்த சேறு நீர கத்தொ ழித்தல் போல்
போர கத்தி லாட கப்பொ ருப்பு விற்கு ழைத்தவன்
பேர கற்றி நின்றி வண்பி ழைத்த தீமை யவனருட்
கார கம்பி டித்தி நீக டத்தி யென்று கூறினர். (உஙி)

முழுதொ ருங்கு ணர்ந்த தில்லை முதுவர் சொன்ன விதியறிந்
திழுதை யேன்செய் வினைவி லங்க விறைவ னன்பு புரியுமோ
ஒழிவ தென்று பெறுவ லென்ற வுணர்வ றிந்த துணையிலான்
குழைக டந்த விழியை நெஞ்சு குழைய லென்று மொழிகுவான்.()

பாவ மென்ப வற்றின் மிக்க பாவ நின்பு றத்திலே
மேவ நின்ற திதுக டக்கும் வினய மொன்று நினைதியேல்
பூவ ளஞ்செய் தோணி யம்பு ரத்தி லெம்ப தத்திலே
நீவ ணங்கு கென் றளிப்ப நின்ற மோடி நன்றெனு. (உஎ)

வேறு.

பவள முருக்கும் புரிசடையான் பணிகொண் டெழுந்து புனைகலன்கள்
திவளு மலர்ப்பூங் கொம்பனைத் தென்பா லணைந்து பெண்பாகம்
கவரும் பாகன் பதிதோறுங் கதிர்வால் வளைமுத் தலர்தூவிக்
குவளை விழிக்கும் புனற்பொன்னி குடைந்தாள் வடபா லணைந்தாளே.()

மாநீர்த் திரையின் வெடிவாளே மடைவாய்க் கருங்காற் குருகிரியத்
தீநீர்க் குரும்பைக் குலைசிதற்றுந் தென்னை வனஞ்சூழ் தோணிபுரித்
தூநீர் மணியா டகத்தசும்பிற் சுடருந் திருக்கோ புரநான்கும்
வேநீ ரிருங்கண் ணெதிர்காண விழித்தா ளிடரை யொழித்தாளே.(உக)

மணக்குங் கமல வாவிகளும் வரிவண் டிமிர்தண் டலைபலவும்
இணக்குங் கனகத் தனிமறுகு மெங்கும் வலங்கொண் டிடுகிடையை
அணக்கு மிருபொற் குடம்வணக்கு மதுபோன் மதிவா ணுதலுடலை
வணக்கு மொருபொற் குடமிருந்த மானக் கோயி லகம்புக்காள். (ஙo)

கதியா வர்களும் பெறவழங்குங் கடவுட் பிரமத் தடமூழ்கி
விதியா னியமச் சடங்காற்றி வெண்ணீ ருடிக் கலைமகடன்
பதிநா யகனைப் பணிவான்போற் பணிந்து மூலப் பதிபுகுந்தாள் [ணுள்.
கொதிவே லனுக்கிக் கயன்மருட்டுங் குடங்கைக் கடங்காத் தடங்கண்

பண்டா டகப்பே ரவையினின்ற பரம வெளியா கியகுறியைக்
கண்டாண் மலர்மஞ் சனமாட்டிக் கனிந்து பூசைக் கையாறு [தேறல்
கொண்டாள் பவளக் கொடிபோலக் குழைந்தாள் கருணைக் கொழுந்
உண்டாண் மேலைத் தடங்கோயி லுற்றாளெண்டோள் பெற்றாளே.(ஙஉ)

வேயா லாவின் கணங்குவித்த விபுதா தியர்மற் றெவரெவர்க்கும்
மாயா மயத்தோ ணியிலிருந்து மாசை யகற்றுந் தேசிகனைப்
போயா யிடைப்புக் கிறைஞ்சியொரு பொன்னஞ் சிகரத் தென்னையருள்
தாயா கியகஞ் சுகனடியுந் தலைமேற் கொண்டா டவங்கொண்டாள். (ஙங)

குருக்கும் பிறைவா ணுதல்பின்னோர் குளிர்நீர்த் தடம்போற் றளி
மேல்பால், இருக்கும் படிகண் டதிலாடி யிறைகோ ளிலிங்க மொன்றி
ருத்தி, உருக்குங் கருத்தா னருச்சனைக ளோவா துஞற்ற வதனினின்
றும், பெருக்குங் கருணைக் கடலனைய பெருமான் வந்தான் பெருமான்
மேல். (ஙச)

மாலைக் குழல்சூழ் முகத்தியொடும் வல்லே றூர்ந்த நல்லோணைக்
கோலப் பழித்த விழியருவிக் குளிப்பத் தாழ்ந்த கொடியனையாள் [ந்து
மேலைப் பவத்தின் பொறையிழித்து வீழ்ந்தா லெனத்தாண் மிசைவீழ்
சோலைக் கிளிகண் மருளநின்று துதித்தா ளருளே மதித்தாளே. (ஙஞ)

மறையோ னறியா தருவரையாய் வானங் கடந்து மேனிவந்து
நிறைவா ளரக்கி னறைமாலை நீட்டக் குனிந்த வியல்போற்றி
நறைமா மலர்கோ லிறைமார னகையா ருருவம் புகையூட்டிக்
கறைதீ ரிரதி மனங்களிப்பக் காத்த கருணைப் புகழ்போற்றி. (ஙட)

வேணி முடித்த பெருந்தவத்து மிக்கார் தமக்கு மிக்கான
காணி வனத்தி லரணுருவங் காட்டி நடந்த கதிபோற்றி
ஆண மலிதாய் வருவழிபார்த் தழுத சூலிக் கன்னையெனப்
பேணி யெழிலார் பெண்ணுருவம் பெற்று நடந்த நெறிபோற்றி. (ஙண)

எண்காற் பறவை யுருக்கொடுமா னுடவா ளரியி னிகறடிந்து
தண்பூ மட்டந்தை மங்கலநாண் டகையா லளித்த தகைபோற்றி
பண்பா வலர்சூழ் மணிமன்றிற் பரமா வுனது திருமுன்னர்ப் [ற்றி.
பெண்பே தைமையால் யானிழைத்த பிழையைப் பொறுக்கு மருள்போ

பலவு மினைய துதிகூறிப் பணிமா தரசைத் துணிவாய்ந்த
நிலவு பொதிந்த சடைமுனிவ னெஞ்ச மினையே னுனைத்தொடர்ந்த
பலபா தகத்துந் தலையாய சிவநிந் தையுமா பாதகத்தால்
இலகுங் களங்க வினையுமகன் றிடுதி யான்முன் னெழில்பூண்டே. (நகூ)

செம்மாந் தணைந்த வனமுலையிற் சேயி ழாய்நின் றிருநாமம்
இம்மா நகர்க்கு நீவழிபா டியற்றக் குயிற்று முருவினுக்கும்
மைம்மா சகன்ற தடத்தினுக்கு மலிந்தோங் குகவித் தடம்படிந்தோர்
எம்மா நிலத்து மெமைப்பிழைத்த வதிபா தகந்தீர்த் திலங்குகவே.(சo)

புடைக்குஞ் சிறைவா ரணங்கூய புலரிக் காலத் துன்பெயரைப்
படைக்கும் பதியீங் கிதைமுக்காற் பகர்ந்தோ ரகந்தை வினையனைத்தும்
துடைக்குந் தலத்துந் துடைப்பரிய தொல்லைச் சிவநிந் தனைமுதலா
அடைக்கும் பவங்க ளெவையுமோரீ இ யமல ராக வாயிழையே. (சக)

தெரிச தினத்தித் தடமூழ்கிச் செய்தென் புலவர் கடன்முடித்தோர்
துருசு பொதிந்த விருவினையின் முடர்ப்பா டகல்வார் கார்த்திகையாம்
புரியு மதியிற் கதிர்நாளிற் புக்கா டுவரே லெவ்வினையும்
பரிசி யாம லொழிவரிங்கீர் படிந்தா ரடித்தூள் படிந்தாரும். (சஉ)

மண்ணு மணிச்சூட் டரவணிந்த வரத னினைய வரங்கொடுத்துப்
பெண்ணு ரமுதம் பணிகுறியிற் பெருமான் மறைய விறற்காளி
பண்ணுர் பலபல்லி யந்துவைப்பப் பனிநீர் மழையின் றளிதமெனக்
கண்ணுர் கலவ மயிலாடுங் கனக மணிமன் றினிற்புகுந்தாள். (சங)

வேறு.

இழைதவழ் கொம்மை வனமுலைக் காளி யிறைஞ்சலாற் காளியம் புரியென், றழகிய வொருபே ரிங்ஙகர்க் குற்ற தன்றியுங் காளித னெனு மோர், புழையியிற் றுரக வேந்தனுற் காளி புரமெனும் பேருமன் றுளதென், றுழையதட் போர்வை முனிவர்கேட் டுவப்ப வுறுதவச் சூதனுண் டுரைப்பான். (சச)

தொழுதகு கற்பிற் காசிபன் மகிழுந் துணிவறு வினதைதன் பாலன், பழுதரு மமர ளித்ததொல் வலியாற் பலவரிக் கொடுஞ்சிறை புடைத்துக், குழிவயிற் றழலும் பசிகெட வெறிநீர்க் குரைதிரை வளா கமே லடல்சேர், முழுமணிச் சுடிகை மோட்டரா வினத்தின் மொய் யுயிர் படுத்துணுங் காலை. (சடு)

மாயிரு ஞாலத் தரவெலாம் பறவை மன்னவ வுருத்தொரு பகலே நீயெடுத் துண்ண வாற்றல மடியே நித்தமோ ருணவுநீ விரும்பித் தாயினும் புரத்தி யென்றலு முறையே தரத்தர நுகர்ந்தன னிருப்ப ஏயின வகந்த னுதிவா ளரவ விறைவரிற் காளித னென்பான். (சசு)

வேந்துபுள் ளினுக்கோ வெனக்குமோ வுணவை வீசுமா றென்னை யென் னூறு, காந்துவாய் படைத்து மெலிவெலே வென்னுக் கரைந்து தன் சுற்றநின் றிரங்கப், போந்துதெண் டிரைநீ ரரண்புகுந் துழியும் புவிபல பொதிந்தசே வடியை, ஏந்துபோற் ரூளான் முறையினு லடு போ ரேற்றன னவனுநின் றேற்ரூன். (சஎ)

குருமணிச் சுடிகை நாகரா வேறுங் கொடுஞ்சிறைக் கலுழனுஞ் சீறிச், செருவிடை யுடன்று வரையொடு வரைபோர் செய்தென வையகங் கலங்கக், கருவரை சுழல விருசுடர் திரியக் கடுஞ்சமம் புரிந்துழிக் கடுங்காற், பொருசிறை யடிக்கும் வரிநகப் புடைக்கும் போயின னுறு வலி புயங்கன். (சஅ)

ஈட்டிய வலிசாய்ந் தகிபதி மேனு ளெய்தருஞ் சாபமொன் றடை ந்து, தோட்டிவா யுவணத் திறைபுகா யமுனைத் துறையினூர் மடுவி னிற் கரந்தான், கோட்டிய மலர்த்தா ளண்ணலங் கண்ணன் கொன் றையந் தீங்குழ லிசைத்துக், காட்டிய பசும்புற் கறித்தவா னிரைகள் கண்டன யமுனையின் மடுநீர். (சகூ)

புனல்விடாய்த் தயரா வுகளுமான் கன்றும் புனிற்றிளங் கோக் களும் பெருநீர், மனவிடாய் தணியப் பருகலு முயிர்போய் மறிந்தன நிரைசுரை கிடப்பக், கனைகடன் முகடு கிழியமத் தெறிந்த கண்ணனுங் காரிநீ ரென்னு, அனைய்து தெரிவா னிறங்கலு மவனை யணங்கரா வளைந் ததை யன்றே. (நo)

அரும்பெறற் சித்தி யெட்டினு மகிமா வானதை யுன்னினன் பெருகப், பெரும்பொறி யரவங் களர்ந்தது பிணிக்கப் பெற்றில தாங்கவ னணிமா, விரும்புகஞ்சச் சித்தி யெண்ணினன் சுருங்கி யெறுழ்வலி வால் பிடித் திவர்ந்தான், பரும்பொறி பரந்த தொள்ளெவெள் ளெயிற்றுப் பள்ளவாய்ப் பாந்தளின் றலைமேல். (நக)

ஆயிரம் பகுவா யகந்தனிற் பதித்தொன் ருகிய படந்தொறு மூகை த்துத், தாயினன் பவுரி பிடித்தன னடிப்பத் தலைதொறுந் தகர்ந்திழி செங்நீர், வாயிழி கரைநீ ரிரண்டினு மாலை வயங்கலவ் விரணிய னுரம் போல், போயின படங்க ளமரர்கோ வாகப் போரரி யாகினன் புனிதன். (நஉ)

விரிந்தவா யரவத் திறைவனு மெலிந்து விடுதிநீ விடுதியெய் யாமை, புரிந்தனை னினது புண்ணிய நாறும் புனைகழல் பொறுத்தலா

லுன்னைத், தெரிந்தனென் மலர்த்தாள் பரித்தவ னறையச் சிதைந்தநா
னின்னடி யடியீண், டரிந்தமா வாற்றே னென்றலு மிழிந்த வண்ணலு
மவனவா வறிந்தான். (நிசு)

கடுவளி புடைக்கு மடுசிறைக் கலுழன் கதத்தினுற் றிறத்தைநீங்
கியதும், தொடுகடற் றுறந்தீண் டுற்றது முணர்ந்தேந் துதித்தீ யல
மமே லுனக்குப், படுவன பகர்தி யெனமரு திடந்த பண்ணவ னுரைத்
தலு மென்பால், விடுவது வெகுளி தன்னையீண் டுண்டேல் வேண்டுவ
வுண்டெனக் கரைந்தான். (நிச)

கேழ்கிளர் கமலத் தடங்கணு யளியேன் கிளைஞரைப் பிழைத்தகா
தரமும், ஆழ்கடல் வரைப்பிற் கலுழனுக் குடையா வாற்றலு மெய்து
மா றருள்கென், றூழ்முறை பழிச்ச வுலகொருங் கீன்ற வுந்தியா னுள
மகிழ் பூத்துத், தாழ்தடம் பணைசூழ் தோணியம் புரியிற் சதுமுக னுடிய
தடத்தில். (நிடு)

வரன்முறை யாடிப் பிரமநா யகனை மஞ்சன மாட்டிநன் மலர்தூ
உய்ப், பரவினை யெனினீ விழைந்தன வாதி பரம்பர னருளுவ னென்னு,
அரவணைச் செல்வன் விடுப்பமற் றவனு மந்தணீர்ப் பொன்னிபுக்
காடிப், பிரமமா தடத்தின் மூழ்கியா னுடைய பிஞ்ஞகன் றிருமூன
மிறைஞ்சி. (நிசு)

குழகனை வேதக் கொழுந்தனை ஞானக் கோதைதங் திருநிலை யழ
கிக், கழகனை மலர்மஞ் சனமுதற் பொருளா லருச்சனை வினைமுடித்
தாதி, முழுமுதல் போற்றி முக்கணு போற்றி மூவெயின் முருக்கிய
நுதற்கண், மழுவலா போற்றி யிழுதையே னரந்தை மாற்றருள்
போற்றியென் றிரந்தான். (நிஎ)

இரந்துதா மரைத்தாள் வணங்கரா வரசை யிறைவனு மகிழ்ந்து
நின் பூசை, நிரம்பின பெறுகோ வரம்பல வென்ன நின்மலா வெனமனச்
செருக்கின், அரந்தையுங் கிளையை யிகழ்ந்ததீ வினையு மடுஞ்சிறைக்
கலுழனுக் குடையா, யிரந்தர வலியு நின்னடி புரியா நெயமுங் தருகென
நிமலன். (நிஅ)

கூறிய பலவு மளித்தன மம்பொற் கொடிமணி வீதியிங் ஙகர்க்குத்,
தேறிய நின்பேர் விளங்கவு மளித்தாங் திருமனைக் கிழத்திய சொடுநீ,
ஈறளந் தறியா வளனெலா நுகர்ந்துன் னிறுதியி லெம்முழை வரு
கென், றுறுதாழ் வேணி யந்தண னுமையோ டாலயக் குறியிடை
யடைந்தான். (நிகூ)

கொடிநிழல் கவிக்த நெடுமனை முகட்டிற் குடுமிமா மயிலணைந் தா
டும், ஒடிவறு வளஞ்சேர் தோணியம் புரியா னுடையவன் விடைகொடு
தான்வாழ், கடிநக ரெய்தி வாளரா வெவையுங் களிப்புறக் கலந்தன

னிருந்து, பொடியணி புயத்துப் புண்ணியன் கமலப் பொன்னடி நீழலிற் புகுந்தான். (கூ0)

கறையணற் பகுவாய்க் காளித னூனுங் காளியம் புரியென வொருபேர், இறைகெழு ஞாலத் திலங்கிய திதன்சீ ரேவரே தெரிவுற நோக்கி, அறைகுவ ரென்னு வருட்கடன் பூண்ட வறுதொழின் முனிவர ருவப்ப, முறைதெரி வேதத் துறையறி சூத முனிவரன் கனிவுற வுரைத்தான். (கூக)

[கூ-ஆவது. ஸ்ரீகாளிபுரமான வத்தியாயம் முற்றிற்று. ஆகத்திருவிருத்தம்0ருகூ.]

——: 0 :——

ஏ-ஆவது. வெங்குருவான வத்தியாயம்.

பொன்ற ரும்புகழ்க் காழியம் புரியியல் போற்றி
மன்ற மாநகர் வெங்குருப் பெயர்புணர் வரலை
வென்றி மாதவன் சவுனகர்க் குரைத்ததொல் விரிவில்
இன்ற நிந்தவா றியம்புவா மொருவழி யெடுத்தே. (க)

வெறிம லர்க்கம லாலயன் பதியிடை மேனாள்
தெறுகி னத்துவா ளவுணர்வந் தடிதொழுஞ் செருக்கால்
உறுமு னக்கொடு சென்றநா ளயன்வெகுண் டொழிப்ப
மறுகி வீழ்ந்தனன் கிழக்குறப் பிருகுவின் மைந்தன். (உ)

தான வன்புகுந் துற்றதுஞ் சதுமுகன் தருக்கும்
மான வென்றிவே னிருதருக் குரைத்துவா னவர்மேல்
தாமே யோடெழீஇ வெஞ்சமந் தொடங்கிய சமைந்தான்
ஆன காலையின் மகதியாழ் முனிவனுண் டமைந்தான். (ங)

முனியை யாதனத் திருத்திநல் விழுத்தகு மொழியால்
இனிய கூறிய கவிமுக நோக்கினை னேமுரய்
முனிவ ராட்சியை முண்டகன் பதவியை நின்போல்
புனித மில்லவ செய்துமா றெவ்வழி புகலாய். (ச)

தெரிவை செய்வினை யாடவ னெய்துறுந் தேயத்
தரிய வல்வினை காவல னெய்துமா ணைக்கன்
புரியும் வல்வினை குரவனெய் துறுமரோ புகலுன்
பரிவி லார்வினை பற்றின நின்னையும் பலிங்கே. (ஞ)

கோறல் வல்லவர் கொழுந்தசை யூணினர் வலைவாய்ப்
பாற லம்புவெம் படையினர் தருமதூற் பழக்கம்
மாறன் மிக்கவ ரின்னவர் புன்மதி வளரத்
தேறல் செய்குரு நீயெனி னுன்னிலார் தீயார். (கூ)

இழுக்கி லோர்பொருள் வெஃகியா திரட்டியாண் டளவும்
ஒழுக்கி னூசிதூல் கட்கிமை யுடற்குயிர் போலப்
பழுத்த பண்பிலா தவனுமப் பதகனுக் கொருசொல்
வழுத்தி னனுமே நிரயமேற் பயிரென வளர்வார். (எ)

சுரவன் மேலவ னுயிரனுங் குணமிழி சீத்தை
விரவு சீடனுய் விடினவன் கெடுவது மெய்யே
உரிய தெண்ணிலா வாயிடை யும்பர்க ளுண்ணப்
பரியு மாரமு தங்கணத் துக்கவப் படிபோல். (அ)

ஓட்ப மிக்கநீ யுன்னுடை யிழுக்கினு லோசெண்
கட்பி ராணுலக் கன்றுகீ முற்றனீ கவ்வேல்
விட்ப சும்பிறை மிலந்தவன் பூசையான் மேலோர்
உட்ப தங்களு முலவதி சிலனே டொத்தீத. (கூ)

என்றி ரங்கியைம் பதத்தையு மருளியிவ் வண்டம்
பொன்றி னுங்கெடா வொருபிர மாபுரிப் புனிதன்
றன்றி ருப்பதம் பணிதியென் றளித்தனன் றணந்தான்
ஒன்று மின்னிசை மசுதியாழ் முனிவர னுருசார். (கo)

மகதி வல்லவ னருள்கொடு மாடநீள் கொடிகள்
பகல்செய் வானவன் பரிக்கெதிர் வீசணி பரப்பும்
இகலில் காளியம் புரிபுகுந் திரணிய கருப்பன்
புகர றுந்தடத் தீர்ம்புன லாடினன் புகரோன். (கக)

விரவு பற்பல கடன்முடித் தணிமணம் விரிக்கும்
வரம லர்ப்பிரா ணுட்டிய தருநிழல் வதிந்த
பிரம நாயக னடிப்பரா யருச்சனை பெருக்கி
அரவ ணிந்தவ னயலவா சியினெயி லகத்துள். (கஉ)

தெய்வ லிங்கமொன் றிருத்தியா ராதனை திறம்பா
தைவ கைப்புல னடக்கியைம் பதத்தினு ரமுதைப்
பொய்யி லாவுயிர்த் துணையைநாத் தழும்புறப் போற்றி
எய்ய வாங்கணை யளவையா மியத்திசை யெய்தி. (கங)

நந்து லாந்திரை நளிதட மொன்றுதன் னுமத்
தைந்து சோணமிட் டணிகெழு கங்கையா தியநீர்ச்
சிந்து மான்மிய மெவையுமுய்த் தாபிடைத் திருத்தி
இந்து சேகரன் றன்னையீ ரிடத்தினு மிறைஞ்சி. (கச)

பொறிபு லாதிக ளவித்துமுக் குறும்பையும் புறங்கண்
டறிவி னுலறி யாதறி யறிவன்மாட் டறிவைப்
பிறிவ றக்கலந் தூழ்சரு கருந்தியும் பெருநாள்
எறியு மல்வளி பருகியுந் தவம்புரி யிவன்முன். (கடு)

பருதி யாயிரங் கோடியிற் பாயொளி பரப்பிச்
சுருதி நாயக னுலகெலாந் தொகுத்தசிற் முதரத்
தரும நாயகி யொடுமெழுந் தருளலுந் தாழ்ந்தான்
அருவி யென்பதோர் பொருளிலீ யலர்விழி காட்ட. (கசு)

தரும சுந்தர சச்சிதா னந்தபாண் டரங்க
பெரும பிஞ்ஞக பிரளய விடங்கவென் றேத்தி
இருப தம்பணிந் துருகிய பிருகுவை யெம்மான்
ஒருவ ராற்றுமு வருந்தவ மகிழ்ந்தன மொழிவாய். (கள)

விழைந்த வென்னென வெண்ணிலா வமுதொளி விரிக்கும்
குழைந்த வெண்பிறைக் கண்ணியாய் தயித்திய குருவாம்
பழங்க ணீக்குறு பவுத்திரப் படிவமு நின்பால்
அழுங்கல் செய்கலா வார்வமுந் தருகென வமலன். (கஅ)

நம்பி யிங்நகர் வியப்பறிந் தெமைப்பணி நலத்தால்
உம்பர் தேசிகன் சமத்துவம் பெறுதியென் றுதவி
வெம்பு மூதநன் மிருதசஞ் சீவன விஞ்ஞை
எம்பி ரானவன் பெறும்வகை யுதவின னெழுந்தான். (கக)

தன்னு டைப்பெய ரிலிங்கமூ டெம்பிரான் சாரப்
பொன்னு டைத்தவ மெய்திய கவியும்விண் போனுன்
அன்ன வன்பெருந் தடத்தினி லன்னவன் றினத்தின்
முன்னி யாடுநர் கனவினும் வறுமைநோய் முன்னுர். (உ0)

தலையிற் கோமய வறுகொடு வெள்ளிநாட் சார்ந்து
துலையி லாடுநர் தொலைவிலா வினையெலாந் தொலைவார்
அலைவ ளாகமே லிருசுடர் நிலையுநா ளளவும்
நிலையு மேதரு புகழொடு நிலவுவர் நெடுநாள். (உக)

தலையு வாவிலித் தடம்படிந் தருங்கடன் சமைத்தோர்
அலைவி றென்புலத் தவரொடுங் கயிலைவிட் டகலார்
கொலையும் வாள்விழிப் பிணிகுருப் பிணிமுதற் பிணியால்
மலைவி லாரொரு தினமதிற் படியினு மாதோ. (உஉ)

விருப்பி னுற்றயித் தியகுருப் பணியவெங் குருவாம்
இருக்கு மிங்நக ரன்றியு மெருமையே றுகைக்கும்
ஒருத்த னுலும்வெங் குருப்பெய ரிப்பதிக் குற்ற
விருத்தி தன்னையுங் கேண்மென முனிவரன் விரிப்பான். (உங)

வேறு.

ஆறுடுஞ் சடைமுதல்வ னருளாணைத் திறநாடி யறியா தெட்டைக்
கூறுடு நிரயமிசைக் குமைந்தாடு நரகெல்லாங் குழுமி மேனுள்
நீறுடி நெய்மிதந்து முடைநாறிப் புடைதோறு நிணச்சே றுடிப்
பாறுடு மூவிலைவேல் பரித்தாடு மறலியடப் பரித்தார் மன்னோ. (உச)

அரும்பெறல்யாக் கையைவரைவா னயலவன்கைத் தீட்டாணி யதனைப் பற்றி, வருந்தியுற வரையாமு னிழந்ததென விழுந்துகடு மறலி யூர்போய்த், திருந்துமனை யெரிகதுவத் தணிக்குமருங் கூவன்முன்னே செய்கா லாற்றூ, திருந்தழுவா ரெனகிரயத் திருந்தழுவார் மறலிதன்னை யினைய சொன்னார். (உரு)

மூவாவின் னமுதருந்தித் துறக்கமிசை யரமகளிர் முகிழ்மென் கொங்கை ஓவாது புல்லுகரு மண்ணகத்திற் பலபோக முறுகின் றூரும் தாவாயின் னணமிருப்ப வெம்முழையி னின்கிளைஞர் தண்டஞ் செய்ய ஆவாவிங் ஙனமாற்றேந் தறுகண்ணு வென்செய்கே மளியே மென்றூர்.()

சமிக்கரிய முள்ளறைந்து மூசிமிசைச் சவட்டியுஞ்செந் தழல்வாய்ப் பெய்தும், உமிழ்தழலூட் டியுங்கூடத் தோச்சியும்வாய்ச் சிகளாடி யொறுத்தும் வேரூய்த், துமித்ததுணி கூட்டியும்வெம் புழுக்களொடு கழுக்களிடை சோரச் சோர, அமிழ்த்தியுமிவ் விருத்தியிலே விளிவற்றூ யெவரிடத்து மளியற் றூயால். (உஎ)

ஒருத்தரின்மூந் தொருத்தரிவ்வா றரற்றியபே ரோதைவளி யுயிர்க்க நாறு, துருத்தியழல் பொருத்தியசெஞ் சுடர்ப்படையாற் செவித்தொளையைத் தொளைத்தாற் போன்று, கருத்திளகிக் கண்பனிப்பக் கையறவு மீதூரக் கவன்ற கூற்றன், பெருத்தவினைத் தொடரறியா துரைக்கினுமிவ் வுரையெனக்கோர் பிழையா மன்றே. (உஅ)

நல்வினையின் பயனுகரக் நாளிலெனை யுன்னினரோ நன்மை நீங்கி அல்வினையின் பயனுகரச் சுளித்தனரா லவரவர வறிவை நீக்கித் [ன்னு தொல்வினையின் றொடரறியு மறிவையறி வுறுத்தும்வழி தொடுப்ப லெ வெல்வினையின் மூடைத்தரும னடற்பிரமா புரம்பணிய மேவி னனுல். ()

கண்ணடருங் கழைக்கரும்பு துவைத்திழிசா றெரித்தபுகைக் கருங்கா ரென்னு, அண்ணலங்கட் சிறைமயில்க ளாலுமலர்ச் சோலைகளு மகன்று வேதப், பண்ணலங்கொள் பழம்பாடன் முனிவர்பணி சினகரத்திற் பதுமத் தண்ணல், எண்ணலஞ்சேர் தடமூழ்கிப் பிரமேசன் றிரு மூனம்வீழ்ந் திறைஞ்சி யேத்தி. (ஙo)

கருநீர்மை யறவெறியுந் திருமூலப் பரஞ்சுடரிற் கனிவா லந்தண், பெருநீர்மஞ் சனமாட்டி யருச்சனையின் றுறைமுடித்துப் பிறழுந் தீபத், திருவாரா தனையாற்றி யாணர்முகை விரிந்ததடஞ் சினைய தெய்வத், தருவாரு நாண்மலர்தூஉய்த் தடக்கைமுகிழ்த் தேத்திசைத்தான் றரும மூர்த்தி. (ஙக)

வேறு.

அந்தமறை காணு தாதியிடை யீறிகந்த
சுந்தரமாய் நின்றிலங்கு தோணி நிலைபோற்றி
தோணிநிலை யூர்ந்து சுலவுங் கடல்புதைத்த
பாணிநிலை கண்ட பகவாகின் றூள்போற்றி. (ஙஉ)

சாயை மறைகாணுத் தாவா விழுப்பொருளாய்
மாயமயத் தோணியின்மேல் வந்த நிலைபோற்றி
வந்த நிலையான் மலரோன் முதலெவர்க்கும்
பந்தமறுத் தாளும் பகவானின் ரூள்போற்றி. (நந)

கவ்வைமறை காணுத காரண தீதமுமாய்த்
தெய்வமலி தோணிவருந் தேவாகின் ரூள்போற்றி
தேவாதி தேவாய்ச் சிவகுருவா யெவ்வுயிர்க்கும்
பாவாதி மாற்றும் பகவாநின் ரூள்போற்றி. (நச)

வேறு.

படரகல வுருகியின்ன பலதுதிக ளெடுத்தேத்திப் பணிந்த செங் கோற், கடவுண்முன மடலேற்றிற் கயிலைமிசை யிவர்ந்ததெனக் கதிர்வே லுண்கண், மடவரலோ டெழுந்தருளி மறலியுள மகிழ்பூப்ப மைந்தா வின்றன், இடரகல விழைத்தபணி மகிழ்ந்தனநீ விழைந்தனகே ளென வெங் கூற்றன். (நடு)

புண்ணியநின் னடிக்கமலப் போதினிலென் னுளக்கமலம் புனைதல் வேண்டும், கண்ணிநிர யத்துயிர்க ளெனைநோக்கி யினையாமற் காத்தல் வேண்டும், அண்ணுமிரு வினைத்தொடரி னிருபயனு மவ்வவுயி ரறிதல் வேண்டும், நண்ணியமா நகரிதற்கு நின்னடியேன் பேரேற நல்க வேண்டும். (நசு)

நடுவனிவை யிசைத்திரப்ப வடுவகிரி னெடியவிழி நாரி பாகன், கடுவினையின் பயனுயிர்க ளறியுமறி வளித்தனநீ கவலேல் கண்ணில், படுவனகண் ணினையறியா தாடியெதிர் விழித்தறியும் படிபோ லுன் றன், நெடுமுகநோக் கியவளவே யவரவர்தங் தீவினையை நினைந்து நொந்தே. (நள)

இருவினையு முத்திபுகற் கிடர்வினையா முயிர்களிவை யிகப்ப வேண் டி, ஒருவினையைத் துறக்கமிசை யுய்த்தகல்வித் திடினுமரோ வொன்றை யுன்கை, தருவினையா னிரயமிசை சவட்டியொழித் திடுமாமித் தகை மைத் தால்வெங், குருவெனப்பேர் புணர்ந்தனநீ பணிந்தமையா லிந் நகர்வெங் குருவா மன்றே. (நஅ)

பொன்பழுத்த மணித்திதலைப் பொறிபழுத்த புளகமுலைப் பூவை பாகன், அன்பழுத்து மறமகற்கிவ் வருள்பழுத்து விழுந்துளியி னகத் துப் புக்கான், பின்பழிச்சி யொருதருமன் றன்பதத்தி னினிதிருக்கப் பெற்ரு னென்னு, முன்பழிச்சு முனிவரர்க்கு முறைபழிச்சி ஞன்கலை கண் முழுதும் வல்லான். (நக)

[எ-ஆவது. வெங்குருவான வத்தியாயம் முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் நுகூஉ.]

——: o :——

அ-ஆவது. காகவிமோசனமான வத்தியாயம்.

மங்கலம் பொலியுமிங் நகர்க்கு மாண்டகு
வெங்குருப் பெயரியல் விரித்து வெங்கொடி
இங்கிதி லுயர்ந்தது மிசைப்ப லென்றருட்
புங்கவன் புகன்றது புகலு வாமரோ. (க)

முச்சக மிசைசிலா முயங்க முன்னினாள்
எச்சமி லிக்திர திருவு மெய்திஞன்
அச்சமி லடல்விக டாங்கன் கன்னியர்
குச்சமென் புவிப்பொறை கொண்ட தோளினன். (உ)

தெறுகலி யிருள்கெடத் தெண்ணி லாவுமிழ்
நெறிமதிக் கவிகையி னிவந்த காட்சியான்
துறுவலி யொன்னலர் துதைந்த சேகரப்
பொறிமுடி யுழுதுழும் பொன்னந் தோளினன். (ங)

சுகமழை யுய்த்தவா னவர்க்குத் தூமமென்
மகமழை யுய்ப்பவன் வாரி நீத்தநீர்
அகனுறு கயலென வவனித் தொல்லுயிர்
சுகனுற மனுநெறி துலங்குங் கோலினன். (ச)

பொறையினி லிரும்புவி பொற்பின் வேனில்வேள்
கறையறு நயனுடைக் கல்விக் கெல்லைநூல்
முறையினி லறமகன் முரணுந் தெவ்வர்கைத்
தெறைவரை மீதுலாஞ் சினவெள் ளேறனன். (ஞ)

பொன்னடி மருவலர் புகழ்ச்சி பாவலர்
அன்னசீர் மறையவ ராணை நீணிலங்
தன்னரு ளாதுலர் சாற்று மூப்பொறி
முன்னவன் றமர்கொள முறைமை செய்புநாள். (ட)

ஆழியொன் றுருட்டிநீ டவனி மங்கையை
வாழிரும் புகழ்ப்படாம் வணிந்த கோவகன்
ஊழிஞாளி மாப்படுத் தூலவு வேட்டமேல்
ஏழுயர் களிற்றினு னெழுந்து சென்றனன். (எ)

வலைஞரு மண்டமர் கடந்த மள்ளரும்
கொலைஞரு மறவருங் கூர்ம்பன் ஞாளியும்
மலைமூரி கடலென வாரத் தானையும்
இலையயின் மன்னரு மியைந்து சூழ்வர. (அ)

மொய்புறு வெரிநிடை முகந்த கூன்சிலை
எய்புறு கணைக்குமுன் னெய்து கூந்தலம்
கொய்புளைப் பரியிவர் குமரன் சேனையால்
மய்யன்மா வுழிதரு வனத்தை முற்றினன். (கூ)

தலைத்தலை யெறிவலை விசிறித் தானையை
நிலைத்தலை நிறுவிவே லெறிந்து நீளெயி
றுலைத்தலை ஞாளியி னுரப்பிப் பல்லியம்
சிலைத்தலும் விலங்குக டிரண்டு மாண்டவே. (கo)

கார்க்கட முதுகடல் கறைகள் வைகறை
வார்ப்படை கில்லியர் மாமர் தேகர்வெம்
போர்க்கணை கதிர்களாப் புரவி யொன்றுவா
பார்க்கிறை யிருளடு பதங்கன் போலுமால். (கக)

அவையிலோர் கேழல்கை யகல மன்னவன்
கவையறு கவிழ்குரக் கலின மானிழிந்
தெவருநின் றலமர வெண்ணில் காவதம்
நவையறு கருங்கழ லுல வோடினன். (கஉ)

பெருந்தகை மற்றதைப் பிழைப்பில் வேல்கொடு
தெரிந்துயிர் கொண்டனன் சேனை வேறுவே
றிரிந்தன வுச்சிவா யிறையென் றாழ்படக்
கரிந்தன னடுபசி கனற்ற வெம்பினன். (கங)

பொருபசி யகஞ்சுடப் புறத்தென் றாழ்சுடக்
கருதிய தனிமகன் கண்ணுற் றுனியிர்
வெருவரா நடையினன் விமலன் வெள்ளிநூல்
மருமன்மே காதிகி மடத்தி னெண்புகை. (கச)

துருவியாண் டேகலுந் தோமின் மாதவன்
திருமுகங் கையினின் மலர்த்திச் செல்வனே
வருதியென் றரும்பெறல் வாழி கூறினன்
குருசிலும் வரன்முறை கூறி னனரோ. (கஙி)

செங்களம் புனம்படத் திரிந்து நால்வகை
அங்கமு மென்பெய ரடைய யாளெரு
வெங்கருங் கேழல்பின் மேவி நுன்னுழைத்
தங்கவர் தனன்பசி தணிப்ப வெண்ணினே. (கசு)

அறைகழ லரசரே றனைய கூறுநான்
மறைவலா னென்றவ மாண்ட திவ்வழி
உறைதியென் னிறந்துளோர்க் கூட்டும் வேள்வியின்
துறைமுடித் துன்பசி துடைப்ப லென்றனன். (கஎ)

துடைப்பது பகியெனிற் றுண்ணென் றின்னுணுப்
படைத்தருள் பின்னெனல் பரந்த வாரழல்
உடைப்புறு முறையுளாங் கொருவி வேறொரு
புடைச்சிறு துச்சிலைப் போற்றல் போன்றதே. (கஅ)

துலைமணி நாவெனத் துலங்கு கோன்மையால்
மலர்தலை யுலகருண் மதலை கேட்டியால்
புலனுறு மறையவர்ப் போக்கி யேனைய
குலனுணுங் கான்மகங் குறையு முண்மையே. (ககூ)

ஓழுக்கமும் வழக்கமு மோங்கு தண்டமும்
வழுக்கற நாடினை வழக்கொ ழுக்கினுல்
இழுக்கினர் தமைத்தெறு மெந்தைக் கிச்செயல்
வழுக்கென முனிசொல மன்னன் சீறியே. (உ0)

புழுங்கியெய் துழையரைப் புகுத்தி வெண்பலி
உழுந்திடு கருணைநல் லோசை மென்றுவை
அழுங்குற வவ்வியுண் டரசு தேக்கெறிந்
தெழுந்தனன் முனிவெகுண் டினைய சொல்லினுன். (உகூ)

அருங்கடி மனைபுகுந் தயின்ற வேள்வியை
முருங்கினை பலியின முகந்த காக்கையின்
இருஞ்சடி நகர்புகா தெரிவெங் கானிடைக்
கருங்கொடி யாகெனக் கழறி நீக்கினுன். (உஉ)

முனைவனல் கியமுயட் சாப மூண்டுவெங்
கனையிருட் காரியப்க் கவிகைக் காவலன்
தனைவினு ழுழன்றன னென்னிற் றாயவர்
இனையறு தவவலிக் கேற்றம் யாவதே. (உங)

ஆய்பத னுண்டிபோ யலறு காகமாய்ப்
பூபனும் பன்னிரு வருடம் போயபின்
மாபதன் கோதம னென்ற மாசறு
தாபத னுறைதவச் சாலை நண்ணினுன். (உசு)

நண்ணலு மழல்வினை கடத்தி நண்பகல்
பண்ணுறு பலியிடு பகவன் கண்டனன்
விண்ணிமிர் சிறையொடும் வெடித்த வார்ப்பொடும்
கண்ணுழல் காரல கார்வெங் காக்கையை. (உருு)

மேலத னியற்கையும் வேட்ட மேயதும்
சீலமா முனிவரன் செய்த சாபமும்
சாலையி னிடைந்தகுந் தன்னுட் கண்டனன்
கோலமுன் றையுமுணர் கடவுண் மாதவன். (உசு)

முனிவனைக் காண்டலு முன்ன ராக்கமும்
துனிபடு மிவ்வுருத் தொடர்ந்த வாற்றையும்
நனியுணர்ந் திறைமகன் ஞான வாரியை
இனியெனக் கருளென விரங்கி யேத்தினன். (உஎ)

பேமுறு மொருகரும் பிள்ளை வேந்திவை
ஏமுற வுரைத்தலு மிதயத் தெண்ணினன்
நாமுறு முனிபழி நலிய வாழியான்
தோமறுத் துயரிய தொல்லைக் காழியை. (உஅ)

வார்ந்தகா விரிமுத லிறுதி மாதலம்
ஓர்ந்தன மவற்றின்மிக் குபய வாளியிற்
கூர்ந்தநூற் கும்பனுந் தானுங் கோட்டிய
ஈர்ந்தடத் தினிலிரண் டிலிங்க முள்ளதை. (உக)

ஆலுமா மறையவர்ப் பிழைத்த லாதியும்
சாலநூ றியவிதி தடங்கு லாயதைக்
காலுலாங் கிசையின்மூக் கணியி னெம்பிரான்
வேலினுற் றியதடம் விளங்க நின்றதை. (உ0)

சருதுபு மன்னவ சுவலன் மாகநாள்
மருவிய தெம்மொடும் வருதி நின்னுடை
ஒருவிழிப் பவமின்னே யொழிப்ப மென்றுகொண்
டருண்மலி பொன்னிபுக் காடி மேலவன். (உக)

வேறு.

சேட்டிளஞ் செவ்வி வாய்ந்த திண்கழை குதட்டு மேதி
பாட்டிளங் தும்பி பாடப் பரிசிலர்க் குதவு வாரிற்
காட்டிமா மருத நீழற் கண்முகிழ்த் துறங்கு மந்தண்
கோட்டநீள் காழி மூதூர்க் கொடிமதிட் கோயில் புக்கான். (உஉ)

மாகநீர்ப் படிந்த மேனி வனசநீர்த் தடத்தி லாட்டி
நாகநீர் வேணியெந்தை நற்பதம் பரவிச் சூலத்
தேகநீர்த் தடத்துமாடி யிரும்புன லெளிப்ப வெங்கட்
காகநீ ருருவ மாறிக் காவலன் பொலிந்தான் மாதோ. (உங)

சிறுவரை யடைந்த மாசு தெண்டிரை யணைய நீர்மை
உறுவரை யடைந்தாற் றீர்வ துண்மையே யிவனிற் நீரின்
மருவரை யொருவ னுடி வருடமீ ராறு நீங்காப்
பெருவரை யணைய மாசைப் பிரிந்தனன் றெறித்த நீரால். (உச)

பின்னெடுங் குணக்குன் றன்ன பெருமுனி யிறும்பூ தெய்தி
அன்னெடுந் தகைக்கோ ரைந்து பதத்தையு மளிப்ப வன்னன்
முன்னெடுஞ் சாப மீந்த முனிவரன் வேள்வி முற்றித்
தன்னெடுந் துயர்விண் டென்னத் தன்னுயர் விண்டான் வேந்தன். (உரு)

முத்தலைத் தடம்புக் காட்டி முரட்டடங் கரையி னூடே
பைத்தலை யரவ வேணிப் பரமனை நிறுவிப் போற்றிப்
பித்தலைத் தென்னை யாண்ட பிரமகா தனையும் வாசத்
தொத்தலைத் தருமென் கூந்தற் சுந்தரி தனையும் போற்றி. (நசு)

ஆனமு தைந்துஞ் சேதா வளிநறும் பாலுந் தேனும்
எனவு மாட்டிப் பன்மா மலர்கடூஉ யிமய மீன்ற
பானலங் கண்ணி யோடு பணிந்துசூக் குமம்ப கர்ந்த
மாநலங் கொண்டெம் மாற்கு மணமுரு காற்றி னானே. (நஎ)

சந்ததம் விழவு காணத் தகும்பொருள் கோடி நல்கி
நந்தியூர் பகவன் கோயி னற்பணி பழுது போக்கி
மைந்துற விரித்து தாவா வல்லிருட் பிழம்பு சீக்கும்
செந்தழல் விரிக்குஞ் சோதித் தெய்வத மணியொன் றீந்தான். (நஅ)

நிருமல போற்றி குன்ற நித்திய போற்றி ஞானக்
குருபர போற்றி யொற்றைக் குழைவலாய் போற்றி மேனுள்
அருமுனை யாழி யான்மா லலர்விழி கவர்ந்து தெண்ணீர்
இருமணிச் சூலத் தாலென் னிருவிழி யளித்தாய் போற்றி. (நக)

போற்றியென் றமலன் காழிப் புண்ணிய னிச்சை பூண்டு
சீற்றவே ரிந்த தெய்வ முனியையும் பணிந்து செவ்வே
தூற்றுசீர் முகில்பெ ருத செங்நெலிற் றுவண்டு கண்கள்
நாற்றிசை பரப்புந் தொல்லை நகர்வயி னடைந்தான் மன்னோ. (சஅ)

பின்னிரு கூந்த னல்லார் பெருங்களி யமுத மாந்தித்
தென்னிசை வளர்த்துந் தெவ்வர் சேண்முடி பணித்து நேமி
இன்கிலத் தோச்சி மேலு மிறுதியி னிறுதி யில்லான்
பொன்னடி நீழல் புக்கான் பொருந்தலர்க் கடந்த வேலான். (சக)

காகமோ சனமா மின்ன காரியம் புரத்தியா னேனும்
ஏகநா ளரைநாள் யாமங் கணமரைக் கணமி ருந்தோர்
நாகமா லிகையான் முல்லை நல்லுல கடைவ தல்லால்
போகபூ மியினும் போய்ச்சார்ந் தடைவரோ புகலி னம்மா. (சஉ)

மெய்ப்படு மெண்ணெ யெள்ளும் வெண்ணெய்தீம் பாலுங் கட்டி
துப்படு சாறு மூரற் றுருகுதிரல் லனவு மாகா
அப்பரி சறத்தாற் காளி புரத்தவ தரித்து ளாரும்
ஒப்பிலி யாவ ரல்லா லுற்பவத் தினரா காரே. (சங)

பன்னிய காக நீங்கி மறுபவம் படைத்த லாலே
பொன்னிரு ழுந்தண் காழி புனர்சன்ம புரமென் றோர்பேர்
மன்னிய தென்று ணெண்ணின் மறைபல வடித்த கேள்வி
துன்னிய முனிவன் முனைத் தொழுமுடி முனிவன் முனே. (சச)

[அ-ஆவது. காகவிமோசனமான வத்தியாயம் முற்றிற்று.]
(ஆகத் திருவிருத்தம் சுஙசு.)

கூ-ஆவது. புகலியான வத்தியாயம்.

விண்ணிய லுருவக் காரி வேற்றுரு வமைந்து தோணி
நண்ணிய வொருவன் முளே நண்ணிய துரைத்த மேலோன்
புண்ணியப் புகலி யாய பொருளையுந் தெரித்த வாறே
கண்ணிய வறிவு கொண்டு கழறுவான் கருதி னேனுல். (க)

அறந்தலே பணிப்ப நீதி யரசுகோல் கோட நீண்ட
மறந்தலே யெடுப்ப நான்கு வருணமு மருண்டு தத்தம்
திறந்தலே கலங்க மாதர் செயிரறு கற்பு நீங்கி
இறந்தலே படப்பொல் லாத விருட்கலி பரந்து மேனுள். (உ)

பரந்தவன் கலிப்புத் தேளைப் படிறுடைக் குறளை நூலின்
அரந்தைமந் திரத்தாற் பல்லோ ரழுகணீ ராட்டி யெள்ளிச்
சுரந்தபொன் மலரிற் பேதைக் கோயிலுட் சூட்டிக் காம
நிரம்பழு தருத்திப் பூசை நீனில மன்ன ஞற்ற. (ங)

மானநூன் மறையோர் யோக மகளிரா லவிந்த வேலு
தானமெண் ணிலவேட் டங்கைத் தழலும்வீ றழிந்த வாக்கில்
ஆனபொய் யுரையால் வாழ்த்து மாசிக ளவிந்த பல்லோர்
போனகம் பயில்வால் வேதம் போற்றலு மவிந்த மாதோ. (ச)

தொழுகுலத் தவர்மா ழாப்பச் சுருதிநூற் றுறைகள் யாவும்
இழிகுலத் தவன்வி ரிக்கு மிறையில்லே வினைக ளில்லே
முழுவதுந் தானே யென்று மொழிந்துமுற் றுணர்ந்தார் போல
இழுதைக ளொடுசெம் மாக்கு மிகம்பர மில்லே யென்றே. (ஞ)

அரிவைதன் கொழுநன் கேட்ப வாய்மதி யுறுத்து மன்னன்
தெரிவில வதற்கு மைந்தன் றெருட்டுறுந் தெருட்டுங் காலே
உரியதன் றெனம றுத்தா லுணர்விலி யஞ்ஞை யின்னும்
பிரிவிலன் மருந்திற் றீராப் பித்தனென் றெள்ளு மாங்கே. (சு)

மறப்பது சூரவன் வாய்மை மடித்தினி துண்ப வேரி
துறப்பது பெரியோர் கேண்மை தொடங்குவ விடும்பை சூது
சிறப்பது கயமைச் சூழ்ச்சி செய்வது காமப் பைங்கூழ்
இறப்பது கடவுட் பூசை யிசைப்பது புலனில் கோட்டி. (எ)

வற்புறு மகங்க டேய்ந்து மழைவளஞ் சுருங்கி மாதர்
கற்பிகள் தான்பா லஃகிக் காசினி பொய்த்துத் தேயம்
பொற்பழிந் தொழுக்க மாறிப் பொய்கொலை களவு காமம்
பற்பல களியாட் டாடப் படர்கலி யோடி மங்காள். (அ)

புறக்கொடுங் கலைகண் மொய்ப்ப புலம்புறு பைங்கூழ் போன்று
திறப்படு முலக மெங்குஞ் செறிகலி புதைப்ப நோக்கி
இறப்பருந் துயரா லோர்சா ரிருந்துதன் னிலம்பா டுன்னி
அறப்பெருங் கடவு ளுள்ளத் தாரஞ செய்தி னனே. (கூ)

ஆடகக் கொடிமென் சாய லன்னையோ டமர்ந்த ஞான
நாடகக் கொழுந்தை வெள்ளி நகத்திடைப் பரவிப் போந்த
மாடகப் பருதி பற்றன் மகதியாழ் முனிவ னன்த
நீடகங் குழையா நின்ற தருமனை நெறியிற் கண்டான். (கo)

என்கொலோ தருமப் புத்தே ளீண்டிருந் தனைநின் சோதி
மின்குலா மேனி வாடி மெலிந்தனை யிளவெண் மூரல்
உன்குலா முகத்திற் காணை முற்றது சொற்றி யென்ன
நன்குலாந் தருமச் செல்வ ணுணியீ துரைக்கு மன்றே. (கக)

மூன்னுக மதனி னுன்காய் மொழிந்தபின் னுகத்தின் மூன்றுய்ப்
பின்னுக மதிலி ரண்டாய்ப் பிறழுமிக் கலியி னொன்றுய்ப்
பன்னிய வறங்க ளின்ன பாங்கிலே தாழத் தாழ்ந்து
மன்னிய தாள்க டேய்ந்து வருந்தினேன் வருந்தி னேனுல். (கஉ)

கலியிடைச் சுருங்கி யொற்றைக் கால்கொடு திரிக லாற்றேன்
வலியுடைத் தாளோர் நான்கும் வரும்வழி யருளு கென்ன
மெலிவிலை யறிந்த தெய்வ வீணையங் கிழவ னீண்டே
நலியலை தரும வென்று நகைமுக மலரச் சொன்னன். (கங)

களித்தபுள் விலங்கு தம்மிற் கனிவுகூர்ந் தின்ற தாய்தம்
அளித்தலைப் பிரிந்த ஞான்றே யயலெனத் திரியு மாபோல்
சுளித்தலை யில்லோ யுன்னைத் தோய்ந்தநா ளுன்னுள் பொச்சாந்
தொளித்தநாள் கலிநா ளல்லா லுன்னில்வே றுண்டோ கூறுய். (கச)

பொன்வலி காட்டும் வேணிப் புண்ணிய னுளத்து வந்தாய்
நின்வலி நீயுங் காணுய் நிகழ்த்துமுன் னுகத்திற் குன்று
மன்வலித் தவமா சாரம் வளருண் மெய்ம்மை மல்க
உன்னுடை நான்கு தாளா யுற்றன நினக்கு வேந்தே. (கரு)

அதுவழி யுகத்தா சார மருண்மெய்ம்மை மூன்று மோங்கக்
கதுவுபொற் றூளோர் மூன்றிற் கவின்றனை மற்றை யூழி [றுய்
பொதுவுடைக் கருணை மெய்ம்மை பொலிந்திடத் துணைத்தாள் பெற்
முதுகலி மடங்கன் மெய்யே முயங்கவோர் தாள்பெற் றுயால். (கசு)

மெய்யொன்றே நின்ற வாற்றுல் விரிசுட ரிரண்டுஞ் செல்ல
மய்யொன்று புணரி நிற்க மன்பதை மலிந்து தம்முள்
பொய்யொன்று முள்ளந் தேறப் புகன்றுசூ ளறவு காணக்
கய்யொன்று மழல்சான் றுகக் கண்ணுவ பலவுங் கண்டாய். (கஎ)

ஆதலி னெருதா னூற்று யணுக்கள்செய் வினைக்கீ டாக
மாதொரு பாகன் றந்த வகுப்பலாற் கலிவே றுண்டோ
நீதிய நுறுவா யல்லை நிகழ்ந்துள பரத கண்டத்
தோதுதென் றிசையிற் பொன்னி யுத்தர திசையி னூடே. (கஅ)

வாரட மிடைந்த கொங்கை மடநலா ரோடும் வைவேல்
சூரட மெலிந்த விண்ணோர் துதைந்தனர் புகலான் மூதூர்
ஏரடர் புகலி யென்றே யிலங்கிய திறுதி வேலை
நீரட வீழியா தொன்றி நின்றது நீயுங் காண்டி. (ககூ)

அனையதி லெம்மா னோர்மூன் றருளுருப் புணர்ந்தான் றன்னை
நனைமலர் கொடுதூஉய்ப் போற்றி நான்குறு தாளும் பெற்று
வினையற விலங்கு கென்று விடுத்தலும் வீணைச் செல்வன்
புனைகழ லிறைஞ்சிப் போந்தான் புண்ணிய வுருவத் தோன்றல். (உ0)

வேறு.

தருமா திதருந் தருமத் தொருவன்
திருமா துறைசெம் பியகா டணுகிப்
பெருவால் வளைவீ சுபெருந் துறைநீர்
வருகா விரியா டினன்மா டுறவே. (உக)

வடபான் மயில்வால் சிறைவீ சியகால்
அடல்வேல் விழியார் மணியூ சலசைந்
துடனு டவுலா தருதண் டலைசூழ்
இடனுர் பிரமா புரமெய் தினனுல். (உஉ)

பொன்னு ரெயின்மூற் றியபொற் றளிவாழ்
தன்னே ரிலிதா டொழுதாய் மறையோன்
முன்னு துதடத் தினின்மூழ் கியதன்
பின்னு தனருச் சனைபெட் புறவே. (உங)

வழிபா டுவழா துமுடித் தயலே
மொழிதா ருவினீ முலின்முக் கணனைப்
பழிபோ யதனு மமுறப் பயில்வித்
தொழியா திருதா னமுமுண் மையினுல். (உச)

வந்தித் துவணங் கினன்மா வருடம்
பந்தித் தொருதூ துளர்கால் பருகிச்
சந்தித் ததவந் தருமன் செயலால்
அந்திப் பிறைவே ணியனவ் வுழியே. (உரு)

முகிலூர் குழன்மின் னெடுமூ விலையார்
இகல்வே லொடுமெய் தலுமீ ரடிமேல்
அகலா தவருத் திகொடாய் மலர்தூஉய்ப்
புகவீழ்ந் துபுகழ்ந் துபணிந் தனனுல். (உசு)

பணிகின் றவன்மே னிகளைப் பணிதீ தாய்
அணிசெங் கையினீ வியருந் தவநீ
தணியெவ் வரமுந் தருதுந் தருமா
பணியென் றபணித் தொடையா னெதிரே. (உஎ)

உன்மா ணடியுள் ளமிருந் ததெனு
என்மா முதுகெய் தவுமீ ரிருதாட்
சொன்மா வலிகொண் டுசுமக் கவுமுன்
பொன்மால் விடைபோல் வலியுந் தருவாய். (உஅ)

என்றின் னவிரந் தவரம் பலவும்
பொன்றுன் னுபொலன் சடையா னுதவி
என்றுந் தனியே றருவா யுறைகென்
றென்றுங் கரமுச் சியில்வைத் தறைவான். (உக)

செம்மா மறையுஞ் சிவகண் டிகையும்
மெய்ம்மா னவெண்ணீ றுமொரைம் பதமும்
இம்மா னுடைகின் னெடுமைந் திவையே
எம்மோ டொருதன் மையவென் றறிநீ. (கூ)

வேறென் றும்விளம் பலிமெய் விரதன்
நீறும் பதமைந் துகிறைத் துளவன்
ஏறும் பொறையன் பிறனிற் கவரான்
வீறுஞ் சிவபூ சைகள்மே வுழியும். (கூக)

அரசோ டுதுழா யணிகூ விளமா
னிரைவே தநெடுந் தளிசந் தமடம்
மூறைதூல் விரிவேள் வியுஞற் றுழியும்
வரையா துவதிந் துவிளங் குகநீ. (கூஉ)

நீயே வநெடுந் தவமா மவையே
நாமே வுவகம் மருள்கொண் டுலகம்
காமே வவிளங் குமரோ தகையால்
யாமே வுலகெங் குநிறைந் தமையால். (கூங)

இவணீ செயுமிவ்விங் கமிதைப் பணிவார்
பவமா றுகபாய் பரிமே தபலன்
துவமோ டினிதெய் துகதூ யொளிவிட்
டவரா ளுகநங் கயிலா யமதே. (கூச)

பொருமா டைபுனைந் தவர்மா வருணன்
திருமே வுகசெய் வழிபா டுடையார்
ஒருகோ டிமகப் பலனுற் றுமணந்
தருமா தியினெய் துகச்சந் ததிமே. (கூடு)

வெடிசக் தமிழைப் பவர்மிக் கமகம்
படியொன் றுபவுண் டரிகம் பெறுக
நொடியிங் ஙனிருப் பினுநோ தகவற்
றடியந் தமிலா வுலகா ளுகவே. (ஙசு)

நடநா தனிவ்வா றருணல் கியுகந்
தடலே றுருவா னவன்மா முதுகில்
படநா கணையான் விழிபற் றியநீள்
மட்லார் வனசங் கலைவைத் தனனுல். (ஙஎ)

இடையிற் கொடியோ டினிதே றியபொற்
சடைமுத் தனருட் கொடுதன் னுருவோர்
விடைபெற் றவன்மே லும்விடா விடையேற்
றடையத் தனரும் பதமுற் றனனுல். (ஙஅ)

பரிவார் தருமன் பணிபண் ணவனும்
தெரியா நிலைசென் றனனென் றுலவா
விரிவார் முதுவே தவியா தனருட்
பிரியா முனிபே சினன்மா சறவே. (ஙக)

[கூ-ஆவது. புகலியான வத்தியாயம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் கூஎடு.]

——:o:——

கo-ஆவது. சிரபுரமான வத்தியாயம்.

பரவு கொடுங்கலி நலிய மெலிந்துயிர் பதறி நெடுந்தருமன்
சரண மடைந்துள நெறியிவை யிங்கிது தனிலொரு வன்பணியச்
சிரபுர மென்றொரு பெயரின் விளங்கிய திறனும் விளம்புவெனென்
றுரவன் விளம்பிய கதையை யுணர்ந்தறி லொருவழி யிங்கறைவாம். (க)

அமரரும் வெம்பிய வசுரரு மந்தர வருவரை கொண்டெறிபால்
இமிழ்திரை யுந்தியி னடுதறி சந்திர னிடுமுர சுங்கயிறுய்த்
தமர நெடுங்கடல் குழுற விரும்புவி தகர்பட வெண்டிசையும்
திமித மிறைந்திட வழுதம் விழைந்துறு திறலி னருங்கடைநாள். (உ)

சுலவு தடங்கட லலமர மண்டிய சுடுகடு வெங்கறைநீர்
அலர்மக ளேந்தரு முழுமணி வெம்பரி யடுகரி யும்புவிசூழ்
நலனுறு மங்கையர் சுரபிகள் வந்தபி னரைதிரை துஞ்சலிலா
திலகு மருந்தெனு மமுத மெழுந்ததி லெவரு மகிழ்ந்தனரால். (ங)

எழுமமு தந்தனி யிருமுது பந்தியி னினிது பகுந்திடுமா
றெழுகிய வன்பினின் மழையு றழுந்திரு வுருவ னெழுந்துணர்வால்
முறுவலி துன்றிய நிருதரு முண்டுழி முரணி முடிந்திலராய்
அழிவறு வெஞ்சமம் வீளுயுமி வஞ்சரை யடுதிற மெங்கணனு. (ச)

மதிவத னம்புனை திலதமும் வெண்பிறை வரிதுத லுங்குழையோ
டெதிர்பொரு துந்துணை விழியு மருங்கொடி யிடையு நறுங்குழலுக்
திதலை யரும்பிய விளமுலை யுங்கொடு திருவள்ர் பெண்கொடியர்ய்
அதிர்செய் சிலம்பொலி சூமுற நடந்தன னசுரர் மயங்கிடவே. (நு)

குறுநகை வெங்கய லெறிவிழி பொன்புனை குவிமுலை கண்டிவளே
உறுகதி யென்றுக ணினைபறி யுண்டவ ருணர்வு மழுங்கியிடத்[மையோர்
தெறுவியொர் செங்கையி லமுதொரு செங்கையில் வரும்வகை சென்றி
முறையி னிருந்தகை நிறைய நறுஞ்சுதை முதல்வ னிடும்பொழுதில். ()

வேறு.

அங்கிலேய மயங்குநரி லடற்சயிங்கி கேயனென்பா னமரர் பங்கி,
தன்னிலிரு சுடர்க்கிடைவேற் றுருக்கொடுபோ யிருந்தமுதந் தனைக்
கொள் காலை, மின்னுறுமா ழியன்கதிர்வா னவர்குறிப்பாற் றெறுவி
கொடு விசைத்து வீசப், பின்னரவன் றலைதுணிந்து விசையினில்வீழ்ந்
ததுகாழிப் பெருவீ திக்கண். (எ)

அவ்வெழில்வீ தியின்கீழ்பா லொருகுரோ சத்தளவி லனைய வெய்
யோன், வெவ்வெழில்யாக் கையும்வீழ்ந்த திருகூறு மமுதமுண்ட வியப்பி
னுலும், இவ்வெழிற்கா ழியையடைந்த கலத்தாலு மிருபாந்த னிறைவ
ராகிச், செவ்வியொடு பணிகுவரா லன்னவரின் முடிக்கூற்றுத் திற
லோ னிப்பால். (அ)

வேறு.

நோதக வித்துணை நானடை யத்தனி கோனல ரிற்பிழைகூ
ருதவ மிக்கதி வாகர னைத்தெறு மாறு நினைத்திமையோர்
நாதனை யிப்பிர மாபுரி முத்தனை நாலு மறைச்சிகைவாழ்
பாதனை யர்ச்சனை பேணி வலித்தெதிர் பற்றிய முற்றறிவால். (கூ)

நீடல கைக்குழ வார்கண் முகிழ்க்கினு நீள்கண் முகிழ்த்தறியா
ஆட லிசைப்பல தூரிய மிக்கொலி யாலய முற்றலரோன்
ஏடவர் பொற்றட மூழ்கி யருட்பிர மேச னடித்துணைமேல்
ஊடுரு கிப்பல பூசை முடித்தய லூத நிலைத்திசைவாய். (கo)

மாணுறு மோரிரு கோலள வாயொரு வாலிசெய் தாயிடையோர்
தாணுவை யாலய மீதுசெய் தோரிரு தானமு மேன்மையினுல்
ஆணம முவழி பாடுடை யானசை யாமலை வாயழல்வாய்
ஊணிலி யாய்வளி யூணுகர் மாதவ மோவற வாடினனுல். (கக)

கார்படு நாளையி லேவெளி மேலொரு காலினி லேநிலையா
ஓர்பனி நாளையி னீரிடை மூழ்கிநல் யோகினி லேயுணர்வாய்ச்
சூர்படு மாணவ வேரற வீசுசு கோதய வாரியிலே
ஆர்படு நேயமுறுதரு வேபொரு ளாயுறை வானெதிரே. (கஉ)

பரையொரு பக்கலி லிலக மலைக்கிணை பகர்விடை யிற்கரமேல்
வரத மழுப்படை பொலிதர முக்கணும் வலிய வரைப்புயமா
உரக மணித்தொடை யசைய முகத்தரு ளொழுக வரிச்சிலைவேள்
முரணை யகற்றிய பிரம புரிக்கிறை முதல்வ னுதித்தனனே. (கங)

எந்தை யெழுந்தமை கண்டிரு கண்களி னும்புள கந்தருநீர்
மூந்த வுடம்பு குளிர்ந்திரு செங்கை முகிழ்த்து முகுந்தன்முனேர்
சிந்தை யுகந்து குழைந்து பொதிந்த செழுஞ்சர ணங்களின்மேல்
வந்தணை யுந்துதி யும்பல தந்து வருந்தி யிரந்தனனால். (கச)

எஞ்சலி லண்ட ரினஞ்செறி பந்தியி னின்ப மருந்துணநான
செஞ்சுடர் வெண்சுட ரின்குறி கண்டு தெரிந்து நறுந்துளவோன்
வெஞ்சின மண்டி யரிந்திட விங்கு வீழுந்தனை னின்பணியால்
உஞ்சனை னென்கண் விரும்பி யிரங்குவ தொன்றுள தெம்பெருமான்.()

புரைபடு மூற்பழி வரினவ ரைப்பழி புரிவ தெமக்கியல்பால்
நரைதிரை யற்றதெள் ளமுத மெடுப்புழி நலிவு செயுஞ்சுடராம்
அரையர வர்க்குளவ் விரவி தனைத்தெறு மடலே பணித்தியெனை
வரைபொரு வப்பொரு கரியுரி யுத்தமன் மனமலரப் புகல்வான். (கசு)

வேறு.

பொறிபு லாதிகள் புறக்கடை கண்டொரு பூதாள்
நிறுவி மாதவ மிழைத்துளார் நின்னிகர் யாரே
உறுதி யின்னதே லளித்தன முன்னுட லாய
வெறுள்செய் வாளரா வேந்தனுந் துணைபடைத் திகலால். (கஎ)

இயலு நள்ளியோ டாளரி யிருசுட ரமைய
முயலு மால்புகர் சேய்மறை யோன்சனி முறையே
அயல யற்களே யிரண்டினு மமைவரு மமைந்த
வியனு லாவிய சோதிசக் கரத்திரு வீரும். (கஅ)

வருடை யாதிபன் னிரண்டினும் வரன்முறை யெதிரே
பொருதி ராகுகே துக்களா யேழினேழ் பொருந்தத்
திரிதி ரீருவா வொழிந்தநாட் சுடர்களேத் தீண்டீர்
ஒருபு தத்தினேர் மீனிலோர் வீட்டுறி லிருப்பீர். (கஙு)

துத்தி யம்புரிந் தருஞ்சிரந் தவம்புரி தொடர்பால்
இத்தி ருப்பதி சிரபுர மாகவிவ் விலிங்கம்
பத்தி யாற்பணிந் தித்தடம் படிந்துளா மோரெண்
சித்தி யெய்துக வுளத்தழுக் காறுக வுர்ந்தே. (உ0)

என்று நல்வர மளித்துமை யவளொடு மேற்றுக்
குன்றி வர்ந்தவன் மறைதலுங் குழகன தருளால்
அன்ற னுக்கைபெற் றரும்பதம் புக்கிரு சுடர்மேல்
என்று மின்னணம் படங்கொடு மறைத்தன ரிருந்தார். (உக)

மூறுக்கு கோட்டுமா னிரலிகண் டேதியான் முடிமேல்
செறித்த தாண்மடக் குண்டெனச் செழுஞ்சுட ரிரண்டும்
குறித்த தம்முடை மொழியினுற் சுடுவிடங் கொழித்துப்
பொறித்த மாசுணம் படக்கதிர் மழுங்கினர் போவார். (உஉ)

கொள்ளை வெள்ளெயிற் றரவர சிரண்டொடுங் குழுமா
எள்ளல் போயகோ லொன்பதா கெனவிவண் வதிந்த
வள்ள றன்செய லுரைப்பரி தென்றனன் மறைநூல்
தெள்ளு மாமுனி யிணையடி தொழுமுனிச் செம்மல். (உங)

மன்னி ரும்புய றவழ்கொடி மாகமூ டறுக்கும்
கன்னி யாரெயி லுடுத்தபொற் காழிமா ஙகரத்
தென்னை யாளுடை யான்முன மிக்கதை படித்தார்
பன்னி வேட்டுளா ரிருவரு மேபவம் படியார். (உச)

[க0-ஆவது. சிரபுரமான வத்தியாயம் முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் சுகூகூ.]

——: o :——

கக-ஆவது. குருத்துரோக விமோசனமான வத்தியாயம்.

பிறைவா ளெயிற்றேரர வண்ணல் பெருஞ்சிரப்பே
ரிறைமா நகர்க்குற்றது கூறி யிதற்குளாசான்
குறையால் வருதீவினை போயது கூறுகின்ற
நிறைமா தவன்சொல்வழி யானு நிகழ்த்துவேனுல். (க)

பூவாளி தாழப் பொறியட்டவர் நேமிவாய்ந்த
தேவார் வனம்வாழ் திருமாமுனிச் செல்வர்மேனுள்
மூவா யிரருஞ்சிவ காதையின் முன்னமிக்கார்
தாவா வருட்சூதனை யொன்று வினுதல்செய்வார். (உ)

மஞ்சூரு மைம்பால்வன வல்லி மணந்தகோவும்
நஞ்சூர் களத்தானடி யேவல்செய் நந்திதானும்
நெஞ்சூர ருட்டேசிக னின்னெடு மூவரன்றே
தஞ்சூ ருலகுக்குரு வென்ப தலத்தின்மிக்கார். (ங)

கவனம்படு பல்லுயி ருங்கதி காட்டியுய்ப்பான்
சிவகண்டிகை யுந்திரு நீறு மெழுத்தொரைந்தும்
புவனந்தொறு மாரழ லாடி புணர்த்ததேபோல்
தவனம்படு மெம்முழை நின்னையுந் தந்தவாற்றுல். (ச)

ஆசா னியல்பும்பிழை யாதடி யான்செய்மாண்பும்
கூசாதவ னீப்பிழைத் தான்படு கோளுமெல்லாம்
மாசானது பாறிட நின்றிரு வாக்கினின்று
பேசாவிடி னெவ்வழி யுய்வது பேதையேங்கள். (ஞ)

எனவா தரத்தோ டிவைகூறிய சவுனகாதி
முனிவோ ருவப்ப முகிழ்வாணகை பூத்தசோதிக்
கனிவாய் மலர்ந்து கருணைக்கண் மலர்ந்ததொன்னூல்
தனிவார்கலி யன்னவ னின்னன சாற்றலுற்றான். (கூ)

நன்றே யிவணீர்வின வுற்றது ஞானவாசான்
என்றே பிரமீசனே யெய்தி யியம்பலொல்லா
ஒன்றே யெனினுமுணர்ந் தாங்குரை செய்வெனென்னுக்
குன்றேய் குணத்தான் குரவோனியல் கூறுகின்றான். (எ)

தோளாமணி போற்றொழு தொல்குல மேவியீன்ற
கேளாரிரு தெய்வத பூசை கிடைத்துவேதத்
தாளாளுயர் வைதிக சைவமுந் தாங்கியெம்மாற்
காளாகி நின்றனவ னென்ப வறிந்தவாசான். (அ)

காரன்ன வீகைக் கதிரன்ன தூவற்சிவான்றோய்
நீரன்ன தூய்மைநிறை கோன்முறை யன்னநீதி
பாரன்ன வாற்றல் பனிமால்வரை யன்னதோற்றம்
சீரன்ன நோன்பு திரையன்னதொல் கேள்வியாய்ந்தே (கூ)

நடையே பலவங்கமு நல்க நவிற்றுமன்னன்
இடையே பலதெய்வமு மெய்த வியம்புமாதிக்
கொடையே யிருமைப்பய னுந்தரக் கோதிலான்கண்
கடையேயினப் பாடறுத் துக்கதி காட்டுமேலோன் (கo)

நன்மார்க்க ஞைரம்பதத் தோடறு நான்கும்வல்ல
சன்மார்க்க ஞற்றுந் தழலன்றரு மாதியோதும்
சொன்மார்க்கன் வெண்ணீறுடு கண்டிகை தோய்ந்தவுண்மைப்
பன்மார்க்கன் மூக்குற்றமு நீத்த பழிப்பின்மேலோன். (கக)

இவனே குரவோ னிவனன்றியு மானமுன்னோன்
நவைதீர் விரதன்சிவ வாச்சிய நன்குணார்ந்தோன்
சுவைஈ ரமுதீபவ னச்ச மகற்றுந்தொல்லோன்
புவிமே லிவருங்குரு வென்ப பொருட்டுணிந்தார். (கஉ)

அய்யந்திரி பொன்றிலா தாயறத் தாறுகூறி
மெய்யென்றுயிர் போற்பல மன்னுயிர் மேலுமன்பு
செய்யுந்தகை யால்வழி பாடுடைச் சீடனுக்கே
கய்யொன்று நெல்லிக்கனி போற்பொருள் காட்டல்வேண்டும். ()

காலம்புனை கற்பனை யில்லி கனிந்துயிர்க்கா
ஆலம்புனை நீண்முடி யைந்து முகத்தினின்று
நாலைந்து மெட்டு நயந்தோதிய ஞானநூல்கள்
ஓலம்புரி கிற்பன முப்பொரு ளுண்டுமாதோ. (கச)

பதியென்று தொல்லைப்பசு வென்றடர் பாசமென்று
துதிநின்ற மூன்றி லுயிரோடுறத் தோய்ந்துதோயா
அதிபன்பதி யாமவ னுருரு வொன்றையென்றும்
பதியும் பொருளே பசுவாமிவை பன்னின்மன்னே. (கரு)

மாமாயை மாயை விஞ்ஞாணவ மேமறைப்பே
ஆமாமிவை பாசமகாதி யருட் பெறுங்கால்
போமா லருளும் புணரப்புணர் கின்றவின்பத்
தேமா ஞெளியேபொரு ளென்றனர் தேர்ச்சிவல்லார். (கசு)

விளியா விருட்டை விழுங்கிச்சுருங் காததீப
வெளியாதவ னுடொரு வாதுற வுண்டதேபோல்
தெளியாமலப் பாழிருள் சீக்குமோர் தெய்வஞான
ஒளிகாரணத் தேவ ஞெளியோடுற வுண்டதுண்மை. (கள)

இவ்வாறுயிர் கட்குயி ராம்நெறி யெங்குமொன்றுய்ச்
செவ்வாய்த் தெளிந்தோரறி யாதறி கித்ததாகி
ஒவ்வாவொரு பேரொளி யென்ப வுயர்ந்தகாழி
மொய்வாய்வரை மேலம ருங்குரு மூர்த்திதானே. (கஅ)

அல்லார்மிடற் றுணி யாலி னிழற்கீழன்று
சொல்லாது சொன்னபொருட் பாடு தொகுத்துரைக்க
வல்லானருட் டேசிக னன்றியு மற்றோர்தெய்வம்
எல்லாரையும் வீடெளி துய்க்கும தியாதுகண்டீர் (கசு)

மண்ணங்கறி சோறமைத் துண்ட மகாரின்யாமே
எண்ணம் பிரமமெனக் கூறிய வீணராதி
கண்ணுங் கயமைத்துறை ஞர்க்கிது காட்டலாகா
நண்ணும் பருவத்தவர்க் கீது நவிற்றலாமால். (உ0)

அருகித்தரு பஞ்சடர் குண்டிகை பேறலாகா
பெருகிப் பயில்வார்க்குத வாமடற் பெண்ணேபோன்று
தருநர்க்கிலை காயுத வாமூடத் தாழைபோன்றும்
உருகிப்பணி வாரொழித் தல்லவர்க் கோதலாகா. உக

இருளொன்று தன்னைத் தெரிக்குந் தெரியாவிருட்டாய்
மருளும் மலவல்லிருட் சத்திரு காரமாக
ஒருவுஞ் செயலாகுவ தோதுறு காரமாகக்
குருவென்ற சொற்குப்பொரு ளீது குறிக்கொள்வீரால். (உஉ)

வேறு.

ஏதமி லஞ்ஞய குரவஞ் யடுத்தாங் கிரவினும் பகலினும் விள்ளாக்,
காதன்மீக் கூர முன்னெடும் பின்போய்க் கைவிடா துடலிடை நிழல்

போல், கோதகன் மனத்தாற் குணத்தொடு பழகிக் குறிப்பறிந் தொழுகியுள் ளவர்மாட், டாதுலர் போன்று மரகிளஞ் செல்வ ரடுத்துழி யிழிந்தவர் போன்றும். (உங)

வெருவரு முளத்தன் பொறிவழி புலன்கள் விடுக்கிலா விரதன்வெந் தழலன், தருமதூ லறிஞ னிருமுது குரவர் தம்மடித் தொழும்பினன் யாண்டும், பொருவருங் குரவன் மக்களி லொருவன் போலுமென் றெண்ணலான் பொறையன், பருவமோர் நாலி யியற்றுறும் பருவம் பயின்றவன் படிறுதீர் மொழியான். (உச)

பாசிலை யரம்பை யீர்ந்துணி தழல்வாய்ப் படிந்தன பருவமுங் கவை. நா, வீசிய தழல்வா யிந்தனத் திரளை வீழ்ந்தன பருவமுங் கரிகள், மூசிய தழல்பெய் தனபரு வமுமிம் மூன்றுமற் றூழன் முகத்தில், ஆசியல் பஞ்சி போன்மெனும் பருவ மடுத்தவ னெடுத்தமா ணைக்கன். (உடு)

துலைநிலை துன்னீ ளிருவினை யொத்துத் தொடக்குறு மிப்பரு வத்துக், கலைபல தேர்ந்து குரவனீ ரடியைக் கைகொடு வினைக்கடல் கடப்பான், மலைவில் கண்டிகையு நீறுமைந் தெழுத்தும் வணைந்தமா ணவன் றிறத் தொருசொல், உலைவற வளித்த குரவனு மவனு முறுவரால் வீடுபே ரெருங்கே. (உசு)

மூவெயில் படுத்தா னடியரைப் பணிதன் முதல்வனு ராதனை விரும்பல், ஆவலிற் புரித லிறையடி பணித லான்றவொப் பிலிபுகழ் கேட்டல், பூவலர் கண்ணீ ரரும்பமெய் சிலிர்த்தல் புண்ணியன் பணிகொடுண் ணுதல், ஓவறு பணியோ டெண்வகைப் பத்தி யொழுக்கிலார்க் கோதுத லிழுக்கே. (உள)

பூதகா ரியத்தி னெழுவெயி லொளியைப் பொருண்மிசை யுற்ற லாற கண்ணுல், பேதறக் காண்டா லரிதரி லரிதாய்ப் பிரிவிலா துயிர்க்குயிர் தானுய், வாதமுங் கடந்து குணங்குறி யகன்று வரவுபோக் கிறந்த பே ரொளியைப், போதமேற் காட்டுங் குரவன தடியே பொருளெனுர்க் குணர்த்தலும் புரையே. (உஅ)

உதகநீத் தமுதுண் ணுதிமம் போல வுறுதிறை புணர்த்துமென் கிளிபோல், நுதலிய பொருண்மைக் கடைப்பிடித் தாங்கே நுவன்று மொல் லொளியுண ரேற்றின், இதனுவல் போற்றி யுணர்ந்துமேற் கோளி லேக்கற வெய்தியுங் குரவன், பதமலர் நிழற்கீ ழின்னணம் பயிலாப் பதகருக் குரைப்பது பழுதே. (உக)

அடுத்தவா ணகையன் குரவனி னிருப்போ னனுச்சையி லவன வன் பொருளை, எடுத்தவ னவன்சொன் மறுத்தவ னெதிர்போ யிருக்கையீந் திறைஞ்சலான் வன்சொல், விடுத்தவன் றுயில்வோன் பேதை

பொச் சாப்பன் வெகுளியன் விரகிய னென்சொற், படுத்தவர் திறத் தொன் றளிப்பது களர்வாய்ப் பட்டவால் வித்தினும் பழுதே. (நo)

கூன்குரங் கெறியும் விளங்கனி கல்லாற் கொள்பவர் போற்குரை யாது, தான்குள கருந்து மாட்டின்வெவ் வேறு கலியுழ லாதொரு நிலை க்கண், மான்கொளு மான்போல் மானுடம் வாய்ந்து வள்ளலே தனது குற் றேவல், நான்கொள வந்தா னென்றெருங் கெண்ணு நலமிலிக் குரைப்பது நவையே. (நக)

மானமா தவத்து முனிவிர்கா ளாசான் மலரடி பிழைத்தமா ணாக் கன், ஈனமா நிரயத் தெய்துவன் பரமற் கிழைத்தவல் வினைபெரி தே னும், ஆனவன் றெலைப்பா னவனருள் பிழைத்த வருவினை யமலனு மகற்றுன், தானது தெரியக் கேண்மினே மேனுட் டன்னருட் குர வனைப் பிழைத்தோன். (நஉ)

கழைமுகந் தொடுத்த தேனிரு விழியக் கரைமிசை வைத்ததா ளலவன், துழைவலைப் பெருகா தளிக்கருஞ் சேற்றி னுண்கத வடைக் குரீர் வேலிக், குழைமுகம் பொதிந்த மழைமலர்ப் பொங்கர் குலுங்கிய கலிங்கநா டளிப்போன், முழைபக விடிக்குஞ் சிங்கமே தனத்தான் மூரி வேன் மன்னவர் மன்னன். (நங)

அன்னவ னெருநாட் பரிமக மியற்று மாதரத் தினில்வெகு சுரு தன், என்னுயிர் குலத்துக் குரவனைத் தொழலு மெழின்மக வின்றி யிவ் வெள்ளி, உன்னரி ததனு லாண்டினின் மகப்பே றுறுகுவை பரி மகம் யானே, நின்னக மகிழ முடிப்பெனென் றுரைப்ப நிருபனும் பழவினைச் செருக்கால். (நச)

அயலுடை யிரதி தரமுனி முதல வந்தணர் பலரொடுங் குழுமி, முயலரும் வேள்வி தொடங்கின னிழைப்ப முனிவனு முனிவுறு தெறி நீர்க், கயமலர்ப் பொதுளுங் கமழலங் துறைசேர் கனைதிரை துங்கபத் திரையாற், றியலுடை வசிட்டன் பாசிலைப் புரையு ளெய்தின னளவளா யிருந்தான். (நடு)

தேசிகன் றருசொன் மறுத்தலின் வேள்வி சிதைந்துவா னவரவி தேய்ந்து, காசினி யதிப னுயிருமும் வாளா கரைந்துவெங் கதழ்சினப் பகுவாய், மூசிய தழற்கண் மறலிவெர் தூதர் முரண்வலை யிர்த்தனர் தூர்ப்பக், கூசிருள் புதைந்த நிரையவா யெல்லாங் குளித்தன னயுத மாண் டெல்லை. (நஎ)

நிரையவெங் துயரிற் குளித்தவன் பின்னர் நீள்பனி முயங்குகோட் டிமய, வரையகத் தனில்வே தியப்பெரும் பேயாய் மண்டிய பசியடச் சுழன்றுன், உரைபடுந் தீயோ ரிடத்திலோ ருறுப்பி லுறுமலர்க் குர வனைப் பிழைத்துப், புரைபடுந் தீபோல் யாண்டுமெப் போதும் புக்கு ழிப் புக்குயிர் சுடுமே.

வய்கலும் பசியா லூணுறக் கின்றி வானுய ராசிலை நுதிநீர்க்,
கய்கல ஞக வெடுத்துவாய் மடுத்துங் கனன்றுவெவ் வழல்சுடக் கரிந்
தும், உய்கல ஞகி முன்னைநா ளறியா துஞற்றிய வினைப்பய னுணர்ந்து,
செய்குறை நினையாக் குரவனை நினைந்து தேம்புவா னினையன தெரி
வான். (நஅ)

மெய்யெழுத் தியக்கு முயிரெழுத் தேபோன் மெய்புகுந் தெனை
யசைத் தாண்ட, வய்யவென் னுயிரே யிழுதையேன் றனைநீத் தணைந்த
தெவ் வுழியறிந் திலென்யான், கய்யர்நா தகவுற் றிழைப்பினும் பெரி
யோர் காப்பது சரதமின் றெளியேன், உய்யுமா றெதிரே போதரா
யென்னி னெழிவருந் துயரமென் றுழிவேன். (நக)

பெருகுகண் ணிரயத் தயுதமாண் டாகப் பேதுறு துயரெலா
மனையான், உருகனைத் துறுநோய்க் கினைபெரு தாவி யுருகியு நெட்டு
யிர்ப் பெறிந்தும், அருவினைத் தொடரா வுலகல மருவா னரற்றிய
வோசைபுக் கதுவால், ஒருதனி முளரி வானவன் சிறுவ னுறையுள்புக்
கிருந்தவன் செவியுள். (சo)

செவித்துணை புகலு மெழுந்தமா முனிவன் செயிறு மேனிதோ
யிளங்கால், குவித்தகை யலகைத் தலைவன்மே லுறலுங் கூறுணர் வெய்
தியைம் பொறியும், அவித்துளார் முடிதோ யந்தளி ரடிமே லடுத்தடுத்
நிறைஞ்சிவல் வினையால், கவித்தவென் னுருவைத் துடைத்தியா னுய்
யுங் கதிதனைத் தருகெனக் கரைந்தான். (சக)

மாசறு தவத்துக் குருமுனி யவன்கொண் மம்மர்நோ யகலுமா
மதித்தான், ஆசறு பரத கண்டமேற் பொன்னி யகல்வயற் புரவியம்
பதிவாழ், ஏசறு வடமேற் றிசையினி லிருநோ லெல்லையி லிராகுமுன்
னமைத்த, வாசநீர்த் தடத்தை யதிபவ மாதி மாபவந் தொலைக்குமா
மருந்தை. (சஉ)

பின்னெடுந் தகையை மருளலை யென்னுப் பெருகுவாய் பருகுநீ ளளித்து
நன்னெடுந் திவச மொருபதி னேந்தி னளிபுனற் பொன்னிநா டணுகி
அந்நதி யாடிச் சிறுபசுங் குழவி யடுபிணிக் கருமருந் தியலும்
தன்னிரு தாய்போ லதன்வடக் காகச் சார்ந்தன னிருவினை சாரான். ()

தெளிகிலா விரிய முகிழ்த்தவாய் முளரிச் சிறைப்படு நாகிளஞ் சுரும்
பர், வளரொளிப் பரப்பி வைகறை விளக்கு மானவ னரசியல் புரிநாள்,
எளிவர மருவார் சிறைவிடுத் தெனநின் றிரங்குநீர் வேலிகள் சூழ்ந்த,
ஒளியெயி லுடுத்த காழியா ளுடைய வொருத்தன்வாழ் திருத்தலி
புகுந்தான். (சச)

மரைமலர்க் கிழவ னுடிய பிரம மலர்த்தடங் குடைந்துபூங் கொன்
றை, விரைமலர் வேணிப் பிரமநா யகனை விதிமுறை பூசனை யாற்றிக்

கரைபொரு தலைக்கு மிராகுமுன் கண்ட கடிமலர்த் தடம்படிந் தந்நீர்,
உரைமனு வழியாற் றெளிப்பமுன் னுருவோ டோங்கினன் மடங்கலே
றுயர்த்தோன். (சடு)

பொங்கழ லகட்டு முறையுறழ் படிவாய்ப் பொரியரைக் கருநெடும்
பணைத்தாள், அங்கவல் லலகை மூரணிரும் பாகவ றவனேர் சித்தர்கோ
வாகத், துங்கவல் வினையின் காளிமம் படுநீர்த் துவலையாங் குளிகையி
னுருவச், சிங்கமே தனத்தோன் செம்பொனிற் பொலியச் சித்தநீ
ராயதத் தெளிநீர். (சஎ)

முழுமதி முகமு மொழுகொளி நகையு மொய்ம்மணிச் சுடிகையு
மூரணர், கொழுமணி மார்பு மெழுவுறழ் தோளுங் குடைக்கடனிறுக்கு
நீள் கரமும், செழுமலர் விழியும் வேனில்வே ளணைய செவ்வியும் வாய்
ந்துமுன் றோய்ந்த, கழுதுரு வகன்று கலிங்கர்கோன் பொலிந்த காட்சி
யை யாவரே நுவல்வார். (சஏ)

நன்னகர் முழுது நலனெடுத் தேத்த நளிதடம் படிந்துமேற் கரை
யில், பொன்னவிர் கடுக்கைப் புரிசடை முதல்வன் பூசனை வரன்முறை
யாற்றித், தன்னருட் குரவன் முடிப்பமுன் பரிமான் றருமகப் பலனு
மாங் கெய்தி, ஓன்னலர்க் கடந்த முழுவுறழ் தடந்தோ ளொளிறுவேன்
மன்னவன் பொலிந்தான். (சஅ)

சூட்டழன் முகத்துப் பாட்டுரு முகுக்குந் துளங்கொளிக் குலிச
வே லென்ன, நாட்டுறு குரவர் பிழைத்வெவ் வினையை நகர்வயி னிழந்
தவ னிரட்டைக், கோட்டுவெண் பிறைதாழ் வேணியற் களவில் கோடி
பொன் னடியுறை கொடுத்துச், சேட்டிளம் பரிதித் தெரியல்சூழ் மார்
பன் றிருமுன மிறைஞ்சினன் சென்றான். (சஈ)

கன்னியங் திங்கட் டெரிசநாளங்நீர்க் காவலன் படிந்துபார் முழுதும்
தன்னிய லாழி யொருதனி யுருட்டித் தவலரும் வீடுபுக் குறலால்
இந்நிலத் தன்னு ளத்தடம் படிவா ரிடரறுத் திகலற நூறி
உன்னிய பொருண்மை யாவையு மெளிதே யுறுவர்வீ டுறுகுவ ருண்மை.

[ஙக-ஆவது. குருத்துரோகவிமோசனமான வத்தியாயம் முற்றிற்று.]
(ஆகத் திருவிருத்தம் எசஈ.)

—:o:—

கஉ-ஆவது. சண்பையான வத்தியாயம்.

தன்னிகரி லொருமுனிவன் முடங்குலேயா ளரிக்கொடியான் றண
ப்பில் வெந்நோய், இந்நகரி லகற்றியவா றியம்பியொரு கடவுண்மணி
யிமைக்கு மார்பில், பொன்னியலுந் திகிரியினன் பழிகழுவிச் சண்பை
யெனப் புனைபேர் வாய்ந்த, இன்னியலை முனிவன்விரித் திசைத்தவழி
யளியேனு மியம்ப லுற்றேன். (க)

மெய்ம்மலியு மறம்பலவுந் தலைநிறுவிக் கறங்குதிரை விரிநீ ராடை, மொய்ம்மலிமா நிலமுழுதும் பொதுநீக்கி யைவரையு முறையி னுட்டி, மைம்மலியு நறுங்கூந்தற் பொதுவியர்தோண் மணந்துவட மதுரை யா ளரும், பொம்மலணி வண்டிமிருந் தண்டுளபப் பசும்படலைப் புனிதன் மேனுள். (உ)

வீங்குமொலி முரசுயர்த்தாற் கரும்பெறல்வேள் விகள்பலவும் விரு ப்பி னுற்றித், தாங்குநிலப் பொறையனைத்துந் துடைத்தொருதன் பெ ரும்பதத்திற் சார்வா னெண்ணி, ஈங்கெமது கிளையுரிமை யாதவரெண் ணிலரிவரீண் டிருப்பின் மேலைத், தீங்குபயக் குறுமிவரைத் தெறினுல கம் பழிக்குமெவன் செய்து மென்பான். (ஊ).

வனமணியு மம்புயத்தா டனமணியு மழுந்துமணி மார்ப னிவ்வா, றினமணியும் பருவரையோ ரெட்டையும்வட் டருட்டுமுரத் திளைஞர் தம்மை, முனமணியப் பதத்திலுய்ப்பான் மனமணியு மமயத்து மூரி மோட்டுக், கனமணிவெங் கலிகாகத் தினமணியை விழுங்குறுநாள் கண்ட தன்றே. (எ)

காண்டலும்விண் டொடுபுரிசை வடமதுரை மாசனங்கள் கணீநீ ராழி, மூண்டதென வயக்களிறு மயக்குழவும் வியக்குமணி முடித்திண் டேரும், தூண்டியருட் கடலனைய சாரணர்கோ சலனுதி துறவோர் சூழ, ஏண்டருபூந் திசைசுருட்டும் பிரபாத நதிக்கரைவந் திறுத்த வன் றே. (ஏ)

பழமைமறைப் பொருடுணிந்த பண்ணவரோ டுபசாசப் பனிநீ ரா டும், கிழமைகொடு போந்தவரில் வல்லுவணைப் புள்ளுரர்தி கேண்மை மாக்கள், நுழைபுலகான் மறைக்கிழவர் தொழுகுலவாய் மையும்பிறவு நோக்கி நோனர், குழுவுமிய வருக்கநிலை யறிதுமென மனத்துறுகோள் கொண்டு சூழ்வார். (ஐ)

தம்மிலெழிற் சாம்பனுக்கு மணிவளையு மணிகலையுந் தரித்து வா சக், கொம்மைமுலை பொருத்தியடி வயிற்றின்மடக் கசைத்துநறுங் கூந்தல் வாரி, அம்மலர்மெல் லடிபெயர்ப்ப வந்தணர்பே ரவையினி லுய்த் தாணை பெண்ணை, இம்மகடன் கருநிலையோர்ந் துரைத்தி சென வடிநிழற்கீ ழிறைஞ்சு மேல்வை. (ஒ)

அனலூட்டிப் பின்னுகருங் கபிலமுனி வரனெறிபா லலியுட் டோ ன்றி, மனவேட்கை யழுக்கின்மிசை வைத்துளமீ னெனநெடியோன் வழியின் மாக்கள், கனலூட்டுங் கயமையராய்த் திரிந்தனரென் றறிந்தி வள்பாற் கரும்போன் வாய்ந்த, தனியேற்ற பெருமுசல மதனில்வரு முமக்குலகிற் சரிய வாழ்க்கை. (ஓ)

முதுமுனியிவ் வணமளித்த முரட்சாப வலியினிலோர் முசல மாங் கே, சதுமெனவந் தடிநிலத்தி லிடிபொருவ வீழ்ந்ததரா கதிருஞ்

சோதி, மதியுமெனு மிருகுலமு மற்றையுவா வினில்விழுங்கி மதுகைப் பார்த்தள், எதுகுலமும் விழுங்கமணிப் படமொடுக்கி பெருந்தரையி விழிந்தா லென்ன. (கூ)

சூருலக்கை விழவெருவித் துகள்படுத்தி நீரில்விடத் துகட்கொவ் வொன்முய்க், கோரையயில் வாளுருவிற் கிளைப்பமடம் படுமவலக் குண த்தா லொவ்வொவான், முரொருவர்க் கோரொருவர் பற்றினெற் றின ருயிர்போ யுலந்தார் மண்மேல், ஆரொருத்தன் வல்லவன்கைப் புல்லுமா யுதமென்ப தறிவிப் பார்போல். (கo)

வெறிக்களிவண் டிசைமுரலும் புண்டரிகப் பெருந்தடங்கண் விம லன் கேளாக், குறித்தமுறை முடிந்ததென வரக்கடவுள் வலிபாடிக் கொ டிய சாபம், மறித்தெனையுந் தொடருமிது துடைப்பினுமா முதினியான் வளவாய்க் கோட்டுப், பிறைச்சடிலத் திறைமலர்த்தா எருச்சனையாற் றுடைப்பலெனப் பெரிது மோர்ந்தே. (கக)

சகரர்குலந் துகள்படுத்த தழல்விழியந் தணன்முனிவாற் சாம்ப னுதி, நிகரில்வலி தரும்புதல்வ ருலந்தவினை தொலைந்தகல நிறைநீர்ப் பொன்னி, அகல்வயல்சூழ் பிரமபுரத் தடிகளடிக் கருச்சனைசெய் தருளா லன்னன், புகரின்முனித் துவமடைந்தான் யானுமது பணிவெனெனப் போந்தான் மன்னே. (கஉ)

இடிமுரசக் கொடித்தானைப் புடைநிறுவிப் பூமடவா ரிருவர் சூழக், கொடிமுகிரேறு மணிமாடக் காளிபுரத் தாளுடையான் கோயில் புக் குக், கடிமலர்வா னவன்றடந்தோய்ந் தருகியமச் சடங்காற்றிக் கடவுட் கங்கைப், பிடிபயினு நெடுவேணிப் பிரமேசன் றனையொருபாற் பேதை யோடும். (கங)

பனிமலருங் கற்பகப்பூந் தனிமலருங் கொடுந்திரைவெண் பசும்பா லாழித், தனியமுதுங் கனியமுது மானந்துந் தேனுறுஞ் சாந்தச் சே றும், பனுவன்மா புளியாட்டி நனிவழிபா டாற்றியருட் பகவன் கோ யில், அனிலதிசை யினின்முக்கோ லளவையினிற் கிளரொளிகா லாழி தன்னுல். (கச)

ஒல்லொலிநீர்த் தடங்கண்டு சில்லரிகட் டிருமனையா ரொடுபுக் காடி, அல்லலறுத் தமலவுரு வடைந்தனனே புயலுருவத் தருட்கண் ணீர்சாய்த், தொல்லையில்வெண் புயலுருவிற் பொலிந்தனனே வென வெண்ணீற் முரளியின்மூழ்கி, மல்லல்வளர் கண்டிகையு மைம்பதமு முவந்திறைதாண் மனத்தி லூன்றி. (கடு)

பற்பலவா முதுகடவுட் டீர்த்தமமைத் தாழியின்பேர் பகர்ந்து ஞானத், தற்புதநீ டொளியினுள மிருத்தியா திருபருவ மருநோன் பாற்றிச், சேற்பதந்தீ ரருளுருவப் பரஞ்சுடரை முப்போதுந் தொழு

வான் முன்னர்ப், பொற்பமரு நறுங்கடுக்கைச் சிகழிகையா னகமகிழப் போந்தா னன்றே. (கசு)

ஆரணமாய் மறைமுடிவா யளப்பரிய பேரொளியா யளவை காணுப், பூரணமாய் வரவுபோக் கிறந்தபெருங் குணக்கடலாய்ப் பொருமா லேற்றின், வாரணந்த புளகமுலைக் கொடிபுணரப் புணர்ந்தெதிரே வயங்கா நின்ற, காரணகா ரியங்கடந்த வொருபொருளே யிருவிழியுங் களிப்பக் கண்டான். (கஎ)

பணிந்துமிசை யேத்தெடுத்துப் பாடியுமூ டியவிருளைப் பறித்த தாளே, அணிந்துமலர் விழியருவி யாடியுமுன் பரவுமட லாழி வேந்தைத், துணிந்ததவ மகிழ்ந்தனநீ விழைந்தனமே லெனவமலன் சுடர்வாய் பூப்பத், தணிந்தமனத் தளிதூங்கத் துவரைநகர்க் கிறைவனிது சாற்று கின்றான். (கஅ)

அலகிலுயிர்க் குயிராய தனிமுதல்வா நின்னடிக்கீ ழடியேன் மைந்தர், பலருமுலப் புறக்கபில முனிமொழியால் வருமுசல பழிவாட் கோசை, உலகிலெனை நலியாது முசலசே டத்தாலென் னுலகூ டெய்தி, மலர்பொருமுன் முண்மறவா நிலைதருகி யெனவிரப்ப மழுவாளண்ணல். (கக)

ஆயிரவா யரவணையி லறிதுயில்வோ யஃதளித்தே மகலா தென்று நீயிவணேர் கலியுருவி னிலெபெறுக வாட்சண்பை நினைத்தொ டாது தூயவலி பெறுமிவ்வூர் சண்பையென விளங்குகவென் றருளித் தொல்லை ஞாயில்படுந் தடம்புரிசை நகுமணியா லயம்புகுந்தா னங்கை பாகன். ()

போரவுணக் கடல்கடந்த வொருதிகிரி மலர்க்கரத்துப் புனிதன் பின்னர், ஏரகலா மணிவீதிக் காளிபுரிக் குத்தரத்தி லிருகு சோசத், தோரகத்தி லொருகடவுட் டடமதுகண் டயலிருகோட் டொருவெண் டிங்கட், டாரணியு மறைக்கொழுந்தை யிருத்தியருச் சனைபுரிந்தான் றவத்தின் மிக்கான். (உக)

அங்கதிலெண் ணருங்கோடி யருந்தானம் வீசியிறை யடிமை மாரும் புங்கவர்தம் மூளமகிழ நிகழ்வித்த வொருபறவாப் பூவை வண்ணன் பங்கமில்சீ ருணர்வறிந்து பேருவகை மீதாடப் பரிவுள் ளாட அங்கணு யிரம்பருவ மாடினு னவன்பணிகொண் டாடி னானே. (உஉ)

ஒற்றைநெடுங் குழைக்கிழவ னுவந்துவரந் தாலானு மொருகோட் டங்கைக், கொற்றவன்மெய்த் திருநாமம் பெறலானு மாய்பசும்பொன் கொழித்து வாய்ந்த, கற்றைநெடுந் திரைத்தடமிக் காசினியிற் சிறந்த தனுற் கலசத் திங்கள், முற்றிலுமந் நீர்படிந்தார் முற்றிலும்வல் வினைய கன்று முத்தி சேர்வார். (உங)

முப்பகலந் நீர்படிந்து முத்துறழ்வா லரிசிபெய்து முக்கண் வேணி, அப்பனடி யார்க்களிப்பி னேரரிசிக் கோர்பருவ மருவித் தண்கோ,

டொப்பருதென் கயிலையில்வீற் றிருப்பரெழுத் தோரைந்து மொருக்கா
லோதில், எப்பெரிய தலங்கடொறு மொருகோடி கணித்தபல னெய்
து வாரே. (உச)

ஒருமாசித் திங்கள்வரு மூழுத்திங்க டனிலாடி லுரவோர் சாபம்
அருமாசு வினைபலவு மரன்பாத மறியவிரிந் தகலு மேனுள் [னம்
பெருமான்மின் னெடுமிருந்து கயிலையிற்கற் பகத்தருக்கட் பேச முன்
திருமால்கொள் ளேம்பதத்தை யித்தடத்தில் விரிப்பவரே சீவன் முத்தர்.

தவலருந்தே சிகனருளாற் பிரணவத்தோ டாறெழுத்துஞ் சார
வெட்டுப், பவவிருளைத் துடைப்பவர்க்கும் வேண்டுமிடம் வினவுதி
ரேற் பகருங் காலை, நுவலரிய வருட்குரவ னெதிர்ந்துழியே சாலுமென
நுவல்வா ரன்றிச், சிவபெருமான் மூளைத்துழியு முனிவர்மூத லமை
த்தபிர திட்டைக் கண்ணும். (உசு)

காசிபிர யாகைகயை திருச்சயிலங் காளத்தி காஞ்சி தில்லை
ஆசின்மயூ ரங்கழுக்குன் றருணையிடை மருதுகுட மூக்கை யாறு
வாசமலி பழமலிவெண் காடுகட வூர்வேத வனங்கோ டிக்கா [ற்றே.
ஓசைபெறு கோகரண மிவற்றினுமைந் தெழுத்தையினி துரைக்கற் பா

விரித்தபல தலந்தோறும் குருகுபெயர்க் குன்றெறிந்தோன் வே
ழக் குன்றை, உரித்தபிரா னேவல்புரி திருநந்தி சீடரிவ ருபதே சிக்
கின், பரித்திடலாம் பிரமபுரத் தொருமுதல்வன் குருவடிவம் படைத்து
வாய்மை, தெரித்தசிவா சாரியமர் புரமெனலா லீண்டுரைசெய் திறத்
தைக் கேண்மின். (உஅ)

சிவகுலவே தியர்மூதலீ ரிருவருணத் தவருமுப தேசஞ் செய்யத்
தவறிலருட் டேசிகராய் வயங்குவர்மற் றவரடிக்கீழ்த் தாழ்ந்து ளோரும்
நவமணிதோ யிருஞ்சுடிகை நாகராப் பசுங்குருளை நகுமீ தாணிப்
பவனுலகந் தனிலெய்திப் பழிப்பருவ்வீட் டின்பநலம் பருகு வாரே. ()

மெய்ப்போத மிலரேனுங் காளிபுரத் தாளுடையான் விமலன் வே
டம், தப்பாது வணங்தனரேன் ஞாளிதனக் கூணிழைக்குந் தகைய
ரேனும், அப்போத வருட்குரவ ராங்கவரே யீங்குரைக்கோ ரைய
முண்டேல், இப்போதே சென்னிதெறித் திப்பாரின் வீழ்ந்துபுரண்
டிடுக மாதோ. (ஈ0)

துளக்கருஞ்சூள் புகன்றதென துளச்செருக்கா லன்றடிநாட் டொ
டுநீர் வேலி, வளப்பெரும்பா ரணிபுயத்துக் கவுடபதிக் கித்தலத்தோர்
மணைக்கட் டூஞ்சொற், கிளக்குறுமா மடக்கிளியொன் றைந்தெழுத்தா
லிருட்படலங் கிழிய வோதி, விளக்கருந்தீ வினையகற்றி விடுத்தலினுன்
மக்கள்வலி வியப்பா மன்றே. (ஈக)

குருவுருவா யிருந்துவிதி கொடுப்பவனுங் கொடுத்தவிதி கொண்டு
போற்றத், தருவுருவா யெழுந்தசிவ லிங்கபரம் பரனுமுளந் தடுத்தாட்

கொள்ள, அருவுருவா யமைந்ததொரு சங்கமனு மோரிடத்தில் வைகக் கண்டும், பெருநிலமே லிதையறியார் விளக்கிருந்துங் தீக்குழலும் பித்த ராமால். (நஉ)

பூதான மிவணளித்தார் புண்டரிகன் முனமுமென் பூவை கல்லார் மாதான மிவணளித்தார் வனமாலி தானமும்போன் மறைவல் லார்மாட் டியாதானு மிவணளித்தா ருருத்திர தா னமும்பெறலா லியல்வ ழாமல் ஆதான மிவணளித்தா ராதியிடை யீறிலிதா ளடைவ ரன்றே. (நஙு)

சூலத்தலைநெட் டிலத்தாழைக் குமரியிளங் குடப்பசுங்காய் சூலய மாநீர், தூலத்தலைவா ளைகள்வெடிபோந் திருப்புகலி வியப்பணத்துஞ் சொல்வான் புக்கால், சிலத்தலைவா ணுதற்பரைசேர் திருத்தன்விரித் திசைப்பதல்லாற் சிறியே னென்னில், மலைத்தலையு மறிவென்முன் வாத ரா யணனிருதாண் மறவா மேலோன். (நச)

[கஉ-ஆவது. சண்பையான வத்தியாயம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் எஅங.]

——: o :——

கங - ஆவது. கொச்சையான வத்தியாயம்.

பச்சையங் துளபத் திருமறு மார்பன் பழிவிடச் சண்பையென் றிருவர்பேர், இச்சையி னியன்ற வாய்மையீ தாக வீதிலொரு முனிவர னிறைஞ்சிக், கொச்சையென் றுறுபேர் புனைந்ததுஞ் சனன காதியர்க் காசருள் கொழிக்கும், நிச்சய முனிவன் விரித்தவா தொகுத்து நிகழ்த் துவா மொருமருங் கெடுத்தே. (க)

தாமரைத் தெரிய னன்மறைக் கிழவன் றனிநிகர் மூவர்தம் பெருமான், மாம்பைப் பொருபேர் வகிட்டன்மா தவம்போல் வருமுனி சத்தியன் பாலன், ஆமருட் கடன்பூண் டாரழல் வேட்கு மாரணத் தறிஞனெவ் வுயிர்க்கும், எமமர் குணத்தா னிதியுறழ் தவத்தா னியல் பரா சரமுனி மேனாள். (உ)

ஆடகக் கடுக்கை யலங்கறுழ் வேணி யத்தணன் பதிகள்பற் பலவும், நாடருங் கடவு ணதிகளும் படிந்து நனந்தலை யுலகெலாம் வலங் கொண், டேடவிழ் கமலத் தண்ணலம் பொலன்சூட் டெழினல மிறைகொள நறைவாய்ப், பாடல்வண் டிமிருங் கவுதமை யாறும் படிந்தன னிடும்பைநோய் படியான். (ங)

இமிழ்திரை சுருட்டுங் கவுதமை யாடி யிரும்புனல் கடக்குமா றெண்ணிக், கமழலந் துறைக்க ணோடமுய்ப் பவரைக் காணல னுயிடைக் கண்டான், அமிழ்துறு மொழியுந் தமிழிளந் தென்ற லசையினு மொசி யுமென் மருங்கும், உமிழ்கதிர் பூணுங் குமிழ்பொருங் கண்ணு முடைய தோர் வலைமட வரலை. (ச)

மடவரா லிங்நீ சோடமுய்க் குநர்யார் மற்றுநீ வல்லியே லின்னே, கடவுதி யெனலு மக்களா யிரவர் கலந்துழி யன்றியிங் நாவாய், விடவரி தெனவேற் படைபொரு தடங்கண் மெல்லிய லுரைப்ப வாயிரவர், உட னுறு பொறையீண் டமைக்குவென் கணத்தே யொண்ணுதல் விடு கென வரவோன். (நு)

சோலொரு தலையுங் குடமொரு தலையுங் கூன்புறத் திமிலிரு தலை யும், மேலவ னிருத்தி மச்சகந் திப்பேர் மின்னெடு தானும்வீற் றிரு ந்து, சேலுலாந் திரைநீர்ச் செல்லுழி முனியைச் சிவனென நோக்குரு வடிநாள், பாலலோ சனத்தாற் றெறுபழி மீட்பப் பகழிக டுரந்தனன் படைவேள். (சு)

மாரவேள் வாளிக் குரனழிந் தயர்வான் வலைஞர்தந் திருவினை நோக்கிச் சூர மகளி ரெழினலங் கனிந்த சுடரிழாய் தெய்வநீ ராற்றுள் பேரலை கடத்து மோடமீ தென்னப் பெருவலி யங்கன்வெஞ் சமத்து நீரலை கடத்து மோடநீ யல்லா னேடினு மில்லைநீ ணிலத்தே. (எ)

குறுநகை நிலவா லிருட்களி றதுபோங் குறுநடை யனத்தின்மீன் கொடிபோம், இறுமிடை யரவாற் றென்றலந் தேர்போ மிணைமுலை நே மியாற் குடைபோம், தெறுகிலப் புருவத் தடுகிறைப் பரிபோந் தீவிழி யுருச்திர னுதல்போல், பொறிதுதல் விரித்த சிந்துரத் தெழிலாற் போர்மத ணுண்மையும் போமால். (அ)

இடைக்கணை யெழுந்துந் தலைக்கணைர் மருங்கு லிளைப்பநின் றெழு முலை யின்னே, உடைக்குநீ டிரைநீ சோடமூர்ந் தழிமுன் னுறற்றமின் றியுந்தனி வாளா, இடைக்கணை யுறுவேற் கிரங்குரு வெனினு மிரங்கி வந் தடைந்துளோர்க் களித்தல், அடைக்கல நூலி னியற்கையே வேலை யகத்தினும் பெறலரு மழுதே. (கூ)

பழுத்தபண் கொழித்து மழலைவண் டெழுலும் பங்கயப் பொகுட் டினி தமர்ந்த, முழுப்பெருங் கிழத்தி முதன்மட வாரை முறைவகுத் துன்னையும் வகுத்தான், எழிற்கனிந் தவர்கண் டனையவர் வெள்கா வெண்ணியோ நான்முக னுள்ளத், தழுக்கரு மையிலை நின்னியன் மணத்தை யழிபுலா லாக்கின னணங்கே. (கo)

தேம்படு மெறிபான் முதுபயோ ததியிற் றேவர்தெள் ளாரமிழ் தருந்தித், தாம்படு மிறப்பொன் றெழிந்தன ரல்லாற் சாமதன் போர் தொலைந் திலரால், காம்படு கழைவார் சிலையலர் பாய விடையிலே மூரி யுமிக் கலகத், தோம்புநின் கனிவா யமுதரு தெவ்வா றுய்யுமா றைய நுண் ணிடையாய். (கக)

உருவிலி வாளி யொருங்குறப் பாய்ந்த வுரம்படு புண்முகங் குளிர, இருமுலைப் புளகு வேதுகொண் டோத்தி யிலவிதழ் வாய்மருங் தூட்டிக்,

குருகணி காத்தா லிருகுறப் பிணித்துக் குறைவரு புதுமணம் புணர்ப் பின், பொருவிலிக் கணமே யானுமுன் னுடலைப் புதுமணம் புணர்த்து வென் பொன்னே. (கஉ)

குழைபொரு தலைத்த விழியினு மழலைக் குயில்பொரு மொழியி னும் பைம்பூண், இழைதவழ் சிகர முலையினு மதியோ டிகலிய துதலினு மதிபோய், அழல்படு மெழுகும் வான்மண லெக்க ரலைத்தலைப் பொரு முது நீத்தக், துழைபடு கரையு மெனவுடைக் திவ்வா றுருகிய வொரு வனெ டரிவை. (கங)

என்னிமா முனியீண் டியம்பிய தென்னு வெழுமட மாதினுற் குணமும், தன்னியே நலிய நகைமுகங் கோட்டித் தாழ்குழற் சிறுபுறஞ் சாய்த்து, முன்னியா யிரவர் பெரும்பொறை யுய்த்த மொய்ம்மலி மாத வத் தோன்றல், தன்னியே புணர்வார்க் கிழிகுலத் தறியா டடமுலை முயங்கவந் தகுமே. (கச)

ஊன்படு வலிஞர் காவல னெந்தை புணர்ச்சியு மறிந்திலன் பெரு நீர், தான்படு புலன்கோ டிரண்டினு மாக்க டதைந்தனர் திருவுள மறி யேன், வான்படர் யாழோர் புணர்ச்சியி னின்னி மணக்கவு மியைந்த னென் மாரு, மீன்படு மூடைபோய் நறுமணங் கமழ வித்தகா தரு கெனப் பணிந்தாள். (கரு)

அற்றமின் முனிவ னதுகணத் தொருதன் ஞற்றலாற் பணிகொடு கவித்துப், பற்றருந் தெய்வ மலர்மண மளிந்துப் பரிமள கந்தியென் றனியாள், முற்றருங் குரும்பை முகிண்முலை குழைய முகமணி தரக்கர மிறுகப், பொற்றொடி கறங்க நறையித முறைப்பப் பூங்குழ லலமரப் புணர்ந்தான். (கசு)

பூங்கலை திரையா வுரவர்தந் திலகன் புயவரை நாகமா விழிகள் வாங்கரும் புளக வனமுலை மலையா மற்றிரு வோருளத் தார்வம் ஆங்கணின் றீர்ப்பப் பெண்ணலங் கனிந்த வரிவையந் தடங்கட லங்நாள் நீங்கரு மின்பக் கலவியா ரமுதை நிறைமுனிக் களித்ததை யன்றே. ()

மெய்யிரண் டுயிரொன் றெனநெடு நாவாய் மேலிரு வருநலங் தீளப்ப, நெய்யிருங் கூந்த னெருங்குபூண் முலைபா னேமியான் கூலியெழில் வாய்ந்து, மையறு தவமு மனுவும்வேள் வியுநான் மறைகளு முறைகளு முயிர்கட், குய்யவந் துதிப்ப நிகரில்பே ரெழிலா லுதித்தன னொரு பெருந் தனயன். (கஅ)

தனையன்முற் றுணர்ந்தான் மனமலர் களிப்பத் தயங்கனும் வயங் கெழிற் றையல், முனைவனை வணங்கி முன்னிமா ணைழினு முருகுல மகவையுந் தருகென், றினையமே லவனவ் வெழிலினை யருளி யிம்மக வேண்டுமேல் யாண்டும், நினைவுழி வருவ னிவனின்யீண் டளிப்பி னின்னு டைக் கண்ணிமைக் கிழுக்கே. (கக)

அங்கைநீ நிறைப்ப முன்னெழில் வாய்ந்த வரிவைகே ளாய்வலி
வினைஞர், மங்கையென் றுன்னேல் யாழ்வல்லோர் குலத்தோர் வசுவெ
னு மிறைமகன் றேர்மேல், அங்கண்வான் வழிக்கொண் டிவ்வுழி மேனு
ளணைந்தவ னருமனைக் கிழத்தி, கொங்கையை நினைப்ப விளகிய தாதிக்
குடிஞையி னடுவண்வீழ்ந் ததுவே. (உ0)

வெடிகொண்மீ னென்று வீழ்ந்தவீ ரியத்தை விழுங்கலு மதன்
வயிற் றோன்றிக், கடிபுலால் வினைஞர் மனையிடை வளர்ந்தாய் காலமூன்
றையுமுணர் திறனுல், அடியிய லறிந்து னிளமுலை வேட்டே னுதலி
னலமரே னின்னில், படிபுக ழைவர் முடிபுனை கதையும் பல்குமா லுன்
னுழைப் பாவாய். (உக)

மோட்டரு முடிமேற் கிடந்தநீ ராடை முழுநில மொருபுயத் தேந்
தும், ஈட்டுதொல் புகழான் சந்தனு வெனும்பே ரிறைபுணர் சத்திய
வதியாய்த், தீட்டுமால் வென்றிச் சித்திராங் கனையும் விசித்திர வீரி
யன் றனையும், தோட்டுவார் குழலாய் நீயினி தின்று துலங்குவை மற்ற
வர் வழிநாள். (உஉ)

திருத்தகு குலத்து மடநலா ரிருவர் செங்கைபற் றினருயி ருலப்
பப், பெருத்தநோன் மாபுக் குறுமகா ரின்றிப் பேதுறு மேல்வையீண்
டளித்த, ஒருத்தனு லனையா ரிருவரும் பாண்டு வொடுவிழி யில்லையைப்
பயந்து, விருத்தியால் வழியே பாரதப் பெரும்போர் விளைப்மே லுணர்
குவை மின்னே. (உங)

என்னமா முனிவ னன்னவட் கோதி யென்னெழிற் சூலவனைக்
கொடுபோய், கன்னெடுங் தகைசால் வெதிரிகாச் சிரம நண்ணினன்
மூலமதி யிமைக்கும், பொன்னவிர் வேணிப் புனிதனு ரருளாற் பொறிக்
குறும் பெறிந்தமா தவத்தீர், கன்னிகா காமி யெனப்பரா சரனைக் கரைந்
தன ரன்றுதொட் டுலகோர். (உச)

ஆன்றமை கேள்வி முனிவனுக் கிழிவென் றறையுநீ ரலைகடற்
றோய்ந்து, தோன்றினு மூவருட் டோய்விலா மீன்போற் சுந்தர மின்றி
யெவ் வினைக்கும், என்றவ னிறைவ னெருவனே கெடுப்பா னெடுப்ப
வன் றடுப்பவ னெவைக்கும், சான்றவ னெனமெய்ப் போதமுற் றம
லன் முளினைக் காள்விணைப் படலால். (உரு)

அளிவினை யுளத்து முனிவரன் சிறுகா னடைந்தனு செய்தின
னந்தோ, விளிவினை முனியு மெய்துமோ வெண்ணு விரட்டுறக் கருதலீர்
யாண்டும், தெளிபொருட் டிறத்தோ யையமுந் தெளியாத் திரிபொருட்
டிறத்திலோர் துணிபும், விளிவரு நிரயம் பயக்குமா லுலகில் விரகில
நிகழ்தோ னுது. (உசு)

கோதகல் குணக்குன் றனையவ னினைய கோச்சையை யகலுமா
றெண்ணிச், சீதவான் பொன்னித் திருநதி யாடித் தேனின முரன்றுதா

தருந்திப், போதலர் பொதுளிக் கருகிநெய்த் திருண்ட புனைகுழற் றிரு நிலை யழகி, மாதுபா லொருவன் மனமகிழ்பூத்த மணிமதிட் காழிவந் தடைந்தான். (உஎ)

கடைளயந் தறியா வளமலி மாடக் கடிமணி வீதிகள் வலங்கொண், டிடைவளர் முருகார் விழுமணித் தளிபுக் கினவளை நித்தில மிறைப்பப், புடைநிலா வளைக்கும் பிரமமா தடத்துப் புண்ணியப் புனல்படிந் தெனை யா, ளுடையகா ரணனை விதிமுறை வழிபா டுழுவலன் பொடுமினி தாற்றி. (உஅ)

அண்ணலங் குடுமி யாடக மானத் தணியகோ ணத்திலே டவிழ் பூங், கண்ணியங் கொன்றைப் பராசரே சுரனைக் காதலி னிருத்தியர் யிடையோர், புண்ணியக் கூவ மிருத்திகாத் தழும்பப் புகரிலம் பத முறை போற்றி, நண்ணருந் தழல்வா யாறிரு பருவ நற்றவ முற்றுற விழைத்தான். (உக)

புனிற்றிளந் திங்கட் புரிசடை முனிவன் புகழ்பரா சரமுனிக் கருள் வான், பனிக்குமென் கமலப் பாடக மூளரிப் பைங்கிளி யொடுமட லேற் றின், முனிக்கண மிறைஞ்சக் கருணைவார்ந் தொழுகு முகமலர் முகிழ் நகை பூப்பத், தனிப்பரஞ் சுடரோன் வருகனும் விழிநீர் ததும்பமெல் லடிமிசை படிந்தான். (உo)

உருகிமெய் யரும்பித் தழுதழுத் தவச மொடுபராய் மலர்கடி யவனை, முருகியல் வேணி முதல்வனு மகிழ்ந்து முன்னிய தென்னென முதல் வா, பருகியுன் னருளே பொருளெனப் பெறுமென் பாலிட செய்துமோ வெளியேன், இருநிலத் தொருபேர் கன்னிகா காமி யெனுங்கொடு வாய் தணிக் கெனவே. (உக)

குறுநிலா விரித்த சிறுபிறை யலங்கற் குழகனுங் கொச்சையி னகன்று, பெறுவர மளித்தே முனிவரைத் தெடுக்கும் பெருந்தகை யாதி யிற் நகர்க்கும், உறுபெயர் கொச்சை யெனவகன் ஞாலத் தோங்குக வெனவொருங் களித்து, மறுவிலா னமைத்த குறியினின் மறைந்தான் மாசற வயங்கினன் முனிவன். (உஉ)

தேண்மதி யடுத்த முழுமதி தினத்துத் தீர்த்தமீ தாடியா யிடை யில், கோண்மதி மிலைந்த பராசரே சுரனைக் குளிர்மலர் தூயடி பணிந்து, நீண்மதி விதைநெல் லளித்துளோ சொவ்வோர் நெற்கொரு பருவநீ டொளிகால், காண்வரும் வனப்பிற் கயிலைமால் வரையிற் கண்ணுத லுருவுபெற் றிருப்பார். (உங)

அயன்மனை விழைத லானவுன் மிசைத லருநறை மடுத்தலான் றவரை, நயனிலகூறன் மனையிளங் கொடியை நாளலா நாளிடைப் புணர் தல், கயமைசூழ் வினைக வெவையுப்வின் டாதி கமலனீ டுலகினூற்

றெட்டுப், பயனுறு குலத்தோ டுறைவரிக் கூவல் படிந்துநற் றுனமொன் றளித்தோர். (௬ச)

துலீமதி யாதி தகர்மதி யாதி சுலவுமீ ரயனவெம் பாந்தள், அலர்கதிர் தொடுநா ளிவற்றினீ ராடி யரியதென் புலச்சடங் காற்றி, உலீவரு மெண்ணீ ரிறைத்துளோர் மேல்வீட் டுறுகுவ ருகமொரு ஙான் கின், மலீயுறு கலிக்கட் டானமே யெவைக்கும் வலிதென மறைவழங் குதலால். (௬டு)

நுவலருங் கடவுண் மான்மிய மிதற்கே நோக்குறி னளவீலை யடி நாட், பவனிகா முனிவன் கொச்சைபோ யதனுற் பராசர கேத்திர மெனும்பேர், கவினுமிங் ஙகரம் புணைதலாற் குலமே காரண மன்றுசெய் வினையால், உவமமி லுயர்வுந் தாழ்வும்வந் துறலா லொழுக்கமே விழுமி தென் றுணர்வீர். (௬சு)

அள்ளிதழ் முளரி வானவன் றனேநே ரண்ணலஞ் சுருதியாழ் முனியும், தெள்ளிய நுமக்கீங் கிதுபுகல் யானுஞ் சேயரி பரந்தகட் கணிகை, எள்ளிய வயிறு வாய்ந்தன மேனு மிறைவனே வழிபடுந் திற னுல், ஒள்ளிய ரெனும்பேர் வாய்ந்தன மென்ப வுறுவிர்கா ளெனவவ ருரைப்பார். (௬எ)

எந்தைநின் வரவொன் றிசைத்ததெஞ் செவியி லேறில தெவ் வகை யுயிர்க்கும், தந்தைநீ யென்றே யெம்முளம் பெறலாற் சாலவு மெம்மனோர்க் குணீப்போல், சிந்தைமா சகன்ற குரவர்யா ரென்னச் சேகறு முகமன் குரைத்தார், முந்தைதூற் சூத முனிவர னவர்பான் முகமலர்ந் தொருகதை மொழிவான். (௬அ)

[கஉ-ஆவது. கொச்சையான வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் அ௨க.)

——:o:——

கச-ஆவது. கிளியுபதேசித்த வத்தியாயம்.

உளழி முதன்மூப் பொடுங்குதவத் துரவோன் பணியக் கொச்சையென் காழி நகர்க்க ணுரைபான்மை கற்ப நாளிற் கவுடேசன் [ற வாழி யொருபைங் கிளிமூல மனுவொன் றளிப்ப விணையகன்ற பாழி யியலும் பண்ணைவர்கோன் பகர்ந்த முறையிற் பகர்கிற்பாம். (க)

முரசு துயிலா மணிமுன்றின் முடித்தேர் மிடைந்த கொடித்தானை அரசு வணங்குங் கடைத்தலையி னவனி பொதிந்த கவிகையினுன் பரசு மவரே யன்றியொரு பகையொன் றிலதாற் சமர்வேட்டுக் குரவு மலர்த்தோட் டினவடங்காக் கோவி தாரத் துசனென்பான். (உ)

திரைநீ ருடுத்த பெருவயலுட் செங்கோ லெருவிட் டங்கார்வக்
குரைநீர்ப் பாய்ச்சி வேள்விமுதற் குறையா வேலி புறங்கோலித்
தரைமே லிடும்பைக் களைகடிந்து தருமப் பைங்கூழ் தலையெடுக்க
நிரையா ளரிமன் னுழவனென நெடுநாள் புறந்தந் திடுநாளில். (ஈ)

மற்போர் தொடங்க வேழிசைத்தேன் வளர்ப்போர் பொழிய வாதிகடம்
சொற்போர் தழங்க முடித்தாமந் தூணைத்தாள் சூட்டு மருவலர்பூம்
பொற்போர் குயிய நீடுலகம் புரப்போர் பணியத் திணியிருள்சீத்
தெற்பாய் மணிமண் டபத்தொருநா ளிருந்தா னரசர் பெருந்தகையே.()

இருந்த வமயத் தருந்தவதா லியன்ற நடையன் ரூஉடையன்
வருந்து பசிய னுறைந்து மாறு மொருவ னண்பகல்வாய்
விருந்தி னெதிர்புக் கோர்கடிகை வேலை யிறந்து பணியாமல்
பருந்து சுழல்வே லவனிருப்பப் படர்ந்த முனிவ னடைந்தனனால். (ரு)

நெடுந்தா பதனைப் பழித்தவினை நெருப்பா ரழலாற் கவுடர்பிரான்
கொடுந்தாண் முதலைக் குண்டகழிக் கோடா ரெயிற்சத் தியவதிப்பேர்
தடந்தேர் நகரத் தரசிருப்புந் தானைத் தலமு நிதித்தலமும்
அடுந்தூ ரியமார்த் தெழுக்கடைபு மடலை யணிந்த பிதிர்வனம்போல். (சு)

ஆசொன் றணையா வருந்ததியா மனையாண் மனையா னுறையுளன்றி
வாசங் கழுகங் கல்லூரி மாட மரங்கு படைச்சாலை
கோச மரணம் பலந்தெற்றி கொடுங்கை சுருங்கை பணிச்சாலை
தேசம் பெறுபட் டறைமலர்மென் சேக்கை பலவுஞ் சிதைந்தனவே. (எ)

கவைநா வலைத்த வழற்சிகையாற் கடிமா நகர்போற் புறனுமழிந்
தவையால் வருவாய் பலசுருங்கி யருநோ யாற்று மருமருந்தைச்
சுவையா தியைநீத் தின்பமொரீஇத் துய்த்தான் பிடக நெறிபிறழ்ந்த
நவையா லதன்பே றிழந்தான்போ னுளு மீட்டும் பொருளிழந்தான். (அ)

ஆனு வறிஞர் வெறுத்துழியு மளவில் சிறப்பா மதுமெய்யே
மேனு ளடைந்த கடவுண்முனி விணைவெம் பிறப்பொன் றேவறியன்
மானு பரணன் கவுடர்பிரான் மற்றை முனிவன் மனம்வெறுப்ப
ஏனோர் பலரு நகையாட வெல்லாம் வறிய னுயினனால். (கூ)

அணிவே லுண்சட் டிருவினையா ரலமந் தருக வறிவிலியாய்
பணியா வாற்றல் வாளுழவன் பக்க மளவு மறையலகைப்
பிணியா லலமந் துளந்திரிந்து பெரும்பே துறுவான் றனையளிக்க
மணிமா டகத்துப் பிணிகுரலார் மகதி முனிவ னுண்டடைந்தான். (கo)

பனியிற் றிரிந்த பதுமமெனப் பனவப் பேயான் முகந்திரிந்து
குனிவிற் றடக்கை மாறடுதாட் கோவி தாரத் துவசனுற்ற [ளம்
தனியைத் தடைப்பெ னெனப்போந்த தொன்மை முனியை நன்மையு
கனியப் பதும மாலினியாங் காவற் கிழத்தி யெதிர்கண்டாள். (கக)

கண்டா ளிறைஞ்சி மறைமுனிவன் கமலத் தாடோய் நறுந்துளிநீர்
உண்டாள் பசும்பொற் கலந்திருத்தி யுவட்டா வமுதப் பதனடிசில்
தண்டா மரைப்பூங் கரத்தூட்டித் தரளம் பொருவப் பெருவிழிநீர்
கொண்டாள் கருணைக் குன்றனைய கோதின் முனிவன் வினவுறுங்கால். ()

புரைதீர் கற்பின் வடபுலத்துப் புத்தேண் மின்ன ணுண்முனிமாட்
டுறைசான் மூரற் றருபலனு லொட்ப மடைந்து வாளுழுவன்
விரையார் கமல முனியனைய வீணை முனியை நனிபேணித்
தரைதோ யடிக்கீழ் முடிசூட்டித் தாடோய் தடக்கை முகிழ்த்தலுமே. ()

இன்ன நாளி லெமையுணரா திருந்த வாறே யியறிரியா
முன்னை நாளி லொருமுனிபா லிழைத்த துளதோ முடிவேந்தே
உன்னை யறியா மறையலகை யுருத்த வாற்ரு லெனவுயிர்கட்
கன்னை யனையா யிழைத்துளெனென் றரசு கூற வவன்கூறும். (ஙச)

ஆரா வமுதா நிறைபரத்தோ டாவி யிருத்தி யோரெட்டுக்
காரார் கருமச் சித்திகளுங் கணியா துணர்ந்த சிவயோகம்
பேரா வறிஞ ராருவருக்குப் பெயர்த்த பொருளோ நீயென்றே
தேரா வெளிற்றுச் சிற்றறிவிற் செருக்கி னுய்வீ யென்செய்தாய். (ஙஞ)

வேறற் றெழுந்த பரஞ்சுடரை வெளியில் வெளியை யொளிக்கொளியை
தேறக் தெளிந்த சிவயோகி சேர்ந்த தானஞ் சிவதானம்
ஊறற் றெறிநீர்க் கங்கைமுத லொன்பா னதியு மாடுகின்ற
பேறுய்ப் பதுதா னவரடிக்கீழ்ப் பெய்த புனலோர் துளியன்றே. (ஙட)

விருந்தி னெதிர்ந்த யோகிதனை விரைவிற் போற்ரு தில்லறத்தின்
இருந்த வொருவன் செயுமறங்க ளெல்லா மிழப்பன் மற்றவனைத்
திருந்து பூசை செயின்முனிவர் தேவர் சனகா தியர்வசுக்கள்
பொருந்து மூவர் முதலியரைப் புனையும் பூசைப் பலனடைவான். (ஙண)

இமைக்குங் காலங் கொன்றையினு மிரட்டி காலங் கூவிளத்தும்
சமைத்த கடிகை யிலிங்கத்துந் தார்வேந் திடத்தோர் மாத்திரையும்
அமைக்குங் கால நின்றெவையு மாக்கி யளித்துத் துடைத்தருள்கூர்
உமைக்கு நாத னெக்காலும் யோகி யிடத்தே புறைதலினுல். (ஙஅ)

மேரு வாதி புல்லீரும் விரிந்த வுயிர்க ளுடன்சாரச்
சாரு மதிதிக் கிடர்புரியிற் சகல வுயிர்க்கும் புரிந்தவினை
சேரு மனையா ருளமுவப்ப வெவையு முவக்கு மெனத்தெரியா
தோரருஞ் செருக்கான் மறையலகை யுற்ரு யுணர்வு மற்ரு யால். (ஙக)

வெள்ளி யடுக்க லிறைஞ்சியா மீண்டுன் மனையி லனமிசையத்
தெள்ளி யறியு முணர்வடைந்தாய் சீறு மலகை பாறும்வண்ணம்
புள்ளி யலவ னூறுசெய்பூம் பொதியம் புயம்வே சியர்கலவை
அள்ளன் முலோநர் வயற்புகலி யடைவா யிடரு முடைவாயே. (உ0)

வழுக்கு னுகர்த லிழிவயிறன் மதுவாய் மடுத்த லயன் மடவார்.
எழிற்கா முறுத லதிதிதவ றியற்ற லாதி வினையும்விண் ணோர் [போல்
குழுக்கா வலன்முன் னிறைஞ்சியருட் குரவர்ப் பிழைத்த வினைகெடல்
இழுக்கா தொழியு முனதிடரு மிரியல் போகு மொருதலையே. (உக)

கோல மலரோன் றடமாடிக் கொச்சை யிடையார் திறத்தேனும்
மூல மனுவேட் டாலகிழன் முதல்வன் றிருமுன் கணித்தவர்க்கே
மாலும் பிரம சத்திமுதன் மாற்றல் வகையா லிதற்கிதென
நூலி லறியா வினையனைத்து நூறு மிதுசத் தியமறிநீ. (உஉ)

நன்னர் முனிவ னிதுகூறி நடப்ப வவன்ரு டொழுதரசன்
கன்ன லிழிசா றடும்புகையைக் கமஞ்சூன் மழையென் றிளஞ்சூட்டு .
வன்னத் தடங்க ணெடுந்தோகை மயில்க ளாலு மலர்ச்சோலை
அன்னப் பணைசூழ் புகலியின்மா டணைந்தா னெல்லை பணிந்தானே. ()

இடங்கூர் நறுஞ்சே யிதழ்க்கமலத் தெழிலோ திமப்பார்ப் பிறைகொள்ள
துடங்கா ரழற்கண் ணுமைடங்தை நோற்கின் றமையொத் ததுகண்டான்
அடங்காப் பொறியைந் தடக்கிவெண்ணீ ருடி யசைவற் றிருப்பார்போல்
நெடுங்கா லுறைத்துக் கண்முகிழ்த்து நிற்குங் குருகு னிலைகண்டான். ()

நீறு தாங்கு மெய்யன்பர் நேர்ந்த போது நெறிக்கெதிரே
சோறு தாங்கி நிற்பவர்போற் சுமந்த மலர்க்கே தகைகண்டான்
நீறு தாங்கிச் சிவசிவவென் றேத்திக் கருவே ரரிமினெனக்
கூறி யாண்டும் பலரறியக் கோலப் பூவை சோலைக்கண்டான். (உரு)

தண்ணீர் நிலைநின் றிருருதாளிற் சதுரா னனன்செய் யருந்தவம்போல்
கண்ணீ ரரும்பி யவணுறையுங் கமலந் தானுஞ் செயக்கண்டான்
விண்ணீர் மதிமே லினுங்கழுத்தின் விரியம் புயலு முறச்சுதைதோய்
தெண்ணீர் மாடங் கறைமிடற்றுச் செம்ம லுருவந் தரக்கண்டான். ()

துயிலா வரமும் பனுவன்மறை சோரா வொழுக்கும் பரத்திலன்றிப்
பயிலா வுணர்வு மைம்பதமும் படர்கண் டிகையு நீறுமின்றி
இயலா வடிவும் பத்திநெறி யிகவா நடையு மிழித்தல்புலால்
அயிலா வெருகு மீன்குத்தா வலகார் குருகு மவண்கண்டான். (உஎ)

சொன்ன தலத்தை நோக்கிமுடி துளக்கி யவனித் தலங்களிந்த
மன்னு தலத்தோ டொக்குமெனல் வழுவா மதிக மீதெனலால்
அன்ன தலத்திதாவ் வொருவுருவி னமைந்த வொருவ னினையதன்றி
இன்ன தலத்தின் மூவுருவத் தியைந்த வாற்ரு லெனநினைந்தான். (உஅ)

ஆழி குழித்த வழிதூர்க்கு மங்க லார்மெல் விழைகிளரப்
பாழி மதமால் வயக்களிற்றின் பருத்தாள் கிளைக்கும் வீதிபுக்கு
வாழி வலங்கொண் டிழிகண்ணீர் வாரா வருவான் செவிமிசைநல்
ஊழி னியன்ற வைம்பதத்தி னுரைசா லொலியொன் றுற்றதுவே. ()

உற்ற காலே வாளுழவ ணேரே ருழவன் றூற்றுமுகில்
பெற்ற வொலிகொண் டுவந்ததெனப் பெற்ற களியால் வியப்பெய்திப்
பற்றி யேகு மந்நெறிக்கட் படருங் காஞ்சி வீலைமடந்தை
முற்று மணிக்க ணன்னவொலி முழங்க வுணர்ந்துள் ளகம்புகுந்தான். ()

கருவித் துகிரால் வீளைந்தசிறு கால்வாய்க் குடம்பை நடுவணிருந்
துருவச் செந்தார் மடக்கிள்ளை யொளிவா யினிலிம் மனுமிழற்றத்
தருமச் சுகதே சிகனடிக்கீழ்த் தாழ்ந்த தனிவே னிருபன்போல்
ஒருமைப் படத்தாழ்ந் துபதேச முற்ற னுறுதி பெற்றனே. (நக)

கூட்டுச் சுகமன் றளித்தமனுக் கொண்டான் வீணைக் குருக்கள்சொன்ன
வீட்டுச் சுகமு மெய்தினன்போல் வியந்தா னயந்தா ரொடுமுன்னை
நாட்டுற் றுளதன் கோளணைத்து ஈவின்ற னுவந்தா லயம்புக்குத்
தோட்டுக் கமலா லயன்புனலுட் டோய்ந்தா னிடைசைக் காய்ந்தானே. ()

பலகட் டுரைப்ப தென்னையினிப் பைம்பொன் போன்று கவுடர்பிரான்
அலகைத் தழல்பாய்ந் துருகுதலு மந்தீஞ் சருதி மகதிமுனி
இலகப் புகன்ற வுரைக்குறட்டா லெறிநீர்ப் பிரம தடத்துய்ப்பத்
தலைமைப் பசும்பொ னுருவடைந்து தணிந்தா னலகைத் தழலென்றல்.

அதுபின் னியதிச் சடங்காற்றி யணிநீ றணிந்தைம் பதசீமாதி
முதிருங் கடவுண் மணியலங்கன் மொய்ப்ப வளைந்து முகைதிறந்து
மதுவங் கறங்கு மலர்க்கொன்றை வரதன் வழிபா டியற்றியண்டம்
பொதியு மொருசிற் றுதரமலைப் பூவை தனையும் போற்றிசைத்தான். ()

ஓதப் புணரி புறங்கோப்ப வுலகத் துலையா நிலைநாடி
நாதப் பெருந்தோ ணியிலிருந்த நம்பன் றிருத்தாண் மலர்பணிந்து
சீதக் கமலத் தடங்கண்ணன் றிணிதோல் போர்த்த முடைமாறப்
போதப் புழுகு புனைவடுகன் புனைதாள் பணிந்து விடைதீர்ந்தான். (நடு)

புரிநூன் மார்ப ரகமகிழப் பூமி தானங் கோதானம்
வரிவேல் விழிக்கன் னியர்தான மற்றுங் கோடி தானமெலாம்
விரிவா லாற்றி னித்தவிழா வியப்பா லாற்றித் தொண்டுபல
பரிவா லாற்றிப் பணியுமிழ்ந்த பரிதி போன்முன் னுருவடைந்தான். ()

மன்றல் கமழு -மகன்பொதியில் வடித்த தமிழை முடிக்கொடுபுந்
தென்ற லிழிந்து புறந்தவழுஞ் சிறுசா ளரத்து நெறிமாடக்
குன்று கிரைத்த மனுவீதிக் கொச்சை யகன்று பதிபுக்குத்
துன்று மரும்பல் வளநுகர்ந்து துணைவன் மலர்த்தா ளிணைசேர்ந்தான்.

வள்ளத் தமுதிட் டுட்டியுரை வருத்துங் கிளியே யருட்குருவாய்
உள்ளத் துணர்ந்த வகிதிதவ றெழிந்தா லதன்சீ ருரைக்கவற்றே
கள்ளப் பொறியைத் தவித்துநெடுங் காலந் தழற்கண் ணற்றுநரும்
வள்ளற் பெருமான் புகலியிலார் மரத்தோ டொவ்வார் மதிக்குங்கால்.()

கன்னி மணிவண் டிசைமுரன்ற கார்கொள் வணக்குந் தடஞ்சோலைப்
பொன்னி நதிவா னதியாகப் பொலன்கற் பகத்தி னலங்காட்டும்
செந்நெல் வயல்சூழ் காளிபுரிச் செம்மன் மனுவை யம்மவொரு
வன்னி யுரைத்த திதுவென்றுன் வன்னி வளர்க்கு முனிசூதன். (நகக)

[கசு-ஆவது. கிளியுபதேசித்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் அசுo.)

——: o :——

கரு-ஆவது. வேணுபுரமான வத்தியாயம்.

அரசு தெக்கெறி வேலினுற் கஞ்சுக மிரங்கி
பரசு தொன்மனு நல்கிய புகலியம் பதிக்கே
விரவு வார்சடை முனிவரன் பின்னரும் வேணு
புரமெ னும்பெயர் புணர்ந்தவா புகன்றமை புகல்வாம். (க)

பண்டை மன்பிர பாகரன் மக்களி னிரட்டை
கொண்ட பன்மனுஞ் சூரனுந் துணையொடு குழுமி
மண்ட ருந்தவம் புரிந்துபர ரிடங்களாய் வருநாள்
அண்ட சாரதச் சாபமுண் டசுரரா யவர்தாம். (உ)

வய பன்மனுஞ் சூரனு மோருரு வெய்தி
ஆய காசிப னிடத்துவந் தாடல்வெவ் வலியால்
பாய வல்லிருள் விழுங்கம ராபதி பரிக்கும்
நாய கன்றனைப் பொருதுவா னீருரு நண்ணி. (ஙக)

மடங்க லேறிநல் லொருபதி னுயிர மதுகை
இடங்க லந்தகாட் பதுமனுஞ் சூரனு மிவரோ
டுடங்கி யைந்தவெஞ் சேனையு மும்பர்தொல் லுலகம்
அடங்க லுங்கவர் வானம ராடின ரடிநாள். (சு)

அண்ட வாணருந் தானையு மார்த்துடன் போர்ப்பக்
கொண்ட லூர்தியாண் டெழுதலுங் கொடியவர் சேனை
மண்டி யார்கலி யொன்றெழுடொன் றேற்றன வானம்
விண்டு போழ்பட விளைந்தது கொடுஞ்சின வெம்போர். (ஙி)

தளர்ந்த மாதிரக் களிற்றினந் தாளடித் தூள்போய்
அளந்த தாரண னவனியை யடல்வரூ தினிகள்
கிளந்து பூசலிட் டுரப்பிய பேரொலி கெழுமிப்
பிளந்த கண்டமுங் கலந்தது திளப்பரும் பெரும்போர். (சு)

படவ மாகுளி வெள்வளை சல்லரி பணவம்
குடமு ழாத்துடி பணவ யிர் காகளங் குளிறித்
தடவு மொல்லொலித் துழனியால் வீடுணர் தவத்துக்
கடவு ளோருமென் செவித்துணை புதைத்தனர் கரத்தால். (எ)

குழையின் காறுமுள் வாங்கிய கடுஞ்சிலைக் கொடுங்கோல்
மழையின் வீசினர் வானவர் வடவையிற் பொங்கித்
தழைய நோன்சிலை குழைத்துநாண் டெறித்துவெஞ் சரங்கள்
முழைகெள் வாயரு மழையெனப் பெய்தனர் முறையே. (அ)

தலையைச் சிந்துவ புரவியை முருக்குவ தடக்கை
மலையைக் கீறுவ மன்னரை யரக்குவ வரிக்கைச்
சிலையை நூறுவ தேர்க்குலஞ் சிதைப்பன தெவ்வர்
நிலையை மாற்றுவ புலவர்வெஞ் சிலைபொழி நெடுங்கோல். (கூ)

முடி பிளப்பவு முரசினைப் பிளப்பவு முனைந்தோர்
கொடி பிளப்பவு மந்தர கணநிலை குலுங்கும்
படிபி ளப்பவு மூர்திபி லுருத்தெழும் பலகார்
இடிபி ளப்பவு மீர்ப்பவு நிருதர்கை யிருங்கோல். (க0)

வில்லி னுணைலி களிற்றினம் பிளிறெலி வியன்றேர்ச்
சில்லி வாயொலி தழங்கிய வாயொலி செருவில்
வல்லி யம்பெருங் குழுவிடை மறிக்குழா மென்னப்
புல்லி னுரக னிலத்திடைத் தயித்தியர் பொடியாய். (கக)

கால மின்னது செல்லுழித் தானையங் கடலைக்
கூல மாற்றுகச் செம்புல மடுத்ததைக் குறியா
ஆல மென்னநின் றழன்றுதன் றுணையோ டடர்ந்தான்
நீல மால்வரை நிகரிய நிறத்துவெஞ் சூரன். (கஉ)

அடன் முழங்குசெந் தழல்பொறி விழியின னலைநீர்க்
கடல் கிடந்தன தானையன் காசினி வயிற்றுக்
குடல் நிழித்தெழு குன்றுறழ் தோற்றத்தன் குதித்தான்
தடவு வெஞ்சினத் தமரர்வா ரிதியின்மந் தரம்போல். (கங)

கரங்க ளென்றும்வெங் கரியென்றும் பரியென்றுங் கருதார்
சிரங்க ளென்றும்வெங் கோலென்றும் வேலென்றுந் திணிதோள்
உரங்க ளென்றுமே றறிவுறு தொருதனித் தேர்மேல்
சரங்கள் கொண்டெழு முகிலெனப் பெய்தனன் றருக்கால். (கச)

ஊறு பட்டபுண் ணீர்பட வும்பரை யொறுத்து
வீறு பட்டவெஞ் சூன்மே லுருமென வெகுண்டு
நீறு பட்டுக வெதிர்ந்தனன் முதிர்ந்தவெண் ணிறத்துச்
சேறு பட்டமா மதமலி யுகைத்தெழுந் தேவன். (கரு)

நெருக்கி வார்சிலை குழைத்துமிழ் கணைகளை நேரே
ஒருக்கி யாயிரங் கோடிதா னவர்முடி யுருட்டிப்
பொருக்கெ ழுங்களஞ் செம்புன லாறுகள் புதுக்கிப்
பெருக்க மேற்பிணப் பிறங்கலே பெருக்கினன் பிறங்க. (கசு)

விண்ணிற் றூவியும் வெற்பினில் வீசியும் விரிநீர்
மண்ணிற் சிந்தியு மருமத்தி லுறுத்தும்வாய் நுழைத்தும்
கண்ணிற் காணரு நிருதர்வெம் படையெலாங் கவிழ்த்தான்
பண்ணிற் றுக்குவெள் ளடலயி ராவதப் பாகன். (களை)

நெற்றி மேற்சில நிறத்தின்மேற் சிலமுர ணெடுந்தோட்
சுற்றின் மேற்சில தொடுகர மேற்சில துரப்பப்
புற்றின் மேற்செலு மரவெனக் கொடுங்கணை புகலால்
கற்றி வீழ்ந்தனர் தயித்தியர் கழலினங் காய்போல். (கஅ)

திவச மன்னதிற் சூரன்வெந் தேரையுஞ் சிதைத்துத்
துவச முந்துமித் தடுபரிக் குலத்தையுந் துணித்துக்
கவச முங்கிழித் தவனிருஞ் சிரத்தையுங் கரத்தால்
அவச முற்றிட வரிந்தனன் குலிசவே லதனால். (கசூ)

கணங்கொ ளிந்திரன் கடிந்தவெஞ் சூரன்மா யையினால்
இணங்கு பன்மனை யெய்தியீ ருருவுமோ ருருவாய்
மணந்து சூரபன் மாவென நின்றனன் மகவான்
புணர்ந்த வாகைகண் டுடைந்தன னுறுவலி போனான். (உo)

விரிந்த நோன்சினைத் தொன்மர மிவர்ந்தவன் விழினும்
திரிந்து மச்சினை யிடைப்பிடித் தேறுமச் செயல்போல்
பரிந்து வானவ ருலப்பினு மூயர்ந்தனர் பாவம்
புரிந்த புல்லியோ நிறந்தவா றிறந்தனர் போனார். (உக)

போன காலையிற் சூரபன் மனைப்புறங் கண்ட
வான வில்லிதன் வாகையு மற்றவன் செருவில்
ஊன மெய்தினன் நிறுல்வியு நோக்கியே றூர்ந்த
மான மில்லிதன் னடியவ ரோருரை வருத்தார். (உஉ)

குன்ற வார்சிலை யானடி பணிந்துவெங் குலிசன்
வென்றி யெய்தின னிவனஃ தின்மையான் மெலிந்தான்
என்று மெம்பிரா னருள்கடைப் பிடித்தவர்க் கேற்றம்
ஒன்று மோபொருண் மும்மையு மவர்திறத் துறலால். (உங)

புரைய றுந்தமிழ்த் தென்றலங் குழவிவாழ் பொதிய
வரையில் வாழ்சிவ யோகியா சமனநீர் கடக்கக்
கரைப டாமையேழ் தினம்வரங் கிடந்தனன் கார்போல்
உரைசெய் மேனிய னென்னின்மே லுரைக்கவு முளதோதா. (உச)

வரித்த வேணியா னடித்தொழும் பால்வரும் வலியைப்
பரித்தி லானிவ ணுதலிற் பரித்துளார் வாகை
தரித்தி லானெனப் பலகொடு வாயொடுந் தவத்தோர்
தெரித்த மூதுரை வீழ்ந்தது தயித்தியன் செவிக்கே. (உரு)

அகன்ற கேள்வியார் நுவன்றதை யகனுறு கடவுள்
புகன்ற தாமெனப் புலன்கொடு சூரபன் மனுமா
றிகந்த தன்குலக் குரவனீ யிருபத மேத்திப்
பகர்ந்த வைம்பதம் பெற்றன னுறுவலி பலிக்க. (உசு)

நீறு தோய்ந்தசெம் மேனியன் கண்டிகை நிலவும்
வீறு மாமணிக் கோவையன் விமலன்மெய் யடியார்
தேறு மாகம நடையின னெம்பிரான் றிருத்தொண்
டூறு நெஞ்சினன் புகலிவா யணைந்தன னுவப்பால். (உஎ)

வேறு.

குமுதவா யவிழ்க்கு மமுதவாய்த் திங்கட் கூன்புறங் கொடிநிரை தடவும், சமுகநீண் மாடக் காழியம் பதிவாழ் தனிமுதற் கோயில்புக் கலரோன், இமிழ்தடம் படிந்து பிரமநா யகன்ற னிருசரண் பணிந்துசே யொளிவிட், டுமிழொரி நாப்ப ணளப்பருங் கால மூதையுண் டுறுதவ மிழைத்தான். (உஅ)

இழைக்குறுந் தவங்கண் டழற்பொலி மேனி யெம்பிரா னன்புபூத் தவன்முன், தழைப்பசுங் கழையாய் மூளைத்துநல் லிலிங்கத் தனியுருக் கொண்டுமற் றதன்கீ, ழுழைப்பெருஞ் சங்கத் தீர்த்தமொன் றுதிப்ப வுதவினன் கதழ்சினச் சிறுகட், புழைக்கை மாவுரியிற் பவளமால் வரை மேற் புயறவழ்ந் தணையபொற் புயத்தான். (உக)

எழுந்தபா சொளிவள் ளிலைத்தலை வேணு வினிங்கநோக் குற்றவா ணிருதன், பொழிந்துகண் பனிப்பக் கரமலர் முகிழ்த்துப் புளகமுற் றகநெகிழ்ந் தவசத், தழுந்தி யானந்த வாரியுட் டிளைக்கு மளவையிற் கனைகணு யெங்கும், றொழுந்தொறு மடியார்க் கெளிவருங் கருணைச் சோதிவா னவனெழுந் தருள. (ஙo)

பாய்விடை யூர்ந்து பசுங்கொடி புணரும் பவளமால் வரையினிற் பொலிந்த, தூயவ னீணைத்தா மரையடி பணிந்து சுந்தரா போற்றிமா லயன்பால், மீயுயர் கடவுட் குன்றென மூளைத்த வியப்பென விதியி லேன் காண, மாயிருந் திறலார் வேணுவாய் மூளைத்த வரதனே போற்றியென் றிசைத்தான். (ஙக)

ஏத்தெடுத் திறைஞ்சு மணியன்மாட் டருள்கூர்ந் தென்னையா ளுடை யவன் கருணை, பூத்தனக் கியன்ற கேளென மறைதேர் புங்கவா பங்கய ணுதி, வாய்த்தமன் னுயிர்க ளெவற்றினு மாயா வலியுமிவ் வண்டகோ டிகளைக், காத்தல்செய் வலியு நிகரிலா வலியுங் கனிந்தருள் செய்யெனக் கரைந்தான். (ஙஉ)

அரண்பொரு மூரற் கரக்தைவார் சடையா னவனுவக் தனவளித் தொருநீ, வரம்பெறு வேணு வழைப்பொலி சங்க மாதட மிதுபடிந் திடு வோர், நிரந்தர வலிபெற் றேங்குக வருநா ணிமிர்கடம் பணிபுயத் தொருவன், கரந்தொடர் வேலா லெம்மூழை வருக கடையிலென் றிணை யிலான் மறைந்தான். (ஙங)

தொல்லைநாள் பதுமா சுரன்வர மடைந்து துயர்விளைத் தானென வரத்தால், ஒல்லையே சூர பன்மனு மமர ருறுபத மொருதனி முருகன், மல்லன்மா ஞாலத் துதிக்குநாட் காறும் வவ்வினிவாழ்ந் தனனெனினின் மேல்கீழ், இல்லையே யெம்மான் றிருவருட் கென்னு விருந்தவன் மற்று மொன் றிசைப்பான். (ஙச).

பீடுறு தோற்றத் தாடகக் குடுமிப் பெருந்தளித் தோணியம் புரிக்கே ஈடுறு வேணு புரமெனும் பெயர்தா னின்னுமோ ராற்றினு லியைந்து நாடுறு காதை கேண்மி னெனு நமர்கா ணகுபுகர் முகத்தொரு நான்கு கோடுறு மயிரா வதப்பெரும் பாகன் கூத்திய ராடலின் மேனுள். (ஙரு)

மாலுழுக் திருக்கு மமைதியி லெல்லாம் வல்லதன் குரவனுண் டணைந்த காலுற வணங்கா நிலையறிந் தனையான் கவன்றய லேகலு மகவான் மேலுறு பெரும்போர் நிருதரா லுடைந்த வேதனை வேதனை வழுத்தி ஓலுற வியம்பத் தேசிகர் பிழைத்த வுறுபழி யெனவய னுரைத்தான். ()

உரைத்துழிக் குரவன் றனைவரக் காணு வுறுதவக் காசிபன் போன [வி வரைக்கினை யாற்றல் விசுவரூ பனைத்தன் வழிக்குரு வாக்கியோர் வேள் உரைப்பட வளர்ப்ப மற்றவ னிருதர்க் கூட்டனு மவனையொள் வாளால் அரைக்கணத் தரித்த சதமகன் செயலை யறிந்தன னவனுடைத் தங்கை.

அறிந்தவ னெருதீ வேள்விசெய் தொருவா ளரக்கனை விடுப்பவன் னவன்மா, றெறிந்தகாள் விருத்தி ராசுர னெனவக் தேற்றலுஞ் சீற்ற வெள் ளானை, உறுந்தனிப் பாக னவனையும் வாட்டி யுபயதே சிகரையும் பிழைத்துச், செறிந்தவல் வினைபோ லரக்கனைச் செருத்த தினைனைத் தொடரட மெலிந்தான். (ஙஅ)

மெலிந்தவன் முன்ன ராழ்கடற் குடித்த மேலவ னெய்தியவ் வினையை, இலங்குநீர் விரிமண் ணரிவையர் தருக்க ளிவையிடத் திறக்கி வா னுரிமை, நலம்பெற நளிநீ ரலம்புதண் பணைசூழ் நகுமணி மாடநீள் காழித், தலம்பணி கெனத்தண் டமிழ்முனி விடுப்பச் சதமக னது குறித் தெய்தி. (ஙக)

தேவியல் வேணு வழிபிடித் திழிந்து செம்பொனு செயில்புடை யுடுத்த, மாவியற் றளிப்புக் கயன்றட மாடி மழுவலா னருச்சனை முடித் தூப், பூவியல் பொலன்ரு ளடிக்கடி பணிந்து புரந்தர னிரப்பமற் றவன் முன், கோவிடைப் பாக னினிதெழுந் தருளிக் குறைவிலா வாறருள் கொழித்தே. (சo)

குன்றிருஞ் சிறக ரொருங்குற வரிந்த குலிசவே லொருவனின் விணைகள், இன்றிதி லெம்மை யிறைஞ்சலி னெழிந்தா யீண்டுநீ வேணு வாலிறங்கி, நின்றதால் வேணு புரமென விவ்வூர் நிலவுக வென்றகன் கோயிற், பொன்றிருஞ் சடையான் மறைந்தனன் வேணு புரமெனப் பொலிந்தது மூதூர். (சக)

தாதளா யறுகாற் பேடிசை முரலுக் தருநிழற் காவலன் முன்போல் ஏதமொன் றில்லா வமருல காட்சி யெய்தின னினிதுவீற் றிருந்தான் ஆதலாற் காழி புரத்திய லெல்லா மந்தணீ ரித்துணை ஞான்றும் ஓதினே னலனே னுன்முகத் தொருவ னெனினு மொழிவது வன்றே. ()

உம்பர்வாழ் கடவு ணிதிகளோ நிரண்டு முறுதவ மாற்றியிங் நகர்க் குத், தம்பெய ரிரண்டும் பூணந்திறை கோயிற் றலைக்கடைக் காவல்பூண் டுலகின், விம்பவாண் முகத்தின் விழித்தவர் மிடிநோய் விலக்கவே ளாண் மையும் பெறலான், இம்பரே சங்க நிதிபுரம் பதும நிதிபுர மென்பது மிதையே. (சஙு)

விழுப்பநீ ளெல்லை யெங்குமோ சத்தும் விண்ணவ ராதியர் பணி ந்து, வழுத்திய விலிங்க மணற்குழு வாக வயங்கலா லடிபட லாகா, செழித்தபொற் சிகரி செய்நிலத் திறைஞ்சிற் றிருக்கறப் பொருப்புவிற் குழைத்தோன், எழிற்புனை புகலிக் கெய்தலா மன்றி யிதுபெரு செய்தவ திழுக்கே. (சஎ)

வைகலொன் றேனும் பூந்தரா யிருந்தோர் மஞ்சனப் பொருள்சில வளித்தோர், செய்கலன் கவிகை யிடிமுர சாடை செய்துளோர் பெரும் பய னென்னே, துய்கவர் திரியொன் றெரிமணிச் சுடர்க்குத் தூண் டிணை நிழைக்கொரு பருவம், மைகவர் மிடற்றோன் கயிலைமால் வரை யில் வதிவரென் றருமறை வகுத்தால். (சஙு)

தத்துநீர் வேணிப் பிரம நாயகற்குத் தக்ஷவின் ஞரமு தொருக்கால் பத்தியா லூட்டி லாயிரம் பருவம் பண்ணிய பலனெனுங் கடைவார் சித்திரை யாடிப் பிறப்பின்மஞ் சனநீர் திருமுடிக் காட்டுநர் தமக்கு மூத்தியே யலது மற்றையோர் போக மூலை கத்தினு மிலையால். (சசு)

மண்ணிடங் கொள்ள வைங்குமோ சத்து மல்கிய விலிங்கமிக் கலி நாட், கண்ணிடங் கொள்ள விளங்குமு தனனுற் காழிமா நகர்வியப் பெல் லாம், பெண்ணிடங் கொள்ளு மொருவனே யறியும் பெற்றியை யன்றி யென் னனையார், எண்ணிடங் கொள்ள வழுத்தரி தென்று னேதமில் சூதமா முனிவன். (சஎ)

[கடு-ஆவது. வேணுபுரமான வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத்திருவிருத்தம் கூ0எ.)

——: o :——

ககூ - ஆவது. கழுமலமான வத்தியாயம்.

கடவுண்மர கதப்புரவி குரத்தா லெற்றக் கருவிமுகில் விழுத்தியங்
குஞ் சோலை வாய்ந்த, தடவுமலர்க் கோட்டினிரு லுடைந்து செந்தேன்
சாறுபடச் சேறுபடும் வயல்சூழ் காழி, இடனுடைய வேணுபுர மெ
னும்பேர் பூண்ட வியற்கையிது கழுமலமென் றிவ்வூர்க் குற்ற, அடை
வும்விரித் திசைப்பலென முனிவர் கோமா னறைந்ததையு மொருவழி
யீண் டறைவென் மாதோ. (க)

துகளகன்ற பெருங்கேள்வி மறைதேர் வாழ்க்கைத் தொழிலுரோ
மசனெனுமோர் பகவன் மருன்னுள், அகலிடத்தா ரழலாடி தலங்க
டோறு மரும்பெறன்மா தவமுயன்று மளப்பி றெண்ணீர், புகலரிய கட
வுணதி படிந்து மாயைப் புணர்ப்பகன்ற வெறுவெளியுட் டூங்கித் தூ
ங்கா, நிகழுநிரா லம்பகிவ ஞானந் தன்னே நேர்படா தூளமுருகி நிற்கு
நாளில். (உ)

கன்னியிளம் பெடையளியுந் துளிக்குந் தெய்வக் கற்பகநாண் மலர்
நறைவாய் கவர்ந்துண் டாடும், மன்னியபூஞ் சுரும்பு மிமிர் வான்றேய்
சோலை வளர்புகலிப் பதிபரவ வருவா னுள்ளே, தன்னியலும் பசுபோத
மகன்று மேலாந் தலைவனருட் போதம்வருந் தரத்தா லார்வம், துன்னி
மன மொருப்படுவா னையன்ற டாகந் தோய்ந்துபிர ளயவிடங்சுற்
றுழுது போற்றி. (ங)

நஞ்சுபொதி மணிமிடற்றுக் கஞ்சுகேய னளினமலர்த் தாள்ப்பவி
நகைவெண் கோட்டுப், பிஞ்சுமதி கிடந்திமைக்கும் பெருநீர் வேணிப்
பிரமேச னடிக்கன்பு பெருக்கி நல்லான், அஞ்சுமமு தோரஞ்சு விதியா
லாட்டி யருத்திவழி பாடாற்றி யடியேற் குன்றன், செஞ்சரண முளரி
யைவிட் டெஞ்சல் செய்யாச் சித்தநிலை பெறவருளிச் செய்வா யென்று.

காற்றிசையி னினிதிருந்த திங்கண் மாலைக் கடவுளடிக் கருச்சனை
யின் கடமை யாற்றி, மாற்றருமைம் புலனெடுக்கித் தோணி மேய மழ
விடையர் தணன்றிருத்தாண் மனத்தின் முன்னி, ஆற்றலுரு குணங்
கரணம் பிறவு மெட்டா வற்புதநீ டொளியொடும்புக் கழுந்திப் பன்னுள்,
நோற்றுடலம் வாட்டியபே ரறிஞன் முன்ன தூனையெயிற்றுப் பணிமாலை
நுடங்க மாதோ. (ஙு)

கங்கைநதி வேணியுமுக் கண்ணு மான்ற கறைமிடறும் பிறைமுளை
யுங் கரங்க ணுன்கும், மங்கையொரு பாலுமணி கிளர்முந் நூலு மறி
மழுவும் பெறுகருணை வதனப் போதும், கொங்கடரும் கொன்றையும்
வெண் ணீறு மார்பும் கொலையுழுவை யதளுமணிக் குழையு மாயன்,
பங்கயநண் ணியமலரும் பொலியவாதி பகவனெழுந் தருளமுனி
பணிந்து கண்டான். (கூ)

அருமறைநா யகபோற்றி ஞான வல்லி யாருயிரே போற்றிமூக்க ணமல போற்றி, நிருமலமா யுலகுகா ரணமா யம்பொ னெடுவரையி லிருந்தவனே போற்றி நேமித், திருமகணே யனலெயடு கணையாக் கொ ண்ட சிவபோற்றி நீறணிதிண் டோள போற்றி, பெருகுசரா சரவு யிர்கட் குயிராய் நின்ற பெரியநா யகபோற்றி பெம்மான் போற்றி. (எ)

ஓவருமைந் தொழிலுடையாய் போற்றி யோக ருளத்திலெழு பரஞ்சுடரே போற்றி மாயன், பூவயன்போற் றியபாத கால கால புண்ணியமங் களமேனிப் புனித போற்றி, தாவருமான் மழுவணிகைத் தலத்தாய் போற்றி சந்திரசே கரகாம தகன போற்றி, மேவுபக னெனு ங்கதிர்க ணிடந்தாய் போற்றி விறல்வேங்கை யதள்புனைந்த விமலா போற்றி. (அ)

செக்கரிளஞ் சடைமுடியாய் போற்றி நீண்ட செம்பொன்வரைச் சிலைவளைத்த நம்ப போற்றி, அக்கரவ மணிந்ததிரு வரையாய் போற்றி யாரணகா ரணன்றேடற் கரியாய் போற்றி, பக்கமலி குறட்பூதப் படை யாய் போற்றி பாய்திரைவெவ் விடதுகர்ந்த பரனே போற்றி, திக்கெ வையு மம்பரமா வுகந்தாய் போற்றி சிவஞான குருமுதல்வா போற்றி யென்றே. (கூ)

என்புருக மயிர்பொடிப்ப மொழிதள் ளாட விணையடிப்பூங் கமல மிசை யிரங்கி யேத்தி, அன்புருவா நின்றனே யுன்போ லன்ப ராருளர்நீ மகிழ்ந்தனகே ளளித்து மென்னப், புன்பிறவிப் பிணிதணிக்கு மருத்து வாநின் பொன்னடியைப் பிரியாத நன்னர் ஞான, நன்புலனெண் றிடவடி யேற் களித்தல் வேண்டு நாதவெனப் போதமுத னம்பன் கூறும். (கo)

மம்மரறுத் தருள்யாமு நீயு நின்னே மருட்டியமா யையுமலமும் வினையு மோர்ந்து, மெய்ம்மையுணர் வதுஞான மதுதான் மிகுல்லை வினைப்பாடொத் துழித்தோன்றுந் தோன்றுங் காலை, எம்மருட்சத் தினி பாத மியையத் தோன்று மெமதருளே யுனக்குரிமை யென்றுந் தோன் றும், அம்மலமைந் தும்மோரு நாமு நீயு மநாதியென வறிந்திடுதி யறி வான் மிக்கோய். (கக)

இருமாயை நீங்கியசத் தினிபா தந்தா னிறைசரிதை யாதிகளை யிழைத்தார்க் கன்றி, மருவாது நாமியற்றுந் தொழிலோ ரைந்து மன் னுயிரின் பொருட்டாகுங் களிம்பு மூடி, ஒருவாத செம்பெனமா மலத் தாற் றம்மை யுணராதெம் மையுமுணரா துயிர்கள் யாவும், கருமேவி முன்னையிரு வினைக்கீ டாகக் கறங்கெனநின் றுழலுமுறு கதிகா ணுமல். (கஉ)

பருவமது கன்னியுழைப் பாரா நின்ற பதிபோலப் பசுவினது பருவம் பார்த்துத், தருதலினும் பசுபதிநா முயிராங் கன்னி சரிதை முதல் வழிநான்குந் தகைசால் கேள்வன், பெருமிதநல் லிசைகேட்ட லவனே யெய்துமீ பேராரா தனைமுடித்தல் விழியாற் காண்டல், ஒருமை

யுறத் தனிமறந்து கலத்தல் போலு முணரினெம தளவிலின்ப முண்ணு மாறே. (கந)

இயற்கைநிறந் திரிந்துறுபன் னிறங்க டானு யிருந்தபளிங் குச்சி படு மிரவி முன்னே, மயக்கமற விளங்குதல்போற் புலன்கண் மூடி மருண்டவுயிர் நமதருளா மருவித் தத்தம், செயற்கையுறு பசுகரணச் செய்கை நீங்கிச் சிவகரணத் தெமையுணர்ந்து திளைப்ப தல்லால், அயிற் பிலெம தைந்தொழிலி யியற்ற மாட்டா வலகையுடை யுறுப்பினர்போ லமையு மன்றே. (கச)

ஓதறுகே வலசகல சுத்த மூன்றி னுணர்வுமலி சுத்தவுயிர்க் கொழிய வேனைப், பேதயிர்கட் கருளாற்ற விளங்கா துற்ற பிணியறியு மருத்து வன்போல் வினைநா மீய, மீதுதுக ரணுக்கண்மல வழுக்கை ஞான விரி புனலாற் றுடைத்தன்றி வியனீர் நீத்தம், ஓதுகடற் புனலெனுங் கழுவ லாற்று மொய்த்தபுலப் பகைகடந்த முனிவ ரேறே. (கடு)

ஈட்டியன விழித்தளவே யொழிந்த வேனை யெடுத்தவினை யுட லோடு மெதிர்ந்த லெய்தக், கூட்டும்வினை யெமையுணருந் திறத்தான் மாயுங் குறைவறவே குறியாது குறித்துச் செவ்வன், நாட்டுறுபல் பொ ருடொறுநா மியைந்த வண்ண நயப்பதுவே ஞானமென நல்கி யாங்கே, ஓட்டுபுனல் விழியருவி யொழுகா நின்ற வுரோமசன்பாற் பின்னரு மொன் றுரைப்பா னண்ணல். (கசு)

மாற்றரிய வெமதுதிரு வாக்கி னுலுன் மலங்கழுவ விளங்குதலா லிவ் வூர்க் கென்றும், சாற்றரிய கழுமலமென் றருகு நீயுந் தாணிழற்கீ ழெய்து கெனத் தண்டேன் சிந்திக், கீற்றுமதிக் கோடுழக்க முகைவாய் விண்ட கிளரொளிய கடுக்கையந்தார் கிடக்கும் வேணிக், கூற்றடுதாண் மழ விடையூர் குழகன் செம்பொற் கோயிலிடை மறைதலொடுங் குணக்குன் றன்ன னன். (கள)

பாசமல வலிகடந்து கலாதி மாறிப் படர்கரணம் குணம்பொறிகள் பலவுஞ் சாய்ந்து, நேசமதி நினையாது நினைந்து ஞான நீடொளியி லொன்றி யொன்று நிலைமைத் தாகி, மாசகல்பே ரானந்த வாரி தோய்ந்த மாமுனிவன் சரிதையிதை வரைந்தோர் கேட்டோர், தேசுபெற விளம் பிடுவா செவரு ஞானச் செல்வரென வீற்றிருப்பார் சிவன்றுள்பெற்றே.

கொள்ளைவரி வண்டுழக்க முகைவாய் விண்ட கோகனகத் தடம் பொகுட்டிற் பொலன்சூட் டன்னம், கள்ளவிழிப் பெதும்பையர்காற் சிலம்பி னேங்கக் கருங்களம ரரங்கிதெனக் கணிக்கு மாநீர், வெள்ள முது தடத்தெழுந்த வெடிவாய் வாளை மிடற்கழுக மடல்கீறி விரிதே னுட்டும், அள்ளல்வயற் கழுமலத்தி னியலி தென்று னருங்கலைநூற் றுறைகடந்த வறிஞர் கோமான். (கக)

[ககூ-ஆவது. கழுமலமான வத்தியாயம் முற்றிற்று. ஆகத்திருவிருத்தம் கூஉசு.]

——:o:——

களவியல். புறவமான வத்தியாயம்.

சிறையா ருமலப் பகைசெற் றுமுனித் திலகன் சிவஞா னபதம்
பெறலால், மறைவா ணர்த்துவன் றியகா ழிகழு மலமா கியவா றிதுமே
லிதுதான், குறைநா டுகபோ தநிறைக் கொருவன் கொழுமே னியரிங்
தெழில்பெற் றிடலால், முறையே புறவப் பெயருற் றதுவு முனிபுங்
கவரே ஞியவா மொழிவாம். (க)

விரையார் தருகொன் றைநறுந் தொடையான் வேடங் களினீ டுக
ருத் துடையான், வரையா துதருங் கடிவார் மூரச மாரு மன்முழங் குக
டைத் தலையான், புரைதீ ரருணல் குலதீ பமெனப் புனைமா முடியான்
முனைநா ளினெடுங், திரையா டைமடந் தைமணை னெடற் சிவிசக் கர
வர்த் தியெனுங் திறலான். (உ)

மலையொத் ததடம் புயமுஞ் செயமு மலரொத் தவிழிக் கடையுங்
கொடையும், கலையொத் தகுணத் துறையும் பொறையுங் கடலொத்
தநிதித் தனமுங் கனமும், துலையொத் தசமத் துவமுந் தவமுந் துகளற்
றமனத் தருளுந் தெருளும், உலகொத் தசரித் திரமும் பரமு முடை
யான் மனுநீ திவரம் புடையான். (ங)

காலந் தொறுமா மழைமா ரிகொளக் கலிவா ணர்மகிழ்ந் துபொன்
மா ரிகொளச், சீலம் புனைநூல் வழிதீ வளையச் சேரும் புகழோ செழுதீ
வளையக், கோலொன் றினிரும் புவியே வல்செயக் கோவூர் தியடிக் குள
மே வல்செயச், சால்பொன் றியசென் னிகுலம் பொலியத் தன்னோர்
குடைகொண் டுபுரந் தருளுள். (ச)

அனையான் முதுவேள் விசெயக் குறியா வகிலத் தலகோ டியினுத்
தமமாய், முனையோ கிகண்ஞா னிகள்வா ழிடமாய் முத்தா பமுருக் குவ
தாய் மறுமைத், துனையார் பவநூ றியருட் டருமத் துனையா யதிபா
வமொழித் திடர்தீர், புனைமா தவசித் திவிளைக் குமெழிற் பொலிகா
ழியுண்மந் திரிமார் கலொடும். (ஞ)

தானைக் கடல்சூழ் வரவெய் தியயன் றடமூழ் கியருட் பிரமே
சனைமெய்ஞ், ஞானக் குருவைத் திருமா லுரிசேர் நகுகஞ் சுகனைத் திர
சுந் தரியைச், சோனைப் புயலன் னவனன் பிலைநெடுந் தொழுதங் நகரத்
தின்வடக் கயல்சூழ், மானத் துறவோர் விதிநூல் வழியே மகமொன்
றுதொடங் கியவெல் லிதனில். (ட)

ஆதிக் கமிலா யவரைப் பெருமா னரசன் புரிநீ தியுமர் றறமும்,
சோதிக் கநினைந் தமரே சனையுஞ் சுடரோ னையுமுன் னினன்மற்
றவரும், நாதித் தகறங் கருவித் திரள்சூழ் நகுவெள் ளியடுக் கலினந்
திபிரான், ஓதிப் புகுவிப் பநுழைந் தெனையா ளுடையா னடிகண்
டுபணிந் திடலும். (ண)

முன்னிற் பவர்தம் மொடுமெம் முடையான் முறையா லருள்செய் திருவீ ருநெடும், பொன்னித் திருநா டுறுகா வலவன் புகழ்மிக் கபுகார் நகரத் ததிபன், சென்னிப் பெருமா னுலகம் பரவுஞ் சிவிசெய் மனுநீ தியைமூ துலகோர், உன்னித் தெரிவான் மனம்வைத் தனநீ ருடனிக் கணமே தெரிவித் தணைவீர். (அ)

என்ரு திபரம் பரனல் குதலா விமையோ ரிறையுந் தழல்வா னவனும், சென்ரூர் பலதே யமகன் றுகளிச் சினவா லியெழும் புனலு டனுகிக், குன்ரு முறைநீ திசெய்வே னுழவன் குறியா தவுருக் கொடுகூ டினமேல், இன்றே நமதெண் ணிரம் புமெனு விருவோ ருமறைந் துருமா றினரால். (கூ)

சேனத் திறைவா னவனு கிவரச் செங்கட் புறவங் கியுமாய் வெரு வா, மானக் கொடிசூழ் திருமா நகர்வாய் மனுசே கரன்வேள் விசெய்சா லையினில், கூனற் புறவா விதளர்ந் தலறுங் குரலோ டுமொடுங் கியடைந் துநெடும், தானக் கடலொத் துளமன் னர்பிரான் சரணே சரணென் றுவிழுந் ததுவே. (கo)

வீழுஞ் சிறுகட் புறவுக் கருளால் வெருவே லொருபோ துமெனக் கருகே, ஆழுங் துயர்விண் டினிதா யுறைகென் றபயந் தருமவ் வுழி வெவ் வியகட், போழுஞ் சிறுதுண் டமொடும் பொருமிப் புறவெங் ஙன மென் ரெருங்கங் கமுமேல், ஏழுண் டவயக் களிறன் னவன்முன் னெய் திச் சிலவெய் யவுரைத் திடுமால். (கக)

அரைசே யுயர்சோ ழர்பெருந் தகையே யளியே னெடுவெம் பசி யா றிடுமா, றிரைதே ரியவந் தகபோ தமரோ வின்னே தருகென் னலு மன் னர்பிரான், உரைசா லுயிரே னுமளிப் பதலா லுன்றஞ் சமெனப் புகுமோ ருயிரைத், தரையாள் பவரீ வதுநேர் குவரோ தருமத் தினெ றிப் படுதன் மையிஞல். (கஉ)

தண்டா ரவனீ துரைசெய் தலொடுந் தணியா வெனிரும் பசிதீர் புறவைக், கொண்டா யென்வயிற் றெரிமண் டியடக் குடர்வே வதுனக் கழகோ கணமுன், உண்டா கவடுக் கவிரங் கிணையோ வூனுண் ணவிரும் பினுனக் கரிதோ, கண்டார் பொருண்மன் னவர்கொள் வரெனிற் கங்கத் தினுமுண் டுகொல்கா வலனே. (கங)

வெருவுற் றபுரு வெனநா டியகின் விழியா லழியும் பசிகொண் டொருபா, லுருகுற் றதெனத் தனிநா டிலிழுக் குளதோ வனதாள் புவி மன் னுயிர்போல், மருவுற் றனன்யா னயல்வே றுளெனு மற்ரென் றிணையொன் றடமா மலரோன், நிருமித் தவிரைக் கிடையூ றுசெய்தா னீதிக் கிதடா துநெடுந் தகையே. (கச)

போர்க்கென் றிருமன் னுயிர்பொங் கியெழிற் புறநின் றுமகிழ்ந் திடலன் றியுமே, பார்க்கின் றவர்சீ றுவரோ வவர்போற் பார்வேந் தர்

பொறூர் களெனிற் பலவா, வேர்க்கின் றனநின் னுலகத் திலேயோ விழி கண் டதொறுப் பரெனிற் பசியால், கூர்க்கின் றவெனக் குமொரா றுதனைக் கூறென் றுயர்பா றுபுகன் றதுவே. (கரு)

வெம்பா றுபுகன் றதுமன் னர்பிரான் மிளிர்செஞ் செவியே றிவி யப் பழறீஇ, அம்போ ருகவாண் முகவன் புகல்வா னபயம் புகுமோ ருயிரா ருயிர்போல், நம்பா தரமிக் கதுகா ணிடர்கூர் நனிநோ யடவந் தளதே லதனுக், கைம்பூ தவுடம் பிலிடங் தருவா ராரோ புகல்வீ ரமுடைப் பறவாய். (கசு)

பாருள் ளவுயிர்க் குடல்யா னெனவே பாரா வதமென் னடிபற் றிவரச், சூருள் ளுபுநீ யுமடுத் தணையாற் சுடுவெம் பசியா லுயிர்போ கறியாச், சாரும் புறவன் னதுநீ பருகிற் றன்னு ருயிர்போ மினிநீ விழையின், தேருந் தசையே னுமிறக் துபடாச் சேணு ரமுதே னும் வழங் குவெனுல். (கள)

சோரா வமுதுந் தருதன் மையனீ தொல்லு ணவிரும் புதலன் றியெனக், காரா வமுதென் னெனமன் னர்பிரா னயலோ ருயிரைக் கொலைசெய் திலெனென், சீரா ருடலு னிடுவென் கவருந் திறமெங் ஙனமென் னமகிழ்ந் தபருந், தோரா துலையிற் புறவுக் கிணையொத் திடவுன் றசைதந் தருளென் றதுவே. (கஅ)

பாறங் ஙனமோ தலுமீ துமெனப் பல்லோ ருணவுள் ளதெலா முதவா, தாருன் றுகவர்ந் ததன்மே னியின்மே லருளற் றுமுனிந் தனனே வலரும், கீறுண் டமுஞேப் பிறைவே னியினன் கிளருஞ் செய லோ வயலொன் றுளதோ, கூறுண் டதனீ தியினிற் சிறிதுங் கோடா மைகுறித் தனனே நிருபன். (ககூ)

மறைவா யிருவா னவரும் பலமா மறைவா யிருவா னவருங் கரை யத், துறையூ பதலத் தருகா கடெடுங் துலையொன் றுநிறுத் திமதிக் குடையான், நிறைவே தியரா தியர்போ தியல்கண் ணிணையா ரிமைமூ டியிரங் கவெழுந், துறைசா யவிடுத் தொருபூ முகவா ளுருவிக் கொடு நின் றுபிணெண் டிறலோன். (உ0)

மண்ணுள் பவர்மா திசையாள் பவர்மா மலையாள் பவர்வார் கட லாள் பவர்நீள், விண்ணுள் பவர்யா வரும்வெய் துறவோர் விணைவெங் குருதிக் கணரும் புறவைப், பண்ணு சொருதட் டிடையிட் டுமுறைப் படியே யடிதொட் டுமிடற் றுவரைக், கண்ணுர் தசைமற் றொருதட் டிடையே கைவா ளினரிந் தசுமத் தினனுல். (உக)

கோலே றியவு னிடுதட் டொருபுட் கொண்டே றியதட் டதுகீ முறவே, மேலே றுதல்கண் டடலே றனையான் வேறுந் தசையில் லென மெய் யிளையான், சால்பே றியதா ரணியெங் கணுமோர் சமமே றவிருந்

தியல்செய் வதெனப், பாலே றுதன்ஞ கமொடே றியதைப் படிவித் தனன்மெய் போய்யெனத் தெரிவான். (உஉ)

மெய்யோ டுதிரம் பொழியக் கழிபோல் வெற்றென் புநரம் பு துலங் ஙகிணப், பய்யோ டுகழிந் துமுன்ஞ மியல்பிற் பயில்கின் றவனு வியைவைத் ததுதான், மெய்யோ மனுநீ திகொலோ வெனையாள் விம லன் செயலோ வரசன் பொறையோ, அய்யோ விவனெப் பவர்முப் புவனத் தாரோ வினிமே லுமுன்ஞ ளினுமே. (உங)

மண்ணஞ் சினமா திரமஞ் சினஙான் மறையஞ் சினமா தவநோன் மைகெடார், எண்ணஞ் சினயா கதலத் தறவோ ரினமஞ் சினவிண் டைமலர்க் குடிவாழ், பெண்ணஞ் சவுமஞ் சலஞ கியறம் பிழையான் விரதத் தையறிந் தியமன், கண்ணஞ் சினவந் துகரந் துறையுங் ககனு திபனுந் தனியஞ் சினஞல். (உச)

அப்போ துபருந் திறைவா னுலகத் தவருக் கிறையா கிவிளங் கமலர்க், கைப்போ துபொழிந் திமையோர் மகிழக் கடிவார் முரசங் களியங் குளிறச், செப்பேர் முலைமங் கையரா டல்செயத் தேசா திபர் நின் றுதொழத் தலையின், துப்பே றியதட் டினிறங் கியெழிற் றேளா மணியன் னவனின் றளவே. (உரு)

உலகத் தறியா தவருந் தெரிவா னுன்னீ தியையா திதனே வலி னுல், இலகத் தெரிவித் தனனிந் திரன்யா னிவனுந் தழல்வா னவன் முன் னெருநாள், தலைபெற் றததீ சிவெங்நென் புதனைத் தருகென் னவ ருந் தவனீ தலுமே, நிலைமைக் குலிசப் படைபெற் றனென்யா னின் னெப் பவனன் னவனே புகலாய். (உசு)

புரமட் டபுரா தனனின் னருளிற் புக்கே மொருமுப் புவனத் தரசும்வாழ், அரசர்க் கரசா னபெருந் தகையே யழிபட் டகின்மே னியைநீள் கமுகில், பரமுற் றபசுங் குலையைச் சிதறப் பைஞ்சே லுத றிச் செஞ்சே றுபடும், தரமிக் கவயற் புகலிப் பதிவாழ் தலைவன் றரநீ வலிகொண் டிடுவாய். (உள)

வேறு.

என்றுபுகன் றீர்வாளி னிரிந்ததசை யாவையுமுன் னியல்பிற் கூடி, நன்றுபொலி வுறப்பொலிந்து வாழ்திபென மன்ன னுமன் னன்மை வாய்ந்து, குன்றினிரு சிறகரிந்தோய் நீர்வேட்கை மிகவுடையேன் கொ டுத்தி யென்ன, அன்றுபுற விண்நோக்கி யைங்கரன்கா விரிப்புனல் கொண் டளித்தி யென்றான். (உஅ)

ஆங்கதுசென் றகன்கரையை யலகுகொடு கீண்டுய்ப்ப வலங்கு தெண்ணீர், ஏங்கொலியின் வரலோடு நிருபனங்நீர் பருகிவிடா யிகந் தான் விண்ணில், ஓங்குதருக் காவலனு மனலோனுந் தம்முதியி லுற்றூர்

மண்மேல், வீங்குசிறைப் புறவுகொணர்ந் தளித்தலினுற் புரூதியாய் விளங்கிற் றன்றே. (உசூ)

இவ்வாறு நிகழ்ந்தபின்னர் வேள்விவினைத் துறையாற்றி யிமய வெற்பால், தெவ்வாறு கடந்தபரன் றிருவருளீ தெனவுன்னித் திணி வெண் கோட்டு, மைவ்வாரி மதமலியா னீம்பெருஞ்சுற் றமுந்தழுவ மதுகைத் தானை, எவ்வாறும் புடைநெருங்கத் தோணிபுரம் பேணிய வென் றெழுந்து புக்கான். (ஈ0)

தேராழி கிழித்தநெடுந் திருவீதி கடந்தமலன் செம்பொற் கோயில், ஓராழி மகன்மகன்செய் தீர்த்தமது படிந்துகட ஞெருங்கே யாற்றி, நீராழி யிளம்பரிதி நிகர்நிறத்துக் குருபரனை நிமலை யோடும், பாராழி யன்பினெடும் வணங்கிமலைக் கொழுந்தினடிப் பதுமம் போற்றி. (ஈக)

கைம்மலையீ ருரிபோர்த்த பிரமேச னிருபாதங் கனிந்து போற்றிச், செம்மலர்ப்பொற் றடக்கையினுற் றூநறுமஞ் சனமாட்டித் தெய்வச் சாந்து, மெய்ம்மலியா னீந்துமமு தோரைந்தும் விரையுளவெவ்வேறு மாட்டி, அம்மலர்கொண் டருச்சனையின் றுறைமுடித்துப் பரிவொடுமின் னமுது மூட்டி. (ஈஉ)

வாசநறுந் தூமமெடுத் தலங்குசுடர் நிரைகாட்டி மலர்க டூவி
நேசபரம் பரவமல நித்தியதத் துவஞான நிமல மூல
பாசவிமோ சனவாதி பகவவென வகநெகிழப் பணிக்கண் வார [பால்.
ஏசகலு மயிர்பொடிப்பப் பணிந்தான்முன் னுயிர்க்குயிரா யிருந்தா னன்

மறுவறுவெள் ளியங்குவட்டின் மழைபுணரும் பொற்குவடு வந்தா லென்னக், குறுநகைவா ணுதற்கூந்தற் கொடியுடன்வெள் விடையிவர்ந்து கோமான் ரூன்றி, உறுபொருளுள் ளியதுதவும் வள்ளியோய் நின்வழிபா டுவந்தே மெண்ணம், பெறுதியுனக் களித்துமென மதிசூடி யெதிரசசன் பேசு மன்றே. (ஈச)

தென்றலங்தேர்க் காளையெழில் கவர்ந்ததுதல் விழியழகா திரைநீராடை, மன்றனிலம் பரித்திறுதி வருநாளுன் னிருதாளி லவாவு ஞாலத், தென்றுமிசை விளங்கியரும் புறவினுக்கூன் கொடுத்துணைவந் தேத்து மிவ்வூர், பொன்றலரும் புறவமெனப் பொலியவுமீங் கருளுகெனப் புகன்று பின்னும். (ஈரி)

கோதிலருங் குணக்குன்றே யளியெனுக்காப் புறவுதந்த குளிர்நீர்த் தெய்வச், சீதநதி யிதிலாடித் திங்கடனி லீரொன்பான் றினத்தில் வெற்பன், மாதரசோ டெழுந்தருளி மன்பதையுய்ந் திடத்தீர்த்தம் வழங்கி மூழ்கிப், போதருவோர்க் கிருமையினும் புத்தியுமுத் தியுந்தகைசால் புதல்வர்ப் பேறும். (ஈசு)

தண்ணளியான் மகிழ்ந்தருளி யெம்பெரும்பா தகமுப்பா தகங்க ளாதி, அண்ணலிரு முதுகுரவர் முதலோரை யிகழ்ந்தவினை யனைத்து நீக்கி, எண்ணரிய சித்திகளுங் கொடுத்தருளு கெனவேண்ட வினர்ப் பூங் கொன்றைப், பண்ணவனுங் கவைகளளித் தெழுந்தருளி ஞன் விடைமேற் பசும்பொற் கோயில். (கூஎ)

வரங்களல கிலபெற்று மனமகிழ்ந்து விரிந்தபழ மறைநூற் கேள்வி, நிரந்தரவே தியர்திறத்து நிகரிலடி யவர்திறத்து நிறைபொன் மாரி, சுரந்தெழிலி யெனவீசி நால்வகைய கடற்றுனை சூழ்ந்து போத, அரந்தைதணிந் தெழில்கனிந்த வரசர்பிரான் றிருநகர மணைந்தான் மன்னே. (கூஅ)

முடங்குளாவா ளரியணைமே லிருந்துபுறந் தருமொருகோன் முறை நடாத்தி, அடங்கலரை வலிகவர்ந்து நால்வகைய பேரறமு மளியா லாற்றித், தொடர்ந்தபுகழ் நிலைநிறுவி நிலவணிவே ணியனடிமைத் தொண்டு பேணி, நடங்கிளரும் பிரமேசன் பதம்புகுந்தான் சிவியெனு மோர் நாம வேலான். (கூகூ)

[கள-ஆவது. புறவமான வத்தியாயம் முற்றிற்று.]
(ஆகத் திருவிருத்தம் கூகூடு.)

——:o:——

கஅ-ஆவது. பூந்தராயான வத்தியாயம்.

இன்ன தீரெழின் முன்னி யோர்புற வின்பொ ருட்டா செய்தலால்
மன்னு மாநகர் புறவ மாகிய வாய்மை யீதிதி லாதிநாள்
பொன்னு லாவிய மார்ப னுந்தொழு பூந்த ராயென வாய்ந்தபேர்
தன்னை மாமுனி சொன்ன வாறிரு தன்மை யோதுவ னுண்மையே.()

காற்றி னுஞ்சுடு கனலி னுங்கடை நாளில் வந்தெழு காலவெங்
கூற்றி னுங்கொடி யானை டுங்கடல் கோப்பு ளித்தமிழ் வாயினன்
ஆற்றல் வானவ ருயிர்ப்பி சைந்துணு மயிலி னுனடி நாளி லோர்
ஏற்ற மண்டிய விரணி யாக்கனை னுங்க டுந்திற லவுணர்கோன். (உ)

அண்ட வாணரொ டொன்று போர்செயு மந்த நாள்வலி யிந்திரன்
சண்ட வார்படை மண்ட வாவி தளர்ந்து போயவு ணன்கருங்
கொண்ட ஓர்தியு மமர ரும்பெறு கோளி லாவலி வீறெலாம்
மண்ட லந்தொறு மேத ழைத்திடு மாத வத்திற லாமெனு. (ஈ)

மான வேள்வி விதித்த ளிப்பன மாம னுக்கள் கணிப்பன
தான மிக்கவர் பால ளிப்பன சாற யர்ச்சிவி ளைப்பன
ஆன விவ்வற னுலி ருந்திற லாரு மும்பர்கள் வீறறப்
பூந லந்தனை யான்மு கந்தயல் போவ லென்பது வவ்வியே. (ச)

ஏத மிக்குள பாத லத்திடை யேய மைத்தரு காகவோர்
மாத லத்தட லோனெ ளித்தலும் வான வர்க்கிறை யாதியோர்
ஓத ரக்கர்பு லாலொ ழுக்கக லாத சக்கர பாணிதன்
பாத மூற்றடி யேம னத்திடர் பாறு தற்கருள் கூறெனை. (நி)

எற்கு லாவு துறக்க மீதி லெமக்கெ லாமொ ரிடுக்கணைப்
பொற்கண் மேய வொருத்த னுடமர் புக்கு மேலு மெமைக்கொல்வான்
வற்க ரீடற மிக்க பாரை வகுத்த பாதலம் வைக்கயாம்
ஒற்க மேவின மைக்கு மாழுகி லொக்கு மேனி மலர்க்கணைப். (கூ)

என்று நேருற நின்ற தேவரை யிங்கு நீவி ரிரங்கலீர்
வென்று மீள்குவ லென்று மண்ணெடு விண்ணு நீடிய வெள்ளியங்
குன்று போலொரு பன்றி யாயுறு கோளன் மேவிய பாதலத்
தொன்று மாமெரு டென்று வெஞ்சின மூக்கி னின்றெதிர் தாக்கினன். ()

தாக்கி வந்தடர் கேழன் மேலொரு தண்டு கொண்டு நிசாசரன்
தூக்கி மோத மருப்பி னலது தூளி பட்டுக நூறியே
மேக்கொ டுங்கரு நீல வெற்பினை வெள்ளி வெற்பது பாய்தல்போல்
மாக்க டுந்திற லவுணர் கோன்மிசை வாய்ந்து வல்லுளி பாய்ந்ததே. (அ)

மிக்க கோடு சிழிக்க மார்பு வெடித்து வேறு பிளப்பதாய்ச்
செக்கர் வான மெனக்கு லாய சிவந்த சோரி புறந்தரத்
தொக்க தேவர் வலக்க ணென்ன வரக்கன் மேனி துடிப்புறப்
புக்க தூதுவர் கைக்கு ளாருயிர் போயி னனெதிர் மேயினன். (கூ)

பள்ள வாயினை வெல்ல வாகை படைத்து ஞால வரைப்பெலாம்
வெள்ள மேனம தொண்ம ருப்பரி மேலெ டுத்தலும் வானுளோர்
கள்ள ருமலர் மாரி பெய்து கரங்கு விப்பவ கந்தையாய்த்
தொள்ள சேருணர் வெய்தி வேறிணை சொல்லு வாரினி யில்லெனை. ()

பீடு கொண்டுழி யாடன் மாமயி லூர்தி வந்திகல் பேசியோர்
கோடு கொண்டருள் போத முஞ்சில கூறி யங்ககல் வேலெவாய்
வாடு பன்றியும் யோகு ணர்ந்துபின் மாயி ரும்புவி யாவையும்
சேடன் வெந்திற லாயி ரங்கொள் சிரத்து மீதி லிருத்தலால். (கக)

மன்னி யெங்ரு நிமிர்ந்த பல்லுயிர் வரைவி லாதன வரைபடப்
பின்னி ரும்பழி துன்னி நின்ற பெருத்த கேழ லுருத்துறந்
தென்னி ருங்கட வுட்ப ராவி யிகப்ப லிப்பழி யென்றெழும்
கன்னி மங்கல வின்னி யங்களர் காழி வந்தன ணுழியான். (கஉ)

பால்க ருங்குயில் வீணை பைங்கிளி பாங்கு மென்கனி பூவைதேன்
கோல்க ரும்பிழி சாறெ டுஞ்சுவை கூச நின்றுரை பேசுவார்
மேல ரங்கினி லாடல் பொங்கணி வீதி கண்டொரு சோதிவாழ்
ஆல யந்தனி ரா ணன்றட மாடி னன்குட மாடினன். (கங)

பேறு துங்கடன் யாவு மன்பொடு பேணி யெம்பத மோதிவெண்
ணீறு கண்டிகை மேனி கொண்டு நிலாவி ளம்பிறை வேணியான்
வீறி லங்கிய பாத பங்கய மேல ருஞ்சிவ பூசைநூல்
ஆறு கொண்டடை வேவ ணங்கலு மாழ்த டங்கட லாழியான். (கச)

கோம ளக்கொடி பாலு றப்படர் கோடு டைத்தனி யேறுகைத்
தேம விற்குழை சேவ கப்பெரு மான டுத்தலு மீறிலா
மாம றைப்பொரு ளேயெ னக்கருண் மாத வப்பொரு ளேயெனப்
பூம லர்ச்சரண் மேன்மு டித்தலை போதம் வைத்தலு மாதிதான். (கரு)

செருமு கம்படு நிருதர் பொங்குயிர் தினம ருந்திய திகிரியாய்
உருகி யிங்கெமை வழிப டுஞ்செய லுவகை கொண்டன மொருவனீ
கருது கின்றன தருது மென்றருள் கருணை யங்கட லடிவிடா
தருகு நின்றிரு நிலம டங்கலு மமுது கொண்டவ னறைவனுல். (கசு)

அனக நினதடி யவரை யிடர்கள்செய் தவனி சுவர்தர நிருதனேர்
கனக விழியனை யழிய முரணிய கடுவ லுளியென வடையயான்
பனக முடியிலென் னுலவை நுதிபடு படியை நிறுவலு மளவிலா
இனிய வுயிர்பல நலிய வருவினை யெனையு மருவின திறைவனே. (கள)

வீந்த தீவினை தீந்து போதர வேண்டு நீள்புவி நோன்றலால்
பூந்த ராயென நான்செய் பூசனை பூண்ட வூர்பெற வேண்டுமால்
ஆய்ந்த நான்மறை யேந்த லேயென வாண்டு கூறிய மாண்பெலாம்
ஈய்ந்து தாண்மிசை வீழ்ந்த மாயனை யெழுகெ னுவருண் மொழியினுல்.

பின்ன ரும்பல வரம ளித்தொரு பேதை பங்கினன் மூதெயிற்
பொன்ன லங்களிர் கோயி லூடு புகுந்த பின்னர் முகுந்தனும்
தன்ன ரும்பத மெய்தி னனுயர் தவமு ளீரென மறையெலாம்
முன்ன ருந்துறை கண்டு ளானடி முளரி சூடி மொழிந்தனன். (கக)

[கஅ-ஆவது. பூந்தராயான வத்தியாயம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் கூஅசு.]

——: o :——

ககூ-ஆவது. மலைவரவுரைத்த வத்தியாயம்.

வேந்தரா மூடிமேற் பாரை விடுத்தமால் வினைவிண் டோடப்
பூந்தரா யான தொல்லைப் புனைபெய சொடுமுந் நான்கு
வாய்ந்தபேர்த் திறனும் வேறு மான்மியம் பலவு முன்னித்
தோய்ந்தவா லறிஞ ராங்கட் சூதனை யிரந்து சொல்வார். (க)

பருதியோன் முதயஞ் செய்யப் பாயிருண் மாயு மல்லால்
கருதரு மவிச்சை யென்னுங் சுங்குலு மாய வற்றிறு
ஒருவனின் னருளால் யாண்டு மொழிவுறு வுளத்து மாயை
இருளையுந் கடித்தாய் ஞானத் திரவியீ யெங்கட் கென்றார். (உ)

பன்னெடுங் கால நோற்ற படிறுதீர் தவம்ப ழுத்தாங்
கிந்நெடுங் கானத் தெம்முன் னெளிவந்தா யொளிருங் காழி
நன்னெடு நகரி னுப்ப ணகுமணி முயங்குங் கோட்டுப்
பொன்னெடுங் குன்ற முற்ற பெற்றியென் புகல்வா யென்றார். (ங)

வியனுறு காந்தந் தன்னில் விரிவுறக் கிளத்த லொன்றே
இயலுமூ வறுபு ராணத் தீற்றுறு பிரமாண் டத்தின்
நயனுடை யுபரி பாக நவிற்றுகேத் திரகாண் டத்தும்
உயர்மலை வரலா றெல்லா மோதுமென் றுரைப்பார் மேலோர். (ச)

அருணமா மணிசெய் மோலி யாரியா வர்த்தந் தன்னில்
கருணையங் கடலன் னேனர் காலவித் தென்னும் வேந்தன்
இருநில முழுதுந் தந்தை யெனமுறை புரக்கு நாளில்
பெருகொளி மகப்பே றின்றிப் பேரரு ருற்ற னன்றே. (ஞ)

அறிஞரை மகப்பே றெய்து மங்நெறி பணித்தீ ரென்ன
உறுவர்சொல் வழியால் வேள்வி யுயர்தவந் தானமாதி
பெறுமுறை புரிந்து மைந்தர் பெறப்பெரு தழுங்கித் தேர்ச்சித்
துறைவர்பா லரச பாரஞ் சுமத்தினன் வனத்திற் புக்கான். (ட)

அவனுரோ மசனென் றோது மறிஞனை வணங்க வன்னனன்
கவலகி லாது வந்த காரியம் வினவ மைந்தர்
இவணற மெண்ணில் செய்து மெய்திலே னென்ன வெம்மான்
துவளருங் கயிலைக் கோடு தொழத்தரு மகப்பே றென்ன. (ண)

இழுதையே னென்செய் தாலு மெய்துமோ வெந்தை நீயே
தொழும்வகை யளித்தி யென்னத் தோமிலா னரசை ஞாலம்
முழுதுடன் காக்க வேவி மொய்யொளிக் கயிலை யெய்திப்
பழுதறு தவங்க ணேற்றான் பரனுமாங் கவன்முன் னுற்றான். (அ)

கருதிய துரைத்தி யென்னக் கனைகட லுலகி லுள்ளார்
இருமையு மகவு மெய்த விருவகைப் பொன்னி நாப்பண்
குருமணிக் கயிலைக் கோட்டோர் கோடுறை தரவு ஞானத்
திருவொடு மிவண்போல் வாசஞ் செய்யவும் வேண்டு மெந்தாய். (கூ)

என்னலுந் திங்கட் கண்ணி யிமையவன் காற்றின் வேந்தும்
பன்னக வரசு மேலோர் பகலிகல் விளைப்ப ரந்நாள்
அன்னவர் புரிதுங் கற்பத் தவணியாம் வருது மென்ன
இன்னறீர்ந் தந்நாட் காறு மிருந்தனன் முனிவ னிப்பால். (கo)

மாமலி மார்பன் வேதன் வானவர்க் கிறைவ னேனை
நாமமா திரத்துச் செல்வர் நுகுமிரு சுடர்ப்புத் தேளிர்
ஏழுறு மகதி வல்லா னிமையவர் பிறரு மெம்மான்
தோமிலா வெள்ளி வெற்பிற் றொக்கனர் மிக்க தொன்னுள். (கக)

தொக்கவ ரவரில் வீணைத் துறைவலான் பகுவாய் தோறும்
மைக்கறை விடங்கா லெஞ்ஞாற் றிரட்டிமா மவுலி யாணைப்
புக்கதால் வலியா லீரேழ் புவனமும் பரிக்கு நின்னை
ஒக்குகர் யாரே யென்னு வுவந்தனன் புகழ்ந்த வாயான். (கூ)

சேட்டிளங் கதிரை நக்க திருமணிப் பணிக டோழன்
பூட்டினு முவகை யொல்லாப் புனிதனின் கிளையை வேணிக்
காட்டினும் புயத்தும் வேயுங் கலனெனப் பரித்த வாற்றல்
ஈட்டினுன் பெருமை பூண்டா ரேவர்மூப் புவனத் துள்ளும். (கஙு)

திவவியாழ் முனிவ னிவ்வா றுரைத்தலுஞ் செருக்கு மீக்கொள்
பவனனெஞ் சழுக்கா றுள்ளிப் பருவிழி சிவந்து வாளா
இவனையே வியந்தாய் மேலோ யிவன்முத லெவரு மாயா
உவமைதீ ருயிர்ப்பு நல்கு மொருவனு மிருக்க வென்றான். (கச)

அதுபொழு துலவை வேந்து மணங்கரா வரசும் வெம்போர்க்
கதுமெனப் பொருவா னென்றுங் கருத்துடை யொருத்தன் வல்லே
முதுமதி வல்ல சேடன் முன்னரும் றென்னே நின்னை
இதுபுகன் றிழித்தா னுதை யிறைவனென் றிணைய சொன்னான். (கஙு)

இயங்குவ நிற்ப வென்றே யெடுத்தபல் லுயிர்சுட் கெல்லாம்
மூயங்குநான் பொதுவ னேனு மூற்றுநின் னுடலுக் காவி
நயந்துதான் றருத லின்றி நகுமணிச் சூட்ட ராவென்
றியங்குமா றெங்ங னென்ரு னெறுழ்வலி யரவ வேந்தே. (கசு)

வரையிடைப் பிணித்த ஞான்று மறிகட லிடத்தங் காந்து
புரைவிடங் கொழித்து முக்கட் புனைவடுக் காண வைத்தான்
மரைமலர்த் திருவின் கேள்வன் மாணிழின் மழுங்கச் செய்தான்
நிறைகதிர்க் கடவு ளோரை நெருக்குவா னென்றுஞ் சொன்னான். (கள)

கொல்லினுங் கொடிய னேழு கோளினுங் கொடியன் கேண்மை
புல்லினுங் கொடிய னூற்றுட் போகினுங் கொடியன் மிக்கார்
அல்லினும் பகலி னுங்கா மவையகத் திருந்து தன்பேர்
சொல்லினுங் கொடிய னென்று சொல்லினன் செல்வ வென்றான். (கஅ)

பாப்பர சதனைக் கேளாப் படரொரி பொறிப்பப் பாரா
நாப்புடை வளையா நன்று நன்றரோ சுழலுங் காற்றின்
மூப்புடை வலிமற் றென்னு முரணிய ஞாட்பி னுற்றல்
வாய்ப்புறத் தெரிப்பென் போர்க்கு வல்லனேல் வருவி யென்றான். (கக)

வருவியென் றுரைத்த லோடு மரைமலர்க் கிழவ னன்னன்
பொருமொலிக் கிறைமுன் போந்து பொறுப்பது னென்று நின்னை
உருவிலி யென்றுந் தீயோ டுறவென்று நெறியொன் றின்றி
வருபவ னென்று மொன்பான் வாயிலும் புகுவா யென்னும். (உ0)

மூள்ளரி முளரிச் செம்மன் மூதுல கடைந்த கங்கை
ஒள்ளிழை யுத்த ரீக முடைத்துமஞ் சணையென் ரோதும்
வள்ளுவார் குழையை வன்பான் மருவியு மார னூரும்
கள்வனீ யென்றுஞ் சொன்னுன் கட்செவிக் கிறைவ னென்ரூன். (உக)

வேறு.

சுருதிநூன் முனிவனித் துறையெடுத் தறைதனுஞ் சுடுசினப் பொறிவிழிக் கடையினிற் றெறிபடக், கருகிமா தங்கமூ தண்டவே தண்டமுங் கணமுடைத் தொகுதியுங் கதிர்களுஞ் சுழல்படப், பெருகு வா னிடியுகத் துருவன்மா வடுவுறப் பிலம்வெடித் திடவரைக் குலம் வெடித் தலம்வரத், துருவுநா ரதனுளத் தளவிலா மகிழ்வரத் தோள் புடைத் தனனெடுங் காலுடைத் தலைவனே. (உஉ)

உலவையங் தலைவனிங் ஙனம்வெகுண் டெழுதல்கண் டோதுமா முனியுரைக் கோதிலு லெரிமணித், தலைகளா யிரமுடைச் சேடனுங் கூடிவெஞ் சமர்வினைத் திடமறுத் தமரரத் தலையினிற், பொலன்மணிப் படமெடுத் துரகருக் கிறைவவிப் புனைமணிப் பஃறலைக் குவடுறக் கவி யுருத், தலைவளித் தலைவவிக் கனகவெற் பினிலுனக் கமர்வலித் திறனிலப் புதைதிறந் திடுகென. (உங)

தெறுசினத் திருவருஞ் சமரதற் கிசைவுறச் சேடனு யிரபணத் தாடகா சலமதிற், குறைவறக் கொடுமுடித் திரள்புதைத் திடநெடுங் கோடைவா னவன்வினைத் தாடலா லருகினிற், பிறவரைக் குலமுதற் சருகெனத் திரிதரப் பெருகலைப் புணரிநெட் டலைவிரித் துலகடத், துறு மலர்த் தருமுதற் றருவினம் பொடிபடத் தூளியா கியனகீ மூலகுமே லுலகுமே. (உச)

பத்திதனும் பெயருடைத் திறல்வளித் தொகையினிற் படருயிர்ப் பொழியமற் றுளவுயிர்ப் புகலெலாம், கொத்துடன் குழுமியத் தட வரைப் புடையினிற் குவடுசூழ் வரவடித் தவனியீ டழியவும், நத்துறும் பொறிபுலத் திடைமனத் திணைவிடா ணண்ணுகே வலமகன் றெண்ணு பாழ் வெளியினில், சித்திதாடொன் றியவுயிர்ப் பத்தியின் றிறனெனச் சேடன்விட் டிலன்மறைத் தாடகக் கிரியையே. (உடு)

அதுகணத் தமரரிந் திரன்வசத் தலைவரோ டகிலவா னவன்முனைத் திகிரிவா னவன்முதல், பதைபதைத் துறுவளிப் படையினிற் கடை யுகப் படியெனப் படியிடிப் பதனைவிட் டொழியவே, விதிர்விதிர்ப் புடைவளிக் குறைசெயிற் பழுதெனு விரிதலைப் புவனமுற் றிலுமெடுக் குறும்வலத், தெதிரறப் பொருபணத் ததிபனைத் துதிதுதித் தெமை மதித் திதுபொழுத் திடுகெனப் பகருவார். (உசு)

உலகனைத் தையுமவற் றுறுமனுக் களையும்வைத் துறுபடத் தினி லெடுக் குறுமுனைக் கிணையெனப், பலருமொத் திலரெனிற் சலசலப்

புடையவிப் பவனனெப் படியுனக் கிணைபெறக் கடவனே, நிலமிசைப் பொறைபொறுத் தவர்பொறுப் பவரென நிகழுமிச் செயலினு லகல் வரைக் குவடெலாம், அலர்பணிப் படமுறப் புதைபுதைத் தவையிலோ ரணிகுவட் டிணைவிடுத் திடுவதுத் தமமரோ. (உஎ)

நீவிடுக் கெனமுதற் றேவருற் றறைதலா னீடுயிர்க் கணமெலா மீடறத் திரிதலான், ஆய்வினைத் தெளிபொருட் டேயுமுற் றறிவினு லன்றநந் தன்படத் தொன்றையங் ஙனம்விடக், கோவியற் றமனியக் கிரி யினிற் பலகிளைக் கோதிலா வெள்ளிவெண் சேகரந் தன்னிலொன், ரூவ லிற் கடுவளித் தேவிடக் திடவணித் தாய்முதற் கிளைவிழுந் ததிலுறுங் கிளையெலாம். (உஅ)

கதிதருந் திரிசிரா மலியெறும் பீசுரங் கமலியே ரகமிடை மருதநா கேசுரம், அதிகதிக் குருணிமா ஙகரமா ணிக்கவெற் பரவமா நதிகுடக் கானதண் காழிபொன், பொதியுமா மிழலையோ டெண்ணுபன் னென் றெனும் புரியிலத் தொகையுடைக் கிளைவிழப் பெருகுநீர், குதிகொளுஞ் சடையினு னருளினிற் குருகினங் கொண்டுசென் றனபெருந் திண்டிறற் கிளையையே. (உக)

வேறு.

இறைவ னருளா லதுகாலத் திகல்வெங் கணங்கள் குருகினத்தின் சிறையி னிவர்ந்து செலக்கடவுட் டிருமா முனிமோ மசணும்வர நறைபொன் மலர்ப்பூம் பொன்னியிரு நதியி னுப்பண் முத்தமிழின் துறைமல் கியபூம் புனற்காழித் தொல்லை நகரத் திறுத்தனவால். (ஈ0)

இறுத்த காலை முனிவர்பிரா னிருகண் களிப்பப் பகைஞர்வலி பறித்த வடிவேற் காலவித்தைப் பணிவித் திடமற் றுங்கவனும் குறித்த விமய வரையளித்த கோதை யொடுவீற் றிருந்தாலம் கறுத்த மிடற்ற னினிதுறையுங் கயிலைக் குவட்டை யெதிர்பணிந்தான்.

குழலி னுவி நிரைதொகுத்த கொண்ட லனையான் மிகப்பரவி மழலை மொழிமென் கிண்கிணிக்கான் மகப்பே றெய்தி யகமகிழ்ந்து சுழலும் பொறிபோக் கறவெறிந்த தோமின் முனிவ னடிபோற்றிப் பழகுந் துதிசெய் தவனுவப்பப் பலவாற் ரூனு முபசரித்தான். (ஈஉ)

மதிவான் குவடங் கதுகாலை மறைந்து நிற்க வண்சுதையால் கதிர்வான் சடிலச் சிவகணமுங் கதவெஞ் சிறையங் குருகினமும் முதிர்வா னவரும் பல்லுறப்பின் முகந்தோ றமைத்து மணித்தசும்பு விதிதான் முறையி னினிதமைத்தான் வேலை ஞாலத் தவர்போற்ற. (ஈங)

பசும்பொற் கமலத் தயன்றடத்துப் படிந்து பிரமே சனுக்கெழில்கூர் அசும்பு மணிப்பொற் கலனிலங்க வவிர்பூ ணுடை யிருநிதியம் விசும்பு மிடைமண் டபமுதல வெவ்வே றமைவித் திரவியெனத் தசும்பு மினிர்மா ளிகைநகரஞ் சார்ந்தான் முனியா யிடையிருந்தான். ()

மற்று மொருநான் முகக்கடவுள் வாழ்நா ளிறுமோர் பிரளயத்தில்
மூற்றுங் குடிலைத் தோணிமிசை முதிரு ஞானத் திருவிஞெடும்
சுற்றுஞ் சடிலத் தனிமுதல்வன் சொன்ன கடவுட் கொழுங்குவட்டில்
உற்றங் கிருந்து முதுநீத்த மொடுங்க வுளத்தி னினிதுன்னி. (நடு)

அடலேற் றரசுக் கருணைக்க ளிப்ப வதுபே ருருக்கொண்டு
கடைவாய் நாவிற் றடவந்து கடைநீர் நோக்கி யுரப்புதலும்
உடனே கரைக்க ணடங்கியபின் ணெருமூ வரைத்தோள் வலமிடமுள்
இடனுல் வருவித் தவர்படிக விலிங்கத் தருச்சித் தனர்போற்ற. (நசு)

போற்று மவர்முன் சிவஞானம் புகலுங் குரவன் படைத்தளித்து
மாற்றும் வரங்கள் வரன்முறையே வழங்க வணையா ரவைபுரிந்தார்
சேற்று வயற்கா ழியினமர்ந்த தெய்வக் குவட்டிற் கயிலையைப்போல்
கீற்று மதிவே ணியனிருந்தான் கெண்டைத் தடங்கட் கிள்ளையொடும்.()

வேறு.

தலத்தர சிதைத்தொழச் சார்து மென்றுபின்
செலப்பெரு திருந்தவர் தீய நெஞ்சர்தென்
புலத்தவர் சாபமும் பெறுவர் போற்றுவார்க்
கிலப்பொழு தொழுக்கெனு நியம மென்பவே. (நஅ)

ஒழுகொளிப் பொலன்குவட் டுச்சி மால்வரைக்
கழுமலத் திருத்தலாற் கடல்வ ளாகமேல்
அழல்வினை யந்தணீ ரன்று தொட்டதற்
கெழிலுலாங் கிரிபுர மென்று மோர்பெயர். (நக)

இணர்ப்பசுங் கொன்றையா னிறைவிக் கின்னருள்
புணர்த்தலி னுமாபதி புரமென் றேமதில்
கணத்தரைக் கணத்தள விருப்பிற் காலனும்
பிணக்குரு னகலும்வெம் பிரம கத்தியே. (சஅ)

தேசொடு விளங்கிய தெய்வக் குன்றிதை
யோசனை யகனிலத் துவந்து கண்டுளோர்
காசினித் தலமெலாங் கண்ட மெய்ப்பலன்
ஆசற மருவிமே லடைவர் முத்தியே. (சக)

காளிகே சுரன்பிர மேசன் சுஞ்சுகன்
நீளிரும் பராசர நிமலன் றேணிவாழ்
ஆளுடை யொருவனென் றரணி யுள்ளுவர்
மூளுமைம் பாதக முருக்கி யுய்வரே. (சஉ)

புள்ளரு நறும்பொழிற் புகலி வாழுமிவ்
வள்ளல்பே ரைந்தையு மனக்கொ டெண்ணினோர்
வெள்ளநீ ரலகைதீ வேங்கை வெந்திடர்
கள்வரா றலைப்பிவை கடப்பர் திண்ணமே. (சங)

தொடுத்தபே ரெயில்கிளர் தொல்லைக் காழியை
அடுத்தடுத் திறைஞ்சிஞே ரஞக ராகிவெங்
கடுத்திகழ் மிடற்றினேன் கயிலே யெய்திமெய்
நடுக்குறு நடுவனூர் நண்ண லாமையால். (சுச)

அணங்குறு மறலிகா மாதி யாயவெங்
குணங்களைத் தூதாய்க் குறித்தவ் வூருளோர்
இணங்குசேய் நிலத்துளோ ரெந்தை காழியை
வணங்குறு திடர்செய வகுத்த பான்மையால். (சுரு)

முன்னருந் தீவினை முயன்ற மூவர்தாம்
இன்னகர் தொழுவினி தெய்தற் பாலரோ
பன்னருந் தவம்பல பண்டு நோற்றுள
நன்னர்நெஞ் சுடையரே நணுகும் பான்மையார். (சுசு)

தாவரும் புலப்பகை தணந்த வித்தகர்க்
கோவரு மின்பவீ டுதவு வானிதில்
மூவடி வெடுத்தது முற்று மிந்நகர்
ஆவலோ மற்றவ னருளின் பெற்றியோ. (சுஎ)

ஆதலான் முனிவிர்கா ளந்தண் காழியை
ஓதலாந் தகைத்தென வுணரற் பாலதோ
ஈதெலா மியம்பவு மினிது கேட்கவும்
மாதவ மெய்தினும் வாழ்வு மெய்தினும். (சுஅ)

இனையமான் மியந்தனை யெழுது மேடொரு
மனைவயி னிருக்கினம் மனைக்கண் வாழுநர்
வினையமிக் கறிவனூல் விரிவெ லாமுணர்
முனைவரா குவரவர் முகங்கண் டாருமே. (சுகூ)

மடனுறு மகந்தைவே ரரிந்த மாமறைக்
கடவுளர் முகத்தினிக் காதை கேட்டுளோர்க்
கிடரறு நினைத்தவை யெய்தும் வல்வினைத்
தொடரறு மருமறைத் துணிவி தாமரோ. (சுரு)

கய்தவங் கடந்துளீர் கடவுண் மால்வரை
எய்திய வியப்பமீ தென்று மும்மலத்
தொய்யலை யொழுக்கினுற் றுடைத்த சூதனும்
தெய்வமா முனிவரன் றெரிந்து கூறினன். (சுங)

[ககூ-ஆவது. மலைவாவுரைத்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கஅகரு.)

——:o:——

உ0-ஆவது. ஆபதுத்தாரண வத்தியாயம்.

அன்னந்தட மன்னும்பணை யணிகாழி புரத்தில்
பொன்னங்கிரி முன்னஞ்செறி பொருளீதெனு முனிவன்
இன்னுந்திறல் வடுகேசன தியல்பேசிய நெறியே
என்னெஞ்சினி லியலுந்திற னினிதாதுவெ னினியே. (க)

வண்டாடு நறுங்கொன்றை மணக்குஞ்சடை முதல்வன்
தண்டாமரை யடிநல்கிய தாவாவலி தன்னுல்
பண்டாடக வுலகத்தவர் பதம்வவ்விய மதுகைத்
திண்டோளிர ணியனென்றொரு தேவாந்தகன் மேனுள். (உ)

மூகிலொன்று நிறத்தானெடு முத்தேவர் பெரும்பேர்
நிகழெங்கணு மேருதுதன் னெடுநாமம் வளர்ப்போன்
அகிலம்படு மிவ்வண்டமு மல்லாது புறஞ்சூழ்
பகிரண்டமு மிவனுணை பரிக்கும்படி யாள்வான். (ங)

பொருப்பெட்டையு மருப்புக்கிளர் பொருப்பெட்டினு டடிப்பான்
நெருப்பைக்கறை விழிக்கட்கின நெருப்பிட்டுற வவிப்பான்
இருப்புப்புரை தடக்கைத்தலத் தெடுத்துப்பிலத் தினில்வாழ்
சருப்பத்தையு மரைக்கச்சென‌த் தரிப்பானுல கரிப்பான். (ச)

காற்றும்படி புனலுஞ்சுடு கனலும்பொரு நிலனும்
தோற்றுந்தலை வரைவென்றவர் தொழின்முற்று மிழைப்பான்
ஏற்றுஞ்சுட ரிருவோர்மணி யெழிலூர்தியி னூர்வான்
கூற்றுங்குலை வுறவாருயிர் கொல்வானிகல் வெல்வான். (ஞ)

மூலக்கட னீராடியு முதுபாதல மகளிர்
ஓலக்க மடித்தும்பக லுவணைத்தல மதுபோய்
ஏலத்தரு நிழல்வைகியு மிரவிற்சது முகன்வாழ்
கோலப்பசி யுற்றுந்துயில் கூர்வானிடர் தீர்வான். (ட)

மொய்யார்கலி கடையப்புகு முழுமத்தவ னேந்தும்
கய்யார்கதை யாமென்பது கதையோகதி ருலவும்
பெய்யாடொளி யிருமால்வரை பெருமால்வரை யனையான்
மய்யாடிய நாளிற்புனை மகரக்குழை யென்றுல். (ண)

ஏமத்துண வமரர்க்கிடு மெழுதாமறை யவர்செய்
ஓமத்தவி யெல்லாமவ ருருவாகி மடுத்தான்
வாமப்பழ மறைநூல்வழி வல்லார்பொழு தெல்லாம்
நாமத்திர ணியாயநம நமவென்றிட வைத்தான். (அ)

பெண்ணிற்புக லாணிற்பெரு கிடியிற்சுடு படையாம்
எண்ணிற்பல பகலிற்கறை யிருளிற்செறி மீனுயுள்
கண்ணிற்பிற வெளியிற்சுடர் கனலிற்படர் புனலில்
மண்ணிற்பிற பொருளின்னுயிர் மாளானடு தோளான். (கூ)

பாரார்புவி மேலாரிருள் படுபாதல வைப்பார்
ஆராருமிவ் வசுரன்றுணை யடியேங்கிய முடியார்
நாராயண வெனுமன்புடை நன்மைந்தீன யல்லால்
பாராயண மதுசெய்வது பதகன்கொடு நாமம். (கo)

இவ்வாலல கீரேழு மிடுக்கண்செய் வலத்தால்
வெவ்வாளவு ணன்பின்னரு மிடலெய்திய மடல்சூழ்
செவ்வாரிச முகைகிண்டிய சிறைவண்டிசை முரலும்
கைவ்வார்கிரை நிரைபோன்கொழி காவேரியின் வடபால். (கக)

வீனவேரற நினைவார்பணி வெண்காடதன் வடமேல்
புனைசாரினி லொருதோணி புரக்கீழ்த்திசை யாங்கண்
நனைவார்மலர் விரைமென்சினை நகுவில்வ வனத்தே
தனைநேர்குரு வருளாலொரு தனிவேள்வி தொடுத்தான். (கஉ)

ஓராயிர வெள்ளம்புடை யொடுசூழ்தர நடுவே
சாராவொரு கொடுவேள்வி சமைக்கின்றதை நிருதன்
சூரால்வட வெற்பூடு துணுக்கம்படு விண்ணோர்
போராழியி னுன்முன்பு புகன்முவி கரைந்தார். (கங)

மஞ்சேயொளி மணிமேனியன் வானீரினி மேனீர்
அஞ்சீரென முதுபொன்வரை யதன்மேல்வரு புயல்போல்
செஞ்சேவல் வயப்புள்ளிறை திணிதோண்மிசை யிவரா
எஞ்சாதிர னியன்வேள்விசெ யெல்லைக்க ணடைந்தான். (கச)

அற்றத்தினி லுலகஞ்சுற வலியஞ்சுற வடபால்
ஒற்றைக்கிரி வெடிபட்டுக வருமுக்கண முதிரத்
தெற்றித்தனி யெட்டிற்கிரி திசைமாறிட வசைதீர்
கொற்றச்சிலை வரிநாணெழி கொண்டானுல குண்டான். (கரு)

உலகுண்டவன் வீனயுஞ்சிலை யொளிருங்குண வொலியால்
கலகம்பெரு கொலியென்றடு கனகன்படை புடையப்
பலரும்பல தலைசிந்திய படிகண்டுபின் னெடியோன்
அலருங்கையி லொருசங்கினை யார்த்தானுடல் வேர்த்தான். (கசு)

இரிந்தார்சிலர் பொடிந்தார்சில ரிடிந்தார்சில ரிகல்போய்ப்
பரிந்தார்சிலர் முடிந்தார்சிலர் படிந்தார்சிலர் துளபப்
பெருந்தாரவன் விரைந்தூதிய பிறங்கோர்வலை யொலியால்
மூரிந்தார்சிலர் கனகன்புற முனைந்தார்படை யெல்லாம். (கஎ)

ஊழித்தலே யெழுமார்கலி யொக்கும்படை யுக்கிப்
பாழித்தலே மதவெங்கரி பரிதேர்முத லிரியக்
கேள்வித்தலே யல்லார்நிலே கிழியக்கத ழெரிகால்
வேள்வித்தலே யழிகுற்றபின் வெளிவந்தன னிருதன். (கஅ)

கடலோடெதிர் கடலும்படு காரோடெதிர் காரும்
தடமால்வரை யொன்றோடொரு தடமால்வரை தானும்
உடல்போரது செயுமாறென வோராழி நெடுங்கைச்
சுடரோனெதி ரடலானமர் தொடுத்தான்முர ணடுத்தான். (ககூ)

வெடிவாயொலி தோள்கொட்டிய விறலாரொலி சிலையின்
துடிவாயொலி யடுவாளிக டொடுபேரொலி விசயக்
கொடிவாயொலி யிருவோரிகல் கொடுமேற்றொலி களிறுல்
அடிமாதிர மதயானைகள் செவிடேறின வவையே. (உ0)

மாயன்சிலை பொழியுங்கணை யவுணன்கணை மாற்றத்
தீயன்சிலை பொழியுங்கணை திருமால்கணை தூகரப்
போயண்டமு நிலனும்படர் திசையும்புகை புகையக்
காயுங்கடு வலிவெஞ்சமர் கலந்தாரெதிர் மலந்தார். (உக)

அழன்றூர்கணை யரிந்தார்புற மகன்றூரெதிர் புகுந்தார்
கழன்றூர்விழி சிவந்தாரிரு கறங்காமென வொருங்கே
சுழன்றூர்திசை விசைவாளிக டூர்த்தாருடல் வேர்த்தார்
உழன்றூரிரு வரும்வெஞ்சம ரோராயிர வருடம். (உஉ)

அவ்வாயிர வருடஞ்செல வமராடியு மழியா
இவ்வாளவு ணனைவெல்லுவ தினியோர்திற மென்னு
மைவ்வான்வழி மூதல்வன்புக வதுகண்டு வலத்தால்
வெவ்வாயவு ணனுமன்றமர் வென்றேனென வன்றே. (உங)

தனியோதிய மகனொடொரு தனயாவிது கண்டாய்
இனியேனுமென் னொருபோதனை யிசையென்றலும் வசைதீர்
கனிவாய்மக னுலகுக்கொரு கத்தாவவ னெத்தான்
கனிநாரண னேயென்பவ னுனென்றிட லானன். (உச)

வேறு.

என்றலும்வா ளவுணன்வெகுண் டெயிறதுக்கி விழிசிவக்க வி
மைக டூயத், துன்றுபுயந் துடிப்பநிலே குலைகுலைய வலமந்து சுரர்க
ளேங்க, அன்றுசினத் திடித்தெழுந்து நின்கடவு ளெங்கணுள னவன்
யா ரென்ன, என்றுமுளன் றுரும்பிடத்துங் தூணிடத்து மாயனென
விசைத்தான் மைந்தன். (உடு)

அளந்தவனண் டறைதலொடு மொருகோடி யசனியிடி யறைந்தா
லென்னத், துளங்கொளிய மணிக்கடகத் தடக்கையெடுத் தறைந்தவன்

முன் றுண்ணென் றேறுதை, கிளர்ந்ததுபே ரண்டமுடி கிழிந்ததுதீ யவ
னுரம்போற் கீறித் தூணம், பிளந்ததுமா னுடமடங்கல் பிறந்ததுவா
னவர்க்குநலம் பிறக்க மாதோ. (உசு)

அண்டகோ ளகையதிரத் திசையதிரப் புகையுமிழ்கண் ணரிமா
வாகிச், சண்டமா ருதக்கரத்தான் மடித்தலமிட் டுரங்கீறித் தாழிப்
பேழ்வாய், மண்டவா ரிழிகுருதி மடுத்துமடுத் தவுணனுயிர் மடுத்தான்
வாயால், கொண்டல்போன் மணிகிறத்துக் கோகனகம் போலலர்ந்த
குளிர்பூங் கண்ணன். (உஎ)

வானெனறு மயன்முதலா யெறும்புகடை யுயிரிலொன்றன் மடி
யான் மேனி, தானெனறு முகமொன்று மெழுந்துகடைத் தலைகாப்பண்
டகுமா லக்கண், ஊனெனறு முதிரமரி யருந்திபுயிர் கவரமடி வுற்ற
பெற்றி, நானெனறு நினைக்கவுறுந் தெய்வமொன்று நினைத்தென்ற
யமா மாதோ. (உஅ)

சுடர்க்கனகத் துகள்சிதற வடற்கனக னுடற்குருதிச் சுவைகண்
டாங்கண், மிடற்குருதிக் களியெடுத்து விண்ணோடுமண் ணேயுருவிந்து
வெறியாட் டாட, அடற்கருமா னுடமடங்க லருந்துயராற் காளிபுரத்
தணைந்து வேதன், முடைத்தலைகொய் வடுகேச னிடத்தமர் முடிசாய்
த்து முறையிட் டாரால். (உக)

ஆயிடையெம் மிறையருளா லடல்வீர பத்திரனே ரட்ட பாதத்,
தேயெனுமாத் திரையின்முரட் சரபவுரு வெடுத்திகன்மா னுடத்துச்
செங்கண், சீயமறப் புடைத்துதறி முடிதகர்த்து முன்னுண்ட செந்நீ
ரெல்லாம், வாயினிடை மடுத்தகல மறிந்ததுமா னுடமடங்கன் மறிந்த
காலை. (ஙஐ)

அள்ளிதழ்த்தா மரைப்பொகுட்டி னரசிருக்குந் திருமடமா னது
கண் டோடி, முள்ளெயிற்றுப் பணிமாலை முயங்கியதாள் வடுகனடி
முளரி சூடி, எள்ளுலவு மெண்ணெயென வெவ்வுயிர்க்கு முயிராய
விறைவ கண்பார்த், தொள்ளிழைமங் கலநெடுநா ணேங்கவெனக் கிங்
கருளெம் முடையா யென்ன. (ஙக)

பொன்னெழுத கற்பகப்பூங் கொம்பரெனத் தென்பிரம புரத்து
மேல்பால், மின்னெழுகு முக்கோன்மட் டெல்லையினிற் கடுக்கைமலர்
விரிபூங் கானில், மன்னிரவித் தடத்தயலா றிருபருவ மருந்தவஞ்செய்
மலர்மான் காணத், தன்னிகரில் வடிவோடும் வடுகேசன் பேருவகை
தழைப்பச் சென்றான். (ஙஉ)

இருக்கோலஞ் செயுமிருதா ளெழிற்கோல மலரின்விழுந் திறைஞ்
சச் செய்யாள், அருட்கோல முடையபிரா ணனிக்கோல மாலைமுன்போ
லளித்தான் மேனாள், திருக்கோலம் புனைதலினற் றிருக்கோலக் காவெ

னவித் தெண்ணீர் ஞாலத், துருக்கோலக் துடைப்பவர்தா மெக்காலுங் தொழுமூரொன் றுளது மாதோ. (ஙங)

அவ்வழியெம் பெருமானே யடலாழித் தடங்கரத்தா னலர்க டிவிக், கைவ்வனச முகிழ்த்திருகண் டுளிதூங்க வொளிதூங்குங் கழற்முள் போற்றி, இவ்வடியேன் மடமகற்றி யெடுத்தாண்ட பெருங்கருணே யிறைவா போற்றி, தெவ்வடுபோ ரிலேச்சூலந் திரித்துலகம் பரித்தரு ளுஞ் செல்வா போற்றி. (ஙச)

நிரையிதழ்த்தா மரையானும் யானுநெடு மொழிபேசி நிற்ப வேதன், நரைமுடிகொய் திகலறுத்தென் னிரைமணிமா நகர்போந்து நகுங்கை வேலால், வரையகலந் துறந்தெனது வடிகுருதி முடிநிறைய மடுத்த வாறே, தரையினுமா னுடமடங்க லுருவிடந்து குருதியுண்ட சரப போற்றி. (ஙஞ)

முன்னுமெனே மறித்தாண்ட மூதருளான் முடங்குளமான் மூரணே வென்றுப், இன்னுமெனக் கிரங்கினையே லிதனுரிநின் திருமேனிக் கியைய வேண்டும், மன்னுநின தின்னருளே வழியடியேன் கடைப்பிடித்து வாழவேண்டும், பொன்னுலவு மதிட்காழிப் புண்ணியனே யென நெடியோன் போற்றி வீழ்ந்தான். (ஙசு)

அருமுடிச்சூட் டரவணையி லறிதுயில்கூர் பவனிவ்வா றறைய வேதன், ஒருமுடிகொய் மணிநகத்தா னரமடங்க லடிமுடிதிதாட் டுரித்து மீக்கொண், டிருண்முடிய வெழும்பரிதி யெனவொளிரு மரைக் கணிந்தா னிமைக்குங் கோட்டுத், திருமுடியில் வீற்றிருந்து கருமுடிய வினைகடியுந் தேவ தேவன். (ஙஎ)

கோபத்து நரமடங்கல் விளைத்ததுனி துடைத்தலினுற் குறையா தென்றும், ஆபத்துத் தாரணனென் றுயினனிவ் விருங்கதைதா னருட்ட தேசி, மாபத்தி யொடுமருகற் பழித்தகொடுங் தக்கன்மன மம்மர் நீங்கத், தீபத்தின் விரித்தவனுக் கருமறையின் றெளிவிதனைத் தெரித்தான் மேனுள். (ஙஅ)

சேணிலத்தில் வடுகேசன் றிருமலையை வணங்குருளுஞ் செம்பொன் வாய்ந்த, நீணிலத்தார் பரவமுத்தி நெடுநிலத்தில் வீற்றிருப்பார் நிகழு மன்பு, பூணுமரும் புகர்வாரத் தழிகாழுகப் புழுகவன்மேற் புனைந்து ளோர்கள், வணிலகு நிலமனைத்துந் தமதடியிற் படுத்தியர சியற்று வாரே. (ஙக)

தூரத்தே தொழுகுநர்க்கு முத்திகொலோ வெனவுயிர்கள் சோரா வண்ணம், ஆரத்தாழ் திருமார்ப னரிவையொடு விவ்வனைத் தணைந்து மேல்பால், நீரத்தாழ் வயற்காழி நெடுவரையைப் பணிந்துருகி நின்று ணிந்தச், சீரைத்தா னுறலாலே திருநகரி யென்றுரு பேர் சிறந்த தவ்வூர். (சஂ)

வேறுமளப் பில்பெருமை வினவவுமோ தவமுடியா வியப்பா லங் தண், சேறுபடு வயற்காழித் திருமலிவாழ் மலிக்கொழுந்தின் றிறனீ தென்றுன், ஆறுமிட ரைந்துமகன் முதியிடை யீறிலிதா ளகத்துட் பூண்டு, கூறுமறைத் துறையறிந்த சூரவனடிக் கடிமைபுகுங் குணக் குன் றன்னுன். (சக)

[உ0-ஆவது. ஆபதுத்தாரண வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் க0எசு.)

——: o :——

உக-ஆவது. கழுமலநதி வரவுரைத்த வத்தியாயம்.

தாற்றிளங் கழுகின் சூற்பழுங் கழுத்துத் தமனியப் பாளைவாய் கிழியச், சேற்றெழு வாளை யேற்றெழுங் காழித் திருமலிக் கொழுந் தின தியற்கை, போற்றிய முனிவன் கழுமல மெனும்பேர்ப் புண்ணியத் தீம்புனற் பொன்னி, ஆற்றின தியலுஞ் சாற்றுவ னென்றுங் கறைக் தவா றெருவழி யறைவாம். (க)

கனைத்துவண் டிமிரு மலர்த்தடஞ் சினைய கற்பக நாடுகா வலவன், முனைக்கடுங் தானை துனிப்பரும் வலத்து மூரிவெஞ் சூரனுன் மேனுள், அனைத்துள பொருளுந் தனித்தனி துறந்து மாற்றல னுகிவேற் றடங் கண், மனைப்பொலன் கொடியோ டருட்பெருங் குரவன் வாய்மையான் மண்ணகத் திழிந்தான். (உ)

கரைக்குறும் பெறிந்த திரைத்தடந் தோறுங் கதிர்வளை வயிறு ளாந் தின்ற, நிரைக்கொழுந் தரள நெடுநிலா விரிக்கு நீள்வயல் விளிம்பு சூழ் வேணு, புரத்திலா ளுடையான் றிருத்தகு மலர்த்தாள் போற்றின னிருப்பநெய்த் திருண்ட, விரைக்கருங் கூந்தற் சசிமுலை வியக்க விருப் பினுற் றருக்குவா ளவுணன். (ங)

காற்றினுங் கொடிய கடுநடைத் தூத கணங்களைக் கூஉய்மல ருல கின், மாற்றலர்க் கடந்த வயிரவா ளுழுவன் மனையிளங் கொடிதனை வல்லே, வேற்று *வேதண்ட மெவற்றினுந் துருவி விரைந்தளித் தும் மென விடுப்பக், கூற்றினுங் கொடியார் விசும்பிடைத் தேடிக் குரை கடல் வைப்பினிற் குதித்தார். (ச)

தீந்தொடை மகதித் திருமுனி யனையார் செய்தியை வெய்துறக் கதங்கால், ஏந்துகோட் டயிரா வதப்பெரும் பாக னிருக்கைபுக் கியம் பலும் வெருவிச், சாந்தணிந் தோங்குந் தமனியத் தசும்பிற் றதும்பிய தடமுலைச் சசியோ, டோய்ந்துரு மாறித் திரளுருப் பசுங்கண் ணுறு கழை யுருவெடுத் துறைநாள். (ஞ)

* வேற்றண்டமெனவும் பாடம்.

காலியும் பகலுங் கங்குலும் பணிவான் காழிகா வலன்பணிக் காய, சோலியுந் துணர்ப்பூந் துடவையும் பெறுவான் றுளியற முளியடைந் தமையால், மாலிவெள் ளருவி வரைச்சிற கரிந்த வானவன் படருறு மேல்வை, மேலிவா னின்று மண்ணகத் திழிந்த வீணையங் கிழவனென் றுரைப்பான். (சு)

மாலிருங் குடுமி விந்தமொன் றுறுமான் மணிவரை யள்ளிருள் விழுங்கும், மேலிருங் கதிர்சூ ழாடகக் குடுமி மேருவோ டிகலி யோ ராழி, ஆலுமேழ் பரிமா ஹார்திவா னவனே யந்தர முகட்டடி யியங்கா, தோலுறத் தடுப்பெ னெனநிவந் தகல்வா னுறுவெளி யடைந்ததை யுன்றே. (எ)

பொருகட லுடுத்த விரிநில மனைத்தும் புதையிருள் விழுங்குபு புலரா, தருமறைக் கிழவ ரருங்கட னிறுத்தற் கலியோ னின்மையால் யாரும், தெருமர லுறுநாள் விரிநிலா வெறிக்குஞ் சேயுயர் வெள்ளியங் கிரிக்கண், முரிதிரை குடித்த முனிவரா னுணர்ந்து முக்கணற் கக்கண மொழிந்தான். (அ)

கருதலர் புரந்தூ ளெழுத்தனி நகைத்த கண்ணுதற் சாமியு முவந்தாங், கருவரை யடக்கு முரானுமேழ் நதிக ளவற்றினிற் பொன்னியு மருளித், தெரிதமிழ் முனியை விடுப்பமற் றவனுஞ் சிரகமே றீம்புன லேந்தி, விரிகதிர்க் கடவுள் வழக்கறுத் துயர்ந்த விந்தமால் வரையுற வருங்கால். (கூ)

அத்தலை மாயா புரத்தில்வெம் மூனசா லருந்திறற் கிரவுஞ்ச னெனுமோர், மத்தனுந் தகுவன் மண்ணெடு விண்ணு மறைத்துமால் வரையென நிவப்ப, உத்தம முனிவன் பற்பல வழிபுக் குழன்றுமந் நெறிபெரு தொருசார், பித்தரி னிருப்பக் கதமுறை பிலிற்றும் பெரு மழை யுய்த்தனன் கொடியான். (கo)

நிலம்பக விடித்து வலஞ்சுழன் றெழுந்த நீனிற முகில்பொழி மாயை, அலங்கெட றுனித்தோ னெதிர்யி லுணர்ந்தாங் கவுணனே யருவரை யுருவாய்த், தலந்தனிற் கிடத்தி நின்னையுங் கெண்மைத் தாரகன் றன்னையும் வேலால், இலங்குபூண் முருக னெறியநீர் முடிதி னெனவெ குண் டுரைத்தய லகன்றான். (கக)

பாசடைப் பதுமப் பள்ளியிற் பவளப் பரட்டடிச் சூட்டனப் பார்ப்பை, ஆசறு தரங்கத் தடங்கையா லாட்டி யளிபுனற் றவளைதா லாட்ட, வாசமெல் லிலஞ்சித் துணைப்பெருஞ் செவிலி மகவென வளர்க்குநீர் வேலிக், காசிமா நகரை யிறைஞ்சிவெய் யவனைக் கண்டவல் வினையவண் டொலைந்தான். (கஉ)

ஆண்டுநின் றறவோன் றென்றிசைப் பேரா றயர்வுழி யள்ளிருள் பரப்பும், சேண்டொடு குடுமி வரைத்தடந் துருவித் தெரிவில னிதுகொ

லோ கதிரோன், தூண்டுதேர் மறித்த வரையெனக் கருதித் தூங்கு வெள் ளருவிதாழ் முகட்டில், மாண்டகு கரத்தா னழுத்தமண் ணெடு போய் மறைந்தது மாலிருங் குன்றம். (கஙூ)

மண்ணகத் தழுங்கும் வரைதனக் கிரங்கி மறித்திவண் வந்துனக் களிப்பாம், எண்ணிலே யெனத்தென் றிசைபடர் நெறிக்க ணிகலுடை யசமுகி யீன்ற, பண்ணவர் படிவத் தவுணர்வில் வலன்வா தாவியாம் பதகரா லமைத்த, உண்ணறுங் கருணை வாசகெய் யடிசி லுண்டவ ராவியு முண்டான். (கச)

உண்டவ னிருண்ட கொண்டல்கண் படுக்கு மோங்கல்சூழ் கொங் குநாட் டொருசார், அண்டநா யகன்ரு ளருச்சனை யாற்றி யரும்பெறற் பொன்னிமா நதிப்பொற், சுண்டிகை தனைவைத் திருந்தன னங்கீர் கொணருமா றைங்கரக் கன்றை, வண்டடங் கரத்தான் வணங்குக வென்ன மறைமுனி யுரைப்பவா னவர்கோன். (கஙி)

முருகுவாய் மடுத்து வரியளி மிழற்று மொய்ம்மல ரிலஞ்சிசூழ் காழித், திருவளீள் குடுமித் தென்றிசைச் சிகரித் திருக்கடை வாயிலி னிருத்திப், பெருகுநீ ரனைய நிறைகடாங் கவிழ்க்கும் பிறைமருப் பொருதனிக் களிற்றைத், தருவுலா மலர்தூஉய் வரன்முறை பரவித் தாட்டுணை பழிச்சிநின் றவன்முன். (கசு)

வீங்குகோட் டிமயப் பனிவரை யுயிர்த்த மெல்லியல் சுணங்கணி கருங்கட், கோங்குமா யமுத முலைப்பிடி யீன்ற குஞ்சரக் கன்றெதிர் தோன்ற, ஈங்கெனை யளிப்பா னெழுந்தரு டோன்ரு லென்னுயி ராதி மன் னுயிர்கள், தாங்குவான் மலய முனிகமண் டலநீர் தருகெனச் சத மகன் ரழ்ந்தான். (கஎ)

தாழ்தலு மஞ்சே லென்ரொரு வல்வாய்த் தடஞ்சிறைக் கொடியுரு வாய்ந்து, வீழ்பனி முயங்கு கொங்குநாட் டொருசார் விரிதமிழ்த் திரு மூனிக் காகத், தாழ்புனல் விளிம்பி னிவந்துமா செறிந்தோ னங்கைகள் புடைப்பவஞ் சினம்போல், கீழ்திசை காட்டிச் சிரகநீர் கவித்துக் கிளர்ந் தனன் ரொடர்ந்தது பொன்னி. (கஅ)

வேறு.

மீதுற மலர்கெழு செயலெபு மகருவும் விசையொடு தொடுதிசை திசைசிதறப், பூதர வுடல்கிழி குடரென விடமுமிழ் பொறிமணி யர வுக ணெளிநெளியக், காதுறு மடுபுலி கரடிக ளிடையிடை கடமைக ளொடுமிரு கரைபுரள, வாதுவர் விடுபரி நிரையொரு திரையொடு வரு மொரு கழுமல முதுநதியே. (கசு)

மீனிரை விழியொடு நுரையணி துகிலொடு மிளிரொளி வளை யொடு மிளிர்தரளத், தூநிற நகையொடு கொடிமறு கிடையொடு சுழி

படு சுழியொடு நிகழுமறற், பூநிறை குழலொடு குமிழ்கொடு மூலியொடு புதுமலர் முகமொடு முதுதிரைநீர், மாநில மகள்பெறு மகளென வெ ழில்பெற வருமொரு கழுமல முதுநதியே. (உ0)

ஆறலை யெயினர்கள் வரிசிலை யெறிகவ ணடுகணை படுசிறு குடி. லிடறித், தூறிய சிறுதலை முசுவொடு வசிகலை துறுமிய முளிசினை மரம் விசிறி, ஏழிறு முருமிகல் களிறது பிளிறிட வெறிதிரை நிரையிரு கரைபொருத, மாறடு வளவன திருநிலை மலர்தர வருமொரு கழுமல முதுநதியே. (உக)

பண்டுள பரிகரை விரிதிட நிடுவது படுதிடர் கலையவ ளிடுவது நீள், விண்டல மதிபுனை முதலுறை பதிதொறு விரிவளை மணிமலர் பொழிலதுசூழ், எண்டிசை தொறுமுழ லிரவலர் கொடைதரு மிறை வனை யெதிர்கொடு புகழ்வதென, வண்டிரை மலர்விரி குரைதிரை நிரை யொடு வருமொரு கழுமல முதுநதியே. (உஉ)

வீசுறு கவரியு மொளியுமிழ் மணிகளும் விடுமத கரிகளு மடுகொடி யும், மூசிய சிலைகளும் வகைபடு கணைகளு மூரிதிரை நிரைமிசை கொடு வரலால், ஆசறு குடபுல வரசரை யிகல்பொரு தளவறு பொருள்கவர் வளவர்பிரான், மாசறு தெறுபடை வயவரை நிகரென வருமொரு கழுமல முதுநதியே. (உங)

ஏழுறு நடைமலி யனமிசை புனைதலி னிசைமறை விரிதிசை முக முறலில், தாமரை விரவலி னவனியை விதிமுறை தருதலின் மணி வரை வழிவரலின், நாமலி கொடியொடு தழுவலின் முழுதுணர் நய னுடை யளிவள ரயனெனநீள், மாமலி நிலமகள் வனமுலை வடமென வருமொரு கழுமல முதுநதியே. (உச)

தானமு மருமறை நெறிகளு முயர்சிவ தருமமும் விழுமிய கரும முமெய்ஞ், ஞானமு நவையறு கலைகளு மொருகுடை நரபதி முறை செயு மனுநெறியும், ஊனமி லனமுத லினமலி பொருள்களு மொரு முத லடியவர் திருவடிசொல், மானமு மலர்தலை யுலகினி னிலைபெற வருமொரு கழுமல முதுநதியே. (உரி)

வேறு.

ஆழிய பொருளா யொழுகலா றுடைத்தா யைந்திணை நெறியளா யகன்று, சூழிருந் துறைத்தாய் நாற்பொருள் பயக்குந் தொன்னெறித் தாகிநல் லூரவோர், வாழிசால் கவிபோற் கழுமல மெனும்பேர் மணி நதி யணிகிளர் மாடக், காழிமா நகர்க்க ணணைந்தது முனியுங் காரியைக் கடிவலென் றணைந்தான். (உசு)

அணைந்தவன் விரல்க ளொருங்குற முறுக்கி யருளுடைப் பிள்ளை மேற் றுக்கப்,• பிணங்கினன் வரலு மொருதனிக் கோட்டுப் பிள்ளை

பாய்த் துள்ளலர் மழைதூஉய்க், கணங்களேத் தெடுப்பப் புகர்முகச் சிறுகட் கடம்பொழி நனைகவுட் களிற்றின், இணங்கிய நிலைகண் டலமர லுற்ற வேதமின் மாதவ னிசைப்பான். (உஎ)

குலமறை புகன்ற கடவுள ரெவர்க்குங் குழகனின் னடித்துணை போற்றி, அலதொரு செயலு முற்றுரு வதனு லாண்டகை நின்னையீண் டறியா, துலகுறு கொடியேன் றிருக்கர முறுக்கி யோங்கிய குட்டெனக் காக, கலிவலா யெளியேன் பிழைத்தமை பொறுத்தி கலைகணே போற்றியென் றிடலும். (உஅ)

ஏதமில் குணத்தாய் மகபதிக் காக விருமுது குரவர்தம் பணியால், மோதலைக் குடிஞை கவிழ்த்தன மெம்மான் முன்னருற் றிடினிது தெரிப்பன், போதரு கெனக்கொண் டமலனை யறியும் பொழுதுநே ராதய விருப்ப, மாதவ னெருகோட் டிருசெவி மலையை வணங்கின னதிபெற விரந்தான். (உக)

இரந்தூழி யனையான் கரம்படு கரகத் தெறிழ்வலித் தடக்கையாற் றுளிநீர், வரந்தரு மொருகோட் டிறைமக னளிப்ப வயங்குபொற் கரக மேன் முன்போல், பரந்தபின் காழி புரந்தனி லென்பேர் படைத்துல கிடமெலாந் துடைத்துப், புரந்திடென் றெழிய வாதியைங் கரன்பேர் புணர்ந்தது கழுமலப் பொன்னி. (ஙஐ)

புணர்ந்தபூம் பொன்னி யணங்குமா தவத்துப் பொருப்புறழ் முனிவர நின்னுல், கணங்குழை பாகன் கயிலைமால் வரைபோற் காழிமா நகரிலுங் கலந்தேன், உணங்குபல் லுயிர்கட் குன்னருள் வலியா லுலைவறு மேலைவீட் டின்பம், இணங்குமா றளிப்பல் வரம்பிலா வுவகை யித்தலத் தெய்திய வதனுல். (ஙக)

தொடக்குறும் பிறவி யடற்பிணி தணிக்குந் துகளறு மருந்தும்வல் வினையின், கடக்கரும் புணரி சுடத்துநா வாயுங் கரைபெரு வலிச்சைவல் லிரும்பூ, அடக்கிநல் லொளிவிட் டெறிக்குமொண் சுடரு மழிபசி நிரப்புறு பரப்பை, உடைத்தினி தளிக்குங் கடவுண்மா மணியு மாவெனிற் நகரில்யா னுவோய். (ஙஉ)

வார்ந்ததெண் டிரைய தெய்வத நதிகள் வகைக்கெலா மொருதனி சிறந்து, சேர்ந்தவிண் ணவரோ டெவர்க்குநல் விழுப்பஞ் செய்துவை யகத்திலென் மேனி, ஈர்ந்திரை யிளங்கா ரேய்ந்திடிற் காணி லெய்தி டிற் கைதொடிற் பருகில், கூர்ந்தவல் வினைகள் பரிதிமுன் - பனிபோற் குமைப்பெனக் குலத்துமன் பதைக்கும். (ஙங)

ஐவ்வகைப் பவத்தோர் வெவ்வழல் வேள்வி யலைத்துளோர் குரவரை யிகழ்ந்தோர், செவ்வரித் தடங்க ணையன்மனை விழைந்தோர் செயிரறு தெய்வதம் பழித்தோர், எவ்வமுற் றழலும் வறிஞரை நலிந்தோ

நிருமுது குரவரை யயர்த்தோர், கைவ்வினை கரந்தோர் பொய்க்கரி புகன்மூர் கடுஞ்சம ரினில்வெரி நடுவோர். (நூச)

சுளித்துரை தருவோர் தூநறை மடுப்போர் சுற்றம்வெம் படரு றக் களிப்போர், களங்கறு மூல்லைக் கற்பினல்லாரைக் கனன்றுளோர் கன்னியைக் கலந்தோர், துளங்கரு நன்றி கொன்றுளோர் நட்டோர் தொகுபொருள் கவர்ந்துளோர் மூத்த, விளங்கிழை யவர்தோண் மணந் துளோர் நறையூன் விலஞர்கை யிழிபொருள் வேட்டோர். (நூஙி)

விருந்தினைத் துறந்தோ ரபயமென் றளித்து விடுத்துளோர் கரு வினைச் சிதைத்தோர், தரும்பொருள் கெடத்தென் புலத்தவர் வேள்வி தணந்துளோர் நாண்டுறந் துழல்வோர், அருங்கல னகன்று மிருங்கு ழன் முடித்தோ ரமணரா யரும்புன லிழிந்தோர், பெருந்துறை வழிக்க ணெடுந்தருக் குறைத்தோர் பேதுற வாறலைத் திடுவோர். (நூசு)

அருமறைக் கிழவர் பெறும்பய னுகுத்தோ ரரசியற் றிறம்பிறை நிருள்வாய், தருமிட மறுத்தோர் கண்ணியின் வலியிற் சார்ந்தபுள் விலங்கினை வளைத்தோர், பெருகுநீர்க் கூவல் வீழ்பசு வெடாதோர் பெய்கவ ருடுவோர் குரவன், திருமொழி மறுத்தோர் காலையிற் கடவுட் சினகரம் பணிந்திடா தகன்மூர். (நூஎ)

கடவுளா லயத்து மகளிரைப் புணர்வோர் கணிகைமாட் டரும் பொரு ளேற்போர், தடமலர் வாவி தூர்த்துளோர் குறளைச் சாற்று வோர் மணவினை கெடுத்தோர், மடமக வினைநீர் வீழ்த்துளோர் விலை நெல் வாணிகர்க் கேற்றினை விற்போர், புடைவன முலையா ளொருதனிப் பாகன் புனைவுறு மலரினை யணிந்தோர். (நூஅ)

மெலியபால் விஞ்சை தடுத்துளோ ரையம் விலக்குவோர் பொய் விலை பகர்வோர், நலியிளங் கன்றைப் பால்விடா தலைப்போர் நயனில கூறுவோ ராதி, கலிகெழு விலஞ ரேவரு முவந்தென் கடவுணீ ரிடைப் படிந் தனரேல், வலிவினை கழுவிக் கழுமல நதியாய் வயங்குவென் றயங் மிந் நகர்க்கண். (நூக)

கோணிலை திரிந்த காலையு மாலைக் கொழுஞ்சுவை யமுதுமிழ் புன லாய், வாணிலாஞ் சுடரோ ரிரண்டுள காறு மாறுரு திங்கள் வாழ்வேன், சேணுலாங் கங்கை யாடின்மூத் தினத்துங் தெய்வநீர் யமுனையைந் தினத்தும், ஆணியாம் பலபே ரளிக்குமோர் தினம்புக் காடிஞற் பல னளிக் குவென்யான். (சஂ)

தென்புலக் கிழவர்க் கருத்துநா ளுரகஞ் செழுஞ்சுடர் விழுங்கு நாள் கதிரோன், அன்புறு தகர்மேற் றுலையின்மேல் வருநா ளயனநா ளுவவுநாண் மாகம், என்பெரு நெடுநா ளிவற்றினென் மேனி யீர்ம் புனல் படிந்துளோ ரடிநாள், துன்பிரு வினைக்கோர் கனலியு மனையார் தொல்லுயிர்க் கமுதுமா குவெனுல். (சஎ)

படிபடு மாந்தர் கரைபடிற் பிணியிற் படிபடார் கெடுகிய திரைநீர், அடிபடி லகலா விருவினைத் துவக்கி லடிபடா ரடைகரை வார்ந்த, பொடிபடி னிரயத் தருந்தழல் வறுத்த பொடிபடா ரெள்ளள வுறுநீர், குடிபடி லினியோ ரன்னையர் மூலைப்பால் குடித்திடார் முடிப்பருங் குணத்தாய். (சஉ)

பற்பல வியப்போ டிங்ஙக ரிருப்பென் பகவனின் னருளுமோர் புழைக்கை, அற்புத னருளும் பயத்தலா லென்ன வகமகிழ் தூங்கிய முனிவன், பொற்பொடு பொலிக வடபுலத் தமைந்த புனிதநீர்க் கங்கை போ லுன்பேர், எற்படர் மவுலிச் செம்பியன் புவிக்கு மெய்துக தெய்வ நீ ரணங்கே. (சங)

கழிதொறுங் குவளை கயந்தொறுங் கமலங் கரைதொறும் வெள் வளை மடைநீர், இழிதொறுந் தரள மேர்தொறும் பசும்பொ னிருகரை தொறுமறை முனிவர், பொழிறொறும் புயல்கள் புடைதொறுங் கடவுட் புனிமணிச் சினகர மியங்கும், வழிதொறுங் கன்னல் வயறொறுஞ் செந் நென் மல்குக நின்னுழை மாதோ. (சச)

கறங்குவெண் டிரைய கங்கையே யாதி கடவுண்மா நதிகளு நின்பால் அறங்கிளர் துலக்க ணுடமா சகற்றி யருளுமா றலறிய முங்நீர் பிறங்குதொல் புவிக்கு மருளுக வென்னுப் பேரியன் முனிசெல மகவான் நிறங்கிளர் களிநீர் மலர்த்திய மலரா னிருமலன் பூசனை முடித்தான். ()

ஆண்டுதண் கயிலைக் கமரர்கோ னேக வயிலெழிற் றசமுகி யென் பாள், தூண்டுமான் றடங்தேர்த் தூணவனுக் களிப்பான் சுந்தரி வலக் கைதாட் டீர்ப்பப், பூண்டுமா யலங்கன் முகிற்குமுக் கணற்கும் புதல் வன்வெஞ் சேனையங் கலிவன், காண்டலுங் சொடியாள் கையரிந் தெறி யூர் கைவிழுஞ் சேரியொன் றுளதால். (சசு)

மற்றவ ளசலப் புகலிமா நகர்க்கு வன்னியங் திசையின்மா காளன், வெற்றியங் கழற்கா லொருதனிச் சாத்தன் வியன்பணி புரிந்தனன் வைக்கச், சுற்றைவெண் டிரைநீர் பொன்னிமா தளிப்பக் கடிமலர்த் துடவையும் பிறவும், பொற்றளிர் குழைத்து நறுமலர் விரித்துப் பொலிந்தன பொங்கராங் கதன்பின். (சஎ)

பூதலங் கடந்த வொருதனி முளரிப் புங்கவன் றேடருங் காழி மாதலத் தொருகூன் பிறையணி வேணி வரதன தாரருள் பூண்டும் காதலஞ் சகியோ டமர்கோன் போதக் கடமுனி சையமெய் தினனென் றோதிய சூத னருவரை வளஞண் டுறுவருக் குணர்த்திய நெறியை. ()

வேறு.

தெய்வங் கமழும் பளிக்குண்டைத் திரள்காய் நெல்லி தருமூலத் தய்ய மகன்ற முனிக்கரகத் ததினீ ருய்ப்ப நதிநீராய்ப் பெய்யுங் குளிர்பூம் பொன்னியினுற் பெருமா நிலத்தின் னுயிர்புரக்கும் வய்யம் புகழுஞ் சையமெனும் வரையின் வளனீங் கறைகூவலுல். (சகூ)

அடர்செஞ் சடையு மிராவணன்மே லடருஞ் சிறுகா னகக்கண்ணும்
படரம் புலியு மாசுணமும் பலதாழ் வடமு மானிடமும்
தடகண் கலையு மடங்கலுடைத் தருக்குஞ் செருக்குந் தன்மையினுல்
கடலின் விடமுண் டளித்தமலர்க் கைய னிகர்க்குஞ் சையவரை. (நிo)

கோடு தாங்கி வெயின்மறைத்துக் கொண்மூ வடிக்கொண் டலைவிலதாய்
நீடு தருமா மணிமணந்து நெறிக்கட் டடந்தா மரைகாட்டித்
தேடும் பலனு மூலமுமாய்ச் செல்வந் தேற வதரமெல்லாம்
ஆடும் பகட்டா லறிதுயில்கூ ரைய னிகர்க்குஞ் சையவரை. (நிக)

முன்னூ லணியா லெவ்வாறு முழங்கு மதவா ரணச்செறிவால்
மின்னூர் வாயால் வனப்புறவே தண்ட மருங்கை விரித்தலினுல்
கொன்னூர் குகரங் காட்டலினுற் குடுமி நாலு மருவியதால்
தொன்னூல் விரிக்கு மடல்வனசத் துய்ய னிகர்க்குஞ் சையவரை.(நிஉ)

ஏவார் தடங்கட் கொடிச்சியர்வா ழில்வாய் விளக்கும் பொற்றுகள்போய்ப்
பூவார் கடமென் சினைதோறும் பொதுளி யொளிசூழ் கிடந்தமையால்
தாவா விண்ணோர் வதிதருபூந் தருவை நெடும்பொற் றருவென்றே
ஓவா வொருபோர் கொடுத்திந்த வோங்கற் கிடந்த திணிமுன்றில்.(நிங)

சோதி வாய்ந்த பசுங்கமுகந் துணர்ப்பூம் பாளை வாள்விதிர்த்துப்
போதி வார மென்றலினுற் பலகை தாங்கிப் பொருப்பரசன்
மீதி லாகண் டலனிலையாய்க் தெழுந்து மிளிர்வன் சிறையிரிந்த
சாதி மானப் பழிதுடைக்கத் தருக்கின் றதுபோ னெருக்குமால். (நிச)

திவளப் பசும்பொற் கொழுந்துயிர்க்குஞ் சேமப் பாறை நிழலுடன்மேல்
இவரத் திரியும் வரைவருடை பசிய பிணையென் றெறிசுடரோன்
பவளக் குரத்துக் கொய்யுளைமா னேழும் படர்மா லுழந்துருகி
அவணத் திமையாக் கண்கொடுபார்த் தலைக்குந் தடந்தேர் நிலைக்கவே. ()

பெருகி யொளிகால் நறுங்குவிகப் பெருஞ்சே தகந்தோய்ந் தொழுகு
அருவி குளித்துப் பவளமருப் பாய வேழ மியங்கிடுமால் [தெண்ணீர்
திருகு சினத்தின் ஞாட்பினுற்ற செறுநர் மார்பிற் செருகிவரும்
குருதி பொழியுங் கூர்ங்கோட்டுக் குறுங்கட் பெருங்கைக் குஞ்சரம்போல்.

கண்ணுர் பீலிமஞ்ஞையுயிர் கதிர்கான் மணியைக் கோபமெனு
எண்ணு தயில்வான் கவர்ந்துபசை யின்றி யெறிவ மாலுழந்து
பெண்ணு ருருக்கண் டுணர்விழந்த விழியான் முயங்கிப் பெறுமின்பம்
நண்ணு மடவார் நசையின்மை குறித்தாங் கொருவு நல்லவர்போல். ()

கூன்றேய் மருப்பை யறைதீட்டிக் கூர்மை யறிவான் குழியழற்கண்
ஊன்றே யகட்டுத் துறுமயிர்மெய் யொடுக்கி யடுக்கத் தெற்றினம்
தேன்றேய் மலர்ப்பூந் தருவிலக்காய்ச் செருக்கிப் பாயப் பிலிற்றியதேன்
மான்றேற் பள்ளி யெயின்மகவாய் மடுக்குந் துயிற்க ணடுக்குமே. (நிஅ)

நெறியா ரிந்த வரைக்குடுமி நிலவு மூரவோ ரருளுண்மை
சிறியார் புகலுந் தரத்ததோ செற்ற நீங்கி முற்றமெலாம்
பொறியார் மனவப் பெருமணிப்பூண் பொம்மன் முலைப்பால் பருகியவாய்
வெறியா யெனைக் குழவியொடு வேங்கைப் பறழு முகளுமே. (நிகூ)

கருங்கால் வேங்கை வீயுகுத்த கடுக்கை நறுந்தண் டுணர்சொரிந்த
இருந்தா தரிக்கொண் டரிதார மீர்த்துப் பசும்பொன் சேர்த்துவரைப்
பெருந்தா ளடிக்கண் முடியினின்றும் பெருகு மருவி தூங்குமுல
கொருங்கே யுண்ட வானவன்பொன் னுத்த ரீகந் துயல்வரல்போல்.(சுo)

கொல்லா டரவ மிரைதேரக் குறித்துக் கான்ற மணிக்குவைகள்
வில்லா ரொளிவிண் முகட்டளவும் விரியப் புரைதீ ரறிஞரிடைப்
புல்லா வெழுத்தின் வறுங்கோட்டிப் புலனில் புலவர் முகம்போல
ஒல்லாக் கதிரும் வெண்கதிரு மொளிமாண் மழுங்கி யியங்குமே. (சுக)

தான மடுத்த முகிற்குலங்க டவழுங் குவட்டிற் றேறைவிரித்
தான களியின் மஞ்ஞைபல வமைந்த தோற்ற மவிரொளிசூழ்
வான மடவா ரகன்சுணீ ராடி மயிர்க்கால் விரலுளர்ந்து
கான மருப்பூங் குழலார விரித்தாங் கிருத்தல் காட்டுமே. (சுஉ)

வளிசால் விசும்பூ டுரிஞ்சுபசுங் கழைமேற் குறுகூன் மடமந்தி
களிசால் பவுரி யிடநோக்கிக் கங்கைப் பசுங்கட் குழிகவுளின்
அளிசால் கடுவன் முட்பலவின் சுளைகல் குவவே லடர்வேந்தர்
ஒளிசால் பொன்னந் துணிகளைக்கண் ணுளர்பா லீவ தொத்துளதே. ()

வெளிறு நீத்த கருமுகிலைப் பிடியே யென்று வியன்புழைக்கைக்
களிறு நீட்ட விலங்குமுகீக் கண்ணின் றமுது கான்றுவளைந்
தொளிறும் பிறையைச் சிமையவரைப் பாகற் களிப்பா னுருத்தெறிந்து
பிளிறி நிவந்து தோட்டியெனத் தடவும் பெற்றி யன்னதே. (சுச)

இமைக்கும் புனல்கோட் டருவரைநின் றிழியு மருவி விழுந்தரையில்
குமைக்குங் குழிவாய் மாமருப்பாற் குறுங்காற் குரம்பைக் கொடிச்சியர்
சமைக்குங் கிழங்கா லகழ்குழிவாய் வல்சி யாகத் தனிகொழிக்கும் [கள்
அமைத்திண் கதிர்கான் மணிமுத்தந் தூர்க்கு மாதோ வகன்சாரல்.(சுரி)

சகடொன் றுடைத்தே ரிரவிதெறுந் தழலங் கரங்கள் காணரிய
முகடு மாய்த்த பனிப்பாறை கிடந்த வண்ண மூதண்டத்
தகடு தேய்க்குங் குவட்டிலுறை யறவோ ரியங்க லாற்றைவெள்ளித்
தகடு பொதிந்து படுத்திழைத்த தன்மை போன்று தயங்குமே. (சுசு)

வருங்கா லாற்றின் மருங்கெல்லா மைகோ டுறழுந் தழைமேனித்
திருகு கோட்டுப் பாரமடிச் செங்கண் மேதி பொழிதீம்பால்
முருகு மலர்ப்பூங் கோடுழுது முழுவெண் மதியி னுடல்கிழியப்
பெருகி வழியா ரமுதோடு மயங்கு மொருசார் பெருமுன்றில். (சுஎ)

முழைக்குன் றிடைக்கோ ளரியுகிரின் முளையா லுறுகண் டீதியுரு
திழைக்க மோட்டு வெரிங்காட்டி னெரிகண் முகிழ்த்து நாலவிட்ட
தழைக்குங் குழைகாற் றெறிசெவிய தந்தா வளத்தின் பிணருருவப்
புழைக்கை யேறிப் பொன்னூசற் கொளுமவ் வரிமாண் பூங்குரூஉ. ()

உரையிற் கூடா மேதகுசீர் யோகக் கிழவர் முறைபயிற்றும்
கரையிற் றுளமா மறையோதை செவிவாய் மடுத்துக் கன்றெடும்போக்
திரையிற் கண்ணு துருகியவா னினம்வெஞ் சினவே றெறிந்தவர்தம்
புரையுட் டொறும்பான் மணிச்சிரக விளிம்பு துளும்பப் பொழியுமே. ()

எறிகொள் வடந்தை சுழன்றுட வீர்ங்கொண் மூங்கின் றயலாடப்
பொறிகொள் கலபப் பிணிமுகங்கூத் தாடல் புகன்றென் புரைவிடங்கால்
செறிமுள் ளெயிற்று நெட்டுடல்வா ளரவ மாடுங் தெறுஞ்சுடிகை
மறியு நிழற்கட் சிறெலிபாய்ந் தாடுங் தடஞ்சார் மாடெல்லாம். (எ0)

மெய்தூங் கழலோன் வழிபடல்போ லரும்ப லாசின் மிடைந்தலர்ந்த
நெய்தூங் கடர்ப்பூஞ் செம்மலுகு நெடுங்கல் விடர்வாய் மூரட்கடுவன்
கய்தூஞ் சுனைநீர் பெய்தேனின் கணமேற் றூவி யிறுல்பொதிந்த [மால்.
பெய்தேன் கெடச்சூ ரில்லான்போல் வினையே யிழைத்துப் பிழைத்திடு

ஒழுங்கிற் சிறந்தோ ருழைப்பல்லாண் டுறைபட் டாலும் புலனிலர்தம்
மழுங்கிக் கிடந்த திண்ணறிவு நுண்டு கொல்லோ வண்பளிக்கின்
எழுங்கிற் பாறை நிழனுற வேதி லேறென் றெதிரளித்துக்
கொழுங்கட் சுடர்கான் றடிநிலத்தைக் குரத்தாற் கிளைக்குங் கொல்லேறு.

துருவி யோடு மழைப்படலஞ் சூழ வோடும் புல்லொடுமான்
மருவி யோடு நுதற்சூட்டு மாலை போலக் குவட்டினிழிந்
தருவி யோடும் பருவரைபோ லானே றோடு மேனல்மிசைக்
குருவி யோடும் வயவேழங் குழிய வோடும் வழியெல்லாம். (எக)

விரைப்பைக் துணர்தோய் மாணிடத்தீ விளிசால் விரிபூம் பொழி
றோறும், கரைக்குங் கண்ணீ ரொடுங்துரியங் கடந்த வெளியிற் கருத்
தொடுங்கி, இரைக்குஞ் செயல்போ தெழுதும்விளக் கெனலா யசைவற்
றிருப்பவர்மேல், உரைக்கு முழுவை தீனத்தெருட்டு முயர்ந்தோர் கரம்
போல் வியன்காந்தள். (எச)

ஓடு மதிமே லுரிஞ்சியகோ டுகுத்த வமுது முட்பலவின்
கோடு குனியுங் குடங்கனிவீழ்ந் தழிதீஞ் சாறுங் கோரண்டத்
தாடு மலர்வா யிலங்குமிறு லழிதே ணெழுகி யாறிழுக்காப்
பீடு தருமா முனிவருக்கு மவ்வா றிழுக்கும் பெரிதாக. (எடு)

விண்வா யெழுந்த மின்னலென விருகுன் றேந்தி வியன்கீதம்
பண்வாய் மிழற்றச் சுடர்ப்பவள வல்லி யார்த்த பசும்பலகைக்
கண்வா யெழிற்சூ ரரமகளி ரூச லாடக் கவின்றருவ
தண்வாய் நறவி மலர் கொழிக்குந் தடமென் சிணைச்சந் தனப்பொதும்பர்.

மூன்று புவியு முன்றிலிடை யுய்ப்பார் முதுமா மறைக்கொடிகள்
ஊன்றி வளருந் தருவனையா ருறங்கா துறங்கும் யோகுடையார்
சான்ற பனுவ லாட்டிதனிக் கிழவன் வியக்குந் தவக்கிழவர்
ஆன்ற முதுதா பதப்பள்ளி யலகில் லனவாண் டுளதம்மா. (எஎ)

விடங்கூர் தொழுமுள் ளெயிற்றுமணி வெஞ்சூட் டரவ மீக்கிடந்து
தடங்கூர் கமலத் தவட்புணர்ந்து தழல்வாய் நேமி யுருட்டியகல் [பால்
இடங்கூர்ந் தளித்தோ னவனளித்தோன் முதலோர் பதமு மிகழ்ந்திவர்
கடன்கூர்ந் தேவற் றுறைபிழையா தொழுகு மாணர் களும்பலரால். ()

விரிக்குங் கமலா சனத்திருந்து விழியைக் கொடி மூக் கிறுதிநிறீஇப்
பரிக்குந் தொடர்மார் பெதிரேறப் பண்டி யாழா துயராது
தரிக்கும் படிதோ ளுயரநகைத் தரளம் பிரியா மூலவொளி
தெரிக்கின் றவனைத் தெரியோகத் திறத்தி னவரும் வரம்பிலரே. (ஏக)

தென்பால் வடபான் மேல்கீழ்பால் சிகைநா வளைக்குஞ் சுடர்நாப்பண்
இன்பா லகந்தைக் கிழங்கையகழ்ந் தெறிந்து பனிக்கோட் டிமயவரை
மின்பா லவனி யுளத்திருத்தி வெய்யோ னிடைக்கட் புலனமைத்துத்
தன்பா லுசி றுதிக்கணின்று தவமாற் றுநரும் பலராங்கே. (அ0)

அகனும் புறனும் புனிதமுற வாறைந் தடக்கி யனற்கடமை
தகநன் கியற்றி நறுந்தூமந் தாமந் திருமஞ் சனமீட்டிப்
பகலுந் துணர்வான் மாயன்வலி பருகுங் கணிச்சி வானவனைப்
புகலும் பூசைத் தொண்டுபுரி கிரியை யோரும் பொலிந்தனரே. (அசு)

எடுத்த பொருளுக் கேற்றகடா வடுத்து விடைகொண் டதைவிடுத்துத்
தடுத்த வழிநின் றருட்குரவன் குறிப்பா னுணர்ந்து சைவநெறிக்
கடுத்த மேற்கோ ளிறைவனடி யகத்தி லிருத்தி யவனருளே
மடுத்துச் சிவதா ன்முறையில வல்லார் பல்லார் குழுமினரால். (அஉ)

பால ரனைய வைம்பொறியும் படிக்கும் படையர் சுருக்கணிந்த
கோல ருயிர்ச்சட் குயிராகிக் குன்ரு தொழுகுங் குணக்குன்றர்
சீல மெவற்றுஞ் செறியாது செறிந்தோ னடிக்கே பிறிந்தறியா
மாலர் முத்தி முற்றத்தர் வைகும் வயலின் வளனீ தால். (அஊ)

குழைக்குங் கோட்டு நெல்லியொன்றக் குடுமி நடுவட் பொலிந்ததத
னுழைக்குஞ் சரவீ ருரியான்முண் டுடையார் துவன்ற பழமறைநூல்
தழைக்கு முதலாய் மாமனுக்கட் டடமென் கிளையா யாகமங்கள்
இழைக்கு மிலையா யருட்டுணரா யிகவா முத்திக் கனிபழுத்தே. (அசு)

அன்ன கடவுட் டருமூலத் தளிநீர்ப் பொன்னி தனையிறக்கித்
தென்னன் பெருநாட் டளிதூங்குந் தென்றற் குழவி நடையியலும்
பொன்னங் குவட்டுப் பொதியவரை புக்கா னுழுந்தாழ் புனலாக
முன்னங் கடலே ழைபுமுண்ட முதுமா தவத்துக் குடமுனிவன். (அரு)

இனைய கடவுண் முனியளிப்ப வீர்ந்தண் பொன்னி யிருவகைத்தாய்க்
கனைநீ ருலகிற் சிறந்ததெனக் கலிதேர் சூத னெனுமேலோன்
வனைநீர்க் காந்த புராணத்து வருசங் கரசங் கிதைசொன்ன
வினைதீர் கதையீங் கிதைச்சூதன் வேணி முனிவர்க் குரைத்தனனால். ()

[உக-ஆவது. கழுமலநதி வரவுரைத்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் ககசூஉ.)

——:o:——

உஉ-ஆவது. குமரவேளுபதேசம் பெற்ற வத்தியாயம்.

குலவிரி குடக்காய்த் தெங்கின் கூரிலை யெனவெவ் வேறு
தலைவிரித் தளிக்குந் தெய்வத் தண்கழு மலையா றுற்ற
நிலையிது வாகு மிவ்வூர் நிமலனீ முருகன் போற்றி
மலைவிரி யுபதே சங்கொள் வண்ணமும் பகர லுற்றும். (க)

போழுலாந் திங்கட் கண்ணிப் புரிசடை முனிவன் சோதி
வீழுலாங் கயிலைக் குன்றின் விரிந்ததென் றிசையி னூடே
சூழுலா மருவி மாலை துவன்றிய தடமென் கோட்டுக்
கேழுலாங் கடவுட் டேவ கிரியுள தொன்று மாதோ. (உ)

அக்கிரி தன்னி லெம்மா னருளினு லொருமுந் நான்கு
கைக்கும் ரனுக்கு முந்நூற் கடிமண முடித்து வெங்கோல்
திக்கிரி தரச்செய் சூரன் றெறுபடைக் குடைந்த மேனி
மைக்கிரி யனையா னுதி வானவர்க் கிரங்கி வள்ளல். (ங)

கவலரு மறைகள் பூத்த கனிமலர்ந் தருளிக் கோடி
திவளொளிப் பரிதி மேனிச் சேட்டிளங் குகனை நோக்கித்
தவலருந் திருவே ஞானத் தனியிளங் குன்றே வாழ்நர்
அவலவே ரிவான் சூர னுடல்வே ரிவா யென்று. (ச)

நொறில்வயப் புரவி பூண்ட துகம்படு தரங்கத் திண்டேர்
பொறிவழிச் சிங்க னுதி பொருந்துநூற் றெண்மர் தோச்சி
செறிமதி வீர வாகு முதலிய துணைவர் செந்தீ
எறிமயிர்க் குறுந்தாட் பூத மிரட்டியா யிரத்த வெள்ளம். (ஞ)

அசனியே றலறத் தாக்கி யங்கையிற் பிசைந்து நூறும்
வசையறு மாற்ற லொன்பா னிலக்கவா ளுழுவ சோடும்
திசைமுகங் கமழுந் தெய்வச் செச்சையந் தெரிய லானுக்
கிசையுற வளித்து வெவ்வே றெரிமுகப் படையு நல்கி. (சு)

ஓதைமாற் றியவண் டாடு முருள்நறுங் கடப்பந் தாரோய்
ஈதெலாங் கொடுநீ வெஞ்சூ ரிகறடிந் தெறிக வென்னுக்
கீதயாழ் மருட்டுந் தீஞ்சொற் கெண்டையங் தடங்கட் பேதை
மாதர்பா லொருவ னீய மற்றவ னிச்சை பூண்டே. (எ)

குலிசவே லிறைவ ஞதி குண்டல வாணர் தத்தம்
வலனுறு மிருக்கை யேற மாமணி யிரத மேறித்
தொலைவறு கடலந் தாணை சூழ்வரத் தென்பா லன்பர்
பலனுற வினிது சென்றன் பன்னிரு கரத்துப் புக்தேள். (அ)

பொற்பமர் கடுக்கை மாலைப் புண்ணிய ணண்ணுந் தானம்
பற்பல வொடுங்கே தார பனிவரை யிறைஞ்சி வேதச்
சொற்பதங் கடந்தோன் வேண்டித் துறையினின் றிறங்கு கங்கை
அற்புதங் கிளருங் காசி யமலனை யலர்கொண் டேத்தி. (கூ)

வேறு.

குளிர்தூங் கருவித் திருச்சயிலங் குறைவில் விருப்பாக் கழும்பரவித்
தெளிநீ ரெறிபொன் முகலிநதித் திருக்கா ளத்தி வரைபோற்றி
விளியா வொருதன் மனக்கியன்ற விரிவேங் கடமால் வரைநோக்கிக்
களியா லூர்த்த தாண்டவஞ்செய் கடவு ளாலங் காடெய்தி. (கo)

முன்மா மறைக டேடரிய மூலச் சுடரா மொருமுதல்வி
நன்மா வடிக்கீ ழுறைகாஞ்சி நகர்வா ழொருவ னடிபோற்றிச்
சொன்மா சகற்றுங் கார்த்திகைநாட் சுடரோங் கியமால் வரைதாழ்ந்து
பன்மா தவர்க்கு முத்திநெறி பயக்கு முதுகுன் றினைத்தொழுது. (கக)

காரா னந்த மருஞ்சோதிக் களத்தி னிடத்தன் மணிக்குழையன்
பேரா னந்த மணிமன்றிற் பெருமா னிருதாண் மலர்போற்றி
நீரா மண்ணிப் பெருநதிக்கு நிறைகா விரிக்கு நடுவணைனக்
காரா வமுத னவனுறையு மந்தண் காழி நகரணைந்தான். (கஉ)

வீரந் தருபூ ணெழின்முருகன் வேணு புரத்தைக் காணலொடும்,
பாரந் தருதிண் புயத்துமிடற் பானு கோபற் பயந்தவெய்யோன்,

வாரந் தருமென் பகைவரவை வழுத்தி லாயென் றிழித்தென்னைக்,
கோரந் தருமென் றுளிப்பான்போற் குடபா லொளித்தா னடல்
வெய்யோன். (கஙூ)

உரிமைத் தாய வுயிர்ப்புடைநா ணுடையா ளன்றே கடலீன்றுள்
பருகற் காணூ மடற்கதவ மறைத்தாங் கெனத்தா மரைமுகிழ்ப்பத்
திருவுக் கினிய வுயிர்ப்பாங்கி செல்வா வருக வருகவெனு
அருமைக் கனிவாய் திறந்தழைத்தாங் கலர்ந்த தாலோ வரக்காம்பல். ()

குமுதம் விரியக் கதிர்விரியுங் குளிர்வெண் மதியென் றுலகுதொழும்
அமிழ்த மெழுமுன் விடமெழுந்தாங் கனைய விருளு மாமுதத்
திமித மிறைத்தாங் குடுக்கணமுந் தெள்ளா ரமுத மெனநிலவும்
இமிழ்தெண் டிரைநீ ரொலிவேலி யீர்ங்கண் ஞாலத் தெழுந்தனவே. ()

தொலையா வமணப் பேரிருளைத் தொலைத்த பூதி சாதனம்போல்
அலையா ருலகத் திருணீறி யலர்வெண் ணிலவங் கலிகொழிப்பக்
கலிதீர் காழிக் கவுணியர்கோன் கடவுண் முருக னென்னமலிச்
சிலையா னன்பர் மாநேசச் செழிய ஞன கடவுளர்கோன். (கசூ)

கடல்வாய் முளைத்த சுதைத்திங்கட் கற்றை நிலவஞ் சுற்றியபின்
மிடல்வேன் முருகற் கிடனுக மெய்மைக் கடவுட் கம்மியர்கோன்
சுடர்மா ளிகைவிண் முகடளவித் தொடுதோ ரணத்தி னிழல்பரப்பும்
வடமா மறுகிற் படரொளிகான் மணியா லயமொன் றணிசெய்தான். ()

இருள்சீத் தொளிகான் மணித்தசும்பி னிமைக்கும் பசும்பொன்
னெயில்வளைத்துக், குருமா மணித்து ணிரைபரித்த கோட்ட கடுவண்
மோட்டரிமான், தருமா தனமே லுருள்கடப்பந் தாரோ னிருப்ப வார்
கழற்காற், புருகூ தனும்விட் புலவோரும் புறஞ்சூ ழகம்புக் குறைந்
தாரால். (கஅ)

உறைந்தார் பலரிற் கிம்புரிக்கோட் டொருவெள் ளயிரா வதப்பாகன்
அறந்தாழ் சூரன் கொடுங்கோலா லலையார் பழனக் கழுமலத்துள்
புறந்தாழ் கூந்தற் சசிமடந்தை புனைமா ணிழைகண் மூனைகளில்
சிறந்தோ ருழைவைத் திருந்தவெலாங் கொரிந்தா னுருகிப் பரிந்தானே.

பரிந்தா னுரிமைப் பெருந்தேவி பணிமென் மூலமேற் றணியாமால்
புரிந்தான் விரகக் கனல்கனற்றப் பொரிந்தான் கன்னற் பொழுதுகமாய்ப்
பிரிந்தா னெருபெண் சசிக்காகப் பெருவெண் சசியின் கதிருருப்பக்
கரிந்தான் கங்குற் பெரும்புணரி கழித்தான் கதிரோன் விழித்தானே. ()

குவளைக் களத்தன் கண்வரலாற் கோதா டசுரப் பகைததறலால்
அவனிக் காறு தலையுறலா லம்போ ருகக்கண் ணனைவிடலால்
தவருக் கருண்முன் னுலுகையாற் ருவில் பூத மகிழ்வரலால்
உவனித் தனிவேன் முருகனென வுதித்தான் கதிரோ னுதித்தலுமே.()

மாலைக் கவிகை வாசவ னும்வா னு ளோரு முனிவரரும்
சோலைக் கவிகை நிழல்பரப்பிச் சூழுங் கழனிக் காழிபுரத்
தாலைச் சுவைநேர் கழுமலப்பே ரந்தண் பொன்னி குடைந்தாடிக்
காலைக் கடவ கடனிறுத்துக் கடம்பன் றுணைத்தா ளிடம்பணிந்தார். ()

நடக்குங் கால மிதிற்காந்த ணாறுமென் குஞ்சித் திருமுருகன்,
சுடர்ச்செஞ் சுடரோ னெயிறுகுத்த தொல்லைக் காழி வல்லவன்மேல்,
கிடக்குங் கருத்தால் வழிபடற்குக் கேழி லொருதன் கோயின்முன்னே,
மூடக்குங் கொடித்தெண் டிரைபுரட்டு முதுநீர்த் தடமொன் றது
கண்டான். (உங)

கண்ட தடத்துக் கங்கைமுதற் கடவுணதிக ளெனைப்பலவும்
கண்ட விருத்தி மலர்க்கரத்தான் மணிநீ ரேந்திப் பணிமாலை
அண்டர் பெருமான் பிரமன்முடி யணிந்த பெருமான் பழமறைநூல்
விண்ட பெருமான் முடிக்காட்டி வெட்கிப் பெருமா னர்ச்சித்தான்.(உச)

தொண்டால் வழிபா டிழைத்தலர்தூஉய்ச் சுடரே யிடர்தீ ரருமருந்தே
பண்டா ரண நூல் விரித்ததனிப் பவள மணியே பணிவிலர்பால்
அண்டார் வொளியே யறிவிலெனு லறியா வறிவே யெனைப்புரந்த
தண்டா வமுதே வேணுபுரித் தலைவா வெனமுன் பணிசெய்தான். (உடு)

உண்ணீ ருருக நெக்குநெக்குள் ளுடைந்து குழைந்து தரும்புளகம்
கண்ணீ ராறு யுள்ளமலர்க் கண்ணீ ராறுய்க் கரைந்தவன்முன்
மண்ணீர்க் குதலைக் கிளியொடுமான் பரிமே லிவர்ந்து சண்பைவளர்
முண்ணீ ரெயிற்றுப் பணிமாலை மூன்று விழியான் முன்றினனுல்.(உசு)

கனிவாய் மகனே யாறுமுகக் கருணைக் கடலைக் கழற்றுணைமேல் [தி
பனிநாண் மலர்தூஉய்ப் பணிவானைப் பணைத்தோ ளழுந்த வணைத்தேந்
தனியா தரங்கொண்டுன் பூசை நயந்தே நயந்தே நின்னுளத்தில்
இனிவேண் டுவதென் னென்றருளி யிமயச் சிலைவாங் கியமுதல்வன். ()

பாலம் புனைவெண் பொடிபுனைந்து பவளச் செவியி லுவகையினுன்
மூலம் படுமோ சைம்பதமு முறையா லோதி முறைதணந்தோர்
காலம் பருகும் பாசுபதக் கணையுங் கதிர்க்கூ ரிலைவேலும்
ஆலம் பொருவெம் படைபலவு மளித்தான் கடுக்கை யணித்தாரான். ()

தெவ்வுப் புலத்தை வேரரிந்து சேண்வா யமரர் மாணிழந்த
கவ்வைச் சிறைமீட் டெய்துகெனக் காளி புரியா ளுடையபிரான்
கொவ்வைக் கனிவாய் மகற்கருளிக் கோயில் புகலு ஞாயிறெனச்
செவ்விக் கதிர்வே லிளங்குமரன் சென்று னயல்போய் வென்றானே. ()

அண்ட மனைத்துந் தனிக்கவிகை யளித்த வசுரன் மூரணழிய
அண்ட வாணர் தத்தநிலை யடையக் கட்வுண் முருகனுக்கும்
அண்ட மளிக்கு நிலைமைபெற வருட்செய் ததுவெங் குருப்பதிவாழ்
அண்டர் பெருமா னருளென்று லதன்சீர் புகல்வ தெவன்கண்டீர். (கo)

மூரணிக் கவைமா முதறடிந்த முருகக் கடவுண் முன்னமைத்த
உரவுத் தடந்தெள் ளாரமுதை யுதக மெனுங்காற் பதகமெய்யே
குரவுக் கடப்பந் தாரோருவன் குழித்த லாற்றன் மகனளித்த
வரமிக் குயர்பூந் தடமிதென மந்தா கினிப்பெண் மருவலினுல். (கக)

பருக்கைக் கவளக் களிறட்ட பகவன் மதலை தெளியமொழி
குருக்கட் பெரியோன் றடமென்றுற் கூறு மாறென் குருகினங்கள்
செருக்கிப் படிந்து விதிர்த்தசிறைத் திவலை படினும் புள்விலங்கு
விருக்கக் குலங்கண் மானுடங்கள் வினைவெம் பவத்தா லினையாவே. ()

தேளார் மதியின் முழுமதியைத் தீர்ந்த நாள்க ளோராறும்
வாளார் துலக்கட் டெரிசமொழி மற்றை நாள்க ளவையாறும்
தாளார் மலர்ப்பூந் தடம்படிந்து தக்க விரதம் புரிபவரே
தோளா மணிப்பொற் கந்தனுறை தொல்லை யுலகின் பயன்றுய்ப்பார். ()

மதியந் தொறுமிவ் வறுநாளும் வந்து படிந்து மூனமழுவாள்
அதிபன் மனுவை விதிமுறையா லறைந்தோர் புறந்தாழ் கருங்கூந்தல்
பிதிருந் திதலை முலைமுளரிப் பெண்ணு ரமுதின் கண்ணருள்கூர்
நிதியம் படைத்து மறுமையினு நிலைசேர் முத்தித் தலைவாழ்வார். (கச)

மீன மிறுவாய் மதிதோறும் விரிகார்த் திகைமீ னதிகமின்றி
ஊன மறுகார்த் திகைமாதத் தொருகார்த் திகைமீ னவற்றதிகம்
தீன மறுகார்த் திகைமதியுஞ் சிங்க மதியுந் திங்களெனும்
மான மலிநா ளிக்கமல வாவி படிவார் சீவன்முத்தர். (கடு)

என்ன மலர்ப்பூந் தடத்தியல்பு மிறைவேன் முருக னெந்தைபிரான்
சொன்ன மனுவால் வென்றதுவுஞ் சூத னுரைத்து துகளெறிந்த
நன்னர் மறைதேர் முனிவரர்க்கு நலஞ்சேர் காந்த புராணத்தில்
பன்ன வரிய சங்கரசங் கிதையி லெடுத்துப் பகர்ந்தனனுல். (கசு

[உஉ-ஆவது. குமாவேளுபதேசம் பெற்ற வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கசகூஅ.)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்தகுரவேநம:

உஉ-ஆவது. திருஞானசம்பந்தப்பிள்ளையார்

திருவவதார வத்தியாயம்.

கான்மலி கடப்பந் தாரினுற் குவந்து காழிகா வலன்றிரு வருள் செய், மான்மிய மூணர்ந்தே ஞானசம் பந்த வள்ளலாய் மூருகன்வந் துதித்த, பான்மையுண் டென்ரு யீனயதும் விரித்துப் பகர்கென முனி வரர் கேட்ப, மேன்மைசால் சூதன் வினவரும் பொருளீ தென்றுபின் விரிவுற விளம்பும். (க)

ஆன்றதொல் கேள்வி யறிஞரிற் போதா யனமுனி சூத்திரத் தொழுகி, ஏன்றமா தவத்தா லுயர்சிவ பாத விரதயன் காழிமா நகர் வாழ், ஊன்றுமா மறையோ னருமக விருப்பா லுலகளித் தவன்றடத் தொருசார், தோன்றவா யில்வேன் முருகனைப் பெறுவான் ரேய்தவம் புரிந்தன னெடுநாள். (உ)

இத்தகை நெறிசால் கவுணியர் தலைவ னியறவம் புரியுநா ளாகாதி
முத்தன துணர்ந்து மூவிரு கமல முகவனே நோக்கிமண் ணிடைநம்
பத்தரை மறையைப் பனுவலி யிகழும் படிறரை வல்லம ணரைவெம்
புத்தரைத் தடிந்து சைவவை திகவெண் பூதிசா தனமுறை நாட்டி. (ங)

தலந்தொழப் பதினு முயிரம் பதிகத் தண்டமிழ் மாலிகை சாத் தும், பெலங்கொள்கா ரணமுண் டாதலி னுலகிற் பிறந்திவண் வரு கென மகிழ்கூர்ந், திலங்குநீர் வேணி யண்ணலாங் கருவி யெண்ணி ரண் டாயிரங் கணத்தை, நலங்கிள ரடிய ராகவென் றேவ நாமவேன் முருகனு நயந்தே. (சு)

இன்னண மிழைத்திங் கெய்துவ னெனனு மிறைதிரு வுளமகிழ் பூப்பக், கன்னலங் கிளவிக் கவுரியுண் மகிழ்ந்து களிவர வுச்சிமோந் திறைவன், சொன்னவா றுதித்த தலத்தியான் போந்து துணைமுலை யமுதளிக் குவெனென், றுன்னருங் களியால் விடுப்பவே லரசு முயர் கணத் தலைவரை நோக்கா. (ஙு)

ஆதியங் கடவு ளருள்வழி பதினு முயிர வீருநீர் சூழ்ந்த, மேதி னித் தலங்க டொறுமவ தரித்து மேவுமென் றேவிவெண் கயிலைப், பூதல மதனிற் காழிமா நகரிற் புண்டரீ கன்றடத் தொருசார், மாதவம் புரிவோன் முன்னினங் கதிர்போன் மதலையாய் வந்தனன் கந்தன். (சு)

நீங்கருந் தவத்தோன் மகவுகண் டுவந்து நிரப்பினன் கடவுண்மா மணிபெற், றேங்கின னென்ன வியப்பமீ தூர வுயர்வட மீனன கற்பின், மாங்குயிற் கிளவிப் பகவதி யெனும்பேர் மனைவிபா லெடுத் தினி தளிப்பப், பூங்குழல் களிகூர்ந் துச்சிமோந் தினிய புதல்வனைக் கொடுமனை புகுந்தாள். (எ)

பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்து பல்லுயிர் புரக்குமோர் குடிலைத், தோணியா ளுடையான் மேனியஞ் சுடராய்த் துலங்கவந் துதித்தமா மகற்குப், பேணிய திருநா ளையிரண் டினுஞ்செய் பெருங் கட ஞற்றிநீ ணிலந்து, மாணியல் பருவந் தொறுமழ கதிர்போல் வளர் ந்துமூ வாண்டென வருநாள். (அ)

குலப்பெருந் தாதை மலர்ப்பெருங் கிழவன் குளிர்தடம் படிகு வான் செலுங்கால், தலத்துற மழலைக் கிண்கிணி மிழற்றுந் தாள்கொடு நடந்துறு மகவை, மலர்க்கணல் வெகுண்டு முடன்வரக் கொடுபோய் மணித்தடங் கரையினி னிறுவிப், புலப்பகை யெறிந்தோன் புனற்படிந் தாடப் புகுதலுங் குமுதவாய்ப் புதல்வன். (கூ)

இளம்பசி கூர்ந்தா ரெனவுள முருகி யிரங்கலும் வரம்பிலா மறை நூல், அளந்தறி யாதா னணங்கொடு விடைமே லாங்கெழுந் தருளினின் மகற்கு, விளங்கிழாய் முலைப்பா லருளெனக் கனக வில்லுமிழ் வள்ள மேன் ஞான, வளங்கொள்பா லருத்தி மலர்க்கணீர் துடைத்தாண் மலர் தலை யுலகெலா மீன்றுள். (கo)

துடைத்தலு ஞான போனக முண்ட தோன்றலா ரான்றபல் கலை கள், இடைப்புணர் ஞானந் தோய்ந்துதோய் வின்றி யெவ்வுயிர்க் கண் ணுமோர் நிலையே, படைத்தளித் தழிக்கு நிறைபரம் பொருளுட் படரு மெய்ஞ் ஞானமு மாங்கே, கிடைத்தன சொருதன் றுதையு மாங்கே கிட்டினர் சிறிதுளம் வெகுண்டு. (கக)

யார்கொலோ விதுபா லளித்தன ரெனலு மின்றளிர் மணிவிரற் சுட்டிச், சீர்செய்தோ டுடைய செவியினென் றெடுத்துச் செங்கண்வெள் ளேற்றினி லிவர்ந்த, ஓர்பொருட் கடையா ளம்பல வழுத்தி யொழிந்த பே ரருளுரைத் திவனே, ஏர்பெறு மிதுவே பொருளெனக் காட்டி யீர்ந்தமிழ்ப் பதிகமொன் றிசைத்தார். (கஉ)

பதிகமூ மிமையோர் பொழிமலர் மழையும் பஞ்சதுந் துபியொலி யதிர்ப்பும், மதிபுனை வரத னுமையொடும் போந்த வண்ணமுந் தந்தை கண் டிரங்க, எதிரில்பொற் றேணி யிருமுது சுரவ ரிணையடி போய்ப் பணிந் தெண்ணில், குதுகுதுப் பொடுத்தன் றிருமனை புகுந்தார் குல மறை தமிழினில் வடித்தார். (கங)

துவறெறி கனிவாய் கழைபொரு தடந்தோட் சுந்தரி யளித்த மெய்ஞ் ஞான; நவையறு நீம்பா லருந்திய வாற்றன் ஞானசம் பந்தரா

னவர்தாம், புவிபுகழ்ந் தெடுப்ப வணியசோ லக்காப் புனிதன்மேல் மடையில்வா ளாகளென், றுவமைதீர் பதிகம் புகன்றுகைம் மலரா லொத்தினர் முத்தமிழ் விரகர். (கச)

ஒத்தியோ துதலு மைந்தெழுத் தமைந்த வொளிசெய்பொற் றூள மெய் யருளால், கைத்தலம் பெறலு முமையொலி கொடுப்பக் கனிந்து பண் பாடுபு காழி, முத்தன்மேற் பூவார் கொன்றையென் றலர்சொன் முருகவிர் மாலைசெய் துயிர்த்தாய், உத்தம நகராந் திருநனி பள்ளி யுடன்வருந் தாதையோ டிறைஞ்சி. (கரு)

காரைகள் கூகை யென்றுமெய் யாணைக் காட்டிய பதிகமங் கிசை த்து, நாரைபாய் பழனத் தலைசயம் பேரூர் நற்றிரு வலம்புரம் வளையூர், தேரைவாய்ப் புனல்சூழ் பல்லவ னீச மிவைதொறுஞ் சுவைத்தமி ழேத்திப், பாரையாண் டளிப்பான் மண்புகா ரென்ற பாடல்சாய்க் காட்டினிற் போற்றி. (கசு)

வேதவெண் காடு பணிந்துகண் காட்டு நுதலெனுந் திருமொழி விளம்பி, ஓதநீண் முல்லை வாயில்வண் குருகா வூர்மயேந் திரப்பள்ளி யோதி, நாதனுன் மறைசூழ் காழியம் பதிக்க ணண்ணுநாட் டிவ்வுயாழ்ப் பாணர், காதல்சேர் பன்னி யுடன்வர வவரைக் களித்தனர் கவுணியர் திலகர். (கள)

புக்கிரு வோருங் கீதயா ழகத்துப் புகன்றதண் டமிழிசை போற்ற, மைக்கரு மிடற்றுத் தோணிநா யகன்றுண் மன்னருள் பூண்டு பொன் னெயில்சூழ், திக்குற வளைக்குந் தில்லைமன் றிறைஞ்சத் தெள் ளலைச் சுருட்டுகொள் ளிடநீர், அக்கரை நெறிக்கொண் டங்ஙக ரடைந்தா ரருந்தமிழ்ப் பொழிமுகி லனையார். (கஅ)

மன்றுறை மூவா யிரவருங் களிப்ப மாதுமை காணநா தாந்தத், தொன்றுமா நந்த நாடகம் பரவி யுவந்துகற் றுங்கெரி யோம்பி, என்றுற வாழ்த்தி வேட்களம் பாடி யியல்கழிப் பாலியும் பழிச்சிச், சென்றுபா ணருக்குத் தில்லையந் தணரைத் தெரிக்தனர் முழுதிலுந் தெரிந்தார். (ககூ)

பின்னருங் கனக மன்றுடை யான்மேற் பெட்புற வாடினுய் நறு நெய், என்னியற் பாடி நிவாக்கரை யோடு மேழிசைச் சுருதியாழ்ப் பாணர், முன்னுரை யெருக்கத் தம்புலி யோரை மொழிந்துபற் பலதலம் பணிந்து, கொன்னெடும் புரிசை முதுகிரி யணைந்தார் கொழுந்திலை வயிரமுற் றனையார். (உ0)

தேங்குநீர் வேணிக் குன்றவா ணருக்குந் திருவிருக் குக்குறள் சாத்தி, வாங்குதுங் காணை மாடமும் புகழ்ந்து மாறனூர் வந்தபா லகர் தாழ், பூங்கழல் வருந்தா தாரவெண் சிவிகை புனைமணிக் கவிகைபொற்

சின்னம், ஆங்கவை யளித்தா ரரத்துறைக் கெந்தை யீசனென் றுய்தமி
முணிந்தார். (உக)

மிளிர்சிவி கையிற்போந் தரத்துறை பழுவூர் விசயமங் கைப்பதி
வைகா, நளிர்புனற் சேய்ஞ லூர்திருப் பனந்தா ணண்ணுமோ மாம்புலி
யூர்வாள், கொளிநகர் கடம்பூர் நாரையூர் மிக்கோர் கொள்கருப் பறியலூ
ரேத்தித், துளிமுகிற் சோலைக் கழுமல மணைந்தார் தூரியநீங் கியபொரு
ளணைந்தார். (உஉ)

தேவியிற் றோணி யிறைவனைப் பரவித் திருமணி புகுந்துபா
ணரைப்பாங், கேவியன் புடைத்தாய் நீற்றணி பேணி யிலங்குமுன்
நூன்மணங் கண்டு, மேவுபன் மறையு மந்திரப் பரப்பும் விதிமுறை
புகன்றுவே தியருக், கோவிலங் தியுண்மந் திரமெனும் பனுவ லோதிஞ
ரோதுமுன் னுணர்ந்தார். (உங)

அன்னநா ளடுத்த நாவினுக் கரசோ டளவளா யாங்கவ ரகல [ப்பு
இன்மொழி மாற்று மாலைமாற் றெழுகூற் றிருக்கையீ ரடியின்மேல் வை
மன்மடக் கேக பாதநா லடிமேல் வைப்பிருக் குக்குற ளிராகம்
பன்னுசக் கரமாற் றுதிக ளோதிப் பாணர்பண் ணிசைப்பவை கியநாள்.

ஆரிலைச் சூலத் தாரழ லாடி யருந்தலம் பலதொழ வருளால்,
தேரியற் றுறை யுடன்வரத் தரளச் சிவிகைபொற் கவிகைமுன் னிழற்
றப், பேரியற் பீலி பிறங்கொலி யார்ப்பப் பெருந்திரைப் பொன்னி
யின் வடபால், ஏரிய வடியார் குழுவொடு மெழுந்தா ரிறையுருக் காட்டு
மா றெழுந்தார். (உரு)

பொடிப்புயன் வேளூர் நின்றியூர் நீடூர் போற்றுபுன் கூரொடு மண்
ணிப், படிக்கரை கொறுக்கை யன்னியூ ருயர்பந் தணைநல்லூர் திருமணஞ்
சேரி, கடிப்பொழி லெதிர்கொள் பாடிதொல் வேள்விக் குடிதிருக் கோ
டிகாக் கஞ்சை, எடுத்தமாந் துறைமங் கலக்குடி வியலூ ரிறைஞ்சிவண்
டமிழ்தொடுத் திசைத்தார். (உசு)

மேலது தேவன் குடியினின் மருந்து வேண்டிலென் றோணியின்
னம்பர், பாலலோ சனன்மே லிடைமடக் கிசைத்துப் பஃறலம் பணி
ந்துவெண் களிற்றுத், தோலுடை யொருவன் வடகுரங் காடு துறை
பராய் வழுத்திவெவ் வேறு, சீலமார் தலமும் பழனமு மேத்தித் திரு
வையா றணைந்தனர் செல்வர். (உள)

தலமதிற் புலனைந் தெனுந்தமிழ் கோடல் கோங்கமென் றொரு
தமிழ் சாற்றி, அலர்பெரும் புலியூ ரையனெய்த் தான மணிமழ பாடி
கண் டவ்வூர், மலிவிலிக் கங்கை யாரழ லென்னு வாழ்த்துபு வைகியக்
காலூர்த், தொலைவிலிக் கிறைஞ்சி யயல்வட கரைமாந் துறையணைந்
தார்மறைத் தலைமையார். (உஅ)

பணிவளர் புயத்தர் னன்பிலா லந்தண் டுறைபராய்ப் பச்சிலாச் சிராமத், திணையுறு கொல்லி மழவன்மா மகட னிடரறிந் தெம்பிரான் றிருமூன், மணிவளர் கண்டர் மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பென், றணிவளைக் கிரங்கி முயலகற் றீர்த்தா ரருளினுற் புவியிடர் தீர்த்தார். (உகூ)

அயற்பல தலம்பைஞ் ஞீலியீங் கோயி லங்குறீ இக் கொங்கிலுள் ளனவாம், உயற்றரும் பொன்னித் தென்கரைச் செங்குன் றூர்நணுப் பதிபணிந் துறைநாள், வியக்குமவ் வினைக்கிவ் வினையெனப் பனிநோய் வீட்டிநீள் கொடுமுடி யேத்தி, வயப்பதி வெஞ்ச மாக்கூடல் கருவூர் மாணிக்க மலைபராய்த் துறையே. (ஈ0)

துரிசறு மாலந் துறையொடு திருச்செந் துறைகொள்கற் குடிசிராப் பள்ளி, சரியிலா னைக்காத் திருமயேந் திரம்பொற் றவத்துறை பாற் றுறை யெறும்பீச், சுரநெடுங் களங்காட் டுப்பள்ளி யாலம் பொழிலொடு தலங்குபூந் துருத்தித், திருமலி கண்டி யூர்சோற்றுத் துறைமெய்த் திருவேதிக் குடிவெண்ணிப் பதியே. (ஈக)

பிறபல தலங்கள் சக்கரப் பள்ளி பிள்ளைமங் கைப்பதி யாலந் துறையொடு திருச்சே லூர்திருப் பாலைத் துறைநல்லூர் பற்பல வேத்தி இறைகரு காவூ ரினிலத் தர்வண்ண மென்றிசைத் தவளிவ ணல்லூர் உறுதிருப் பருதி நியமமென் பூவ னூரொடா வூர்நல்லூ ரேத்தி. (ஈஉ)

திருவலஞ் சுழிமேற் பளியொடு சத்தி முத்தமு முக்தமிழ் சேர்த்தி, இருமுது வேனிற் பருவநா ளடுத்த வின்னல்கண் டண்ணல்பட் டீசர், பொருவெயி றணித்து விரிநிலா வெறிப்பப் பூதரா லுய்த்தமுத் திழைத்த, அருமணிப் பந்தர் பெற்றுமே லவ்வூர்க் கருந்தமி ழுலங்கல் செய் தணிந்தார். (ஈஈ)

வேறு.

பின்னர்வட தளியொடிரும் பூளை யரதைப் பெரும்பாழி செறை நாலூர் குடவா சற்சீர், அன்னநறை யூர்புத்தூர் சிவபு ரத்தோ டாதிகுட மூக்குக்கீழ்க் கோட்ட மெய்தி, நன்னரினெம் மிறையேயென் றுறுகா சோண நாகீசம் வாழ்த்தியிடை மருதூர் நண்ணிப், பன்னருமோ டேகலனென் றிசைத்துத் தானம் பலபணிந்து குரங்காடு துறையும் போற்றி. (ஈச)

ஆவடுதண் டுறையினிட ரினுமென் பாட லணிந்தமல னருளிய பொற் கிழியை வேள்வி, மாவினைத்தந் தையர்க்குதவித் திருக்கோ ழம்பம் வைகன்மா டக்கோயி னல்லஞ் செம்பொற், றாவியழுந் தூர்பலகண் டிறைஞ்சி வாழ்த்தித் துருத்திநகர் பரவிவரைத் தலையென் றோதி, மூவனகர் திருமயிலைச் செம்பொற் பள்ளி முளைத்தவிள நகர்கண்டார் முழுதுங் கண்டார். (ஈடு)

குளிர்பதிய லூரொடுமற் றுளவும் வேட்டக் குடியுமடித் திசை மாலே தொடுத்துச் சோலே, வளர்தரும புரம்பணிந்தி யாழ்முரி மாதர் மடப்பிடியென் றெடுத்தோதி நள்ளா றெய்தி, மிளிர்போக மார்த்த வெனப் புகழ்ந்து தானம் வேறுமுறை வணங்கியுயர் சாத்த மங்கை, யளி நீல நக்கர்மனே யமுதுங்கொண்டா ரன்னதிரு நிலையழகி யமுத மூண்டார். (கூசு)

கிளக்குமது தலத்தொடுநா கைக்கா ரோணங் கீழ்வேளூ ரொடு பிறவும் பணிந்து செங்நெல், வளத்தடஞ்சூழ் மருகலிலோர் வணிக ஞவி வாளரவம் பருகவவன் மணக்கும் பேதை, துளக்கெரியின் மெழுகென வுள் ளுருகி யாவி சோர்ந்தலறு மோதைசெவித் துணையி னேறத், தளர்ச்சிதரு மோவுடையா யிவளுக் கென்று சாத்தியளித் தாருயிரைத் தாளம் பெற்றார். (கூள)

வடிநெடுங்கட் புகார்வணிகன் மகட்கு மாவி வணிகனுக்கு மண முடித்துத் திருச்செங் காட்டங், குடிபரவி யங்கமும்வே தமுமென் றோதிக் குளிர்புகலூர் வர்த்தமா னீசம் போற்றி, அடிமுறுக வுர்மடம் புக் குழித்தென் னூரு ரரசுவர வறிந்தவ்வூ ரணைகு வார்விற், குடி பணிந்து சாநாளென் றோதி யாரூ ரடைவோமென் றிசைத்திருக்குக் குறளுஞ் சாத்தி. (கூஅ)

பதியதனி லந்தமா யுலகென் றோதிப் பவனமாச் சோடையா யென்று மேத்தி, மதிமுடியா னயற்றலங்கள் பணியூர் சோலே வலிவலங் கோ லிலிவாழ்த்திப் புகலூர் நண்ணி, முதியகுறி கலந்தவிசை யெனு நூற் சாத்தி முருகனுர் சிறுத்தொண்டர் நீல நக்கர், விதியோடவர் தமக் கருள்செய் தரசோ டாங்கண் மேவினு ரயல்பரவ வேத வாயார். (கூக)

புடைவயல்சூ ழும்பரமா காளம் புல்கு பொன்னிறமென் றடைந்து கட ஞரிற் சார்ந்து, சடையுடையா யெனவிளம்பி மயானம் போற்றித் தகுகலய ஞரமுதுண் டாக்கூ செய்தி, விடையுடையான் மீயச்சூர்பாம் புரத்திற் சார்ந்து வீழிமிழ லையிலரசோ டிறைஞ்சி யாங்கண், உடையரையா சொடுசடையார் புனலென் றோதி யொருதிலதை பேணுபெருந் துறையு மெய்தி. (சஅ)

வாகீச சொடுமிழலே யெய்திப் பன்னுள் வைகியநாட் சிரபுரமா சனங்க ணண்ணப், பாகூரின் னமுதூட்டிக் கனவிற் கண்ட படிதோணி யழகனையத் தளியிற் கண்டு, மாகாதன் மைம்மருவூங் குழலென்றோதி வறந்தசிறு விலேநாளவ் வள்ள லீந்த, சேகார்பொற் காசுபெற்று வாசி தீரச் செந்தமிழ்செய் தார்பசிநோய் தீரச் செய்தார். (சக)

அவ்வழிவாஞ் சியமாலங் காடே வேளூ ரணிசாத்தங் குடியொடு தென் கரவீ ரஞ்சேர், செய்விளமர் பணிந்துதிரு வாரூ ராரூர்த் திருக் காரூ யிற்றேவூர் திருநெல் லிக்கா, எவ்வமிகைச் சினந்திருத்தெங் கூர்

கொள் ளிக்கா டிசைகோட்டூர் வெண்டுறைதண் டலையுஞ் சோலை, மவ்வல் கமழ் திருக்களரு மரசோ டெய்தி வாழ்த்தினர் திருவருட்பான் மணத்த வாயால். (சஉ)

மறைவனத்தின் மறையடைத்த மணிக்க பாடம் வாகீசர் திறக் கும்வழி வகுத்து மற்றை, இறைவன்மேற் சதுரமறை யென்று பாடி யிணைக்கதவ மடைத்தருளி வாய்மூ ரீசர், நிறைகனவு தெளிந்தரசு செல்லச் சென்று நிலவுதளி ரிளவெனவோர் பதிகஞ் சாற்றிக், கறை மிடற்றர் மறைக்காட்டி லணைந்தார் யார்க்குங் காணரைக் கண்டழுத கனிவாய் மைந்தர். (சங)

ஆயமறைக் காட்டினில்வீற் றிருக்கு மங்கா ளணிபாண்டி காடனை த்து மமண்பேய் கொண்டு, நோயடையக் கூன்வழுதி மருளக் கண்டு நுடங்கிடைமங் கையர்க்கரசி யாருந் தேர்ச்சித், தூயவினைக் குலச் சிறையு மெங்கு டுற்ற துன்பமறுத் தின்பமிகச் சைவ மோங்கத், தாய னையா யெழுந்தருள்க வென்று தீட்டித் தமிழ்விரக ரிணையடிக்கீழ்ச் சார விட்டார். (சச)

விட்டதுகொண் டெழுமமயத் தரசு பொல்லா விகடமுடைப் பறி தலைய ரிழைக்கு மாயை, மட்டலகன் ஞருமல வெனுங்கா னன்மை வளங்கெழுவே யுறுதோளி பங்க னென்றே, இட்டதமி ழியம்பிமுத்தின் சிவிகை மேற்கொண் டிலகுமணிக் குடைநிழற்ற வடியா ரீண்டத், தொட்டமணிச் சின்னவொலி போர்ப்ப முத்தின் சுடர்மணித்தண் பந் தனிழ றுலங்கச் சென்றார். (சரு)

வருகோடிக் குழகர்கடிக் குளமி டும்பா வனமுசாத் தானமொடு கொடுங்குன் றேத்தித், திருவால வாயுறுங்கா லமைச்சர் போந்து சென் னிமிசை முகிழ்த்தமலர்க் கரத்த ராகி, இருபாதம் வணங்கலுதும் மரசி யாருக் கின்பமோ வெனவடிக ளருளா லின்பம் ஒருவாதென் றகமகிழ் வுற் றெழுவார்க் கன்ப ருதுக்காணு மாலவா யென்னத் தாழ்ந்தார். (சசு)

அதுகணத்தவ் விருவர்பெய ராலவாயா வதுமிதுவே யெனும் பதிகத் தமையப் போற்றி, மதுரைமறு கடைந்திருக்குக் குறளுஞ் சாற்றி மடத்திலெழுந் தருளிமதி யமைச்சர் செய்த, விதமலிசீ ருவந் திருப்ப ஞாயி ருதி வெங்கோளு நல்லவெனப் பகர்ந்தார் வெல்ல, எதி ரிருள்செய் தமணிருளை யழிப்பான் போல விரவியொளித் தனன்மட வோ ரிணைய செய்வார். (சள)

பன்னகமென் குருளையிடி யெலிகேட் டென்னப் பரசமய கோளரி யார் வந்தா ரென்று, சின்னவொலி திசைபோர்ப்பத் தலைகள் கீறிச் செவிதகர்ந்து தென்னவர்கோ னேடு மெண்ணி, மன்னருமந் திரத்தழல் விட் டேறு தாக வயங்குசுடு தழல்கொடுபோய் மடத்தி லுய்ப்பப்,

பன்னுமடி யவர்க்குறுமோ சொக்கே யித்தீ பையவே சென்றுபாண்
டியற்கா கென்றூர். (சஅ)

என்றலுமீ னவனுடலி லத்தீமேவ விதுவெதுப்பென் றமணர்கண்
மந் திரங்க ளாலும், துன்றுபிரம் பாலுமயிற் பீலி யாலுந் தொழுது
துடைத் திடநெய்வார் சுடர்போற் பொங்கிக், கன்றுபிரம் பெரிந்துகர
மெரிந்து பீலி கரிந்துசுடு நாறியயற் கண்ணுந் தாவிச், சென்றதருட்
பிள்ளை சொல்லால் வந்த தீயைத் தீர்க்கவந்த தெய்வதமுந் தீர்ந்த
தன்றே. (சக)

உலகிருளை யொழிக்குந்தா ணெழியப் பாய லுடையிருளை யொழிப்
பார்கண் டுவப்பான் போலச், சலதிமுகட் டினில்வெய்யோ னுதிப்பத்
தேமாந் தளிரழலிட் டெனவழுதி துயருங்காலை, அலைபொழிகண் ணாசி
யரா லமைச்ச செய்தி யருந்தமிழ்வித் தகர்க்குரைப்ப வஞ்சீர் வெப்பால்,
மலைபிணியு மமண்பிணியுந் தொலையக் காட்டு மாவுரியென் றிறைகோயில்
வாழ்த்திப் போந்தார். (நo)

போந்தளவி லரகரவென் றெலிவிண் போர்ப்பப் புதுநிலவுக்
குடைநிழற்றச் சின்ன மார்ப்ப, வேந்தனகம் புகுந்தரசன் முடிக்கட்
பீட மேலெய்தி வல்லமணக் குழுவை யஞ்சும், பூந்தொடிமுன் மானி
னேர் விழியென் றெதிப் புரவலர்க்கும் புனைபெயரீ ராறு பூண்டு,
வாய்ந்தகழு மலமெம்மூ ரெனலு மன்னன் மனமமணர் மயக்கினவிட்
டொரீஇய தன்றே. (நக)

மொழிவழுதிப் பிள்ளையார் முகமும் பொல்லா மூகர்முக மும்பார்த்
தென் னெய்தீர்ப் பார்க்கே, வழியடியே னெனலுமிடப் புறங்கொண்
டனர் மாற்றியிட மந்திர மாவதுநீ றென்றே, கழுமலக்கோன் வலப்
புறங்கொண் டின்ன நீர்ப்பக் காணருமுத் தியுநரகு மழுது நஞ்சும்,
தழுவினபோல் வலங்குளிர்செய் திடன்தீ மூளச் சமணினத்தை வெகுண்
டொழிந்தான் றழிழ்சேர் நாடன். (நஉ)

இடமருங்குந் தமிழ்விரக ரருளா ணெய்தீர்ந் திறைமகனு மடிமை
புக வமண ரெங்கட், கடவுள்வலி நுங்கடவுள் வலியுந் தீட்டிக் கனலி
லிட்டுத் தேர்துமெனக் காழி வேந்தர், மடலவிழ்புத் தகம்பகுத்து
போக மார்த்த வண்பதிக மேந்தி நள்ளாற் றிறைமே லார்வம், உடைய
தளி ரிளவளரென் றெருபா வேத்தி யொள்ளெரியி னடுவணிட்டா
ரொளிநீ றிட்டார். (நங)

இட்டவே டொளிபசிய தாகப் பொல்லா வேடரிவண் டுகளாகத்
தேரார் பின்னும், பட்டதிரை யாற்றினிலிட் டறிதும் யாதும் பழுது
படிற் கழுமுனையிற் படர்வோ மென்ன, ஒட்டலுமீ னவனெடுநீள்
வைகைப் பேரார் றுறுகரையி னின்றமண ரோலை கீழ்பால், விட்ட

கலப் பிள்ளையார் வாழ்க வென்று விடுமொழிப்பா சுரமெதிர்நீர் விரைந்த தன்றே. (நுச)

அன்றுபுன லெதிரேறு மேடு கொள்வா னமைச்சர்பரி யேறிவண்பா சுரஞ்செல் லாறே, சென்றுழியா யிடைவன்னி யெனும்பே ரேற்றிச் சிவஞானப் பிள்ளையரு ளேறப் பாட, நின்றதனி யமைச்சர்கொண்டு கரையி லேற நிருபன்னியப் பேறவமண் கழுவி லேறக், கன்றுதலில் கன்னிகா டெல்லா நீற்றுக் காப்பொடுமைத் தெழுத்தேதறிக் கலந்த வன்றே. (நுஙு)

கலந்தவழி முறைநிறுத்திப் பொற்கை பூண்ட கவுரியர்பி னிக் காளைக் காழிச் செல்வர், நலம்புனைந்து முழுதிலும்பொன் ஞெ னென்று ஞாலம்வியக் திடப்பாண்டி யரசி யாரோ, டிலங்குமதி யமைச்சனெடு வழுதி போற்ற விறைவனமே நினைப்பதே நியம மென்றூர், அலங்கல் புனைந் துழிகாழிக் தந்தை யார்தா மணைவுறக்கண் டகமகிழ்ந்தா ரமணை வென்றூர். (நுசு)

முற்றறிவிற் பருவத்தே யாண்ட தோணி முதல்வனையு முதல்வி யையு நினைந்துள் ளுறி, மற்றவர்மேன் மண்ணினல்ல வணமென் றேறி வழிபடுமூ வரும்போதச் சிவிகை மேற்கொண், டுற்றபல பதிபரங்குன் றுப்ப னூர்புத் தூரொடுபூ வணஞ்சுழிய லுயர்குற் றூலம், அற்றமில் நெல் வேலிபுடை மருதூ ரேத்தி யணியிரா மீச்சுரம்போற் றிசைத்துக் கிழ்பால். (நுள)

கோணமா மலிகேதீச் சரநின் றேறத்தி யாடானை புனவாயில் கூறித் தோச்சி, வாணன்மணி மேற்குடிகண் டொருமூ வர்க்கும் வழியருளிக் களர்ப்பாதா ளீசம் போற்றிப், பேணுமுள்ளிப் பெருந்துறியிற் கொள்ளம் பூதூர்ப் பெருமான்மேற் கோட்டமே கமழு மென்றூர், தோணியா ரருள்படைத்தோ ரோடமேறிச் சொல்லலங்கல் புனைந்துதிரு நள்ளா றெய்தி. (நுஅ)

பாடகமெல் லடிபாடி வாதிற்காத்த பரிசோதித் தெளிச்சேரி யிறைஞ்சிப் புத்தர்க், காடிடிவீழ்ந் தருளியோழிந் தவரை வாதி லடிப்ப டுத்திக் கடவூர்புக் கப்பர் வாழ்க்கை, தேடியுயர் பூந்துருத்தி புகுமு னன்னர் சென்றெதிரே தெரிவிலராய்த் தெரிந்து போற்றிக், கூடு மணிச் சிவிகைபுறம் பரித்தா ரென்னக் குதித்தவரைப் பணிந்தவ்வூர்க் கொடுபோய்ப் போற்றி. (நுக)

நாவரையர் மடத்தமுது விரும்பிக் காஞ்சி நகர்முதலங் கவர்பணிந்த நலம்பா ராட்டிப், பாவியமண் குறும்பெறிந்த வாசை கூறிப் பதிபலகை தொழவேவி நளிநீர்ப் பொன்னி, மாவடபா னெய்த்தானந் திருவை யாறு வளர்பழனம் பணிந்துகழு மலம்புக் காதி, தேவன்மிசை யுற்று மையாம் பதிகம் பாடித் தில்லைநகர் பணிந்துதிருத் தினையூர் போற்றி. ()

மாணிகுழி கன்னிவனம் வடுகூ ராதி வக்கரையோ டிரும்பைமா காளமேத்தி, ஆணமலி யதிகைகுண்டை குறளா மாத்தூ ரதிற்குன்ற வார்சிலேயா மலங்கல் சாத்தி, நீண்மதிள்சூழ் கோவலறை யணிநல் லூர் பின் னிலவண்ணு மலபணிந்தவ் வரையி லெம்மான், தாண்மலர்க்குண் ணுமலபூ வாரென் றுய்ந்து சாற்றினு ரணியதிரு வோத்தூர் சார்ந் தார். (சுக)

மற்றதிலாண் பனைகனியக் கனிவாய் பூத்து மாகறலுங் குரங்கணி முட் டமும்வந் தேத்தி, எற்றுபுனற் காஞ்சியினின் மறையா னென்றும் யமகமொடு மின்னிருக்குக் குறளும் போற்றி, அற்றமில்கா மக்கோட்ட நெறிக்கா சைக்கா டனேகதங்கா பதந்திருமேற் றளியுஞ் சூழ்ந்து, சுற்றியபா லாற்றெடுபோய்த் திருமாற் பேறு துதிவல்ல மிலம்பயங் கோட் டூர்கண் டேத்தி. (சுஉ)

விற்கோலந் தற்கோல மூற லாதி விரிபழைய னூர்பரவி யாலங் காடர், சொற்கோலக் கனவுணர்ந்து பதிகமாலை துஞ்சவரு வாரெனுஞ் சொற் றெடுத்துச் சூட்டி, நற்கோலப் பதியதினி லிருப்பார் வாய்மை நழுவாமை நயந்திசைத்துப் பாரூ ரெய்தி, எற்கோலஞ் சிந்தையுடை யாரென் றேத்தி யேதமில்வெண் பாக்கநக ரினிது வாழ்த்தி. (சுங)

வரத்துயர்கா ளத்திவரை பணிந்தவ் வூர்க்கு வானவர்க ளெனு மாலை வகுத்துச் சோதி, பரப்பியகே தாரங்கோ கரணந் தெய்வப் பருப்பதமிந் திரநீலப் பருப்ப தாதி, இருக்குமலை யதிற்பரவி யெந்தை யாரென் னிசைமாலை புனைந்துவேற் காடு மேத்தி, உருக்கமொடு வலி தாயம் பரவி யொற்றி யூர்க்கண்விடை யவனெனும்பா வுரைத்து வாழ் நாள். (சுச)

தேமருபூம் பொழின்மயிலாப் பூரி னுய்கன் சிவநேச னுர்மகளேழ் பருவஞ் செல்ல, மாமுனிவா ளெயிற்றரவ முருக்க வாவி மிரிந்தவுட லெற்புமணித் தசும்பை யெம்மான், பூமணிமுன் றிலிற்கொணர்வித் தோர்மட் டிட்ட புன்னையென வொருபதிகம் புனைந்து மாதை, ஏமுறுமா றெழுவித்து வான்மி யூர்புக் கிறைஞ்சினு ரெவ்வுலகு மிறைஞ்ச வீங் தார். (சுடு)

வேறு.

கண்ணுரும் விடைச்சுரம்போக் திவர்வண்ணத் தமிழ்பாடிக் கழுக் குன் றெய்தி, எண்ணுரு நிறைகாதல் செய்கோயில் கழுக்குன்றே யெனுநூற் சாத்திப், பண்ணுரச் சிறுபாக்கத் தாட்சிமொழிந் தரசிலியும் பனைங்காட் டூரும், தண்ணுரன் பொடும்வணங்கித் திலலைகர் மீண்ட ணைந்தார் தமிழ்ப்பா லுண்டார். (சுசு)

அக்கனக மணிமன்றி லரும்நுந்தை யடிதொழுதாண் டமரு மங் நாள், புக்கடருஞ் சினைகடொறும் பைங்கிளிசெந் தமிழ்தெரிப்பப் பூவை

கேட்கும், மிக்கபொழில் புடையுடுத்த காழிபுரத் தந்தையார் விருப்பி னேற்பத், தக்கமனத் தொருதோணித் தாதையா ரடிபணிவார் சண்பை வந்தார். (சுஎ)

மாநகர மணித்தாக வெய்துழிவண் டார்குழலென் மாலை சாத் தித், தேனகுதார் நரையிதழிப் பெரியநா யகன்றுணைத்தாள் சென்னி சேர்த்திப், பானல்வயற் காழிநகர் சேர்மினென வொருபதிகம் பரவிச் செம்பொன், வானகுமா ளிகையணைந்தார் நீலநக்கர் முருகர்புக மருவி வாழ்நாள். (சுஅ)

பழமறைதே ரந்தணருஞ் சிவபாத விரதையரும் பலரும் வேள் விக், கிழமைதனக் குரியமணக் கிழமைவினை முடித்துமெனக் கிளக்கு நல்லூர், அழல்வினைதேர் நம்பாண்டா ரருங்குலத்து மகட்பேசி யமலன் காழி, மழவிடையான் றிருமணியைச் சிவிகைமிசைக் கொடுபோந்தார் மறைக ளார்ப்ப. (சுக)

நிறைக்கோல மதிகண்ட நெடுங்கடல்போ லியங்குளிர நிகருஞ் சைவத், துறைக்கோலந் தலையெடுப்ப வழகினுக்கோ ரழகுசெயத் தொடங்கி ஞற்போல், சிறைக்கோலத் தும்பிபடர் நறைக்கோலக் கொன்றையினர் செவிக்கட் டூஞ்சொல், மறைக்கோலம் புனைபவரை மணக்கோல மதுபுனைந்தார் மறையோ ரெல்லாம். (எo)

விதிமுறையான் மறைச்சடங்கின் விண்ணவர்பூ மழைபெய்ய விளங்குஞ்சோதி, மதிவதனத் தருள்பொழியச் சின்னவொலி திசை போர்ப்ப மருங்கு போற்றப், பொதிமணிபூஞ் சிவிகையிழிந் தங்கமலத் தாள்பெயர்த்துப் புனைமுத்தாரக், கதிர்மணிப்பந் தரினடந்து கடிமணப் பந் தரினிருந்தார் காழிவேந்தர். (எக)

மங்கலதூ ரியமுழங்க மாதவர்பல் லாண்டிசைப்ப மறைகள் வாழ்த் தப், பொங்குமெரி வலஞ்சுழலப் புண்ணியதெய் வங்களிக்கப் பூமா தோங்க, அங்குளநல் லடியவர்பே ரானந்தக் கடன்மூழ்க வகில மெல் லாம், நங்கள்பெரு மான்மகனார் நம்பாண்டார் மருகரென நலம்பா ராட்ட. (எஉ)

குறுத்தநகை முகத்தினராய்ப் பேருவகை தலைக்கேறக் குலவு நல் லூர், நெறித்தருமப் பெருந்தகையார் நீள்புகலிப் பெருந்தகையார் நீண் ட கையில், கறுத்தகுழல் வெளுத்தநகை சிவத்தவிதழ் பசுத்தகுழைக் கதிர்வே லுண்கண், பொறித்தறுதற் செறித்தவளைப் பூங்கொடியை யாங்களித்தார் புனைநீர்க் கையார். (எங)

ஒருமாதை மூயலகனீத் தொருமாதைத் திருப்புனைவித் துயருங் கூடல், வருமாதை யடிப்படுத்தி வழிமாதை யெழுவித்து வாக்கின் ஞானத், திருமாதைப் புணர்ந்துபெருந் தரைமாதை யிருடைத்தார்

தெண்ணீ ரோடு, தருமாதைக் கைப்பிடித்தார் வரைமாதைப் புணர்ந்தவரீ
தா டணவார் மாதே தா. (எச)

பஞ்சியொளி விஞ்சுமலர்ப் பாட்டளிசெங் கிண்கிணிக்காற் பதுமம்
பூத்த, கிஞ்சுகமென் மடவரலோ டங்கிவலம் வருவாரைக் கிரியை சான்
றோர், அஞ்சொலிவ ளடிமலரை யம்மியில்வைத் தருளுமென வணிசேர்
திங்கள், பிஞ்சுமுடி யரைநல்லூர்ப் பெருமணமென் றதைமறுத்துப்
பெயர்த்துஞ் சொல்வார். (எடு)

ஈதமலன் றிருத்தாளுக் கியற்றுவது முறைமையென வெழுந்து போந்து
நாதனைநல் லூரரசை நமச்சிவா யப்பதிக நவிற்ற லோடும்
பூதலமு மீதலமு நீடொளிய வாடெரிகால் பொருப்பா யோங்கி
வேதமுத லளப்பரியான் விளங்கவதி லடியவரை விடுத்தல் செய்தார். ()

இன்னிசையாழ்ப் பாணரொடு நீலநக்கர் சிவபாத விதயர் முந்நூல்
மன்னியதோட் டிருமுருகர் வழியடியா ரெனைப்பலரு மடியாக் கற்பில்
பன்னியரோ டுறுஞானப் பாயொளியிற் புகவேவிப் பனிக்கை தோய்ந்த
கன்னியொடு மதிற்புகுந்தார் கனலோடும் புனலறியுங் கவிதை வல்லார்.

பொறிவாகை மாறனுட லெழிலாகப் பூதியரும் பொருளுண் டாக
நெறிவாய்ந்த வைதிகமுஞ் சைவமும்வீ றுண்டாக நிகரில் காழி [கும்
மறிவார்ந்த கரதலத்தார் மகவானோர் புகுந்தமுத்தி வழியென் றியார்க்
அறிவாகச் சிவலிங்கக் குறியாயிற் றுயிடைமுன் னலங்கு செந்தீ. (எஅ)

வேறு.

இன்ன வாறு நிகழ்ந்ததன்மே லெழிற்சீ காழிப் பதிநாதன்
அன்ன வூர்தி புள்ளூர்தி யாமை யூர்தி யாதியரைத்
துன்ன லோடு மவரெய்தி யுலகே ழீன்ற சிற்றுதரக்
கன்னி பாகத் திருந்தாமைக் கசிந்து பணிந்து முன்னின்றார். (எக)

செம்மைக் கருணைக் கடலமையான் றிருமுன் னின்றோர் தமைநோக்கி
எம்மைத் தலங்க டொறும்பதிகத் தேத்து ஞானக் கவுணியனை
அம்மைப் பொலஞ்செய் விம்பத்தி லாவா கனஞ்செய் தெங்காளும்
மும்மைப் பயன்பெற் றுலகுய்ய முதுபூ சனைநித் தியமியற்றி. (அ0)

நிகழ்சித் திரைபங் குனிமாத நிறையா திரையும் வைகாசிப்
பகர்மூ லத்து மாவணியைப் பசியா மாதச் சதயத்தும்
மகர மதியிற் கதிர்மதிய மருவு நாளு மிதுனமதி
திகழ வருரோ கணியுமென்றேழ் தினத்து நைமித் தியமியற்றி. (அக)

புரையில் கேள்வி யிமையோர்காள் புகல்பங் குனியிற் சதயத்தின்
நிரைசெய் மணிப்பூங் கொடியேற்றி நெடுமான் றலைநா டோர்நடத்தித்
திரைசெய் தீர்த்த மாதிரைநா டிளைத்தா டுதிரென் றருள்செய்ய
வரைவி லமர ஞாண்டுதொறு மகிழ்ந்திவ் வாறு புரிந்தனரால். (அஉ)

ஓது மினைய நல்விழுவுக் குதவுந் திறலோ ருயர்ந்தகதி
மீது புகுவா ரதுபுரியார் வெவ்வாய் நிரயத் திடைபுகுவார்
கோதின் ஞானப் பிள்ளைதனைக் குழைத்துப் பணிந்தோர் மறவிநகர்
போத லறியார் தொழவேண்டிப் போந்து வழிக்கண் மாய்ந்தவரும். ()

வீடு பெறுவா ரிச்சரிதை வின்வி னவரும் படித்தோரு
நீடும் பரம முத்தியெலா நெறியே துய்த்துப் பொறிமணிச்சூட்
டாடு மரவ மசைத்தவன்ரு ளணைவா ரென்ன வருட்சூதன்
நாடு மறைதேர் முனிவரர்க்கு நவின்ற வாறு நவின்றனனால். (அச)

[உங-ஆவது. திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதார வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கஉஅ.)

———:o:———

உச-ஆவது. தீர்த்த மகிமை யுரைத்த வத்தியாயம்.

திங்கண்முடி யணிவேணிச் சிவபெருமா னடித்தொழும்பின் றிறத்தை நாடிப், பங்கமில்சீ ரொளிக்கொளியாய்ப் படர்ந்தகவு ணியப்பெரு மான் பரிசு கேட்டோம், புங்கவவின் னமுந்தீர்த்தந் தனித்தனிசொற் றனிதொகுத்துப் புலப்பா டெய்த, இங்கருளு னெனச்சூத னங்கவருக் குரைத்தமுறை யியம்ப லுற்றும். (க)

ஞாலப்பே ராழிவரை யுலகனைத்து நிலைகுலைய நலிந்து மூழ்கி, மூலப்பே ராழிமொய்த்த கடைநாளின் மலிவாய்ந்த முளரிப் புத்தேள், கோலப்பே ராழியம்புட் பொருப்பரனைப் பணிந்துவரங் கொண்ட தீர்த்தம், ஓலப்பே ராழிவைப்பி லதுபிரம தீர்த்தமென வோங்கிற் றன்றே. (உ)

ஒருமறையோ னீராடிச் சேட்டுலகு தனைப்பயந்தா னுலவாத் தெய்வத், திருமறையோ னெனநின்ரு னெருமறையோ னகன்கரைக்கட் சேர்ந்த வாறே, இருமறைதா லியல்விரித்து வீட்டுலகு தனைப்பயந்தா னெனினித் தீர்த்தம், பெருமறைதா லறிவதல்லாற் பிறிதொருதா லோவறிந்து பேசு தூலே. (ங)

ஓருணர்வா விருமைவினை மும்மலங்க ணற்பிறப்பு மொழிப்பா னங்து
பேருமுமிந் திரியங்க ளாறடக்கி யேழிசையும் பிறங்க வோதி
நீருறுமெண் குணத்தோன்பா னிகழொளியா யாபத்தை நீக்குங் காழிக்
காருறுகண் டனையறிவா ரவரேகண் டறிவாரக் கடவுட் டீர்த்தம். (ச)

மின்மணிநூ புரமலம்பு மிளிரிளங்கா லரமாதர் விமானஞ் சூழ, என்மணிக்கா லினைவருதா தினைக்கவரி காலசைப்ப வேறிச் செல்வார்,

நன்மணிவார் சிறையறுகா லிசைமுரலு மொருகணைக்கா னளினப் புத்
தேள், பன்மணிக்கான் மலர்த்தடத்திற் றவழ்பசுங்கா லஃதுடலிற்
படுங்கான் மாதோ. (ரு)

கூர்த்தவருந் தவப்பன்னு ளிழைத்துமுயர் மதிட்காழிக் குன்றின்
மேய, தீர்த்தனருள் படைத்தெல்லா வலிபடைத்தா னேனுமயன் றிற
மென் னேயோ, வார்த்ததடந் திரைக்கடவுட் டீர்த்தமது படிந்துலகை
யளித்தா னன்ன, பேர்த்தடமா டுநெல்லா மேற்படையா வீட்டுநெறிப்
பெறப்பெற் றூரே. (சு)

வண்டரு நறைமலர்தூஉய் வணங்கினர்பான் மோனமுத்தி வழ
ங்கு மெம்மான், அண்டகோ டிகள்பொதிந்த சிற்றுதரப் பூவையிடத்
தருட்கண் காட்டப், பண்டைநூல் போற்றுதிரு நிலையழகி கண்ண
ருளே பசுக்கள் யாவும், உண்டகமா சகற்றியொளி தருபுனல்போற்
றிருமூனகின் ருளிரு மீதால். (எ)

முத்தலையை யேந்தலினுன் முடிவிலா ரணங்காட்சி முடித்த வாற்
றுன், மெய்த்தவரா டகம்பெறலாற் சுற்றுமலங் கழுதலினுல் விமலந்
தன்னுல், சித்தியருட் கண்பொலியுந் தரத்தாலும் பேரரவந் தரித்த
லானும், இத்தகைய விதிதடந்தான் மத்தமலர்த் தொடைவேணி யீசன்
போலும். (அ)

திரையாடை நிலமடந்தை திருமுகமோ வரிவிழியோ திலக மேயோ
வரையாமங் கலநாணே திருமகட்கு மருமலரோ மணிப்பூண் வைப்போ
புரைதிருமா லுலகின்மே லுலகோவென் னும்பிரம புரியி லிங்கீர்க்
கரைகாணு சேவருளர்மற் றவரன்றே முத்தியெனுங் கரைகா ணுரே. ()

மறைநான்கு வல்லபிரான் பதினறுநான் கோடிரண்டு வகையாங்
கோடி, முறைநான்குந் தருங்கடவுட் டீர்த்தமெலாந் தொகுமிதனின்
முழுகி யண்டத், துறைநான்கு கதியும்வகுத் துறுநான்கு பவத்தினில்
வீழ்ந் தழலா தியார்க்கும், துறைநான்கு மளித்திடுமா றெருநான்கு
கோணமுறத் துலக்கி னுனல். (க0)

வேறு.

கோன்மதி நாளில் வெய்யோன் குலவிய தினத்திற் கங்கை
மாநதி முதலாந் தெய்வ மணிநதி யெனைத்து மீண்டித்
தானதி லுறலா லங்காட் டடமது படிந்தோர் தீர்வார்
ஊனவல் வினையு மாயை யுற்பவ வினையு மாங்கே. (கக)

ஆயமா மதியு வாவி னருந்ததிக் கிறைவ னுதி
தூயநீர்க் கங்கை யாதி சுரபதி யாதி யோகத்
தேயவன் சனக னுதி யெய்துவ ரிதுபுக் காடப்
போயது படிவா ரெய்தாப் பொருளெவை புவன மூன்றில். (கஉ)

மூன்புறு மேடத் தென்றூழ் மூளைத்தகா ளிடையு வாவின்
அன்புறு மிங்நீ ராடி னரும்பவக் சடலி ஞடார்
பின்புமோ ரயனஞ் சேயாற் பேதுறு மடவார் தோயின்
இன்புறு மழலைச் செவ்வா யெழின்மகப் பெறுவ ருண்மை. (ஙஊ)

ஓரிரண் டயன மாண்டி னுதயங்கள் வெதிபா தங்கள்
சேர்தரு தினம்புக் காடிற் செங்கதிர்ச் செல்வ னுதி
ஏர்தரு கோளு நாளு மின்னநீர் பலத்தை நல்க
வார்கட லாடை மாதை மணந்துல ளளிப்பான் மன்னே. (ஙச)

தோளையெயிற் றழல்வாய்ப் பாந்தள் சுடர்களைத் தொடுநாட் பொன்சேர்
அளையெயிற் றரவை முந்நூ லறவர்மாட் டறல்பெய் தீவார்
களைகணு யுலக மூன்றிற் காவலுங் திருவு மெய்தி
மூளைமதிக் கண்ணி யெம்மான் மூதுல கடைவ ரம்மா. (ஙடு)

வீழியங் கனிவா யாரை வேதவா ணிபர்க்கு நல்கின்
ஆழியி னடுவட் டுஞ்சு மரவணைப் புனித னுவார்
கோழிளம் புனிற்று நல்லான் கொடுப்பரேன் மயிர்க்கோ ராடை
வாழிநா ளளவுந் தாவா வளனெடுங் கயிலை வாழ்வார். (ஙசூ)

எரிமணிப் பொலன்கோட் டோர்சா ரியல்புளி மனுவொன் றுய்ந்தார்
விரிகட லுலகத் தான்ற விழுத்தல மெவற்றுங் கோடி
தெரிதரு மனுக்க ளாய்ந்த திண்பலம் பெறுவா ரென்றே
கரியுரி வனைந்த வெண்டோட் கண்ணுதல் கழறி ஞனல். (ஙள)

அரிமலர்க் கிழவன் றீர்த்தத் தாழ்ந்தபுள் ளினங்கண் மீச்கண்
விரிசிறை விதிர்த்த தெண்ணீர் மேனியிற் படினு மன்னுர்
முரிதிரை முக்கட்டிற் றேன்று மொய்யொளிச் செல்வன் போன்று
பிரிவரு மாயை போயப் பெருவெளிக் கருக ராவார். (ஙஅ)

உலப்பிறென் புலத்தார் வேள்வி யூட்டுபு திலக மீந்தோர்
அலக்கண்வல் வினைபோ யீச னருள்பெறத் திலக மாவார்
குலப்பெருங் கிழவர் தாமுங் கோமடக் கொடியோன் பாகன்
மலர்ப்பதம் பெறுவ ரல்லான் மறுபதம் பெறுக லாரே. (ஙஙூ)

படைப்பினுக் காதி யாய பனிமலர்த் தடமா மீது
கிடைப்பவு மயல்புக் காடக் கெழுமுத லமிழ்த வாரி
உடைப்பருந் தசும்பை வீசி யுறுபலிக் கலனென் றேந்தி
அடைப்படா துழன்று வாளா வங்கையை நக்கல் போலும். (உ ஐ)

பற்பல மனுக்க டம்மிற் பழிப்பிலைந் தெழுத்தும் வேதத்
தற்பன மனுக்க டம்மி லுருத்திர சமகந் தானும்
அற்புதத் தருக்க டம்மில் வில்வமு மமரர் தம்மில்
கற்பனை கடந்த மூக்கட் கறைமிடற் றிறையு மாங்கே. (உக)

புனிதரி லழற்புத் தேளும் பொங்கொளி களில்வெய் யோனும்
முனிவரி லென்னை யாண்ட முதல்வனு முதன்மை சான்ற
தனிவிர தத்திற் கொல்லா விரதமுந் தருமந் தம்மில்
கனிபடும் பொறையும் யோகக் காட்சியிற் சனகன் முனும். (உஉ)

மைவரி மணிவண் டிதி மகரந்த மிறைப்ப வானுட்
டைவகைத் தருக்க ளேய்க்கு மணிபொழிற் காழி தன்னில்
பெய்வகை கிடந்த தீர்த்த பேதத்திற் பிரமன் கண்ட
தெய்வநீர்ப் பெருக்க முத தீர்த்தமு மதிக மாதோ. (உங)

மனவலி கடந்த மிக்கீர் மற்றதன் கரைக்கட் பட்ட
வினைதரு குப்பை வாரி யெறிந்தவர் பெறுவர் மெய்யே
கனைதிரைக் கங்கை யாதி கடவுண்மா நதிகட் கெல்லாம்
புனைகல னணிந்து தெய்வப் பொற்படாம் புனைந்த பேறே. (உச)

வேறு.

காதமணஞ் சினமடங்கல் கவுணியர்கோன் பருகருட்பால்
காதமணந் தருதடத்தைக் கண்டார்நோய் விண்டாரே
மாதரங்க மலியிளங்கால் வரைமார்பி லுறப்பெறுவார்
மாதரங்க மலியரங்கே மன்னுரிமைப் பெறுவாரே. (உரு)

முத்தமிழும் படித்துறைநீர் முகந்துதுளி யருந்தினரேல்
முத்தமிழும் படித்துறைநீர் முகிலெனத்தண் டமிழ்பொழிவார்
சித்தமருங் கலியாது தீசமதிற் கணமுறினும்
சித்தமருங் கலியாதுந் தெரிவரிய நிலைசேர்வார். (உசு)

பத்திவலை முடித்தலைமேற் படராதா ரித்தடத்தின்
பத்திவலை முடித்தலைமேற் படின்மாயை யடுவாரே
நித்திலமா டகந்தருமிந் நீரேந்தி யோர்பலமுன்
னித்திலமா டகந்தருவார் நினைத்தசெயல் பெறுவாரே. (உன)

பதகமலம் வலம்வருவார் பண்டுயிரோ டுறத்தோய்ந்த
பதகமலம் வலம்வருவார் பாயொளியோன் முயிடைத்த
மதுகையிட வரையகன்ற வல்வினைபோய்த் தொல்லருளம்
மதுகையிட வரைவென்றோன் மன்னுரிமைப் பெறுவாரே. (உஅ)

மாகனத்த தினங்காட்டு மணிமறைநான் மறையவர்க்கு
மாகனத்த தினங்காட்டும் வல்லார்மா றில்லாரே
கோகனகத் துச்சிவந்த கோதைமணி னன்பணியும்
கோகனகத் துச்சிவந்த சூழகனடி பெறுவாரே. (உக)

திருக்குளத்தி னிருள்பாறச் சேமநெறி தருபிரமன்
திருக்குளத்தி னியற்கையிது திரைமுரசு படைத்தானை
உருக்கவரு மரன்சூலத் துளுற்றியரு ளேபொருளாய்
உருக்கவரு மொருசூலத் தீர்த்தவிய லுணர்த்துவமே. (கo)

கன்னிமணி வண்டுழலுங் கடிகமழ்தா மரைத்தடஞ்சூழ்
பொன்னிவளக் தருபுகலிப் புண்ணியன்போற் றளிக்கயலே
முன்னியகாற் பெருந்திசையின் முக்கோலெல் லியினுரைத்த
தன்னிகரி லொருசூலத் தீர்த்தவியல் சாற்றிதால். (கூக)

முத்தலேவே லகழ்ந்ததுதான் முழுங்கலேயி னடுநாகப்
பைத்தலேயான் முனிசாபம் பரித்தலேயா தவன்படிய
அத்தலேயே வினையுகற்றி யலேத்தலேமா னெடுமுன்போல்
வைத்தலேயா திருத்தியதிம் மலர்தலேமா நிலம்போற்ற. (கூஉ)

துலேமதியின் முழுமதியிற் சூழுததி மறுகநெடு
மலேமதிமா யவன்பெறலான் மறுமதியி லவர்படிந்து
நிலேமதிசேர் தென்புலவோர் நிறைமதிசால் கடனிறுத்தோர்
கலேமதிவே னியனிருபொற் கழன்மதிபெற் றிருப்பாரே. (கூஙு)

கலிகடிபுந் தனிக்கவிகைக் கன்னியா குச்சபதி
கலிகவருங் கொடிபுருவிற் பறந்தவன்முன் னிறம்போலிய
ஒலிகெழுநீர்ச் சூலதடத் தொருமுனிவன் விதிர்த்ததுளி
வலிபலவு மளித்ததென்றல் வழுத்துவது மற்றெவனே. (கூச)

மல்குமதிப் பக்கத்து மாகியினே காதசிக்கண்
புல்குபுகழ் விகடாங்கன் புரையறுமா ணெழில்பெறலான்
பல்கிளஞ் சொடுங்கயிலப் பனிவரையி னினிதிருப்பார்
ஒல்கலிலந் நாளதுபுக் குடனுடைக் கடவாரே. (கூஞ)

வேறு.

நீர்த்தலே வெடிவாளே நீடம ரிடைவாளேப்
பார்த்தென வெதிர்பாயும் பணிமலி புகலிக்கண்
பேர்த்தளி யதன்மேல்பாற் பிறழ்திரை யானந்தத்
தீர்த்தம தூளதங்கீர்த் திறமினி யறைகிற்பாம். (கூசு)

அம்புய மலர்வாண னங்கக ரிடைவைத்த
உம்பரு முனிவோரு முணர்வுடை யுரவோரும்
செம்பொரு ளியல்கண்டுஞ் சேமறை நெறிநின்றும்
தம்புல மறவென்றுந் தவநிலே தவறுராய். (கூஎ)

அறநெறி வழுவாரு மரனருள் பிழையாரும்
மறவினே கடிவாரு மகவினே முடிவாரும்
இறைபணி வழுவாரா யிவர்புரி செயல்கண்டே
பிறைமுடி யொருகாழிப் பெருமுத லருள்கொண்டே. (கூஅ)

மதிநதி முடியாட வதனமென் மதியாடப்
பொதியவிழ் தொடையாடப் புலிமுனி யரவாடக்
கதிர்விரி வடிவாடக் கரதல நிரையாடப்
பதமலர் தனியாடப் பலமுனி வராட. (கூகூ)

ஆடின னெடுநாள்புக் கவ்வழி யானந்தம்
நாடிய வமயத்தோர் நாயக னயனத்தே
பீடிய லருள்வெள்ளம் பெருகிய துளிவீழக்
கூடிய ததுமேல்பாற் குறுமுனி யுறைசாலே. (சஅ)

மேலருண் முனிகண்டே விமலன தானந்தத்
தால்வரு மிதுவென்றங் கினவர்க ளொடுமாடிச்
சால்புற வாலாலே தரணியி லதுபேராக்
கோலள வினிலாடக் குடதிசை தனிலுண்டே. (சக)

மற்றதை நினைவோரு மருமலர் பூனைவோரும்
முற்றிட நினைவோரு முறையினி லணைவோரும்
கற்றறி வருஞானக் கடலெனு மடலேறார்
கொற்றவ னடிநீழற் குலவுவ ரிஃதுண்மை. (சஉ)

வேறு.

கூளி யகற்றிய காளி புரத்தருள் குழைவிக்கும்
ஆளி யுகைத்தெழு காளி தடத்திய லறைகிற்பாம்
மீளி வயப்புலி யூரி லிடர்ப்படு வினைமோடி
நாளு மிகக்கரு நோயி னளப்பரு நலிவாலே. (சங)

கொச்சை நகர்த்தலை வர்க்கரு குற்ற குடக்கூடே
மெய்ச்ச துரத்தோர் தடத்தை யியற்றி விரித்தாடி
அச்சிவ னெனப்ப நிருத்த மிழைத்த வதிற்பாவ
குச்சித முற்ற கரும்பிணி விட்டோளி கொண்டாளால். (சச)

வர்க்க வினைப்பிணி யகல நினைப்பவர் மதிதோறும்
துர்க்கை மனுக்கொடு தெரிச தினத்திது தோய்வாரேல்
விற்கழை பெற்றவ னெழிலுரு வத்தாடு மேலான
வற்கலின் முத்தியி னெளிமையி னிற்பெற லாவாரே. (சடு)

இயல்பக லுஞ்சிவ நிந்தனை யாதியு மிதுதோயின்
பெயரு மதற்கினை வேறுரை செய்வது பிழையாமால்
வெயில்விரி மாளிகை வேணு புரிக்கயல் வடபாலோர்
வயினவ தீர்த்த வியப்பமு மொருவழி வருவிப்பாம். (சசு)

அங்கக் ருக்கோ நிரண்டு குரோசத் தள்வாகப்
பொன்னணி மார்ப னகழ்ந்து விரிந்த பொலன்கோட்டின்
தன்னுடை நாதனை வைத்து விழைந்த தவம்பெற்றுன்
பன்னிய வாவி படிந்தவர் தீவினை படியாரே. (சஎ)

கும்ப மதிக்குள பூரண நாளிது குடைவாரேல்
உம்ப ரருந்தவர் சாப முதற்பவ மொழிவாரே
இம்பரி லிம்மொழி சத்திய மேயென வெனையாளும்
நம்பெரு மானது மும்முறை யாக நவின்றுளல். (சஅ)

அம்மதி முற்றவு மாடி னரும்பவ மாடார்பொன்
இம்மி யளித்தவர் கோடி யரும்பல னிசைவாரால்
கொம்மை முலைச்சியர் மண்ணணி யாடைகள் கோதானம்
இம்மையி லீபவர் பேறு தெரிக்குநர் யாரேயால். (சகூ)

முத்துறழ் தண்டுல நல்குநர் தண்டுல முறைவானோர்
அத்துணை யாண்டு மரன்கயி லைக்கிரி யகலாரால்
முத்தமி ழாளி முயங்கிய வெங்குரு மூதூரில்
மைத்தவ ராக்கு தடாகமு மேலொரு வழிசொல்வாம். (நூ0)

வேறு.

தடத்தியல் காழியந் தளிக்கு நீள்வட
குடக்கினின் மேலொரு கோலின் மேயது
கடற்றிரை முகட்டெழு கதிரின் செல்வணைப்
படப்பொரு பணிமகன் பண்டு தொட்டது. (நூக)

அனல்விணைக் குரவணை யயர்த்த சிங்கமே
தனன்மறை யலகையைச் சாய்த்த நீரது
மூனைவரு மமரரு முற்று மற்றும்வே
றெனைவரும் விணைகெட வென்றுந் தோய்வது. (நூஉ)

போதரு கோட்டிடைப் புயங்க ணுமத்து
நாதனை யுள்ளத்து நாளு மாடுநர்க்
காதவன் முதலகோ ளனைத்து நன்றிசால்
ஏதமில் பலன்றர விலங்கும் பொற்பது. (நூங)

மற்றத னயலொரு வாளி யெல்லையின்
முற்றர வணையினுன் முனிவன் வெம்பழி
பற்றற வாடுவான் பண்டு தொட்டது
பெற்றபே ராழியின் பெயரி னேர்தடம். (நூச)

ஆசிலத் தடமுவந் தாடி மாமறைத்
தேசிகர் திறத்தொரு செம்பொ னீவரேல்
வீசிவில் லுமிழ்மணி மிளிரு மார்புடைப்
பாசிலைப் பள்ளியான் பதத்தில் வாழ்வரே. (நூஞ)

மங்குறீரைப் மதிண்மகேந் திரத்துக் காவலன்
பொங்குறு தவஞ்செயப் புகலி வாணன்முன்
சங்குறு கொடுங்குழைத் தாணு வேணுவாய்
அங்குவந் துறத்தட மவணினை றுற்றதால். (நூசு)

சங்கொலி வழங்கலிற் சங்க தீர்த்தமென்
றெங்கணு நிலவிய விதுபுக் காடுநர்
வெங்கொலை மருவலர்த் தொலைத்து வேலைசூழ்
அங்கண்மா நிலமுழு தளிப்ப ருண்மையே. (நூஎ)

விண்ணவர்க் குடைந்தவெஞ் சூரன் வெவ்வலி
நண்ணிய தடமிதி னுளந் தோய்பவர்
எண்ணரும் பகைப்புலங் கடப்ப சென்றருட்
கண்ணுத லந்தணன் கழறி னனரோ. (நிஅ)

அளிபுரை திருநிலை யழகி யாயபூங்
கிளிபுணர் மருங்கினன் கிளர்பொன் னுலயத்
தொளிபுணர் தெற்கிலோர் கணியி லோங்குநீர்த்
தெளிதரைச் சுக்கிர தீர்த்த மொன்றரோ. (நிக)

வன்கணு லெண்கணன் மறித்து வீழ்த்தகாள்
பொன்கணு னார்திவாழ் புகலி மாநகர்த்
தென்கணன் கொன்றெனக் கோணஞ் செய்தடத்
தின்கணு னந்தநீ ரிழைத்துப் புன்கணன். (கூ0)

தோய்ந்தனன் பூந்தராய்த் துணைவ னுயிர்
தேய்ந்திடா மிருதசஞ் சீவி னிப்பெயர்
ஆய்ந்தநூல் விஞ்சையு மமரர் தேசிகன்
ஏய்ந்தநல் விழுப்பமு மெய்தி னனரோ. (கூக)

தனிப்புகர் வாரமத் தடம்புக் காடுநர்க்
கினிப்படர் வறுமைநோ யில்லைக் கோமயம்
பனித்தபுல் லறுகொடு பரித்துக் கோன்மதி
தனிற்படிந் தோர்க்கணை தரைக்க ணில்லையால். (கூஉ)

இளிதரு வலைஞர்த மேழை தோள்புணர்
மிளிர்சடை முனிவரன் விமலன் கோயிலுள்
தெளிதர நாட்டிய தீர்த்த மொன்றது
குளிர்புனற் பராசர கூப மென்பவே. (கூங)

அச்சுத னணையமே லவர்க்கு மேலவன்
கொச்சையை யகற்றுமிக் கூபந் தோய்பவர்
நிச்சய மூணலூ ணோர்த லேதிலாள்
இச்சையின் முயங்கன்மற் றெவையுந் தீர்வரே. (கூச)

தேட்பெயர் மதியினிற் செறிந்த பூணை
நாட்புனல் படிந்துநென் மணியை நான்மறை
ஆட்சியர் திறத்தினி தளிக்கு மன்பினோர்
வேட்கைகூர் பிறவிவெவ் விணைப்ப டார்களே. (கூஞ)

வாங்கொலி யருவிவீழ் மலய மாதவன்
பூங்குயிற் கிளவிபாற் புரைதற் பூந்தராய்க்
காங்கிரு கோலள வாகக் கீழ்புலத்
தோங்குநீர் மலிகட மொன்று நாட்டியே. (கூசு)

பைந்தொடிப் பாகனைப் பதித்துப் பாங்கரின்
வந்தனை மலர்கடூஉய் வணங்கி வீறுபெற்
றுய்ந்தன னெலிதிரை யுலகு ளோரதைச்
செந்தமி ழகத்திய தீர்த்த மென்பரால். (கூஎ)

கோதமன் குறுமுனி குழித்த வாவிபால்
போதல மொருதடம் புதுக்கிப் பூந்தராய்
நாதரை யிறைஞ்சிமெய்ந் நலம்பெற் றுனது
தீதறு கவுதம தீர்த்த மென்பரால். (கூஅ)

இவ்வகை யாறிரண் டிண்டை வானவன்
செவ்வனீர்த் தடமுதற் தீர்த்த மாமிவை
ஒவ்வொரு தீர்த்தமே யுய்க்கும் வீடெனின்
எவ்வகை விரிக்கும தின்னுங் கேட்டிரால். (கூகூ)

மூந்தையீ ரொன்பதா முதுபு ராணங்கள்
செந்தழல் வானவன் றிங்கள் வெய்யவன்
அந்தமி லுலகினே டலகி லண்டங்கள்
தந்தசீர் புனைதடந் தனிப்பு ருநதி. (எ0)

இவ்வகைப் பேர்புனைந் திலங்கு தீர்த்தங்கள்
கவ்வையி லவர்பணி காழி சூழ்தரும்
செவ்விய திசைதொறுந் திகழு மான்மனத்
தெவ்வமின் முனிவிர்கா ளின்னுங் கேட்டிரால். (எக)

கின்னரர்கிம் புருடர்சித்த ரியக்கர்கா லிருவசுக்கள் கேடில் வாசினர்
பன்னகர்பா ரிடரசுரர் முனிவர்முத லோர்புகலிப் பணிந்து போற்றி
அன்னவரோ ரொருதடமுந் தடத்தழையோ ரிலிங்கமும்வைத் தருச்சித் தாரால்
இந்நகரக் காழிவரை வடுகேசன் மகிமையினி யிசைக்கு மன்றே. (எஉ)

[உசு-ஆவது. தீர்த்த மகிமை யுரைத்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கஉருசு.)

——:o:——

உரு-ஆவது. வடுகநாத வத்தியாயம்.

கொண்டல் கண்படை கொளக்கி ளந்தளி குலாவி யின்னிசை
மிழற்றுபூம், தண்ட லைப்பொழி லுடுத்த காழிவரை தன்னி லேவடுக
னென்னவே, அண்ட நாயக னிசைந்த காதைவர லாறு கூறுகென
வீறிலா, எண்ட வத்துமுனி வோர்வி னவவரு ளேறு சூதனது கூறு
வான். (க)

முள்ளெ யிற்றர வரைக்க சைத்தமுழு முதல்வ னன்கருணை முதல் வியோ, டெள்ளி லிச்சக மளிக்கு மாறுமு ணிணங்கு கேளியின் மணங் கொளீஇ, பள்ளி வைகவரு மறைவ னத்திலொளி பாய்தி ருச்சுடர் மழுங்கல்கண், டொள்ளி ழைக்கொடியை நோக்கி யாக்கமறை யோதி ஞனிதனை யோதிஞன். (உ)

இன்ன வேலையிவ் விளக்கை வில்லுமிழ வீண்டி யாவரது தூண் டினர், பொன்ன ஞயவர் புரக்கு மாறுவிரி புவன மும்மையு மளித்து மென், றென்னை யாள்பவ னுரைப்ப வன்னையு மெவர்க்கு முங்கொ லென வெண்ணினஞன், அன்ன போதொரெலி தீப மேவியறி யாது காசிகொடு தூண்டியே. (ங)

பொருகு றும்புபுரி மிருக மாமியல் பொருந்த லாலது தருஞ் சுடர், உருகு கின்றநறை யிழுதை யன்றுசிறி துண்ட தவ்வெலியை யண்டர்கோன், வருக நீசுடர் துலக்க லாலுரிமை வைத்து முப்புவி பரிப்பதற், கொருவ ஞகியறி வொடுபி றத்தியிழு துணலின் வாணிருத ஞதியால். (ச)

நம்பெ ருந்தரணி யால யங்கடொறு நகுபெ ருஞ்சுட ரிழைத்து மேல் எம்ப தம்பரவு மன்ப ரந்தண ரிடத்து மீகைநனி யீகெனு வம்ப ரூவிதழி யானு ரைப்பவது வலிவி ரோசன னெனும்பெயர் செம்பு லாலொழுகு வேலு டைத்தகுவர் செம்ம லின்மதலை யாயினன்.()

மாவ லிப்பெயர் புனைந்து நால்வகை வயப்ப டைக்கட லொடுங்குழீ இ காவன் முப்புவன முந்த ஞதுகவி கைக்குள் வைகமுறை செய்யுநாள் ஓவ நப்பெருகு களியி னுலமர ருலகு புக்குவிரி தருநிழல் தேவ ரைப்பொருத ழிப்ப வங்கமொடு தேவர் கோன்முரணி மேவினன்.

ஆண்ட வாசவனு நிருதன் மாவலியு மாழி வேந்தனெடு முரணுகும் பாண்ட னுந்தனத னேடு சம்பரனும் பவன னுந்திருதி மானுமெய் நீண்ட தீயினெடு தூம கேதுவு நெருங்கு காலனெடு நாகனும் காண்ட கீசதிசை யதிப னேடுபயங் கரனும் டிண்டிமனு நிருதியும். (எ)

இனைய வாணிருத ருந்தி சாதிபரு மேற்ற போரினிடை யாற்றல்சால் வனைக ருங்கழன் முரட்ட யித்தியர்செய் வாகை கண்டதிக வேகமாய் நனைமு கக்குலிச வேலெ டுத்ததிர நூக்கி மாகபதி தாக்கினன் அனைய போதசுரர் கோன்வெ குண்டுவிற லமர சோடவம ராடினன்.(அ)

எறுழ்வ ரிச்சிலை குழைத்து நாணெலி யெறிந்த முன்றுபதி னுயிரம் தெறுக டுங்கணை வலாரி மீதும்விரி திசையு ளோர்மிசை யநேகமும் கறுவு கொண்டலென வீசி ஞனிலை கலங்கி னுமர ரதுதெரிந் தறுத டக்கையுயி ராவ தத்தையெதி ருந்தி வாசவனு முந்தினன். (கூ)

மிகமெ ருக்கியெயி றதுக டித்துருமு விசையி னிற்கர மெடுத்தடித்
தகல மத்தியெறி குலிச மிட்டுற வடித்த லும்பொரு தயித்தியன்
பகன்ம ணித்தலியி னடுவ ணிற்பதை பதைப்ப வங்கையுறு தண்டினுல்
உகவ டிப்பமக பதித னக்கவச மூற்ற தாலவச மூற்றினன். (கo)

அக்க ணத்தை யறிந்த மாவலி யகன்ற தேரிலவ ணைக்கவர்ந்
தொக்க வோருழையி லறிவு ரூதவகை யோடி னரமரர் வாடினுர்
மிக்க வேழ்திசை பரிக்கும் வானவரும் வேறுவே றிரியல் போயினுர்
புக்க மாவலி துறக்க மேயபல போக மும்பருக லாயினுன். (கக)

ஆட கத்தல மகன்று ஞாலமிசை யரசு பேணிநிறை மணிவளைச்
சூட கக்கொடி மனுளன் மேயதளி தோறு மொள்ளொளிய சுடரிழைத்
தேட டுத்தமலர் மஞ்ச னதியினி லெந்தை பூசனைசெய் தன்பர்பால்
நாட கத்துவழி பாடி யற்றினனி நன்ன ரன்புசெயு மன்ன நாள். (கஉ)

வருகு லக்குருவை மகவி னைக்கிடம் வழுத்து கென்னவவன்
வானுளோர்க், குருமெ னப்பொரு சிவத்து ரோகமு மொழித்த வூர்
பிரம னெண்ணிலார், அருவி னைத்தொடர் பிரித்த வூரறுதி யாழி
சூழரிய காழியூர், இருத லத்தினி னுயர்ந்த வூதி விழைக்க லாகு
மென வவுணர்கோன். (கங)

சொன்ன வாறுபுரி மகவி னைக்குரிய சோர்வி லாதபொருண் மேவரப்
பன்ன ருஞ்சடை முடித்த மாமுனிவர் பலர்க ளோடுமறை யவரொடும்
தன்னெ டும்படை தழீஇ வரக்கதிர் தடுப்ப நீள்கொடி தொடுத்தபூம்
கன்னி மூதெயி லுடுத்த காழிநகர் காவில் வல்லவுணன் மேவினுன்.(கச)

எகின வூர்தடை மாடி யீசனை யிறைஞ்சி யங்கமரர் கம்மியன்
மிகல தென்றிசையின் யோசனைப் பரவை வேள்வி பந்தரு மிழைத்ததிற்
சகல முங்கொடு புகுந்து நாதனிரு தாள்கு றித்தன னியற்றமேல்
இகலு டைந்தகட வுளரும் வாசவனு மிண்டை வானவனை யண்டினுர். ()

புண்ட ரீகமனை கொண்ட பூரண புராண மாவலியி னேவினுல்
சண்ட மாருத முடன்ற போதுபடு சருக தாயின மெனக்கரைந்
தெண்டி சாதிபரி ரங்க வேதனவ ரேவ ரோடுமுயர் காழிபுக் [ன்.
கண்ட ராழ்துயரு நிருதன் வாகையுமெ னத்தன் முன்றுழு துரைத்தன

ஈதி யம்பலு மிரங்க லீர்பலரு மென்று காழிவரை நின்றுளான்
சீத ரன்றனை நினைப்ப நீர்பருகு செல்லை யன்னவனவ் வெல்லைவாய்ப்[ண்
பாத பங்கயமுன் வந்தி றைஞ்சியிசை பன்னி யங்கைமலர் சென்னிகொ
டாத ரம்பெருகி நிற்க மாயவனெ டருள்பு ரிந்திதனை யுரைசெய்தான். ()

மாய மாவலிசெ யன்பு மன்பினில் வரம்பெ றுந்திறனு மும்மைசால்
ஏய திண்புவி பரிப்ப துந்தவ மிகந்து விண்ணவரை நலிவதூஉம்
நீய றிந்துணர்ந்தி யாவ ரேனுமறை நேயர் பாலிலுமெ மன்புடைத்
தூயர் பாலிலுமோ ரிடர்வி ளைக்கிலவர் தோய்வ ரானிரயவாதையே. ()

மைந்தர் தந்தையர்க ளேனு மெம்முடைய வடிவ மானபழ வடியர்பால்
நிந்தை யாளரை யொறுத்த பேரெமது நேய மூள்ளவர்க ளதுசெயார்
புந்தி நல்லற மிழைத்து மென்னகதி புகுவர் யாமது பொறேமெனு
அந்த மாவலி யடங்கு மாறுபுவி யாசி லாதமுனி காசிபன். (ககூ)

பால ஞகியவு ணனையொ டுக்கிவிரி பாய்தி சைத்தலைவர் கீழுளோர்
மேலு ளோரைநிலை நிறுவி மீள்கென விசைத்து ழாய்மணி யலங்கலான்
சால நன்றிதென வம்பு யம்பொருவு தாளி றைஞ்சிவிடை கொண்டுநீள்
மால கன்றமுனி காசி பர்க்கதிதி மணிவ யிற்றிலுரு மதலையாய். (உ0)

தெளிப சுங்குறள தாகி வந்துவிரி சிகையொ டும்புரிமுந் நூலொடும் [ம்
ஒளித ருங்குசை யொடுங்க மண்டலமொ டுங்கு றுங்கையுறு தண்டொடு
மிளிர்த ரும்பிரம சாரி யாயடல் விரோச னன்புதல்வன் வேள்விவாய்க்
களித ரும்படி புகுந்த மாலையெதிர் கண்டு நேயமது கொண்டனன்.(உக)

அருக்கி யாதிவழி பாடு செய்துமணி யாச னத்தி சயத்தொடும்
பொருத்தி ஞன்முனிவ ரும்ப ராவினர் புகன்ற மன்னனை முகுந்தனும்
இருத்தி யோவினி தி னென்று மூவடிமண் யாம்வி ருப்பின மளிக்கெனக்
கருத்தி யைந்தன னுவப்ப வங்கணுறு கவிம கன்கருதி யிதுசொனுன்.()

ஆழி மாயனெழி லுரும றைந்துகுற ளாகி வஞ்சனையி லெய்தினுன்
வாழி யாயிது கொடுப்பி னின்னலிடை மன்னு வாய்தவிர்தி யென்னலும்
ஊழி மாலெமை யிரக்கி னீவதினு முறுதி வேதமுள தோவெனு
வீழி வாய்மனைவி தான நீர்கொணர விரகி னுலவுண னுரைசெய்தான்.()

கொண்டு வந்தநிறை கெண்டி கைப்புனல் கொடைத்த டக்கையன்
விடுப்பநீர், வண்டு வாரம தனைப்போ ருமையுடை மையல் வெள்ளி
தடை செய்தலும், தண்டு ழாயவ னறிந்து கையணி திருப்பை கொண்
டது திறத்தலான், மண்டு சுங்கனுரு கண்ணி ழந்தயலின் மருவி
னனதுபி னிருதர்கோன். (உச)

மூவ டித்துணை நிலங்கொ ளென்றுபுனல் மூளரி யங்கையில் விடுக்
கமால், ஓவ லிற்புவி யளக்கு நீள்விசுவ வுருவ மெய்திவிரி தரையை
யோர், சேவ டிப்பட வளந்து விண்ணையொரு சேவ டிக்களவை கண்டு
மேல், மாவ லித்தகுவன் முடியி லோரடியை வைத்து மண்ணிடை
யழுத்தினுன். (உரு)

நேர மன்னதனில் விண்ணு மண்ணுமுறு நிலைக லங்கியல மருதலும்
சூர னைந்தபுரு கூத னுடமரர் துண்ணெ னப்பதறி மண்ணினில்
சார னைந்தெழில் கனிந்த சோலைநிறை காழிமாநகரி லாபதுத்
தார னன்றிருமுன் வந்து கூறவவர் தம்மை யெம்மிறை தடக்கையால்.()

அஞ்ச லென்றருளி வடுக ஞகிமுர ணவுண னைக்கடியு மவனை
நாம், மஞ்சு லாம்வடுக ரூப முற்றிகன் மடித்து மென்றுரைசெய்

தாயிடை, எஞ்ச லில்லவனு மவ்வு ருக்கொடவ ரெதிரெ ழுந்தருளு மமதையாம், நஞ்சு கொண்டவன் வணங்க லாமையினென் னுதன் மற் றவனெ டோதுவான். (உள)

விழியி ருந்தும்விழி யிலரி னீதுபுரி மிடல தென்னெயென வெகுளியால்
அழிவி லாவெரு கரத்தின் மார்பினி லடிப்ப மாலிவனு மாவிபோய்
இழிவொ டுந்தரணி மேல்வி ழுந்தனனவ் வெல்லை மாமுளரி வல்லிகண்
டொழிவின் மங்கல மெனக்க ளித்தருள்க வூழி நாளுமுயர் காழியாய். ()

வேறு.

என்றுதுளி றையுமிழு மீர்ங்கமலத் தரசிருந்தாள்
கன்றுதுயர்க் கனல்கனற்றக் கடுவேனி லிளந்தளிர்போல்
நின்றிடர்கூ ரமயத்து நீதுவளே லெனக்காழிக்
குன்றுடையான் வேற்றுருவிற் கொழுநனையாங் கவட்களித்தான். (உக)

அவ்வழிமா யவன்போற்றி யகந்தையெனக் ககற்றியதை
எவ்வழியோ ருந்தெரிவா னிடும்பையா னகற்றிடுவான்
இவ்வழியே கிடந்தவுட லென்புமத னுரியையுநீ
வெவ்வழியில் லாய்தரித்தல் வேண்டுவலென் விருப்பிதுவால். (உ0)

எனமொழியத் திருவருள்கூர்ந் திமையவர்தங் கம்மியனை
மனவணியான் பணித்தருள மறிந்தவுடற் பசுந்தோலைக்
கனைவிரைவா லுரித்தெலும்பின் கணத்தையொரு கதையாக்கி
முனைமழுவா லேந்திதிரு முன்வைத்தான் வணங்குதலும். (உக)

பாசொளிய வீருரியைப் பரித்தருள்கஞ் சுகமெனக்கொண்
டாசிகந்த மணிக்கதையை யங்கையினிற் பிடித்தருளி
வாசவனு தியர்போற்ற வடுகேசன் வ'யற்காழி
தேசுபொலி மலைச்சிகரத் தென்றிசையி லினிதிருந்தான். (உஉ)

வியல்வடுக னெனநிருதன் மிடல்கெடுத்தான் றனையடலால்
பெயர்வடுக நாதனெனும் பிஞ்ஞகனும் பரையருளால்
இயலிடமெய் துதிரெனவு மெம்பெருமா னின்பூசை
அயர்வகலப் புரிகுதுங்கின் னருளுண்டே லெனவாங்கண். (உங)

அண்ணன்முடிக் கணிபெறுமா னைந்துமுதன் முறையாட்டிப்
பண்ணமரும் புழுகுநறும் பளிதமொடுங் கலந்தணிந்து
தண்ணமருங் கொழுந்துகொழுஞ் சண்பகமா தியவிரைதோய்
ஒண்ணறுந்தார் வகைபுனைந்த வொலியன்முறை முறைசாத்தி. (உச)

பதனுழுந்தி னப்பமொடு பாளிதமுஞ் சஃகுலியும்
மதுவொழுகு முக்கனியு மடற்றெங்கின் கொழுங்கனியுங்
விதிமுறையி னினிதருத்தி வெள்ளியிரா நள்ளிருட்கண்
இதயமலர் தரவழிபா டியற்றியிசை யெடுத்தேத்தி. (உடு)

ஈற்றுளைந்து வலம்புரிக ளீன்றமணி நிலவுமிழச்
சேற்றுமரை மலர்குவியுந் தென்காழிப் பொருப்பரசே
போற்றுமெமைப் போலுமையிப் புகர்வாரத் தெவர்பூசை
ஆற்றுநர்மற் றவர்பெறுமா றருள்கவரம் பலவுமெனை. (நசு)

பொற்புவியின் மாலன்பு புரிந்துவேண் டினர்நிற்ப
மற்புயனங் காழிவரை வடுகேச னவ்வாறே
சொற்புகர்வா ரத்திலெமைத் தொழுதாரா தனைசெயினும்
அற்பினெடு துதிப்பினும்யா மளிக்குமால் வரமனைத்தும். (நஎ)

என்னமுது மறையொழுகு மீர்ங்கனிவாய் மலர்ந்தருள
அன்னவரும் விடைகொண்டாங் கமருலகி னினிதமர்ந்தார்
தன்னனையான் மாலெலும்பைத் தண்டமெனப் பிடித்ததனால்
பன்னருமோர் பெயர்தண்ட பாணியென மருவியதால். (நஅ)

பானிலாம் புகர்தினத்துப் பானுட்கங் குலிற்பணிவோர்
ஏனைவா ரமுந்தொழுபே றெய்தினுமோர் போதேனும்
ஞானநா யகன்சட்டை நாயகனைத் தொழுவோர்வே
றூனமா நிலத்திறினு மனைவரும் பெறல்வீடு. (நகூ)

ஆதலினிவ் வியற்சரித மனைத்துமக் கறிவித்த
தோதவுல வாதெனினு முரைத்தனன்யா னறிந்தவ்வ
ஏதமிலா மூதுமறைநூ லெனைத்தும்வடித் தெடுத்ததனி
மாதவனைப் பணிசூத மாதவன்மா தவர்க்குரைத்தான். (சஅ)

[உடு-ஆவது. வடுகநாத வத்தியாயம் முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் கஉகூச.]

——: o :——

உசு-ஆவது. வேதவியாச ரத்தியாயம்.

பாதி மதிகின் றருளிர்வேணிப் பரமன் வடுக நாதனியல்
நீதி யுணர்ந்த பெருமுனிவர் நினது சூரவ னின்னகர்வாய்
நாத னருளான் மறைவகுத்த நலங்கூ றென்னச் சூதனெனும்
கோதில் குணத்தான் விரித்தவழி யறிந்த வாறு கூறுதுமால். (க)

தண்டா மறைதேர் கவுதமன்செய் சாப வலியான் மதிபிறழ்ந்து
பண்டா யுலகா யுதனருகன் பவுத்தான் மீமாங் கிசன்வாமன் [ஞெர்
உண்டா மீனையோர் மதம்பொருளென் றுணர்ந்து துறவோர் மூதலா
வண்டா மரைவாழ் புத்தேளே மருவார் துளபத் திருமாலே. (உ)

இரவி மூதலொன் பதின்மர்தமை யெண்மா திரத்துக் கடவுளரைப்
பரவி நாளுந் தனித்தனியே கருத்தா வென்றும் படிற்றுணர்வால்
விரவுந் தமையே கருத்தாவென் றக்கத்தே மாந்து விபரீதக்
கரவி னழுந்தி மருண்டார்முன் கற்பத் தியன்ற துவாபரத்தில். (கூ)

பறவாப் பூவை நிறத்தானும் பதுமத் தானு மீதுணர்ந்து
திறலார் கயிலைச் சிவபெருமான் றிருமுன் னமர சொடும்பரவி
உறவார் கருணைக் கீளகண்ணே யொன்று முதலே கவுதமன்செய்
விறலார் சாபத் தறிவுடைந்தார் வேலை ஞாலத் தவசெல்லாம். (ச)

காலுங் கதிரோ னுதவியுன்னுர் காட்சிக் கிருகண் ணமையுமென்பார் [ல்
போலும் புறத்தா றெழுகியெமைப் பொருளாய் மதித்துப் புன்னெறியா
சாலும் பிறமேற் கோளினின்றுங் தலைவா நின்னை மறந்தறமோர்
நாலுந் துறந்தா ரெனச்சிலம்பார் நளின மலர்க்கீ முரைத்தனரால். (ஞ)

ஆதி பகவ னதுகேளா வருள்பூத் தெழுதாக் கிளவியொடும்
நீதி லுலகத் தவர்க்குயர்வான் சேரும் புராண மெனைப்பலவும்
ஈதி புணரும் வியாதனென நிலமீ துதித்து நெறிதிறம்பா
தோது முறைசெய் திடுகவென வுவண வூர்திக் குரைத்தனனுல். (சு)

நலனு ருலகிற் கருமநெறி நழுவா வண்ண மூவாறு
பலனுர் மனுமுன் மிருதிகளைப் பரிபா லனஞ்செய் தளித்தியெனப்
புலனுர் கமலக் கிழவனுக்குப் புகற லோடு மிருவோரும்
வலனுர் மேரு வரைகுழைத்தான் மலர்த்தா டொழுது விடைகொண்டார்.

கதிர்செய் மேரு வரையில்வந்து கண்ணன் விண்ணோர் தமைத்தத்தம்
பதியே புகுத்திப் பராசரனும் பகவ னெனைத்தன் மகவாதற்
கெதிரி லுறுமன் புறுபுணர்ச்சி யெய்த வகுத்த வைகலுமீண்
டுதவ லாலாங் கணவதெனு வுலகின் றவனுக் குரைத்தகன்றான். (அ)

அனைய காலத் ததுவிழைந்த வறிஞர் பெருமான் பராசரமா
முனிவன் றீர்த்த முழுதாடு முறையா லெறிநீர்த் திரைக்கரத்தில்
கனிவண் டிமிர்பூந் தாரேந்துங் கடவுள் யமுனைப் பேராற்றில்
துனிவி னெடுமென்வர் ததுகடப்பான் றோணி யியக்குந் துறைசார்ந்தான்.()

இயங்கு தோணி யிவர்ந்துமச்ச கந்தி யெனுமோ ரிளங்கொடியை
வயங்கு முனிகண் டாண்டிரண்டு பருவங் குறித்த மகப்புணர்ச்சிக்
கயந்தீ ரோரை யடுத்ததெமை யணைதி யெனலு மாயிழையும்
நயந்துள் ளுவப்ப தெய்வநதி நடுத்தீ வினிலெய் தினர்கலந்தார். (கo)

கடவுண் முனியு மடவர்லுங் கலந்த புணர்ப்பா லாயிடையோர்
அடல்செய் திகிரிப் பெரும்படையா னருமா மகவாய் வந்துதித்தான்
படர்சேய் வலிமான் முலைதிளைத்த பழிபோ யகலப் பிரமபுரத்
திடனெம் மடிக ளடிபோற்றி யியன்ற முனியு முயன்றதன்மேல். (கக)

தன்பேர் பெறவோர் சிவலிங்கந் தாபித் தயலோர் கூபமமைத்
தின்பார் பணிய வுயர்ந்தானை யெழில்செய் தீவி னுதித்தமையால்
அன்பார் தீபர் யனனெனும்பே ரணைந்த சிறுவன் பணிக்தேத்தி
உன்பால் கனியா னுய்யுமதி யுறுத்து கென்லு முறுவர்பிரான். (கஉ)

பாரின் முதுநூற் பயிர்வளரும் பாத்தி யனைய தென்புகலி
ஊரி லெனைக்கன் றருள்புரிந்த வுமைகேள் வனீரீ பணிகெனலும்
நீரிற் கமலங் கண்முகிழ்ப்ப நிறைவெள் வளைமுத் தொளிகாலும்
காரிற் பொலிபூம் பொழிலுடுத்த காழி நகர்க்கண் ணவனும்வந்தான். ()

வந்து பிரமன் றடத்தாடி மதிக்கோ டுரிஞ்ச மூகையவிழும்
கொந்து மலிபூங் கொன்றைமுடிக் குழகன் பிரமே சனைப்போற்றி
இந்து வனைய நுதற்பேதை யிடத்தெம் பெரிய நாயகனை
முந்து வழிபாட் டியலாற்றி முறையா லிறைஞ்சி முன்னின்றான். (கச)

எம்மான் போற்றி யேழூர்ந்த விறைவா போற்றி யுயிர்க்குயிராம்
அம்மான் போற்றி யுலப்பிலா வழகா போற்றி யெனையாளும்
பெம்மான் போற்றி யளப்பரிய பெரியோன் போற்றி நின்னடியேன்
மைம்மா சொழிய வருள்பொழியும் வரதா போற்றி யெனத்துதித்தான்.

துதிக்கு மேல்வை யெழிலொழுகுஞ் சுடர்கா லொற்றைக் குழைக்
கிழவன், கதிர்ப்பூண் முலைமென் கொடியினெடுங் காமர் விடைமீ தெழுந்
தருளி, உதித்த குணத்தாய் நினதுதுதி யுவந்தேம் பெறுக வரமென
லும், விதிர்ப்பி னெடுங்கைத் துணைமுகிழ்த்து வினைதீர் தீபா யனன்
மொழிவான். (கசு)

நின்ரு மரைத்தா ளென்னுளத்து நிலையல் வேண்டும் பலமறையும்
பொன்ரு மேல்வீட் டியல்விரிக்கும் புராணப் பெருக்கு மேழையினேன்
குன்ரு வண்ணம் பெறவளித்தாட் கொள்ள வேண்டும் வள்ளலென
நன்ரும்ப் பரிச தீக்கைசெய்து நாத னினைய வரங்கொடுத்தான். (கஎ)

அதுபின் முனிவன் முதுக்குறைவுற் றருமா மறைநூல் பற்பலவும்
முதுமை நெறியா லீரிரண்டு முறைசெய் தவற்று ளிருக்குவினைப்
பொதுமை தருமூ வெழுகூரும்ப் புணர்த்துப் பயில வருக்குரைத்தான்
இதுபின் மறையைச் சதவிதஞ்செய் தியல்வை சம்பா யனற்கிந்தான். ()

சாம மறையை யாயிரங்கூ றியற்றி முனிவன் சயிமினிக்கும்
ஓம நெறிசா லதர்வணத்தை யொன்பா னுக்கிச் சுமந்துவுக்கும்
தோமில் புராண விரிவனைத்து மூவா ருகத் தொகுத்தவற்றைப்
பூமி யினில்யா வருமுய்யும் பொருட்டா லினிது புகன்றளித்தான். (கசு)

அளித்த புராண மூவாறு மருந்தை யுருவாய்ந் தாரமுதம்
துளிக்கும் பிறைக்கீற் றிருளிர்சடையான் றுரிசில் பூசை புரிதுமென்று
களிக்கின் றனமா லென்னமுனி கருணை பூண்டு பிரமதடத்
தொளித்தண் புனல்புக் கினிதாடி யுரவன் பிரமே சனைப்பரவி. (உ0)

அஞ்சி லோதி யுமைக்கருள்செ யம்பொற் றிருணி முழுமுதலே
நெஞ்சு ளுருகி வரன்முறையா னின்று பணிந்து வென்றிபுனை
கஞ்சு கேசன் பதத்துணைகண் களிப்பத் தொழுது கொழிதமிழால்
விஞ்சு மறைபா டியஞான விரகன் றனையும் பரவியப்பால். (உக)

கொண்ட றவழு மேனிலத்த கொடியி னுடக்கம் பரிதிவெயில்
மண்ட மெலிந்த பசுநிறத்த வயமான் குலங்கட் கயர்வாற்றி
அண்ட மளக்குங் காழிபுரத் தவன்கோ யிலுக்கு வடகீழ்பால்
கண்ட கணையோ ரிரண்டளவிற் கனற்பே ரீசன் றென்கீழ்பால். (உஉ)

கேழில் விழுப்பந் தருமிலிங்க மொன்றங் கமைத்துக் கெழுமணியால்
வாழி நறுமஞ் சனவிதிதூல் வகைமை யாற்றித் தகைதறும்பால்
ஆழி யுயிர்த்த வாடகப்பூந் தருமா மலரா லருச்சனைசெய்
தூழி னியன்ற தெய்வகைவே தனங்க ளாற்றி யுளமகிழ்ந்து. (உங)

மடமைப் பிறவித் துயர்விலக்கு மாயைப் பிணிக்கோர் மருந்தாய
கடவுட் கூப தீர்த்தமதன் வடபா லிழைத்துக் கண்பனிப்ப
உடலஞ் சிலிர்ப்ப விறைஞ்சினின்ற வொன்பா னிரட்டிக் கடவுளர்முன்
படலப் பணியான் விடையிலெழுந் தருளி மகிழ்ந்து பகர்ந்தருள்வான்.()

என்னே யுமது பணிநயந்தே மியைந்த வரநீர் பெறுகெனலும்
பொன்னே யனையான் றிருமுன்பு புராணத் தலைவர் துவண்டுபராஅய்
இன்னே யமைத்த கடவுளுக்கு மின்ன தீர்த்தந் தனக்குமெம்பேர்
மன்னே விளங்க வருளென்றூர் மதிவே ணியனு மஃதளித்தான். (உடு)

அன்று முதலே நம்புகலி யமலன் றளிக்கீ சானத்தில்
என்றும் பதினெண் புராணேச னெனவாய்ந் திருந்த வெம்மானை
மன்ற வொருபோ திறைஞ்சுவரேல் வரம்பில் பலநூற் கடல்கடந்து
பொன்ற லருமெய்ப் பொருட்டுணிவார் புகரில் வீடும் பொருந்துவரால்.

அன்ன பரம னருள்படைத்த வரும்பு ராண மூவாறும்
பின்ன ரெனது தேசிகன்பாற் பேணி வரலு மாங்கவற்றை
என்ன தறிவின் றிரிபகல வென்பா லளித்தா னிதுநிற்கச் [தான்.
சொன்ன மறையின் பொருளெல்லாந் தொகுத்தோ ரிரண்டு வகைசெய்

நகைசால் கிரியா காண்டமென ஞான காண்ட மெனவவற்றை
வகையா லிருசூத் திரப்பெயரின் வைத்தான் வியாத னெனப்பெற்றான்
தகைசா லயனு மனுவாகித் தகட்டு மடல்கீண் டளிநறுந்தேன்
முகைவா யுகுக்குங் கமலவயன் முதுநீர்க் காழிப் பதியடைந்தான்.(உஅ)

வேரி மலர்த்தா மரைக்கிழவன் வியன்பேர்த் தடம்புக் கினிதாடி
ஒரு நியதிச் சடங்குமுடித் தோரைந் தெழுத்தி னுருவோதி
ஆரங் கண்ணிப் பிரமேச ராதனைசெய் தருந்தவங்கள்
பாரி சாதத் தருவினிடை பயின்றோர் திங்கண் முயன்றளவே. (உசு)

வண்ண மிடற்றுப் பசுங்கமுகின் மடல்வா யுதிர்ந்த செம்பழுக்காய்ப்
பண்ணை வனசக் கைக்கழங்காம் பரிசு காட்டும் வயற்காழி
அண்ணல் விடைமே லெழுந்தருளி யன்பார் மனுவே தவமகிழ்ந்தேதம்
எண்ண முரைத்தி யளித்துமென விறைவ னுரைப்ப மனுவுரைப்பான்.

துயர்தீர் சுருதி மிருதியெனச் சொன்ன பொருளே யென்மடமை [லும்,
வெயில்பா யிருள்போல் விளிந்தோட விளம்பி யருள்வா யெனத்தொழ
உயிர்தோ றுயிரா யிருந்தபிரா னுவந்தாங் கருள வப்பொருளே
இயலீ சொன்பான் முனிவர்தமக் கிதயங் குளிர மனுவுரைத்தான்.(நக)

வளங்கொ ளிணைய கதையையுரை வகுத்தோர் கேட்டோ செஞ்ஞான்றும்
களங்க மகன்று மங்கலத்தாற் காதற் புதல்வர்ப் பேறடைவார் [த்தால்
துளங்கும் படர்கூர் தொல்லிவினைத் தொட்டர்ப்பா டொழிவா னெனத்தவ
விளங்கு முனிவ ருளங்கனிய விளைதீர் சூத முனிபுகன்றான். (நஉ)

[உசு-ஆவது. வேதவியாச ரத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கசஉசு.)

——:o:——

உஎ-ஆவது. அக்கினீசுரர் மகிமை யுரைத்த வத்தியாயம்.

ஆன்ற வின்னருட் டேசிகன் காழிவா ழுமலன தடிபோற்றி
ஏன்ற நான்மறை வகுத்தவா றுணர்ந்தன மென்றுமா தவரிப்பால்
சான்ற செந்தழல் வானவன் பணிந்தருஞ் சாபம்விண் டதுமிவ்வூர்த்
தோன்ற லெப்பிரா னளித்ததுஞ் சொன்மெனச் சூதமா முனிசொல்லும்.

உவணே வானவ ரிரிதர விருசுட ருறுகீலே தடுமாறத்
தவமு யன்றுளோ ரலமர வெண்டிசைத் தந்திகள் வெருக்கொள்ளக்
குவல யந்தனி னெளியவா யிரமுடிக் கோளரா வியல்சாய
அவனி யங்குவா னசுரிற் புலோமனென் றசனியன் னவன்மேனுள். (உ)

ஓர்வ ருந்தவப் பிருகுவை யிந்திர னுடுபுணர்ப் பினனென்னுத்
தீர்வ ருங்கொடு மொழியனம் முனிவனுச் சிரமமோர் தினத்தெய்தி
போர்வ ருங்குணப் பிருகுவு மொழிந்துள பேருமா யிடைக்காணுன்
சார்வ ருந்தவப் பன்னியை வேள்வியக் தலத்தினி லெதிர்கண்டான். (ங)

கண்டு மற்றவன் யாரைநீ யென்றலுங் கருவயிற் றினளாய
வண்டு வார்குழ லாள்பௌ லாமியா மறைமுனி யுயிர்த்தேவி
விண்டு நெஞ்சினி லதிர்ப்பினு னுரைதரா திருப்பவெய் யவன்வேள்வி
உண்டு தேக்கெறி வெஞ்சுடர்க் கடவுளே யுற்றிது பகர்கிற்பான். (ச)

புனித மிக்கநீ யறிகலாப் பொருளிலைப் புரியுமெச் செயற்கேனும்,
நனிசெய் சான்றுளா யாரிவ ளுரைக்கென நானியம் புறின்வேத, முனி
வன் வெம்புறு மொளித்திடிற் றயித்தியன் முருக்கும்வேற் றுரையா
டின், தனிவி ளக்குமென் றழுங்கியு முண்மையைத் துணுக்கினு லவன்
சொன்னன். (ஞ)

மற்ற வாய்மொழி கேட்டலுங் தடக்கையான் மட்வரல் வளரைம்
பால், பற்றி யிர்த்தலும் புரண்டனள் சிவவெனப் பன்முறைப் பெண்
மான்போல், உற்ற ரற்றினுள் கற்பினு மதிர்ச்சியி லுயிர்த்தசேட் டிளம்
பாலன், சொற்ற மேனியிற் பிரமகாங் தியினும்வெங் தூளியா யினன்
வெய்யோன். (கூ)

ஆய வேலையிற் சேயினை யேந்திநல் லகம்புகுந் தடல்வெய்யோன்
தீய செய்கையோர்ந் தடிக்கடி யினைவுழித் தேவர்கோன் மகமுற்றி
மேய நல்வளத் தொடுவரும் பிருகுவா மிக்கவன் மனையாடன்
பாய வெந்துனி யோதியி லுணர்ந்தனன் பையுள்கூர்ந் தனன்மென்மேல்.

கால மூன்றையு மொருங்குணர் பெருந்தவக் கருணையங் கடலன்ன
சீல மேன்மைசால் பிருகுமா முனிவரன் செயிர்த்துவெங் கொலையோவா
ஆல மன்னவா ளவுணனுக் குண்மையை யறைந்தசெங் தழலோனை
ஞால மீதுநீ சருவபக் கணனென நடக்கெனச் சபித்தானால். (அ)

இட்ட சாபமேற் றனலவன் சினமுறீஇ யீர்ங்கண்மா ஞாலத்துப்
பட்ட தன்கலை யாவையுங் கொடுசெலப் பன்மகச் சடங்கெல்லாம்
முட்டல் கண்டவி யெய்துமு வானவர் முகிலுறழ் மணிமேனி
வட்ட நேமியாற் குரைத்தலு மாங்கவன் வன்னியோ டிதுசொல்வான்.()

பரந்த நின்கலை பண்டுபோற் பரப்புதி பாரினின் முனிசாப
அரந்த வெந்துயர் நீங்குற முகிறவ ழும்பொனீ டெயிற்றேணி
புரந்த னிற்புகுந் தெந்தையா ராதனை புரிதியென் றலுநேர்ந்து
நிரந்த னன்கலை யனைத்தையும் விரித்தன னெருப்பினுக் கிறைமுன்போல்

விரித்த செந்தழல் விண்ணவன் பண்ணைநீர் விரியிதழ்க் கமலத்தே
வரித்த நீளிலை மீக்கொள வணங்குபு வாய்ந்தநெற் கதிர்தெண்ணீர்
பரித்த வள்ளநீர் பருகுறு மிவுளியின் பான்மைகாட் டியகாழிப்
புரிக்கண் வந்தன னயன்றட மாடினன் புரிந்தன னியமங்கள். (கக)

குய்ய காசியென் றிலகிய புகலிவாழ் குழகன தடிபோற்றித்
துய்ய வைந்தெழுத் தோதிமூ தெயில்கெழு சுடர்த்தளி வடகீழ்பால்
எய்பு முக்கணை யளவையுட் டன்பெய ரிலிங்கமொன் றதுதாபித்
துய்யு மாறுதன் பெயர்புனை தீர்த்தமொன் றுஞற்றினு னதன்றென்பால்.

பின்ன ரும்பல பூசனை நெடும்பகல் பேணினன் பயில்வான்முன்
வன்னி வேணியான் போந்துநின் பூசனை மகிழ்ந்தன முனிசாபத்
தின்னல் கூர்பட ரகல்கநீ பெறுவர மின்னமுங் கொள்கென்ன
மின்னி லங்கொளி யொள்ளழற் கிறையவன் விளம்புவா னுளங்கூர. (கஙு)

அளிய னேன்முயன் றிழைத்தவித் தடத்தினி லாடியீண் டமலேசன்
ஒளிம லர்ப்பதம் பரவினேர் சாபம்விண் டுறுபவ மகன்றேங்கி
விளிவில் போகமு மேலுவீட் டின்பமு மேவுமா தருள்கென்னக்
களிநல் யானையீ ருரியரைக் கசைத்தவன் கனிவொடங் கருள்செய்வான்.

அன்னி யம்படு நிந்தையி லொளிறுவே லரசர்செ யிடையூற்றில்
மன்னி மண்டிய வறுமையிற் கிரகங்கண் மாறிய விழுக்காற்றில்
இன்ன லெய்துறு தின்பமே வெய்துற வெழிலுலாம் பொழிற்காழி
வன்னி லிங்கமும் வன்னியங் தீர்த்தமும் வயங்குமால் வடகீழ்பால். (கரு)

வேறு.

இன்னணம் வழிபடு மெறிசுட ரிறையவ னிறையவ னருளாலே
தன்னமர் பதியினின் மருவிய பிறகொரு தாமெயில் வளர்காழி
மன்னவ னடிதொழு திகல்பெரு கினனென மதிமதி முனிசூதன்
சொன்னபின் முனிவர்க ளதுபுக லெனவகை தொகையொடு நனிகூறும்.

ஆதியி லொளியுமிழ் தமனிய வரைமிசை யமரர்கள் பலர்கூடி
மாதல மிசைபுரி மகமுழு திலுமொரு வழியுணும் வகையாதே
ஓதுதி ரெனவன லிறைபிரு குவினிட ரொருவல்செய் தருள்காழி
நாதனி லுமதரு மருவியவ் வுணவிணை நாணுரு வழிகொண்டே. (கள)

என்றுரல் குவனென விமையவ ரினிதென வெரிசுட ருயர்காழிக்
குன்றுறை முதல்வனி வரன்முறை பரவுபு குழைதர விடைமீதே
அன்றெனி யுடையவன் வரவருள் புரிதலு மலர்பொரு மிருதாளில்
சென்றெதிர் பரவின னிதுதரு கெனவிறை திருமுன மெழுகாவான். ()

என்னெனி லிமையவர் மன்னுரு வெவைகளு மெனதுரு வினிலாக
நின்னருள் புரிகென நிமலனு மருள்செய நிலமிசை யதுநாள்கொண்
டின்னண முருவொடு கடவுள ரவியுண வியன்மக விணைதோறும்
வன்னிநல் குவனிது மறுமுறை புகலியின் மருவிய வரலாறே. (ககூ)

இங்கிவன் வரவிது வன்கறை யிருள்கெட வெழுதரு மொளிவெய்யோன்
மங்கல வளமலி வெங்குரு வினிலுறை வரதன தடிபேணி
அங்கவ னுயர்நிலை தங்கின னெனமுனி யரசர்க ளதுகாதை
இங்கரு ளெனலும் விளம்பினன் மகிழ்தர வேதமின் முனிசூதன். (உ0)

[உஎ-ஆவது. அக்கினீசுரர் மகிமை யுரைத்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கசசசூ.)

——: o :——

உஅ-ஆவது. சூரியன் பூசித்த வத்தியாயம்.

வெங்குரு வினில்வா ழெந்தை மெல்லடி பணிந்து மேன்மை
அங்கியங் கடவுள்பெற்ற வடைவிது மகவா னுக்கும்
செங்கதி ரவற்கு முற்ற செருக்கினு லிவ்வு செய்தி
பங்கமி லுயர்ச்சி வெய்யோன் படைத்ததும் பகர லுற்றும். (க)

தமவலி துரக்குஞ் சோதித் தபனனுங் குலிச வேற்கை
அமரர்கா வலனு நீயே யதிகன்யா னதிக னென்னுக்
கமையிலார் மூரணி மேனுட் கலங்கினர் தடுப்பொன் றில்லார்
மமதைநோய் கொண்டார் யாரே மருந்துவே றுதவற் பாலார். (உ)

மூரணிய விருவோர் தங்கண் மொய்ம்பையாண் டளப்பான் றன்பால்
விரவின ருரைப்ப வன்னுன் விண்ணவர் வேந்த னென்பான்
உரமலி குலிச பாணி யொருவனீ தைய மின்றே
கரமலி கதிரோ யென்னக் கதிரவன் கனன்று பின்னுள். (ஊ)

கடவுளர் பலர்க்கு மேலாங் கருத்தனுங் கடல்சூழ் வையத்
திடனுளார் பலரும் போற்று மிறைவனும் பல்லா ருக
அடர்கரு மங்கட் கெல்லா மறிஞனு மாவே னென்னு
உடனும்வெங் கதிரோன் புக்கா னெனிதிரைப் பொன்னி வைப்பில். (எ)

ஈரிரண் டியற்கை வின்னே ரிருக்கையா யிருக்கை யாய்ந்தோர்
பேரியல் வளர்க்குங் காழிப் பெருநக ரெய்தி வேதன்
சீரிய தடத்து மூழ்கித் திருநிலை யழகி யென்னும்
காரிகை பாகன் செம்பொற் கழலிணை வழிபா டாற்றி. (ஏ)

அண்ணலே போற்றி விண்ணே ரதிபனே போற்றி மூன்று
கண்ணனே போற்றி சூலக் கையனே போற்றி சோதி
வண்ணனே போற்றி காழி வரதனே போற்றி யோர்பால்
பெண்ணனே போற்றி யாதிப் பிரமநா யகனே போற்றி. (ஐ)

இனையன புகழ்ந்து போற்றி யெந்தைவாழ் தளியி லாண்ட
கனைமதக் கன்றே யாதிக் கடவுள ரடிப ராவி
முனைவனு லயத்து மேல்பான் மூக்கிணை யளவைக் கப்பால்
புனைதிருக் கோலக் காவாம் பூங்கொன்றை வனத்திற் புக்கான். (ஒ)

பூமலர்க் கிழத்திக் கென்றும் புனையுமங் கிலிய மீந்த
மாமுழு முதலைப் போற்றி மற்றதன் கீழ்பாற் றன்பேர்த்
தாமரை வாவி தொட்டுத் தன்பெய ரிலிங்கந் தாபித்
தேமுற நனியா ராதித் திருந்தன னுலப்பில் காலம். (ஓ)

வேறு.

இவ்வழி யிருந்துழி யென்னை யாளுடை
மவ்வலங் கோதையாண் மகிணை னேற்றின்மேல்
அவ்வழி யினிதெழுந் தருள வேழ்பரி
வெவ்வெயிற் றேரினுன் வீழ்ந்து வாழ்த்துமால். (ஔ)

அய்யனே போற்றிநல் லழக போற்றிவான்
மெய்யனே போற்றிமால் விரிஞ்சன் காணருஞ்
செய்யனே போற்றியென் றுவந்து செங்கதிர்க்
கய்யனைத் தெடுத்தலுங் கடவுள் கூறுமால். (கஅ)

வளமலி பூசைநீ வகுத்த வண்ணமெம்
முளமகிழ்ந் தனமுனைக் குறுவ தோதென
இளமதி க்ண்ணியா யிமைக்கும் வான்முதல்
தளர்வின்முப் புவிக்கும்யான் றலைவனுகவும். (கக)

ஏவரு மெனைத்தொழு மெதிரில் செல்வமும்
தேவநீ யருள்கெனத் திருவு ளத்தினுல்
ஆவயின் மகிழ்ந்தவை யளித்துப் பின்னரும்
கோவுய ரியகொடிக் குழகன் கூறுமால். (கஉ)

இத்தலை நீபணிந் தியலி லிங்குமும்
உத்தமத் தடமுழுன் பெயரி னேங்குக
பத்தியா லிப்புனல் பானு வாரத்தில்
சித்திசெய் யானியா வணியிற் றேடியே. (கங)

தேளுறுங் திங்களிற் செயிரில் பங்குனி
நாளுறு மகத்தினி னயந்து மூழ்கியே
தாளுறப் பணிந்துநந் தமைப்ப ராவினேர்க்
காளுறு தருமமு மீனத்து மீதுமால். (கச)

நின்னெடு நெடுமொழி நிகழ்த்தும் வாசவன்
பொன்னிய ரேளினன் புவிக்கி ராமனுய்
மன்னுநாள் வாலியாய் வருவ னீயவன்
பின்னுதித் தவனுயிர்ப் பிரிவுசெய் தியால். (கஞ)

என்றுபல் வளங்களு மிரங்கி வெள்விடைக்
குன்றினு னளித்தனன் குவல யத்தின்மேல்
மன்றவத் தடத்திடை மருவி யாடினர்
பொன்றரும் பெரும்பிணி போக்கு வாரரோ. (கசு)

ஆறரும் விழிப்பிணி யங்க வீனம்வெங்
கூறதி காரமாங் கொடிய வன்பிணி
வேறற விலகிவெய் யவனில் வீறுபெற்
றேறெழின் மதனென விருக்கின் மூர்தமை. (கள)

கனியறி குவெனென கவின்று சூதனும்
முனிவரன் பின்னரு முதல்வன் காழிவாழ்
புனிதன தடியிணை போற்றி யுய்ந்தனன்
பனிமதி யென்றதன் பரிசங் கூறுவான். (கஅ)

[உஅ-ஆவது. சூரியன் பூசித்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கசசுசு.)

———:o:———

உகூ-ஆவது. சந்திரன் பூசித்த வத்தியாயம்.

தண்ணரு வுமிழுங் கடுக்கையங் கண்ணித் தாழ்சடைத் தனி
முதற் காழி, அண்ணருள் பரவி யாயிரங் கதிரோ னமரரி லுயர்நிலை
மேய, வண்ணமீ தன்ன மணிநகர் போற்றி வாலமு திறைக்கும்வெண்
கதிரோன், விண்ணுளோர் பழிச்ச வியனிலை யடைந்த வியப்பமும்
விளம்புவான் றுணிந்தாம். (க)

மிக்கமா தவந்தோய் தக்கனென் றுறுபேர் மிடலினு னளித்தமூ
வொன்பான், மைக்கருங் கூந்த லுடுநலார் தம்மை மதிக்கட வுளுக்குள
மகிழ்ந்து, புக்கநாள் வதுவை யாற்றின னவரைப் பொதுவறப் புணர்ந்
தனை வாழ்கென், றெருக்கநல் குதலு மியைந்ததண் கதிரோ னுறுமனைக்
கொடுமணந் திருந்தான். (உ)

தினந்தொறு மொருவர் வனமுலை திளைத்துச் செல்லுநாள் வல்
லிருங் கூந்தற், கனங்குழை யவரி லுரோகணி யிடத்துங் கன்னியங்
கார்த்திகை யிடத்தும், மனங்குழைந் தனையா னணிவிருப் பூர்ந்து
மணத்தல்கண் டதுபொரு தேனை, அனந்தரு நடையார் கொழுநன
தியல்பை யண்ணறந் தந்தைபா லுரைத்தார். (ஊ)

கேட்டலு மழன்ற தக்கனுங் கழுத கிரணனைப் பக்கமொன் றினி
லுன், னீட்டெழிற் கலைகள் யாவையுங் குறைக வெனச்சபித் திடலுமவ்
வாறே, நாட்டொறும் வைக ரேறுமோர் கலைபோய் நலிந்தன னிப்
பெருஞ் சாபம், வீட்டியா னுய்வ தெத்தல மென்னு மிக்குளங் கவன்ற
னன் விதுவே. (எ)

குரைகடற் புவியோர் குறித்தபல் பொருளுங் கொடுத்துவிண்
ணகத்துவா ழுநர்க்கும், புரையுறு மிடர்நோ யகற்றிவீ டளிக்கும் புரமது
தோணியம் புரமென், றுரையுள வதன்பா லெய்தியிவ் விடும்பை யொழி
குவ லெனவடு பதிதான், மரைமலர்க் கழனிக் காழிமா நகர்க்கண் வந்
தயன் றடத்துநீ ராடி. (ஏ)

இழுக்கறு நியதிச் சடங்குக ளாற்றி யியற்குரு லிங்கசங் கமமாம்,
முழுப்பரஞ் சுடரை வரன்முறை யிறைஞ்சி மூன்புகின் றன்புமீ தூர,
ஒழுக்குறு கண்ணீர் வாரமெய் சிலிர்ப்ப வுலையுறு மெழுகினுள் ளுருகி,
விழுப்பமீக் கிளப்பப் பழிச்சினன் பலகால் வெண்ணிலா வுமிழ்கதிர்
வேந்தன். (ஐ)

எந்தையா லயத்தை வலம்புரிந் தயல்போ யீர்ந்தநுண் பளிங்
கெனத் தெளிந்த, அந்தணீர் கொழிக்கும் விக்கினே சுரப்பே ரணிநதித்
தெய்வநீ ராடிச், சிந்துர வேணிச் சிறுவிழிப் புழைக்கைச் செல்வனுக்
கருச்சனை யாற்றிச், சந்தமோ தகமங் கருத்தியெம் புகலித் தலிவன்
வாழ் தளிக்குநேர் கீழ்பால். (ஒ)

மூக்குசோ சனைதூ ரத்ததாய் வசிட்ட முனிபணி திட்டையின் வடகீழ்ப், பக்கலாய் வில்ல வனமூல்லை வனமேல் பாலதாய்க் குருக் கைக்கு நிருதி, திக்கதாய் மாநீர்ப் புறவமா நதிக்குஞ் செம்பாம்பன் குடிக்குமோர் தெற்காய்த், தக்கசீர் விழுப்பந் தரப்பெரு நூலோர் சாற் றிய மூகூர்த்தமொன் றுய்ந்து. (அ)

அள்ளிலைப் புன்னை யகத்தினிற் றன்பே ரலங்குமோ ரிலிங்கமூ மப்பேர்த், தெள்ளுநீர்த் தடமூ மமைத்துவந் தனையுஞ் செய்தொரைந் தெழுத்துமந் நிழல்வாய், உள்ளுறக் கணித்துத் தவம்பல முயன்ற வொளியுலாந் திங்கள்வா னவன்முன், வள்ளைவார் குழைமென் கொடி யொடுங் குழகன் மழவிடை மீதுதோன் றினனுல். (கூ)

உவமனில் குணத்தாய் நினதுமா தவமீங் குவந்தனம் வரம்பெறு கெனலும், தவளமால் விடையாய் தக்கனெற் களித்த சாபமுந் தவிர்த்தி யென் பெயரில், புவனியிற் பொலியித் தடம்படிந் திவண்வாழ் புனித ரைப் போற்றுநர் யாரும், கவலுறும் வினைதீர்ந் தரும்பெறல் வீட்டிற் களிக்கவுஞ் செய்கெனக் கரைந்தான். (கo)

தலைவனு மவனுக் கவ்வர மளிப்பான் றக்கனெம் மடியனன் னவன்செய், உலைவறு சாப மொழிப்புரு தேனு முன்பணிக் குதவ வேண் டுதலால், நிலையுமுன் னுவாவி லொவ்வொரு கலையாய் நிரம்புவாய் பின்னுவா வினிலோர், கலையதாய்க் குறைவாய் வைகலுங் குறையுங் கலையையோர் கடளர்க் களிப்பாய். (கக)

வழங்குமவ் வரத்தா லொவ்வொரு கலையாய் வளர்கவிக் கலைவளர் பக்கம், அழுங்கலில் சுபமா மக்கலை நுகர்வோ ரனல்கதிர் விச்சுவ தேவர், முழங்குநீ ரிறைசட் காரனிந் திரனேழ் முனிவரோ டசகபா தன்பேர்க், கொழுஞ்சமன் வாயு கவுரிதென் புலத்தார் குபேரனெம் மொடுமயன் முறையே. (கஉ)

நந்தையே தொடங்கி நுகரநீ மறையோர் நாயக னெனும்பெயர் பெறுவாய், சந்ததம் பயிர்க ளெவைக்குமோ ரிறையாய்த் தயங்குவாய் பிணியெலாந் தவிர்ப்பாய், வந்தமூ வொன்பான் மகளிரை யியல்பாய் மணந்தனை வாழியப் புணர்ச்சி, அந்தமார் கடிகை நான்கினுங் கரும மாவன செயத்தகா வன்றே. (கங)

இப்பரி செவைபு மளித்தரன் விடைமே லிவர்ந் துவிண் பட்ர்ந்தன னுளந்தோய், வெப்புறு மிடர்போய்த் திங்களங் கடவுள் வியனுல கெய்தின னெனலும், ஒப்புறு முனிவர் சேடனைத் தியது முயர்கேது புரவர லாறும், துப்புறழ் சடையா யருள்கவென் றிரப்பச் சூதமா முனிவரன் சொல்வான். (கச)

[உக-ஆவது. சந்திரன் பூசித்த வத்தியாயம் முற்றிற்று.]
(ஆகத் திருவிருத்தம் கசஎஅ)

ஈ0-ஆவது. சேடனுங் கேதுவும் பூசித்த வத்தியாயம்.

வெள்ளி வெண்மதி மேலிகாட் டக்கன்வெஞ் சாபம்
தள்ளி யுய்ந்தவா றின்னதித் தனிநகர் சார்ந்து
புள்ளி ணீண்முடிச் சேடனுங் கேதுவும் போற்றித்
தெள்ளி யோரெனப் பெற்றது மொருவழி தெரிப்பாம். (க)

மூக்கு றும்பையு முருக்கிய காசிப முனிக்குத்
தக்க தேவியாம் வினதைதகத் துருவெனுந் தரத்தார்
மக்க ளெய்துவான் மணமலிந் தணியவன் மலர்த்தாள்
மிக்க வாதரத் தொடும்பணிந் துரைத்தலு மேனுள். (உ)

ஏல வார்குழல் வினதைகே ணின்வயிற் றிரண்டு
சீல வண்டம்வந் துயிர்ப்பவாண் டாயிரஞ் செல்லக்
கோல மைந்தராங் கவற்றுதிப் பாரெனக் கூறிக்
கால மூன்றுணர் முனிவன்மாற் றவட்கிது கரைந்தான். (ங)

உன்ன கட்டினி லண்டமா யிரமொருங் குதிக்கும்
அன்ன வற்றினீ யருமகப் பேறடை கென்னச்
சொன்ன வாற்றினு யிரஞ்சிறை கத்துருத் தோகை
தன்னி டத்துவந் தெய்தியோ ராண்டது தணந்தே. (ச)

கணிக்குமண் டங்க ளவற்றினிற் கணிப்பிலா தனவாய்
மணிப்ப ணடவிச் சேடனு தியபணி வரலால்
அணிப்பொ லன்றொடி மகிழவம் மகிழ்ச்சிகண் டழுங்கித்
தணிப்பி லாதொரு முட்டையை வினதைகைத் தலத்தால். (ஞ)

வெருவ வின்றியே தகர்த்தலு முனிவரன் விளம்பும்
பருவ முற்றுரு துதித்ததோ ரருணனூர் பாதி
உருவொ டெய்திமாற் றவட்குநீ தொழும்பியா யுழல்கென்
றருளில் சாபமொன் றன்னபா லளிப்பகொந் தணையாள். (ட)

மைந்த செய்துறும் விருப்பினுல் யானுமற் றவள்போல்
முந்து யிர்த்தலொவ் வாமையான் முட்டையைத் தகர்த்தேன்
இந்த வெங்கொடுஞ் சாபமீந் ததனையென் றிகப்பேன்
தந்து நீயிது தவிருமா றுரையெனத் தனயன். (ண)

ஏன மூட்டையி லெம்பிதோன் றுவனுனக் கென்னுல்
ஊன மெய்திய சாபமாற் றுவனென வுரையா
ஞான நாயகன் பூசையா லிரவிதேர் நடத்தற்
கான வெந்திறல் வலவனு யினனரோ வருணன். (அ)

ஈது நிற்கவவ் விருமடங் தையருமின் னளிசூழ்
தாது லாமலர்ச் சோலையாட் டயருநாட் டனிவிண்
மீது தோன்றிய் தேரொலி யதுசெவி விழலால்
ஓது கென்றகத் துருவினுக் கோதுவாள் வினதை. (கூ)

சதம கன்பரி யார்ப்பென விப்பரி தனக்கு
நுதலு மேனியெங் நிறமென முழுமையு நோக்கின்
எதிரி லாதவெண் ணிறமென வினதையாண் டியம்ப
அதனில் வாலதி கறுப்பெனக் கத்துரு வறைந்தாள். (கூ)

வாலு மவ்வொளி யென்றனள் வினதையிவ் வார்த்தை
ஏலு மேலுனக் கடிமையென் றனளவட் கிளையாள்
சாலும் வாலொளி கறுப்பெனி னடிமைநின் றனக்கியான்
வேலு லாங்கணு யாவெனென் றுரைத்தனள் விதியால். (கக)

இனைய சூள்புகன் றிவரகன் றிடலுமுன் னவடன்
தனையர் வானினின் றகந்தரு தியபணித் தலிவர்
துணைவி னெய்திரு ரிந்திரன் பரிநிறஞ் சொல்வீர்
வினைய மிக்குளீ ரென்றலும் வெண்ணிற மெய்யே. (கஉ)

மேனி தன்னிலும் வெண்மை வாலென்றலு முணர்ந்த
காணி ருங்குழல் கறுப்பென வுரைத்தவென் கடுஞ்சூள்
ஈன மெய்துரு திருண்டவா ளாவெலா மிமையோர்
கோனு லாம்பரி வாலினை மறைத்திரென் குறிப்பால். (கங)

என்ற வாய்மொழி கேட்டலு மென்னிது வன்னுய்
ஒன்று தீமைசெய் துயர்வதி லொழுக்கினு லுடைந்தால்
வென்றி யெய்துமா லறம்பிழைத் திடினுமே லோரைக்
கன்றல் செய்யினு நிரயமெய் துவர்பல காலம். (கச)

தரும முந்தெறு மென்றிரு காதையைத் தாய்பால்
ஒருமை மைந்தர்க ளுரைப்பமுன் னளனெனு முறுபேர்
நிருப னீதிசெய் தளிக்குநாட் கலிவலி நெருக்குண்
டருநி லந்துறந் தெய்த்துமவ் வறங்கெடா மையினுல். (கடு)

நவையு றுங்கலி யகன்றிரு நளிமதிக் குடைக்கீழ்ப்
புவிய ளித்தன னின்னமு மவன்பெயர் புகன்றிரூர்
எவரும் வெங்கலி நீங்கலா னன்றியை யிகந்தோர்
தவறி யம்பினேர் வஞ்சக ருய்வரோ தரைமேல். (கசு)

அன்ன தாலடா தென்றலு மன்னைமுன் னுகச்
சொன்ன தெய்வம்யா னெனமொழி மறுத்தநீர் துகடீர்
மன்ன வன்சன மேசயன் சத்திர மகத்தீத்
தன்னி லாகுதிக் காகுதி சென்றனள் சபித்தாள். (கஎ)

ஆய போதர வரசருண் ணடுங்கியீன் ருலே
ஏய வந்தனே புரிதலு மென்மொழி கேட்பின்
மேய மாமுனி யத்திக ணும்மையிவ் வேள்வித்
தீயு ருவகை தெரிப்பனஞ் சலிசெனத் தெரித்தாள். (கஅ)

அவ்வு சைக்குடன் படுகிலா ராகந்தனே யாதி
வெவ்வெ யிற்பொழி மணிப்பணு டவிப்பணி வேந்தர்
எவ்வ மிக்கவிச் சாபமெவ் வாறினி யிகப்பேம்
கவ்வை தீர்நெறி யாதென மனத்திடை கவன்றார். (ககூ)

அறிந்தி ழைத்தவல் வினைதொலைத் தரும்பெறல் வீடு
சிறந்த ளிப்பதுங் காழியம் பதியெனத் தேறி
மறந்த ழைத்தசேட் டகந்தனு தியெலாம் வல்லே
உறுந்தி றத்தில்வந் தெய்தினர் வெய்துற லொழிவார். (உ0)

வரச ரோருகன் றெய்வநீர் படிந்துநன் மலர்தூஉய்ப்
பிரம நாயகற் பணிந்தரு ளுமையிடம் பிறங்கும்
குரவ னீரடி தொழுதுகஞ் சுகத்தனிக் கொழுந்தின்
சரண மேத்திநின் றிருநிலை யழகிதா டாழ்ந்தார். (உக)

உலவை யந்திசைக் கடவுணு சேசனின் புறுதாட்
சலச மேத்திவெள் வளைகள்பந் தெனவெறி தரங்கம்
இலகும் விக்கினே சுரப்பெரு நதிபடிந் தெவரும்
மலரு லாம்பொழில் சூழ்கேது புரத்தினில் வதிந்தார். (உஉ)

வேறு.

வரமலி சூத முனிவனிவ் வாறு வகுத்தலு மருந்தவ ரெமக்கோர்
புரவல கேது புரிவர லாறென் புகலுக வென்றலு மேனுள்
சிரபுரப் பெருமை தெரித்துழி யந்தச் சிரமது நீங்கிய வுடற்கு [றே.
றுரகனெம் பரனுற் கேதுவென் றொருபே ருற்றனன் பெற்றதை யன்

ஆங்கவன் கமலத் தந்தண னமைத்த வருட்பெருங் கடவுணீ ராடி, ஓங்குல களித்த திருநிலை யழகி யொடும்பிர மேசனை யிறைஞ்சிப், பூங் கொடிக் கருள்செய் பெரியநா யகன்றன் பொன்னடி படிந்துயர் குவட் டின், பாங்கமர்ந் தனையாள் கஞ்சுக முதல்வன் பதந்தொழு தாலயக் கீழ்பால். (உச)

உளந்தரு மெல்லி யொருகோ சத்தி னெண்ணரு வூற்றெழுந் தொழுகும், துளங்குபொற் றுணர்தூங் ககன்கினை சாதித் துருமமூ லத்தினி லெவர்க்கும், வளந்தருங் கடவு ளிலிங்கமொன் றமைத்து மணிதெளித் தனையமா தீர்த்தக், குளந்தனி கண்டு வான்முறை பூசை குழைவொடும் புரியுநா ளாங்கே. (உரு)

ஒள்ளிய தகட்டு நெட்டுடல் வாளை யுகளுபு தாக்கலு மூயர்ந்த, வெள்ளிவெண் பாளைப் பசுங்கமு குகுத்த விழுத்தகு தாற்றிளம் பழுக் காய், தெள்ளொளிப் • பவளத் திரளென விமைக்குஞ் செழும்பணை யுடுத்தமென் காழி, அள்ளிலைச் சூலத் தொருமுதல் விடைமே லணங் கொடு மெழுந்தரு ளினலுல். (உசு)

எழுந்தரு ளிமைய வில்லியைக் காணூஉ விணைவிழி பனிப்பமெய் சிலிர்ப்ப, அழுங்கலி லார்வ மீமிசை பெருக வலர்கடூஉ யங்கைமேன் முகிழ்த்து, விழுந்துபன் முறையால் வணங்கிநின் ருனை விடைக்கொடி யுயரிய பெம்மான், ஒழுங்குறு நினது பூசனை மகிழ்ந்தே முறுவது கேளென வனையான். (உஎ)

பழமறை மலர்ந்த பவளவாய் முதல்வா பனிப்பகை வானவன் றன்னைக், கிழமையான் மறைக்கு மியலும்வெவ் வேறு கேழ்கிளர் கோள்களோ டியாணும், நிழல்பெறு வலியு மளித்தியென் றிரப்ப நீறிற வண்ணனே டரிய, கழலினு னவனுக் கவ்வர மாங்கே கருணையா லளித் தன மென்ருன். (உஅ)

என்றபூங் கடுக்கை யீர்ந்தொடை யாகத் தெம்பிரா னணங்கொடு மேற்றுக், குன்றினை யுகைத்தாண் டினிதெழுந் தருளக் கோட்டமின் மனத்தொடுங் கேது, துன்றுபல் வளங்கூர் தனதுல கணைந்து துளக்க மில் வலிபடைத் திருந்தான், அன்றுதொட் டதனுன் முனிவிர்காள் கேது புரியென லாகிய தவ்வூர். (உக)

உரைதரு மனையான் செவ்வரா வருக்கொண் டுறைதலான் முறை மையா லிதற்கே, குரைகட லுலகத் திலகுசெம் பாம்பன் குடியெனப் பெயர்பெறு மிதன்கண், நிரைமணி மௌலிச் சேடனே யாதி நீள்சின மாசுணத் தலைவர், விரைமலி கேது தீர்த்த நீராடி விதிமுறை நியதிமுற் றினரால். (உ0)

ஒருகண மேனும் பணிபவ ரிடையூ றெழுதிருு மையினுமெய் யுறுதி, தருபரன் கேது நாதன்மென் கமலத் தாண்மிசை நாண்மலர் தூவி, வருசிர முழந்தா ளுரங்கரஞ் செவிகீழ் வாய்புய முந்தியென் றிவற்றுல், தெருளுமோ ரைந்து மெட்டுமென் றியற்றுந் தெய்வவந் தனைபுரிந் தனரால். (உக)

ஆண்டினி திருந்த வமலனு ரருளா லன்னைவெஞ் சாபமு நீங்கி, ஈண்டிய விழுப்ப மெய்தின ருயர்ந்தா ரிப்புன லாடியிம் முதல்வன், வேண்டிய தளிக்கும் பதந்தொழப் பெறுவார் விணையொடுங் கிரகமோ யொருவி, நீண்டமெய்ஞ் ஞானத் தொன்றியொன் ருகன் னிலையினி னிலவுவ ரன்றே. (உஉ)

[உ0-ஆவது. சேடனுங் கேதுவும் பூசித்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கருக0)

ஈகு-ஆவது. அண்டநாயகர் மகிமை யுரைத்த வத்தியாயம்.

புண்டரிக வயற்காழி புரத்தநந்தன் முதலானேர் போற்று மாறும், பண்டடல்சேர் கேதுபுர வரலாறும் பகர்ந்தனையிப் பதியை மேனுள், அண்டமெலாந் தொழுதமையும் புகன்றனையா லதனைவிரித் தருள்வா யென்ன, எண்டவத்தோர் தொழச்சூத முனியுரைத்த வியலொருவா றியம்ப லுற்றேன். (க)

குணங்குறிகா ரணங்கட்டந்த தனிமுதல்வ னுயிர்க்கருள்வான் குறித்தோர் கற்பத், திணங்கவரு முடிவதனில் விச்சையினின் றண்டமெலா மியற்றுங் காலை, மணந்தபிரு திவிக்குநிறம் பொன்னெனவா யிரங்கோடி வகைசே ரண்டம், கணந்தனிலே விரித்தவற்றை யினிதளிக்க வயனுதி கடவு ளோரை. (உ)

மாணுறுதண் கலையிருத்தி யதிகார முதல்வனென வகுப்ப வன்னேர், ஏணுமுறை யளிபுரிந்து வருநாளி லவர்பலரு மீண்டி யென்றும், பூணுமுது ஞானமுதல் விசையுமிசை வான்விழையும் போதன் னேரில், காணுறுநரன் முகன்கலையாங் கடவுளரங் கவையடையக் கருதிச் சொல்வார். (ங)

தீட்டரிய பழமறைதா னுரைப்பதுமுப் பொருளாகித் தெளிசேர் நெற்றி, நாட்டமுறு தனிமுதல்வன் வதிவதுதே ரூழிபுக்க நாளு மூங் நீர்க், கோட்டமிசை பொலிவதுதென் பிரமபுரம் பரவினுளங் குறித்த வெல்லாம், ஈட்டமுறு மெனலோடு மெனையண்ட முதல்வருமங் கியைந் தார் பின்னர். (ச)

வென்றிதரும் புலியூர்க்குத் தென்றிசையிற் புள்ளிருக்கு வேளூ ருக்கு, நன்றிசையீ சானத்தில் வள்ளலுறை முல்லைவன நகர்க்கு மேற் கில், பொன்றிகழுங் குரைதிரைய பொன்னிநதி வடதிசையிற் புலவர் போற்ற, என்றுமுலப் பருமிறும்பூ தெய்தியதென் பிரமபுரத் தெய்தி னாரால். (ஞ)

அல்லியந்தா மரைக்கிழவன் றடத்தாடிப் பிரமேச னலர்தாள் போற்றி, வல்லியுமைக் கின்னருள்கூர் தோணிமதி வேணியனை வழிபா டாற்றிச், செல்லியலு மேனியிலு னென்பையொரு கதையாகச் செங் கை கொண்ட, எல்லியலும் வடுகேச னிணையடித்தா மரைபரவி யேத்தல் செய்தார். (ட)

பூரணபுங் கவபோற்றி புண்ணியநன் னிதிபோற்றி புரைமை தீர்ந்த
ஆரணசுந் தரபோற்றி யாடகநா டகமன்றத் தாடி போற்றி
நீரணவு மணிவேணி நித்தியதத் துவபோற்றி நிமல போற்றி
காரணகா ரியங்கடந்த சிவபோற்றி காழியருட் கடலே போற்றி. (ண)

என்னவருந் துதிபலவு மேத்தியண்ட மூர்த்திகடா மிமய வில்லி, தன்னமர்பொற் கோயிலின்முக் கோலளவைத் தாய்வடமேற் றலியி னுகப், பொண்ணணிதா ரிலிங்கமொன்று தாபித்துக் குடக்கினெரு புது நீர்த் தோயக், கன்னிமலர்த் தடமியற்றி யருச்சனையின் முறைநின்றூர் கணிப்பில் காலம். (அ)

அருந்தவங்கள் பலமுயலு மண்டமூர்த் திகண்முன்ன ரடல்வெள் ளேற்றின், முருந்துறழு முகிழ்நகையோ டெழுந்தருளி யெனையாளு முதல்வ னீண்ட, திருந்தியநும் பணிமகிழ்ந்தேம் விழைந்தபொருள் கேண்மினெனத் திருமால் செங்கண், இருந்தமலர்ப் பதம்பரவி யெழுந் துகுழைந் திதுகேட்பா ரெவரு மாங்கே. (கூ)

நின்பதுமச் சேவடிக ளெங்களகத் தெனுந்தடத்தி னிலவல் வேண் டும், பின்புலகி லழியாத பேரிசையும் பெறல்வேண்டும் பெரும வென்ன, அன்புரிமை யறிந்தமல னவையளித்து விண்ணிலெழுந் தருளி நாளும், மன்பதைகள் பணிந்தேத்து மண்டநா யகனெனும்பேர் வகிந்தான் வள்ளல். (கo)

அளப்பரிய களிப்பொடண்ட மூர்த்திகளு மியைந்ததலத் தடைந் தா ரன்னோர், விளக்கியபூங் குளத்துவந்து மாசிமதி யாடியந்த விமலற் போற்றி, வளப்படுமா ணிதிமாதர் மக்களொடு நலனுகர்ந்து மறுமை வீடும், துளக்கறுமா றெய்துவரத் தலத்தியலித் துணைத்தெனையாஞ் சொல்லற் பாற்றே. (கக)

இங்ஙகரி லிழிந்துபத மைந்தோதி நீறுபுனைந் தெந்தை வேடம், தன்னையணிந் தவர்பேற்றை யானுரைக்குந் தரத்ததுவோ தவத்தீ ரென்ன, அன்னவற்றின் பெருமையுமீங் கருளுகென்று முனிவர்தொழ வளிசால் வேத, நன்னிலையிற் பகுத்தவன்றூள் சென்னியில்வைத் தருண்முனிவ னவில லுற்றான். (கஉ)

பரம்பரான துருவாகிப் பிரணவத்தோ டொன்றியவைம் பதத்தைச் செவ்வே, சுரந்தமுவு சிவவடத்தான் மூப்பொழுது தூற்றெட்டுக் கணிப் போர் வேதம், உரந்தருமங் கத்துடனே பகர்ந்தபய னடைகுவரீ துயர்ந்த மூன்று, நிரந்தகுலத் தவர்க்காகு மைந்தெழுத்தெக் குலத் தார்க்கு நிகழ்த்த லாமால். (கங)

மருவலுறு பதவிகட்கு முதன்மையதா யெழுகோடி மனுக்களுக் கும், கருதுகடு நாயகமாய்ப் பரனுருவா மைந்தெழுத்தைக் கணித்தோர் யாரும், நிருமலன துருவாவார் நிகழும்பா ராயணத்தை நீத்தோ ரேனும், ஒருபொழுது நீறணிந்தீ தெண்ணுவரேல் வல்வினையை யொருவு வாரால். (கச)

குரையிருளு லொடுதும்மல் கோட்டாவி யுறிலாயுக் குறையா வண் ணம், உரைதருமிவ் வைந்தெழுத்தை யுச்சரித்தல் விதிமதியா லுணர்ந்

றும் பாவம், புரைவிடற்கு மிதுதுணையாம் பூதிங்க ளொழுக்கமும்புண் ணியமும் போற்றும், விரதமுமொன் றினதறஞ லெக்காலு நீறணிவார் மிக்கார் மாதோ. (கடு)

புண்ணியநீ றணிகல்லார் புரிதருமப் பயனின்றும் புரிதா னத்தார், அண்ணரிய கும்பிபா கத்தழிவார் மனுவொடுமற் றதுவின் றேனும், கண்ணுதனீ றணிவாரைக் கண்ணுறில்வல் வினையகலுங் கடவு ணீற்றை, ஒண்ணுதலி னணியாரைக் காணினிர வியைக்காணி னெழியும் பாவம். (ககூ)

வாளிரவி காணுரே விலிங்கத்தைச் செந்தழலே வளஞ்சே ராவை, நீளறலே வேதியரைப் பொன்னெயுருத் திரமணியை நெறியே காணின், மூளுறும்வல் வினையகலு மிங்நீற்றின் வகுப்பையினி மொழியின் யாண்டும், நாளுறுவேள் வியினீறும் வேள்வியினீ றும்மறையோர் நயக்க லாமால். (கஎ)

ஏணைமுது குலத்தவருக் கியன்றசிவ நிசியினில்வா ளிரவி தோற் றத், தானசுசி யொடுகொணர்ந்த கோமயத்தைப் புனிததலத் தலங்கு வில்வத், தூனமின்மெல் லிலையொடுசேர்த் துண்டையமைத் துமியிடை யிட் டொளிருந் தீயால், ஈனமற விளைந்ததனைச் சிவகாயத் திரிமனுவா லெடுத்துப் பின்னர். (கஅ)

வரியரவம் புரிசடையான் றிருமுனிட்டுப் பதினென்று மனுவா லோதித், திரிதலிலெண் ணிருகூறு செய்தவற்றுட் சிவபொருமான் றிறத்தா லொன்றும், உரியசிவ வேதியர்பா லொருமூன்று கூறுமளித் தொழியீ ராறு, விரிதருகூற் றையுங்கொடுபோய் மதிக்கொருகூ றுய ணிய வேண்டு மாதோ. (ககூ)

வேறு.

சாருமிவ் வியல்வெண் ணீற்றைத் தரித்துளார்க் குலக மூன்றில்
நேருறுப் பொருளொன் றில்லை நிகழிவன் கிளையி னுள்ளோர்
ஆருநன் கயிலை சேர்வா ரண்ணல்கண் மணிமற் றெம்மான்
சீருறு மூருவ மென்பார் தெளிந்தவா லறிஞர் மாதோ. (உ0)

மருவுருத் திரன்க ணின்று வந்ததோ ருருத்தி ராக்கப்
பெருமையை யேவ சேயோ பேசுவா ரதனை நன்றுய்ந்
தொருமுக மாதி முன்னுன் கொளிமுக மளவும் பூண்பார்
குருமணி வேணி முக்கட் குழகன துருவைச் சேர்வார். (உக)

தீயுமிழ் கணிச்சி யண்ணற் றிருவிழி மணியின் சும்மை
மேயவான் கழுதை யொன்று மேற்கொளீஇ விந்த வெற்பில்
போயு யிருலந்து மன்ன புண்ணியப் பொருட்டா லன்றே
மாயிருங் கயிலை மீது வதிந்ததோ ருழி காலம். (உஉ)

இம்மணி யொன்று சூடி யியங்கிலோ ரடிக்கொன் றூக
மெய்ம்மலி வாசி வேள்வி வியன்பல னடைவார் மிக்கீர்
எம்மனோர் விரித்துக் கூறு மிட்டதோர் நியுத மேனும்
அம்மவர் யிரம தேனு மைஞ்ஞூறே யெனினு மாங்கே. (உங)

பரிந்தனர் வனியி லீசன் பதந்தனி லடைவார் கண்டம்
தெரிந்தவான் சென்னி திண்டோள் சேர்மணிப் பந்தந் தன்னில்
அரந்தையில் லாத நூற்றெட் டதிற்பாதி பாதி யீரெட்
டரந்தரு முபவீ தத்து மொண்சிகை யினுமொவ் வொன்றே. (உச)

செவியினி லொவ்வொன் றூத லாறுதல் சிவண வேய்ந்தாங்
கவிர்மதிக் கண்ணி வள்ள லேந்தெழுத் தோது கிற்பான்
புவியின்மா னுடவ னேனும் பூதேச னவனன் னேனை
எவரெதிர் தொழினும் வல்லே யிகப்பரால் பிரம கத்தி. (உஞ)

இத்தகை வலிமை சான்ற யெந்தைகண் மணியை நீற்றை
பத்தியா லணிந்து காழிப் பதியினில் வதிவோ ரன்றே
முத்தரா குவரிவ் வூர்க்கு முக்குரோ சஞ்சு மெல்லை
மத்தியி லுதித்தோர் யாரும் வருணவேற் றுமையொன் றில்லார். (உசு)

இங்குலப் புறுவோர்க் கெல்லா மெதிரணங் திமய வல்லி
பங்கனஞ் செவியி லேந்து பதந்தனை நுவலு மாற்றல்
அங்கவர் சீவன் முத்த ராதலா லந்த னீர்காள்
வெங்குரு நகர்க்குச் சீவ முத்தியூ ரென்பார் மேலோர். (உஎ)

சேற்றெழும் பகட்டு வாளை செம்பழுக் குலைகள் சாயத்
தாற்றிளங் கமுகிற் பாயுஞ் சண்பையின் வியப்ப மெல்லாம்
போற்றுமிக் கதையை யாரே புகலினுங் கயிலை வெற்பில்
ஆற்றலோ டமர்வார் முன்னை யரும்பவத் தொடர்பு மாய்த்தே. (உஅ)

ஆயிரஞ் சிவநி சிக்க ணருந்துயில் யாம நான்கும்
ஏயுரு தெந்தை பூசை யியற்றுறு பலனைச் சார்வார்
நாயகன் றிருமுன் காழி நற்கதை யங்ஙா ளாய்ந்து
நேயமோ டுரைப்போர் கேட்போர் படித்துளோர் நிகழ்த்தி னம்மா. ()

கதையிது புகல்கிற் பார்க்குக் காஞ்சனங் கூறை நல்லான்
முதலிய வளித்துப் பூசை முற்றினேன் றன்னை யாதி
மதவிடைப் பாக ஞான மகிழ்தரு மனத்தா லீட்டும்
இதமறு விஞ்ஞுநீங்கு மிம்முறை புகன்று ளோர்க்கே. (கூ0)

இதிலொரு காதை கேட்கு மிடையிலெய் யாமை யாலே
மதிபிறழ்ந் தெழுவா ராயின் மாணிதி மனேவி யில்லம்
பதிமுதற் பலன்க டுய்க்கும் பருவத்தி னிடையூ றெய்திக்
கொதியழற் கும்பி பாகங் குளிப்பரான் மறுமைக் கண்ணும். (நக)

சென்னியிற் பஞ்சி யாத்துத் தேறுமிக் காதை கேட்போர்
வெந்துனை யெயிற்றுப் பாந்தள் வேசரி யாவ ரக்கால்
புன்னிய வடைக்காய் மென்றேர் பசும்புழு நுகர்வோ ராவர்
அந்திலை வணங்கார் கேட்பி னலறுவாய்க் காரி யாவார். (நஉ)

ஓதுந ரிருக்கை மீக்கொண் டுறைகுந ரெருவை யாவார்
ஏதுற வடைய வொப்பா யிருப்பவர் கோழி யாவார்
போதுமிக் கதையை வேட்டோர் புகன்றுளோர் படித்தோர் தம்மைத்
தீதுரைத் திடுவோர் நாயா யோந்தியாய் செனிப்பா ரன்றே. (நங)

முறையித து விரிக்கின் றேரை முகமனன் கியம்பார் மாநீர்
அறைமுரற் றவளை யாகி யையிரு பிறவி யீனப்
பொறையுடைக் கரமு மாவார் புராணமீ துரைசெய் கின்ற
துறையிடை யிடர்செய் வாரேற் றுளையெயிற் றுரக மாவார். (நச)

புகலியா ளுடையான் காதை பொறித்ததோர் முறைக்குஞ் செவ்வே
பகருநர் தமக்குந் தூய பலகைகம் பளங்க ளீந்தோர்
துகளினேழ் மனுநாட் காறுஞ் சுவர்க்கபோ கங்க டுய்த்து
நிகரிலா முத்தி வீட்டி னிலவுவர் மெய்ம்மை யீதால். (நடு)

துகிரிளஞ் சடையி னுனுந் தொல்லுல கெல்லா மீன்ற
நகிலிளங் கொடியு மாங்கே நன்முனிக் கணங்கள் போற்ற
மகிழ்மலர் மகள்சேர் காழி மான்மிய மனேத்துந் தேர்ந்து
பகர்தரு மிடத்து நீங்கார் பயில்வரீ துண்மை யுண்மை. (நசு)

மாதியல் பாகன் காழி மான்மியம் படிக்கி னீரெட்
டாதியம் புராணஞ் சொன்ன வடைவொக்குங் கவியொன் றேனும்
பாதியே யெனினு மேக பாதமா யினுஞ்சொன் னோரும்
நீதியால் வினவி னோரு நேர்படார் மறலி யாடல். (நஎ)

பட்டிமை விளைப்போர் பொய்ம்மை பகருவோ ரயலோர் தம்மை
இட்டிடர் சொல்வ ரேனு மிக்கதை யொருகாற் கேட்பின்
ஒட்டிய வினைக ளெல்லா மொருவிமா சகல்வார் கண்டீர்
சுட்டியோர் வரிய ஞானத் துறைக்கடல் படிந்த தொல்லீர். (நஅ)

பொற்புறு மெயில்சூழ் காழிப் பொருப்பினீ நீல கண்ட
வெற்பென வுரைப்பா ரிந்த வெற்பினைப் பணிகின் றோரும்
அற்புறத் தொழுதுய்ந் தோரை யாற்றெதிர் தொழப் பெற்றோரும்
கற்பனை கடந்தோன் செம்பொற் கழலினை யடைவா ரன்றே. (ஈக)

இவ்வகை யருண்மீக் கூறி யியலுமா மறைக ளெல்லாம்
செவ்விதின் வடித்த மேலோன் றிருவருள் படைத்த சூதன்
அவ்விய மகன்ற நோன்மை யருந்தவச் சவுன காதி
மெய்வ்வழி முனிவர்க் கெல்லாம் விருப்புற விளம்பி னானே. (சஂ)

[ஈக-ஆவது. அண்டநாயகர் மகிமை யுரைத்த வத்தியாயம் முற்றிற்று.]

(ஆகத் திருவிருத்தம் கருடஂ.)

——: o :——

பொங்குபவு டிகபுரா ணத்தி ரொன்பான்
புகல்பிரமாண் டத்தொன்று காந்தந் தன்னில்
சங்கரசங் கிதையிலொன்பான் சனற்கு மார
சங்கிதையி லொன்றுமும்மைப் பரிச்சே தத்தில்
அங்கொருபன் னொன்றத்தி யாய மாக
வறைதருநாற் பதுந்தமிழான் முப்பத் தொன்று
இங்கவையா யிரத்தைஞ்ஞூற் றைம்பான் செய்யு
ளெனக்காழி மான்மியந்தா னியன்ற வாறே.

வாழி.

கார்வாழ்க வானவரா னினம்வாழ்க வருசெங்கோற் காவல் வேந்தன்
பார்வாழ்க மறைவாழ்க வெண்ணீறு மைந்தெழுத்தும் பாவி வாழ்க
ஏர்வாழ்க வேணுபுரி வாழ்கசிவ னடியார்க ளென்றும் வாழ்க
சீர்வாழ்க விந்நூலை வாழ்த்துநரும் கேட்குநரும் சிறந்து மிக்கே.

சீகாழித் தலபுராணம் முற்றிற்று.

ஸ்ரீசம்பந்தகுரவேநமः

திருச்சிற்றம்பலம்.

சூசீபத்திரம்.

அத்தியாயங்களின் பெயர்.	பக்கம்.
அக்கினீசுரர் மகிமை யுரைத்த வத்தியாயம் ...	௧௬௯
அண்டநாயகர் மகிமை யுரைத்த வத்தியாயம் ...	௧௯0
ஆபதுத்தாரண வத்தியாயம்	௧௨௯
கடவுள் வாழ்த்து	ழ
கழுமலநதி வரவுரைத்த வத்தியாயம்	௧௩௪
கழுமல்மான வத்தியாயம்	௧௧௨
காகவிமோசனமான வத்தியாயம்	௬௩
கிளி யுபதேசித்த வத்தியாயம்	௫0௧
குமரவேளுபதேசம்பெற்ற வத்தியாயம் ...	௪௪௰
குருத்துரோக விமோசனமான வத்தியாயம் ...	அ௰
கோச்சையான வத்தியாயம்	ஙூ
சண்பையான வத்தியாயம்	ஙூ
சந்திரன் பூசித்த வத்தியாயம்	௪அ௪
சிரபுரமான வத்தியாயம்	அ௨
சூரியன் பூசித்த வத்தியாயம்	௪அ௧
சேடனும் கேதுவும் பூசித்த வத்தியாயம் ..	௪அ௯
தலவிசிட்ட வத்தியாயம்	௨அ
திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதாரவத்தியாயம்	௧௰0
திருநகரச் சிறப்பு	௧ங
திருநாட்டுச் சிறப்பு	சு
திருவிழா வத்தியாயம்	௪௰
தீர்த்த மகிமை யுரைத்த வத்தியாயம்	௧௯௨
தோணிபுரமான வத்தியாயம்	ஙூ
பிரமபுரமான வத்தியாயம்	ஙூ
புகலியான வத்தியாயம்	ஏஅ
புராண வரலாறு	உங
புறவமான வத்தியாயம்	௧௯
பூதவிமோசனமான வத்தியாயம்	ூ
பூந்தராயான வத்தியாயம்	௧௨0
மலிவரவுரைத்த வத்தியாயம்	௧௨௨
வடுகநாத வத்தியாயம்	௧ஏ0
வெங்குருவான வத்தியாயம்	சுஅ
வேணுபுரமான வத்தியாயம்	௫0சூ
வேதவியாசரத்தியாயம்	௧ஏ௰
ஸ்ரீகாளிபுரமான வத்தியாயம்	சூ0

PRINTED AT THE KUMARAN PRESS, SHIYALI.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீகாழிப் புராண வசனம்.

காப்பு.

காழி யாண்ட களிற்றை வணங்குபு
போழி ளம்பிறைப் புண்ணியன் மாக்கதை
வாழி யென்று வழுத்தும் வசனநூல்
ஊழி யோங்கு முவக்கு முலகமே.

க. புராண வரலாறு.

ஸ்ரீநைமிசாரண்ய வாசிகளான சவுனகாதி முனிவர்கள் சூத முனிவரை நோக்கி முனிசிரேஷ்டரே மூர்த்தி தலம் தீர்த்தம் முதலிய விசேஷங்களை உடைய கழுமல நகரின் சிறப்பையும் பிரமேசர் பிரபாவத்தையும் பொன்னி நதியின் மேன்மையையும் எங்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்று விண்ணப்பிக்கச் சூதமுனிவர் சொல்லுவாராயினர். சோழவளநாட்டிலே ஸ்ரீகாழி மாநகரானது நாலு பக்கங்களிலும் பொன்னி நதியினால் சூழப்பட்டுள்ளது. இப்பதியில் பரமசிவன் உமையோடு கூடி மலையின்கண் வீற்றிருத்தலால் இது கயிலைக்குச் சமானமானது. பிரமதேவர் இப்பதியின் பெருமானைப் பூசித்துப் படைத்தற் றொழிலை மேற்கொண்டார். இதற்குக் கழுமலம் தோணிபுரம் முதலிய பல திருநாமங்கள் உண்டு. பரமசிவனே குரு லிங்க சங்கமம் ஆகிய மூவுருவுடன் இப்பதியில் எழுந்தருளியிருந்து ஆன்மாவுக்கிரகஞ் செய்துகொண்டிருக்கின்றார். பிரமதேவர் ஒருகாலத்தில் இக்கழுமல நகரத்தை ஒரு தட்டிலும் மற்றைத்தலங்களை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்து மற்றவை யெல்லாம் இக்காழிமா நகரில் 16 ல் ஒரு பங்குகூடச் சமமாகாவென்று கூறினதைக் கேட்ட பராசர முனிவர் இங்கு வந்து பூசித்துப் பேறுபெற்றார். இத்தோணிபுரத்தில் வீற்றிருக்கும் சட்டைநாதரைத் தியானிப்பவர் அடையும் பலன்களைச்சொல்ல எவராலும் முடியாது. இந்தத் தலத்தில் அங்கப்பிரதக்ஷணம் புரிவோர்

அடையும் பலன்கள் எண்ணிலடங்கா. கற்பகாள் இறுதியிலும் அழியாமல் நின்று நிலவும் இக்காழிப்பதியில் கைலாயபதி என்றும் எழுந்தருளியிருப்பர். திருவாரூரிற் பிறந்தார் காசியிலிறந்தார் சிதம்பரத்தைத் தரிசித்தார் அடையும் முத்தியை இதிற்சேர்ந்தோர் அடைவர் என்றால் இதன் பெருமையை யாவர் சொல்லமுடியும். இத்தலத்தில் செய்யும் தானங்கள் ஒன்று பலவாகப் பலன்தரும். காசி கயை பிரயாகை சிதம்பரம் குடந்தை திருவாரூர் வேதாரணியம் திருவிடைமருதூர் முதலிய எட்டுத் தலங்களிலும் இத்தலம் மேன்மையானது.

சூரபதுமனால் வருந்திய இந்திரன் இங்கு வந்து பூசித்துத் தன் பம் நீங்கப் பெற்றான். இங்கரைச்சுற்றி ஐங்குரோசத்தளவும் இயக்கர் கின்னரர் சித்தர் வித்தியாதரர் தேவர் நாகர் முதலியவர் சிவலிங்கங் களைத்தாபித்து வழிபட்டுப் பேறுபெற்றிருக்கிறார்கள். அதனாலேயே இதற்கு லிங்காடவி என்று ஒரு பெயர் உண்டு. மேலும் இங்கர்க்குப் பன்னிரண்டு திருநாமங்கள் உள்ளன. அவற்றின் வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லுவாராயினர்.

உ. தோணிபுர அத்தியாயம்.

முழுமுதற் கடவுளாகிய பரமசிவன் ஆன்மாக்களை இரக்ஷித்தற் பொருட்டுப் பிரமதேவரால் சிருஷ்டியும் மகாவிஷ்ணுவால் காத்தலும் உருத்திரதேவரால் சங்காரமும் மகேசுவரமூர்த்தியால் திரோபவமும் சதாசிவ மூர்த்தியால் சர்வானுக்கிரகமும் செய்து வருகின்றார். இவ்வாறு படைக்கப்பட்ட இப்பிரமாண்டமானது பூலோகம் புவலோகம் சுவலோகம் சனலோகம தவலோகம் மகாலோகம் சத்தியலோகம் என மேலேழுலோகங்களையும் அதலம் விதலம் சுதலம் தராதலம் மகாதலம் இரசாதலம் பாதாளம் என்னும் கீழேழு லோகங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. ஜம்புத்தீவு என்று பெயர்பெற்ற இவ்வண்டத்தின் மத்தியில் பொன்னிறமான மேருமலை பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இது இலக்ஷயோசனை தூரத்தது. இதனை உவர்க்கடல் நாற்புறமும் ஒரு லக்ஷயோசனை தூரம் சூழ்ந்திருக்கிறது. இதற்கப்பால் பிலக்ஷத்தீவும் அதனைச் சுற்றிலும் இக்ஷுக்கடலும் அதற்கப்பால் சான்மலித்தீவும் அதனைச்சுற்றி நாலுலக்ஷயோசனை தூரம் மதுக்கடலும் விளங்கும். அதற்கு அப்பால் குசைத்தீவும் அதனைச்சுற்றி நெய்க்கடலும் அதற்கப்பால் கிரவுஞ்சத்தீவும் அதனைச்சுற்றித் ததிக்கடலும்

அதற்கப்பால் சாகத்தீவும் அதனைச்சுற்றித் திருப்பாற்கடலும் முப்பத் திரண்டுலக்ஷம் யோசனைதூரம் அளாவி அமைந்திருக்கும். அங்கே சூரிய உதயமும் அஸ்தமனமும் நடக்கும். அதற்கப்பால் புஷ்கரத்தீவும் அத னைச்சுற்றிச் சுத்தோதகக்கடல் 64 லக்ஷ யோசனைதூரமும் உடையது. அதற்சப்பால் 10 கோடியோசனை அளவு பரந்த விடத்திற்குப் பொன் னமர்பூமி என்று பெயர். அதற்கப்பால் பதினாயிரம்யோசனை பரப்பமர் ந்த சக்கரவாளகிரியொன்றுண்டு. அதன்பக்கத்தே பெரும்புறக்கடலா னது இருபத்தேழு லக்ஷங்கோடியோசனை தூரம் விளங்காநிற்கும். அத னைச் சூழ்ந்திருக்கும் இருளுலகம் ஏழுகோடியே பத்தொன்பது லக்ஷ த்து நாற்பதினாயிரம் யோசனை தூரமுள்ளது. அதன் அயலில் ஒரு கோடி யோசனையளவில் அண்டச்சுவர் ஒன்றிருக்கிறது. இவைகள் விரிவின் பகுதி.

மகாமேருகிரி உச்சிமுதல் அண்டச்சுவரின் அளவும் உள்ளதூரம் 50கோடி யோசனை. இது கிழக்கெல்லை. மற்றைத்திசைகளிலும் இதுவே. நூறுகோடி யோசனை பொருந்திய இந்நிலவுலகத்தின் கீழிடம் தொட ங்கி மேலிடம் வரையில் நூறுகோடி யோசனை உயரம் உண்டு.

இவ்வித இயல்புவாய்ந்த இவ்வண்டத்தைப் பெரும் புறக்கடலா னது ஒருழிநாளில் எற்றிப்புகுந்தது. அப்போது அலைகளெல்லாம் ஒன்றுகூடி மலையைப்போல் பொங்கி அண்டத்தைத்தூக்கி உலக அடுக் கின் நிலையைச்குலைத்து ஓங்கிச்சுழித்து ஐராவதம் புண்டரீகம் வாம னம் குமுதம் அஞ்சனம் புட்பதந்தம் சாருவபூமம் சுப்பிரதீபம் என்று சொல்லப்படும் எட்டுத்திச்சு யானைகளையும் அழித்தது. சக்கர வாளகிரியும் கைலை இமயம் மந்தரம் விந்தம் நிடதம் ஏமகூடம் நீலகிரி கந்தமாதனம் முதலிய எட்டுமலைகளும் மகமேருவும் இன்னும் மற்ற மலைகளும் இருப்பிடந் தெரியாது மறைந்தன. இவ்வாறே பதி னொன்று உலகங்களிலுள்ள மலைகளும் பொடிபட்டு இருந்தவிடம் தெரி யாமல் மறைந்தன.

வாசுகி அனந்தன் தக்கன் சங்கபாலன் குளிகன் பதுமன் மகா பதுமன் கார்க்கோடகன் ஆகிய அட்ட மாநாகங்களும் சூரியன் சந்திரன் அங்காரகன் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேதுக்களாகிய நவக் கிரகங்களும் அசுவினி முதலாகவுள்ள இருபத்தேழு நக்ஷத்திரங்களும் தேவர்களும் இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு

குபேரன் ஈசானன் ஆகிய திக்குப்பாலகர்களும் அரிசந்தனம் கற்பகம் சந்தானம் பாரிசாதம் மந்தாரம் முதலிய பஞ்ச தருக்களும் மற்றைச் சுடர்த் தொகுதிகளும் அழிந்தன. நிலை பெயர்வன பறப்பன நிற்பன நீர்வாழ்வன தத்துவன ஊர்வன தவழ்வன என்பனவும் மனிதவர்க்கத்தனவும்ஆகிய ஜீவகோடிகளெல்லாம் அழிந்தன. (விஷ்ணுவும் ஒடுங்குகின்ற ஊழிக்காலத்திலும் இறைவனுவான் பரிசுத்தராகிய சிவபெருமானே யல்லால் வேறு யாருமே இலர்.) சொற்களால் உணர்த்தப்படும் பொருள்கள் எவ்வளவோ அவ்வளவும் அழிய உயிர்த்தொகுதிகள் யாவும் சுத்த மாயாபுவனத்தொடுங்கி இருட்பரப்பினவாகி மூன்றால் மூடப்பட்டன. அக்காலத்தில் சிவபெருமான் தன் அருள்வலியினால் மறைந்துகிடக்கின்ற ஜீவகோடிகளைத் திரும்பவும் படைத்தற் கெண்ணங் கொண்டு நாகாபரணமும் பிறைச்சந்திரனும் கொன்றைமாலையும் புலித் தோலாடையும் இன்றி அக்கரவிலக்கணம் ஆதியாய அறுபத்துநான்கு கலைகளையும் ஆடையாகத்தரித்து வேதத்தின் ஒலியாய் நின்ற பிரணவமே தோணியாகக்கொண்டு உமையுடன்கூடிப் பெரியநாயகிசமேத பெரிய நாயகர் என்ற ஓர் அபிதானத்துடன் திவ்விய வடிவம் பெற்று அதில் ஏறித் தம்முடைய திருவடியையூன்றி தோணியைச்செலுத்திக்கொண்டு வருகையில் முதற் பெருந்தலமாகிய இக்காழியைக்கண்டு மகா பிரளய காலத்திலும் இது அழியாதிருந்த தன்மையினால் இதுவே மூலாதார க்ஷேத்திர மென்றருளிச்செய்து அவ்விடத்திற்றானே தோணியுடன் வீற்றிருந்தருளி அடியார்களுக்குக் கிருபைசெய்கின்றார். வருணதேவனும் வந்து பணிந்து வேண்டிய வரங்களைப்பெற்றான்.

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் இவ்விடத்தில் தோணியின்மீது வீற்றிருத்தலால் இதற்குத் தோணிபுரம் எனப் பெயர் வந்தது.. சித்திரை ஆடி ஐப்பசி தை மாதப்பிறப்புக்கள் கார்த்திகை மாசக் கார்த்திகை மார்கழித் திருவாதிரை மகாசிவராத்திரி ஆகிய இவ்வேழு தினங்களிலும் பெரியநாயகருக்குப் புழுகும் பெரியநாய்கிக்குக் கலவைச்சாந்தும் அணிந்தவர்கள் அடையும் பலன் அனந்தம் என்பது பிரத்தியக்ஷம்.

ங. பிரமபுர அத்தியாயம்.

ஆன்மாக்கள் தத்தம் பரிபக்குவ நிலையை யடைந்து முத்திபுகுதற்கு ஐந்தொழிலை நடத்துகின்ற சிவபெருமான் பின்னரும் ஒரு விளை

யாட்டின் நிமித்தம் சிருஷ்டிசெய்யத் தொடங்கி, பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி ஆகிய ஐந்து சத்திகளைக்கொண்டு மாயையையுண்டாக்கி அதினின்றும் நாதாதிதத்துவங்களைப் படைத்துப் பின்னர் அத்துவாக்கள் ஆறினையும் கலாதிகள் ஐந்தினையும் மற்றும் கன்மேந்திரிய ஞானேந்திரிய அந்தக்கரண பூதாதி தத்துவங்களையும் படைத்து நல்வினை தீவினைகளைப் புகுத்திச் சிருஷ்டி திதிசங்கார கர்த்தாக்களாகிய மூத்தேவரையும் (இராசத குணத்தினின்று பிரமதேவரையும் சாத்துவிக குணத்தினின்று விஷ்ணுவையும் தாமத குணத்தினின்று உருத்திரனையும்) வருவித்து அவர்களை நோக்கிச் சிருஷ்டி திதி சங்காரம் ஆகிய தொழில்களைச்செய்யுங்கள் என்று ஆக்ஞாபித்தார். உடனே பிரமதேவர் சிவபெருமானை நோக்கி, தேவரீருடைய திருவடித் துணையின்றெனின் அணுவேனும் எனக்கு வலியில்லை; அஃதுண்டெனின் எனக்கு ஒன்றும் அசாத்தியமாகாது; ஆகையால் அணுக்கிரகஞ் செய்யவேண்டுமெனப் பிரார்த்தித்தார். பரமமூர்த்தி பிரமனை நோக்கி நம்மிலக்கணமறிந்த நீ முற்றும் படைப்பதற்கு நமது சத்தியில்லையாயின் முடியாது; அச்சத்தியும் எனது ஏவலாலன்றி யமையாது; நானும் முறையே இச்சைகொண்டேனில்லையேல் அச்சத்தியுமறியாது. இத் தகைமையால் மூலாகமங்கள் கூறிய முறைப்படியே மந்திரங் கொண்டு விரும்பித் தோத்தரிப்பார் மனத்தில் அவரிச்சைப்படி வீற்றிருப்பேன்; அம்மந்திரமோ ஏழுகோடியாகும்; அவற்றுள் ஒரு நூறு மந்திரங்கள் சிறந்தன; அவற்றிலும் பஞ்சாக்ஷரமே சிறப்புடையது; ஆதலின் இம் மந்திரத்தின் வலியையும் சக்தியையும் பெற்றுப் படைத்தற்றொழிலைச் செய்வாயாக; இந்த ஐம்பத மந்திரத்திலைழுங்கினைப்பெற்று அவ்வைந் தெழுத்தாக விளங்கிநிற்கும் கடவுளையும் தோத்தரிப்பாயாக; இந்த ஐந்தெழுத்தின் முதல் ஈரெழுத்தினையும் அதற்கப்பால் எழுத்தையும் அதன் முற்பட்ட வெழுத்தையும் அதற்குப் பின்னெழுத்தையும் முறையே தியானிப்பாயாக; இவ்வைந்தெழுத்திலேயே சிருஷ்டியாதி ஐந்தொழிலும் நடக்குமென்று அருளிச்செய்தனர்.

இவ்வாறு அருளப்பெற்ற பிரமதேவர் சிவலிங்கப்பெருமான் சந்நிதியிற் சென்று அஞ்சலித்து மனமுருகி இருகண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிய அஷ்டாங்க பஞ்சாங்க திரையாங்க நமஸ்காரஞ்செய்து தம்பெயர்த் தீர்த்தத்தால் அபிஷேசம் செய்து வழிபட்டு மலர்கொண் டருச்சித்து நாற்றிசையிலும் சூரியனை நோக்கும்படித்தன் எண் கண்

களையும் பரவச்செய்து தனதைம்புலக் குறும்பகற்றி ஆயிரமாண்டு அருந் தவம்புரிந்து காற்றையே உணவாகக்கொண்டு ஐம்பதத்தையும் செபித்துக் காமாதி அறுவகைக் குற்றங்களையும் அடக்கி ஆராதனைபுரிந்து; பல வாறு துதித்து நின்றார். எம்பெருமான் அவர் முன் இடபவாகனரூட ராய் எழுந்தருளி வேண்டியது என்னவென பிரமதேவர், என் மனத் தடத்தில் நின்றிருவடி அன்புடன் தங்க அருளுதல்வேண்டும்; படைத் தற்றொழிலுங் கிடைத்தல் வேண்டும்; நின்னன்பர்தங் குழுவோடு அணையவும் வேண்டும் எந்தையே என்று பிரமதேவர் துதிக்க இடப வாகனரூடராய் எழுந்தருளி வந்த மூர்த்தியாகிய சிவபெருமான் அவ் வரங்கள் எல்லாவற்றையும் கொடுத்து அந்தர்த்தானமாயினர். பின்னர் பிரமதேவர் இறைவன் திருவருளால் பிரமேசுவரருக்கும் திருநிலாயகி க்கும் திருக்கோயில் பொற்புறஅமைத்துப் பிரம தீர்த்தத்தையும் புதுப் பித்து அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் படைத்து பஞ்சலிங்கத் தின் பக்கல் பாரிசாதத்தை நாட்டிச் சிவதர்மப் பணியாளர்களைப் படை த்துப் பூசைபுரிந்து வணங்கவும் பிரமதேவர் காணப் பெருமான் றோன்றி உனது பணியால் மகிழ்வுற்றோம்; உன்னை யொப்பவர்கள் ஒருவரும் இல்லை; முற்காலத்தில் மூன்னொரு பிரமர் படைத்த இத்தடத்தில் சித்திரைமாதச் சித்திரை நக்ஷத்திரத்தில் மூழ்குவோர் ஞானத்தைப் பெற்று உன்னிலறியாத உயர்ச்சியும் அடைவார் மனவொருமையோடு இந்நீரில் மூழ்கி மடிகளும் மகப்பேறடைவார்கள், உன் கற்பநாள் முழுவதும் நம்மைப் பூசித்துப் பிறகு நம்மிடம் வருவாய்; சங்காரகாலத் திலும் இத்தலம் தொலையாது; பிரமனைப் படைத்துப் பின்னர் மற்றைப்பொருள்களைத் தரலால் இங்ஙகர்க்குப் பிரமபுரம்என அழியாத ஒரு பேர் யாவரும் அறைகுவார்; இப்பிரமேசரின் இனிய சந்நிதியில் தோன்றுமிது பிரமதீர்த்தமென எக்காலத்தும் விளங்கும்; இவ்வளஙக ரும் உன்பெயரால் பிரமபுரம் எனப்படும்; இப்பிரமபுரத்தின் திருக் கதையினைப் பிரமபுரீசுரர் சந்நிதியில் நினைத்துச் சொன்னவர் யாவரும் முத்தியையடைந்து சித்தராய் வாழ்வார்; இந்தக் கடவுளின் எழில் பெறுமான்மியம் இனிமையாய்க் கேட்பார் பிரமதேவரின் உலகத்தில் கற்பநாள் காறும் வாழ்ந்துப் பின்னர் நற்குடிப்பிறந்து ஞானபுதத்தால் முன்னை வினையின் மூன்றினையகழ்ந்து மோக்ஷத்தையடைவார் என்று சொல்லிப் பிரமதேவருக்கு அனுக்கிரகம் புரிந்தருளினர்.

ச. திருவிழா அத்தியாயம்.

இம்மையில் புண்ணியங்களைச்செய்து நற்பேறு பெற்றவர்களே சிவகதைகளைக்கேட்கும் பாக்கியம் பெற்றவராவார். உத்தம புண்ணியங் களைச் செய்தவர் இம்மை இன்பங்களை அடைந்து தேவலோகத்தில் தேவபோகங்களை அனுபவிப்பார். பாவகருமங்களைச்செய்தவர் யமலோ கத்தில் நரகவேதனைப்படுவார். ஒருவன் சிவபுராணங்களைக்கேட்ட புண் ணியவசத்தால் புண்ணிய பூமியில் புண்ணியஸ்தலத்தில் உத்தமஜாதி யில் பிறந்து கல்வி கேள்விகளிலும் சகலசம்பத்திலும் பரிபூரணஞ்ப் புத்திர மித்திர களத்திராதிகளுடன் சுகவாழ்வை அனுபவிப்பான். யாக்கையும் இளமையும் செல்வமும் அதிகாரமும் நிலையுள்ளனவே அல்ல எனக்கண்டுணர்ந்து சிவபுராணங்களை ஓதி மெஞ்ஞானம் பெற்றவர்களே சிவஞானச்செல்வம் எய்துவார்கள். சிவபெருமானுடைய பூஜாதிகளை யும் உற்சவாதிகளையும் தரிசித்தவர் சகலபாக்கியங்களையும் பெறுவார். பிரமபுரத்தில் பிரமதேவர் பிரமேசருக்குச்செய்த திருவிழாச்சிறப்பைக் கேட்டல் சிவபுண்ணியத்தைத்தரும்.

ஆதலின், பிரமதேவர் பிரமேசருக்குத் திருவிழாநடத்த எண்ணிச் சித்திரைமாதத்தில் பூர்வபக்ஷத்தில் மூன்றுலகத்தவரும் அறிய யாகை யின் முதுகின்மேல் முரசப்பறையைக்கொண்டு அந்நகரமெங்கும் திரு விழா மங்களவொலி ஒலிப்பித்தலும் பிராமணர் முதலிய நான்கு வரு ணத்தினரும் உருத்திர உலகத்தைப்போல மகிழ்ச்சிகொண்டாராய் அரிய மணிகள் மாடவீதிகள் தோறும் அலங்காரம் புரிவாராய்க் குப்பை களைக் களைந்து திருவலகால் தூசிபோக்கிப் புழுதியடங்கப் பனிநீர் தெளித்து மாலைகள் தொங்கவிட்டுப் பூரண கும்பங்கள் நிறுத்தித் தூப தீபங்களேற்றி வைத்துச் செங்கோலம் மாக்கோலம் முதலியவைகளிட்டு இப்பிரமபுரத்தில் துவஜாரோகணம் என்றைக்கு என்பார்க்குச் சித்தி ரைமாதத்தில் மிருகசீரிஷ நக்ஷத்திரத்தில் என்று சொல்லவும் உவகை மேற்கொண்டு வேண்டும்நிதி யளித்து அத்தினம் வரும் வரையும் ஒரு நாளை ஒரு யுகம்போற் கழிப்பாரும் அவ்விழாவணி காணக் கண்களும் மார்பும் துடிக்கின்றன என்பாரும் வெண்சுதையினால் சுவர்தீற்றுவாரும் தோரணங்கள் நிரல்நிரையாய்த் தொங்க விடுவாரும் நிறைகுடமும் பூரண குப்பமும் பாலிகையும் விதம் விதமாய் அமைப்பாரும் குங்கு மச் சாந்தால் திண்ணைகள் மெழுகி அலங்கரிப்பாரும் சுவர்களில் பற் பல சித்திரங்கள் வகைவகையாய் எழுதுவாரும் வீதிகளில் சலம்

தெளிப்பாரும் பந்தரமைத்துப் பழச்சூலைகளும் கதலி மரங்களுங் கட்டி கமுகங் சூலைகளும் வைப்பாரும் சுவர்களில் நிலைக்கண்ணுடி பதிப்பாரும் பொற்பாவை விளக்கைத்திண்ணைகளில் பொற்புற நிறுத்துவாரும் வேதப்பொருள் உரைக்கும் வேதியர் இருக்கைகளும் வேதாத்தியயனப் பாடசாலைகளும் பொற் பீடிகைகளுஞ் சமைப்பாரும், பொற் சுண்ண மரைத்துப் பூசுவாரும் வாரி இறைப்பாரும் பூமாலை யசையக் கட்டுவாரும் முத்துமாலைகள் அணிவாரும் யாணமுகத்தில் நெற்றிப் பட்டமணிவாரும் குதிரைக் கதியின் குணந்தெரிப்பாரும் தேரை மலை போலச் சிங்காரிப்பாரும் பொற் பாத்திரத்தில் விளக்கேற்றுவாரும் கலவைச் சாந்தும் பச்சைக் கற்பூரமும் பணக்கப் பொற்கலமேந்திக் குயிலிசைபாடி யாழிசையேற்றி மங்களம் பாடுவாரும் பிராமணர்களுக்கு அறுசுவையோடு நால்வகை உண்டியும் இனிதூட்டுவாருமாய் ஒருவரை விட ஒருவர் உவகைக் கடலில் அழுந்துவாராயினர்.

இவ்வாறு எங்குங் குதூகலித்திருக்க கமலாசனக் கடவுளாகிய பிரமதேவர் சுப்பிரபேதச் சைவாகமத்திற் கூறியபடி அரதனத்தானுஞ் செம்பொன்னுனும் மணிமண்டபமொன்று செய்வித்தார். சூலகளோடு கூடிய கமுகங்கள் நிறுத்தி செவ்வாழை முதலியவைகளைத் தாற்றுடன் நாட்டி முத்து வடங்களை முறையாய்த்தூக்கி பஞ்சதருக்களையும் நாற்றிசையும் நடுவும் வைத்து நிலைக்கண்ணுடிகளை நிரையே பதித்துச் சிறு சாளரங்களைச் செவ்வனே யமைத்து அரும்பிய பாலிகைகளை அழகு பெறப் பணித்து சங்கநிதி பதுமநிதிகளைப் பொருத்திச் செங்கோலங்களைச் செவ்வையாய்த்தீட்டுவித்து வெண் கோலங்களை விதம் விதமாய்ப் போடுவித்து அஷ்டமங்கலங்களும் அமையச்செய்து பூமாலைகளைப் பொருந்தச்சுட்டி ஏனைய அணியும் எழில் பெறப்புரிய, இனிய நல் விழாவை இறைஞ்சும் வண்ணம் யாவரும் எழுந்தார்கள். பதினெரு கோடி ருத்திரர்களும் மகாவிஷ்ணு இந்திரன் முதலாம் எண்டிசைத் தலைவர் மருத்துவர்கள் சூரிய சந்திரர் சித்தர் இயக்கர் அஷ்ட வசுக்கள் நாகர்கள் அரமாதர்கள் வேதாளர் நிருதர் கந்தருவர்கள் வித்யாதாரர்கள் முதலிய விண்ணவர்களும் நாரதர் ஜனகர் வியாசர் பதஞ்சலி வியாக்கிரபாதர் அகத்தியர் முதலிய அருந்தவ முனிவர்களும் வருஷம் அயனம் முதலிய கால தேவர்களும் தங்கள் தங்கள் ஊர்திமேற்கொண்டு பிரமபுரகரின் திருவீதியை அடைந்து வேதியன் செய்யும் விழாவைக் காண நின்றார்கள். பிரமபுரத்தில் வாழ்கின்ற சிவனடியார்களும் மேற்குறித்த தேவர்களும் முனிவர்களும் சூழப்

பிரமதேவர் உட்சென்று, பிரமேசரின் துணையடி துதித்து எம்மடிகள் அடியேனுல் செய்யப்படும் திருவிழாவை அன்புடன் ஏற்றுக்கொள்ளுதி என விண்ணப்பித்து அனுக்கிரகம் பெற்று விக்கினேசுவர பூஜை முதலி யன விதிப்படிபுரிந்து வீதிகள்தோறும் சுத்தசாந்தி செய்து தனக்கே யுரிய தலைநாளாகிய மிருகசிரிடநக்ஷத்திரத்தில் பற்பல சமயத்துறைக ளிலும் ஏற்றமுடையது பாசுபத சமயமென்றும் சிவனடியார்மாட்டு அடையப் பெறுதன மும்மலமென்றும் அடியார்களின் பவப்பிணிக்கோர் அருமருந்து இத்தீர்த்தமென்றும் சொல்லி, யாவருக்கும் முத்திகொடுக் கும் பிரமேசருடைய ரிஷபத் துவஜாரோகணஞ் செய்து மங்கலவாத்திய ங்களெங்கும் ஒலிக்க, பூதானம் கோதானம் சொர்ணதானம் முதலியவை களைச் செய்து யாவரும் மகிழ்வடையச் செய்தனர்.

பிறகு, விநாயகக்கடவுள் சுப்பிரமணியக் கடவுள் மூர்த்தங்களை அலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி பிரமேசர் சந்நிதிமுன் கொண் டுவந்து நிறுத்தினர்கள். வாத்தியங்கள் ஒலிக்க அரம்பையர்கள் நடிக்க நந்தி தேவர் கைப்பிரம்புகொண்டு வழிபாடுசெய்ய, இந்திரன் பூமாரி பொழிய, வருணன் பனிநீர்மழை பெய்ய, சூரிய சந்திரர் இருபக்கமும் வர, அக்கினி தூபம்கொடுக்க, அளகையதிபதி (குபேரன்) பொன்மலர் தூவ, முனிவர்கள் வாழ்த்த நதிவடிவாம் நங்கையர்கள் சாமரமிரட்ட மன்மதன் பூமாலைதர, ஆதிசேஷன் அரதனச் சுடர்கொண் டரும்பணி செய்ய, சூண்டோதரன் குடைபிடிக்க, பிரமதேவர் சிவபெருமான் திருவருள்வழி நிற்ச, கருடக்கொடி அன்னக்கொடி இடிக்கொடி மீனக்கொடி இவை சேவித்துப் பின்வர, இடபக்கொடி நமிநாயகமாக நண்ண, நாரதமாமுனிவர் யாழிசை பயிற்ற, படகம் பம்பை மொந்தை துடி, உடுக்கை, துந்துபி, மத்தளம் முதலிய வாத்தியங்கள் முழங்க, பிரமேசர் திருநிலை நாயகி சமேதராய் வந்தாரென்று பயிற்பீலிகளையை மஹாவிஷ்ணுவின் கைம்மலர்த் துணைமேற் றமது கரமலர் சேர்த்தி, விண்ணவர் தொழுதிட விமானத்தினிறி முனிவர்கள் கண்கள் மலர்ந்து புஷ்பாஞ்சலிசெய்து துதிக்க, எம்பெருமான் திருவீதிவலம் வருவா ராயினர். அடியார்களெல்லோரும் சோணமேகம்போல் ஆனந்த பாஷ் பம் பொழிய நின்று வாழ்த்த, செந்தமிழ் மொழிகளாலும் வடமொழி மாலைகளாலும் வித்தியாவிற்பன்னர்கள் துதிக்க, நம்மை ஆண்டவராகிய பிரமேசமூர்த்தி ஆலயப்பிரவேசமாயினர்.

இரண்டாம்நாள் காலை விழாவும் அன்றிரவு பூதவாகனத்தின்மேல் எழுந்தருளும் பொலிவும் முதல் நாள் நடந்த வைபவத்துடன் நடக்க

மூன்றாநாட் காலை விழாவும் இரவு பரிதியஞ்சுடர்மேல் எழுந்தருளும் பவனியும் நான்காநாட் காலை விழாவும் இரவு இரத்தின விமானத்தில் எழுந்தருளும் காட்சியும் இனிமையாக நடத்தினர்கள்.

ஐந்தாநாட் காலை விழாவும் இரவு திருநிலைநாயகி சமேதராக இடபவாகனத்தில் எழுந்தருளும் ஏத்தருங் காட்சியும் ஆறுநாட் காலை விழாவும் இரவு யாளிவாகனரோகண தெரிசனமும் கொடுத்தருளி, எழாநாட் காலை விழாவும் இரவு கைலாயவாகனத் திவர்ந்தருளும் மாட்சியும் எட்டாநாட் காலைவிழாவும் இரவு குதிரை வாகனத்தெழுந் தருளும் சிறப்பும் பிக்ஷாடன அருந்திருவுருவப் பெருமான் தெரிசன மும் காட்டியருளி ஒன்பதாம்நாட் காலை ரதாரோகணராய்ப் பார்வதி சமேதராய் வீற்றிருந்து வீதிநான்கும் வலம்வந்தருளி அன்பர்கட்குத் தெரிசனமளித்துப் பத்தாநாட் பிரமதேவர் கண்களிக்கப் பிரமதீர்த்தத் தில் தீர்த்தங்கொடுத்தலும் நடந்தேறியது.

ஞானிகளும் விண்ணவர்களும் அப்பொழுது அப்பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து மண்டபத்தின்கண் பதினொன்றாள் பிரமேசரை வணங்கித் தோணியப்பரைத் தரிசித்துத் திருவருள்பெற்று, சர்ப்பகங் கணமும் கமண்டலமும் பூணூலும் கையில் தண்டாயுதமும் புழுகணிந்த திருத்தோளும் கஞ்சுகந்தரித்த திருவடிவுமுடைய சட்டைநாதசுவாமி யின் திருவடிகளைத் தொழுது விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் வாசஸ்தானமடைந்தார்கள்.

பின்னர் பற்பலவிதமான திருப்பணிகளையும் செய்துவரும் பிரம தேவரைப் பார்த்து, இனி உன்னுடைய சத்தியலோகத்தை யடைந்து படைத்தற்றொழிலைப் புரிவாய் என்று சிவபெருமான் ஆக்ஞாபிக்கப் பிரமதேவரும் வணங்கி விடை பெற்றுத் தமதுலகம் சென்று படைத் தற் றொழிலைச் செய்துகொண்டிருக்கின்றார்.

ரு. பூதவிமோசன அத்தியாயம்.

மாளவதேசத்தில் சந்திரவம்சத்து வேந்தன் விதேதன் என்பான் கொடுங்கோல் உடையவனாய்ச் சகல பாவங்களையும் செய்துவந்தான். அவ்வரசன் தீப்பிணி வருத்த ஆயுள் குறைந்து இயம வேதனைக்குள் அகப்பட்டவனாய் நரகத்தில் நெடுநாள் துன்பம் மிகவும் அனுபவித்து மீண்டும் பூமியில் பிறந்தான்.

பூமியில் அசுரனுய்ப்பிறந்த பின்னும் விரோதன் பல மிருகங்களைத் தாழ்ந்தபள்ளங்களில் அமுக்கி இம்சித்தும் அந்தணர்களின் ஆருயிரைக் கவர்ந்தும் பெண்களின்மேல் விருப்பம் வைத்தும் நாடோறும் கொலைத்தொழில் மிகுதியாகச்செய்து வந்தான். கொலைத்தொழிலால் இயமனிலும் மேம்பட்டு விளங்கிய விரோதன் முற்பிறப்பிற் சிறிது நல்வினை செய்திருந்த காரணத்தால் ஆங்கீரமுனிவர் தவம் செய்துகொண்டிருந்த ஆச்சிரமத்திற்குட் சென்று அவரை உண்ணப் புகுந்தருணத்தில் முனிவர் அவனை நோக்கி இவ்வாச்சிரமத்திற்குள் வந்த நீ யார் எங்களை உண்டு உன் பசியைத் தீர்த்துக்கொள்ள நினைத்தனையோ; இங்கு நில்லாமல் ஓடிப்பிழைத்துப்போ என்று கோபாவேசத்துடன் உரைத்தார். இவற்றைக்கேட்ட அசுரன் சினந்து முனிவரைநோக்கி ஏன் வீணு கப் பிதற்றுகிறீர்? எடுப்பது என்வாய் ஏகுவது உன் உயிர்; என்னுடைய வடிவமே உம்மைப்போன்ற பிராமணர்களுடைய மாமிசத்தினுல் விளங்குகின்றது என்று சொல்லி அசுரன் தன்னுடைய பூதவுருவத்துடன் முனிவரை எடுத்து விழுங்குவதற்காகத் தன்கைகளை நீட்டினன். உடனே முனிவர் தம் கையிலுள்ள கெண்டிகைநீரை அவன்மேற் றெளித்து அவனுக்குப் பூர்வஜென்ம விர்த்தாந்தத்தையும் குடிப்பிறப்பையும் விளக்கி ஏ அவுணனே இப்பூதவுருவத்துடனே நீ எங்குந்திரியக்கடவாய் எனச் சபித்தனர். இவ்வாறு முனிவர் சாபவார்த்தைகளைக்கேட்ட அவுணன் தனச்குண்டான நல்லுணர்வால் முனிவரை வணங்கி முனிசிரேஷ்டரே உம்மைப்பிழைத்த இப்பழி நீங்குவது எங்ஙனம் என்று இரங்கி நின்றனன். அவுணன் நல்லுணர்வு பெற்றதை யறிந்த ஆங்கீரமுனிவர் அவன்மேல் இரக்கங்கொண்டு ஏ அவுணனே தென்றேயத்தில் பொன்னிநதி பாய்வதால் பெருமையுடன் விளங்கும் தோணிபுரம் என்னும் க்ஷேத்திரம் ஒன்றுண்டு; நீ அங்குச்சென்று தோணியப்பரைத் தரிசித்து அவ்விடத்தில் சத்திரயாகம் செய்துகொண்டிருக்கும் காலவமுனிவரிடம் சமயமறிந்து சென்றால் உன்னுடைய இப்பூதவுருவும் பழவினையும் நீங்கி உன் சுயரூபம் அடைவாய் என்றனுக்கிரகித்தார்.

முனிவரால் நல்லுணர்வு பெற்ற பூதாகாரனை அவுணன் காழி மாநகரை யடைந்து அங்குள்ள தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானஞ் செய்து பிரமபுரீசுவரரையும் தோணியப்பரையும் வலம்வந்து சட்டைநாதரைத் தரிசித்து யாகம் செய்துகொண்டிருந்த காலவமுனிவரைக் காணச் சென்றனன். பூதவுருவத்துடன் வந்த அவுணனைக்கண்ட காலவமுனிவர் இப்பூதம் நாம் செய்யும் யாகத்துக்கிடையூறு செய்யுமோ

வென்றஞ்சிச் சட்டைநாதரைத் துதித்தார். அவ்வடுகேசர் அசைகின்ற செங்குஞ்சியும் அகோர முகமும் உடுக்கையங்கையும் தண்டபாணியும் கருஞ்சட்டையும் சர்ப்ப கங்கணமும் குழை கொளுவுஞ் செவியும் அழலவிரொளியும் திரிநேத்திரமும் புழுகணி மேனியுமுடைய ஒரு பேருருக்கொண்டு வாத்தியங்கள் ஒலிக்க கந்தருவர்கள் பாட, சட்டைநாதர் வந்தார் என்று திருச்சின்ன மூத, அக்காலவமுனிவரின் வேள்விக்களத்திற்கு எழுந்தருளினர்.

நேசசர ணஞ்சரண முத்தியடி யார்க்குதவு
நித்தியநிர் வாண சரணம்
வாசசர ணஞ்சரண மாதியிடை யீறுதவிர்
மானசிவ ஞான சரணம்
தேசசர ணஞ்சரண யோகசன காதியர்
தெளிந்தகுரு நாத சரணம்
ஈசசர ணஞ்சரண மென்றுமுனி காலவனு
மேவரு மெழுந்து தொழுதார்.

காலவ முனிவர் இவ்வாறுகத் தோத்திரஞ் செய்யச் சட்டைநாத சுவாமி அம்முனிவரைப் பார்த்து, யாம் யாகம் முடியும் வரையும் இங்கு இருக்கின்றோம் என்றனுக்ரகிக்க, அம்முனிவர் அச்சட்டைநாதரை வணங்கி, சுவாமீ நாங்களஞ்சும்வண்ணம் பூதம் ஒன்று வந்து நிற்கின்றது என்று முறையிட்டார். அப்பூதம் அம்முனிவர் எதிர் நின்று அடிகாள் யாமே மாளுவமேதயத்தில் சந்திரவம்சத்துப் பிறந்த விரேதன்என்னும் நாமத்தை அடைந்த வேந்தன்; தீவினைகள் பலவும் செய்ததனால் ஆவி பிரிந்ததும், காலதூதர்கள் நிரயத்திற் கொண்டுபோய்த்துன்புறுத்தவும் பின்னர் எஞ்சிய கர்மவிசேஷத்தால் இராக்கதவுருக் கொண்டு ஜீவகோடிகளை இம்சிக்குங் காலத்து ஆங்கிரமுனிவரை உண்ணுவான் செல்ல அவர் இப்பூதவுருக்கொண்டே திரிவாயெனச் சபித்தார், அதன்பின் நான் இரங்க, முனிவர் என்மேல் இரக்கங்கொண்டு பிரமபுரத்தில் வேள்விசெய்யும் காலவமுனிவரிடம் சென்றால் இப்பழிநீங்கும் என அனுக்கிரகஞ்செய்தார்; ஆதலால் தாங்கள் அநுக்கிரகஞ் செய்யவேண்டும் எனப்பிரார்த்தித்தது. அக்காலவமுனிவர் யாக அவிர்ப்பாகத்தில் ஒரு சிறிது அளித்தலும், அதனை உண்டு அப்பூதவுரு நீங்கி ஞானவுரு வடைந்து நின்றது. அப்போது தேவேந்திரன் ஆஞ்ஞைப்படி சூரியப்பிரகாசமும் மழுங்கும்படியான பிரகாசமுள்ள ஒரு தேர் வந்திட, சட்டைநாதரையும் காலவ மகாமுனிவரையும் மனம் வாக்குக் காயங்களி

ஞற் றெழுது, விரோத வரசன் அத்தேர்மீது ஆரோகணித்தவனுய்ச் சிவானுடவம் பெற்றுவிட்டனன். பின்னர் அப்முனிவரும் அவ்வடுகே சன் திருவருளால் யாகத்தை நிறைவேற்றி நின்றவுடன், நீ விரும்பிய தைக் கேள்என்று சட்டநாதர் திருவாய்மலர்ந்தருள, உம்முடைய திரு வடியின்கீழ் வாழ்கின்ற செல்வமே விரும்புகின்றே னல்லாமல் வேறெ ன்றும் இல்லை; அன்றியும் இப்பிரமபுரத்தின் பக்கத்தில் வாழ்கின்ற வர்களுச்கும் பூதம் தரித்திரம் நோய் பிசாசம் முதலானவைகளால் வருந்துன்பம் நீங்கவும், உம்முடைய திருவருட் செல்வம் எளிதில் அடையவும் அனுக்கிரசஞ் செய்யவேண்டும் என வேண்ட, ஓம் என்று அளித்துத் திருத்தோணிச் சிகரத்தில் அந்தர்த்தானமாயினர்.

கூ. ஸ்ரீகாளிபுர அத்தியாயம்.

மூன்றெரு காலத்தில் பதஞ்சலி வியாக்கிரபாதரும் தில்லை மூவா யிரவரும் சிவனடியார்களும் கண்டுகளிக்கும்படித் தில்லையில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருநடனம் செய்ய எண்ணினர். அதனையறிந்த காளியானவள் சிவபெருமான் திருமுன் சென்று, பெருந் தகையீனையுடைய தேவரீருச்கு இது அழகன்று; நடனம்புரிதல் மட வார்க்கேயன்றி ஆடவர்ச்குரியதாமோ; அங்கம், பிரத்தியங்கம், உபாங் கம் முதலிய நடனங்கள் செய்ய வல்லவராகில் என்னுடன் நடனம் செய்ய வாரும் என்றுள். அவ்வார்த்தைகளைக்கேட்ட சிவபெருமான் காளியுடன் நடனம்செய்ய இசைந்து சடையிலுள்ளவர்களை நோக்கி வெற்றி தோல்வியை நீங்கள் அறியுங்கள் என்று ஆக்ஞாபித்து வாணசுரன் குடமுழா வொலிக்க புலிபரம் பிருடிகள் பொலியவே ஆதிக்க பிரமதேவர் தாளம் போட மகாவிஷ்ணு உடுக்கையடிச்ச சரசுவதி வீணை வாசிக்க சூரிய சந்திரர் புல்லாங்குழல் இசைக்க நந்தி தேவர் மத்தளமடிக்க முனிவர்கள் வேதபாராயணஞ்செய்ய மற்றைத் தேவர்களும் முனிவர்களும் மற்றைவாத்தியங்களை வாசிக்க பிறவருத் தம் முதலாகிய நடன விகற்பங்களை உணர்ந்து நடனஞ் செய்தார். காளி யும் அவ்வாறே பலநாள் நடனம் செய்தல் கண்டு ஸ்ரீநடராஜப்பெருமான் திருவுளத்து ஒரெண்ணங்கொண்டு ஒருபாதத்தைப் பூமியிலே பொரு த்தி மற்றெருபாதத்தை வானுலகத்தை யளாவும்படிவிட்டு நடனஞ் செய்தார். இத்தன்மையாகச் சிவபெருமான் ஊர்த்தாண்டவம் செய்த

தைக்கண்ட காளிதேவியானவள் வெட்சமடைந்து தலைகவிழ்ந்துநிற்க, அருந்தவமுனிவர்களுந் தேவர்களும் எம்பெருமானேடுகடனஞ் செய்வேனென்று சபதங்கூறிய நீ அக்கினிச் சபையினடுவில் வெண்ணெய்ப் பாவை யாடுகின்ற தன்மைபோல வலிமை குன்றித் தோற்றனையன்றே; எ காளீ எம்பெருமானுக்கு நீ தவறுசெய்தனை ஆதலால் குற்றமில்லாத உன்றன் மேனியும் கறுக்க உன்றன் வெற்றியும் கறுத்தது நீ ஆங்காரத்தால் சிவபெருமானுக்குக் குற்றம் செய்தனை; ஆகையால் அச்குற்றத்தை அவனருள் கொண்டு அகற்றுவாய் என்று கூறினர். அதனைஎற்று முழுதொருங்குணர்ந்த மோடியும் சிவபெருமானுடைய கட்டளைப்படி பிரமபுரத்துக்குச் சென்று, பொன்னியாற்றில் முழுகிப் பொற்கோவில் புகுந்து பிரமதடத்தில் ஸ்நானம் செய்து வெண்ணீறணிந்து நியமத்தோடும் பிரமேசரைத் தரிசித்துத் திருமஞ்சனத்தால் தேவனை யாட்டிப் பூசைகள் முடித்து நேசமாய் வலம்வந்து தோணி நாயகனை அம்மையை யர்ச்சித்து இட்டம் நிறையச் சட்டைநாதன்பால் சென்று, வணங்கி மேற்றிசை சேர்ந்து சுத்தநீர்த்தடாசம் பத்தியிற்படைத்து முழ்கி, அதன் பக்கத்தில் சிவலிங்கந் தாபித்து, அத்தீர்த்தத்தால் அபிஷேகம் புரிந்து, தோத்திரம் பண்ணிச் சுகமாய் நின்றுள்.

உடனே காளிதேவிக்குமுன் சிவபெருமான் இடபவாகனராய்த் தோன்றலும், காளி பொற்றிருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தோத்தரித்து நின்றுள். மாதரசைக்கண்ட பரமன், சற்றேனும் மனம்வருந்தாதே; உன்னைத்தொடர்ந்த மாபாதக வினையும் ஓடின; உன்பெயரால் இங்ஙகருக்கு ஸ்ரீகாளிபுரம் (சீகாழி) எனப் பெயர் விளங்கச்சடவது; நின்னால் வழிபடப்பட்ட இச்சிவலிங்கமும் நின்னால் ஸ்தாபிக்கப்பட்ட இத்தடாகமும் முறையே காளிகேசர் காளிதீர்த்தம் என நின் பெயரால் பொலிந்தோங்குக; இத்தடாகத்தில் முழ்கினவர்கள் செய்த அதிபாதகம் யாவும் அக்கணமே ஓடிவிடும்; விடியற்காலையில் எழுந்து ஸ்ரீகாளிபுரம் என்று மூன்றுதரம் எண்ணி உச்சரித்தவர் வினைபல போக்கி நம் அருள் பெறுவார்; அமாவாசைத்தினமன்று இத்தீர்த்தத்தில் முழ்கிப் பிதிர்க்கடன்களை முடித்தவர் இருவினைப்பந்தம் எளிதிற்போக்குவார்; கார்த்திகைமாதம் ஞாயிற்றுக்கிழமை காலை முழ்குவோரிடத்தில் மும் மலமும்கெடும்; இந்நீரில் முழ்குவோர் அடித்துகள் மற்றொருவர் மேல் படினும் அவருக்கும்மும்மல மகல்வது நிச்சயம் எனத்திருவாய்மலர்ந்து பல வரங்களைக் கொடுத்து மறைந்தருளினர். காளிகாதேவியும் தில்லையை அடைந்தாள். காளி வணங்கலாற் காளிபுரம் என இங்ஙகர்க்கு ஒரு பேர்

எய்தியது. அன்றியும் காளிங்கன் என்னும் பாம்பு வணங்கலாலும் அப்பெயர் பெற்றது.

அது வருமாறு :—

காசிபருடைய மனைவியாகிய வினதை வயிற்றிற் பிறந்த கருட பகவான் பாம்புகளை இரையாக விழுங்கிவந்ததால் கருடனுக்கும் காளிங் கன் என்னும் பாம்புக்கும் போர்நிகழ்ந்தது. அதில் காளிங்கன் தோல்வி யுற்று வலி குன்றி ஓர்மடுவில் புகுந்து அம்மடுவின் நீர் முழுவதையும் விஷமாக்கினன். அந்த விஷநீரை உண்ட கண்ணபிரானுடைய பசுக்கள் மூர்ச்சித்துவிழ அப்பசுக்களைக் காத்தற் பொருட்டுக் கிருஷ்ணபகவான் மடுவில் இறங்கினமாத்திரத்தில் அவ்வரா கண்ணனது காலைக் கௌவி யது. உடனே மாதவன் அப்பாம்பின் தலையின்மேல் நின்று பவுரிக் கூத்து ஆடினன். அக்காளிங்கனும் மெலிந்து என்னை நீ விடுதி ; அறியா மற்பிழை செய்தனன்; நான் செய்த புண்ணியத்தால் உம்முடைய திரு வடி சமக்கப் பெற்றேன்; உம்மை இன்னரென்றறிந்தேன்; உம்மைச் சமக்கும் கருடனால் வலியிழந்த நான் இப்பொழுது உம்முடைய திரு வடி சமக்கச் சகிப்பேனே என்று இரந்து கூறியதைச் செவிமடுத்த மாதவன் இரங்கி அவன் மனக்கருத்தறிந்து கருடனால் வலிகுன்றிய தையும் கடலினை விட்டு ஈண்டு வந்ததையும் தெரிந்தோம்; என்னை இப் பொழுது துதித்த நீ அலமரேல் என்று அதுக்கிரகித்தார். உடனே அவ்வரவு கண்ணனை நோக்கி, கருடனை வெல்லும் வலியும் என் உறவி னர்களுக்குச்செய்த கெடுதி நீங்குமாறும் அருளுவை என வேண்ட, தோணிபுரஞ் சென்று பிரமதீர்த்தத்தில் மூழ்கிப், பிரமேசரை வணங்கி னால் அவ்வரங்களைப்பெறுவை என்றுரைத்து மறைந்தருளினர். அங்ங னமே அந்தப் பாம்பு சிகாழிப் பதிக்கு வந்து விதிப்படி பிரமேசரை வணங்கிப் பேறுபெற்றது. இதனாலும் இவ்வூருக்குக் காளிபுரம் என் னும் பெயர் உண்டாயிற்று.

எ. வெங்குரு அத்தியாயம்.

மூன்னொருநாள் அசுரகுருவாகிய சுக்ராச்சாரியார் (வெங்குரு) பிரமலோகஞ்சென்று பிரமதேவரைக் கண்ட போது அவர்நன்மொழி கூறுதிருந்தார். அதை உணர்ந்த வெள்ளி கவலையடைந்து தன் இருக்கைக்குத் திரும்பியபோது நாரதமுனிவர் அசுரகுருவைப்பார்த்து

ஓ சுக்கிரனே நீ நல்லவனுக இருந்தும் உன் சீடர்களாகிய அசுரர்கள் தீய ஒழுக்கம் பூண்டு இருப்பதால் அக்குற்றம் உன்னது ஆகித் தேவர் களாலும் முனிவர்களாலும் நீ அவமதிக்கப்படுகின்றாய் அக்குற்றம் நீங் குதற்பொருட்டு ஸ்ரீ காளிபுரத்தை அணுகி அங்குள்ள சிவலிங்கத் தைப் பூசித்தல் வேண்டும் என்று கூறிப் பஞ்சாக்ஷரத்தையும் உபதே சித்தருளினர்.

அவ்வுபதேச வார்த்தைகளைக் கேட்ட அசுரகுரு எழுந்து, காளி யம்பதியைக் களிப்புடன் கண்டு; அருச்சனை புரிந்தே அருந்துதிசெய்து, தென்றிசைக் கண்ணே தீர்த்தமொன் றியற்றி, இந்து சேகரனின் பு டனிருத்திக் கடுந்தவம் பன்னாள் கருத்துறச் செய்து, பணிந்தெழும் அவன்முன் பார்வதி சமேதராய் எம்பிரான் காக்ஷி தந்தருளினர். சச்சிதானந்தா பாண்டரங்கனே பாவரக்ஷகா பிஞ்ஞக மூர்த்தி பிரளய விடங்கா எனப் பலவாறு துதித்து வெண்பிறைக் கண்ணி யாய் அவுணர் தங் குழுவாம் அம்மொழி நீங்கி, சுத்தமெய்வடிவம் எய்த துணையிலிக்கு அருள்குவை என்று சுக்கிரன் வேண்ட, பார்வதி சமேதராய் வந்த எம்பெருமான் அவ்வாறே அருள்செய்து உம்பர் தேசிகன் சமத்துவம் பெறுவாய், மிருதசஞ்சீவினி வித்தையை யடை வாய் என்று வரங்கொடுத்து மறைதலும், பொன்வடி வெய்திய சுக்கிரனும் தன்பதம் சேர்ந்தான். அவன் பெயராலே அமைந்தி டும் தடத்தில் அன்னவன்றினத்தில் ஆடுவோர் யாவரும் கனவிலும் வறுமை காணார் காணார். ஐப்பசி மாசத்தில் சுக்கிரவாரத்தில் மூழ்கு வோர் எவரும் வினையெலாந்தொலைந்தே மேன்மையோ ராவார். இரு சுடர் நாள்வரை இருப்புகழடைவார். அமாவாசைத்தினத்திலன்புடன் படிந்து பிதிரர்தங்கடனைப் பிழையறச்செய்வோர் தென்புலத்தவரொ டும் கயிலையை யடைவார். ஆசாற்குச் செய்த பாவமகலும். தைத்திய குரு பணிதலா லித்தலம் வெங்குருவெனும் நாமம் மேன்மையோ டடையும். இதுவன்றி வேறொரு காரணத்தாலும் வெங்குரு வென்ற நாமம் விளங்கிய விபரமும் சொல்லுகிறேன்.

நரகலோகத்தில் காலபடர்களால் வருந்திக்கொண்டிருந்த பாவி கள் ஒருகாலத்தில் யமதருமராஜனைப் பார்த்து, சுவர்க்கலோக வாசிகள் தேவபோகத்தையும் பூலோகவாசிகள் இகலோக இன்பத்தையும் அனு பவித்துக் கொண்டிருக்க நாங்கள் மாத்திரம் உம்மாலும் உமது தூதர் களாலும் இந்த நரகத்துன்பத்தை அடைந்து வருகிறோம், நீர் செய் வது கொடிது கொடிது என்று முறையிட்டார்கள். அம்முறைப்பாட்

டைக் கேட்ட யமன், நல்வினை செய்ததால் உண்டாகும் நன்மைகளை நீங்கள் அனுபவிக்கும்போது என்னை நினைக்கிறீர்களோ; நீங்கள் தீவினை செய்ததால் இவ்வாறு தீமையை அனுபவிக்கிறீர்கள்; இதைப் பற்றி என்மேல் குறை கூறுவதில் யாது பயன்; இவ்விதம் நீங்கள் சொல்வதால் எனக்கு மிகவும் கவலையுண்டாகிறது என்று சொல்லி இதிலிருந்து தப்பித்துக்கொள்ள மார்க்கம் என்னவென்று சிந்தித்துப் பிரமபுரஞ்சென்று பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிரமேசரைத் துதித்து வணங்கி அவ்விடத்திலேயே சிலகாலம் தங்கியிருந்தான். சிவ பெருமான் யமதருமனின் பூசைக்குமகிழ்ந்து இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி வந்து உன் பூசைக்கு மகிழ்ந்தோம்; உனக்கு வேண்டிய வரம் என்னவென்று கேட்டார். யமன் பணிந்து எழுந்து எம்பிரானே, என் உள்ளம் சதா காலமும் தங்கள் திருவடித்தாமரைகளைச் சிந்தித்திருக்கும் தன்மையும் என் உலகத்தில் உள்ளவர்களுக்கெல்லாம் முற்பிறப்பில் தாங்கள் செய்த நல்வினை தீவினைகளை அறியக்கூடிய சக்தியும் கொடுத்தருளவேண்டும்; இந்நகருக்கு அடியேன் பெயர் ஏற்பட வேண்டும் என்று வேண்டினன். சிவபெருமானும் அவ்வாறே வரம் கொடுத்து மறைந்தருளினர். வெங்குருவாகிய யமன் பூசித்ததால் இந்நகர்க்கு வெங்குருவென்னும் பெயர்வந்தது.

அ. காகவிமோசன அத்தியாயம்.

பூர்வ காலத்தில் விகடாங்கன் என்னும் ஓர் அரசன் மனுதர்ம சாஸ்திரமுறைப்படி நீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் பொறுமையிற் பூமியையும், அழகில் மன்மதனையும், கல்வியில் சூரியனையும் ஒத்து மகா பராக்கிரமசாலியாய் விளங்கிவந்தான்.

இவ்வரசன் ஒருநாள் காட்டுமிருகங்களை வேட்டையாட எண்ணி இரத கஜ துரக பதாதிசளுடன் காட்டுக்குச்சென்றான். அங்கு மத்தியானம் வரையில் வேட்டையாடிக் களைப்புற்றுத் தாகமதிகரிக்க அவன் சேனைவீரர் எல்லாம் தண்ணீரைத் தேடிக்கொண்டு நலாபக்கங்களிலும் ஓடினர். அரசன் பசியாலும் தாகத்தாலும் வருந்தி அக்காட்டில் யாகம் செய்துகொண்டிருந்த மேதாதி என்னும் முனிவரிடம் சென்றான். மாதவன் அரசனுக்கு முகமன் கூறி வந்த காரணத்தை வினவ, அரசன் தன் வரலாறு கூறித் தன் பசியைத்தீர்க்கும்படி வேண்டினன். முனிவர் யாகத்தை நிறைவேற்றி உன்பசியைத் தணிக்கிறேன்; மறையவருக்கு முன் மற்றவருக்குப் போஜனம்அளிப்பின் யாகம் செய்வதாலுண்டாகும்

பலன் குறையும்; அது ஒழுக்கத்துக்கும் இழுக்காகுமாகையால் சற்றுப் பொறுப்பாய் என்றார். உடனே அரசன் கோபங்கொண்டு தன்கூட வந்தவர்களை ஏவி யாகத்தையழித்து அங்கு வைத்திருந்த ஆகாரத்தைச் சாப்பிட்டான். இதைக்கண்ட மாதவன் கோபித்து அரசனை நோக்கி, நீ காக உருக்கொண்டு இக்கானகத்தில் அலையக்கடவாய் என்று சபித்தார். அவ்வாறே அரசன் காக உருக்கொண்டு பன்னிரண்டு வருஷம் அலைந்து திரிந்து கௌதம முனிவர் தவஞ்செய்யும் பர்ணசாலையையுடைந்தான். கௌதம முனிவர் கவலையுடன் வந்தடைந்த காகத்தைக் கண்டு, அதன் வரலாற்றை ஞான திருஷ்டியினலறிந்து, நீ ஸ்ரீ காழிப்பதிக்குச் சென்று மாசிமாத மக நக்ஷத்திரத்தில் பிரம தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, அகத்தியமுனிவராலும் என்னலும் ஸ்தாபிக்கப்பெற்ற லிங்கத்தை வணங்கினல் உன்பழி நீங்கும்; ஆகையால், என்னுடன் வருவாய் என்று அனுராகித்துத் தன்னுடன் அழைத்துச்சென்று, காவிரியாற்றில் ஸ்நானம் செய்து, கோபிலுட்புகுந்து, பிரமதீர்த்தம், சூலதீர்த்தம் முதலிய தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானம் செய்து, காக உருவுடன் வந்த வேந்தன் மேல் அத்தீர்த்தங்களைத் தெளித்தலும், அரசன் பழைய உருவத்துடன் விளங்கினன். கௌதமர் அவ்வரசனுக்குப் பஞ்சாக்ஷரத்தை உபதேசம் செய்தருளினர்.

உடனே விகடாங்கன், தான் முன் மேதாதி என்னும் முனிவர் செய்த வேள்வியை அழித்ததை நினைத்து, அங்குச்சென்று அவர் வேள்வியை முடிக்கத் துணைபுரிந்து, மீண்டு வந்து பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஸ்திரசுந்தரியையும் பிரமேசரையும் வணங்கி, திருக்கோயில் பழுதுபோக்கி, உற்சவாதிகளைச் செய்து, அவ்விடத்திற்றனே தங்கியிருந்து, சிலகாலம் சென்றபின் சிவபெருமான் திருவடி நிழலைச் சேர்ந்தான். இவ்வாறு காக விமோசனமான இத்தலத்தில் ஒருநாள், அரை நாள், ஒரு சாமம், ஒரு கணம் அல்லது அரைக்கணம் வாசஞ் செய்தோர் யாவரேயாயினும் சிவபிரானுடைய சயிலையைச் சேர்வார். மறுபடியும் பூமியில் பிறவார். விகடாங்கன் காகவுரு நீங்கப்பெற்றதால் இந்நகர்க்குப் புனர்ஜன்மபுரம் எனப்பெயர் வழங்கலாயிற்று.

கூ. புகலி அத்தியாயம்.

முன்னொரு காலத்தில் தருமம் குறைந்து, பாவம் அதிகரித்து, அரசன் நீதி தவறி அரசாட்சி செய்ய, நான்கு வருணத்தவர்களும் தத்தம் நிலையினின்று தவற, கலியின் கொடுமை மிகுந்தது. அவ்வாறு

கொடுமை மிகுந்த கலிபுருஷனை அரசன் பேதைமை யாகிய ஆலயத்தி னுள் தாபித்து, அழுகின்ற கண்ணீரால் நீராட்டி., இகழ்ச்சியாகிய மலர் சூட்டிப் பொய், வஞ்சகம், புறங்கூறல் முதலிய மந்திரங்களால் அர்ச்சித் து, காமமாதி அமுதூட்டிப் பாவமாகிய பூஜையைச் செய்து வந்தான். இவ்வாறு செய்ததால் பெரியோர்களின் யோகங்கள் பெண்களால் அழிந்தன. யாகாக்கினியும் வலிகுறைந்தது. பொய்யுரையால் வாழ்த் துகளும் ஆசீர்வாதங்களும் நிறைந்தன. அன்னதானம் செய்தலும் வேதாத்தியயனம் செய்தலும் குறைந்தன. போற்றப்படத்தக்க மேலோ ர்கள் மயக்கமடைய சுருதி நூற்றுறைகளில் தாழ்ந்த குலத்தவர்கள் பழகும்படி ஏற்பட்டது. இதனால், ஜனங்கள் கடவுளாவது உலகமாவது அரசனுவது இல்லை என்று எல்லாம் உணர்ந்தவர்களைப்போல வேஷம் பூண்டும் பேசிக்கொண்டும் கயவர்களோடு சினேகித்தும் இறுமாந்திருந் தார்கள். பெண்களெல்லாம் தங்கள் வார்த்தைகளை நாயகர்கள் கேட்கும் படியும் பிள்ளைகள் தங்கள் வார்த்தைகளைப்பெற்றோர்கள் கேட்கும்படியும் செய்து வந்தார்கள். அவ்வார்த்தைகளை அவர்கள் கேட்க மறுத்தால் உங்களைவிடப் பித்தர் உலகில் இல்லை என்று இகழ்ந்து உதாசீனம் செய்தார்கள். அக்கலிபுருஷனுல் பற்றப்பட்ட ஆன்மகோடிகள் எல் லாம் ஆசான் வார்த்தையை மறந்து மதுவுண்டு பெரியோர் சகவாசம் இன்றிப் பிறரை இம்சித்து, சூது பொய் முதலியவற்றிற் சிறந்து விளங்கி, கயவர்களின் கூட்டுறவு கொண்டு, காமப்பயிரை விருத்தி செய்து, தெய்வ பூஜையை மறத்தல் முதலான அறிவிலாச் செய்கை களைச் செய்து வந்தார்கள். யாகாதி கர்மங்கள் குறைந்து, மழை வளஞ் சுருங்கி, மாதர் கற்பிழந்து, நாடி வளம் குறைந்து, தீயொழுக்கங்களாகிய பொய், கொலை, களவு, கள், காமம் ஆகிய பஞ்ச மாபாதகங்கள் பெருகி, கலிபுருஷன் திருவிளையாடல் செய்துகொண்டிருந்தான். அப்போது களைகளால் சூழப்பட்ட பயிர் வளர்ச்சியடையாது தளர்ச்சியடைதல் போல் ஒருபக்கம் தருமதேவதை ஒதுங்கி நின்று வருந்திக்கொண்டு இருந்தது.

அறப்பெருங் கடவுள் இவ்வாறு வருந்திக்கொண்டிருந்தபோது கைலைக்குச்சென்று சிவபெருமானைத் தரிசித்து வந்த நாரதர் சந்தித்து ஏ தருமதேவதையே, இங்கு நீ இப்படி இருக்கவேண்டிய காரணமென் னவென்று கேட்டார். தருமதேவதை நாரதரை நோக்கி, மாமுனியே முதல் யுகத்தில் நான்கு கால்கள் பெற்று நடமாடிக்கொண்டிருந்தேன்; பிறகு இரண்டாம் யுகத்தில் மூன்று கால்களாலும் மூன்றும் யுகத்தில்

இரண்டு கால்களாலும் நடந்தேன்; இப்போதோ இக்கலியுகத்தில் ஒரே காலால் நடக்கவேண்டியிருக்கிறது என்று முறையிட்டது. நாரத மகாமுனி தருமதேவதையைப் பார்த்து நீ கவலைப்படாதே, விலங்கு பறவை முதலியவைகளுக்குத் தங்கள் தாய் இரை கொடுப்பதை நிறுத்திய மாத்திரத்திலேயே அவை உணர்ச்சி பெற்றுத் திரிகின்றவாறு, இவ்வுலகமானது உன்னைப் பிரிந்தமாத்திரத்திலேயே அக்கலி புருஷனால் சூழப்பட்டது; நீயோ சிவபெருமான் திருவுள்ளத்தினின்றும் தோன்றினாய்; அப்படியிருந்தும் நீ வலிகுன்றினாய்; முதல்யுகத்தில் உனக்குத் தவம், ஆசாரம், அருள், மெய் ஆகிய நான்கு கால்களிருந்தன; அடுத்த யுகத்தில் தவத்தை விடுத்து மற்ற மூன்று கால்களுடன் இருந்தாய்; அடுத்த யுகத்தில் தவம், ஆசாரம், ஆகிய இரு காலையும் இழந்து அருள், மெய் ஆகிய இரண்டு கால்களுடன் இருந்தாய்; இவ்வாறே ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ்வொரு கால் வீதம் குறைந்து, இப்போது மெய் என்கிற ஒரே காலோடிருக்கிறாய்; ஆகையால் நீ வருந்தாதே என்று தேற்றினர். இவ்வார்த்தைகளைக்கேட்ட தருமதேவதை நாரதரை நோக்கி முனிசிரேஷ்டரே, எனக்கு நான்கு பாதங்களும் கிடைக்கும்படிக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, நாரதர் அறப்பெருங் கடவுளைப்பார்த்து, பரதகண்டத்தில் தென்திசையில் காவிரிநதிக்கு வடக்கில் ஒரு க்ஷேத்திரம் இருக்கிறது; சூரபதுமனுக்கு அஞ்சி ஓடிய தேவர் யாவரும் தங்கள் பத்தினிகளுடன் சென்று புகலிடம் எங்களுக்கு வேறில்லை என்று அங்குள்ள சிவபெருமானைப் போற்றியதால் அதற்குப் புகலி என ஓர் திருநாமம் உண்டு; நீ அங்குச் சென்று குருலிங்க சங்கம வடிவங் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரம கருணாநிதியாகிய எம்பெருமானை அர்ச்சித்து வணங்கினால், பழியெலாந்தீர்ந்து பரிசுத்தனாவதுடன் பாதம் நான்கும் பெறுவாய் என்று அனுக்கிரகித்துச் சென்றனர்.

உடனே அறப்பெருஞ் செல்வன் காவிரி நதியைக் கடந்து, காழிமாநகரடைந்து, பிரம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிரமபுரீசரைப் பணிந்து, ஒரு பக்கத்தில் சிவலிங்கம் ஸ்தாபித்து, நூறு வருஷம் அருந்தவம் புரிந்தான். சிவபெருமான் அவன் தவத்துக்கு மகிழ்ந்து பிரசன்னமாகி வேண்டியது என்னவென, தருமதேவதை அவர் அடிகளில் விழுந்து பணிந்து எழுந்து நின்று, எம்பிரானே, நான் நான்கு தாளும் பெற்று உம்மைச் சுமக்கவும் இடபத்தைப் போல் பெருவலி பெறவும் அனுக்கிரகிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தது. உடனே சிவபெரு

மான கருணைகூர்ந்து தம்முடைய திருக்காத்தைத் தருமதேவதையின் சிரசின்மேல் வைத்து, நீ இடபமாகி உறைவாய்; நான்கு வேதமும் சிவகண்டிகையும் திருவெண்ணீறும் திருவைந்தெழுத்தும் எம்மோடு ஒரு தன்மையென என்றறிவாய்; உண்மை விரதமாகிய திருநீறு தரித்தலும் பஞ்சாட்சரஞ் செபித்தலும் நிறைந்த ஒருவன் பொறுமை உடையவனுய்ப் பிறனில் விழையாமல் சிவபூஜை செய்கின்றவிடம், ஆல், அரசு, துளசி, வில்வம், வேதாத்தியயனம் செய்யும் இடம், சிவாலயம், மடாலயம், வேள்வி செய்யும் இடம் ஆகிய இவ்விடங்களில் நீ விடாது விளங்குவாயாக; என்னுல் ஏவப்படுவது தவம்; அத்தவத்தால் ஏவப்படுவது நம் அருள் என்று அறிவாயாக; ஈண்டு உன்னுல் தாபிக்கப்பட்ட சிவலிங்கத்தை வணங்குபவர்கள் பாவங்களெல்லாம் நீங்கப்பெற்று அசுவமேதயாக பலனை அடைந்து கைலாயத்தில் வாசஞ் செய்வார்கள்; இவ்விடத்தில் வேதாத்தியயனம் செய்கிறவர்கள் பௌண்டரீக யாக பலனை அடைவார்கள் என்று பலவாறு அனுக்கிரகித்து மறைந்தருளினர். தருமதேவதையும் நான்கு கால்களும் பெற்றுச் சிவபெருமானைத் தாங்கும் பாக்கியம் பெற்றது.

ம. சிரபுர அத்தியாயம்.

பூர்வகாலத்தில் தேவரும் அசுரரும் கூடி மந்தர மலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறுகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். அதினின்றும் லக்ஷ்மி, பஞ்சதருக்கள், சிந்தாமணி, உச்சைசிரவம், ஐராவதம் முதலியவைகள் தோன்றிப் பிறகு நரை திரை பிணி மூப்பு சாக்காடு முதலியவற்றை நீக்கும் மருந்தாகிய தேவாமிர்தம் தோன்றிற்று. அவ்வமிர்தத்தை உண்பதற்குத் தேவர்களும் அசுரர்களும் ஆரம்பிக்கும் போது, மகாவிஷ்ணு அசுரர்கள் தேவாமிர்தத்தை உண்டால் அவர்களுக்கு அழிவிராது; தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் எப்போதும் சண்டை நடந்துகொண்டேயிருக்கும்; ஆகையால் இவர்களை எப்படியாவது ஏமாற்றிவிடவேண்டும் என்று மோகினி உருக்கொண்டு அசுரருக்கும் தேவருக்கும் இடையில் தோன்றினர். மோகினியின் அழகைக் கண்டு அசுரர்கள் உணர்வழிந்து செயலற்று நின்றனர். இதுதான் சமயமென்று அம்மோகினி உருவத்தோடு மகாவிஷ்ணு தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்துக்கொண்டு வந்தார். அசுரர்களில் சயிங்கிகேயன் என்பவன் வேற்றுருக்கொண்டு தேவர்களில் ஒருவனுக சூரிய சந்திரர்களுக்கு நடுவில் இருந்து தேவாமிர்தத்தை வாங்கி உண்டான்.

"இதனை அறிந்த சூரிய சந்திரர்கள், தேவாமிர்தத்தைப் பரிமாறிக்கொண் டிருந்த மகாவிஷ்ணுவுக்குக் குறிப்பாகத் தெரிவிக்க, அவர் தமது கையி லிருந்த சட்டுவத்தால் அசுரனை அடித்தார். அசுரனுடைய கழுத்துத் துணிக்கப்பட்டுத் தலை காழிப்பதியின் ஒருவீதியிலும் உடல் அவ்வீதி யின் கிழக்கே ஒரு குரோசத்தளவிலும் விழுந்தன. தேவாமிர்தம் உண்ட மகத்துவத்தினாலும் உடல் காழியில் விழுந்த மேன்மையினாலும் அவ்வசுரனது இரண்டு பாகங்களும் இரண்டு பாம்புகளாயின.

இவ்வாறு அசுரனின் தலைக்கூற்றால் உண்டான அரவம் தனக்குத் தீங்குசெய்த சூரியனை வருத்த நினைத்துச் சிவபெருமானைத் தியானித் துப் பிரமேசர் கோயிலுட்சென்று வணங்கி, வடமேற்றிசையில் இரண்டுகோல் தூரத்தில் தீர்த்தமொன்றியற்றிச் சிவலிங்கத்தாபித்து, காற்றேயுணவாகக் கொண்டு கடுந்தவம் புரிய, பிரமபுரிக்கிறைவனான பரமசிவன் பார்வதி சமேதராய் இடப வாகனத்தின் மேல் எழுந்தருளி வந்து அதன் முன் தோன்றலும், அவ்வரா பணிந்தெழுந்து தன் வரலா ற்றைக்கூறி, இப்போது தேவரீரைத் தரிசித்ததால் உய்ந்தேன்; ஆயி னும் தீங்குசெய்தவருக்குத் தீமைசெய்வது எங்களுக்கு இயல்பாதலால் நரை திரை மூதலியவற்றைப் போக்கவல்ல தேவாமிர்தத்தை உண்ணும் போது எனக்குத் தீங்குசெய்த சூரிய சந்திரர்களில் சூரியனை வெல்லும் வலிமையைக் கொடித்தருளும் என்று வேண்டிற்று. சிவபெருமான் அவ்வாறே தந்தருளி, தலைக்கூற்றரவையும் உடற்கூற்றரவையும் நோக்கி, கடகராசியைச் சூரியனும் சிங்கராசியைச் சந்திரனும் இருபக்கத்திலும் உள்ள ராசிகளை முறையே புதன் வெள்ளி செவ்வாய் குரு சனி இவர் களுங் கொள்ள, நீங்கள் நின்ற வீடே உங்களுக்கு நிலையாக இருந்து, மற்றவர் போலன்றி மாறி மாறிச் சூழ்ந்து, இராகு கேது என்னும் நாமம் பெற்று, ஒருவர்க்கொருவர் ஏழாமிடத்தில் வசித்து அமாவாசை, பௌர்ணமி திதிகளிலன்றி மற்றை நாட்களில் இருசுடர்களையும் தீண் டாமல் வசிப்பீராக என்று அருள் செய்தார். பிறகு தலைக்கூற்றரவாகிய இராகுவை நோக்கி, நின்சிரம் இங்கு விழுந்த தன்மையால் இங்ஙகர்க் குச் சிரபுரம் எனப் பெயர் வழங்கும்; உன்னல் ஏற்பட்ட இத்தீர்த்தத் தில் ஸ்நானம் செய்து நீ வழிபட்ட இச்சிவலிங்கத்தை வணங்குவோர் அட்டமாசித்திகளைப் பெறுவார் என்று அருள் செய்து சிவலிங்கத்தில் மறைந்தருளினர். இக்கதையினைப் படித்தவரும் கேட்டவரும் பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி சேர்வார்.

கக. குருத்துரோக விமோசன அத்தியாயம்.

யாவராலும் தொழத்தக்க மேற்குலத்தில் பிறந்து, வேதம் ஓதி வைதிக சைவ வழியில் நின்று, தெய்வ பூஜையைச் சிறப்பாய்ச் செய்பவனே பரமாசாரியன் எனப்படுவான். அவன் மேகம் போன்ற ஈகையும் சூரியனைப் போன்ற தூய்மையும் நிறைகோல் போன்ற நீதியும் பூமியைப்போன்ற பொறுமையும் மால்வரையொத்த தோற்றமும் அடக்கம், வாய்மை, இரக்கம் முதலிய நற்குணங்களும் நிறைந்து, சீஷர்களின் வினைப்பகுதியினைப் போக்கிக் சுதிகாட்டுவான். ஆகையால் அவனே ஆசான் எனப்படுவான். அன்றியும், ஐம்பதமும் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கோடு வித்தியாதத்துவம் ஏழும் சிவதத்துவம் ஐந்தும் உணர்ந்த சன்மார்க்கனும் காமாதி முக்குற்றங்களையும் வென்றவனும் உள்ளவன் குரவனுவான்.

கற்பனை கடந்த சிற்பரமூர்த்தி தன் ஐந்து முகங்களினின்றும் தோற்றுவித்த வேதாகமங்களிற் கூறப்பட்ட மூப்பொருள் பதி, பசு, பாசங்களாகும்.

அவற்றுள், பதியாவது நித்தியத்துவம் (என்றும் அழியாதிருத்தல்), சர்வ வியாபகத்துவம் (எவ்விடத்தும் நிறைந்திருத்தல்), அநாதி மலமுத்தத்துவம் (இயல்யாகவே பாசங்களினின்றும் நீங்குதல்), சர்வஞ்ஞத்துவம் (எல்லாவற்றையும் அறிதல்), சர்வகர்த்திருத்துவம் (எல்லாவற்றிற்கும் தலைமையாய் இருத்தல்), நித்தியானந்தத்துவம் (என்றும் சந்தோஷமாய் இருத்தல்), சுவதந்திரத்துவம் (எல்லாவற்றையும் தம் வசமாக உடைமை), அலுப்தசத்தித்துவம் (பேரருள் உடைமை) ஆகிய குணங்களுடையது.

பசுக்களாவன நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடை யுடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறுய் வினைகளைச் செய்து, அவற்றின் பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவைகளாய்த் தமக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும். (பசு—ஆன்மா) அவ்வான்மா விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்று மட்டும் உடையவர். பிரளயாகலர் ஆணவமலம் கர்ம மலம் இரண்டும் உடையவர். சகலர் ஆணவமலம் கன்ம மலம் மாயா மலம் என்னும் மூன்றும் உடையவர்.

பாசங்களாவன ஆணவம், கன்மம், மாயை என மூவகைப் படும். இம்மூன்றோடு மாயேயம் திரோதாயி இரண்டும் சேர்ந்து ஐந்தென்று கொள்வது மூண்டு (ஆன்மாக்களைப் பந்தித்து நிற்றலால் பாசம் எனப் பெயர் பெற்றது).

ஆணவ மலமாவது ஒன்றேயாய், தனக்குள் அநேக சத்திகளை யுடையதாய், ஆன்மாக்களிடத்தில் செம்பிற் களிம்பு போல அநாதியே உடன் கலந்து நிற்பதாய், ஒவ்வொரு ஆன்மாக்களிடத்திலும் வெவ்வேறாகி, அவற்றின் அறிவு, தொழில், இச்சைகளை மறைத்து நின்று, அஞ்ஞானத்தைப் புகட்டிப் பக்குவ கால இறுதியில் அவ்வவ் ஆன்மாக்களினின்றும் தன் சத்தி பிரிந்து நின்று, ஐடமாய் ஆன்மாக்களை அணுத்தன்மை செய்கின்ற காரணத்தால் ஆணவம் என்று பெயர்பெற்றது.

கர்மமலமாவது ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தம் என மூன்று வகையினதாகி ஆன்மாக்கள் தாங்கள் எடுத்த பிறப்பிலே புண்ணிய பாவங்களைச் செய்த பொழுது ஆகாமியம் என்னும் நாமத்தை அடைந்து, பிறப்புக்கள்தோறும் சம்பாதித்துப் பக்குவப்படும் வரையும் புத்தி தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு, மாயையில் ஆன்மாக்கள் அழுந்தி நிற்கும்போது சஞ்சிதம் என்னும் பெயரினதாகி, இச்சஞ்சித கன்மங்களுள் பக்குவமுற்றவை எல்லாம் இனி எடுக்கும் சரீரத்தையும் அதனால் அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்களையெல்லாம் தந்து பயன் படும் பொழுது பிராரத்தம் என்னும் பெயரையும் அடையும்.

மாயையாவது சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூவகையது. அவற்றுள்,

சுத்தமாயை நித்தியமாய், வியாபகமாய், அருவமாய்ச் சடமாய்ச் சொல்வடிவும் சுத்தமாகிய பொருள்வடிவுந் தோன்றுதற்கு முதற்காரணமாய், ஆன்மாக்களை மயக்கஞ் செய்யாததாய் நிற்பது. அதினின்றும் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் பிரிவினையுடைய வாக்குக்கள் தோன்றும். இச்சுத்தமாயையை விந்து என்றும் சொல்வதுண்டு.

அசுத்த மாயை நித்தியமாய் உலகத்திற்கு ஒரு வித்துமாகி, சடமாகி, எங்கும் வியாபகமாய், சிவபெருமானுக்கு ஒரு சத்தியுமாகி, ஆன்மாக்களுக்குச் சுத்தம், அசுத்தம், சுத்தா சுத்தம் ஆகிய தனுகரண புவன போகங்கள் தோன்றுதற்கு முதற்காரணமாய், ஊழிக்காலத்தில் அவ்வான்மாக்களுக்கு உறைவிடமாய், மயக்கஞ்செய்து நிற்பது.

பிரகிருதி மாயை மேற்கூறிய அசுத்த மாயையினின்றும் கன்மேந்திரியம், ஞானேந்திரியம், மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக்கரணங்கள், பஞ்சபூதம் முதலிய தத்துவங்களை உண்டாக்கிக் கொண்டு ஆன்மாக்களை மயக்கஞ் செய்து நிற்பது. இது மூலப்பிரகிருதி என்றும் சொல்லப்படும்.

மாயேயமாவது மாயையாலாகிய தத்துவங்களும் அவைகளாலாகிய தனு கரண புவன போகங்களும் ஆம்.

திரோதாயியாவது ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களையும் தொழிற்படுத்தி ஆன்மாக்களுக்குப் பரிபாகத்தை வருவிக்கும் சிவசத்தி. இது மலத்தைச் செலுத்துதலினாலே மலம் என உபசரிக்கப்பட்டது.

ஆன்மாக்கள் தங்களைப் பந்தித்த ஆணவமலம், கன்மமலம் ஆகிய நோய்களைத் தீர்த்துச் சிவானந்தப் பெரும் பேறடைய வேண்டி, முழுமுதற்கடவுள் தனு கரண புவன போகங்களைக் கொடுத்தார். தனு முதலிய நான்கும் மலமாக இருந்தும், மலம் என்பதற்குப் பொருள் அழுக்கென இருந்தும், ஆணவ மலமாகிய அழுக்கை மாயா மலமாகிய அழுக்கினால் நீக்கலாம் என்பதன் கருத்து என்னையோவெனின், வண்ணான் கோடி வஸ்திரத்திலே சாணியையும் உவர் மண்ணையும் பிசறி மிகக் கறுத்தது என்னும்படி செய்து, முன்னே இருந்த அழுக்கோடு பின்னையதாகிய அழுக்கையும் போக்கி, அவ்வஸ்திரத்தை மிக வெண்மையுடையதாகச் செய்வது போலவே சிவபெருமான் ஆன்மாக்களிடத்தில் மாயா மலத்தைச்சேர்த்து அநாதியே பந்தித்து நிற்பதாகிய ஆணவமலத்தோடு ஆதிபந்தமாகிய மாயா மலத்தையும் நீக்கி அவ்வான்மாக்களைச் சிவமாந்தன்மை உடையனவாகச் செய்வர் என்பதாம்.

குருவானவர் சீடனுக்கு மேலேசொல்லப்பட்ட பதி, பசு, பாசப் பிரிவினைகளையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும், அவற்றுள் அடையக்கூடிய சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய பதங்களின் இலக்கணங்களையும், அத்துவா ஆறினையும், நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை ஆகியவற்றின் இலக்கணங்களையும் அறிந்துரைத்தல் வேண்டும்.

சீடனனவன் குரு என்கின்ற சொல்லின் உண்மைப் பொருள் தன்னைத் தெரிவிச்சும் புறவிருளைப் போலாது-மயக்கத்தைத் தருவ தான ஆணவ மலாந்தகார சத்தி குகாரமாகவும் அவ்வாணவமல சத்தி யை மாற்றும் சத்தி ருகாரமாகவும் கொள்ளக் கிடந்ததென்று மனத் துட்கொண்டு, சிவபெருமான் அந்நாளில் தக்ஷிணமூர்த்தி வடிவத்தோடு எழுந்தருளிநின்று சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வர்க்கும் சொல்லாமற் சொன்ன சூக்ஷ்மத்தை அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையவனுய், அத்தக்ஷிணமூர்த்தி சொரூபமே அப்பிரமேச ரின் திருவடிவம் என்று தெரிந்து, அப்பிரமேச்சரே ஞானச்சாரியராக வந்திருக்கிறரென்று அறிந்து வழிபடல் வேண்டும். மாணக்கன் ஆசாரியனிடத்தில் அன்புமேலிட்டுக் குறிப்பறிந்து ஒழுகி தனக்கு இரு வினை யொப்பு மலபரிபாகம் வருகின்ற காலத்தில் பல சலுகளையு முணர் ந்த தனது பரமாசாரியனுடைய இரண்டு திருவடிகளாகிய தோணியைத் தன்னுடைய இரண்டு கைகளாலாகிய கோல்களால் தள்ளிக்கொண்டு இருவினையாகிய சமுத்திரத்தைத் தாண்டும்படி உருத்திராக்ஷ மாலையையும் விபூதியையும் ஆபரணமாகத் தரித்துப் பஞ்சாக்ஷரத்தை இடை விடாமல் மானசம், உபாஞ்சு, வாசகம் என மூவகையாற் செபிப்பவனுய் இருக்கவேண்டும். இத்தன்மையனன மாணக்கனுக்கே உபதேசம் செய்யும் குருவும் அவ்வுபதேசம் பெறும் மாணக்கனும் அழிவில்லாத வீடுபேறடைவார்கள். ஆசாரியனுக்கு அரும்பிழை செய்த மாணக்கன் பெருநரகமடைவான். ஆசானைப் பிழைத்த ஒரு அரசன் இக்காழிமா நகருக்கு வந்து பழிநீங்கப்பெற்றன். அது வருமாறு :—

முன்னெருகாலத்தில் சிங்கக்கொடியை யுடையவனன கலிங்கநாட் டரசன் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய குலகுருவாகிய வெகுசுருதமுனிவரிடம் சென்று அவரை வணங்கிச் சுவாமி, அடியேன் அசுவமேதயாகம் ஒன்று செய்ய விரும்புகிறேன் என்றன். முனிவர், அரசே புத்திரனில்லாமல் அந்த யாகஞ் செய்தல் கூடாது; இன்னும் ஒரு வருஷத்தில் நீ புத்திரனைப் பெறுவாய்; பிறகு நீ செய்ய விரும்பிய அசுவமேத யாகத்தை நான் கூட இருந்து முடித்துவைக்கிறேன் என்று சொல்லி அரசனை அனுப்பிவிட்டுத் தான் வசிட்ட முனிவரின் ஆச்சிர மத்திற்குச்சென்றர்.

அரசன் குலகுருவின் வார்த்தையை மறுத்து இரதிதரமுனிவர் முதலியவர்களின் உதவியைக் கொண்டு அசுவமேத யாகம் செய்யத் தொடங்கினன். இதனையறிந்த அவன் குலகுருவாகிய வெகுசுருதமுனி

வர் அரசனிடம் கோபிக்காமலும் தன்னுடைய ஆச்சிரமத்திற்குப் போ காமலும் நெடுநாள் வசிட்டருடைய ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்தார். அரசன் தான் செய்யத் தொடங்கிய அசுவமேத யாகம் முடிவுபெறாமல் வருந்தி இறந்தான். யமதூதர் அவனைக்கொண்டுபோய் வருத்திப் பதினாயிரம் வருஷம் துன்பம் செய்தார்கள். அரசன் நரகவேதனைகளை அனுபவித்துப் பின்னர் பூமியிற்பிறந்து பேய் உருவத்துடன் இமயமலைச்சாரலையடைந்து அங்குள்ள ஜீவகோடிகளை இம்சித்துவந்தான். அப்பேயுருவங்கொண்ட அரசன் ஒருநாள் தனியாக இருந்த சமயத்தில் சிறிது நல்லுணர்ச்சியடைந்து, குலகுருவைத் தியானித்துத் தான் செய்த குற்றத்தைச்சொல்லி, அவரை எப்போது காண்பேனெனப் பிரலாபித்துக்கொண்டிருந்தான். இச்சமத்தத்தை வசிட்டமுனிவரின் ஆச்சிரமத்திலிருந்த வெகுசுருதமுனிவர் கேட்டு, இரக்கங்கொண்டு எழுந்துவந்தார். முனிவர் திருமேனியிற் பட்டுவரும் இளங்காற்று அரசன் மேல் பட்டமாத்திரத்தில், அவன் முனிவர் எதிர் சென்று திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சி எழுந்து சிரசின்மேற் கைகூப்பி, என்குலதீபமே கிருபாசமுத்திரமே அடியேன் செய்த குற்றத்தை மன்னித்து இப்பேய் உருவம் நீங்கிச் சுத்தனுகுமாறு கிருபைசெய்ய வேண்டுமென்று வேண்டினன். வெகுசுருதமுனிவர் அரசனுடைய துன்பத்தைக் கண்டு மனம் வருந்திச் சிவபெருமானைத் தியானித்து, அரசனை நோக்கி, பரதகண்டத்தில் பிறவிப்பிணியைத் தீர்க்கவல்ல மருந்தென்று சொல்லப்படும் புகலிப்பதியை அடைந்து அதன் வடமேற்றிசையில் இரண்டு கோல் தூரத்தில் இராகுவினால் முன்னர் அமைக்கப்பெற்ற தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பிரமேசரையும் தோணியப்பரையும் சட்டைநாதரையும் தரிசித்தால் இக்குற்றம் நீங்கும் என்று அனுக்கிரகித்துப் பதினைந்து நாட்களில் அவ்வரசனை உடனழைத்துக்கொண்டு இளங்குழந்தையின் நோய் நீங்குதற்குத் தாய் மருந்துண்ணுதல்போல் அரசன் பேய் உருவம் நீங்குமாறு பொன்னிநதியில் ஸ்நானம் செய்து, பிரமபுரம் பணிந்து, ஆலயத்துட்புகுந்து பிரமதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, பிரமேசரையும் திருநிலையழகியையும் தோத்தரித்து வணங்கி, இராகு தீர்த்தத்தில் மூழ்கி, அந்நீரைப் பஞ்சாக்ஷரம் செபித்துப் பேய் உருவமாய்விளங்கிய அரசன்மேல் தெளித்ததும் அவன் சந்திரனைப்போன்ற முகமும்

உச்சியிற்றரித்த சுடிகையும் வாகுவலயமும் உடையவனுய் மன்மதனே யும் வெல்லக்கூடிய அழகுபெற்று விளங்கினன்.

பின்னர் அவ்வரசன் அத்தீர்த்தத்தில் முழ்கி, அங்கு இராகுவாற் பூசிக்கப்பட்ட சிவலிங்கத்தை வணங்கித் துதித்துத் தன் நாட்டையடை ந்து மூனிவரால் அசுவமேதயாகம் செய்துமுடித்துப் பிறகு, தன் தீவினை நீங்கப்பெற்ற புகலிப்பதிக்கு வந்து அளவில் கோடி பொன் தானஞ் செய்து குருவின் திருவருள் பெற்று அநேக காலம் வாழ்ந்திருந்துப் பிறகு சிவபதம் பெற்றுச் சிவானுபவப் பெருவாழ்வடைந்தான்.

கலிங்கநாட்டரசன் புரட்டாசிமாத மாளயபக்ஷ அமாவாசையன்று இராகு தீர்த்தத்தில் முழ்கி சகல பாக்கியமும் பெற்று வேந்தர் வேந் தனுகி அருங்கதி பெற்றமையால், அத்தினத்தில் அத்தீர்த்தத்தில் முழ்குவோர் அருவினை நீங்கி நினைத்தவை கைகூடப் பெறுவார் என்பது திண்ணம்.

கஉ. சண்பை அத்தியாயம்.

முற்காலத்தில் கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்காகத் தூது சென்று, பாரதம் முடித்துப் பாண்டவர்கள் யாகம் பல செய்ய உதவி புரிந்து தம் உலகுச்குச் செல்ல நினைத்தார். அப்போது அவர் தம் உறவினராகிய யாதவ குலத்தினரை நினைத்து இவர்களைத்தனியே விட் டிருந்தால் தீங்குவரும்; இவர்களை நாமே அழித்தாலும் உலகம் பழிக் கும்; இதற்கு யாது செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அப் போது சூரியகிரகண புண்ணியகாலம் வந்தது. அப்புண்ணிய காலத்தில் பிரபாதநதியில் நீராட ஸ்ரீ கிருஷ்ணபகவான் சதுரங்க சேனைகளுடனும் தம் உறவினருடனும் சென்றார். அவ்விடத்தில் யாதவகுலத்தார் சிலர் ஒன்று கூடித் தங்களில் அழகுவாய்ந்த சாம்பன் என்பவனுச்குப் பெண் வேஷந்தரித்து கர்ப்பவதியைப்போல் அவனை நடிக்கச் செய்து அங்கு வந்திருந்த ஒரு அந்தணர் முன் கொண்டுவந்து நிறுத்தி ஐயரே இவள் பெறுவது ஆணை பெண்ணை அறையும் என்றார்கள். அதைக்கேட்ட கபிலமுனிவர் அவர்களை நோக்கித் திருப்பாற்கடலிலுள்ள மீன் அப்பாலை உண்ணுது அதிலுள்ள அழுக்கையே உண்டு மகிழும்; அதுபோல மாய வன்குலத்திற்றோன்றியும் மதிமயக்கால் இவ்வாறு செய்கிறீர்கள், இவன் வயிற்றில் உங்கள் குலத்தை ஒழிக்கும்படியான ஓர் இருப்புலக்கைப் பிறக்கும் என்றார். அவ்வாறே அவன் வயிற்றிலிருந்து ஒரு இருப்புலக்

கை பூமியில் வந்துவிழ யாதவர்கள் அதை எடுத்துத் தூளாக்கி நதியில் விட்டுவிட்டார்கள். அத்தூள்கள் ஒவ்வொன்றும் வாள்போன்ற கோரைப் புற்களாக முளைத்தன பிறகு அவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவின் காரணமாக அக்கோரைப் புற்களையே பறித்து, வல்வன் கைப்புல்லும் ஆயுதம் என்றற்போல, ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு மாண்டனர். கிருஷ்ண பகவான் தாம் நினைத்தவாறே முடிந்ததை நினைத்து வியந்து, முனிவர் சாபம் தம்மைத் தொடாவண்ணம் முற்காலத்தில் பகீரதன் பூசித்து வணங்கிப் பேறுபெற்ற பிரமபுரீசரைத் தொழுது பூசிக்கும் வண்ணம் தருமபுத்திரரை அவ்விடத்திலியே இருக்கச்செய்து பத்தினிமார்களுடன் பிரமபுரம் சென்று, திருக்கோயில் வலம் வந்து, பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, பிரமபுரீஸ்வரரையும் திரிபுரசுந்தரியையும் வணங்கிக் கோயிலுக்கு வாயுதிக்கில் மூன்று கோல் தூரத்திலே சக்கராயுதத்தினால் ஒரு தடாகம் அமைத்து, அதில் தமது பத்தினிமாருடன் நீராடித் திருவெண்ணீறுதரித்துச் சிவகண்டிகையணிந்து சிவமெருமானைத் தியானித்துத் தெய்வத் தன்மை பொருந்திய பற்பல தீர்த்தங்களின் பெருமைகளும் அத்தீர்த்தத்திற்கு உண்டாகும்படி செய்து, ஆழிதீர்த்தம் எனப் பெயரிட்டுச் சொற்பதங் கடந்த அருளுருவப்பரஞ் சுடரை ஒருவருடலளவும் முப்போதுந் தொழுது வந்தார். இன்ன தன்மையன் என்று எவரும் சொல்லமுடியாத சிவபெருமான் ரிஷப வாகனத்தின்மேல் எழுந்தருளி வரலும், இரு விழியும் களிப்பக்கண்டு பணிந்து ஏத்தி ஆனந்தபரவசராய் நிற்கப் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் வேண்டிய வரம் யாதென்று வினவினர். கிருஷ்ணபகவான் உலகினில் உயிர்க்கு உயிராய தனிமுதல்வா, கபிலமுனிவர் சாபம் என்னைப்பற்றாமல் இருக்கவும் நான் உன் திருவடியை மறவாதிருக்கவும் அருள்புரிய வேண்டும் என்று வேண்டி நிற்க, சிவபெருமான் அவரை நோக்கி, நீ இவ்விடத்தில் ஒரு கலியோடு குழந்தை உருவத்துடன் என்றும் வாழ்வாயாக; கபிலமுனிவர் சாபத்தால் உண்டான கோரைப் புல் (சண்பை) உன்னைத் தொடாது; இந்நகருக்குச் சண்பை என ஒரு பெயர் விளங்கும் என அருளிச்செய்து திருக்கோயிலுட் சென்றார்.

பிறகு கிருஷ்ணபகவான் இக்காழி நகருக்கு உத்தர திசையில் இரண்டு குரோச தூரத்தில் தீர்த்தம் ஒன்று அமைத்து, சிவலிங்கந் தாபித்து அர்ச்சனை புரிந்து பற்பல தானங்களையும் செய்து தம்உலகத்திற்குச் சென்றார். மாசி மாதம் முழுவதும் இத்தீர்த்தத்தில் மூழ்குவோர் சகலவினைகளும் நீங்கப் பெறுவார். இதன் கரையில் இருந்து

ஐம்பதத்தைச் செபிப்போர் சீவன் முத்தராவார். சிவபெருமானே குருவடிவாய் இத்தலத்தில் வீற்றிருக்கிறாதலால் இதற்குச் சிவாசாரிய புரம் என ஒரு பெயரும் உண்டு. இங்ஙகரில் ஒருவர் வீட்டில் வளர்த்த கிளிப்பிள்ளை ஒன்று கௌடதேசத்து மன்னன் ஒருவனை ஐந்தெழுத்தால் அவன் தேவியை நீங்கும்படிச் செய்ததென்றால் மக்களின் வலியைச் சொல்வது எங்ஙனம். இப்புகலிப்பதியின் பெருமையை ஏல்லாம் சொல்வதென்றால் சிவபெருமானுற்றான் சொல்லமுடியும்.

கக. கொச்சை அத்தியாயம்.

பிரமதேவரையொத்த முனிசிரேஷ்டரும் வசிஷ்டமகாமுனியின் மாதவம் போன்ற சத்தியமுனிவரின் திருக்குமாரருமான பராசரமுனிவர் ஒரு காலத்தில் தலங்கள் தோறும் சென்று தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து மூர்த்திகளைத் தரிசனம்செய்துகொண்டு வரும்நாளில் கௌதமியாற்றில் ஸ்நானம்செய்து அவ்வாற்றைக் கடந்துபோக எண்ணினர். அப்போது அவ்வாற்றில் ஓர் ஓடத்தையும் அதில் ஒரு சிறு அழகிய வலைஞப் பெண்ணையும் கண்டு அப்பெண்ணை நோக்கி, ஏ பெண்ணே இவ்வோடத்தைத்தள்ளுபவர் யார்; உன்னால் முடியுமா; முடியுமானால் என்னை அக்கரையில் கொண்டுபோய் விடு என்றார். அப்பெண் முனிவரை நோக்கி முனிவரே, இவ்வோடம் ஆயிரம்பேர் ஏறினால்தான் செலுத்தமுடியும் என்று சொன்னாள். பராசரர் ஆயிரம் மக்கள் பாரத்தை நான் ஒருவனே கொடுக்கிறேன்; நீ ஓடத்தைச் செலுத்துவாய் என்று அதில் ஏறினமாத்திரத்தில் ஓடம் சரியான பாரத்துடன் இருக்கக்கண்ட மச்சகந்தி என்ற அந்த வலைஞப்பெண் ஆச்சரியமும் பயமும் அடைந்து முனிவர் வார்த்தைக்கு மாறு சொல்லாமல் ஓடத்தைச் செலுத்துவாளாயினாள். நடு ஆற்றில் ஓடத்தின்கண் பராசரமுனிவரும் மச்சகந்தியும் தனித்திருக்க அனங்கனுகிய மன்மதன் அரவிந்தம், அசோகம், குவளை, சூதம், முல்லை ஆகிய தன்னுடைய பஞ்சபாணங்களையும் முனிவர்மேல் ஏவி அவரை வருத்தினன். முனிவர் அதற்கு ஆற்றுதவராகி வருந்தி வலைஞர் தம் திருவாகிய மச்சகந்தியை நோக்கி அழகு மிகுந்த ஆனந்த மயிலே, நீ இவ்வாற்றைக் கடத்தற்குரிய தோணியைச் செலுத்துகிறாய்; மன்மதன் என்மேல் தொடுத்திருக்கும் போர்க்கடலைக் கடத்தற்கு ஓடமாகவும் நீ இருக்கிறாய்; உன்னை ஒப்புவார் ஒருவரும் இல்லை; பிரமன் படைத்த பெண்வர்க்கங்களில் உன்னைக் கண்டு உருகியவர் ஓட, அமைந்த அழகை அயனும் கண்டு அழுக்காறு அடைந்து உன் உடலைப் புலால் மணங்கம

ழச்செய்தான் போலும்; நான் உன் உடல் நறுமணங்கமழச் செய்வேன் என்று இனிய வசனம் கூறி இரந்து வேண்டினர். இவ்வாறு சொல்லாது சொல்லிக் குறையிரந்து நின்ற பராசர முனிவரைப் பார்த்து மச்சகந்தியானவள், மறையவர் குலத்துத் தோன்றிய மாமுனியே, ஆயிரம் மக்களின் பாரத்தை ஒருங்கே ஓடத்திற்குக் கொடுத்த உத்தமரே, தன்னையே அறியும் அறிவுபடைத்த உமக்கு இழிகுலத்திற் பிறந்திய சிறு பெண்ணாகிய என்னைச் சேர்தல் தகுமோ; ஆற்றின் இருகரைகளிலும் ஜனங்கள் கூடிவிட்டனர்; திருவுளமறியேன்; ஆதலால் காந்தர்வமணத்தால் என்னைப்புணர்ந்திட முடைமணம் போய் நறுமணம் கமழச் செய்தல்வேண்டும் என்றாள். உடனே பராசர முனிவர் தம் தவ வலிமையினால் அவளுடைய புலால் நாற்றத்தை நீக்கி, நறுமணம் கமழச் செய்து, மச்சகந்தி என்ற பெயரை விடுத்துப் பரிமளகந்தி என்னும் பெயர் கொடுத்து, அவளைச் சேர்ந்த மாத்திரத்தில் வேதவிற்பன்னராகிய வியாச பகவான் வந்து உதித்தனர். பரிமளகந்தியானவள் குழந்தையைத் தரும்படி வேண்ட முனிவர் பெண்ணே, இத்தனயனை உன்னிடம் இப்போது கொடுத்தால் உன்னுடைய கன்னிமைக்கு இழுக்குண்டாகும்; உன்னுடைய வரலாற்றைச் சொல்லுகிறேன் கேள்; கந்தர்வ குலத்துத் தோன்றிய வசு என்னும் வேந்தன் ஒருவன் ஆகாயமார்க்கமாய்ச் செல்லும்போது தன் மனைவியை நினைக்க, அவன் வீரியம் இவ்வாற்றில் விழுந்தது; அதை ஒரு மீன் எடுத்து உண்டதால் அதன் வயிற்றில் நீ பிறந்தாய்; உன்னை எடுத்து வலைஞர் வளர்த்தனர்; இதுவே உன் வரலாறு; இதனை உணர்ந்தே நான் உன்னைச் சேரவிரும்பினேன்; ஆதலால் நீ வருந்த வேண்டியதில்லை; பாரதயுத்தமும் பாண்டவர் முடிசூட்டு வைபவமும் உன்னாலேயே நடைபெறும்; நீ சத்தியவதி என்னும் பெயர் பூண்டு, சந்தனு வென்னும் அரசனை மணந்து, சித்திராங்கன், விசித்திரவீரியன் என்ற பிள்ளைகளைப் பெறுவாய்; பிறகு அப்பிள்ளைகள் இறக்க இந்த மைந்தனால் நின்குலம் விளங்கி, அதன் வழியாய்ப் பாரதம் நடக்கும் என்று கூறி, அவளை விட்டு நீங்கித் தனயனை எடுத்துக் கொண்டு வெதிரிகாச்சிரமம் சென்றார். அங்குள்ள முனிவர்கள் அவரைக் கன்னிகாகாமி என்றழைக்க, அவர் தம்மைத் தொடர்ந்த பழி நீங்கும்வண்ணம் பிரமபுரஞ் சென்று பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிரமேசரையும் திரிபுரசுந்தரியையும் வணங்கி, ஆலயத்தின் வடபால் கூபமொன்றியற்றிச் சிவலிங்கந் தாபித்து வழிபட்டு, அக்கினி மத்தியில் நின்று அருந்தவம் புரிந்தார். பராசர முனிவரின் தவத்துக்

கிரங்கிய புரிசடைப் பரமன் பார்வதி சமேதராய் தேவர்களும் முனிவர் களும் போற்ற இடபவாகனத்தின் மேல் எழுந்தருளி வந்து வேண்டும் வரம் என்னவென, முனிவர் ஆனந்தக்கண்ணீர் சொரிய எம்பெருமான் திருவடிகளில் வீழ்ந்து அஞ்சலி செய்து, உம்முடைய அருளையே பொருளாகக்கொண்ட அடியேனுக்கும் இடர் உண்டாகுமோ; இந்நிலவு லகத்தில் என்னைக் கன்னிகாகாமி என்றழைக்கிறார்கள்; இக்கொடுமை யைத் தணிக்கவேண்டுமென்று வேண்டி நின்றார், பிறைச்சந்திரனை யணி ந்த பரமன், உன்னை யடைந்த கொச்சையாகிய இப்பழி நீங்கும்; மேலும் இந்நகர்க்குக் கொச்சையென்று ஒரு பெயர் விளங்கும் என அருளிச் செய்து முனிவர் ஸ்தாபித்த லிங்கத்தில் மறைந்தருள முனிவரும் மாசு நீங்கி விளங்கினர்.

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் பராசர கூபமாகிய இத்தீர் த்தத்தில் ஸ்நானம் செய்து பராசரேஸ்வரரை அர்ச்சித்து அடிபணிந்து விதைநெல் தானங் கொடுத்தவர்கள் நெல் ஒன்றுக்கு ஒரு வருஷமாகக் கைலையில் வீற்றிருந்துப் பிறகு சாரூபம் பெற்றுவாழ்வார். ஒருவர் இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஏதாவது ஒரு தானம் கொடுத்தாலும் அவர் மது மாமிசம் உண்டல், பொய்பிளங்கொடியை நாளலாநாளினிற் புணர்தல் முதலியவற்றால் உண்டான தீவினைகளாகிய பாவங்களினின்றும் நீங்குவார். இத்தீர்த்தத்தின் விசேஷமும் மூர்த்தியின் பிரபாவமும் அனந்தம். அவை இத்தன்மைய வென்று அளவிடற்பாலனவல்ல. சிவ பெருமானே இந்நகர்க்குக் கொச்சைவயம் என்று நாமம் விளங்குமென்று கூறியதால் இதற்கு அப்பெயர் வழங்கலாயிற்று.

கசு. கிளி உபதேசித்த அத்தியாயம்.

முன் ஒரு காலத்தில் கௌடதேசத்தில் கோவிதாரத்துசன் என் னும் வேந்தன் மகாபராக்கிரமசாலியாய்ப் பகையரசர் ஒருவருமின்றித் தன் சிற்றரசர் திறைகொண்டுவந்து செலுத்த மிகுந்த செல்வவானாய் அரசர்க்குரிய பலயாகங்களையும் செய்து நீதி தவறாமல் நெடுநாள் அரசு செய்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவ்வரசன் மந்திரிமார் சூழ கொலுமண்டபத்தில் வீற் றிருக்கும்போது அருந்தவமுனிவர் ஒருவர் அங்கு வந்தார். முனிவ ரைக்கண்ட அரசன் எதிர்சென்று வழிபாடுசெய்து முகமன் கூறி உப சரிக்காததால் முனிவர் ஒரு நாழிகை நேரம் நின்று பார்த்துவிட்டு

வெளியிற் சென்றுவிட்டார். அரசன் முனிவரைப்பிழைத்த பாதக்கத்தால் நாடு வளஞ்சுருங்கிச் செல்வம் குறைந்து, வறுமை மேற்கொள்ளத் தன் அரண்மனையன்றி மற்றெல்லாவற்றையும் இழந்து, பிரமப்பேய் பிடித்து வருந்துவானுயினன். அரசனுடைய பத்தினியும் அவள் தோழிமார்களும் இன்னது செய்வது என்று தெரியாமல் மதி மயங்கிக் கலங்கிக்கொண்டிருக்கையில் அவ்விடத்திற்கு நாரதமகாமுனிவர் வந்தார். அவரைக்கண்டதும் அரசன்மனைவி எழுந்து எதிர்சென்று உபசரித்து, ஆசனத்தில் இருக்கச்செய்து, திருப்பாதம் விளக்கி, அந்நீரைச் சிரசின்மேற்றெளித்து உட்கொண்டு உள்ளம் பூரித்து அழுதூட்டி, வணங்கித் தன் நாயகனுக்கு உற்றதை விண்ணப்பித்தாள். அத்தருணத்தில் ஞானம் அடைந்த அவ்வரசன், முனிவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, எழுந்து அஞ்சலி செய்து நிற்றலும் முனிவர் அரசனேநோக்கி, அரசே, இன்று நாம்வந்தபோது எம்மை உணராதிருந்த தன்மைபோல் முன் எப்போதாவது ஒருவர்பால் இருந்ததுண்டோ என்று வினவினர். அரசன் தான் முன் ஒரு முனிவருக்குப் பிழைசெய்ததுண்டு எனக் கூறியதைக் கேட்டு நாரதமுனிவர், ஏ அரசே என்னகாரியஞ் செய்தாய்; அருந்தவச் சிவயோகிகள் அருவருத்துத் தள்ளிய பொருளைப் பெரிதென மதித்தே கர்வங்கொண்டனை; பெரியோர்ச்சுப் பிழைசெய்ததால் பேய்கொண்டலைந்தாய்; தாயிலாச் சிசுபோல் முகம் வாடி உன் அரசும் இழந்தாய்; சிவயோகிகள் சேர்ந்த இடம் சிவதானம் என்றறியாயோ; அவர் திருவடியிற்கீழ்ப் பெய்த ஜலத்தின் ஒருதுளியினுல் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்த பலன் அடையலாம் என்பதை அறிந்திலையோ; இல்லறதர்மத்தைக் கைக்கொண்ட ஒருவன் விருந்தினராக வந்த சிவயோகியைப் போற்றுத காரணத்தால் தான்செய்யும் மற்ற அறங்களையும் இழப்பன்; அவரைப் பூசிப்பின் ஜனகாதியர், வசுக்கள், மும்மூர்த்திகள் முதலியவரைப் பூசித்த பலன் பெறுவான்; ஏனெனில், சிவபெருமான் கண் இமைக்குங்கால அளவு கொன்றையினிடத்தும், அதைப்போல் இரண்டு பங்குநேரம் வில்வமரத்தடியிலும், ஒருகடிகை நேரம் இலிங்கத்திலும், ஒரு மாத்திரைப்பொழுது அரசனிடத்திலும், எக்காலத்தும் சிவயோகிகளிடத்தும் எழுந்தருளியிருப்பார்; இத்தன்மையை அறியாதிருந்தனை; முனிவரை உபசரிக்காததால் பாவம் செய்தனை; அப்பாவம் நீங்கும் பொருட்டு ஊன் உண்டல், மதுக்குடித்தல், பிறன் மனை விழைதல், ஆசானைப் பிழைத்தல் முதலியவற்றால் உண்டான பாவங்களைப் போக்கவல்ல புகலிப்பதி சென்று, பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, பிரமபுரீசரை

தியானித்துப் பஞ்சாக்ஷரத்தைச் செபித்து, உன்னுடையப் பழி யை நீக்கிக்கொள்வாயாக; என்று சொல்லித் தன் இருப்பிடம் சென் றார். அரசன் அவ்வாறே காழிமா நகரடைந்து, கோயிலுட் சென்று, பிரம தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, திருநீலநாயகியையும் பிரமேசரை யும் வணங்கி வீதிவலம் வரும்போது, அந்நகர்ப் பொதுமகளிர் வீட்டில் வளர்த்த கிளி ஒன்று தன் செவியிற்பட்ட பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டிருக்க அவ்வொலியைக் கேட்ட அரசன் வேகமாக அவ்வீட்டி னுள் சென்று கூட்டினுள்ளிருந்த கிளியைக் கண்டு தன் வினை நீங்கும் பொருட்டு வணங்கி, உபதேசம் பெற்று, ஆனந்தமடைந்து, கோயிலுட் சென்று, பிரமேசரை வணங்கி, பெரியநாயகரையும் பெரியநாயகியையும் போற்றித் துதித்து சட்டைநாதரைத் தொழுது, பூதானம், கோதா னம் முதலியவைகளைச் செய்து, சிவபெருமானின் நித்திய பூஜைக்கு நிபந்தம் ஏற்படுத்தித் தன் ஊர் போய்ச்சேர்ந்தான். வீட்டில் வளர்த்து வார்த்தை பழகிய ஒரு கிளி உபதேசித்த மாத்திரத்தில் ஒருவன் தான் அதிதிக்குச் செய்த பாதகம் நீங்கப்பெற்றான் என்றால், இத்தலத்தின் பெருமையை யாரால் சொல்லமுடியும். ஐம்பொறிகளையும் அடக்கி அக்கினியின் நடுவில் இருந்து தவம்செய்பவரும் வள்ளலாகிய சிவபெரு மான் வீற்றிருக்கும் புகலிப்பதியில் உள்ள ஒரு மரத்துக்கு ஒப்பாக மாட்டார்கள். ஆகையால் இத்தத்தலம் மிகவும் மேன்மை வாய்ந்தது. இதில் வசித்தவர்கள் பெரும் பேறடைவார்கள் என்பது திண்ணம்.

கரு. வேணுபுர அத்தியாயம்.

பூர்வ காலத்தில் பிரபாகரன் என்னும் அரசன் ஒருவன் இருந் தான். அவனுக்கு சூரன், பதுமன் என இரட்டைப் பிள்ளைகள் பிறந் தார்கள். இவ்விரண்டு பிள்ளைகளும் தங்கள் துணைவர்களோடு நெடுநாள் கடுந்தவம் பல புரிந்து பூதங்களாகி வளர்ந்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் பெரியவர் ஒருவருக்குப் பிழை செய்ததால் அவர் சாபத்தி னால் இருவரும் ஒருருவாகி, காசியப முனிவரிடம் சென்று வணங்கி, மிகுந்த வலிபெற்று, அமராவதியை ஆளும் இந்திரனோடு போர்செய்ய எண்ணி, மறுபடியும் இரண்டு உருவாகி, நால்வகைச் சேனைகளுடன் சென்று அவனை எதிர்த்தார்கள். இரண்டுகக்ஷி சேனை வீரர்களிலும் பலர் இறக்கக் கடைசியில் சூரனும் இந்திரனும் போராடினார்கள். இப்போ ராட்டத்தில் சேனைகள் ஒன்றோடொன்று தாக்கிச் சோனைமேகம்போல்

பாணங்களை வருஷித்து ஒன்றுக்கொன்று எதிர்மறையான அஸ்திர சஸ்திரங்களை ஏவினன். இந்திரன் மிகுந்த கோபாவேசங்கொண்டு, தான வரைக்கொன்று, பிணங்களை மலைபோல் குவித்தான். மறுபடியும் சூரன் அஞ்சாது யுத்தம்செய்ய, மேகவாகனனுகிய இந்திரன் சூரனுடைய தேர், கொடி, கவசம் முதலியவற்றை அழித்து, அவனுடைய தலையையும் தன்னுடைய வச்சிராயுதத்துக்கு இரையாக்கித் தன்னுலகடைந்தான். போருக்கு ஆற்றுத அவுணர்கள் நிலைகுலைந்து ஓடித் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டார்கள். சூரன் மாயையால் இணங்கிய பதுமனை அடைந்து, சூரபத்மன் என்று யாவரும் சொல்லும்படியாக விளங்கினன். அங்கிருந்தவர்கள் இந்திரன் சிவபூசை செய்துவந்ததால் அடைந்த வெற்றியையும், சூரபத்மன் சிவபூசை செய்யாததா லடைந்த தோல்வியையும் எடுத்துப் பேச, சூரபத்மன் அவ் வார்த்தைகளைக் கேட்டு, தானும் அவ்வித வலிமையையும், வாழ்வையுமடைய எண்ணித் தனது குலகுருவைத் தொழுது வணங்கித் தன் எண்ணத்தை வெளியிட்டான். குருவானவர் அவனுக்குப் பஞ்சாக்ஷரத்தை உபதேசிக்கச் சூரபத்மன் திருவெண்ணீறு தரித்து, உருத்ராக்ஷ மாலையணிந்து, ஆகமங்களை ஓதியுணர்ந்து, புகலிப்பதியை அடைந்து, ஆனந்த பரவசனுய்த் திருக்கோயிலுட் சென்று, பிரமதீர்த்தத்தில் நீராடி, பிரமராயகரை வணங்கிக் காற்றே யுணவாகக்கொண்டு, நெடுங்காலமாக செய்தற்கரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தான். சிவபெருமான் சூரபத்மன் செய்த தவத்துக்கிரங்கி, மூங்கிலுருவாய் முன்னே முளைத்து, இலிங்க உருக்கொண்டு, அதன்முன் சங்கதீர்த்தமொன்று தோன்ற அருள்செய்தார். வேணுவிற்றோன்றிய தாணுவைக் கண்ட சூரபத்மன் கண்கள் நீர்ததும்பக் கைகூப்பி வணங்கி நின்று தோத்திரஞ்செய்து, ஐயனே, அச்சுதனும் பிரமனும் அஞ்சுமிடத்தும் இந்திரன் வந்தனைசெய்யவும், மன்னுயிர் எவற்றினும் மிக்க வலியும், ஆயிரத்தெட்டண்டங்களையும் தூற்றெட்டியுகம் அரசாள வச்சிர சரீரமும், வலிமிக்க ஆயுதம் பலவும் அருளவேண்டும் என்று வேண்டினன். சிவபெருமான் அவ்வாறே அவன் வேண்டிய வரங்களைக் கொடுத்து, அவனை நோக்கி, நீ வரம்பெற்ற வேணுவினிடத்தில் விளங்குகின்ற இத்தடத்தில் ஸ்நானஞ்செய்தோர் வச்சிர தேகமும் வலியும் பெற்று வாழ்வார்; நீ உன் காலமுடிவில் கடப்பமாலை யணிந்த நம் கந்தன் கை வேலால் நம்மிடம் வருவாய் என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர். வேணு வழியாய் விமலன் தோன்றிய காரணத்தால் இங்ஙகர்க்கு வேணுபுரம் எனப் பெயர்

வீந்தது என யாவரும் மொழிவார். இப்பெயர்க்கு வேறு காரணமும் உண்டு. அது வறுமாறு :—

மூன்னொரு சமயத்தில் தேவேந்திரன் தன்னுடைய கொலுமண்ட பத்தில் வீற்றிருந்து அரம்பையர் ஆடல் பாடலில் மோகங்கொண்டு, தன் சபைக்கு வந்த தன்னுடைய ஆசிரியரையும் கவனியாது இறுமாந் திருந்தான். அவ்வாசிரியர் அதுகண்டு அவன் அறியாமைக்கு இரங்கி அவனைவிட்டுப் பிரிந்தார். இந்திரன் தான் செய்த அபசாரத்தால் செல்வம் குறைந்து வலியும் குன்ற, பிரமதேவரை அடைந்து, தான் செய்த குற்றம் என்னவென்று வினவ அவரும் நீ உன் குருவைப் பிழைத்ததால் இவ்விதம் ஆனாய் என்று சொன்னார். உடனே தேவேந் திரன் தன்னுலகு சென்று குருவைத்தேடி எங்கும் காணுததால் வருத் தமுற்று, விசுவரூபனைத் தனக்குக் குருவாக ஏற்படுத்திக்கொண்டு ஒரு யாகம்செய்தான். விசுவரூபன் அவுணர் வாழ்க என்று அகத்தில் நினைத்து அவிசொரிந்ததைக்கண்ட இந்திரன் கோபங்கொண்டு விசுவ ரூபனைத் தன் வாளால் வெட்டினான். இதனை அறிந்த அவன் தந்தை ஒரு யாகம் செய்து அதினின்றும் தோன்றிய விருத்திராசுரன் என் பவனை இந்திரனோடு போர்செய்ய ஏவினான். இந்திரன் அவனையும் கொல்ல, ஆசிரியர் இருவருக்குச் செய்த பழியோடு இப்பழியும் சேர் ந்து வருத்திற்று. அப்போது அகத்திய முனிவர் அங்குவந்து நீர், மண், நாரியர், தருக்கள் ஆகியவைகள் அவன் அடைந்த தீவினைகளை ஏற்கச்செய்து அவனை நோக்கி, நீ காழித் தலம் சென்று பணிக என அனுக்கிரகித்துச் சென்றார். தேவேந்திரன் அது கேட்டு இப்பூவுலகி லிருந்து தேவலோகம் வரையில் அளாவியிருந்த வேணுவின் வழியாகக் காழியில் இறங்கி, பிரமதடத்தில் நீராடி எம்பெருமானைத் துதித்து நிற்க, ரிஷபவாகனத்தின்மேல் பெருமான் காக்ஷிதந்தருளி, வேண்டிய வரங்களைக் கேள் என்று திருவாய்மலர்ந்தருளினார். இந்திரன் பணிந் தெழுந்து எம்பிரானே என் பழி நீங்கிச் சுத்தனுமாறு திருவருள் செய்யவேண்டுமென்று துதிக்கப் பரமனும் அவ்வாறே அருள் செய்து அவனை நோக்கி, நீ வேணுவாகிய மூங்கிலால் இவ்விடம் வந்ததால் இந் நகர்க்கு வேணுபுரம் எனப் பெயர் வழங்கும் என்று சொல்லி மறைந் தருளினார். இதனாலும் இந்நகர்க்கு வேணுபுரம் எனப் பெயர் வந்தது.

இத்தலத்தில் சங்கநிதி, பதுமநிதி இரண்டும் பெருந்தவஞ் செய்து சிவபெருமானுக்குக் காவல்பூண்டு அடியவர் பிடிநோய் தீர்த்ததால் இந்

நகர்க்குச் சங்கநிதிபுரம், பதுமநிதிபுரம் எனப் பெயர் வந்தது. இங்ஙனைச்சுற்றிலும் ஐங்குரோசத்தளவு தேவர்கள் வந்து ஸ்தாபித்து வணங்கிய சிவலிங்கங்கள் இருப்பதால் இதில் அடிவைத்தல் கூடாது. ஆதலால் தூரத்தில் இருந்து கோபுரத்தைக் கண்டவுடனேயே வணங்கி வருதல் மரபு. இங்கு வீற்றிருந்தருளும் பிரமேசருக்குச் சித்திரை, ஆடி மாதப் பிறப்புக்களில் அபிஷேகஞ் செய்வோர் முத்தியே அடைவர்.

ஈஈ. கழுமல அத்தியாயம்.

உரோமச முனிவர் முன்னொரு காலத்தில் சிவஞானம் பெற எண்ணித் தலங்கள்தோறும் சிவபெருமானைத் தரிசித்து வணங்கியும் தீர்த்தங்களில் ஆடியும் வந்தார். பலநாள் அப்படிச் செய்துவந்தும் மாயையால் உண்டான மயக்கந் தீர்ந்தாரேயொழிய, சிவஞானம் கைவரப்பெற்றிலராதலால், ஒருநாள் மனம்வருந்தி இப்புகலிப்பதியை மனத்தில் நினைத்தமாத்திரத்திலேயே பசுபோதம் நீங்கிச்சிவபோதம் தோன்றிற்று. உடனே முனிவர் பணிந்தெழுந்து புகலி க்ஷேத்திரத்திற்குச் சென்று, பிரளய விடங்கராகிய தோணியப்பரை வணங்கிப் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, எம்பெருமானைத் துதித்து, எம்பெருமானே உன் திருவடித்தாமரை என்னுள்ளத்தைவிட்டு நீங்காதிருக்க வரந்தரல் வேண்டுமென்று போற்றிசைத்து, வாயுதிசையில் வீற்றிருந்தருளும் சிவலிங்கத்தை அர்ச்சித்து வணங்கி, ஆற்றல், உரு, குணம், கரணம் முதலியவற்றிற்கு எட்டாத அற்புத நீடொளியோடு கலந்து நின்று, உடல் மெலிந்து பலநாள் தவஞ்செய்தனர். இவ்வாறு தவஞ்செய்து கொண்டிருந்த உரோமசருக்கு எதிரில் சிவபெருமான் முக்கண்ணும், நான்கு கையும், பிறைச்சந்திரனும், கொன்றை மாலையும், புலித்தோலாடையும் உடையவராய்த் தோன்றுநிற்க, முனிவர் பணிந்தெழுந்து, தனக்குத் தரிசனம் தந்தருளிய தன்மையைப் போற்றி நின்றார். சிவபெருமான் தம்முன் என்புருகி மயிர் பொடிப்ப நின்ற அன்புருவானை நோக்கி, உன்போல் அன்பர் ஆர்உளர்; நீ மகிழ்ந்தன கேள் எனலும் முனிவர், மகிழ்ந்து புன்பிறவிப் பிணிதீர்க்கும் மருத்துவா நின் பொன்னடியைப் பிரியாத நன்னர் ஞானம் நல்கவேண்டும் என்று வேண்டினர். எம்பிரான் அவரை நோக்கிப் பதியாகிய நம்மையும், பசுவாகிய உன்னையும், உன்னை மயக்கிய பாசங்களின் உண்மையையும் அறிவதுதான் ஞானம்; அந்த ஞானம் இருவினையொப்பு எய்திடுங் காலத்துத் தோன்றும்; தோன்றுங்கால் எமதருளாகிய சத்தினி பாதம் தழையத் தோன்றும்;

ஆதலின் உனக்கு என்றும் உரிமைப் பொருளாவது எமது அருள் ஒன்றே ; பாசம் அநாதியென்றே அறிவாய் ; சரியை முதலிய நான்கினையும் செய்தவர்க்கே சத்தினி பாதம் கைகூடும் ; நாம் செய்யும் பஞ்ச கிருத்தியங்களெல்லாம் ஆன்மாக்கள் பொருட்டே ; அவ்வான்மாக்கள் ஆணவ மலத்தால் தம்மையும் அறியாது நம்மையும் அறியாது இருவினைக்கீடாக இன்பதுன்பங்களை அனுபவித்துப் பூமியிற் பிறந்து இறந்து சிவகதி அடையாது மயங்கி நிற்கும் ; சிவானுபவம் உறுதற்கு வழி எமக்கே இயைந்த இன்னிசை கேட்டல், ஆராதனை செய்தல் முதலிய வைகளாகும் ; இவைகளைச் செய்து ஆன்மாக்கள் நமதருளை அடைந்து தங்கள் செயற்கையாகிய பசுகரணச் செய்கையற்றுச் சிவகரணமாகி நம்மையறிந்து நம்முடன் கலப்பர் ; என்பது முதலான சைவ சித்தாந்த சாஸ்திரத்தின் நுண்பொருள் முழுவதும் உபதேசித்தருளி, இப்போது நமது திருவாக்கினுல் நீ உன் மலங் கழுவப்பெற்று விளங்குதலால் இந்நகர் கழுமலம் எனப் பெயர்பெற்று விளங்கும் என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர். உரோமச முனிவர் சிவானுபூதிப் பெருமாளுக வாழ்ந்து சிவசாயுச்சிய பதம் அடைந்தார். இதனல் இந்நகர் கழுமலம் எனப் பெயர் பெற்றது.

கஎ. புறவ அத்தியாயம்.

சோழ வம்சத்து அரசர்களில் மிகவும் கீர்த்திவாய்ந்தவனுன சிபிச் சக்கரவர்த்தி தலங்கள் எல்லாவற்றிலும் உத்தமமானதும், யோகிகள், ஞானிகள் முதலியோர் வாழ்தற்கு இடமாயுள்ளதும், இருமையின் பயனையும் எளிதிற் கொடுப்பதாயுள்ளதும் இக்காழிப்பதியே என அறிந்து, தன் மந்திரிமார்களோடும் சதுரங்க சேனைகளோடும் வேணுபுரத்தை அடைந்து, பிரமதீர்த்தத்தில் மூழ்கி, கருணைகரராகிய பிரமபுரீசரைத் தொழுது, ஞான குருவாய் விளங்கும் திருத்தோணியப்பரைத் தரிசித்து வணங்கி, சங்கம வடிவினராகிய சட்டைநாதரைப் பணிந்து தொழுந்து போற்றிசைத்து, இந்நகர்க்கு வடதிசையில் தான் எண்ணிய வாறே யாகசாலை யொன்றமைத்து யாகஞ்செய்ய ஆரம்பித்தான். சிவபெருமான் சிபிச்சக்கரவர்த்தியின் அன்பையும், ஈகைத்தன்மையையும் உலகத்தவருக்கு அறிவிக்கத் திருவுளங்கொண்டு, இந்திரனையும் அக்கினி பகவானையும் நினைத்தார். உடனே இந்திரனும் அக்கினியும் எதிரில் வந்து வணங்க, சிவபெருமான் அவர்களை நோக்கி, எவ்விதமாகிலும் நீங்கள் சிபிச்சக்கரவர்த்தியின் அன்பையும் ஈகைத்தன்மையையும் சோதி

த்து உலகோருக்கு அறிவித்து வரவேண்டுமென்று ஆக்ஞாபிக்க, அவர் களும் அவ்வாறே செய்வதாகக் கூறி விடைபெற்று, இந்திரன் பருந்தும் அக்கினி புறவுமாகி, புறவைப் பருந்து தூரத்திச்செல்ல, புறு கூடத்து உயிர் தளர்ந்து, அலறுகிற சப்தத்துடன் சிபிச்சக்கரவர்த்தி வேள்வி செய்யும் இடத்திற்கு ஓடிவந்து, நீயே அடைக்கலம் என விழுந்தது. சக்கரவர்த்தி புறவுக்கு அபயமளித்து அஞ்சேல் என்று தேற்றியிருக்க, அதைத் தொடர்ந்துவந்த பருந்து அரசனை நோக்கி, அரசனே என் பசியைத் தணித்துக்கொள்ளும் பொருட்டுத் தூரத்திவந்த புறுவை என்னிடம் விட்டுவிடு என்னலும், அரசன் தரணியை ஆளும் வேந்தன் ஒருவன் தன்னை அடைக்கலமாக வந்த ஒருயிரைத் தன்னுயிரையுங் கொடுத்துக் காப்பானல்லவா ; இதனை அறியாது என்ன வார்த்தை சொல்லுகிறாய்; என்னை வந்தடைந்த இப் புறுவை இனி நீ உண்டு மகிழமுடியாது என்றான். பருந்து அதைக்கேட்டுக் கோபங்கொண்டு, அரசே, நீ விரும்பினால் உனக்கு இதைப்போன்ற எத்தனை புறுக்களின் மாமிசமானாலும் கிடைக்கும்; இதனை உண்ண நான் வெகுதூரம் பிரயா சையுடன் தூரத்திவந்தேன் ; என்னுடைய வயிறு எரியப் பார்த்திருப் பது தர்மமல்ல வென்றது. தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்கும் வள்ளலாகிய சக்கரவர்த்தி இப்புறுவன்றி நீ எத்தகைய உணவு வேண்டி னாலும் தருகிறேன் என்று சொல்ல, பருந்து நான் அழுது உண்ணேன்; மாமிசமே வேண்டினேன் என்றது. சக்கரவர்த்தி அவ் வார்த்தைகளைக் கேட்டுப் பருந்தை நோக்கி, உனக்காகப்பிறவுயிரையுங் கொல்லேன்; என் உடலிலுள்ள ஊனைத் தருகிறேன் ; உண்டு மகிழ் என்றலும் பருந்து புறுவின் இடைக்குச் சமமான மாமிசம் உமதுடலிலிருந்து கொடுமென அரசன் ஒரு தராசு கொண்டுவரச்செய்து, பருந்தின்முன் நிறுத்தி ஒரு தட்டில் புறுவையும், மற்றொருதட்டில் தன் உடலில் உள்ள மாமிசத்தில் கொஞ்சமும் தன் வாளைக்கொண்டு அறுத்துவைத்தான். நிறை சரியா காமலிருந்தது. அரசன் தன் பாதாதிகேச பரியந்தம் உள்ள சதையை எல்லாம் அறுத்துவைத்தும் இடை சமமாகாததைக்கண்டு, எஞ்சிநின்ற தன் சரீரத்தோடு தட்டில் ஏறி, நிறையைச் சரிக்கட்டி, பருந்தை நோக்கி, நீ என்னை உண்டு உன் பசியைத் தணித்துக்கொள்வாயாக என் றான். சக்கரவர்த்தி புறுவினிடத்து வைத்த அன்பையும், பருந்துக்குத் தன் உடல் முழுதையும் ஈந்த தன்மையையும் மூவுலகத்தவரும் கண்டு அரசனைப் போற்றினார்கள். இந்திரனும் அக்கினியும் தங்கள் சுயஉரு வத்துடன் அவன்முன் தோன்றி, உன் நீதியை உலகத்தவர் அறியவே

இவ்விதம் செய்தோம். நீ இப்புகலிப்பதியின் பெருமானைப் பணிந்து பொலிவு பெற்று விளங்குவாயாக; அரிந்துவைத்த உன் தசையெல்லாம் பொருந்துக; என்று வரங்கொடுக்க, அரசன் இந்திரனை நோக்கி, தேவர்க்கதிபதியே தாகமாயிருக்கிறது என்னலும் இந்திரன் புரூவடிவமாகி பூமியைத் தன் அலகினால் கீறி, காவிரி தீர்த்தத்தைக் கொண்டுவந்து தர, அரசன் பருகி, விடாய் தணிந்து வேள்விமுடித்துப் பிரமேசரை வணங்கி நிற்க, இந்திரனையும் அக்கினியையும் அனுப்பிய இறைவன் விமலையுடன் விடையின்மேல் தோன்றக்கண்டு மகிழ்ந்து, ஐயனே, புரூவுக்கு ஊனைக்கொடுத்து உன்னைக்கண்டு எத்துதற்கு இடமாயிருந்த இங்ஙகர் புறவம் எனப் பெயர்பெறவும், அப்புரூ கொண்டுவந்த இத்தீர்த்தத்தில் ஆடிமாதம் 18-ந்தேதியில் தேவரீர் உமாதேவியாருடன் எழுந்தருளிவந்து தீர்த்தங் கொடுத்தருளவும், இதில் அத்தினத்தில் மூழ்குவோர் சகல பாவங்களும் நீங்கி, புத்தி, முத்தி, புதல்வர்ப்பேறு முதலாய சகல பாக்கியங்களையும் பெறவும் அனுக்கிரஹிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கச் சிவபெருமான் அவ்வாறே அனுக்கிரகித்துக் கோயிலுக்குட் சென்றார். பிறகு, சிபிச்சக்கரவர்த்தி தன் நகர்சென்று செங்கோல் நடத்தித் தன் புகழை நிலைநிறுத்திச் சிலகாலம் சென்றபின் சிவபெருமான் திருவடி நீழலையடைந்தான்.

கஅ. பூந்தராய் அத்தியாயம்.

மூன்னொரு காலத்தில் இரணியாக்கன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் கொடுமை வாய்ந்தவனாகித் தேவர்களை இம்சித்து வந்ததால் அவனைக் கண்ட தேவர் முதலானவர்கள் யமனைக் கண்டதுபோல் அஞ்சிப் பதுங்கியோடினார்கள். ஒரு சமயம் அவன் தேவலோகஞ்சென்று, இந்திரனோடு போர்புரிந்து வெற்றிபெற்று, அவனுடைய நிதியெல்லாவற்றையும் பாதாள லோகத்தில் கொண்டுபோய் வைத்திருந்தான். இந்திரன் வறுமையால் வருந்திப் பிணியால் நொந்து, மிகுந்த வருத்தத்துடன் தேவர்களுடன் சக்கரபாணியாகிய மஹாவிஷ்ணுவை வந்தடைந்து அவர் பாதங்களில் வீழ்ந்து இறைஞ்சி இரணியாக்கனால் ஏற்பட்ட துன்பத்தைச் சொல்லி, அவன் செய்யும் இடுக்கண்களிலிருந்து தப்புவித்துக்கொள்ள மார்க்கம் செய்யவேண்டுமென்று முறையிட்டான். தேவர்களின் துன்பத்தைக் கேட்ட மகாவிஷ்ணு அவர்களை நோக்கி, நீங்கள் வருந்தாதீர்கள்; நான் போய் அந்த இரணியாக்கனை வென்றுவருகிறேனென்று சொல்லி வெள்ளியங்கிரி என்று சொல்

லும்படியான ஒரு பெரிய சுவேத வராக உருவங் கொண்டு ஆகாயத்தையும் பூமியையும் அளாவி நின்று பாதாளத்தை மூக்கினாற் குத்தித் தாக்கினார். அசுரன் அதைக்கண்டு வெகுண்டு தன்னுடைய கதாயுதத்தினால் தாக்கினான். கதாயுதம் சுக்குச்சுக்காக ஒடிந்துபோயிற்று. மகாவிஷ்ணு அவன்மேற் பாய்ந்து அவன் உடலைப் பிளந்து ஆவியைப் போக்கி, உலகமெல்லாவற்றையும் ஒருங்கே கொம்பினால் குத்தித் தூக்கி இறுமாந்திருந்தனர். அதனால் பூவுலகத்திலுள்ளவர் யாவரும் வருந்தி முருகக் கடவுளிடம் சென்று முறையிட, அவர் சுவேத வராகமூர்த்திக்கு அருளுபதேசம் செய்தார். பூவராகர் பூமியை ஆதிசேஷனின் ஆயிரம்தலைமேல் இறக்கிவைத்து, உலகத்தினரைப் பிழைத்த தன் பழி நீங்கும்பொருட்டு, வராக உருவத்தைத் துறந்து, காழிக்குச்சென்று கடவுளைப் பணிந்து என் பழி நீங்குவேன் என்று சொல்லிப் பிரமபுரம் வந்தடைந்து பிரமதீர்த்தத்தில் மூழ்கி, அன்போடு பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துத் திருவெண்ணீறு தரித்து, சிவகண்டிகை யணிந்து, பிறைச்சந்திரனைத் தரித்தவரும், சடா மகுடத்தை யுடையவருமான சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளில் முறைப்படி பூசித்து வணங்கினர்.

அப்போது சிவபெருமான் ஆழியான் பூசைக்கு அகமகிழ்ந்து உமையுடனேகூடித் தனிவிடைமேல் ஆரோகணித்துத் தோன்ற, மாயவன் மாமறைப்பொருளே, மாதவப் பொருளே எனப்பலவாறு போற்றி எழுந்து நிற்க, எம்பிரான் அவரை நோக்கி, உன் வழிபாட்டுக்கு அகமகிழ்ந்தோம்; நீ வேண்டிய வரங்களைக்கேள் என்று ஆக்ஞாபித்தார். அருநிலம் அடங்கலும் அழுது கொண்டவரான மகாவிஷ்ணு இறைவனே, நான் வராக உருவமெடுத்துத் தேவர் மனிதர் முதலியவரை இம்சித்த இரணியாக்கனைக் கொன்று, இப்பூமண்டலத்தை என் கொம்புகளால் குத்தித்தூக்கி உயிர்களுக்குச்செய்த பிழை நீங்கும்படி அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்; நீள்புவியை நான் குத்திக்கிளப்பியதால் இங்ஙகர் பூந்தராய் எனப் பெயர் பெற வேண்டும் என்று விண்ணப்பித்தார்.

கருணைக் கடலாகிய சிவபெருமான் திருமாலே எழுக என்றருளிச் செய்து அவருக்குப் பல வரங்களைக்கொடுத்து கோயிலுக்குட்சென்றனர். மகாவிஷ்ணுவும் வைகுந்தம் சேர்ந்தார். இதனாலேயே இங்ஙகர்க்குப் பூந்தராய் எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஈஈ. மலை வரவு உரைத்த அத்தியாயம்.

முன்னொரு காலத்திலே ஸூரியாவர்த்தத்தைக் காலவித்து என்னும் வேந்தன் ஒருவன் அரசாட்சி செய்துவந்தான். அவன் மனுநீதி வழுவாமல் எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணி, தரணிமுழுவதுக்கும் தந்தையாயிருந்து செங்கோல் செலுத்தினன். அவ்வரசன் புத்திரப் பேறின்றி மனம் நொந்து, பல அறிஞரிடத்திற் சென்று கேட்டு, அவர்கள் கூறியபடி பலவித யாகங்களையும் தானங்களையும் தருமங்களையும் செய்துவந்தும், புத்திரப்பேறு உண்டாகவில்லையாதலால் மனம்வருந்தி, அரச பாரத்தைத் தன் அமைச்சர்பால் ஒப்புவித்துத் தவம்செய்யும் பொருட்டுக் காட்டுக்குச் சென்றான். அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த உரோமசமுனிவரைக் கண்டு, தன் கலியைத் தீர்ப்பவர் அவரே என மனத்துட்கொண்டு, அவரை அணுகிச்சென்று, பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். முனிவர் கவலையுற்றுவந்த காவலனை நோக்கி, வந்த காரியம் என்னவென்று கேட்டார். அரசன், முனிசிரேஷ்டரே, நான் புத்திரப்பேறடையவேண்டி பற்பல தானதருமங்களையும் வேள்விகளையும் செய்தேன்; அப்படியும் அது பெற்றிலேன்; ஆதலால் தாங்கள் என்மேல் கருணைகூர்ந்து அனுக்கிரகம் புரிந்தருளவேண்டுமென்று கூறினன். முனிவர் கைலயங்கிரியின் சிகரத்தைக் கண்டு வணங்கினால் உன் கலி தீரும் என்று திருவருள் செய்தார். அரசன் முனிவரை மறுபடியும் வணங்கி, ஐயனே, அடியேன் கைலயின் சிகரம் காண்பதெங்ஙனம்; தேவரீருடை திருவருளாலன்றி யான் எப்படிக் காண்பது; அதற்கும் தாங்கள்தான் கிருபைசெய்யவேண்டும் என்ன, உரோமசர் அரசனை நோக்கி, நீ நாட்டுக்குச்சென்று முன்போல் அரசாட்சிசெய் என்று கூறி அவனை அனுப்பிவிட்டுத் தாம் கைலமலைக்குச்சென்று அதன் அடிவாரத்திலிருந்து தவஞ்செய்தார். சிவபெருமான் அவர்முன் தோன்றி, வேண்டிய வரம் யாதென்ன, உரோமசர் எம்பெருமானே, இப் பூவுலகிலுள்ளோர் இம்மை மறுமைப்பயனும் புத்திரப்பேறும் அடையவேண்டி உம்மைத் தரிசிக்க இம்மலையின் சிகரம் ஒன்று உத்தர தக்ஷிண காவிரிகளின் மத்தியில் தோன்றித் தேவரீர் இவ்விடத்திற் போலவே பார்வதிதேவியாரோடும் அவ்விடத்திலும் ஞானத்திருவோடு எப்போதும் விளங்கவேண்டுமென்று வேண்ட, கைலாயபதி முனிவரை நோக்கி, வருங்காலத்தில் ஆதிசேஷனும் வாயுதேவனும் ஒருவர்க்கொருவர் பகைத்து யுத்தம்செய்யும்போது நின் கருத்து நிறைவேறும் என்று

அருள்செய்ய, முனிவர் அவ்விடத்திலேயே சிலகாலம் இருந்து தவம் இயற்றுவாராயினர். அதன்பிறகு ஒருநாள் பிரமா, விஷ்ணு, இந்திரன், சூரியன் சந்திரர், வாயுபகவான், ஆதிசேஷன் முதலியவர்கள் சிவபெருமானைத் தரிசிக்கக் கைலைக்குச்சென்றார்கள். அப்போது நாரதர் ஆதிசேஷனைப் பார்த்து, ஆயிரந் தலைபடைத்த ஆதிசேஷனே, இப் பதினான்கு உலகங்களையும் சுமக்கவல்ல உன்னை ஒப்பவர் யார்; உன்னுடைய வலிமைக்கு உவமை ஏது என்று புகழ்ந்து பேசினார். இவ்வார்த்தைகளைக் கேட்ட ஆதிசேஷன் கர்வமடைந்திருந்ததைக் கண்ட காற்று (வாயு பகவான்) பொறுமைகொண்டு முனிவரை நோக்கி, உலகிலுள்ள ஜீவகோடிகளெல்லாம் அழிந்துபோகாவண்ணம் மூச்சினைக் கொடுக்கின்றவன் நான் என்று அறிந்திலிரோ என்று தன்னைத்தானே புகழ்ந்து கொண்டான். அப்போது அவ்விருவருக்கும் போர் நடக்கும் என்ற கருத்துக்கொண்ட ஒருவன் ஆதிசேஷனிடம் சென்று, அவனை நோக்கி, வாயுபகவான், தான் சகல ஜீவராசிகளுக்கும் பொதுவாக நின்று அவைகளுக்கு உயிரைக்கொடுத்துக் காக்கிறதாயும் உன் உடலுக்குள் அவன் இல்லாவிட்டால் நீ ஜீவிப்பது எங்ஙனம் என்றும், நீ தேவரும் அசுரரும் அமுதங்கடைந்த காலத்து விஷத்தைக்கக்கி எல்லோரையும் கலங்கச் செய்தாய்; சூரிய சந்திரரை வருத்துகிறாய்; மாயன் அழகை மழுங்கிடச் செய்தாய்; அண்டர்நாதனின் கண்டத்தைக் கறுக்கச்செய்தாய்; அண்டினவரைக் கொல்வாய்; என்றும் பலவாறுகத் தன்னை உயர்த்தியும் உன்னைத் தாழ்த்தியும் பேசினான் என்றான்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட ஆதிசேஷன் மிகக்கோபங்கொண்டு தன் பட்டத்தைத் தூக்கி, நாக்கை வளைத்து, நாரதரே அந்தக்காற்று என்னை டெதிர்த்துப் போர் செய்யும்போதல்லவா என் வலியை நீர் கண்டறியலாம்; ஆகையால் அவனை இங்கு அழைத்து வாரும் என்றான். நாரதர் உடனே வாயுபகவானிடம் சென்று, அவனிடத்தில் ஆதிசேஷன் உலகத்தைத் தாங்கும் வலிமை தனக்குத்தான் உண்டென்றும், நீ உருவமில்லாதவன்; அக்கினியோடு சினைகமுடையவன்; மன்மதனுக்கு வாகனமானவன் என்றும் இன்னும் பலவாறுகத் தூஷணமாகப் பேசினான் என்று சொன்னார். இதனைக் கேட்ட வாயுபகவான், கண்களினின்றும் தீப்பொறி சிந்த, கோபத்துடன் போருக்கெழ, நாரதர் ஆதிசேஷனிடம் தெரிவிக்க இருவரும் யுத்தம் செய்யத் தொடங்கினார்கள். தேவர்கள் ஆதிசேஷனை நோக்கி, நீ உன் ஆயிரம் தலையாலும் இப் பொன்மலைக் குவட்டைப் பொத்திக்கொள்; வாயுபகவான் தன் வலிமையால் உன்னை

அசைத்துப் பார்க்கட்டும் என்றார்கள். உடனே ஆதிசேஷன் தன் ஆயிரந்தலையாலும் மலைக்குவட்டை மூடிக்கொள்ள், காற்று வீச ஆரம் பித்து; மற்றை மலைகளெல்லாம் சுற்றி அலைய; சமுத்திரம் பொங்க, மரங்களெல்லாம் வேரோடு சாய மிகுந்த வேகத்துடன் வீசியும் ஆதி சேஷனின் ஆயிரந் தலைகளில் ஒரு தலையைக்கூட அசைக்கமுடியவில்லை. இவ்வாறு இவர்கள் யுத்தம் செய்ததால் வருந்திய தேவர் முனிவர் முத லானவர்கள் காற்றினிடம் செல்லாமல் ஆதிசேஷன்பால் சென்று, உல கத்தைத் தாங்கும் வலிமையையுடைய உன்னை ஒப்பார் யாருமிலர்; சலசலப்புடைய இப்பவனனை உனக்குச் சமன்; பொறையைப் பொறு க்கும் பொறுமையுடையாய், என்பதற்குச் சான்றாக உன் படம் ஒன் றைத்தூக்கி அவன் வெற்றிபெறும்படி செய்து எங்கள் துன்பத்தைத் தீர்க்கவேண்டும் என்று வேண்டினார்கள்.

ஆதிசேஷன் தேவர் முனிவர் முதலானவர்களின் வருத்தத்தைக் காண சகிக்காதவனாய்த் தன் படத்தில் ஒன்றைத் தூக்கிற்று. அப்போது காற்று வேகமாய் வீசியதால் அம்மலையின் சிகரங்களில் ஒன்று பெயர்ந்து அம்மலையின் அருகில் ஒருபெருங்கிளையும், அதிலிருந்த சிறு கிளைகள் திரிசிராமலை, திருஎறும்பீசுரம், திருவாரூர், திருவேரகம் (சுவாமிமலை), திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், பழனி, வாட்போக்கி, திருக்கருப் பறியலூர் (தலைஞாயிறு), திருவீழிமிழலை முதலிய தலங்களில் பத்தும், ஆகப் பதினொரு கிளைகளும் விழ கைலாயத்தருகில் விழுந்த பெருங் கிளைச்சிகரத்தை இறைவன் அருளால் இருபது குருகுகள் தாங்கிக் கொண்டுவர, அங்கே தேவகணங்கள் சூழ இதற்கெனவே காத்துக்கொண் டிருந்த உரோமசமுனிவரும் களிப்புடன் பின்வர, அப்பறவைகள் அம் மலைச்சிகரத்தை இக்காழிமாநகர் ஆலயத்தின் மத்தியில் கொண்டுவந்து வைத்தன. முனிவர் பெருமான் கண்டு மகிழ்ந்து காலவித்து அரசனுக் குத் தெரிவிக்க அவன் வந்து சிகரத்தைத் தரிசித்துச் சிவபெருமானை உமாதேவியாரோடு வணங்கி, உரோமசமுனிவரைப் போற்றித்துதித்து மகப்பேறு அடைய வரம்பெற்றான். அப்போது அம்மலை மறைந்துநிற்க, காலவித்து வேந்தன் விதிப்படி சுதையால் திருமலை ஒன்று கட்டுவித்து தேவகணங்களையும், இருபது பறவைகளையும் சுதையால் செய்துவைத் துப் பிரமேசருக்கு நவமணிகளாற் செய்த ஆபரணங்களையும் திருவிழா நடத்தவேண்டும் நிபந்தங்களையும் கொடுத்துத் தன் நகர்போய்ச்சேர்ந்து புத்திரனைப் பெற்றுச் சுகமாக வாழ்ந்திருந்தான். உரோமச முனிவர் இக்காழியிலேயே தங்கியிருந்து தவஞ்செய்தார்.

ஒரு பிரமதேவருடைய ஆயுள் முடிகிற பிரளயகாலம் ஒன்றினில் சுத்த மாயாசத்தி சொரூபமாக விளங்கும் தோணியின்மேல் ஞானச் செல்வியோடும் எம்பெருமான் இம்மலை தாங்கநின்று, கடல்தீர்த்தம் ஒடுங்கியதும் இங்ஙகரில் முன்போல் வீற்றிருந்து பிரம விஷ்ணுக்களைப் படைத்து அவர்களால் துதிக்கப்பெற்று, கைலையின்கண் வீற்றிருத்தல் போலவே இவ்விடத்திலும் வீற்றிருப்பதால் இதற்குக் கிரிபுரம் எனப் பெயர் உண்டாயிற்று. இவ்விடத்தில் தோணியின்மேல் பெரியநாயகரும் பெரியநாயகியும் வீற்றிருத்தலால் இதற்கு உமாபதிபுரம் எனவும் பெயர் உண்டு. இத்திருமலையை ஒரு யோசனை தூரத்தில் இருந்தாயினும் தரிசித்தவர்கள் காசினி முழுமையுங்கண்ட பலனை அடைவார்கள். இங்கே வீற்றிருந்தருளும் கைலாசபதியின் திருநாமங்களாகிய காளிகேசன், பிரமேசன், கஞ்சுகேசன், பராசரேசன், தோணிநாயகன் என்னும் ஐந்தையும் தியானிப்பவர் பஞ்சமாபாதகங்களினின்றும் நீங்கிச் சிவகதி பெறுவார். இவ்வூர் மான்மியம் எழுதப்பெற்ற ஏடு ஒன்று ஒருவர் வீட்டிலிருந்தாலும் அவர் சிவனருள்பெற்று விளங்குவார்.

உ0. ஆபதுத்தாரணர் அத்தியாயம்.

முற்காலத்தில் இரணியன் என்னும் அரக்கனொருவன் பிரம விஷ்ணுக்களின் புகழையும் பெயரையும் அழித்துத் தன்பெயரை விளங்கச் செய்து, தேவர் யாவரும் தன்னைக்கண்டு அஞ்சும்படித் தன் ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்திவருநாளினன். மேலும் அவன் தன் கண்களினின்றும் தோன்றும் சுவாலையால் அந்தணர் வேள்வித்தீயை அணைத்து, சர்ப்பத்தைத் தனக்குக் கச்சையாகத் தரித்து, பஞ்சபூதத் தலைவரை வென்று, அவர் தொழிலைத் தானே செய்துவரலாயினன். அவன் காலையில் கடலில் நீராடிப் பிற்பகலில் இந்திரனுடைய கற்பசச்சோலையில் உலாவி இரவில் சத்தியலோகஞ் சென்று நித்திரை செய்வான். அவன் சிறு வயதில் தன் வலிமையைப் பலருங் காணவேண்டி சூரியனுடைய உதய அஸ்தமன கிரிகளைத் தனக்கு மகர குண்டலங்களாகவும், மந்தர கிரியைத் தனக்குக் கதாயுதமாகவுங் கொண்டிருந்தான்.

இவ்வாறு புயவலியும் தவவலியும் பெற்ற இரணியன், தேவரும் மாந்தரும் யாகஞ்செய்கின்ற காலத்தில் அவ்வத் தேவருருக்கொண்டு வந்து அவிர்ப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தும், வேதியர் வேதம் ஓதுங் காலையில் இரண்யாயநம : என்று சொல்லும்படியும் செய்துவந்ததன்றித் தன் உத்தரவுப்படி நடக்காதவர்களைப் பலவாறு இம்சித்தும் வந்தான்.

அவன் மகன் பிரகலாதன் மாத்திரம் நாராயண மந்திரத்தையே ஓதி வந்தான். இரணியன் அவனைப் பலவாறு துன்புறுத்தியும் அவன் பிடிவாதமாக் இருந்தான்.

இரணியன் ஆண், பெண், இடி, படைமுதலியவற்றாலும் பகல், இரா என்னும் காலங்களிலும் ஒரு கட்டடத்தின் உள்ளிடம், வெளியிடம் ஆகிய ஓரிடத்திலும் பூத சம்பந்தத்தாலும், மற்றும் உயிருள்ள எப் பொருளாலும் தன்னுயிர் நீங்கப்பெறாது வாழும்படி வரம்பெற்றிருந் தானெனினும், மேலும் வலிபெற்று விளங்கவேண்டுமென்று நினைத்துக் காவிரிநதியின் வடகரையும், திருவெண்காட்டுக்கு வடமேல்பாலுமுள்ள தோணிபுரத்தின் கீழ்த்திசையில் தோன்றும் வில்வ வனத்திற் சென்று வேள்வியொன்று செய்ய, ஆயிரம்வெள்ளம் அவுணர் குழுவுடன் வந்து, யாகசாலையமைத்து யாகம்செய்யத் தொடங்கினர். இதனையறிந்த தேவ ரெல்லாம் ஒருங்குகூடி மகாவிஷ்ணுவின் சந்நிதி சென்று, அவரைப் பணிந்து, இரணியனால் தாங்கள் படும் துயரத்தையும், மேலும் அவன் வலிபெற்று விளங்க யாகம்செய்தலையும் விண்ணப்பிக்க, மகாவிஷ்ணு அவர்களுக்கு அபயங்கொடுத்து, சாரங்கபாணியாகச் சென்று, அவுணன் வேள்விசெய்யும் இடத்தை அணுகியதும் இரணியன் கோபங்கொண்டு தன் படையை ஏவினன். அவ்வீரர்கள் எழுந்து மகாவிஷ்ணுவின் காணலிக்குப் பயந்து சிலர் ஓட, எஞ்சி நின்றோர் யமனுலகு செல்ல. நாராயணமூர்த்தி கண்டு களித்துக் கூத்தாடிச் சங்கநாதம் செய்தார். இரணியன் தன் வேள்வியழிந்ததை நினைத்து, வெளிவந்து யுத்தம்செய் யத் தொடங்கினன். இருவரும் மலையோடு மலை மோதுதல் போலவும் மேகத்தோடு மேகம் மோதுதல் போலவும் வில்லொலியும், வாளொலி யும் செய்து ஒருவர்க்கொருவர் தோள் தட்டிச் சண்டை செய்தும் இரணியன் தோல்வியுறுதலைக் கண்ட மாயவன், இவனை வேறு வழி யாற் கொல்வேன் என்று சொல்லி மறைந்தருள, இரணியன், ஓம் நமோ நாராயணாய என்னும் பரமமந்திரத்தைத் தவிர வேறொன்றையும் வாயால் சொல்லியறியாத பக்தனாகிய தன் மகன் பிரகலாதனிடம் சென்று, நீ சொல்லுகின்ற நாராயணன் இப்போது எங்கு உளன்; அவனைக் காட்டு வாயாக என்றான். பிரகலாதன் தந்தையே நான் உச்சரிப்பது ஸ்ரீமந்

நாராயணனுடைய திருமந்திரம்; அவரே உலகங்களுக்கெல்லாம் கடவுள்; அவர் சர்வ வியாபி; ஆகையால், தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்; சந்தேகப்பட வேண்டியதில்லை என, இரணியன் கடுங் கோபங் கொண்டு அம்மாயவன் இத்தூணில் இருப்பானென்று தன் எதிரில் இருந்த தூணைத் தன் கையால் அறைந்த மாத்திரத்தில் தூண் பிளந்து அதினின்றும் மகாவிஷ்ணு ஆகாயமளாவும்படியான நரசிங்க வடிவத்துடன் தோன்றி அவுணனைத் தூக்கித் தம் மடியில் வைத்து கைநகங்களால் அவன் உடலைக் கிழித்து உதிரம்குடித்து ஆவியைப் போக்கி அமரருக்கு அருள்செய்தார்.

இவ்வாறு இரணியனைக் கொன்று உதிரம் குடித்து மதமேறிய நரசிங்கம் விண்ணுலகத்தவரும், மண்ணுலகத்தவரும் கலங்கி ஓடும்படி வெறிகொண்டிலாவ, பிரமன் முதலான வானவர் யாவரும் காளிபுரம் சென்று சங்கமவடிவினராய் எழுந்தருளியிருச்சும் வடுகநாதரை வணங்கித் தோத்தரித்தார்கள். எம்பிரானருளால் வீரபத்திரக்கடவுள் அஷ்ட பாதங்களோடு கூடிய சரபபக்ஷியாகவந்து நரசிங்கத்தைப் பிளந்து தேவர் துயரம் நீக்கியருளினர். இதனையறிந்த லக்ஷ்மி வடுகேசனைப் பணிந்து, எல்லுருக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருக்கும் எம்பிரானே, எனது மங்கலநாண் நெடுநாள் ஓங்க வரம்அருள்வேண்டுமென்று பிரார்த்தித்து, பிரமபுரத்துக்கு மேற்பால் மூன்றுகோல் தூரத்திலுள்ள பூங்காவினிற்சென்று சூரிய தீர்த்தத்தின் பக்கத்தில் இருந்து பன்னிரண்டு வருஷம் தவம் செய்ய, வடுகேசன் லக்ஷ்மியின் மூன் தோன்றினர் திருமாலை முன்போல் அளித்தார். லக்ஷ்மி இவ்விடம் திருக்கோலம் பூண்டதலினால் இத்தலத்துக்குத் திருக்கோலக்கா எனப் பெயர் வழங்கலாயிற்று. பிறகு மகாவிஷ்ணு சிவபெருமானைப் பணிந்து தேவரீர் இந்த என்னுடைய நரசிங்கஅவதாரத்தின் தோலை உரித்து உம் திருமேனியில் தரித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள வடுகேசரும் அவ்வாறே செய்தருளினர். சுக்கிரவாரத்தில் வடுகநாதருக்குப் புழுகு அணிவார் உலகமெல்லாம் தம் வசமாக அடைவார். இப்மலையை தூரத்தேதகண்டு தரிசித்தவர்க்கும் முத்தி சித்திக்கும் என்பதை நிலை நிறுத்தும் பொருட்டு, திருமறு மார்பன் இந்நகர்க்குக் கீழ்பால் உள்ள வில்வ வனத்தை அடைந்து அங்கிருந்து திருத்தோணி மலையைத் தரிசித்து வருகின்றமையால், அது திருநகரி என்னும் பெயர் பெற்றது. இத்திருமலையின் சிறப்பு அனந்தமாகையால் அதை அளவிட்டுக் கூற முடியாது.

உக. கழுமல நதி வரவு உரைத்த அத்தியாயம்.

முற்காலத்தில் சூரபத்மன் என்னும் அசுரன் ஒருவன் சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து வேண்டிய வரங்களைப் பெற்றான். அவன் ஒருநாள் தேவர்களை ஜயித்து இந்திரனுடன் போர் செய்வதற்காகத் தேவலோகத்துக்குச் செல்லுகையில், அவன் வருவதை அறிந்த இந்திரன் பயந்து இந்திராணியுடன் ஸ்ரீ காளிபுரஞ் சென்று மூங்கிலுருவாகி வசித்துவந்தான். இவ்வாறு இந்திரன் இவ்விடத்திலேயே வசித்து, சிவபெருமானை மூப்போதும் பூசனை செய்யவேண்டியதற்குப் புஷ்பங்களை வேண்டி ஒரு நந்தனவனம் உண்டுபண்ணினான். அப்போது வெகு நாட்கள் மழை பெய்யாததால் நந்தனவனம் காய ஆரம்பிக்க இந்திரன் வருந்தினான்.

அப்போது நாரதமாமுனி தேவலோகத்தினின்று அங்கு வர, இந்திரன் அவரை நமஸ்கரித்துத் தன் வரலாற்றைக் கூறினான். நாரதர் அவன் மேல் கிருபை கூர்ந்து, அகஸ்தியர் அசமுகியின் பிள்ளைகளாகிய வாதாபி, வில்வலன் என்ற இருவரைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டுச் சிவார்ச்சனை செய்யக் கொங்குநாட்டுக்குச் செல்வார்; அப்போது அவர் கையில் இருக்கும் காவிரி நீரைக்கொண்டு உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்; இது விநாயகப் பெருமான் அருளால் தான் முடியும் என்று சொல்ல, இந்திரன் அவரிடம் விடைபெற்றுத் தெற்குக் கோபுர வாயிலில் விநாயகப் பெருமானைப் பிரதிட்டை செய்து வணங்கிப் பூசித்துத் துதித்து நிற்க, விநாயகப் பெருமான் அவன் முன் தோன்றியருளினர். இந்திரன் அவரை வணங்கித் தன் குறையைக்கூற, விநாயகரும் அனுக்கிரஹஞ் செய்வதாய்த் திருவாய் மலர்ந்தருளி, காக உருவெடுத்துக் குறுமுனியிருக்குமிடம்சென்று, அவர் கமண்டலத்தைக் கீழே வைக்கும் சமயம் பார்த்திருந்து, கமண்டலத்தின் மேல் உட்கார, கமண்டலம் கவிழ்ந்து அதிலிருந்த நீர் பெருகிக் கீழ்த்திசை நோக்கிக் கழுமல நதியாக ஓடி வந்தது. அகஸ்திய முனிவர் காகத்தைத் துரத்திப் பின் தொடர்ந்து செல்ல, விநாயகப் பெருமான் அவர் முன் தன் சுய ரூபத்துடன் நின்று காக்ஷி கொடுத்தருளினர். முனிவர் பணிந்து போற்றவும் விநாயகர் முனிவரை நோக்கி, இந்திரன் நம்முடைய இருமுதுகுரவரையும் இங்கிருந்து பூசிக்கிறான்; அவனுடைய நந்தனவனம் நீர் இல்லாமல் வாடுகின்றது; அவன் நம்மை வேண்டினதால் அவர்கள் திருவுளப்படி உன் கமண்டல நீரைக் கவிழ்த்தேன்;

என்று சொல்லி அவரை அழைத்துக் கொண்டு சென்று சிவபெருமானிடம் தெரிவித்தார். உடனே முனிவர் விநாயகரடியில் பணிந்து, தமது கமண்டலத்தில் முன்போல் நீர் நிறைய அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, விநாயகர் அவ்வாறே கமண்டலத்தில் நீர் நிறைய அனுக்கிரகித்து, அதை அகஸ்தியரிடம் கொடுத்து, இங்ஙகரில் இது என்னால் வந்தமையால் இந்நதி என் பெயராலே விளங்கும் என்று சொல்லி மறைந்தருளினார். பிறகு, காவிரிநதி ஒரு பெண் வடிவாகி முனிவரை நோக்கி, முனிவரே உம்மால் நான் கைலையில் இருந்தது போல் இவ்விடத்திலேயும் இருக்கப் பெற்றேன் ; இந்நதியில் மூழ்குவோர் யாவரும் எவ்வகைப் பாவங்களினின்றும் நீங்கி முத்தி பெற அருளல்வேண்டும் என்று பிரார்த்திக்க, முனிவர் வடதிசையிலுள்ள கங்கையைப் போல் உனக்கும் சோழநாட்டில் அப்பெயர் வழங்கும் ; கங்கை முதலிய புண்ணியநதிகள் ஐப்பசி மாதத்தில் உன்னிலவந்து சேர்தலால் உன்னிடத்தில் வந்து மூழ்குவோர் யாவரும் மாசு தீர்ந்து விளங்குவார் என்று கூறித் தவத்துக்குச் சென்றார்.

தேவேந்திரன் இவ்வ
தன் நந்தனவனத்திற்குட
சிவபூசை முடித்து, இந்திராணியைய அ
தருளும் ஹரிஹரபுத்திரர் காவலிலிருக்கச்
அப்போது சூரபதுமனுடைய சகோதரியா
ராணியைத் தன் அண்ணனிடம் கொண்டு
இந்திராணியின் கையைப் பற்றி இழுக்க, அங்குக் காவல் இருந்த வீரமாகாளர் அவள் கையை வாளால் வெட்டினார். வெட்டப்பட்ட கை விழுந்த இடத்திற்குக் கைவிழுஞ்சேரி எனப் பெயர் வந்தது. (இப்போது கைவிளாஞ்சேரி என வழங்குகிறது.) பிறகு, அசமுகி ஓடிவிடவே, வீரமாகாளர் இந்திராணியை இங்ஙகரின் அக்கினி திசையில் உள்ள சாத்தனரின் காவலாளரிடம் கொண்டுபோய் வைத்தார்.

பொன்னிநதியின் வளப்பத்தால் நந்தனவனமும், இங்ஙகரும் வளப்பமுற்று விளங்கிவந்தது. கைலைக்குச்சென்ற இந்திரன் திரும்பிவந்து சிவபெருமானைப் பணிந்து துதித்து வரம்பெற்றுச் சிலகாலம் சென்ற பின் தன்னுலகம் சென்று தேவர் துயர்தீர்த்து வாழ்ந்திருந்தான். அகஸ்தியர் திருச்சைய மலையை அடைந்து அம்மலைக்குவடு நடுவில் உள்ள நெல்லி விருக்ஷத்தின் அடியில் கமண்டல நீரை இறக்கி வைத்து பொதியமலை சென்று தவம் செய்துகொண்டிருக்கிறார்.

ஊ. குமரவேள் பூசித்த அத்தியாயம்.

கைலை மலைக்குத் தென் திசையிலுள்ள தேவகிரியில் சிவபெருமான் தமது திருக்குமாரரான கந்தசுவாமிக்கு உபநயனஞ்செய்து அங்கு வந்திருந்தவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது இந்திரன், பிரமா, விஷ்ணு, அஷ்டதிக்குப்பாலகர் முதலிய தேவர்கள் சூரபத்மனுடைய கொடுமைக்கு அஞ்சி கைலாயபதியாகிய சிவபெருமானைக்கண்டு வணங்கி, தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டனர். கருணைக்கடலாகிய சிவபெருமான் தேவர்களுடைய துயரத்தைக்கண்டு சகியாமல், அவர்களுக்குக் கிருபைசெய்ய நினைத்து, தமது திருக்குமாரராகிய ஆறுமுகக்கடவுளை அழைத்து அவரை நோக்கி நீ பூவுலகில் அவதரித்து, தேவர்களை இம்சித்துவரும் சூரனைச் சங்கரித்து வருவாயாக என்று திருவாய் மலர்ந்தருளி, அவருக்குத் துணையாக, வீரவாகு தேவர் முதலிய ஒன்பது தலைவரையும், சிங்கன் முதலிய நூற்றெட்டு வீரர்களையும், இரண்டாயிரம் வெள்ளம் குறுந்தாட் பூதப்படையையும், ஒன்பதுலக்ஷம் சேனைகளையும், அக்கினியாஸ்திரம் முதலாகவுள்ள பலவித அஸ்திர சஸ்திரங்களையும் கொடுத்தனுப்பினர். பின்னர், முருகக் கடவுள் தந்தையாரைப் பணிந்து, விடைபெற்று, தம்பிமார்களும் இந்திரன் முதலிய தேவர்களும், தங்கள் தங்கள் ஊர்திகள்மேற்கொண்டு தொடர்ந்துவர, தாம் இரதத்திலேறி வரும்பொழுது பரமசிவன் அடியார்களுக்கு அனுக்கிரஹஞ்செய்ய எழுந்தருளியிருக்கும் திருக்கேதாரம், வாரணாசி, (காசி) ஸ்ரீசைலம், விரூபாக்ஷபுரம், திருக்காளத்திமலை, திருவேங்கடம், திருவாலங்காடு, காஞ்சீபுரம், அருணகிரி, திருமுதுகுன்றம், திருத்தில்லைவனம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு, மண்ணியாற்றுக்கும் காவிரியாற்றுக்கும் இடையில் உள்ள காழிநகர் வந்து சேர்ந்தார். அப்போது சூரியாஸ்தமனமாயிற்று.

உடனே, இந்திரன் தேவதச்சனை அழைத்து, குமாரக் கடவுள் தங்கியிருத்தற்கு ஆலயம் ஒன்று அமைக்கும்படி உத்தரவுசெய்ய அவன் நவரத்தினங்களாலாகிய ஆலயம் ஒன்று அந்தக்ஷணமே அமைத்து வந்து தெரிவித்தான்; அவ்விடத்தில் அன்றிரவு எல்லோரும் தங்கியிருந்தார்கள். இந்திரன் தான் இந்நகரில் வைத்திருந்த இந்திராணியின் ஆபரணங்களை யெல்லாம் பார்த்து இந்திராணியை நினைத்து, அன்றிரவெல்லாம் நித்திரையில்லாமல் வருந்தினன்.

மறுநாள் சூரியோதயம் ஆனதும் தேவேந்திரன் முதலானவர்கள் கழுமலநதியில் நீராடி நித்தியகன்மங்களை முடித்துக் காங்கேயன்முன் வந்து வணங்கி நின்றார்கள். அப்போது குமாரக்கடவுள் தாம் வீற்றிருந்தருளிய ஆலயத்தின் எதிரில் ஒரு தடாகம் அமைக்கச்செய்து கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களை அதில் வருவித்துச் சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்யத் திருமஞ்சனம் எடுத்துக்கொண்டு இந்திராதி தேவர்கள் சூழ்ந்துவர பிரமேசர் ஆலயத்துக்குச்சென்று, சிவபெருமானுக்கு அபிஷேகம்செய்து அர்ச்சித்துத் துதித்து, வணங்கி ஆனந்த பரவசராய் நின்றார். அப்போது சிவபெருமான் இடபவாகனரூடராய்ப் பார்வதியாரோடும் எழுந்தருளி வந்து, தம்மை வணங்கிநிற்கும் சண்முகக் குமாரனை மார்போடணைத்து, நெற்றியில் திருநீறு தரித்து, நீ விரும்பிச்செய்த பூசைக்கு மகிழ்ந்தோம் என்று திருவாய்மலர்ந்தருளி அவர் திருச்செவியில் மூலமந்திரத்தோடு பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து, பாசுபதாஸ்திரம், வேலாயுதம் முதலிய பல படைக்கலங்களைக் கொடுத்து, அவுணரைக் கொன்று, அமரரைச் சிறைமீட்டு, சூரனை வென்றுவருவாய் என்று ஆசீர்வதித்தருளினர். பிறகு, குமாரக்கடவுள் சிவபெருமான் அனுக்கிரகஞ்செய்தவாறே வீரமாமகேந்திரபுரஞ் சென்று, ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஒருங்கே தன் ஆட்சிக்குட்படுத்தியிருந்த சூரபத்மனோடு யுத்தம்செய்து அவனை வென்று தேவர்களைச் சிறைமீட்டு, அவர்களைத் தத்தம் உலகங்களுக்குச், செல்லும்படி அருள்செய்து கைலைக்குத் திரும்பிச் சென்றார்.

குமாரக்கடவுள் அமைத்த இத் தாமரைத்தடாகத்தில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் கலந்திருத்தலால் இதில் மூழ்குவோர் பெரும் பயன் அடைவார்கள் இதில் தங்கியிருக்கும் பக்ஷிகளின் சிறகில்பட்ட நீர்த்துளிகள் எந்த மனிதர்மேல் பட்டாலும் அவர்களும் முத்திபெறுவார் என்பது நிச்சயம். கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பக்ஷத்திதிகள் ஆறுநாளும், ஐப்பசிமாதத்திய பூர்வபக்ஷ திதிகள் ஆறு நாளும் இதில் மூழ்குவோர் கைலாசத்தில் கந்தமூர்த்தியின் உலகில் இருப்பர். ஒவ்வொரு மாதத்திலும் இந்த ஆறு நாளும் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, விபூதி தரித்து, பஞ்சாக்ஷரத்தைச் செபிப்போர் லக்ஷமிகடாக்ஷம் பெறுவார். கார்த்திகை நக்ஷத்திரத்தில் இதில் மூழ்குவோர் ஜீவன்முத்தராவார். அதிலும் கார்த்திகைமாதக் கார்த்திகை அதிக விசேஷம். கார்த்திகை ஆவணி மாதங்களில் வருகின்ற சோமவாரதினங்களில் இதில் மூழ்குவோர் மும்மலங்கடந்த முத்தராவார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சம்பந்தகுரவே நம :

உஉ. திருஞானசம்பந்தப் பிள்ளையார்

திரு அவதார அத்தியாயம்.



முற்காலத்திலே சீகாழிமாநகரிலே கொண்டின்ய கோத்திரத்தில் போதாயன சூத்திரவிதிப்படி ஒழுகுகின்ற சிவபாதவிருதயர் என்னும் பிராமணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் குமாரக்கடவுளையே புத்திரனாகப் பெறவேண்டி, வெகு காலமாகப் பிரமதீர்த்தத்தில் மூப்போதும் மூழ்கிப் பிரமேசரையும், திருநிலைநாயகியையும் துதித்துத் தன் எண்ணம் நிறைவேறுமாறு தவஞ்செய்துகொண்டிருந்தார்.

கருணாகரராகிய சிவபெருமான் ஒருநாள் இவர் கருத்து நிறைவேறும்வண்ணம் சண்முகக்கடவுளை அழைத்து, நீ மண்ணுலகிற்சென்று நாம் வீற்றிருந்தருளும் தலங்களைத் தொழுது, நற்மேல் பதினாயிரம் பதிகங்கள் பாடவேண்டிய ஒரு காரணமிருப்பதால் அவ்வாறே செய்து, நம்மையும், நம் அடியவரையும், வேதாகமங்களையும் நிந்திக்கும் சமயவரைத்தடிந்து, வைதிகசைவசமயத்தை நிலைநாட்டி, நம்மிடம் வருவாயென்று ஆக்ஞாபித்தார். பரமசிவன் இவ்வாறு திருவுளம்பற்றியதும் பார்வதி, உளமகிழ்ந்து உச்சிமோந்து இறைவன் இஷ்டப்படி நீ அவதரிக்கும் தலத்தில் நான்வந்து திருமுலைப்பால் கொடுத்தருளுகிறேன் என்றனள். உடனே வேலவர் சிவகணத்தவரை சோக்கி, நீங்கள் பதினாயிரவரும் பூவுலகிற்சென்று தலங்கள்தோறும் அவதரித்திருங்கள் என்று கட்டளையிட்டு, தாம் காழிமாநகரில் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து தவம் செய்துகொண்டிருந்த சிவபாதவிருதயர்முன் ஒரு சிறு குழந்தையாய்த் தோன்றி நின்றார். குழந்தையைக்கண்ட மாதவர் மிகுந்த சந்தோஷத்தோடு அதை எடுத்துக்கொண்டு, தன் மனைக்குச்சென்று, கற்பில் அருந்ததிக்கொத்த தம் மனைவியாராகிய பகவதியாரிடம் கொடுத்தார். பகவதியாரும் மிகுந்த சந்தோஷத்துடன் குழந்தையைத் தம் இருகைகளிலும் ஏந்தி மார்போடணைத்து, உச்சிமோந்து வீட்டுக்குள் எடுத்துச்சென்று அன்புடன் வளர்த்து வந்தனர்.

சிவபாதவிருதயரும் பகவதியாரும் பரமசிவனருளால் தங்களுக்கு இப்பாக்கியம் கிடைத்ததென்று சந்தோஷங்கொண்டு குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்துவர, குழந்தையும் ஸகலொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மூன்றும் பிராயத்தை அடைந்தது.

அக்காலத்தில் சிவபாதவிருதயர் ஒருநாள் பிரமதீர்த்தத்தில் நீராடச் செல்லுங்கால், குழந்தை அவரைப் பின்தொடர்ந்து சென்றது. அவர் குழந்தையைப் பலமுறை தடுத்தும் கேளாததால் அதன்மேல் வைத்த பிரியத்தினால் அதைத் தன்னுடன் அழைத்துச்சென்று, பிரமதீர்த்தக் கரையினில் இருக்கச்செய்து, தான் தீர்த்தத்தில் இறங்கி ஸ்நானம் செய்துகொண்டிருந்தனர். அப்போது குழந்தை பூர்வ உணர்ச்சி பெற்று, இளம்பசி கூர்ந்தார்போன்று திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, பார்வதியையும் பரமசிவனையும் நினைத்து அம்மே அப்பா என்று அழுதருள, எம்பெருமான் உமையுடன் விடைமேல் எழுந்தருளிவந்து, பார்வதியை நோக்கி, உன் குழந்தை அழுகிறான்; அவனுக்குத் திருமுலைப்பால் கொடுத்தருள்வாய் என்னலும், பார்வதி தான் முன் அருளிச்செய்திருந்தபடி இறங்கிவந்து பொற்கிண்ணத்தில் பாலைப்பெய்து அதில் சிவஞானத்தைக் குழைத்துக் குழந்தைக்கு ஊட்டி, மலர்க்கண் துடைத்துச் சென்றனள். ஞானபோனகம் உண்ட பிள்ளையார், பல கலைகளையும் உணர்ந்தவராய் விடையின்மேல் தோன்றும் பரம்பொருளைக்கண்டு தரிசித்து, ஆனந்தபரவசராய் நிற்க, சிவபாதவிருதயர் ஸ்நானம் முடித்து வந்து, குழந்தையைப் பார்த்து அதன் வாயிலிருந்து பால்வடிந்து திருமேனியில் ஒழுகியிருப்பதைக்கண்டு வெகுண்டு, உனக்குப் பால் கொடுத்தவர் யார் என்று அதட்டிக் கேட்டார். பிள்ளையார் பார்வதி சமேதராய் இடபவாகனரூடராய் எழுந்தருளிவந்த பரம்பொருளைத் தமது திருவிரலாற் சுட்டிக்காட்டித் "தோடுடைய செவியன்" என்று எடுத்து, சிவசொரூபத்தை விளக்கிப் பாடியருளிக் கோயிலுட் சென்றார். அப்போது தேவர் பூமாரி பொழிய, பஞ்சதுந்துபிகள் முழங்க சிவபாதவிருதயர் அச்சமும், ஆச்சரியமும் அடைந்தவராய்ப் பிள்ளையாரின் பின்சென்று, திருத்தோணியில் வீற்றிருந்தருளும் பெரியநாயகரையும், பெரியநாயகியையும் வணங்கி குழந்தையைத் தமது தோள்களில் தூக்கிக்கொண்டு தம் திருமனைக்குச் சென்றார். குழந்தைக்கு அதுமுதல் திருஞானசம்பந்தர் எனப் பெயர் வழங்கலாயிற்று.

பிறகு, திருஞானசம்பந்தர் திருக்கோலாக்காவுக்குச் சென்று, சிவபெருமான்மீது கைகளால் கொட்டிப் பதிகம்பாடிப் போற்றியதும் பஞ்சாக்ஷரம் பொறிக்கப்பெற்ற பொற்றாளம் அவர் திருக்கரத்தில்வர, அம்பிகைமுன் சென்று, அதற்கு ஓசை பெற்றுப் பணிந்து ஏத்தித் திரும்பிவந்து பிரமபுரம் சேர்ந்து பணிந்து, தம் அம்மான் ஊராகிய திருநனிபள்ளிக்குச் சென்று, சிவபெருமானை வணங்கி, தலைச்சங்காடு, திருவலம்புரம், பல்லவனீச்சுரம், சாயாவனம் முதலிய தலங்களில் சிவபெருமானைத் தரிசித்துப் பதிகம்பாடியருளினார்.

பிறகு திருவெங்காடு சென்று பதிகம்பாடி விடைபெற்றுத் தென்திருமுல்லைவாயில், திருக்குருகாவூர், திருமயேந்திரப்பள்ளி முதலிய விடங்களுக்குச் சென்று வணங்கி, பதிகம்பாடித் தமது ஜனன பூமியாகிய சீகாழிக்குத் திரும்பிவந்தார்.

அப்போது பிள்ளையாரைத் தரிசிக்கும்பொருட்டாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது மனையாருடன் வர, பிள்ளையார் அவருக்கு அன்புடன் முகமன் கூறிச் சிலகாலம் தம்மூடனிருத்தித் தாம் பாடும் திருப்பதிகங்களை யாழில் வாசிக்கச்செய்து மகிழ்ந்திருந்தார்.

பின்னர்த் திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் சிதம்பரம் சென்று, தில்லை மூவாயிரவரைக் கண்டு தரிசித்துக் கனகசபைக்குச் சென்று, பதிகம்பாடி எம்பெருமானை வணங்கி, விடைபெற்றுத் திருவேட்களம், திருக்கழிப்பாலை சென்று வணங்கித் துதித்துத் திருநீலகண்டயாழ்ப்பாணரின் ஜனன பூமியாகிய திரு ஏருக்கத்தம்புலியூர் சென்று சிவபெருமானைப்பாடி, பல க்ஷேத்திரங்களையும் தரிசித்து, திருமுதுகுன்றம், திருத்தூங்கானைமாடம் முதலிய தலங்களில் பதிகம்பாடி, திருவரத்துறைக்குச் செல்லும்போது, அவ்வூரார் சிவபெருமான் கட்டளைப்படி கொண்டுவந்து கொடுத்த முத்துச் சிவிகையின்மேல் ஏறியருளி, முத்துக்குடை, முத்துச்சின்னம் இவைகளுடன் அங்குச்சென்று பதிகம்பாடி, பழுவூர், விஜயமங்கை, திருவைகா, திருச்சேய்ஞலூர், திருப்பனந்தாள், திருவமாம்புலியூர், கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் முதலிய திருப்பதிகளைத் துதித்துக்கொண்டு கழுமலத்திற்கு வந்துசேர்ந்தார்.

இவ்விடத்தில் பிள்ளையார் சிலகாலம் தொண்டியப்பரைத் தரிசித்துக் கொண்டு மகிழ்ந்திருக்கும் நாளில் உபநயன முகூர்த்தம் செய்விக்கப்பெற்றுத் தம்மைக் காணவந்த திருநாவுக்கரசு நாயனாருடன் அள

வளர்வி மகிழ்ந்திருக்கும்போது, வாகீசர் தாம் பிறகூத்திரங்களைத் தரிசிக்க விரும்பியதைச் சொல்லி விடைபெற்றுச்செல்ல, தாம் பிரமே சர்மீது மொழிமாற்று, மாலைமாற்று, சந்தஇயமகம், மடக்கு, ஏகபாதம் திருவிருக்குக்குறள், திருவெழுகூற்றிருக்கை, ஈரடி, ஈரடிவைப்பு, நாலடிமேல்வைப்பு, திருவிராகம் முதலிய விகற்பங்கள் பொருந்திய பதி கங்களைப் பாட, திருநீலகண்டயாழ்ப்பாணரும் அப்பாடல்களை யாழில் இசைத்து வாசித்து மகிழ்ந்திருந்து மற்றும் உள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பினர்.

உடனே திருஞானசம்பந்தர், அடியார்கள் முத்துக்குடை எடுத் துக்கொண்டும், முத்துச்சின்னம் ஊதிக்கொண்டும் முன்செல்ல, தந்தை யார் உடன்வர, முத்துச்சிவிகையின்மேல் ஆரோகணித்து, புள்ளிருக்கு வேளூர், திருநின்றியூர், நீடூர், திருப்புன்கூர், மண்ணிப்படிக்கரை, குறுக்கை, அன்னியூர், பந்தணைநல்லூர், திருமணஞ்சேரி, எதிர்கொள் பாடி, திருவேள்விக்குடி, திருக்கோடிகா, சஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, திருஇன்னம்பர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, பெரும்புலியூர், திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்காளூர், வடகரை மாந்துறை, அன்பிலாலந்துறை முதலிய தலங்களுக்குச்சென்று வணங்கிப் போற்றித் திருப்பாச்சிலாச்சிராமம் வந்து சேர்ந்தார்.

திருஞானசம்பந்தர் அவ்விடத்தில் கொல்லிமழவன் என்பவனு டைய மகளுக்கு உண்டாயிருந்த மூயலகன் என்னும் நோயை அகற்ற வேண்டி அவளைச் சுவாமி சந்நிதிமுன் கொண்டுவந்து, " மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வதோ இவர் மாண்பு " என்று பதிகம் பாடி நோய் நீங்கச்செய்து அங்கிருந்து திருப்பைஞ்ஞீலி, திரு ஈங்கோய்மலை முதலிய தலங்களைப் பணிந்து, கொங்குநாடடைந்து, அங் குள்ள கூத்திரங்களைப் பணிந்து, பின்பு காவிரியாற்றின் தென்கரையி லுள்ள திருச்செங்குன்றூர், திருநணை வந்து தரிசித்தார்.

பிள்ளையார் திருச்செங்குன்றூரில் வசிக்கும்போது பனிக்காலம் வந்ததால் அடியார்கள் குளிர்சுரத்தால் வருந்தினர்கள். இதனை அறிந்த பிள்ளையார் ' அவ்வினைக்கிவ்வினை ' என்று எடுத்து இறுதியில் ' திருநீல கண்டம் ' என்று வைத்துப் பதிகம்பாட அடியார்கள் சுரநோய் நீங்கப் பெற்று, அங்கிருந்து திருக்கொடுமுடி, திருவெஞ்சமாக்கூடல், திருக்கரு

காவூர், மாணிக்கமலை, திருப்பராய்த்துறை, ஆலந்துறை, செந்துறை, கற்குடி, திருசிராப்பள்ளி, திருவானைக்கா, திருமகேந்திரம், திருத்தவத்துறை, திருப்பாற்றுறை, திருஎறும்பியூர், திருநெடுங்களம், மேலைத்திருக்காட்டுப்பள்ளி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருச்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணிப்பதி, சக்கரப்பள்ளி, புள்ளமங்கை, திருவாலந்துறை, சேலூர், பாலைத்துறை, திருநல்லூர், திருவலஞ்சுழி, திருமேற்றளி, திருச்சத்திமுற்றம் ஆகிய தலங்களைப் பணிந்து, பட்டீசுவரம் வந்து சேர்ந்தார்.

அப்போது முதுவேனிற்காலமானதால் சிவபெருமான் அருளால் கிடைத்த முத்துப் பந்தர் பெற்றுப் பாமாலை சாத்தி, அங்கிருந்து புறப்பட்டு வடதளி, திருவிரும்பூளை, அரதைப்பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர், குடவாயில், திருநறையூர், திருப்புத்தூர் முதலிய தலங்களுக்குச் சென்று பணிந்து, குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்காரோணம், திருநாகேசுவரம், திருவிடைமருதூர், குரங்காடுதுறை முதலிய தலங்களில் சிவபெருமானைப்பணிந்து போற்றித் திருவாவடுதுறை வந்து சேர்ந்தார்.

அவ்விடத்தில் சிவபெருமானைத் துதித்து "இடரினுந் தளரினும்" என்னும் பதிகம்பாடி, பொற்கிழி ஒன்று பெற்று, அதனைத் தம்மைக் காணவந்த தந்தையாரிடம் யாகம்செய்யும்படிக் கொடுத்து, திருக்கோழம்பம், திருவைகன்மாடக்கோயில், திருநல்லம், திருவழுந்தூர், திருத்தருத்தி, மூவலூர், மாயூரம், திருச்செம்பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறியலூர், திருவேட்டக்குடி, திருத்தருமபுரம், திருநள்ளாறு முதலிய தலங்களைப் பணிந்து போற்றித் திருச்சாத்தமங்கை சென்று, திருநீலநக்கருடன் திருநாகைக்காரோணம், கீழ்வேளூர் முதலிய தலங்களிற் சிவபெருமானைப் பணிந்து போற்றித் திருமருகல் வந்துசேர்ந்தார்.

அங்கு ஒரு மடத்தில் திருஞானசம்பந்தப்பிள்ளையார் தங்கியிருக்கின்றகாலத்தில், அரவுகடித்து ஒரு வணிகன் இறக்க, அவனுடன் வந்த கன்னியின் அழுகுரலைக் கேட்டு, அங்குச்சென்று, சிவபெருமானைத் துதித்து, "சடையா யெனுமால்" என்று தொடங்கி "மருகலுடையாய் தகுமோ இவளுண் மெலிவே" என்றுபாடி முடித்ததும் உயிர்பெற்றெழுந்த அவ்வணிகனுக்கும் அக்கன்னிகைக்கும் மணம் புணர்வித்துத்

திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர், வர்த்தமானீச்சுரம் பணிந்து அங்குத் திருமுருகனார் திருமடத்தில் சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது அப்பர் சுவாமிகள் அங்கு வர, இருவரும் தங்கள் தங்கள் யாத்திரையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது சம்பந்தர் அப்பரை நோக்கி, ஆரூர் தொழுதுவந்த பரிசை வினவினர். அப்பர் சுவாமிகள் திருவாதிரைச் சிறப்பை ஓர் பதிகத்தால் எடுத்துப்பாட அதைக்கேட்ட பிள்ளையார் தாமும் அங்குச்சென்று தரிசனம் செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டு புறப்பட்டுத் திருவிற்குடி பணிந்து திருவாரூர் சென்று தியாகேசரைப் பணிந்து திருப்பதிகம்பாடி, திருப்பனையூர் திருவலிவலம், திருக்கோளிலி, திருப்புகலூர் முதலிய தலங்களைத் தரிசித்து, அங்குவந்த மூருக நாயனர், சிறுத்தொண்ட நாயனர், திருநீலநக்க நாயனர் முதலியவர்களுக்கு அருள்செய்து, அப்பர் சுவாமிகளுடன் திருஅம்பர், திருமாகாளம் வணங்கிப் பின், திருக்கடவூர் வந்து குங்கிலியக்கலய நாயனருடன் விருந்துண்டு, ஆக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்புரம் திருவீழிமிழலை, பேணுபெருந்துறை, திலதைப்பதி முதலிய தலங்களைத் தரிசித்துப் பின்னரும் திருவீழிமிழலை சென்று அப்பர் சுவாமிகள் ஒரு மடத்தில் தங்க, தாமும் திருக்கூட்டத்தாருடன் வேறொரு மடத்தில் சிலநாள் தங்கியிருந்தார்.

அக்காலத்தில் காழியிலிருந்த அன்பர்கள் பிள்ளையாரைத் தரிசிக்க வந்தார்கள். அவ்விடத்தில் எம்பிரான் காழியில் வீற்றிருத்தல்போலவே அவர் கனவில் தோன்ற, பிள்ளையார் எழுந்து கோயிலுக்குச்சென்று திருவீழிமிழலைக் கோயிலிலும் அவ்வாறே கண்டு தரிசித்துச் சிலகாலம் அவ்விடத்தில் அடியார்களுடன் தங்கியிருக்கும்போது பஞ்சகாலம் வந்ததால் பிள்ளையார் சுவாமியைத்துதித்துப் படிக்காசுபெற்று, அடியார்களுக்கு அமுதூட்டி அங்கிருந்து, திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு வேளூர், சாத்தங்குடி, கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், கொள்ளிக்காடு, கோட்டூர், வெண்டுறை, தண்டலை, திருக்களர் முதலிய, தலங்களைப் பணிந்து அப்பருடன் வேதாரணியம் வந்துசேர்ந்தார்.

அவ்விடத்தில் வேதங்களால் திருக்கோயில் கதவு அடைக்கப்பட்டிருந்ததை அறிந்து, அக்கதவைத் திருநாவுக்கரசு நாயனரைக்கொண்டு திறக்கும்படிசெய்து உள்சென்று இருவரும் வணங்கி வெளிவந்து தாம் பதிகம்பாடித் திருக்காப்புசெய்து திருவாய்மூர் சென்று பணிந்து வேதா

ரணியத்திலேயே சிலகாலம் தங்கியிருக்கும்போது, மதுரையிலிருந்து குலச்சிறையாரும், மங்கையர்க்கரசியாரும் அனுப்பியி விண்ணப்பத்தைப் பார்த்து அங்குச் செல்லவேண்டி "வேயுறுதோளி" என்னும் பதிகம் பாடிக்கொண்டு கோடிக் குழகரைத் தரிசித்து, திருக்கடிக்கும், இடும்பாவனம், உசாத்தானம், கொடுங்குன்றம் இவைகளைப் பணிந்து திருவாலவாய்க்குச் சமீபமாய் வந்துசேர்ந்தார்.

பிள்ளையார் வருவதையறிந்த மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் எதிர்சென்று வரவேற்று ஒரு மடத்தில் தங்கியிருக்கும்படி செய்ய, சமணர்கள் அம்மடத்தில் அன்றிரவு தீ வைத்தார்கள். இதனை அறிந்த திருஞானசம்பந்தர் அத்தீயானது "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று பதிகப்பாட அரசன் ஜ்வரரோயால் வருந்தினன். பிறகு பிள்ளையார் சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்து அவர் திருவுள்ளத்தையறிந்து, சமணர்களுடன் வாதுசெய்து, அரசனுடைய வெப்புநோய் சமணர்களால் நீங்காது அதிகரித்ததை, மங்கையர்க்கரசியார் விரும்பியவண்ணம் "மந்திரமாவது நீறு" என்று பதிகம்பாடி அரசனைச் சௌக்கியப்படுத்தி, அரசசபையில் சமணர்கள் தங்கள் மந்திரம் எழுதிய ஏட்டையும், திருஞானசம்பந்தர் தாம் பாடிய 'போகமார்த்த' என்னும் பதிகம் எழுதிய ஏட்டையும் அக்கினியில் போட தேவாரப் பதிகம் எழுதிய ஏடு பச்சென்றிருந்ததையும், சமணர்கள் இட்ட ஏடு எரிந்து சாம்பலாய்ப் போனதையும், பிறகு வைகையாற்றில் சமணர்கள் இட்ட ஏடு தண்ணீரால் அடித்துக்கொண்டு போனதையும், தாம் இட்ட ஏடு தண்ணீரை எதிர்த்து மேல்நோக்கிச் சென்றதையும் அரசனுக்குக் காண்பித்து, வைதிக சைவசமயத்தை நிலைநாட்டி, அரசனுக்குத் திருநீறுதரித்து, அவன் கூனையும் நிமிர்த்தியருளினர். இதனைக்கண்ட சமணர்கள் தங்கள் சபதப்படி கழுவேறினர்கள்.

பிறகு ஆளுடைய பிள்ளையார் சிவிகைமேற்கொண்டு அரசன் அரசி, மந்திரி முதலியவர்கள் தம்மூடன் வர திருப்பரங்குன்று, ஆப்பனூர், புத்தூர், திருப்பூவணம், திருச்சுழியல், திருக்குற்றாலம், குறும்பலா, திருநெல்வேலி, திருப்புடைமருதூர், இராமேசுவரம் முதலிய பதிகளைத் தரிசித்து, திருக்கோணமலையையும், திருக்கேதீச்சரத்தையும் அங்கிருந்தபடியே போற்றிசைத்து, திருஆடானை, திருப்புனவாயில், மணமேற்குடி பணிந்து, அரசன் முதலானவர்க்கு விடைகொடுத்தனுப்பி திருக்களர், திருப்பாதாளீச்சுரம் தரிசித்துத் திரும்பித் திருக்கொள்ளம்பூதூர் வந்துசேர்ந்தார்.

அங்கு முள்ளியாற்றில் வெள்ளப்பெருக்கு அதிகமாயிருக்கஓ மேறி "கொட்டமேகமழும்" என்னும் பதிகம்பாடி இக்கரை வந்து திருநள்ளாறு தரிசித்துத் திருத்தெளிச்சேரி வந்து சேர்ந்தார்.

திருத்தெளிச்சேரியில் சூழ்ந்திருந்த புத்தர்களை வாதில்வென்று பதிகம்பாடி, புத்தநந்திதலையில் இடிவிழச்செய்து, திருக்கடவூர் போற்றி அப்பர் சுவாமிகள் தங்கியிருந்த பூந்துருத்திச்குச்செல்லுகையில் அப்பர் சுவாமிகளானவர் திருக்கூட்டத்தில் ஒருவராகச் சேர்ந்து பல்லக்கைச் சுமந்துவர ஊருக்குள்சென்று அப்பர் எங்குற்றார் என்று சம்பந்தர் வினவ இங்குற்றேன் என்று அப்பர் சொல்லவும், சம்பந்தர் பல்லக்கை விட்டு இறங்கி ஒருவரை ஒருவர் பணிந்துகொண்டு அங்குள்ள அரசர் மடத்தில் விருந்துண்டு, அப்பர் சுவாமிகள் காஞ்சிநகர் முதலிய தலங்களைத் தாம் பணிந்துவந்த பரிசைக்கூறச் சம்பந்தர் தாம் மதுரைசென்று சமணிருள் நீக்கிய அற்புதங்களைச் சொல்லி அவர் விருப்பத்தின்படியே காவிரிக்கு வடகரையிலுள்ள திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பழனம் முதலிய தலங்களைப் பணிந்துகொண்டு கழுமலம் வந்து சேர்ந்தார்.

பிறகு பிள்ளையார் காழிக்கு வடபாலுள்ள தலங்களைப் பணியவேண்டுமென்று விருப்பங்கொண்டவராய்த் தில்லைநகர் சென்று ஸ்ரீநடராஜப் பெருமானைத் தரிசித்துத் திருத்தினைநகர், திருமாணிகுழி, திருவடகூர், திருவக்கரை, இரும்பைமாகாளம், திருவதிகை, திருஆமாத்தூர், திருக்கோவல், அறையணிநல்லூர், திருவண்ணுமலை முதலிய தலங்களில் வீற்றிருந்தருளும் எம்பிரானைப் பாடித் துதித்துத் திருவோத்தூர் வந்து சேர்ந்தார்.

திருவோத்தூரில் பிள்ளையார் ஆண்பனையைப் பெண் பனையாக்கித் திருமாகறல், திருக்குரங்கணில்முட்டம் ஆகிய இப் பதிகளைப் பணிந்து காஞ்சிநகர் சென்று, பதிகம்பாடி அங்குள்ள காமக்கோட்டம், திருநெறிக்காரைக்காடு, அநேகதங்காவதம், திருமேற்றளி முதலிய விடங்களை அடைந்து போற்றி, திருமாற்பேறு, திருவல்லம், இலம்பையங்கோட்டூர், திருவிற்கோலம், தக்கோலம், திருஊறல், பழையனூர், திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம் முதலிய தலங்களைப் பணிந்து, திருக்காளத்தி வந்து சேர்ந்தார்.

பிறகு திருக்காளத்தியப்பரை வணங்கி, அங்கிருந்தபடியே திருக்கேதாரம், திருக்கோகர்ணம், ஸ்ரீசைலம், இந்திரநீலபருப்பதம் முதலிய தலங்களில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப்பாடிப் புறப்பட்டு, திருவலிதாயம், திருவொற்றியூர் பணிந்து, திருமயிலாப்பூர் வந்துசேர்ந்தார்.

பிள்ளையார் அவ்விடத்தில் சிவநேசச்செட்டியார் சேமித்து வைத்திருந்த அவர் பெண்ணின் எலும்பைக் கொண்டுவரச்செய்து, பதிகம் பாடி அதைப் பெண்ணுருவாக்கி, அங்கிருந்து புறப்பட்டுத் திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருச்சமுக்குன்றம், திருவரசிலி, திருப்பனங்காடு முதலிய தலங்களைப் பணிந்து சிதம்பரத்திற்கு வந்து சேர்ந்தார்.

திருஞானசம்பந்தர் சிதம்பரக்ஷேத்திரத்தில் இருந்ததைக் கேள்வியுற்ற அவர் தந்தையாராகிய சிவபாதவிருதயர் அங்குச்சென்று சீகாழிக்கு அழைத்துவந்தார். அக்காலத்தில் அவர் உறவினர் திருநல்லூரில் இருந்த நம்பாண்டாரின் குமாரியை அவருக்கு மணம்பேசி வந்து, திருஞானசம்பந்தரை அழைத்துக்கொண்டுசென்று திருமணம் நடத்தினர்கள். அப்போது பிள்ளையார் தம் மனைவியாருடன் அக்கினியை வலம் வருகின்றபோது திருமணம் நடத்திவைக்கும் பெரியோர்கள் அவரை நோக்கிப் பெண்ணின் காலைத்தூக்கி அம்மியில் வைக்கும்படி சொன்னர்கள். திருஞானசம்பந்தர் இது எம்பிரான் திருவடிகளுக்குச் செய்யவேண்டியது முறைமையாகும் என்று மணப்பெண்ணுடன் அங்கிருந்தோர் யாவரும் சூழ்ந்துவர, "கல்லூர்ப்பெருமணம்" என்றுபாடி ஆலயத்துக்குச்செல்ல ஆகாயமளாவும்படி ஓர் ஜோதி தோன்றி அதில் ஓர் வாயில் தெரித்துக்காட்டியது. திருஞானசம்பந்தர் அதைக்கண்டதும், திருநீலகண்டயாழ்பாணர், திருநீலநக்கர், திருமூருகர் முதலியவர்களையும் இன்னும் அங்கு வந்திருந்த அனைவரையும் அதற்குள் போகும்படி செய்து, தாம் கைப்பிடித்த மனைவியுடன் "காதலாகி" என்னும் பதிகம்பாடிக்கொண்டு அதனுள்சென்றார். உடனே ஜோதி மறைந்து சிவலிங்காகாரமாக விளங்கிற்று.

பிறகு, சீகாழிப்பதிநாதர் பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலியவர்களை நினைத்தமாத்திரத்தில் அவர்கள் வந்து வணங்கிநின்றார்கள். கருணைக்கடலாகிய சிவபெருமான் அவர்களை நோக்கி, தலங்கள்தோறும் சென்று நம்மைப் பதிகம்பாடி எத்திய ஞானசம்பந்தனை பொன்விம்பத்தில் ஆவாகனஞ்செய்து உலகத்தவர் மும்மைப் பயன்களையும் அடைய

வேண்டி நித்திய பூசையும், தைமாதத்திய அமாவாசை, பங்குனி, சித்திரை மாதங்களின் திருவாதிரை, வைகாசிமாதத்து மூலம், ஆனி மாதத்து உரோகணி, ஆவணி, ஐப்பசி மாதங்களின் சதயம் ஆகிய இவ்வேழு தினங்களில் நைமித்திய பூசையும் செய்து, பங்குனிமாதச் சதயநக்ஷத்திரத்தில் கொடியேற்றி, மிருகசீரிஷநக்ஷத்திரத்தில் ரதோற்சவம் நடத்தி, திருவாதிரை நாளில் பிரமதீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளும் படி செய்து நீங்கள் எல்லோரும் ஸ்நானம்செய்து பேறுபெறுங்கள் என்று அனுக்கிரகிக்க, தேவர்கள் அவ்வாறே செய்து வருஷந்தோறும் திருவிழா நடத்திவந்தார்கள். இத்திருவிழா நடத்த உதவிபுரிந்தவர்கள் மேலான கதியைப் பெறுவார்கள். திருஞானசம்பந்தப் பெருமானே அன்போடு பணிகின்றவர் யமனுலகு செல்லமாட்டார்கள். அவரைப் பணிய வேண்டிப் புறப்பட்டு வழியில் மாய்ந்தவரும் சிவகதியடைவார்கள். அவருடைய சரித்திரத்தைப் படித்தவரும் கேட்டவரும் சிவபெருமான் திருவடிநீழலில் தங்கியிருப்பார்கள்.

உச. தீர்த்தமகிமை உரைத்த அத்தியாயம்.

மூன்பு ஓர் ஊழிக்காலத்தில் பிரமதேவர் சிவபெருமானைப் பூசிக்க எண்ணங்கொண்டு தோற்றுவித்த தீர்த்தம் பிரம தீர்த்தம் என்னப் படும். ஒரு பிரமா இதில் ஸ்நானம்செய்து சிவபிரானை வணங்கிச் சிருஷ்டித்தொழிலை மேற்கொண்டார். மற்றொரு பிரமதேவர் இதில் மூழ்கி சிவசாயுச்சியம் பெற்றார். வேறொரு வேதியர் இப்பிரமதீர்த்தக்கரையில் வந்தவுடனேயே வேதவேதாந்தங்களில் வல்லவராகிப் பிரம பதவியையடைந்து உலகங்களைச் சிருஷ்டிக்கும் சக்தி பெற்றார். இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்களின் தொகையும் அனந்தம். அவர்கள் அடைந்த நன்மையும் அனந்தம் என்று நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பிறவியில் உண்டான அறிவால் இரு வினைகளையும் மும்மலங்களையும் நாற்பிறப்பையும் ஒழித்து ஐம்புலன்களையும் அடக்கி அறுவகைக் குற்றங்களையும் அகற்றி ஏழிசையோடு எண்குணத்தானுகிய சிவபெருமானைத் தோத்தரித்து அறிந்தவரே இப்பிரம தீர்த்தத்தின் பெருமையை ஒருவாறு அறிவர். இப்பிரமதீர்த்தத்தின்மேல் தவழ்ந்து வரும் இளங்காற்று ஒருவர்மேல் பட்டாலும் அவர் தேவலோகத்தில் சென்று தேவபோகங்களை அனுபவிப்பார். சிவபெருமான் தன்னை அர்ச்சித்து வணங்கும் அடியவர்கட்குக் கொடுக்கின்ற முத்திப்பேற்றை இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கும் கொடுத்து வருகிறார்.

- - வாணிகேள்வராகிய பிரமா இருபத்தெட்டுகோடி தீர்த்தங்களெல்லாம் ஒருங்கே வந்து சேர்ந்திருக்கின்ற இத்தீர்த்தத்தில் நீராடி, நால்வகை அண்டங்களையும் வகுத்து, சீவர்கள் நாற்பிறவிகளில் உழன்று வருந்தாது கதியளிச்சுமாறு நான்கு கோணமாக இத்தடாகத்தை உண்டாக்கினர். ஐப்பசிமாதப் பிறப்பில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களெல்லாம் இதில் வந்து கலத்தலால் அன்று இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர் மும்மலங்களுங் கழிந்து முத்தராகுவர். ஐப்பசிமாத அமாவாசையன்று வசிட்டர், கங்கை, இந்திரன், சனகாதியோகிகள் முதலியவர்கள் இத்தீர்த்தத்தில் வந்து நீராடுவர். ஆதலால் அத்தினத்தில் இதிற் படிவோர் அடையாத பொருள் மூவுலகத்திலுமில்லை. சூரியன் மேஷராசியிற் பிரவேசிக்கின்ற காலமாகிய வருஷப்பிறப்பன்று இதில் ஸ்நானம் செய்வோர் மறுபடியும் பூமியிற் பிறவார். ஒரு அயனம் முழுவதும் இதில் மூழ்குவோர் புத்திரப்பேறடைவர். தை, ஆடிமாதப் பிறப்புக்கள், விதிபாதங்கள் சேர்கின்ற தினம் இவைகளில் இதில் மூழ்குவோர் நவக்கிரகங்களிலுள் ஏற்படும் தோஷங்கள் நீங்கப்பெறுவர். கிரஹண புண்ணிய காலங்களில் இதில் மூழ்கி, பொன்னுலகாகம்செய்து தானம்செய்பவர்கள் மூன்றுலகத்தையும் காவல்செய்து, பிறகு சிவலோகம் சேர்வார்கள். இத்தீர்த்தக்கரையில் ஒரு பக்கம் இருந்து பஞ்சாக்ஷரத்தை ஒருதரம் ஓதினவர் மற்றைத் தலங்களில் ஒரு கோடிதரம் செபித்த பலனைப் பெறுவர். இத்தீர்த்தத்தில் மூழ்கிய பறவைகளின் சிறகில்பட்ட நீர்த்துளி ஒருவர்மீது வீழ்ந்தாலும் அவர் சிவகதி பெறுவர். இதன் கரையில் தென்புலத்தார்ச்சுத் தர்ப்பணம் செய்கின்றவர் சிவனருள் பெற்றுத் தேவராவார். இன்னும் இத்தீர்த்தத்தின் பிரபாவம் அனந்தமாகும். இத்தீர்த்தக்கரையில் கிடக்கும் குப்பைகளை வாரி எறிந்தோர் மற்றைத் தீர்த்தங்களுக்கு அணிகலனணிந்து பொற்படாம் புனைந்தால் அடையும் பயன் பெறுவர்.

பிரமேசர் கோயிலுக்கு வாயுதிக்கில் முக்கோல் தூரத்தில் சூல தீர்த்தம் ஒன்று உண்டு. இது மகாவிஷ்ணு கபிலமுனிவரின் சாபத்தால் வருந்தாவண்ணம் பரமசிவனுடைய சூலாயுதத்தினுல் உண்டாக்கப்பட்டதாதலால் இதற்குச் சூலதீர்த்தம் என்று பெயர் உண்டாயிற்று. ஐப்பசிமாதத்தில் வரும் பௌர்ணிமையன்று மகாவிஷ்ணு தவஞ்செய்து இத்தீர்த்தத்தில் மூழ்கி முனிவர் சாபம் நீங்கவும், இலக்குமியுடன் பிரியா உரிமையும் பெற்றார். இதில் ஸ்நானம்செய்து தென்புலவாசிகளாகிய பிதிர் தேவதைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வோர்

பிறைச்சந்திரனை அணிந்த கைலாசபதியினுடைய திருவடிகளைப் பெற்றுச் சிவானுபூதிச் செல்வராய்ச் சதாகாலமும் பேரானந்தக்கடலில் மூழ்கிச் சிவகணங்களோடு வாழ்வார்.

முற்காலத்தில் பிரமதேவர் இந்த க்ஷேத்திரத்தில் கொண்டுவந்து வைத்த தேவர்களும், முனிவர்களும் தர்மவழியினின்றுந் தவறுதலாய் வேள்வித்தொழில் புரிந்து, திருப்பணியிலேயே நிற்கின்ற திறத்தைச் சிவபெருமான் கண்டு, தமது சடாமகுடத்திலணிந்திருக்கும் சந்திரனும், கங்கையும் அசையவும் திருமுகம் மலர்ந்து, பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் எதிரில் நின்று கண்டு களிக்கும்படியும், முனிவர்கள் களிப்பால் நடிக்கவும், ஆனந்தமேலீட்டால் திருநடனஞ் செய்தபோது அவருடைய திருக்கண்களினின்றும் ஓர் அருள்வெள்ளம் பெருகி இங்ஙகரின் மேற்றிசையில் சென்று, அகத்தியமுனிவர் தவஞ்செய்துகொண்டிருந்த பர்ணசாலைக்கு எதிரில் நின்றது. அவ்வரலாற்றை அறிந்த குறுமுனி அதற்கு ஆனந்ததீர்த்தம் எனப் பெயரிட்டனர். இத்தீர்த்தத்தை நினைப்போரும், அருச்சிப்போரும், இதில் ஸ்நானம்செய்வோரும், இதன் கரையை அடைவோரும் ஆனந்தக் கடலில் மூழ்கிச் சிவனடி நீழலிற் சேர்வார்கள்.

காளிதேவியானவள் தில்லையில் எம்பெருமானோடு நடனம் செய்தமையால் துன்பமுற்று, கருநோய் அடைந்து, மிக வருந்தி பிரமேசர் கோயிலுக்கு மேல்பக்கத்தில் ஓர் தீர்த்தம் அமைத்து அதில் மூழ்கி, தன் குற்றமும் நோயும் நீங்கி, முன்போல் புனிதமடைந்தாள். ஆகையால் இதற்குக் காளிதீர்த்தம் எனப் பெயர் வழங்கலாயிற்று. நோய் நீங்க எண்ணுபவர் ஒவ்வொரு மாத அமாவாசையிலும் துர்க்கா மந்திரத்தைச் செபித்து இதில் ஸ்நானம்செய்வோர் மன்மதனைப் போன்ற அழகினையுடையவராய் வாழ்ந்திருந்து மேலான கதியைப் பெறுவார். சிவநிந்தனை செய்தவரும் இதில் மூழ்கின் அப்பாவம் நீங்கப்பெற்றுச் சிவலோகத்தில் அமர்ந்திருப்பார்கள். (ஏனைய பல்களின் விபரத்தைக் காளிபுரமான அத்தியாயத்திற் கண்டுகொள்க)

இங்ஙகருக்கு வடபால் இரண்டு குரோசத்தளவு தூரத்தில் மகாவிஷ்ணு அமைத்த தீர்த்தம் ஒன்றுண்டு. விஷ்ணுவானவர் அதில் மூழ்கிச் சிவபெருமானை அதன் பக்கத்தில் வைத்துப் பூசித்துப் பேறு பெற்றதால் அதற்கு வைணவதீர்த்தம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவரைத் தீவினை தொடராது; மாசி மகத்தன்று இதில் மூழ்கினரேல் தேவர்களால் ஏற்பிட்ட சாபம் நீங்கப் பெறுவார். மாசி மாதம் முழுமையும் இதில் மூழ்கியவருக்கு மறு பிறப்பு கிடையாது. இத்தீர்த்தக்கரையிலிருந்து ஒரு இம்மியளவு பொன் தானம்கொடுத்தாலும் கோடிபொன் தானம்கொடுத்த பலனை அடைவார்கள். இவ்விடத்திலிருந்து பூதானம், கோதானம், சொர்ண தானம் முதலியன செய்தவர்கள் அடையும் பலனைச் சொல்லமுடியாது. இதன் கரையிலிருந்து அரிசி தானம் செய்தவர்கள் அரிசி ஒன்றுக்கு ஒரு தேவவருஷமாகக் கைலையில் அமர்ந்திருப்பார்.

இக்காழிக்கோயிலுக்கு வடமேற்கே ஒரு கோல் தூரத்தில் சூரியனை வெல்லும்படியான வரம்பெற வேண்டி இராகுவால் தோற்றப்பட்ட தீர்த்தம் ஒன்றுளது. சிங்கேதனன் என்னும் அரசன் அதில் மூழ்கித் தனது குருவைப் பிழைத்த பழி நீங்கி வரம்பெற்றான். முனிவரும், தேவரும், மற்றவர்களும் இதில் ஸ்நானம்செய்து தங்கள் தீவினைகளெல்லாம் நீங்கிச் சிவபெருமான் திருவருள் பெறுவார்கள். இத்தீர்த்தத்தில் மூழ்கி ஸ்ரீ நாகநாதரைத் தியானிப்பவர்கள் சூரியன் முதலாய நவக்கிரஹங்களால் உண்டாகும் தோஷம் நீங்கப்பெறுவார்கள்.

இராகு தீர்த்தத்தின் பக்கத்தில் ஒரு அம்பு செல்லும் தூரத்தில் தீர்த்தம் ஒன்றுண்டு. அதற்கு ஆழிதீர்த்தம் என்று பெயர். கபில முனிவர் சாபம் தம்மைப் பற்றாதிருக்கும்படி மகாவிஷ்ணு இத்தீர்த்தத்தை உண்டாக்கிச் சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்றார். இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து மறையவருக்குச் செம்பொன் தானம் செய்தவர் வைகுந்தத்தில் வாழ்வார்கள்.

மேகமண்டலத்தை யளாவும்படியான மதில்களையுடைய மகேந்திரபுரிக்கிறைவனை சூரபதுமன் இப்பதியில் தவஞ்செய்யும்போது அவன் மூன் தீர்த்தம் ஒன்று தோன்றியது. சிவபெருமான் இவ்விடத்தில் சங்கு உருவத்துடன் தோன்றியதாயும், இத்தீர்த்தத்தில் சங்குகள் ஒலித்ததாலும் இதற்குச் சங்கதீர்த்தம் எனப் பெயர் உண்டாயிற்று.

இதில் ஸ்நானம்செய்வோர் வச்சிர சரீரம் பெற்றுத் தம் பகை வரை வென்று வெற்றிமாலை சூடி, புலப்பகை வென்று, புண்ணியராய் வாழ்வாரென்று சிவபெருமானே திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

திருநிலைநாயகி சமேத ஸ்ரீ பிரமபுரீஸ்வரர் ஆலயத்துக்குத் தென் பாரிசத்தில் ஓர் அரிபுசெல்லும் தூரத்தில் தீர்த்தம் ஒன்றுண்டு. இது பிரமதேவரால் வீழ்த்தப்பட்ட சுக்கிர பகவானுல் ஐங்கோணமாகச் செய்யப்பட்டது. இத்தீர்த்தத்திற்குச் சுக்கிரதீர்த்தம் என்று பெயர். சுக்கிரபகவான் இதில் மூழ்கிச் சிவபெருமானை வணங்கித் தெய்வ குருவுக்குச் சமானமானுர். இத்தடாகத்தில் சுக்கிரவாரத்தில் ஸ்நானம் செய்தவர் வறுமைப் பிணியால் வாடமாட்டார்கள். துலாமாதத்தில் கோமயத்தினுல் தெளிக்கப்பட்ட அறுகம்புல்லைத் தலையில் வைத்துக் கொண்டு இதில் ஸ்நானம் செய்பவர் இணையில்லாச் செல்வம் பெற்று வாழ்வார்.

பராசர முனிவர் தமக்கு ஏற்பட்ட கன்னிகாகாமி என்னும் கொச்சையான பெயர் நீங்கும்பொருட்டு, இத்தலத்தில் பிரமேசர் ஆலயத்துக்கு வடபால் தீர்த்தம் ஒன்று இயற்றி, அதில் ஸ்நானம்செய்து வணங்கினதால் இதற்குப் பராசரகூபம் எனப் பெயர் வந்தது. கார்த்திகை மாதத்துப் பௌர்ணமை தினத்தில் இதில் மூழ்கி, விதைநெல் தானம் கொடுப்போர் மறு பிறவி எடுக்கமாட்டார்கள்.

பூந்தாய் என்னும் இந்நகருக்குக் கீழ்த்திசையில் இரண்டு கோல் அளவில் அகத்திய முனிவரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் ஒன்றுளது. இதில் அகத்தியர் மூழ்கிப் பைந்தொடிப்பாகனைப் பணிந்து, பூசித்துப் பேறு பெற்றதால் இவ்வுலகத்தவர் இதனை அகத்திய தீர்த்தமெனச் சொல்வார்கள். இதில் ஸ்நானம்செய்வோர் பெரும்பயனடைவார்கள்.

அகத்தியர் அமைத்த தடாகத்துக்கருகில் கௌதமமுனிவர் ஓர் தீர்த்தம் இயற்றி அதில் ஸ்நானம்செய்து, சிவபெருமானை வணங்கிப் பேறுபெற்றார். இதற்குக் கௌதம தீர்த்தம் என்று பெயர் வழங்கலாயிற்று. இத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவர்கள் அடையும் பலன் அனந்தம்.

இப் பன்னிரண்டு தீர்த்தங்களும் ஒன்றுக்கொன்று மேலான மகிமை வாய்ந்து இவற்றில் மூழ்குவோர்க்கு முத்தியினை அளிக்கும் வல்லமையுடையன. இன்னும் இத்தலத்தில் பதினெண் புராணங்கள், அக்கினி, சூரியன், சந்திரன், அண்டநாதர் இவர்களால் இயற்றப்பட்ட தீர்த்தங்களும், புரூரவ, விநாயகாவேரி முதலிய தீர்த்தங்களும் மற்றும் பிறவும் இருக்கின்றன.

உரு. வடுகநாத அத்தியாயம்.

மூன்றொரு சமயத்தில் சிவபெருமான் கைலையங்கிரியில் உமா தேவியாரோடு வீற்றிருக்குங் காலத்து, வேதாரண்யத்துக் கோயிலில் எரிந்துகொண்டிருந்த தீபம் ஒன்று சுடர்மழுங்குதலையறிந்த சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, இத்தீபம் பிரகாசமாய் எரியும்படி இப்போது யார் தூண்டினாலும் அவருக்கு இப்புவன முழுமையும் ஆளும்படியான பாக்கியத்தைக் கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்தருளினார். உமாதேவியார் இவ்வித பாக்கியம் பெறுபவர் யார் எனச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது ஓர் எலி தீபத்திலிருந்த நெய்யை உண்டு தீபத்தைத் தூண்டிப் பிரகாசமாக எரியும்படிச் செய்தது. சிவபெருமான் அவ்வெலியைப் பார்த்து, இவ்விளக்கைப் பிரகாசிக்கச் செய்ததால் மூப்புவனங்களையும் ஆண்டு, நீ இதிலிருந்த நெய்யையுண்டதால் அரக்கனாக ஏற்பட்டு இவ்வுலகத்தில் நமது ஆலயங்கள்தோறும் விளங்குகின்ற பெரிய சோதி ஒன்று உண்டாக்கி இறுதியில் நம்பதம் பெறுவாய் என்று அனுக்கிரகித்தார்.

பிறகு அவ்வெலி விரோசனனென்னும் ஓர் அசுரனுக்குப் பிள்ளையாகப் பிறந்து மாவலி என்னும் பெயர் பெற்று இப்பூலகத்தை ஆண்டது. அம்மாவலி இந்திரனோடு போர்செய்ய எண்ணித் தேவலோகம் சென்று பலவிதமான படைக்கலன்களைக்கொண்டு தன் வலிமையால் அவனோடு யுத்தம்செய்யத் தொடங்கினன். இந்திரன் மற்றைத் தேவரோடும் வந்து போர்செய்யும்போது, தேவர்கள் தோல்வியுற்றதை அறிந்து தன் குலிசாயுதத்தால் தாக்கினன். அதுகண்ட மாவலிச் சக்ரவர்த்தி தன் வில்லைவளைத்து நாணெலிசெய்து தேவர்மீதும் அஷ்டதிக்குப் பாலகர் மீதும் பாணங்களை ஏவினன். தேவர்கள் புறங்காட்டி ஓட, மாவலி தேவேந்திரனைத்தூக்கித் தன் தேர்மேல் இருத்திக்கொண்டு தேவர்களைத் துரத்திச்சென்று தேவலோகத்திலுள்ள பொருள்களைக் கவர்ந்துகொண்டு தன் இருப்பிடம் சென்றான்.

இவ்வாறு மாவலி இந்திரனை ஜயித்துத் தலங்கள்தோறும் சுடர் இழைத்து எம்பெருமானைப் பூசித்துவரும் நாட்களில் ஒருநாள் தன் குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரை அழைத்துத் தான் யாகம்செய்வதற்கு ஏற்றதோர் இடத்தைத் தேர்ந்து சொல்லவேண்டுமென்று கேட்

டான். சுக்கிராச்சாரியர், தன்னிடத்தில் வசிக்கின்றவரின் சிவத் துரோகத்தை ஒழிக்கின்றதும் அளவில்லாத பிரமாக்கள் பூசித்ததும், ஊழிக்காலத்திலும் அழியாது நிலைபெற்று விளங்குவதுமான காழியூர் ஒன்றுண்டு; அதுவே யாகம்செய்வதற்கு ஏற்ற தலமென்று சொல்ல, அவுணன் பல முனிவர்களுடனும், வேண்டிய திரவியங்களுடனும் இங்கு வந்து பிரமதீர்த்தத்தில் நீராடி, பிரமேசனைப் பணிந்து தேவ கம்மியனைக்கொண்டு இந்நகர்க்குத் தென்திசையில் யாகசாலை ஒன்று அமைத்து யாகம்செய்யத்தொடங்கினன்.

அப்போது மாவலியால் வருந்திய இந்திராதி தேவர்கள் யாவரும் சிவபெருமானிடம் சென்று தாங்கள் அடைந்த துன்பங்களை எடுத்துக் கூறித் தங்கள் துன்பம்நீங்குமாறு அனுக்கிரகிக்க வேண்டினர்கள். சிவ பெருமான் அப்போது திருமாலைத் தமது திருவுள்ளத்தில் நினைத்த மாத்திரத்தில் திருமால் அவர்முன் வந்து பணிந்து நின்றார். உடனே சிவபெருமான் அவரை நோக்கி மாவலியின் அன்பின் திறத்தையும், அவன் வலிபெற்றதையும் நீ அறிவாய்; மறையவருக்கும், நமத்தியவரு க்கும் தீங்குசெய்கிறவர்கள் யாராயிருந்தாலும் தண்டிக்கப்படவேண்டிய வர்களே; ஆகையால் தேவர்களுக்குத் தீங்கு புரிபவனுகிய மாவலியை ஒடுக்கித் தேவருக்கும், பூவுலகத்தவருக்கும் அருள்செய்துவாவென்று ஆக்ஞாபித்தார்.

உடனே மகாவிஷ்ணு வணங்கி விடைபெற்றுக் காசிபமுனிவ ருக்குமனைவியாகிய அதிதி வயிற்றில் ஒரு குழந்தையாக அவதரித்துக் குறள் வடிவங்கொண்டு, மூந்நூலணிந்து, தருப்பைப்புல்லும் கமண் டலமும் தண்டும் கையிற்கொண்டு, பிரமசாரியாக மாவலிச் சக்ரவர்த்தி யாகம்செய்கின்ற யாகசாலைக்கு வந்துசேர்ந்தார். மாவலி உடனே எழுந்து உபசரித்து இரத்தினசனத்தில் இருக்கும்படிச் செய்தான். பிறகு குறள் வடிவத்துடன் வந்த மகாவிஷ்ணு மாவலியை நோக்கி, நமக்கு மூன்றடி மண்வேண்டும் கொடு என்று கேட்டார். மகாவிஷ்ணு வே இவ்வுருவத்துடன் வந்திருக்கிறார் என்பதை அறிந்த அவன் குல குருவாகிய சுக்கிராச்சாரியார், மாவலியை நோக்கி இவர் மகாவிஷ்ணு; இவருடைய கருத்துக்கிசைந்தால் கெடுதியுண்டாகும்; என்று சொல்லித் தடுத்தார். அவுணன் அவ்வார்த்தைகளைக்கேட்டுத் திருமாலே நம்மிடம் வந்து தானங்கேட்க அவருக்குக் கொடுப்பதிலும் மேலான செய்கை

வேறுண்டோவெனச் சொல்லிக் குருவின் வார்த்தையை மறுத்து, தன் மனைவியை நோக்கித் தத்தம் செய்வதற்குத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லித் தத்தம் கொடுக்கும்போது கெண்டியின் துவாரத்தை சுக்கிராச்சாரியார் நீர் விழாதபடிவண்டு உருவங்கொண்டு அடைக்கத் திருமால் அதுகண்டு, தமதுகையிலிருந்த தருப்பைப் புல்லால் கெண்டியின் துவாரத்தில் குத்தச் சுக்கிரன் ஒரு கண்ணிழந்து அப்புறம் செல்ல, மகாவிஷ்ணு மாவலியிடம் மூன்றடிமண் தத்தம் பெற்றார்.

உடனே மகாவிஷ்ணு விசுவரூபமெடுத்து மண்ணுலகத்தை ஓரடியாலும், விண்ணுலகத்தை ஓரடியாலும், அளந்து மூன்றும் அடியை மாவலியின் சிரசில் வைத்து அவனைப் பாதாளலோகத்தில் அமிழ்த்தி, அமரருக்கு அருள்செய்தார். பின்னர் மகாவிஷ்ணு செருக்குற்று உலகத்தை அழிக்க ஆரம்பித்தார். அப்போது விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் நிலைகலங்கி, ஆபத்துத்தாரணர்முன் வந்து வணங்கித் தங்களுக்குற்றதைத் தெரிவிக்க அவர் அஞ்சேல் என்றருளி, வடிகனுக எழுந்தருளிவந்து மகாவிஷ்ணுவின்முன் செல்ல, மகாவிஷ்ணு வணங்காமல் மமதையுற்றிருந்ததை அறிந்து வடிகனாதர் தம்முடைய காதால் மகாவிஷ்ணுவின் மார்பில் அடித்ததும் அவர் பூமியில் விழ்ந்தார். உடனே இலக்குமிவந்து மங்கியப்பிச்சை வேண்டுமென்று கேட்க, அவ்வாறே அனுக்கிரகித்தருளினர். மகாவிஷ்ணு எழுந்து என் அகந்தை அகற்றிய அருட்கனளனே, இந்த என்னுடைய தோலையும், எலும்பையும் தேவரீர் தரித்தருள வேண்டுமென்று விண்ணப்பிக்க இறைவனும் அவ்வாறே தேவகம்மியனைக்கொண்டு எலும்பைக் கதையாகவும் தோலைச் சட்டையாகவும் செய்து தரித்து, மலைச்சிகரத் தென்றிசையில் இனிது வீற்றிருந்தருளினர். அதுமுதல் வடிகனாதர் எனவும், தண்டாயுதத்தைப் பிடித்திருத்தலால் தண்டபாணி எனவும், மகாவிஷ்ணுவின் தோலைச் சட்டையாகத் தரித்திருத்தலால் சட்டைநாதர் எனவும் பெயர் பெற்றார். பிறகு தேவர்கள் வந்து பூசித்துப் பணிந்து நிற்க வடிகேசர் அவர்களை நோக்கி, சுக்கிரவாரத்தில் எம்மைத்தொழுது ஆராதிப்பவர்க்கு வேண்டிய வரங்களைக்கொடுப்போம் என்று திருவாய்மலர்ந்தருளினர். பிறகு தேவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

உசு. வேதவியாசர் பூசித்த அத்தியாயம்.

முன்னொரு காலத்திலே துவாபர யுகத்தில் கௌதம முனிவரின் சாபத்தால் இவ்வுலகத்தவர் மதிமயங்கி, உலோகாயதம், ஆருகதம், பௌத்தம், மீமாம்சம் முதலியனவாகிய பிறமதச்சார்பினராய் அவ்வம் மதநூற்களையே கற்று, வல்லவராகித் திருமால், பிரமன், இந்திரன், சூரியன் முதலாகிய நவக்கிரகங்கள், அஷ்டதிக்குப்பாலகர் ஆகிய இவர் களையே வணங்கினவராய், தனித்தனியே இவர்கள் ஒவ்வொருவரை யுமே கர்த்தாவென்று மயங்கி, விபரீதக் கொள்கைகொண்டு ஏமாந்திருந் தார்கள்.

இதனையறிந்த பிரம விஷ்ணுக்கள் உலகத்தினரை நன்னெறியிற் செலுத்த எண்ணங்கொண்டு இந்திராதி தேவர்கள் சூழ்ந்துவர, வெள் ளியங்கிரியில் வீற்றிருந்தருளும் விமலேசராகிய சிவபெருமானைப் பணி ந்து, கிருபாசமுத்திரமே, ஞான சாகரரே, பூவுலகிலுள்ளோர் கௌதம முனிவர் சாபத்தால் மதிமயங்கி, தேவரீரை மறந்து, புறச்சமய வுணர் ச்சியுடையவராய் அறிவிழந்து எங்களையே பரம்பொருளென மதித்து நடக்கின்றார்கள் ; ஆகையால் அவர்களுக்கு நல்லுணர்வு உண்டாகும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். சிவபெரு மான் அதனைக் கேட்டுத் திருமாலை நோக்கி நீ பூலோகத்திற்குச் சென்று வியாதனெனப் பெயர் பெற்று நான்கு வேதங்களையும், மற் றைப்புராணங்களையும் முறைப்படியே உபதேசித்து வருவாயாக என் றும் பிரமாவை நோக்கி நீ மனுவாக அவதரித்து தரும சாஸ்திரங்களை உலகிற்கு வெளியிட்டருள்வாய் என்றும் ஆக்ஞாபித்தார். உடனே பிரமதேவரும், மகாவிஷ்ணுவும் எம்பிரான் பாதங்களில் இறைஞ்சி விடைபெற்றுவரும்போது, தேவர்களை அனுப்பிவிட்டு விஷ்ணுவானவர் பிரமதேவரைப் பார்த்து, பராசர முனிவர் என்னைப் புத்திரனாகப்பெற விரும்பியிருக்கின்றாராதலின் நான் அங்குச் செல்கின்றேன் என்று சொல்லிவிட்டுப் பிரிந்துபோயினர்.

அத்தருணத்தில் பராசர முனிவர் தீர்த்த யாத்திரை செய்து கொண்டு வந்து கௌதமியாற்றில் நீராடி அவ்வாற்றைக் கடந்துவரும் பொருட்டு அங்கிருந்த மச்சகந்தி என்னும் கன்னிகையைக் கொண்டு ஓடத்தில் ஏறி நடு ஆற்றில் வரும்போது முனிவர் மச்சகந்தி என்பவ ளைத் தம் தவவலியால் பரிமளகந்தியாக்கி, அவளைக் கந்தர்வமணத்தால் புணர்ந்து ஒரு புத்திரனைப் பெற்றார். முனிவர் வலைஞமாதைப் புணர் ந்த பழி நீங்கும்பொருட்டுப் பிரமேசரை வணங்கித் தீர்த்தமொன்று இயற்றிச்சிவலிங்கந் தாபித்துப் பூசித்தார்.

இவ்வாறு பிறந்த புத்திரன் ஆற்றின் நடுவில் பிறந்ததால் தீபாயனர் என்னும் நாமம்பெற்றுத் தந்தையார் உத்தரவுப்படியே புகலிப்பதியை அடைந்து பிரமதீர்த்தத்தில் மூழ்கிப் பிரமேசரைப் போற்றித் துதித்தலும், சிவபெருமான் உமையுடன்கூடி விடைமேல் எழுந்தருளிவந்து வேண்டிய வரம் என்னவென்று கேட்டார். தீபாயனர் பணிந்தெழுந்து எம்பிரானே ; தேவரீருடைய திருவடிகள் என் மனத்தைவிட்டகலாதிருக்கவேண்டும் ; வேதங்களையும், புராணங்களையும் அடியேனுக்கருள் செய்யவேண்டுமென்று வேண்ட எம்பெருமான் அவருக்கு ஸ்பரிச தீக்ஷை செய்து அவர் வேண்டியபடியே அனுக்கிரகித்தார்.

பிறகு முனிவர் ஞானம் பெற்று, வேதத்தை இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு பிரிவுகளாக்கிப் பின் இருக்குவேதத்தை ஏழு பாகமாக்கிப் பயிலவு முனிவரிடத்தும், யஜுர் வேதத்தை நூறு பாகங்களாக்கி வைசம்பாயனரிடத்தும், சாமவேதத்தை ஆயிரம் பாகமாக்கி சயிமினிமுனிவரிடத்தும், அதர்வணவேதத்தை ஒன்பது பாகங்களாக்கிச் சுமந்து முனிவரிடத்தும் கொடுத்து, விரிந்து கிடந்த புராணப் பகுதியினைப் பதினெட்டாகத் தொகுத்துப் பூமியில் உள்ள யாவரும் உய்யும்வண்ணம் சொல்லியருளினர்.

இவ்வாறு வகுக்கப்பட்ட பதினெண் புராணங்களும் அருமை உருவாய்ந்து சிவபெருமானைப் பூசிக்க விரும்பி முனிவரிடம் விடைபெற்று அவர் கிருபையினால் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து பிரமேசரையும் தோணியப்பரையும், சட்டைநாதரையும், ஞான சம்பந்தப்பெருமானையும் தொழுது, மற்றைத் தேவர்களையும் பூசித்து, காழிபுரத்தவன் கோயிலிலிருந்து இரண்டுகணை தூரம் வடகீழ்பாலும் அக்கினீசுவரர் கோயிலுக்குத் தென்கீழ்பாலும் சிவலிங்கந்தாபித்து, அதன் பக்கத்தில் கூபமொன்றியற்றிப் பூசித்து வணங்கி நிற்க, சிவபெருமான் ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளிவந்து அவ்விலிங்கத்திற்கும் கூபத்திற்கும் அவர்கள் பேர் விளங்குமாறு அனுக்கிரகித்தார். இப் புகலிப்பதியின் ஈசானத்தில் அமர்ந்திருக்கும் பதினெண் புராணேசரை ஒருபோது வணங்கினவர் சகல சாஸ்திரங்களையும் உணர்ந்தவராகி முத்தி பெற்று வாழ்வார்.

இவ்வாறு சிவபூசை செய்துவந்த பதினெண் புராணங்களையும் தீபாயனர், கிரியாகாண்டம் ஞானகாண்டம் என இருவகைப்படுத்தி

உலகத்தவருக்கு உபதேசித்தருளி, வியாசர் என்று நாமம்பூண்டு விளங்குகின்றார்.

பிரமதேவர் மனுவாகப் பூமியில் அவதரித்து காழிப்பதியையடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி நியதிச்சடங்கு முடித்து பஞ்சாக்ஷரம் ஜெபித்துப் பிரமேசரை ஆராதித்து ஆங்குள்ள பாரிஜாத விருக்ஷத்தின் அடியில் இருந்து ஒருமாதம் தவம்புரிந்தார். சிவபெருமான் அவர் முன் தோன்றி அவர் வேண்டியபடியே சுருதி மிருதிகளாகிய வேதாகமப்பொருளை உபதேசிக்க, அவரும் ஸ்மிருதிகளைப் பதினெண் முனிவர்களுக்கும் விரித்துரைத்தார். இக் கதையை விரித்துக் கூறுவோரும் கேட்டோரும் புத்திரப்பேறடைந்து, தொல்வினையினின்றும் நீங்குவர்.

உஎ. அக்கினீசுரர் மகிமை உரைத்த அத்தியாயம்.

முன்னொரு காலத்தில் புலோமன் என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் மிகக் கொடுமை வாய்ந்தவனாகி தன்னைக்கண்டால் இந்திராதி தேவர்கள் பயந்து ஓடவும், சூரிய சந்திரர் நிலைதடுமாறி நடுங்கவும், தபோதனர் தவிக்கவும். அட்டமா நாகங்களும் எட்டி ஓடவும், நாகலோகத்தவர் மெய்மறந்து நிற்கும்படியும் அரசு புரிந்து வந்தான். ஒருநாள் அவன் பிருகு என்னும் முனிவரை இந்திரனோடு சேர்ப்பேன் என்று சொல்லி அவருடைய ஆச்சிரமத்திற்குச் சென்றான். அங்கு முனிவரையாவது வேறொருவரையாவது காணாமையால் முனிவருடைய யாகசாலைக்குச் சென்று, அங்கு நின்றுகொண்டிருந்த முனிவரின் பத்தினியை நோக்கி நீ யார் என்று வினவினான். கர்ப்பவதியாகிய முனிவரின் பத்தினி பயந்து ஒன்றும் பேசாதிருக்க அங்கிருந்த அக்கினிபகவானை நோக்கி, இவள் யார் என்று கேட்டான். அக்கினி பகவான், உண்மையைச் சொல்லின் முனிவர் சாபம் வந்து சேரும், உண்மையை ஒளித்துக் கூறினால் தபித்தியனுக்குக் கோபம் வரும், வேறு ஏதாவது உரையாடின் துன்பம் உண்டாகும் என்று பயந்து உண்மையைக் கூறினார். அதைக்கேட்ட அவுணன் அம்மாதின் கூந்தலைப்பற்றி இழுத்தான். முனிபத்தினி சிவா என்று சொல்லிக் கொண்டே பூமியில் புரண்டு அழ, அம்மாதின் வயிற்றிலிருந்து ஒரு புத்திரன் பிறந்தான். பிறந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு அம்மாது பர்ணசாலைக்குள் சென்றதும் இந்திரனுடைய யாகத்தை முடித்துவந்த

பிருகுமுனிவர் தம் மனைவியின் வருத்தத்தைக்கண்டு நடந்ததை ஞான திருஷ்டியால் அறிந்து, அசுரனுக்கு உண்மையைச்சொன்ன அக்கினி பகவானே இவ்வுலகில் நீ சருவபக்ஷணஞ்செய்கடவாய் என்று சபித்தார். முனிவருடைய சாபம் பெற்ற அக்கினிபகவான் உலகத்திலுள்ள தன் கலையாவையும் தன்னுடன் கொண்டு செல்ல, எங்கும் யாகம் குறைந்து அவிர்ப்பாகம் கிடைக்காமல் தேவர்கள் வருந்தி மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டார்கள்.

தேவர் துயரத்தைக் கேட்ட மாயவன் அக்கினிபகவானே நோக்கி நீ உன் கலையை முன்போல் பரவச்செய்து, முனிவர் சாபம் நீங்கும் பொருட்டுத் தோணிபுரஞ் சென்று எம்பெருமானே ஆராதனைசெய் என்று அருள்செய்தார். அக்கினிபகவான் முன்போல் தன் கலையை விரித்து, தோணிபுரம் வந்து, பிரமதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, நியமங்கள் முடித்துப் பஞ்சாக்ஷரம் ஜெபித்து குய்யகாளி என்று விளங்கும் இத்தலத்துக் கோயிலின் வடகீழ்பால் மூக்கனை துரத்தில் தன் பெயரால் லிங்கமொன்று தாபித்து, அதன் தென்பால் தடாகம் ஒன்றமைத்து, நெடுங்காலம் பூசிக்கச் சிவபெருமான் தோன்றி நீ முனிவரால் ஏற்பட்ட சாபம் நீங்கப்பெறுவாய்; இன்னமும் உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் என்றலும், அக்கினிபகவான் அடியேன் அமைத்த இத்தடாகத்தில் நீராடினோர் எவ்வித சாபமும் நீங்கவும், பிறவி நீங்கவும் சர்வ போகங்களையும் அனுபவித்துப் பிறகு முத்தியின்பம் பெறவும் அனுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க இறைவனும் அவ்வாறே அருள்செய்தார். அன்னியர் கூறும் நிந்தையினும், அரசரால் உண்டான இடுக்கண்களினும், வறுமை எய்திய காலத்தினும், கிரகங்கள் மாறி வருகின்ற காலத்தினும் மாந்தர் துன்பம் அடையாமல் இன்பமே அடையும்படியாக இக் காழிநகரின் வடகீழ்பால் வன்னிலிங்கமும், வன்னி தீர்த்தமும் விளங்கா நிற்கும்.

இவ்வாறு அக்கினிபகவான் இறைவனே இறைஞ்சி, வரம்பெற்றுத் தன்னுலகு சென்றபின்பு, மறுபடியும் தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டான். அது வருமாறு:-மகாமேருபர்வதத்தில் தேவர்கள் ஒன்று கூடி இவ்வுலகத்தில் செய்கின்ற யாகத்தில் ஒருவழியாக அவிர்ப்பாகம் உண்பது எங்ஙனம் உசிதமின் என்ன அக்கினிபகவான் பிருகுமுனிவரின் சாபத்தை நீக்கியருளிய காழிநாதரை வணங்கி அவ்வாறே அனுக்கிரகம்பெற்று உமது உருவாகவே இருந்து அவ்வுணவினை நான் ஒருவழிக்

கொண்டு எக்காலத்தும் உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்ல, தேவர்கள் அதற்கிசைந்தார்கள். உடனே அக்கினிபகவான் காழிக்குன் றுறை முதல்வனே வேண்ட, இறைவன் தோன்றி வேண்டிய வரம் யாதென்ன, அக்கினிபகவான் உலகத்திலுள்ள சகல பொருள்களிலும் நான் கலந்திருக்கவேண்டும் என்று விண்ணப்பிக்க இறைவனும் அவ் வாறே அனுக்கிரகித்தார். அதுமுதல் அக்கினிபகவான் சகல பொருள்க ளிடத்திலும் இருந்து அனுக்கிரகம் புரிந்து வருகின்றார்.

உஅ. சூரியன் பூசித்த அத்தியாயம்.

முன்னொருகாலத்தில் சூரியனும், இந்திரனும் மிக்க அகங்காரங் கொண்டு ஒவ்வொருவரும் தான்தானே பெரியவன் என்று தர்க்கம் செய்து பகைத்து நிற்க ஒருவராலும் தடுக்கமுடியாமற் போகவே அவ் விருவரும் தங்கள் குருவாகிய வியாழ பகவானிடம் சென்றார்கள். வியாழபகவான் இருவரும் வந்த காரியம் என்னவென்று வினவ, இந்திரனும் சூரியனும் தங்களுக்குள் ஏற்பட்ட பகைமையின் காரணத் தைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட குருபகவான் சூரியனே நோக்கி சுவிசபாணியாகிய இந்திரன் தேவர்கள் எல்லோருக்கும் அதிபதியல் லவா என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் சூரியன் கோபங்கொண்டு, தேவர்கள் எல்லோருக்கும் தலைமைப்பதவியையும் பூவுலகத்தோர் யாவரும் தொழும்படியான மேன்மையையும், எல்லா விஷயங்களையும் அறியுந் தன்மையையும் அடைவேன் என்று சொல்லிக் கொண்டு, காழிப்பதியையடைந்து, பிரமதீர்த்தத்தில் மூழ்கி, திருநீலு யழகியுடன் வீற்றிருந்தருளும் பிரமேசரைப் பூசித்து வணங்கி, அண் ணாமலை, விண்ணேரதிபனே, மூன்றுகண்ணனே, சூலக்கையனே, சோதி வண்ணனே ஓர்பால்பெண்ணனே எனப் பலவாறுகப் போற்றி, ஆண்ட விநாயக மூர்த்தியையும் மற்றைக்கடவுளரையும் வணங்கி வழிபாடாற்றி, பிரமேசர் ஆலயத்துமேற்பால் மூன்றுகணை அளவில் உள்ள திருக்கோ லக்காவாகிய கொன்றைவனத்திற்கு வந்துசேர்ந்தான். சூரியன் அவ்வி டத்தில் மகாலெக்ஷ்மிக்கு மாங்கல்யம் ஓங்க வரந்தந்தருளிய மூழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைத் தோத்தரித்து, அதன் கீழ்பால் தன் பெயரால் தீர்த்தம் ஒன்றும், இலிங்கம் ஒன்றும் அமைத்து ஆரா திக்து, அளவில்காலம் அருந்தவஞ் செய்தான்.

இவ்வாறு தவஞ்செய்துகொண்டிருந்த சூரியன் முன் எம்பிரான் விடையின்மேல் எழுந்தருளிவந்து காட்சி கொடுத்தருளினார். சூரியன் சிவபெருமானைக்கண்டு வணங்கி எழுந்து தோத்திரித்து நிற்க பரம சிவன் உன் பூசைக்கு உளம் மகிழ்ந்தோம்; நீ வேண்டியதுயாது என்ன சூரியன் பணிந்து எழுந்து, மூவுலகங்களுக்கும் நான் தலைவனாகவும் என்னைத் தொழுகின்றவர்கள் நிகரற்றசெல்வம் அடையும் படியும்

அனுக்கிரகிக்கவேண்டும் என்றான். சிவபெருமான் சூரியனுக்கு அவன் வேண்டிய அவ்வாறே வரங்கொடுத்து மேலும் அவனை நோக்கி, இவ்விடத்தில் நீ அமைத்த இவ்விலிங்கமும் தீர்த்தமும் உன் பெயரால் விளங்கும், இத்தீர்த்தத்தில் ஆனி ஆவணி கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமைகளிலும் பங்குனிமாத மகநக்ஷத்திரத்திலும் ஸ்நானம் செய்து நம்மைப் பணிகின்றவருக்கு சகல தருமங்களையும் செய்ததால் உண்டாகும் பலனைக் கொடுப்போம் என்று அனுக்கிரகம் புரிந்தருளினார்.

பின்னரும் சிவபெருமான் சூரியனை நோக்கி உன்னோடு வாது பேசிய இந்திரன் மகாவிஷ்ணு ராம அவதாரம் எடுத்துவரும்போது வாலியாக அவதரித்து வருவான்; நீ அவனுக்குத் தம்பியாகத் தோன்றி அவன் உயிரைப் பிரிவு செய்வாய் என்று சொல்லி அவனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து அனுப்பினார். சூரியனால் அமைக்கப்பட்ட இத்தீர்த்தத்தில் மூழ்குவோர் பிறவிப்பிணி நீங்கப்பெறுவார்கள். குருடர் முதலிய அங்க ஹீனர்களும் எவ்வித நோயாளிகளும் இதில் மூழ்கினால் சூரியனைப் போன்ற காந்தியும் மன்மதனைப் போன்ற அழகும் பெற்றுவாழ்வார்கள்.

உகூ. சந்திரன் பூசித்த அத்தியாயம்.

பிரம்தேவன் புத்திரராகிய தக்ஷப்பிரஜாபதி தாம் பெண்களாகப் பெற்ற அசுவனி ஆதியாய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் சந்திரனுக்கு மணம் புரிவித்து, சந்திரனை நோக்கி நீ இப்பெண்கள் யாவரிடத்தும் நீதி தவறாமல் ஒரு தன்மையவாக நேசித்து வாழ்ந்து வருவாய் என்று சொன்னார். தக்ஷதிரோன் அப்படியே நடப்பதாக வாக்களித்துவிட்டு அவர்களை அழைத்துக்கொண்டு தன்னிருப்பிடம் சென்று வாழ்ந்திருந்தான். சிலகாலம் சென்றபின் சந்திரன் தன் மனைவிகளில் ரோகணி, கார்த்திகை என்பவர்கள்மீது அதிக விருப்பங் கொண்டிருந்தான். இதனை அறிந்த மற்றைய பெண்களெல்லாம் ஒன்றுகூடித் தம் கணவனுடைய செய்கையைக் கண்டு ஆத்திரங் கொண்டு தங்கள் தந்தையாகிய தக்ஷப்பிரஜாபதியிடம் தெரிவித்தார்கள். அதனைக் கேட்டதும் அவர்கள் தந்தை சந்திரனை நோக்கி ஒரு பக்ஷத்தில் உன்னுடைய கலைகள் யாவும் குறைகவென்சபித்தார். இவ்வாறு சாபம் ஏற்ற சந்திரன் ஒவ்வொரு காலும் ஒவ்வொரு கலை குறைய அதனால் வருந்தித் தன் சாபம் நீங்குவதற்கு உபாயம் என்னவென்றுலோசித்து, பூவுலகத்திலுள்ளோர் வேண்டிய பொருள்களெல்லாம் கொடுத்து தேவலோகத்தில் வாழ்பவருக்கும் ஏற்படும் துன்பத்தையும் நீக்கவல்லது தோணிபுரம் என்று ஓர் வசனம் உள்ளது ஆகையால் நான் அவ்விடம் சென்று என்னுடைய துன்பத்தைத் தீர்த்துக்கொள்வேன் என்று சொல்லிக் காழி நகர் வந்து சேர்ந்தான்.

பிறகு சந்திரன் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து குற்றமில்லாத நியதிச்சடங்குகளைமுடித்து, குருலிங்க சங்கம வடிவங் கொண்டு வீற்றிருந்தருளும் பரஞ்சுடரை வரன் முறையாக வணங்கி நின்று அன்பின் பெருக்கால் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, புளகாங்கிதம் கொண்டு உலையிற்பட்ட மெழுகுபோல் மனம் உருகிப் பலதரம் பணிந்து போற்றி ஆலயத்தை வலம்வந்து பக்கத்தில் இருக்கிற விநாயக நதியில் ஸ்நானம் செய்து விநாயகப் பெருமானை வணங்கி அர்ச்சித்துப் புகலிநாதர் ஆலயத்தின் கிழ்பாலும், வசிட்டமுனி பணிந்து பேறுபெற்ற திட்டையின் வடகிழ்பாலும் வில்வவனத்திற்கும் முல்லைவனத்திற்கும் மேல்பாலும் குருக்கை (திருக்குருகாவூர்.)க்கு நிருதிதிக்கிலும் புறவமாநதிக்கும் செம்பாம்பன்குடிக்கும் தெற்கிலும் மேன்மையைத்தரத்தக்க சுபமுகூர்த்தத்தில் தன்பேரால் சிவலிங்கம் ஒன்றும் தடாகம் ஒன்றும் அமைத்துச் சிவபெருமானைப் பூசித்து வணங்கி ஐந்தெழுத்தை மனதில் தியானித்து நெடுநாள் தவஞ்செய்தான்.

இவ்வாறு தவஞ்செய்துகொண்டிருந்த சந்திரன்முன் சிவபெருமான் பார்வதி சமேதராய் இடபவாகனத்தின்மேல் எழுந்தருளிவரலும் சந்திரன் பணிந்து எழுந்து நிற்கச் சிவபெருமான் அவனை நோக்கி உன் தவத்துக்கு மகிழ்ந்தோம் ; நீ வேண்டிய வரம் யாது என வினவலும், சந்திரன் எம்பிரானே, நான் தக்ஷப்பிராஜாபதியின் சாபத்தால் வருந்தாவண்ணம் கிருபை செய்யவேண்டும் ; மேலும் நான் அமைத்த இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இங்கு வீற்றிருந்தருளும் சிவலிங்கத்தை வணங்குகின்றவர் யாவரும் கலியைத் தரத்தக்க சகல வினைகளினின்றும் நீங்கி முத்தியடையும்படி கிருபை செய்யவேண்டும் எனப் பிரார்த்தித்து நின்றான். இவ்வார்த்தைகளைத் திருச்செவியிலேற்ற சிவபெருமான் சந்திரனை நோக்கி, தக்ஷன் நமது அடியான் ; அவனுடைய சாபம் ஒழியாது ; ஆயினும் நீ தவஞ்செய்து நம்மை வேண்டினதால் நீ முன் உவாவில் ஒவ்வொரு கலையாய் நிரம்பியும் பின் உவாவில் ஒவ்வொரு கலையாய்க் குறைந்தும் ஒவ்வொரு நாளும் குறையும் கலைகளை முறையே அக்கினி, சூரியன், விசுவதேவர், வருணன், சட்காரன், இந்திரன், சப்தமுனிவர், அசகபாதன், யமன், வாயு, கௌரி, தென்புலத்தார், குபேரன், நாம், பிரமா முதலியவர்கள் தாகர்வோம் ; அதனால் மறையோர்நாயகம் என்ற பெயரும் அடைவாய். பயிர்களுக்கெல்லாம் இறைவனுகவும் விளங்குவாய், உன் பிணியெல்லாம் நீங்கும் ; உன்னுடைய இருபத்தேழு மனைவியாருடனும் சேர்ந்து வாழ்வாயாக என்றருளிச்செய்து ஆகாயத்தில் மறைந்தருளினார். சந்திரனும் தன்னுலகு அடைந்தனன்.

கூ0. சேடனும் கேதுவும் பூசித்த அத்தியாயம்.

காசிபமுனிவருடைய பத்தினிகளில் வினதை, கத்துரு என்ற இருவர்களும் புத்திரப்பேறடையவேண்டித் தங்கள் நாயகரைப்பணிந்து முறையிட்டார்கள். அப்போது காசிபர் வினதையை நோக்கி, உனது வயிற்றில் இரண்டு அண்டங்கள் தோன்றும்; அவற்றை நீ ஆயிரம் வருஷம் வைத்துப் போற்றினால் அவற்றிலிருந்து அழகிய இரண்டு குமாரர்களைப் பெறுவாய் என்றும், கத்துருவை நோக்கி, உன்னுடைய வயிற்றில் ஒரே தடவையில் ஆயிரம் அண்டங்கள் தோன்றி அவற்றிலிருந்து நீ மகப்பேறடைவாய் என்றும் அனுக்கிரகித்தார். பிறகு அவர்கள் இருவரும் கர்ப்பவதியாகி ஓர் ஆண்டுக்குப்பின் வினதை இரண்டு அண்டங்களையும் கத்துரு ஆயிரம் அண்டங்களையும் கருவுயிர்த்தார்கள். கத்துருவினிடத்திலிருந்து தோன்றிய அண்டங்களிலிருந்து ஆதிசேஷன் முதலிய ஆயிரம் பாம்புகள் உண்டாயின. கத்துரு அவைகளைப் பெற்றுச் சந்தோஷித்திருக்க வினதை அதைப்பொறுதவளாகி, தன்னிடத்தில் இருந்த இரண்டு முட்டைகளில் ஒன்றைக் கையால் உடைத்தாள். முனிவர் சொல்லியிருந்த கால அளவு முடிவுபெறுததால் அம்முட்டையிலிருந்து பாதி உருவத்துடன் அருணன் தோன்றி, தன் தாயை நோக்கி, நீ பொறுமையால் முனிவர்சொல்லை மீறி நடந்ததால் உன்னுடைய மாற்றவளுக்கு அடங்கி நட்க்கக் கடவாய் என்று சாபமிட்டான். இச்சாபத்தைக் கேட்ட வினதை அருணனை நோக்கி, நான் சீக்கிரத்தில் மகப்பேறு அடையவேண்டி இவ்வாறு செய்தேன்; நீயோ கொடுஞ் சாபமிட்டனை; இச்சாபத்திலிருந்து நான் தப்புவித்துக்கொள்வது எங்ஙனம் என்று வேண்ட அருணன் தாயை நோக்கி,முனிவர் குறித்த காலம் சென்றதும் உன்னிடத்திலுள்ள மற்றோர் அண்டத்தினின்றும் என் தம்பி தோன்றி இச்சாபத்தை மாற்றுவான் என உரைத்து அங்கிருந்து சென்று ஞானநாயகரைப் பூசித்துச் சூரியனுடைய இரத சாரதியாக அமர்ந்திருக்கிறான்.

பிறகு ஒருநாள் வினதையும் கத்துருவும் பூஞ்சோலையில் உல்லாசமாக உலாவிக்கொண்டிருக்கும்போது ஆகாயத்திலிருந்து ஒரு சப்தம் உண்டாயிற்று. கத்துரு என்பாள் வினதையை நோக்கி இது என்ன சப்தம் என்று கேட்க, வினதை இது இந்திரன் குதிரையினுடைய ஒலி என்று சொன்னாள். கத்துரு அக்குதிரையின் நெற்றியும் மேனியும் என்ன நிறம் என கேட்டாள் வினதை முழுதும் வெண்ணிறமே என்று பதிலளித்தாள். கத்துரு அதை மறுத்து வால் நுனி மாத்திரம் கறுப்பு என்றாள். வினதையோ வாலும் வெண்மைதான் என்றாள். உடனே கத்துரு வினதையை நோக்கி, உன்னுடைய வார்த்தை உண்மையாயிருந்தால் நான் உனக்கு அடிமையாவேன் என்றாள். உடனே வினதை அவளை நோக்கி, உன்னுடைய வார்த்தை உண்மையாயிருந்தால் நான் உனக்கு அடிமையாவேன் என்றனள்.

இவ்வாறு இவர்கள் இருவரும் சபதம் கூறிக்கொண்டு தங்களிருப் பிடம் சென்றார்கள். பிறகு கத்துரு தன் மைந்தர் அனந்தனுடையரைப் பார்த்து இந்திரனுடைய குதிரையின் நிறம் என்னவென்று கேட் டாள். அவர்கள் அது வெள்ளை என்றலும் வாலின் நிறம் என்ன வென்று கேட்டார்கள். அதுவும் வெண்மைதான் என்றலும் கத்துரு தன் சபதம் நிறைவேறும்பொருட்டு, நீங்கள் அதன் வாலில் சுற்றிக் கொண்டு கறுப்பாகத் தெரியும்படி செய்வீர்கள் என்று சொன்னாள். அவ்வார்த்தையைக் கேட்ட பிள்ளைகள் அன்னையே, ஒருவர் தீங்கு ஒன்று செய்து மேன்மை பெற்றாலும் தருமத்தைப் பிழைத்தாலும் மேலோரை வருத்தினாலும் நரகத்தை அடைவாரென்று கூறி அதற்கு ஒரு கதையையும் சொன்னார்கள். நளச்சக்கரவர்த்தி கலிபுருஷனால் பற்றப்பட்டு வருந்தியகாலத்தும் தருமமார்க்கத்தில் தவறுதிருந்ததால் முன்போல் இராஜ்ஜியத்தை அடைந்து பரிபாலனஞ் செய்தார். அவரு டைய பெயரைச்சொன்னவர்களைக்கூட கலிபுருஷன் பற்றமாட்டார். ஒருவர் செய்தநன்றியை மறந்தவரும், தவறு செய்தவரும், வஞ்சகரும் இவ்வுலகில் மேன்மையடையமாட்டார்கள் என்று கூறித் தங்கள் தாய் வார்த்தையை மறுக்க, கத்துரு தாய் சொல் துறந்த நீங்கள் அனைவரும் ஜனமேஜயன் சத்திரயாக அக்கினிக்கு இரையாவீர்கள் என்று சபித் தாள். அப்போது அவர்கள் நடுங்கி அன்னையை வணங்கிப் போற்ற அவள்அவர்களை நோக்கி நீங்கள் நான் சொல்லியபடி செய்தால் அத்திக முனிவர் உங்களைக் காப்பாற்றுவார் என்றாள். அவ்வார்த்தைகளுக்குடன் பட்டாத ஆதிசேஷனை முதலாகவுடைய சில அரவுகள் தங்கள் தாயின் சாபம் நீங்கவேண்டி என்ன செய்வதென்று யோசித்து, அறிந்துசெய்த தீவினைகளையும் அகற்றி அரும் பெறல்முத்தியளிப்பது இக்காழியம்பதி எனத் தேர்ந்து இங்குவந்து பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிர மேசரைப் பணிந்து, தோணியப்பரையும் சட்டைநாதரையும் போற் றித் திருநிலையழகியின் பாதங்களில் விழுந்து வணங்கி, கழுமலநதியில் நீராடி நாகேசரின் திருவடிகளைத் தொழுது கேதுபுரத்தினில் வாழ்ந் திருந்தார்கள்.

மூன் சிரபுர அத்தியாயத்தில் கூறியபடி இக்காழியின் கிழக்கே ஒரு குரோசத்தளவில் வீழ்ந்த உடற்கூற்றரவமானது பிரமதீர்த்தத் தில் மூழ்கி திருநிலையழகியுடன் பிரமேசரைப் பணிந்து தோணியப் பரை வணங்கி அங்கு பக்கத்தில் வீற்றிருந்தருளும் சட்டைநாதரின் திருவடிகளைத் தொழுது ஆலயத்துக் கீழ்பால் ஒரு குரோசத்தளவில் சாதித்துருமமூலத்தில் சிவலிங்கம் ஒன்று தாபித்து அதன் பக் கத்தில் தீர்த்தம் ஒன்று அமைத்து அன்போடு பூசித்துவருங்காலத்தில் சிவபெருமான் விடையின்மேல் தோன்ற, இமையவல்லியுடன் எம்பிரா னைக் கண்ட அவ்வரவம் பணிந்து புளகாங்கிதங்கொண்டு உச்சிமேற் கைகூப்பி நிற்றலும், சிவபெருமான் உன் பூசைக்கு மகிழ்ந்தோம்; வேண்டிய வரங்களைக் கேள் எனலும், அரவம் பணிந்து எம்பிரானே,

மற்றைக் கிரகங்களோடு ராஹுவும் ஒரு கிரகம் ஆகவும், சந்திரனை மறைக்கும் வலியைப் பெறும்படியும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, கிருபாமூர்த்தியாகிய சிவபெருமான் அவ்வாறே அளித்தருளினர். இத்தலமே இதற்குக் கேதுபுரியெனப் பெயர் வழங்கலாயிற்று. கேது இவ்விடத்தில் செவ்வரா வருக்கொண்டு வீற்றிருத்தலால் இதற்குச் செம்பாம்பன்குடியென்றும் பெயர் உண்டாயிற்று. ஒரு கணமாயினும் இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் கேதுநாதர் திருவடிகளை அர்ச்சித்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் செய்து வணங்கியவர்கள் தாயினால் ஏற்பட்ட சாபம் முதலியவைகள் நீங்கப்பெற்று வேண்டிய வரங்களைப் பெற்று மேன்மையடைவார்கள். இத்தீர்த்தத்தில் மூழ்கிப் பஞ்சாக்ஷரத்தை ஓதினவர்கள் கிரக தோஷங்கள் நீங்கப்பெறுவதுடன் மெய்ஞ்ஞானம் பெற்று வாழ்வார்கள்.

ஈக. அண்டர்கள் பூசித்த அத்தியாயம்.

முன் ஒரு கற்ப முடிவினில் குணம், குறி, காரணம் கடந்த முதல் வராகிய சிவபெருமான் வித்தியா தத்துவத்தினின்றும் ஆயிரங்கோடி மண்டலங்களை ஒரு கணத்திலே உண்டாக்கி அவற்றைக் காத்துரக்ஷிக்க பிரம விஷ்ணுவாதி தேவர்களையும் உண்டாக்கி அவர்களை அதிகார முதல்வர் எனப் பாகுபாடு செய்து கைலையில் வீற்றிருந்தருளும்படி செய்தனர். அத்தேவர்கள் அவ்வாறே அண்டங்களைப் புரந்துவரும் நாளில் ஒருநாள் யாவரும் ஒன்றுகூடி, மெய்ஞ்ஞானமும் மெய்க்கீர்த்தியும் பெறுவதற்காகச் சிவபூசை செய்யவேண்டுமென்று விரும்பினர்கள். அப்போது பிரமதேவர் மற்றைத் தேவரை நோக்கி, வேதாகமங்களில் கூறப்படுவதும், மூப்பொருளாகி இறைவன் எழுந்தருளியிருப்பதுமாகிய காழிப்பதியே உங்கள் சருத்தை நிறைவேற்றும் என்று சொல்ல, தேவர்கள் அதற்கிசைந்து, புலியூருக்குத் தெற்கிலும், புள்ளிருக்கு வேளூருக்கு ஈசானியத்திலும், முல்லைவனத்திற்கு மேற்கிலும், காவிரி நதிக்கு வடக்கிலும் என்றும் அழியாத கீர்த்தியினையுடையதுமான இக்காழிநகரம் வந்து சேர்ந்து பிரமதடத்தில் ஸ்நானஞ்செய்து பிரமேசரைப் பணிந்து தோணியப்பரைத் துதித்து வடுகநாதரை வணங்கிப் போற்றிப் பிரமேசர் ஆலயத்து வடமேற்கில் மூக்கோல் தூரத்தில் சிவலிங்கந்தாபித்து அதன் வடபால் ஒரு தீர்த்தம் அமைத்துத் திருமஞ்சனம் ஆட்டி அருச்சித்து அளவில்காலம் அருந்தவம் செய்தார்கள். அவர்கள்முன் சிவபெருமான் ரிஷபவாகனத்தின்மேல் பார்வதிசமேதராய் எழுந்தருளிவர அண்டமூர்த்திகள் அவரடிகளில் பணிந்து தேவரீர் திருவடிகள் எங்கள் மனத்தகத்தே அகலாதிருக்கவும், நாங்கள் அழியாத கீர்த்தியை அடையவும் வேண்டும் என விண்ணப்பிக்கச் சிவபெருமான் அவர்கள் அன்புக்கு வியந்து அவர்கள் வேண்டியவாறே அனுக்கிரகித்தார். இவரை அண்டர்கள் அர்ச்சித்து வணங்கியதால் இவர் அண்ட

நாயகர் எனப் பேர்பெற்றார். அண்டர்கள் யாவரும் தங்கள் தங்கள் இருப் பிடம் சென்றார்கள். அண்டர்கள் அமைத்த இத்தடாகத்தில் மாசிமாத த்தில் ஸ்நானஞ்செய்து அமலனைப் பணிந்தவர்கள் அஷ்ட ஐசுவரியங்க ளும் பெற்று போகபோக்கியத்துடன் வாழ்ந்திருந்து மறுமையில் பேரி ன்பம் பெற்று வாழ்வார்கள். இத்தலத்தின் மேன்மை இத்தகையதெ ன்று சொல்லுவதற்கு எவராலும் முடியாது. இத்தலத்திலிருந்து பஞ்சா க்ஷரத்தைச் செபித்தவர்கள் பெறும் பாக்கியங்களும் அனந்தம். சிவ சொரூபமாகிய பிரணவ மந்திரத்துடனே பஞ்சாக்ஷரத்தை ருத்திராக்க மணிகளைக்கொண்டு ஜெபித்தவர் நான்கு வேதங்களையும் அங்கங்களோடு அத்தியயனம் செய்த பலனடைவார். சப்தகோடி மந்திரங்களுக்கும் நிதிநாயகமாய் விளங்கும் இவ்வைந்தெழுத்தைத் தியானிப்பவர் யாவரும் சிவசாரூபம் பெற்று வாழ்வார்கள். நித்திய பாராயணத்தை நீத்தாரே னும் ஒரு பொழுது திருநீறணிந்து இதைத் தியானித்தால் விண்ணெலாங் கடந்து விண்ணவராவார். இருமல், தும்மல், கொட்டாவி விடுதல் ஆகிய இவைகளால் ஆயுள்குறையாவண்ணம் இவ்வெழுத்தைந்தும் ஓதுவார்கள். தெரிந்து செய்த பாவம் நீங்குதற்கு இதுவே துணையாகும். திருநீறணி யாதவர் செய்யுந் தருமத்தால் யாதொரு பலனும் உண்டாகாது. விபூதி தரிக்காமல் தானங்கொடுத்தவர் நரகத்தை அடைவர். ஒருவர் யாதொரு மந்திரமும் இல்லாமல் திருநீறணிந்தவரைக் கண்டாலும் அவருடைய வலிய வினைகளும் நீங்கும். திருநீறணியாதவரைக் கண்ட பாவம் சூரிய னைத்தரிசிக்க நீங்கும். அல்லது சிவலிங்கம், அக்கினி, பசு, சிவவேதியர், பொன், உருத்திராக்கமணி இவைகளைத் தரிசித்தாலும் நீங்கும். இத் தகை மேன்மை வாய்ந்த திருநீறு இரண்டு வகைப்படும். ஒன்று அந்த ணர் செய்கின்ற வேள்வியினின்றுண்டானது. இது அந்தணர்க்கே உரித்தானது. மற்றையது எல்லா வருணத்தார்க்கும் உரித்தானது. அதாவது சிவராத்திரி தினத்தில் சூரியோதயத்தில் கோமயத்தைக் கொண்டுவந்து சுத்தமான இடத்தில் வைத்து, வில்வபத்திரம் சேர்த்து உருண்டை செய்து இடையிடையே உமி சேர்த்து தீயிற்றகித்து, விளைந்த விபூதியைச் சிவகாயத்திரி மந்திரத்தை ஓதி எடுத்துச் சிவ சக்திமுன் கொண்டுவந்து ஏகாதச மந்திரத்தை ஓதி, பதினாறு பங்கு செய்து சிவபெருமானுக்கு ஒரு கூறும், சிவவேதியர்க்கு மூன்று கூறும் கொடுத்து எஞ்சிய பன்னிரு கூற்றையும் பன்னிரு மாதங்களுக்கு உப யோகித்துக்கொள்வது இத்தகைய திருநீற்றைத் தரித்தவர்க்குச் சகல மும் சித்திக்கும். அவர்கள் வம்சத்தில் பிறந்தவர்களும் சிவபெருமா னுடைய கைலையை அடைவார்கள்.

சிவபெருமானுடைய அருளுருவாகிய உருத்திராக்கமணி ருத்திர னுடைய கண்ணினின்றும் வந்தது. அதன் பெருமையை அறிந்து ஒரு முகம்முதல் பன்னிரண்டு முகம்வரையில் உள்ள மணிகளைத் தரிப்பவர் சிவசாரூபம் பெற்று வாழ்வார். கழுத்தை ஒன்று இம்மணிகளையுடைய

சுமையைச் சுமந்துசென்ற பலனுல் விந்தமலையையடைந்து இறந்து ஓரூழிக்காலம்வரை கைலையில் வசித்தது. இம்மணி ஒன்றைத் தரித்து நடந்தவர் அடிக்கொரு அசுவமேதயாகம் செய்த பலனடைவர். இன்னும் இத்தகைய ருத்திராக்க மணிகளைத் தரித்து மேன்மை அடைந்தவர்களும் அவர்களைத் தரிசித்துப் பேறடைந்தவர்களும் அனந்தம். இத்தகைய வலிமை வாய்ந்த ருத்திராக்கமணிந்து பக்தியுடன் திருநீறு தரித்து ஐந்தெழுத்தையோதி இத்தலத்தில் வசிப்பவர் முழுமுதற் கடவுள் அருளால் முத்தராவார்.

இப்பதிக்கு மூன்றுகுரோசத் தூரத்தில் பிறந்தவர் யாவரும் வருணவேற்றுமை யற்றவராவர். இத்தலத்தில் இறப்பவர் யாவரையும் திருநிலையழகி கிட்டிவந்து அவர்களுடைய காதில் பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து அவர்களைச் சீவன்முத்தராக்குவதால் இங்ஙகர்க்குச் சீவன் முத்திபுரம் எனப் பெயர் வழங்கும். இத்தலத்தின் பெருமைகளைச் சொல்பவர் யாவரும் பிறவிநீங்கிக் கைலையில் வாழ்வார். இக்காழிப் புராணத்தை சிவராத்திரியன்று அன்புடன் சொல்வோரும், கேட்போரும் படிப்போரும் ஆயிரம் சிவராத்திரியில் நான்கு ஜாமத்திலும் சிவ பூசை செய்த பலன் முழுமையும்பெற்று வாழ்வார்கள்.

திங்களங் கண்ணிசேர் செம்மல் காழிவாழ்
எங்கள்நா யகனருள் இயல்பை யேத்துவார்
மங்களம் பொலிந்துநல் வாழ்வின் வாழ்வரே.

சீகாழிப் புராண வசனம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

Printed at the 'Sundara Press,' Shiyali.
1937